உ

சிவமயம்.

வியாசர் வடமொழியிற்செய்தபுராணம் (கஅ) உள்

கரு—வது

கூர்மபுராணம்,

மதுரையி லரசுசெலுத்திய

அதிவீரராமபாண்டியர்

தமிழில் மொழிபெயர்த்தருளியது.

இஃது

ம-ள-ள-ஸ்ரீ, கொன்றமாநகரம்

சண்முகசுந்தரமுதலியாரவர்களால்

பரிசோதித்து,

பு,சு,கிருஷ்ணசாமிப்பிள்ளையவர்களாலும்

வேலூர் - குமாரசாமிஐயராலும்

சென்னைத்

தண்டையார்ப்பேட்டை

இலக்ஷ்மீவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஈஸ்வரஹு சித்திரைமீ

இதன் விலை—ரூபா—௩௨.

உ

சிவமயம்.

முகவுரை.

அநாதிமுத்த சித்துருவாகிய சிவபெருமான், அநாதிமல பந்தராகிய வான்மாக்கள் ஆணவமலநீங்கி முத்தியடைதற் பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய வேதாகமங்களை யோதியுணர்தற்குரியோர், பிராமணர், க்ஷத்திரியர், வைசியரென்னு மூன்றுவருணத்தவர்களேயாம்.

கொலைமுதலிய பஞ்சபாதகங்களைத் தவிர்ந்து நற்குண நற்செய்கையை யுடையராய்ச் சற்குருவையடைந்து சிவதீட்சதாவான்களாய சற்சூத்திரர், சிவபெருமானருளிய சைவாகமங்களை யோதற்குரியராயினும், ஆரியபாடையைப் பயின்று தருக்கவியாகரணங்களை யுணர்ந்து மேற்கூறிய சிவாகமங்களை யோதல் இக்கலியுகத்தில் பலர்க்கும் அரிதாகலின், யாவரு மெளிதிலோதி யுணரும்பொருட்டு வேதாகமங்களின்விரிந்தபொருள்களைச் சுருக்கி வியாசரால் வடமொழியிற் புகன்ற புராணம்பதினெட்டுள.

அவற்று ளிவ் வுலகோற்பத்தியும், அதில் உற்பவித்த வான்மாக்க ளித்தன்வகைத்தென்றும், இவைகளை யுற்பவிப்பித்தோரின்னாரெனவும், மேல் ஆன்மவருக்கங்களிலுயர்ந்த தேவமானுடர்சந்ததிகளும், இவர்களிற் புண்ணியஞ்செய்தோரடைந்த பலனும், பாவஞ்செய்தோரடைந்த துயரும், இவ்விரண்டிற்குரிய விதிவிலக்குகளையும் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றன.

இப்புராணங்களை, நால்வகையோனி யெழுவகைத்தோற்றத்துள்ளு முயர்ந்த மானிடப்பிறப்பையடைந்த நாம் ஓதியு

ணர்ந்தாலன்றி, நாம்செய்யும் புண்ணியபாவங்களையும் அவற்றைக்கூட்டி முடிப்போனையுந் தெளிதலரிது. ஆதலால், இப்புராணங்களை வியாசரால் வடமொழியிற் றிருவாய்மலர்ந்தருளிய வண்ணம் பலஆசிரியர்களாற் றமிழில் மொழிபெயர்க்கப்பட்டதை யானச்சிடத்துணிந்தனன். சமயாபிமான சாத்திராபிமானமுடைய நம்மவர்கள் தத்தமிடத்திலுள்ள பிரதிகளையுதவுவார்களாயின், சிவதருமோத்திரத்திற் சிவஞானதானவியலிற் சொல்லிய பலன்களைப் பெறுவரொன்பது, சரதம், சரதம், சரதம்.

சிவதருமோத்திரம் சிவஞானதானவியல்

(௩௪) வது செய்யுள்.

''இத்தகையேபுத்தகத்தை யீந்தாருமெழுத்தொன்றற்
கத்தனமர்புரத்துறைவ ராயிரமார்கற்பமுற
வுத்தனையமுறுவனகை முளைத்தபிறைவளைத்துதற்
றத்தையெனமொழிமடவார் தங்கியதேர்த்தானத்தே''

இங்ஙனம்,

☞ கோ—சண்முகசுந்தரமுதலியார்.

உ

கணபதிதுணை.

கூர்மபுராணம்

பூருவகாண்ட அத்தியாய அட்டவணை.

பக்கம்.	அத்தியாயங்களின்பெயர்.	பாடற்றொகை.
க	காப்பு	க
ங	பாயிரம்	க0
ரு	அநுக்கிரமணி	ஙக
கூ	இந்திரத்துய்ம்மன்முத்திபெற்றது	சகூ
கரு	வருணாச்சிரமமுரைத்தது	சசு
உ0	ஆச்சிரமமுரைத்தது	கஎ
உஉ	பிரகிருதித்தோற்றமுரைத்தது	உரு
உரு	பிரமாவினுடையகாலவளவையுரைத்தது	கஉ
உஎ	சுவேதவராககற்பமுரைத்தது	எ
உஅ	பலவகைத்தோற்றமுரைத்தது	உரு
ஙக	தமோகுணசிருட்டியுரைத்தது	கங
ஙங	பிரமவிஷ்ணுக்களுக்குச்சிவன்றோன்றிவரங்கொடுத்தது	உ0
ஙரு	அட்டமூர்த்தியியல்புரைத்தது	உஎ
ஙகூ	பார்வதிதோற்றமுரைத்தது	கங
ச0	திருக்கலியாணம்	எக
சகூ	பிருகுவாதியர்தோற்றமுரைத்தது	கசு
ருக	தக்கனைச்சபித்தது	உக
ருச	தக்கன்வேள்வியழித்தது	ருகூ
சு0	அந்தகாசூரன்சாரூபமடைந்தது	கஅசு
அங	மாவலிமூவடிமண்ணளித்தது	ஙக
அசு	வாணாசூரன்சாரூபமடைந்தது	கங
அகூ	புலத்தியன்மரபுரைத்தது	சு
கூ0	சூரியன்மரபுரைத்தது	ருங
கூஎ	இராமனவதரித்தது	ககஉ
சகக	இராமன்வனம்புகுந்தது	ககஉ
கஉச	இராவணவதை	க0எ
கஙஎ	இராமன்சிவலிங்கப்பிரதிட்டைபண்ணினது	கக
கஙகூ	இராமன்முடிசூடியது	சு
கச0	அகத்தியன்இராவணன்மரபுரைத்தது	ககஅ
கருச	இராமன்வைகுந்தமடைந்தது	கஅரு
கஎஎ	சந்திரவங்கிஷமுரைத்தது	கஉசு
ககூஉ	கண்ணனவதரித்தது	உசரு
உககூ	கண்ணன்மணம்புணர்ந்தது	உருரு
உசகூ	கண்ணன்சிவதீக்ஷைபெற்றுநோற்றுச்சாம்பனைப்பெற்றது	உசு
உருஉ	கண்ணன்சிவபூசைபண்ணினது	உ0
உருச	கண்ணன்பூமிபாரந்தீர்த்தது	ககக
உகூஎ	கண்ணன்வைகுந்தமடைந்தது	ஙரு

பக்கம்.	அத்தியாயங்களின்பெயர்.	பாடற்றொகை.
உஎக	யுகதன்மமுணாத்தது	உகூ
உஎரு	காசியின்சிறப்புணாத்தது	ஙஎ
உஎகூ	மனுமரபுணாத்தது	ஙஎ
உஅங	மண்டலவளவையுணாத்தது	உ0
உஅசு	ஆதவர்ச்சிறப்புணாத்தது	கசு
உஅஅ	ஆதவர்கதிர்ச்சிறப்புணாத்தது	கஉ
உகூ0	உலகநிலையுணாத்தது	க0
உகூக	சம்புத்தீவின்சிறப்புணாத்தது	க0ங
ங0ச	மேருவின்சிறப்புணாத்தது	உ0
ங0எ	நவகண்டத்துறைவோரியற்கையுணாத்தது	எங
ஙகஎ	வானவர்வாழ்க்கையுணாத்தது	கசு
ஙககூ	பிலக்கமுதலானதீவுகளியற்கையுணாத்தது	அ0
ஙங0	மனுவந்தரமுணாத்தது	ஙக
ஙஙச	வியாதர்வரலாறுணாத்தது	கஉ

பூருவகாண்ட அத்தியாய அட்டவணை முற்றிற்று.

பாயிரமுட்பட அத்தியாயம் (ருக) க்கு திருவிருத்தம்—உஎஉகூ.

உத்தரகாண்ட அத்தியாய அட்டவணை.

பக்கம்.	அத்தியாயங்களின்பெயர்.	பாடற்றொகை.
ஙஙஎ	கடவுள்வாழ்த்து	ச
ஙஙஎ	வெதிரிகாச்சிரமத்தில்மகேசன்றோன்றியது	கச
ஙஙகூ	சாங்கியயோகமுணாத்தது	ஙரு
ஙசங	சம்பிரதாயம்	கக
ஙசரு	பத்திமையுணாத்தது	உ0
ஙசஎ	விச்சுவரூபம்	உகூ
ஙரு0	சிவசத்தியின்செயலுணாத்தது	கக
ஙருஉ	விபூதியுணாத்தது	உ0
ஙருச	பிரபஞ்சத்தோற்றமுணாத்தது	எ
ஙருரு	மாயாவிகாரமுணாத்தது	கங
ஙருஎ	தத்துவதரிசனமுணாத்தது	கக
ஙருஅ	யோகமுணாத்தது	ருச
ஙகூச	வியாதர்கருமமுணாத்தது	உங
ஙகூஎ	சுத்தாசமனமுணாத்தது	உஉ
ஙஎ0	பிரமசரியமுணாத்தது	உகூ
ஙஎங	இல்லறமுணாத்தது	கரு
ஙஎச	பொதுவிதியுணாத்தது	ஙச
ஙஎகூ	அல்லவையொழித்தலுணாத்தது	கக
ஙஅ0	நித்தியகன்மமுணாத்தது	உஎ
ஙஅச	சிரார்த்தமுணாத்தது	கச
ஙஅகூ	சிரார்த்தபாத்திரமுணாத்தது	கஉ

பக்கம்.	அத்தியாயங்களின்பெயர்.	பாடற்றொகை.
௩௮௭	தென்புலத்தோர்க்கூட்டுமுறைமையுரைத்தது	௧௭
௩௮௯	சூதகாசூசமுரைத்தது	௩௪
௩௯௪	அழற்கருமமுரைத்தது	௬
௩௯௫	இல்லறபேதமுரைத்தது	௪
௩௯௫	தானமுரைத்தது	௧௦௮
௪௦௮	வானப்பிரத்தமுரைத்தது...	௭
௪௦௯	சன்னியாசமுரைத்தது	௬
௪௧௦	முற்றத்துறந்தோர்பிராயச்சித்தமுரைத்தது	௯
௪௧௧	பிரமகத்திப்பிராயச்சித்தமுரைத்தது	௭
௪௧௨	வயிரவன்பலியிரந்தது	௬௭
௪௨௦	மாபாதகப்பிராயச்சித்தமுரைத்தது	௭
௪௨௧	பிராயச்சித்தமுரைத்தது	௩௬
௪௨௫	திரிபுரதகனமுரைத்தது	௬௧
௪௩௨	சிவபூசைப்பலனுரைத்தது	௧௭
௪௩௫	சிவன்றிருநாமமறியாதுரைத்தது	௧௪
௪௩௭	உபமன்னியுப்பேறுபெற்றது	௨௧
௪௩௯	சலந்தரன்வதையுரைத்தது	௧௮
௪௪௧	மாயோனேமிபெற்றது...	௧௫
௪௪௩	சுவேதன்கூற்றினைக்கடந்தது	௨௧
௪௪௫	தீர்த்தமகிமையுரைத்தது	௬
௪௪௬	தாருகாவனத்திற்பலியிரந்தது...	௩௭
௪௫௧	தாருகாவனத்துமுனிவர்க்குச்சிவனருள்புரிந்தது... ...	௮
௪௫௨	நருமதையின்சிறப்புரைத்தது	௧௧
௪௫௪	நந்திக்குமுடிசூட்டியது	௧௭
௪௫௬	நைமித்திகப்பிரளயமுரைத்தது	௭
௪௫௭	பிராகிருதப்பிரளயமும்ஆத்தியந்தப்பிரளயமுமுரைத்தது ...	௧௬

உத்தரகாண்டஅத்தியாயஅட்டவணை முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—(௯௮௮)


காண்டம் (௨) க்கு பாயிரமுட்பட அத்தியாயம்(௯௭) க்கு திருவிருத்தம்(௩௭௧௯

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௫௧	௩௰	னீன்முன்	னீன்முள்
௫௨	௩௨	வேதாச்வனும்	வேதாச்சுவனும்
௮௫	௮	வெறுக்கொள	வெருக்கொள
௧௭௩	௧௩	பாலகந்து	பால்கலந்து
௩௩௫	௨௨	சைய்கி	சைகி
௩௩௭	௨௩	சவுனகாராதி	சவுனகராதி
௩௯௩	௧	சாதியினுதீந்	சாதியினுந்தீ
௪௨௨	௧௫	ரொட்டியண்	றெட்டியாண்
௪௩௨	௨௭ *	முப்பத்துமூன்முவது	முப்பத்துநான்காவது
௩௩௯	௩௰	வென்	வெங்
௬௯	௧௯	சிவறி	சிவிறி
௬௮	௨௰	மணிசிவிறி	மணிச்சிவிறி

* இதுமுதல் நாற்பத்தொன்முவது அத்தியாயவரை ஒவ்வோரொண் குறைந்திருப்பதை சரிசெய்துகொள்ளவும்.





உ

சிவமயம்.

கூர்மபுராணம்.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெண்ணிலாக்கற்றைகான்று விளங்குமோர்பிறைக்கோடின்றி, யெண்ணிலோர்பாகங்கூந்தற்பிடியெனவிருந்தவாற்றாற், பெண்ணொருபாகம்வைத்தபிஞ்ஞகனுருவுகாட்டு, மண்ணலங்களிநல்யானையடிமலர்சென்னிவைப்பாம்.

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

நடேசர்.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

சீர்பூத்தகுழவிமதி யமுதிறைப்பக்கங்கைபெழூஉ திவலேதூற்ற, வார்பூத்தபொம்மன்முலேக்கௌரியிருகண்களிப்பவானோர் போற்ற, வேர்பூத்தமணிமன்றத்தானந்தநடம்புரியுமெண்டோண்முக்கட், கார்பூத்தமணிமிடற்றோன்கமலமலர்ச்சேவடியெங் கருத்துள்வைப்பாம். (க)

உமாதேவி.

வேறு.

புலவியிலுடைந்தசங்கம்புரிசடைத்திங்கட்கீற்றின்
மலேவறவிணைக்குமேல்வைமழுவலான்குறித்துநோக்க
முலேமுகங்கோட்டிநோக்கினாளொடுமுறுவல்பூத்துக்
கலேநிறைமதியிற்செய்யுங்கௌரிதாள்சென்னிசேர்ப்பாம். (உ)

விநாயகர்.

மற்றையகடவுட்போற்றிவரம்பெறவிடையூறெய்தா
தொற்றைவெண்கோட்டுவேழமுவப்பமுன்வழுத்துகின்றோர்
முற்றுமக்களிற்றையேத்திமுன்னியயாவும்வாளா
பெற்றிடாதயலார்ப்போற்றும் பேதைமையென்கொல்மாதோ.

முருகக்கடவுள்.

வேறு.

கள்வாய்மடுத்துப்புளையேறிக்கனேத்துக்குமட்டியெதிரொடுக்கும்
புள்வார்கடப்பநறுந்தெரியல்புரளுந்தடந்தோள்வரையனேத்தும்
வெள்வேனெடுங்கட்குறத்திமுலேவேழமுழக்கக்களிகூருந்
தள்ளாமதுகைமுருகனிருசரணமெமதுதலேக்கொள்வாம். (ந)

திருஞானசம்பந்தர்.

வெள்ளாங்குருகினிளம்பிள்ளேவிளேயாட்டயரமுகையவிழூஉங்
கள்ளார்கமலத்தடம்புடைசூழ்காழிநகரினிடைத்தோன்றி
நள்ளார்சமையக்குறும்பெறிந்துநங்கைபாகன்பதம்போற்றித்
தெள்ளாரமுதக்கவிதைபொழிசிறுவன்பாதந்தலேக்கொள்வாம்.

திருநாவுக்கரசர்.

புல்லாராயசமண்புலையர்பொருந்தவிக்கிக்கடற்புகுத்துங், கல்லேபுணையாக்கரையேறிக் கவர்வாய்ப்புள்ளின்வாய்கிழித்த, கொல்லேறுயர்க்குங்கர்மாரிகுளிர்பொற் கமலத்தாள்பழிச்சுஞ், சொல்லேபுணையாய்ப்பவக்கடலுங் கடந்தோன்பாதந்துதித்திடுவாம். (சா)

சுந்தரமூர்த்தியார்.

வேறு.

உரவுநீர்த்திரைக்கடலின்மலரயனேடுலகனைத்து முந்திபூத்த, கரியமால்வெண்கேழலுருவாகித்தனித்தேடி யின்னுங்காணு, முருகுலாந்தாமரைத்தாள்சிவப்பூரப்புரமெரித்தமுறுவலானைப், பரவைபாற்றூதேகப்பணித்தநாவலன்மலர்த்தாள் பணிதல்செய்வாம். (எ)

மாணிக்கவாசகர்.

வேறு.

உரைத்தற்கரியமுதுக்குறைவினூமைபேசவுரைபுகன்று [ந்து நிரைத்தெதிர்ந்தசாக்கியர்புன் சமையக்குறும்பினிலையெறி வரைத்தோள்வழுதிதனைவிடுப்ப வைகையழைத்துமணிமன்றிற் பரத்தூடமர்ந்தவாதவூர்ப்பரமன்பாதம்வணங்குவாம். (அ)

குருவணக்கம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பாழியங்குடுமிப்பொலங்கிரிகுழைத்துப்படிந்தபின்பாயிருள்செறிந்து, காழ்பமுத்தொழுகுமெம்மனக்கருங்கல் குழைத்துநற்கருணைநீராட்டி, யாழ்கடற்பிறவித்துன்பமுற்றமுந்தாதடிமலர்ப்புணையளித்தாண்ட, சூழ்சுடர்ஞானத்திருவுருவமைந்த சுவாமிதேவன்பதம்பணிவாம். (கூ)

முதனூல்வழியும், ஆக்கியோன்பெயரும்.

கட்லகமுழுதும் பொதிந்தபேழ்வயிற்றுக் கடவுண்மோட்டாமையம்பெருமான், வடமொழிதொகுத்த தெய்வமாக்கதையைவடித்தசெந்தமிழினுற்செய்தான், படுமதஞ்செருக்கிப்பாகுடல்பிளந்துபடர்சிறைமழலைவண்டோச்சு, மடிசினக்களிற்றுமானவேல்வழுதியடலதிவீரபூபதியே. (க0)

பாயிரமுற்றிற்று.

அநுக்கிரமணி.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

சீர்கெழுமாயனோடுஞ்சிறப்புடைக்காதைகேளா
வேர்குலாய்க்கிடந்ததிண்டோளிந்திரத்துய்மனென்னும்
பார்புகழ்ந்தினிதினைத்தும்பஞ்சவர்குலத்திற்றோன்றும்
வேரியந்தொடையன்மார்பன்வீட்டின்பமடைந்தவாறும். (க)

வளிதடவரினும்பர்டுமகதியாழ்முனிவனோடுந்
தளிமதுப்பிலிற்றுமென்பூந்தருநிழலரசன்கேட்ப
வளியுடன்கூர்மமுன்னமறைந்திடும்வருணநான்கின்
றெளிவுறுமொழுககநான்காச்சிரமமுந்தெரித்தவாறும். (உ)

எள்ளருஞ்சிறப்புவாய்ந்தவியல்பிரகிருதித்தோற்றந்
தெள்ளிதினுரைத்தவாறுந்தேன்றுளிமாரிசிந்தும்
வள்ளவாய்க்கமலப்புத்தேட்கினிதினின்வகுத்தகாலம்
பள்ளநீருலகம்யாவுமறிந்திடப்பகர்ந்தவாறும். (ங)

துறுமயிர்க்குறுந்தாட்செங்கட்டுணிகதிர்நிலவுகாலம்
பிறைநிகரெயிற்றுப்பேழ்வாய்ப்பிறங்கொளிவராககற்பம்
பறிவுறவறைந்தவாறும்பல்வகைத்தோற்றத்தோடுஞ்
செறிதமோகுணச்சிருட்டிசிறப்புடனுரைத்தவாறும். (ச)

தண்ணறுந்துளவினானுந்தாமரைப்பொகுட்டின்மேய
விண்ணவன்றானும்போற்றவிழைவொடுவரத்தைமுன்னங்
கண்ணுதலீந்தவாறுங்காலனைக்காலாற்செற்ற
வண்ணலன்பொழுகவட்டமூர்த்தியாயமர்ந்தவாறும். (ரு)

பொற்பிகிரணிந்துவீங்கும்புணர்முலையமுதத்தீஞ்சொற்
கற்பகக்கொம்பர்போலுங்கௌரியைத்தவங்களாற்றி
யற்பொடுமிமையவேந்தனரிதினிற்பயந்தவாறும்
வெற்பிளங்கொடியையீசன்விழைவொடுவேட்டவாறும். (சு)

பிருகுவைமுதலாயுள்ளமுனிவரர்பிறந்தவாறு
மருவுமீணாந்துமன்னர்க்கொருத்தியவ்வயிற்றிற்றோன்ற
வரிதுணர்தக்கன்றன்னையரன்முனிந்துரைத்தவாறும்
வெருவுறவன்னோன்வேள்விவீரன்முன்னழித்தவாறும். (எ)

இரணியனிரணியாக்கனிறந்தபின்னமரினேற்று
மருமலிதுளவத்தண்டார்மாயவன்முதலினோரைப்
பொருவருஞ்சமத்தில்வென்றுகாரிசூலத்திற்பொன்றி
யரனுடையுருவமந்தகாசுரன்பெற்றவாறும். (அ)

மாவலியளிப்பஞாலமுழுவதுமாயனெய்திப்
பாவடிப்படுத்திமுன்னம்பண்பொடுகவர்ந்தவாறுந்
தேவரும்புகழும்வாணன்சிவனுருப்பெற்றவாறு
மோவில்சீர்ப்புலத்தியன்றன்மரபுநன்குரைத்தவாறும். (௯)

இருட்குறும்பெறியும்வெய்யோன்மரபினிதிசைத்தவாறுந்
திருத்தருகுலத்திராமன்சிறப்புடனுதித்தவாறு
மருத்தியான்றோன்கானமடைதலுமணங்கைவவ்வ
வெருக்கொள்வாளரக்கர்கோனைவேரொடுமறுத்தவாறும். (௧0)

சேதுவினிராமனெய்திச்சிவலிங்கமமைத்துத்தூய
தாதவிழ்மலர்கடுவித்தாழ்ந்தருச்சித்தவாறு
மேதமிலயோத்தியெய்திபெரிமணிமௌலிசூடி
மாதவரோடுந்தீயோர்வரன்முறைகேட்டவாறும். (௧௧)

வண்டுழாயலங்கற்றோளான்வைகுந்தமடைந்தவாறு
மண்டர்பாற்கடலைமுன்னங்கடைதலுமமுதத்தோடுந்
தெண்டிரைமுகட்டிற்றோன்றுந்திங்கணன்மரபினுற்ற
வொண்டிறல்வேந்தர்தூயமரபினையுரைத்தவாறும். (௧௨)

வெண்மதிமரபிற்கண்ணன்மேதகவுதித்துவெம்போர்
நண்ணியகஞ்சன்றன்னைநாமறக்கொன்றுவிட்டிப்
பண்ணமையமுதத்தீஞ்சொற்பாவைநற்பின்னையாதி
யெண்ணறுமடவாரின்பமினிதினிற்றுய்த்தவாறும். (௧௩)

கண்ணன்வெண்பூதிபூசிக்கண்டிகைமாலைசூடிப்
புண்ணியத்திங்கள்வேணியரனிருபாதம்போற்றித்
தண்ணறுந்தாமத்திண்டோட்சாம்பனைப்பயந்தவாறு
நண்ணருமிலிங்கபூசைநயப்புடன்புரிந்தவாறும். (௧௪)

உலகெலாம்விழுங்குஞ்சோதியுமிழ்ந்தழற்பிழம்பாய்நின்ற
கலைமதிகண்ணிப்புத்தேள்கழலிணைசென்னிதேடி
யலர்செழுங்கமலத்தோனுமாயனுமறிந்திடாத
மலைவறுகாதைகண்ணன்மார்க்கண்டர்க்குரைத்தவாறும். (௧௫)

ஈனுலகத்திலுள்ளவிடர்தணித்திர்ந்தேன்பில்குங்
கானவர்துளவமாயன்வைகுந்தங்கலந்தவாறு
மூனமில்வியாதனெய்தியுகத்தியல்புரைத்தவாறும்
வேனில்வேட்செற்றோன்காசிவிழுச்சிறப்பிசைத்தவாறும். ௧௬

மனுமரபுரைத்தவாறுமண்டலத்தளவையாவு
மினிதினினிசைத்தவாறும்பனிக்குறும்பெறியும்வெய்யோர்
புனிதமாமியற்கையாவும்புகரறப்புகன்றவாறுங்
கனையிருட்பிழம்புநீக்குங்கதிர்ச்சிறப்புரைத்தவாறும். (௧௭)

உரைத்திடுமூலகிரேழின்செய்தியோர்ந்துரைத்தவாறும்
வரைத்தநாவலந்தீவுற்றவண்மைகடெரித்தவாறும்
பரித்திடுமேருவெற்பின்சிறப்பினைப்பகர்ந்தவாறு
நிரைத்திடுநவகண்டத்தோரியற்கைகணிகழ்த்துமாறும். (௧௮)

மாலைவெள்ளருவிக்குன்றின்வானவர்வதிந்தவாறுஞ்
சால்புறுமேனைத்தீவினியற்கைகள்சாற்றுமாறும்
பால்படவெய்துமன்வந்தரவிதிபகர்ந்தவாறுஞ்
சீலநூல்வியாதன்மூன்றுமுகந்தொறுஞ்சேர்ந்தவாறும். (௧௯)

வதரிகாச்சிரமந்தன்னின்மகேசுரன்மேயவாறுந்
ததைமலர்த்துளவோன்கேட்பச்சாங்கியமறைந்தவாறுஞ்
சிதைவில்சம்பிரதாயத்தைத்தெளிவுறப்பகர்ந்தவாறும்
பதமலர்பணிந்துபோற்றப்பத்திமையுரைத்தவாறும். (௨0)

விச்சுவவுருவங்காட்டிவிமலன்முன்னின்றவாறு
மிச்சையிற்சத்திபண்ணுமியல்பினையிசைத்தவாறு
நச்சரவணிந்தபுத்தேள்விபூதியைநவின்றவாறு
மெச்சுசீர்ப்பிரவஞ்சத்தின்மிகுதியையுரைத்தவாறும். (௨௧)

மாயையின்புணர்ப்பைநன்கின்வகுத்தெடுத்துரைத்தவாறு
மாயதத்துவத்தினுற்றதரிசனமறைந்தவாறும்
பாயநல்யோகமியாவும்பாற்படவிசைத்தவாறு
மேயநற்கருமந்தன்னையினிதினிற்புகன்றவாறும். (௨௨)

ஆசமனத்தின்செய்தியரில்கெடவுரைத்தவாறுந்
தேசுடைப்பிரமசாரியியற்கையைத்தெரித்தவாறு
மாசிலில்லறத்தின்செய்திமாண்புடனுரைத்தவாறும்
பூசுரர்மகிழ்ச்சிறப்பப்பொதுவிதியுரைத்தவாறும். (௨௩)

அல்லவைமொழிந்தவாறுநித்தியகருமமாய்ந்து
சொல்லியவாறுந்தென்னம்புலத்தினோர்தெவிட்டத்துய்ப்ப
நல்லனவூட்டுமாறுநவையறுசிராத்தத்துண்ணப்
புல்லியோர்தம்மைநீக்கிநல்லவர்ப்புகன்றவாறும். (௨௪)

தென்புலத்தோர்கட்கூட்டுமுறைநனிதெரித்தவாறு
மன்பெருஞ்சூதகத்தோடியலுமாச்சௌசவுண்மை
நன்கினினுரைத்தவாறுநவையிறீக்கருமமியாவு
மன்பினில்லறத்தோர்தங்கள்பகுதியுமறைந்தவாறும். (௨௫)

எண்ணிரண்டாயதானமுதலவாவியம்புகின்ற
புண்ணியதானமியாவும்புகரறவுரைத்தவாறு
நண்ணும்வானப்பிரத்தர்செய்தியைநவின்றவாறு
மெண்ணருஞானம்வல்லவெதியொழுக்கிசைத்தவாறும். (௨௬)

துறந்தவர்தண்டச்செய்திதொகுத்தினிதுரைத்தவாறு
மறங்கெழும்பிரமகத்திதண்டத்தைவகுத்தவாறு
நிறங்கிளர்கமலப்புத்தேளெணடுந்தலையுகிரிற்கொய்து
பிறங்குசீர்க்காரியையம்பெட்பொடுமேற்றவாறும். (உஎ)

புகலுமாபாதகத்தின்றண்டங்கள்புகன்றவாறு
நிகழுமப்பாதகத்தின்றண்டத்தைநிறுத்துமாறு
மிகலுறுபுரங்கண்மூன்றுமெந்தைநக்கெரித்தவாறு
மகிழ்சிவபூசைசெய்யுமான்மியமுரைத்தவாறும். (உஅ)

கறைமிடற்றெந்தைநாமங்கருதலணுகிவாளா
வறைதருபுளிஞன்பெற்றபேற்றினையறைந்தவாறு
மிறைவனோர்பாலனுண்ணப்பாற்கடலீந்தவாறு
முறுசலந்தரனைவெய்யநேமியாலொறுத்தவாறும். (உகூ)

கண்மலர்பறித்துச்சாத்திக்கமழ்நறுந்துளவப்புத்தேள்
பெண்ணொருபாகற்போற்றித்திகிரிமுன்பெற்றவாறும்
வண்ணவிற்சுவேதனிசன்மலரடிக்கன்புபூண்டு
நண்ணியமறலிசீர்த்திநாமறவென்றவாறும். (ஙo)

உலகினிற்கடவுட்டீர்த்தமியாவையுமுரைந்தவாறு
மிலவிதழ்மாயைபொம்மலிளமுலைவனப்புநோக்கி
நிலவுநாற்றன்னபித்தைநெடுந்தவர்மருளவையன்
பலியிரந்தன்னோர்மாதர்நாண்பலிகொண்டவாறும். (ஙக)

முனிவரர்தெருளவைபன்முதுமறையுரைத்தவாறும்
பனிவரையணங்காங்கெய்தியவர்க்கருள்பயந்தவாறும்
வினையறுசிலாதன்மைந்தன்மெய்த்தவநோக்கியெந்தை
தனதுபேருருவுமியார்க்குந்தலைமையுமளித்தவாறும் (ஙஉ)

நால்வகையொடுக்கத்துள்ளபகுதியுநவின்றவாறும்
பால்புரைநீற்றுமேனிப்பட்ர்சடைப்பவளக்குன்றை
மாலயன்முதலோரேத்துங்கருணைவாரிதியைப்போற்றுஞ்
சீலமுமுலகில்யாருந்தெருளுறவுரைக்கலுற்றேன். (ஙங)

அநுக்கிரமணி முற்றிற்று.

காப்பும் பாயிரமுமுட்பட திருவிருத்தம் - சச.

பூருவகாண்டம்.

முதலாவது

இந்திரத்துய்ம்மன் முத்திபெற்றவத்தியாயம்.

(அறுசீரடியாசிரியவிருத்தம்)

திருவீற்றிருக்குமணிமார்புந்திண்டோணான்குமுகையவிழ்ந்து
மருவீற்றிருக்குந்துழாய்முடியும்வயங்குங்கதிர்காலம்படையு
மருளூற்றிருக்குந்தடங்கமலக்கண்ணுமாகிமோட்டாமை [ம்.
யுருவேற்றிருந்தோற்போற்றியவ னுரைத்தகாதையுரைசெய்வா

சீற்றங்காமமயக்கமறவெறிந்துஞானப்பொருடேர்ந்து
மாற்றவரியபுலனைந்துமடக்குமறைதேர்முனிவோர்கள்
போற்றும்பருவமீராறுபுரியுமுயர்சத்திரயாக
மாற்றுநைம்மிசாரணியத்தருள்கூர்சூதமுனியடைந்தான். (௨)

வந்தமுனிவன்றனைப்போற்றிவயங்குமணியாசனமளித்துப்
புந்திமகிழ்ந்தாங்கருக்கியமேமுதலபூசைபுரிந்ததற்பி
னந்தலில்லாவியாதமுனிபுராணநினக்குநவில்போதிற் [றல்
சிந்தைமகிழ்ந்துமயிர்பொடிப்பவதன்பேர்நினக்குச் சேர்த்தின

கமலப்பொகுட்டுவட்டவணைக்கடவுள்வேள்வியியற்றுதலுந்
தமரத்திரைப்பாற்கடற்றுயிலுமுகுந்தன்றானேநின்னுருவா
யமர்குற்றனனற்புராணமுற்றுமறையவேண்டியாணவமாந்
திமிரக்கடற்குப்புணையினது மொழியென்றெவருஞ்செப்புவார்.

கேட்டோர்மம்மர்க்கிழங்ககழுங்கூர்மபுராணங்கிளத்துகென
மோட்டாமையின்லுருவெடுத்தமுதல்வனுலகமுழுதளந்த
தாட்டாமரைத்தாளினிதேத்திவியாதன்பாதந்தலைக்கொண்டு
வேட்டோருள்ளங்கனிந்துருகவதனைவிரித்துவிளம்புவான்.(௫)

மறுமையிலதென் றுரைத்திடுவோர்க் குரைப்போர்தவம்
வாணெடுங்கண்ணு; ரிறுமென்மருங்குல்போற்றேயுமிகழாவுண்
மையறிவினர்கட், கறியவுரைப்பினவர்செய்புந்தவங்கண்மேன்
மேலளவின்றிப், பிறைவெண்முத்தங்கிடந்தொளிருமுலைபோ
லோங்கும்பெருக்குமால். (௬)

தோற்றமுலகமீண்டொடுங்கலுகடீர்மன்வந்தரமுனிவ
ராற்றலரசர்மரபவர்தஞ்சரிதமென்னுமோரைந்துஞ்
சாற்றுபுராணவிலக்கணமென்றறிஞருரைப்பர்தவலின்றிப்
போற்றுபுராணம்பதினெட்டின்பெயருமுறையிற்புகலுவாம். எ

வேறு.

பிரமநற்பதுமம்வைணவஞ்சைவம்பேருலகேத்துபாகவத, மருமறைதெளித்தபவுடிகநாரதீய மார்க்கண்டமாக்கிநேயங், கருதரும்பொருள்சேர்பிரமகைவர்த்தமிலிங்கநல்வராகமெய்க்காந்த, மருவுவாமனஞ்சொற்கூர்மமீண்மச்சங்காருடஞ் சிறந்தவாயுவியம். (அ)

வேறு.

எனவீரொன்பான்புராணமுளபிரமாண்டப்பேரியைந்தோங்கும், பனிதோய்விசும்புதனிபுரக்கும்புத்தேண்முதலோர்பயின்றேத்தும், தனியோர்புராணமுளதிவற்றின்சார்பின்முனிவர்வகுத்தினிதிற், புனையும்புராணமீரொன்பானுளவாமவற்றின்பெயர்புகல்வாம். (௯)

வேறு.

நவையில்சனற்குமாரம்வளர் நாரசிங்கம்புகழ்நந்திதுருவாசஞ்சொற், சிவதருமமியனாரதீயங்காபிலம்புகழ்மானவஞ்சீர்வாய்ந்த, வவுசனம்வாசிட்டலிங்கம்வாருணங்காளிகமுலகத்தருள்சாம்பேசஞ், சவுமியமங்கிரஞ்சவுரமுயர்பராசரமாரீசம்பார்க்கவமாஞ்சாற்றின். (௧0)

வேறு.

செஞ்சேறாட்டுஞ்சிற்றறுவைமுனிவீர்கூர்மந்தெளிந்தோர்க
ளெஞ்சாதுரைக்கின்மூவைந்தாம்புராணமென்பர்மற்றீது
நஞ்சார்மிடற்றுப்புத்தேளின்சீர்த்திநவிலுமிதனைநவின்
றுஞ்சோர்பலராங்கதனளவையாறாயிரமென்றுரைப்பரால். ௧௧

கரைகொண்டிரங்குதிரைக்கடல்வான்குழிசியாகக்கறையனல்வா
ளரவங்கயிறாய்மதிதறியாவமரரமுதங்கடைந்தெடுப்ப
வரைமுன்னிடலுந்தாழாதுமாயோன்வளர்கூன்புறத்தாமை
யுருவிற்றாங்கிக்கடன்மதித்துவானோர்க்கமுதமுதவினான். (௧௨)

அன்னேன்மாயைப்பட்டாம்புதைப்பவண்ணலயிராவதப்பாகன்
றன்னேடமரர்நாரதனேமுதலமுனிவர்தாமரைக்கண்
முன்னேன்மருங்கினினிதிருக்குமுளரித்திருவையுணராம
லின்னேள்யாவளெனவுலகமீன்றேனிதனையியம்புவான். (௧௩)

வேறு.

சங்கொடுநேமிகிள்ளைதாதவிழ்கமலத்தண்போ
தங்கையோர்நான்கினேந்தியாயிரம்பசும்பொற்றோட்டுப்
பங்கயமலரின்வைகும்பைந்தொடியிவளேபார்க்கி
னெங்கண்மாலாலமாதியுலகெலாமடைவினின்றாள். (௧௪)

பொறிவரிச்சுரும்புண்டாடுந்தாமரைப்பொகுட்டின்மேய
விறைவனேமுதலதேவரீங்கிவள்புணர்க்குமாயைச்
சிறையிடைப்படுநரல்லாற்றீர்க்குநரில்லையென்ன
வுறிதடவந்துவெண்ணெயுண்டசெங்கமலம்விண்டான். (கரு)

ஈங்கிவள்புணர்க்குமாயைக்கட்டல்கடந்தேறினோர்கள்
யாங்குளரிசைத்தியென்னவின்னநற்காதைமுன்னந்
திங்கறவென்பாற்கேட்டோன்மறையவர்திலகன்யார்க்கு
நீங்கருமாயைநீங்கிச்சிவனடிநீழல்சேர்ந்தான். (கசு)

ஆயநான்மறையோன்முன்னைப்பவத்தினிலாழிசூழ்ந்த
மாயிருஞாலங்காக்கும்வழுதியர்குலத்திற்றோன்றல்
பாயொளிப்பரிதிவைவேலிந்திரத்துய்மன்பைந்தார்ச்
சேயனெனதுதொண்டிற்சிமிழ்ப்புறுமனத்தனானான். (கஎ)

அத்தகைவழுதியென்பாலடைவினிப்புராணங்கேட்டு
முத்தகமுரிஞ்சுகொம்மைமுகிழ்முலைக்கிடப்பானல்குந்
தத்துவங்கடந்தஞானத்தனிப்பொருள்பதத்திற்சேர்வான்
சித்தமாலுற்றதென்னத்தெருளுறவணங்கிச்சொன்னான். (கஅ)

வருபிறப்பதனிலிம்மைப்பெயரொடுமம்மர்நீங்கித்
தெருளின்முற்பவங்களங்கைநெல்லியிற்றெளிந்துதோன்ற
விருபிறப்பாளனாகியென்னுழைப்போந்தியார்க்குங்
கருதருஞானமியாவுந்துகளறக்கற்றபின்னர். (ககூ)

வேறு.

வைவச்சுதமன்வந்தரமகல்வுற்றுழிமன்னு
வெவ்வக்கடலிடுமாணவமகலத்துவரிலவங்
கொவ்வைக்கனிநிகர்வாயுமைபங்கிற்றிகழ்குழகன்
றெய்வக்கமலச்சேவடிசென்றெய்துவையன்றே. (உ0)

அந்நாள்வருகாறுஞ்சுடரவிர்வெண்மதிமரபிற்
றென்னுமணிமுடிமன்னவர்திறைதந்தடிபரவப்
பைந்நாகமிசைத்தங்கியபாரேழுமளிப்பா
யென்னாவுரைசெய்யத்தொழுதெழின்மாநகர்புக்கான். (உக)

உலகம்பொதுவறநான்முறையோராழிசெலுத்தி
யலகில்லனபரிமாமகமறையின்வழியாற்றி
நிலவும்புகழுலகேழினொடேழுஞ்செலநிறுவிக்
கலையின்கடல்கரைகண்டவன்வாழ்நாள்கரைகண்டான். (உஉ)

தோலாவிறன்முடியோனுயிர்தொலைவுற்றபினெறிநீர்ப்
பாலாழியுடுத்தோங்கியபடர்தீவினிலெய்தி
மாலோனெனவைகுண்டநகர்ப்போகமகிழ்ந்து
மேலோனருமறைநன்குலமேம்பாடுறவுதித்தான். (உங)

அருமாமகமுறுநற்பலன்விழையாதினிதாற்றி
வருநாளிலென்னுருவாமொருகலைவந்தெதிர்மன்ன
விருதாண்மலர்பணியாமகிழ்வெய்தாவடையாளந்
திருமாலதுநீயாரோகொலெனமாதுரைசெய்வாள். (௨௪)

மன்றற்றுளவத்தார்புனைமாயன்றனிமாயை
யென்றற்புதமொடுநீயெனைநினைவாயிறையடியிற்
சென்றுற்றவர்மருளும்படிசெய்யேனுயர்ஞானத்
தொன்றிச்சிவனருளாலவனடிநீழலிலுறைவாய். (௨௫)

எனலும்புவிபுனறீவளிவெளியாயிவையெய்தாத்
தனியோர்பொருடனையானறிவகைசாற்றுதியென்ன
நினையும்படியுலகுண்டருணெடுமால்சொலுமென்ன
வனையோனுடறடவந்தலர்மயிலன்பினகன்றுள். (௨௬)

புருவத்திடையிருகண்கள்புகுத்திப்புலனைந்தும்
வெருவுற்றிடுவிடயங்களினெய்தாதுவிலக்கி
யருவத்துறுமான்மாவினையான்மாவினொடுக்கி
மருவுற்றிடுதுளவோனடிமன்னுற்றிடுபோழ்தின். (௨௭)

செந்தாமரைமலர்மாதிருமுலையானைதிளைக்கு
மந்தாரகலத்தோனுயர்மறையோனெதிரணுகக்
கொந்தார்மலர்தூவாமொழிகுழறுவிழிகளியா
வெந்தாயெனவிருதாண்மலர்தொழவண்ணலிசைப்பான். (௨அ)

வேறு.

கருதருதத்துவம்விபூதிகாரிய
மருவுகாரணம்பெறவாற்றிமற்றவை
தெருளினேர்ந்துயர்நெறிசெல்லவேண்டுந
ரானடிப்பூசனையாற்றல்வேண்டுமால். (௨௯)

ஓதியவருணநல்லொழுக்கம்பூண்டுறு
காதலில்வருசிமிழ்ப்பனைத்துங்கையொரீஇ
மாதர்கூர்சகத்தினைமாயையென்றுயி
ராதியம்பரஞ்சுடராகப்பாவிப்பாய். (௩0)

பாவனைதானுமுப்பகுதியென்னுரு
வோவறவுணர்வதொன்றவ்வியத்தமேற்
றுவறவுணர்வதொன்றென்றுதற்பர
மேவரும்பாவனையென்பர்மேலையோர். (௩௧)

முடிவினின்மொழிந்தருள்பிரமமாலயற்
கடிமுடிதேடுதற்கரியதாகுமச்
சுடரினைநறுமலர்தூவிக்கைதொழு
தொடிவறுமுக்திவீடதனிலொன்றுவாய். (௩௨)

எனத்தொழுநிந்திரத்துய்ம்மனேத்துறுந்
தனிப்பரதத்துவம்விபூதிகாரிய
நினைப்பருங்காரணம்பெறவிருத்திநீ
மனக்குறவுரையெனமகிழ்ந்துகூறுவான் (௩௩)

நித்தியானந்தமாய்நிமலமாயருஞ்
சித்தமாயேகமாம்பிரமந்தேர்பர
தத்துவமதனயிச்சொரியந்தாவில்சீர்
வித்தகமுனிவரவிபூதியாகுமால். (௩௪)

காரியஞ்சகமதன்காரணந்தனித்
தேருமவ்வியத்தமவ்விறைவன்செய்தொழி
னோர்பெறப்படைத்தவையளித்துநீக்குத
லோரில்யானதற்குயிராகுமொண்சுடர். (௩௫)

என்பவையறிறபவினிதிஞேர்ந்துயர்
வன்புலனடக்கியயோகமாட்சியாற்
றென்புலக்கூற்றுயிர்குடித்தசேவடிக்
கன்புபூண்டிடுதியென்றறையக்கூறுவான். (௩௬)

தத்தமவருணநல்லொழுக்கஞ்சார்ந்துவெம்
பைத்தலையரவணிபவளவார்சடை
யத்தனைப்போற்றுகென்றருளிற்கூறிஞ
யுத்தமவருணம்பாதொழுக்கம்யாதரோ. (௩௭)

மூன்றுபாவனையுடைத்தெனமொழிந்ததோ
ரான்றமெய்ஞ்ஞானமேதளப்பருஞ்சகந்
தோன்றியவாறெதுதோற்றமெத்துணை
யேன்றநன்மரபினதியல்பியாவையால். (௩௮)

அறையுமன்வந்தரத்தளவையாதுகொல்
பெறலரும்விரதமாசாரமியாவைபின்
னிறைபுனற்றீர்த்தமெத்துணையநீள்சுட
ரொறிகதிர்முதலகோணிலைகளென்கொலாம். (௩௯)

நீணிலப்பரப்பதனீளமெத்துணை
காண்வருதீபமால்வரைதடங்கடல்
யாணர்வெண்டிரைநதித்தலங்களெத்துணை
மாணுறவினிதினின்வழங்கென்ருேதினுன். (௪0)

கோட்டமில்குணத்தினன்குட்டந்தம்பட்டெமைக்
கேட்டவைமுழுவதுங்கிளத்தியம்பினல்
வேட்டிடுவரம்பலவீந்துவிண்ணவர்
தாட்டுணைபாவவைகுந்தஞ்சார்ந்தனம். (௪க)

வேறு.

ஆங்கவன்றானுந்துயிலுணவருந்த லரும்பெறற்குமரர்மே
லாசை, கோங்கெழில்கவற்றிச்சுணங்குபூத்தலர்ந்தகுவிமுலைமக
ளிரின்புறுத, லிங்கிவைமுதல யாவையுநீத்திட் டியானெனதெ
ன்பவைநீக்கி, யோங்குசீவான்மாவினைப்பரமான்மாத் தன்னொ
டும்பிறிதறவொடுக்கி. (௪௨)

தன்னுளமதனிற் சகமெலாநோக்கித் தானதிற்புகுந்திட்டா
தொழுகி, முன்னதின்முன்னையுணர்விறந்தமுழுமுதலாகி
யொன்றாகிப், பின்னமற்றின்றிக்குணங்குறிகடந்தபிரமபாவனை
யினிலடையா, வுன்னருமியோகத் துறங்கிநற்சீவன் முத்தனா
யொழுகிடுநாளில். (௪௩)

பரிதியஞ்செல்வனான்முகக்கடவுள் பதியினிலேகெனப்ப
ணிப்ப, மருவியயோகமாட்சியிற்பனிதோய் வானிடைப்பட
ந்துசெல்போதின், விரிகதிர்விமானமெய்தலுமதன்மே லிவர்ந்
துயர்விண்ணவர்முதலோ, ரிருபுடைநடப்பமானசோத்திரமா
ல் வரைமிசையினிதுசென்றிருத்தான். (௪௪)

ஆயிரகோடிவெங்கதிர்ச்செல்வ ரள்ளிருட்பிழம்பெடுத்த
ருந்தும், பாபொளிமழுங்கப்புதுவெயிலெறிக்கும் பனிவரைமு
கட்டினுட்புகுந்து, தாயெனவுலகமுழுவதும்பூத்த தனிச்சுடர
தனைமுன்னுதலு, மேயபேரொளியாயருவுருவாகுமெய்ப்பொ
ருளுருவினெய்தியதே. (௪௫)

எய்தியவொளியிற்றோன்றியவுருவை யிருகணுங்களிப்புற
நோக்கிக், கையினைமுகிழ்ப்ப வுளங்கனிந்துருகக் களிப்பொடு
மெய்ம்மயிர்பொடிப்ப, வையனதடியிற்பணிதலுமெழுகென்றன்
பினிற்றழுவமாமறையோன், மெய்யினின்றநந்தகோடிசூரியரில்
விரிகதிர்ப்பிழம்பெழுந்ததுவே. (௪௬)

எழுந்தநற்சோதியிரணியகருப்பனுறையுளாயாவரும்யாவு
ந், தொழுந்தகுமுத்தர்புகும்வழியாகுஞ்சுடரவன்மண்டலத்த
டைந்து, செழுங்கனற்பிழம்பாமுக்கணெம்பெருமான்றிருவரு
ள்பெற்றுவேறின்றி, யழுங்கலில்சிவமாந்தன்னுருத்தானுயமர்ந்
துயரின்பமுற்றதுவே. (௪௭)

இன்னணங்குழந்தைமதிதவழ்குடுமி யிறைவனையேத்துநர
ல்லான், மன்னுதற்கரிதாமுத்திவீடதனின்மருவுதற்கரிதெனவ
ழங்க, வன்னவற்குரைத்தகாதையையெமக்குவிரித்துரையென
வருமறையோன், பொன்னகர்க்கிறைவன்கேட்டலுமுலகம்பொ
திந்தசேவடியினேன்புகல்வான். (௪௮)

என்றருந்தவத்துச்சூதமாமுனிவன் முனிவரர்க்கினிதினி னிசைத்தான், மன்றவிக்காதைகேட்டுளோர்பயின்றோர்மற்றதி னேரொழுத்துணர்ந்தோ,ரொன்றியசெல்வத்தமர்ந்துகிண்கிணி க்காற்சிறுவரையினிதினிறுயிர்த்துக், கொன்றைதேன்றுளிக்க மன்றினின்றுடுங்கூத்தனதடிநிழலுறைவார். (௬௧)

இந்திரத்துய்ம்மன்முத்திபெற்றவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௬௧.

இரண்டாவது

வருணாச்சிரமதன்மமுரைத்தவத்தியாயம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பொன்னகர்க்கிறைவனாதியமரரும்புலன்களைந்துந்
தன்னுழையடக்கும்வீணைமுனிவனுந்தாழ்ந்துகேட்ப
மின்னகுநேமிசங்கம்வெங்கதைசிலைவாளேந்தி
மன்னியகூர்மருபமான்முகமலர்ந்துசொல்வான். (௧)

நித்தியமாகியொன்றாய்நிமலமாயெங்குமாகித்
தத்துவங்கடந்துநின்றமகேச்சுரன்றன்னுணீங்காச்
சித்துருவாகியான்முற்றோன்றினேன்சிறந்தவென்பே
ருய்த்தினிதுணரினாராயணனெனவுரைப்பர்மேலோர். (௨)

பாய்திரைசுருட்டுந்தெண்ணீர்ப்பனிக்கடன்முகட்டிற்செங்க
ணாயிரஞ்சூட்டராவினறிதுயிலமர்ந்தபின்னர்க்
காய்கதிர்தோன்றுமேல்வைக்கண்மதர்நீந்தியாங்கு
மீயுயருலகமூன்றும்படைத்திடவிழைவுற்றேனால். (௩)

ஆயிடையெனதுநெஞ்சத்தருளொடுமகிழ்ச்சிபூப்ப
மாயிருஞாலம்போர்த்துமல்கிருட்பிழம்புசீக்கும்
பாயொளிப்பரிதிகோடியெழுந்தெனப்பசுந்தேன்பில்குஞ்
சேயிதழ்க்கமலப்போதிற்செல்வன்முன்றோன்றக்கண்டேன். ()

அவ்வழிகுழவித்திங்களடுசிலைவடிவேற்செங்கேழ்க்
கொவ்வையங்கனிவெண்முத்தங்குலவுமோர்கமலம்பூத்துத்
தெய்வமென்கொம்பிரண்டுசெவ்விளநீருந்தாங்கிப்
பௌவவாரிதியிற்பொன்னம்பங்கயத்துதித்ததன்மே. (௫)

மங்கலையாகியாவுமயக்குறுபொருளாயென்றுந்
தங்குமாமாயையாகித்தனிப்பிரகிருதியாகுஞ்
செங்கயனெடுங்கட்செவ்வாய்த்திருவினைக்கண்டுவேதன்
பொங்கியவுவகையோடுமெமக்கிவைபுகலலுற்றான். (௬)

யான்படைப்பவைகளெல்லாமலிதல்காரணமாயென்றும்
வான்படுபூதமியாவுமருளுறுபந்தமெய்தத்
தேன்றெளிந்தமுதினோடுங்குலவியகனிவாய்த்தீஞ்சொற்
கான்படுநறுமென்கூந்தற்கமலையைப்பணித்தியென்றான். (எ)

என்றலுங்கமலவீட்டிலிளங்கொடிவதனநோக்கி
நின்றபல்லுயிர்களியாவுஞ்சகத்தினினீங்காவாகி
வன்றிறற்குயவனுருளும்வனைகலத்திகிரிபோலச்
சென்றியல்கருமத்தாம்பிற்றிரிதரப்புரிதியென்றே. (அ)

தத்தமவருணத்தோதுமொழுக்கினிற்சார்ந்துநாளுஞ்
சித்தமாசெறிந்துபொய்யிற்றீர்ந்துநான்மறையுந்தேர்ந்து
மைத்தவழ்மிடற்றுப்புத்தேண்மலரடிபோற்றினோர்பா
னுய்த்திடேல்மாயையென்னவந்நெறியொழுகல்செய்தாள். (கூ)

ஆங்கதன்பின்மரீசியங்கிராப்பிருகுதக்க
னோங்குமத்திரிவதிட்டன்புலத்தியன்புலகனுற்ற
தீங்கெறிகிருதுவென்னுமொன்பதுதிறத்தினோரைப்
பாங்கினில்வேதன்யோகமாயையிற்படைத்தல்செய்தான். (க0)

வேதியர்முகத்தில்வேந்தர்விறல்கெழுதுணைத்தோள்வெற்பிற்
றீதறுவணிகர்செம்பொற்குறங்கினிற்சதுர்த்தர்செய்ய
பாதபங்கயத்திலின்றான்பதுமன்முன்படைத்தமூவ
ரோதியமகங்களியாவுமாற்றுதற்குரியராவார். (கக)

வேதமோர்நான்குமாதியந்தம்வேறிலவாய்முன்ன
ரோதியவாக்கதாகுமுறைத்தவிம்முறையிற்சார்ந்த
வேதமினூல்களியாவும்விழுமியவிவற்றிற்றீர்ந்த
தீதுநூலவற்றினின்றோர்செல்வியரல்லரன்றே. (கஉ)

தோற்றுழியுயிர்களியாவுமறிவின்றித்தோற்றுந்தத்த
மாற்றுநல்லொழுக்கந்தன்னாலறிவுறுமதற்குநாளு
மேற்றதோர்காலந்தன்னில்விருப்பொடுவெறுப்பாங்கெய்திப்
போற்றுறுதருமநீக்கித்தீவினைபுகுதுமன்றே. (கங)

உரைத்திடுமணிமாவாதிசித்திகளுறுதவாற்றா
னிரைத்தநற்பொருள்கள்வாளாபுகுந்திடாநெறியிற்றீர்ந்து
வருத்துதாமதத்தினாய்சித்திவந்தெய்துமீதும்
பொருத்துகாலங்கடம்மிற்பொன்றிடுமென்பமாதோ. (கச)

வேறு.

உடுப்புமுகத்தகூர்ங்கொழுவினுழுதற்செயலானாணு
மடுத்துமுயன்றவாணிகத்தாலடைவர்பயன்மற்றவர்புரிவா
றெடுத்தகருமத்தொடர்பினைத்துந்தொகுத்தான்வேதன்சுவாய
மிடுத்தற்கரியகருமங்களனைத்துமுறையின்விளம்பினான். [ம்பு

மனுவீரண்டுரைத்தகருமத்தின்வழியேயிருகுமுதலான [நெறி
முனிவோர்யாருந்தெளிவுறமுன்மொழிந்தாரன்னோர்மொழிந்த
பினிதினோதலோதுவித்தலியல்பின்வேட்டல்வேட்பித்தல்
புனிதர்க்கீதருமேற்றன்மறையோர்புரியுந்தொழிலன்றே. (கசு)

ஓதல்புரவிமகமுதலவேள்வியாற்றலமருடற்ற
லீதலரசர்தொழிலியல்பிற்கொடுத்தலோதன்மகமியற்றல்
நீதிலுழவுவாணிகமானளித்தல்வணிகர்செயலடுதல் [ர்
கோதின்றேவல்செயல்பாகவெச்சம்பின்னோர்க்கெனக்குறித்தா

இனையவாறுதொழிலமைத்தாங்கியலாச்சிரமநிறுவினு
ரனையயாவையெனிற்பிரமசரியமமைந்தவில்வாழ்க்கை [டி
புனைபொற்சடைவள்ளுகிர்குறை யாவானப்பிரத்தம்புலன்வாட்
மனமுற்றடக்கியெவற்றினையுமறுக்குஞ்சந்நியாசமன்றே. (கஅ)

இல்வாழ்வுற்றோர்தருமமழற்கருமநிதிபூசையெச்சங் [யல்
கொல்லேற்றண்ணலடிபணிதல் கொடுத்தல்வானப்பிரத்தர்செ
தொல்லாரணங்கள்பயிற்றலழற்கருமமூலமடகுதுய்த்த [ல்
னல்லோரொதிரிற்பகுத்தருந்தனரையேறுயர்த்தோனடிபோற்ற

முற்றுந்துறந்துமுதுக்குறைந்தோர்தருமமையமேற்றுண்டல்
பற்றற்றிருந்துதவமாற்றன்மவுனம்பரபாவனைபுரிதன்
மற்றைப்பிரமசரியத்தோர்தருமம்வளர்தீத்தொழில்சந்தி
யற்றநோக்கிச்செயல்பலியேற்றுண்டல்குரவனடிபணிதல்(உ0)

நீத்தபருவமோராந்துநீக்கித்தனதுமனைக்கிழத்தி
பூத்துநீராடியநாடொட்டுரைத்தநாளிற்புணர்கிற்போன்
வாய்த்தவில்வாழ்பவனென்னும்வானப்பிரத்தனறத்துறந்தோ
னேத்தும்பிரமசாரியனும்பிரமசாரியென்பரால். (உக)

அருப்புமுலையார்பூப்பெய்திநீராட்டயருநாண்முதலாய்த்
தெரித்தநாள்களீராறிற்றிங்கடோறுமகிழ்சிறப்பக்
கருப்பமினிதினுறுமளவுங்கலவாணுகிற்கருவழித்தோ
னுருப்பநரகமிவற்காகுமென்னமறைகளோதுமால். (உஉ)

நெற்றிற்றனிக்கண்வானவனைவழுத்தலவுபாசனநெறியின்
முற்றத்தமர்ந்தவிருந்தினருக்கருத்தல்வேதமுறையுணர்தல் [ல்
சொற்றநெறியிற்றென்புலத்தோர் துய்ப்பவினிதினுணவளித்த
கற்றோரொவருமில்வாழ்வோர்கடனென்றுலகிற்கழறுவரால். ()

வேற்றோர்புலத்தினெய்தினுந்தன்மனைவிவிந்தாளாணுலும்
போற்றுமவுபாசனமொழிதல்புலவோர்புரியாரில்வாழ்வோன்
மாற்றவரியமூவர்க்கும்வருந்துப்புரவுவழங்குதலா
லேற்றமாகுமுலகுநெறியல்லாவொழுக்கமியல்பாகா. (உச)

மருவற்கரிதாமுயர்வீடுசேர்த்திமல்லற்பெருஞ்செல்வந்
தருமத்தளவின்வந்தடைந்தவாம்ருற்றருமம்விடநீது
பெருகுந்தருமம்பொருள்காமமிவைகள்பேசிற்சாத்துவிதங்
கருதற்கரியராசதந்தாமதத்தின்வழியேகலந்திடுமால். (உரு)

ஆசின்றுயர்ந்தசாத்துவிதத்தமர்ந்தோர்மேலாங்கதியடைவர்
பேசவருராசதகுணத்திற்பொருந்தினோர்கள்பெட்பினெடு
தேசினுறுமத்திமகதியிற்சேர்வர்வளர்தாமதகுணத்தோர்
மாசுபூத்தவிழிகதியினுலகமிகழமன்னுவார். (உசு)

வேறு.

அறந்திறம்பாதுநாளுமரும்பொருள்காமந்துய்ப்போர்
சிறந்தவிவ்வுலகந்தன்னிலளப்பருஞ்செல்வமெய்தி
மறங்கிளர்வடிவேலுண்கண்வானவர்மகளிரோடு
முறங்கிடாதின்பந்துய்க்குமுலகினிலினிதுவாழ்வார். (உஎ)

அறம்புரிந்தன்றியோங்குநுறக்கத்தினடைதலாகா
சிறந்தநற்பொருள்செய்தல்லாற்மிகழ்தருமின்பஞ்சேரா
வுறைந்தகாரணத்தினன்றிக்காரியமாகாவோடு
கறங்குபோற்பிறவினானத்தல்லதுகடக்கலாகா. (உஅ)

தாமரைப்பொகுட்டின்மேயசதுமுகக்கிழவனாதி
தேமலர்த்தருக்களீறுச்செறியுநல்லுலகமியாவு
நாமநூற்றருமந்தாங்கிநின்றனநல்லோர்யாருங்
காமுறல்வேண்டுமென்றுங்களைகணாந்தருமமென்றே. (உகூ)

வைதிகத்தருமம்வாய்ந்தபிரவர்த்திநிவர்த்தியென்ன
வெய்துமநிவர்த்திஞானத்தொழுகன்மற்றையதெஞ்ஞான்றுங்
கைதவத்தெவையுமாற்றலாங்கதுகடிந்துமுன்னைச்
செய்தவஞானந்தன்னினிற்பதேசெவ்விதாமால். (ஙo)

பொறைகொடைகருணைதானம்பொய்ம்மொழியமுக்காறின்மை
புறையுமுட்கரணங்காத்தல்பயில்புறக்கரணமோம்பல்
குறைவிசொல்லாமைநாளுமுனிவின்மையுயிர்கொல்லாமை
பிறர்மனைநயத்தலின்மைநன்மொழிபிறழாவாய்மை. (ஙக)

புண்ணியநன்னீராடல்கடவுளர்பூசையாற்ற
லுண்ணிறைமகிழ்ச்சிவேதபாரகர்க்கூட்டுநீய
கண்ணயவாமைகள்ளாதொழுகுதல்கடுஞ்சொலின்மை
யெண்ணியவிவைகணான்குகுலத்திற்குமியைந்தவாமால். (ஙஉ)

தம்மொழுக்கியன்றபார்ப்பார்சார்குவர்பிரமலோகந்
தெம்முனைப்பட்டவேந்தர்கற்பகநிழல்சேர்வார்
மெய்ம்மையவணிகர்வாயுபுவனத்தின்மேவுவார்க
ளிம்மையிற்றுறந்தோர்சேர்வரிரணியகருப்பலோகம். (ஙங)

காழ்த்தவைம்புலனுஞ்செற்றுக்கரணங்களடக்கிநாளு
மூழ்த்தமென்சருகுமாந்தியோகினிலுறங்குகின்றோர்
சூழ்த்துநான்முகனும்விண்ணோர்தொகுதியுஞ்சுருதிநான்கும்
வாழ்த்துதற்கரியமுத்திவீட்டின்பமருவிவாழ்வார் (௩௪)

என்னுமகதிவீணைநாரதர்முதலோர்யாரு
மன்னுமாச்சிரமநான்காய்வகுத்தினிதுரைக்குமேல்வைப்
பின்னுமோர்யோகிதன்மைபேசினையைந்துண்டாங்கொல்
பன்னுமாச்சிரமமென்னப்பைந்துழாய்முகுந்தன்சொல்வான்.()

உரைத்தவாச்சிரமநான்கேயொவ்வொன்றேயிரண்டதாகும்
வரைத்தவையுரைத்துங்கேண்மினுலகுருவாணனென்றுந்
திருத்தகுநெறிவழாதநயிட்டிகனென்றுஞ்செவ்வண்
விரித்தநூற்பிரமசாரியொழுக்கிரண்டாகமேவும். (௩௬)

உவகுருவாணனென்போன்மறைமுழுதுணர்ந்தபின்னர்
நவையறுமகளிர்தம்மைவேட்டுளோனயிட்டிகன்சீர்
தவலருங்கேள்விமுற்றித்தன்னுயிருலக்குங்காறுந்
துவரிதழ்மடவாரின்பந்துய்த்திடாதொழுகுவோனே. (௩௭)

ஓதுமில்லறத்தினின்றோனுயருதாசீனன்மிக்க
சாதகனெனவிரண்டாந்தன்மையனவற்றின்முன்னோ
னேதமில்கடன்கண்மூன்றுங்கழித்தபின்னில்விற்றீர்ந்தோன்
றீதில்சாதகன்சாங்காறுமில்லொழுக்கதனிற்சேர்வோன்.(௩௮)

வேறு.

வானப்பிரத்தன்சந்நியாசிவளர்தாபசியென்றிருவகையாய்த்
தானத்துறும்வானப்பிரத்தர்தம்மின்முன்னோன்மனைநீத்துக்
கானத்துறைவோன்மற்றையவன்கன்னிக்கற்பின்மனைவியொடு
மோனத்திருந்துதீக்கருமமுறையினுற்றுமுரவோனே. (௩௯)

பரவுஞ்சந்நியாசியரிற்பாரமேட்டியோகியென
விருவருளர்மற்றவரின்முன்னோனிகலும்புலன்களுள்ளடக்கி
மருவும்யோகத்திருந்துமுத்தியடையமுயல்வோன்மற்றையவன்
கருதுமெவையுந்தானுகிக்கைவல்லியத்திற்களிப்போனே. (௪0)

இனையநான்காச்சிரமமொவ்வொன்றிரண்டாயியன்றவாறின்றி
நினையிலஞ்சாமாச்சிரமநிகழ்த்தாச்சிரமம்படைத்ததற்பின்
கனைவண்டிமிருந்தாமரைமேற்கடவுடக்கன்முதலோரைத்
துணைவினைக்கியனைத்துயிரும்படைத்தீரென்னச்சொற்றனனால்

புவனமனைத்துமாங்கவரும் படைத்தார்கமலப்பொகுட்டு
றைவோ, னவையில்சிருட்டியிவ்வாறுபுரியுநாமற்றவையளிப்
போங், கவர்முத்தலைவேற்படைக்கட்வுளவற்றைக்கருணையொ
டுந்துடைக்குந், தவவில்லொருமூவருமொன்றேயென்னமறை
கள்சாற்றுமால். (௪௨)

திங்கட்குழவிகிடந்துறங்குஞ் செம்பொற்சடையெம்பெருமாற்
தங்குபிரமமிமயேச்சுரியக்கரபாவனையாந்தனிமூன்று [குத்
துங்கமுறுபாவனையுளவாமவற்றிலெனக்குச்சொல்லுங்கா
லெங்கும்விளங்குமக்கரபாவனையொன்றென்றேயியம்புவார். ()

கமலப்பொகுட்டுப்புத்தேளுங்காயாமேனித்திருமாலு
மிமிழ்தென்கடலின்விடநுகர்ந்ததேவுமொருவரீங்கிவரி
லமைவுற்றொருவர்தமைப்பூசையன்பிற்புரியினொருமூவர்.
தமைமுற்றுணர்ந்துவழுத்துவோர்பெறுபேறதனிற்சார்குவார்

இனையமூவர்தமைநாளுமலர்தூஉய்ப்பழிச்சியிறைஞ்சுவோ
ரனையகடவுளடையாளந்தரிக்கநுதலிலயனடியார்
வனைகதிலகமாலடியார்நீற்றுற்சாந்தாற்சூலம்போற்
புனைகதிரிபுண்டரநீற்றாற்புராரியடியார்வனைந்திடுக. (சரு)

அருளினோடுமெவரவர்தஞ்சின்னம்புனையினத்தேவைத்
தெருளிற்றரித்தவாறுகுந்திரிபுண்டரம்வானுதற்றீட்டிற்
கருதவரியமுத்தேவுந்தரித்ததாகுங்கலைமதிக்கீற் [ன்.
றுருவச்சடையோற்றொழுமவரோமுத்தியடைவொனவுரைத்தா

வருணச்சிரமதன்மமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கஙகூ.

மூன்றாவது

ஆச்சிரமமுறையுரைத்த வத்தியாயம்.

ஓதுவருணச்சிரமமியாவையுமுரைத்தாய்
தீதறவவற்றின்முறைசெப்புகெனநல்யாழ்
மாதவன்முதற்கடவுள்வானவனுரைப்பத்
தாதவிழ்நறுந்துளவமாலினிதுசாற்றும். (க)

பிரமசரியங்கருணைபெற்றுமனைவாழ்தன்
மருவரியகானினிடைமாதவமியற்ற
லொருவியெவையுந்தினமுமொவ்வொருநகர்க்கட்
டிரிதலெனவோதுமுறையேமுறைதெரிக்கின். (உ)

ஈங்கிவைபிறழ்ந்துவருமியாவையவையென்னிற்
கோங்குமுலைமாதரொடுகூடுவதன்முன்ன
மோங்கியசந்நியாசியெனவுற்றிடலுமாகுந்
தீங்கெறிமெய்ஞ்ஞானநெறிசிந்தைநிலைபெற்றால். (ங)

இல்லறமுயன்றுகடன்மூன்றுமினிதீர்ந்தா
லல்லறமேவும்யதியாகியமர்கிற்பார்

முல்லைநகைமாதர்கடிமுற்றியதினத்தி
னெல்லையதியாகியுணர்வுற்றிடலுமாமால். (ச)

ஈங்கிதினுயர்ந்ததிலையெய்திடுவதல்லா
லாங்கதினிழிந்ததிலையெய்திடுதலாகா
மூங்கைமுடவன்செவிடன்முற்றுமிதியற்றோன்
வீங்கறிவிலானெனினுமேவுமெதியாவார். (ரு)

மூதுக்குறைவின்ஞானநெறிமுற்றியபினல்லா
லெதித்திறமடைந்திடினிழுக்குறுமிவற்றின்
மதித்தொருநல்லாச்சிரமமன்னிவிளிகாறும்
விதித்தநெறிநிற்பினுயர்வீட்டடைவரன்றே. (சா)

கொடுப்பவர்கொடுத்தபொருள்கொள்பவர்களியாரு
மெடுத்துமறைசொல்பிரமமென்றுநனியீவோ
ரடுத்தவிரதங்களினிதாற்றுபலன்யாவும்
விடுத்தவர்மெய்ஞ்ஞானநெறிவீடடைவரன்றே. (எ)

போக்குவழிகண்டிடைபுகாதுறுமுலண்ட
மாக்கியிடுகூடதனையாத்திடுதல்போல
நீக்குகருமம்பலநினைந்துபுரிவோனை
வீக்கியிடுமக்கருமம்வேதனையுறுத்தே. (அ)

ஆதலினறம்பலன்விழைந்திடுதலின்றி
மேதகவியற்றுநர்கள்விஞ்சையிலரோனுஞ்
சாதல்பிறவித்துயர்தவிர்ந்துவிட்முண்டோன்
பாதநிழலுற்றினிதுவாழ்வர்பலகற்பம். (கூ)

பலன்விழைவுறுதுகருமம்பலவியற்றி
னலகறுபவத்தினுளபாபமறுமற்று
னிலவியமனம்புனிதமாவதுநிகழ்ந்தால்
மலைவிலுயர்ஞானம்வரும்வரிலடைவன்வீடே. (க0)

பிஞ்சுமதியஞ்சடைமிலைந்தபெருமானை
நெஞ்சுறநினைந்துபுலனைந்தையுநிறுத்தி
வஞ்சமுறுமாணவமெறிந்தமதிவல்லோ
ருஞ்சிடுவனொன்பதனையாவருணர்கல்லார். (கக)

நன்னெறியினாச்சிரமநான்குமுறைசெய்தே
மின்னெறியினின்றவர்களின்பமடைகிற்பா
ரன்னெறிதிறம்பினரழன்றுதழல்கக்கும்
வெந்நரகில்வீழ்வனொனவிண்டுவுரைசெய்தான். (கஉ)

ஆச்சிரமமுறையுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கருக,

நான்காவது

பிரகிருதிந்தோற்றமுரைத்த வத்தியாயம்.

இன்னணம்வருணாச்சிரமநல்லொழுக்கம்யாவையும்வழுவ
றக்கேட்டுக், கன்னியம்படலைத்துழாய்துயல்வருதோட்கருமுகி
ல்வண்ணனைநோக்கிப், பொன்னவிர்திதலைமுலைசுமந்தொல்கும்
புலோமிசைநகைவிருந்தயரு, மன்னவர்திலகன்மகதியாழ்முனி
வன்மகிழ்சிறந்தீங்கிவைபுகல்வான். (க)

அளப்பரும்புவனமொருங்களிப்பவர்யாராங்கவையாருழை
யுதிக்குந், துளக்கறயார்மாட்டொடுங்குமெவ்வாறுநியமிக்கப்ப
டுமவைதொகுத்து, விளக்குறவுணர்வினியமனஞ்செய்வானெ
வனிவைவிளம்புதியென்னக், களக்கனியனையதிருமறுமார்பன்
கருணைகூர்ந்தாங்கவைபுகல்வான். (உ)

பொருவிலவ்வியத்தமாயழிவின்றிப்புனிதமாயனந்தமாயா
ர்க்குந், தெரிவரிதாகியெங்கணுமுகமாய்ச்சிறப்புடனெவற்றினு
நிறைந்த, கருதரும்பொருளாமகேச்சுரன்றானுங்காரணமாய்ச்ச
தசத்தாய், பெருகுமவ்வியத்தமுயர்பிரகிருதிப்பிரதானமென்றி
னிதியம்பும். (ங)

சத்தமுன்கிளக்கும்விடயமோரைந்துந் தாழ்ந்திடும்விடய
மோரைந்துஞ், சித்தமீறாயகரணமோர்நான்குஞ் சிறந்தஞா
னேந்திரியமைந்து, மொத்திடுகருமவிந்திரியமைந்துமின்றியேமுழு
முதலாகி, நித்தமாயொன்றாயசலமாயொளியாய் நிருமலமாய்
வெறுவெளியாய். (ச)

தன்னுழைத்தானேயுறைவதாய்த்தன்னைத்தான்பணிகொ
ள்வதாயார்க்கு, முன்னையதாகிப்பிரமமாய்ச்சிவமாய்முதலொ
டுமந்தமில்லதுவாய், மன்னுமுக்குணமுக்காலமில்லதுவாய்வா
க்கொடுமனந்தொடர்வரிதாய்த், துன்னுதற்கரிதா யெங்கணுநி
றைந்தசோதியாம்பிரமமென்பதுவும். (ரு)

புருடனுமாகநான்கும்வைகுதலும்பிரகிருதிக்குமுன்புகன்
ற, விரியுமுக்குணமுந்தூக்குபோற்றுலைநாவெனச்சமமெய்துறு
சிறப்பின், வருபிராகிருதப்பிரளையமாகுமற்றிஃதுபர்மகேச்சுர
ற்கோ, ரிரவுநற்றிருட்டிபகலிவைமாற்ற மலதவற்கிராப்பகலிலை
யால். (சு)

அன்னதோர்கங்குற்புலரியிலுலகுக் காதியாயநாதியாமகே
சன், கன்னியர்முலைமேற்புனிற்றிளந்தென்றற் கன்றுதைவருத
லுங்காம, மன்னியுள்கலங்குமாறுபோற்புருடன்வளர்பிரகிருதி
யைநோக்கத், தன்னிலைகலங்குமதனிடைப்புதித்ததுயர்மகத்து
வந்தானே. (எ)

அனையநன்மகதத்துவத்தினைப்புத்திமகான்மதிபிரக்கினையா ன்மா, வனைதருங்காதிமேதைமீச்சுரனென்றுரைப்பர்மற்றிதனி ல்வைகாரி, யினியதைசதம்பூதாதியாங்காரந்தோன்றுமற்றிவற் றினைக்கருதாப், புனையபிமானம் புட்கலனுன்மாச் சிவன்மந்தர மெனப்புகல்வார். (அ)

உரைத்தவாங்காரமூன்றினும்விளங்கு பஞ்சதன்மாத்திரை யோங்கி, நிரைத்திடுபஞ்சபூதமிந்தியங்க ணிகழ்த்துமிந்தியத்தி னுக்கியைய, வரைத்ததெய்வதங்கடோன்றுமவ்வியத்தந்தனில் மனந்தோன்றுமம்மனத்தாற், றிருத்தகுகருத்தா யானெனதெ ன்னும்விகாரத்திற்சேர்குவனென்றே. (கூ)

சொன்னவாங்காரமூன்றில்வைகாரிதுலங்குசாத்துவிதவா ங்கார, மன்னதில்வருமிந்தியவதிட்டானதெய்வதங்தைச்சதமத னின், மன்னுமிந்தியங்கடோன்றிடுமனமும் ஞானத்துங்கருமத் தும்வழங்குந், துன்னுபூதாதிதன்னில்வான்முதலாம்பூததன்மா த்திரைதோன்றும். (க0)

வேறு.

விளம்பரியபூதாதியாங்காரம்விகாரமுறிற்
றுளங்கலருஞ்சத்ததன்மாத்திரைதோன்றுமாங்கதனிற்
களங்கமறுமாகாயந்தோன்றுமதன்குணங்கருதி
லளந்தறியவரிதாகுஞ்சத்ததன்மாத்திரையாமால். (கக)

பனிவிசும்புவிகாரமுறிற்பரிசதன்மாத்திரையடையு
மனிலமதனிடைத்தோன்றுமதன்குணமுமூன்றுகுந்
துணைவில்வளிவிகாரமுறிலுருபதன்மாத்திரைதோன்றுங்
கனலதனிற்றோன்றுமதன்குணங்கருதிலுருபமாம். (கஉ)

எய்துமழல்விகாரமுறவிரததன்மாத்திரைதோன்று
மையபுனலிதிற்றோன்றுமதன்குணமுமிரதமாம்
பெய்புனலின்விகாரத்தாற்கந்ததன்மாத்திரைபிறக்கும்
வையமதிற்றோன்றுமதன்குணந்தெரிக்கின்மணமாகும். (கஙு)

ஒலியுடைத்தாமாகாயமூறுடைத்தாம்வளியதனைச்
சுலவலாற்றோன்றும்வளியிருகுணமாமிருகுணத்த
வுலவையுருவடைந்தவழல்பொதிந்ததனலொழிவரிதாய்
நிலவுமொருமூன்றுகுணம்வெய்தாயநெருப்பினுக்கே. (கச)

முக்குணமாமழலிரசகுணப்புனலைமூடியதால்
மிக்கபுனற்கொருநான்குகுணமேவுநான்குகுணந்
தொக்கபுனல்மணமுடைத்தாய்புவியதனைச்சூழ்தலாற்
புக்ககுணமோரைந்துமுரியவாம்புவியினுக்கே. (கரு)

கருதரியவவ்வியத்தத்தருள்ளானுங்காண்வருசீர்ப்
புருடனுளுற்றிடலானும்பொருவரியமகத்தாதி
மருவியிடும்விசேடாந்தமேழுமேவான்புனலி
னுருவமுறுகுமிழிபோற்பிரமாண்டமாயுதிக்கும். (கசு)

வடமேருவுயர்கொப்பூழ்க்கொடியாகமற்றதனை
யடையாகும்வரையனைத்துமவையாகவாழிநீர்ப்
புடைமேவிவருகருப்பசலமாகப்பொருவின்மறை
நடையாவும்வகுத்தருளுநளினத்தோனுதித்தனனால். (கஎ)

முருகவிழுஞ்செங்கமலப்பொகுட்டிலுறைமுன்னவனே
யுருவுடையோரியாவரினுமுந்தியநல்லுருவுடையோன்
புருடவிரணியகருப்பன்மறைக்கிழவன்புவனத்துக்
கொருமுதல்வன்கஞ்சனெனவவனையேயுரைத்திடுவார். (கஅ)

தோற்றியிடுமண்டத்தின்பதின்மடங்குபுனல்சூழு
மேற்றபுனல்பதின்மடங்காங்கெரிசூழுமவ்வெரியைக்
காற்றதனிற்பதின்மடங்குசூழ்ந்திடுமக்காற்றதனைப்
போற்றரியதனிவிசும்புசூழ்போகப்புதைத்திடுமால். (ககூ)

ஆகல்விசும்புபுதைக்குமுயராங்காரமாங்கதனைப்
புகலுமகதத்துவமேபுதைக்குமகதத்துவத்தைத்
துகளறநல்லவ்வியத்தஞ்சூழ்போதுமாங்கதனி
னிகலுடனேவிருப்பெறிந்தசிவசித்தரினிதுறைவார். (உ0)

எவ்வுயிர்க்கும்வித்தாகுமீசனேமகேச்சுரனுஞ்
செவ்விதருமவனிரண்டாமுருவண்டஞ்செறிந்ததனிற்
றிவ்வியத்தின்முதலுதித்ததேவன்மூன்றுமுருவ
மவ்விறைநான்முகமுறுதலாங்கவனுன்காமுருவம். (உக)

இரசதத்தின்குணமெய்தினான்முகனுயுலகினும்
பரவுற்றசாத்துவிதப்பண்பின்மாலாயளிக்கு
முறைபெற்றதமோகுணத்தாலுருத்திரனுய்த்துடைத்தருளு
மருவுற்றவிச்சையினுன்மருவாமல்மகேச்சுரனே. (உஉ)

வேறு.

ஆதியிலுதித்தவற்றாலந்தியம்பரமன்மிக்க
மூதுணர்வுடைமைதன்னால்முதுக்குறைவினனெஞ்ஞான்றுஞ்
சாதலும்பிறப்புந்தோயாத்தன்மையாலயன்மற்றியார்க்கு
மேதகுவீரமாற்றல்விண்டுவென்றுணாப்பர்மாதோ. (உங)

நாரத்திலமர்ந்தவாற்றால்நாரணனிமையோர்தம்மிற்
சீருற்றமகத்தாம்வாற்றான்மகேச்சுரன்சேர்ந்தோர்மாயை
வேர்முற்றுமரிந்தவாற்றுனிவன்விளையாட்டதன்றே
நீர்முற்றுமண்டமின்றுகாத்தவைநீக்கும்பண்பே. (உச)

இன்னணம்பகுதிதோற்றஞ்சுருக்கிமற்றியம்பல்செய்தே
மன்னியபுத்திமுன்னாய்மலரயன்வகுத்தயாவும்
நன்னயத்துரைத்துமென்றுநாகிளவண்டுபாடுங்
கன்னியந்துளவமாலைக்கார்முகில்வண்ணன்சொல்வான். (உரு)

பிரகிருதித்தோற்றமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௧௭௫.

ஐந்தாவது

பிரமாவினுடைய காலவளவையுரைத்தவத்தியாயம்.

தாதளவிமணிவண்டுவிளையாடுந்தாமரைமென்றவிசின்மேலோற், கோதுறுகாலங்கணிப்பினளப்பினுள்கழிந்திடினுமுரைத்தலாகா, தாதலினுலிங்கதனைமிகச்சுருக்கியுரைப்பனவர்க்கறைந்தகால, மூதறிவினேரொவருமோரிரண்டுபரார்த்தமெனமொழிவரன்றே. (௧)

உரைத்தவிருபரார்த்தமுமேமலரயனுக்காயுளளவுரைக்குங்காலம், விரைக்கமலத்தவன்மானத்தாங்கவையும்விளம்பியவாண்டொருநூறென்ப, வரைத்தபரமிருதிதனிலொருபாதிபரார்த்தமெனவகுப்பரீண்டு, நிரைத்துவருகாலங்கள்பிறழாமலுரைப்பனெனநிகழ்த்தலுற்றான். (உ)

ஈரொன்பான்முறையிமைத்தலொருகாட்டைகாட்டைமுப்பானியைந்துசேர்த, லோர்கலையக்கலைமுப்பானென்றியதோர்முகுர்த்தமுயர்முகுர்த்தமுப்பான்,சேர்தல்மானுடர்க்கொருநாளன்னாள்மூவைந்துறுதல்சிறந்தபக்க, மார்வமொடுமிரண்டுபக்கமியைந்ததொருதிங்களெனவறைவர்மாதோ. (௩)

திங்களோராறுகொண்டதயனமுத்தராயனமுஞ் சிறப்பினேடு, தங்குதக்கணயனமுமெனவிரண்டாமிவையிரண்டுந்தழுவலோர்யாண், டிங்குரைத்தவுத்தராயனம்பகலாமிருவிசும்பினுறையுந்தேவர், கங்குல்தக்கணயனமாமிவைகூடநாளொன்றாய்க்கணிப்பர்மாதோ. (௪)

இன்னநாளொருமுன்னூற்றறுபதுறல்திவ்வியவாண்டென்பரீது, பன்னிராயிரம்புணர்தல்சதுர்யுகமாதியுகத்தளவைபார்க்கி, னன்னநாலாயிரம்யாண்டடுத்தயுகமொருமூவாயிரம்யாண்டாகு, மன்னதுவாபரமிரண்டாயிரம்வருடங்கலியாண்டாயிரமாமென்றே. (ரு)

ஆதியுகந்தனிற்சந்திநானூறுண்டுயர்சந்தியஞ்சநானூ
றேதுதிரேதாயுகத்துச்சந்திமுன்னூறுயர்சந்தியஞ்சமுன்னூ

றேறில்துவாபரசந்தியிருநூறுரிருநூறுசந்தியஞ்ச
மாதர்கலியுகச்சந்திநூறுசந்தியஞ்சநூறென்பமாதோ. (௬)

ஆகவுயர்திவ்வியவாண்டீராயிரண்டாயிரஞ்சதுரியுகமதாகு
ம், பாருபடுசதுர்யுகமெழுபானொன்றிறத்தல்மன்வந்தரமாம்ப
ண்பிற், சேகின்மனுப்பதினுல்வரிறந்திடுகாலத்தளவைதிருமா
லுந்திப், போகுயர்தாமரைப்பொகுட்டுப்புத்தேளின்பகலென்
னப்புகல்வர்மாதோ. (எ)

பகலளவெத்துணைக்காலமத்துணையகங்குலுக்கும்பகர்ந்த
காலம், புகல்பிரமன்பகற்போதைக்கற்பமெனப்புகல்வரொருக
ற்பந்தன்னை, வகைதருகாலத்தளவேகற்பமெவற்றினுக்குமொரு
மனுவின்காலம், நிகழ்வதெவனவ்வளவேபதினான்குமனுவினுக்
குநிகழ்த்துங்காலம். (அ)

கற்பமுன்னூற்றறுபதுசெல் காலமறைக்கடவுளுக்கோர்வ
ருடமாகுஞ், சொற்றயாண்டொருநூறுகழித்தல்பரம்பரமற்கு
த்தொகுத்தவாயுள், மற்றிவ்வாறெருநூறுவருடமுநான்மறை
யோர்க்குசென்றகாலை, யுற்றசராசரமனைத்தும்பிரகிருதியதனி
டைப்போயொடுங்குமன்றே.

ஆதலினப்பிரளயத்தைப் பிரகிருதப்பிரளயமென்றறைவ
ரந்தண், போதுறைபுத்தேள்முதலாமெத்தேவுமிறந்துபிறந்து
ழல்வர்போற்று, மேதகுகாலத்துருவாய்க்காலவரைகடந்துவெ
றுவெளியாயென்றுஞ், சாதல்பிறப்பில்லாததனைப்பிரமமகேச்
சுரனென்றுரைப்பர்தக்கோர். (க0)

படைத்தருளுமெனவுரைத்தகடவுடனக்காயுளினேர்பரா
ர்த்தம்போக, நடப்பதெவனெனிலிரண்டாம்பரார்த்தத்தின்மு
தற்கற்பம்நவின்றகற்பத், தெடுத்தவேழாங்கற்பம்பாற்மகற்பமி
னிதினீண்டியலுங்கற்ப, மடுத்துலகைக்கூரொயிற்றிற்கீண்டெடு
த்தவுயர்வெள்ளைவராககற்பம். (கக)

ஈங்கிதனைத்தெருளுறயான் விரித்துரைப்பன்கேட்டிரொன
விலவச்செவ்வாய்க், கோங்குமுகைகவற்றுமுலையயிராணிவரி
நெடுங்கட்குவளைபூத்த, விங்குதடந்தோட்கடவுள்வளிதடவந்தி
டின்வாளாமிழற்றுபாணித், தூங்கிசையதிவ்வியாழ்முனிகேட்
பமணிவண்ணன்சொல்லலுற்றான். (கஉ)

பிரமாவினுடையகாலவளவையுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கஅஎ.

ஆறாவது

சுவேதவராககற்பமுரைத்தவத்தியாயம்.

மீபுயருங்களைக்குறம்புபடவெறிந்துமூவுலகும்விழுங்கிமேல்போய்ப், பாயசெழுந்திரைகரத்தாலுயிரனைத்துமெடுத்தருந்தும்பரவைநாப்ப, ணாயிரங்கையாயிரங்காலாயிரநீண்முடியினொடுமயன்மாலாகித், தூயமலர்க்கண்முகிழ்த்துக்கடவுளாயிரம்பருவந்துயின்றானன்றே. (௧)

துயின்றபழமறைக்கிழவனவ்விருள்போய்த்தொலைந்துபடு புலரிக்காலைப், பயின்றவுலகொருமூன்றும்படைப்பலெனவுளத்தெண்ணிப்பார்க்குமேல்லை, யியன்றபுவிபாதலத்தினிடைப் போகியொளித்ததனுக்கிரங்கிவெண்ணெ, யயின்றமலர்ச்செங்கனிவாயாழியான்றனையுளத்திலமைத்தல்செய்தான். (௨)

எண்ணிமலரயன்பழிச்சவுறிதடவந்தாச்சியரில்லிடங்கடோறும், வெண்ணைகவர்ந்தினிதருந்திவிசித்தவுரலொடுந்தவழ்ந்து மருதஞ்சாய்த்த, வண்ணலெறுழ்வலிக்குறுந்தாட்சுவேதவராகத்துருவமமைந்துகீழ்போய், மண்ணுலகுமுழுவதுமோர்கூன்பிறைக்கோட்டினிதேந்திவந்தானன்றே. (௩)

சுறவமெறிகடல்வலையமுழுவதுமோர்நுண்டுகளிற்றுலங்கு கோட்டி, னுறைவதனைத்தனிநோக்கிச்சனலோகமுதலுலகத்துறைவோர்யாருங், கறையடியபுகர்முகத்தகடக்களிற்றினிடர்தவிர்த்தகாயாமேனி, மறைமுதலேமுதலேயென்றுளங்கனியவிழிபனிப்பவாழ்த்தல்செய்தார். (௪)

கோவரணங்கட்டழித்துத்தொல்லிலங்கைக் குடுமிகொண்டுநிருதர்ச்செற்றோய், மாவலிபாற்குறளுருவின்மூவடிமண்டருகென்னவாங்கிநீர்சூழ், பூவலயமுழுவதுமோர்மலரடிசேர்நுண்டுகளிற்பொதிந்துவிட்டுங், காவல்புரிந்துண்டுநசையடங்காமலோர்கோட்டிற்கவர்ந்ததெந்தாய். (௫)

வேறு.

நாரணனாகியொன்றாய்நனந்தலையுலகுக்கெல்லாங்
காரணனாகியந்தக்காரணங்கடந்துநின்ற
பூரணனாகிப்பூமேலுறைந்திடும்புனிதனாகி
யாரணமுடிவாய்நின்றவமலனேபோற்றிபோற்றி. (௬)

என்றுயர்முனிவரோத்தவின்னருள்பூத்துத்தேன்சோர்
மன்றலந்துளவோனேந்தும்புவியைமுன்போலவைத்துப்
பன்றியினுருவநீத்தான்பங்கயனெரிவாய்ப்பெய்த [ன்
குன்றெலாம்படைத்துமீட்டும்படைப்பவைகுணித்தானென்று

சுவேதவராககற்பமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆக. திருவிருத்தம்—௧௬௪.

ஏழாவது

பலவகைத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

ஆங்கவையென்கொலென்னவளிமதுக்கலுழியாறு
தூங்குநாற்கோட்டுவெள்ளைச்சூழிமால்யானைப்பாகன்
றிங்களிபிழிந்தாலன்னதிவ்வியாழ்முனிவன்கேட்ப
வாங்குவில்விழுங்குதிண்டோண்மணிநிறவண்ணன்சொல்வான்

முன்னையபடைப்பின்வேதன்படைத்திடமுயன்றானாகித்
துன்னிமுன்புத்தியாதிதமோமயசிருட்டிதோன்றிற்
றன்னநின்வகையோரைந்தாந்தமபோகமாமோகஞ்சீர்
மன்னுதாமிச்சிரமந்ததாமிச்சிரமெனவகுப்பார். (௨)

மற்றவைதமஞ்சூழ்போதவாயிலிகும்பத்திட்ட
நற்பொருள்போலத்தோன்றாதொழிந்தனமுன்னர்நாட்டும்
வெற்பெலாஞ்சிறந்தவாற்றால்முக்கியமென்றுவேத
மற்பினிற்புகன்றதென்னவறைந்தனரறிவின்மிக்கோர். (௩)

ஈங்கிதுபடைப்பிற்கேதுவன்றெனக்குறுக்காய்நோக்க
வீங்குபல்விலங்குதோன்றவெறுத்துமேலாகநோக்க
வோங்கியவிண்ணோர்யாருமுதித்தனரோதுவன்றென்
றாங்கவன்கீழாய்நோக்கமானுடருதித்தாரன்றே. (௪)

சத்துவகுணத்தராகித்தளப்பிலானந்தமேவிச்
சித்தமாசெறிந்துமெய்யிற்றிகழொளியுடையதேவர்
மொய்த்ததாமதத்தினேனையிராசதகுணத்தின்மூழ்கி
மெய்த்தகுமொழியினோடுமேவுவார்மனுடர்தாமே. (௫)

பின்னுமோர்சிருட்டிக்காகப்பிழிநுகர்ந்தறுகால்பாடும்
பொன்னவிர்கமலத்தோட்டுப்புங்கவனெண்ணுமேல்வை
கன்னவில்திரடோட்செங்கட்கழிபுலால்கமழும்வெண்பற்
றுன்னியகுறுத்தாட்பூதம்பேயொடுந்தோன்றிற்றன்றே. (௬)

வேறு.

ஆதிசிருட்டிமகானென்னவறைவரிரண்டாஞ்சிருட்டிமிகப்
போதுந்தன்மாத்திரையாகும்பூதசிருட்டியதிற்றோன்று
மோதியிடுமூன்றாஞ்சிருட்டிவைகாரிமற்றதனுதிக்கு
மேதமறுமிந்தியசிருட்டியிவற்றின்றோற்றம்பிராகிருதம். (௭)

நான்காந்தோற்றந்தாபரமாம்நாலாவதுமுக்கியமென்ப
வான்சாதிகளேமுதலவிலங்கஞ்சாந்தோற்றமெனவறைவர்
வான்சேர்தேவர்சிருட்டியினையாறாஞ்சிருட்டியெனவகுப்ப
ரூன்சேர்மனுடர்சிருட்டியினையேழாஞ்சிருட்டியெனவுரைப்பார்

எட்டாஞ்சிருட்டிபிறையெயிற்றபூதசிருட்டியெனவறைவர், முட்டாட்செமுந்தண்பாசடைய முருகுமிரிக்கும்பசுந்தோட்டு, மட்டார்கமலப்பொகுட்டுறைவோன் மைந்தர் சிருட்டியைம்புல ஞெ, மொட்டார்கடங்கேரோன்பாலுஞ் சிருட்டியென்பரஃது ணைப்பாம். (௯)

சனகரருள்கூர்சனந்தரர்நற்சனற்குமாரர்சனுதரார்சீர்
புனையுமிருதுமுதலாயமுனிவர்தோன்றப்பூமேலோன்
றனைவிலவரைப்படைத்திரெனவுரைப்பவுள்ளத்துகடீர்ந்த
முனிவர்விச்சைபுரியேமென்றீசன்பாதமுன்னினரால். (௧0)

மைந்தரறிவின்வீக்கத்தாலீசன்பாதமனந்திருத்திச்
சிந்தைதெளிவுற்றேகுதலுந்தெய்வக்கமலப்பொகுட்டுறைவோ
னந்தின்மாயைதனின்மயங்கவலகிப்புவனமுண்டுமிமும்
பைந்தாமரைக்கட்டிருநெடுமால்பரிவின்மாயைதீர்த்தனனால். ()

மாயையகலநான்முகத்தோன்வரம்பில்காலந்தவம்புரிந்து
மேயசிருட்டிபுணர்ந்திலனால்வெகுளிதோன்றிக்கண்கலுழ
வாயமலரோன்முரிபுருவநாப்பண்ணுலகமனைத்தினையுந்
தாயினீன்றமதிக்கண்ணிச்சடையோனினிதினுதித்தனனால். ()

தோற்றுங்கட வுடுணமலரோன்சூழ்வந்திறைஞ்சுமெழுநோக்குங், கூற்றினுயிருண்டுயர்முத்திகொழிக்கும்பொன்னங்குழைக் மூற்ருள், போற்றுங்குனிக்குஞ்செம்மாக்கும்பொருவின்மறைக ள்பாடிநற, வூற்றுநறியமலர்தூவுமுள்ளத்திருத்துமுவக்குமால்.

இனையபுரியுமலரோனையெல்லாவுயிர்க்குமுயிரான, முனை வநோக்கியெல்லாநீகேட்டியருள்வனெனமொழியக், கனைவண் டிமிருந்தாமரைமேற்கடவுள்படைத்தியெனவிரப்பத், தனைநே ராகிப்பிறப்பிறப்பொன்றில்லாக்கணங்கட்னிபடைத்தான். (௧௪)

மறந்தும்பிறவாக்கணங்கள்பலபடைப்பதொழிந்துமமுவல் லோ, விறந்தும்பிறந்துஞ்சகட்டுருளிற் றிரியுங்கணங்களியற்று கென, வறைந்தவவையாம்படைக்கலம்நீபடைக்கவருள்பூத்தன மென்ன, வுறங்காவென்றிமுத்தலைவேலொருவன்கரந்துபோயி னனால். (௧௫)

போயபின்னர்மலர்ப்பொகுட்டுப்புத்தேள்புனல்தீயகல்வான
மேயவுலகம்பெறவுந்திவிரிநீருவரிகலைகாட்டை
யாயுமுகுர்த்தம்பகல்கங்குல்பக்கந்திங்களயனமுத
லேயவெவைக்கும்பிரமாணதெய்வமினிதினியற்றினன். (௧௬)

ஒமுகுகொடிமூக்கினிற்றக்கன்கண்ணில்மரீசியுயர்சென்னி
வழுவில்சிறப்பினங்கிராவுளத்திற்பிருகுமத்தேயும்

விரியிற்புகழுத்திரிசிறந்தவிவசாயத்தியுயர்தருமன்
பரிதிர்ந்துயர்ந்தசங்கற்பந்தன்னிற்பரவுசங்கற்பன். (கஎ)

மருவுமுதானன்றனிற்சிறந்தமறைதேர்தெய்வப்புலத்தியனல்
லுருவமுகத்திலருட்புலகனபானந்தன்னிலுயர்கிருதுப்
பெருகுசமானன்றனில்வசிட்டன்பிறந்துமுனிவருருவாகித்
தருமவொழுக்கமவற்றினையுந்தவருதுலகினிறுவினர். (கஅ)

தேவரசுரர்தென்புலத்தோர்மனுடரிவரைச்சிருட்டிப்பான்
பூவிலயனேருருவெடுப்பப்பொருந்தவுருவந்தமோகுணமாய்
மேவுமதனூற்சகளத்திலசுரர்தோன்றவிடுத்தவுட
லோவில்கங்குலாயதனிலுயிர்களனைத்துமுரங்குமால். (ககூ)

மலரோன்பின்னுஞ்சாத்துவிதவுருவந்தாங்கவான்முகத்தி
லுலவத்தேவருதித்தனரவ்வுடலம்விடுப்பவதுபகலா
யலகிற்றருமமெவற்றினுக்குமிடனாயதுசத்துவகுணத்தா
விலகுமுருவாயுலகனைத்தும்மீன்றேன்யானென்றெண்ணினன்.()

என்னுமேல்வையுயர்பிதுர்க்கடோன்றவெடுத்தவுடல்விடுத்தா
னன்னுமுடலமுயற்சந்தியென்பநவின்றவிராசதத்தி
னன்னவுருவமெடுப்பமக்களுதித்தாராண்டவ்வுடல்விடுப்பத்
தண்ணங்கதிர்வெண்ணிலவாயததுவேபுலரிச்சந்தியுமே. (உக)

பின்னர்த்தமமுமிராசதமும்பிரியாவுருவமெடுத்திட்டு
மன்னுமரக்கர்கந்திருவரியக்கரரவம்வளர்பூதந்
துன்னியுதித்தவுயர்பறவைமறிமார்பகத்திற்றேன்றினவாற் [ல்
கொன்னேகமலவான்முகத்திற்கொதிக்குஞ்சரபந்தோன்றியதா

இருதாளிடத்துங்களிறுபுலியெண்குமறையொட்டகமிவுளி,
இருகுபொரிகோட்டிரலேபன்றிசெறியுமுழவுமானினொடு, மரு
வுவிலங்கின்கனமுதித்தமயிர்க்கால்தோறுங்கனிப்பொறைய, வு
ருவைப்பைந்தார்க்கொடியனைத்தும்விற்றுவீற்றுயுதித்தனவே.

அருமாமறைகளொருநான்குமகங்களைந்தும்பாவனைத்துந்
திருமாலுந்தித்தடம்பூத்ததேவன்முகநான்கினுமுதித்த [ன்
வுரைசெய்பூதமனைத்துமிவ்வாறுதித்து முன்னைப்படைப்பதனி
மருவுந்தமதுதொழிலதனிற்பிறழாதினிதின்வைகினவே. (உச)

பூதப்பகுதியிருடிகள்பேர்பொருந்து முட்செரனைத்தினுக்கு
மோதுநாமமிதுநவின்றகுணங்களுணரவிவையனைத்தும் [டுத்
வேதாகமங்களிடைவகுத்தான்விரை கொப்புளிக்குநறுந்தோட்
காதார்கமலப்பொகுட்டுறைபுமொருநான்முகத்துத்தனிமுதலே.

பலவகைத்தோற்றமுறைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—உகக.

எட்டாவது

தமோகுணசிருட்டியுரைத்தவத்தியாயம்.

என்றுகூறுந்திருநெடுமாலிருதாள்வணங்கியாழ்முனிவன்
குன்றின்சிறகரறவெறிந்தகூர்வாய்வயிரப்படைக்கடவு
டுன்றுஞ்சிருட்டிவிரிவனைத்துமீட்டுமுரைத்தியெனத்தொழலு
மன்றல்கமழும்பசுந்துளவமாயன்மகிழ்ந்துகூறுவான். (க)

வேறு.

வள்ளவாய்க்கமலத்தவிசின்மீதுறைந்துமறைவிளையாடுநா வலவன், றெள்ளிதிற்றெரிந்துபடைத்தபல்லுயிருமல்கிடாதொ ழிந்திடுஞ்செயலா, லுள்ளமாழாந்துதமோகுணம் புதைப்பவு ளையவிந்திருத்தலுமென்னுல், மெள்ளராசதஞ்சத்துவகுணமே வத்தமோகுணமகன்றதுவிளைவின். (உ)

விளைவினினகன்றதமோகுணம்வேற்கட் டெரிவையும்புரு ட்னுமாக, வுருவமெய்தியவப்புருடன்வெம்பாவமொண்ணுதல் படுகொலைவடிவ, மிருமறைக்கிழவன்றன்னுடலிருகூறுகலுமவ ற்றினோர்கூறு,வருசுவாயம்புமனுவொருகூறுமகிழ்சதரூபையா னதுவே. (ங)

குங்குமந்துதைந்துபிறைவடங்கிடந்த குவிமுலைக்கொடிசு தரூபை, யங்கண்மாஞாலமுழுவதுமளிக்குஞ்சுவாயம்புமனுவி னையணைந்து, பங்கமில்பிரியவிரதனையுலகம்பரவுமுத்தானபாத னைச்சொன், மங்கைநற்பிரசூதிசிறந்தவாகூதியிவர்தமைவயிறு வாய்த்தனளால். (ச)

தழலுயிர்த்தொளிறுபருதிவேன்மனுப்பிரசூதியைத்தக்கனு க்களித்தா, ணழகுகண்படுக்குமருப்பிளமுலையாகூதியைருசியி னுக்களித்தான், மொழியுமாகூதிருசியினுக்கெச்சன்தக்கணைமு றையினிலீன்று,ளொழிவிறக்கனையவ்வயிற்றிடைவேள்விக்கியா மர்பன்னிருவராண்டுதித்தார். (ரு)

ஆங்கவர்சிறந்தசுவாயம்புமனுவின்காலத்திலமரராயுறைந் தார், வீங்குபல்கேள்வித்தக்கனன்மனையாம்பிரசூதிவேல்கிடந் தொளிர்தடங்கட், கோங்கரும்பிடையச்சுணங்குபூத்தலர்ந்தகு விமுகிழிளமுலைப்பணைத்தோட், பூங்குழற்செவ்வாயோரறுநா ன்குபுதல்வியர்ப்பயந்தனளன்றே. (சா)

அனையரிற்சிரத்தையிலக்குமிதிருதி துட்டிநற்புட்டியம்மே தை, நினைவருங்கிரிகைபுத்திநாண்வபுசுசாந்திவாழ்சித்திநற்கீர் த்தி, யெனவொருபதின்மூன்றரிமதர்மழைக்கணிளமுலைமகளி ளையிலங்கு, கனைகழற்றருமற்களித்தனனவருங்கவின்பெறுபுத ல்வரையுயிர்த்தார். (எ)

மற்றையகியாதிபிருகுவையணைந்தாள் சதியினையுருத்திரன் மணந்தா, ளற்றசம்பூதிமரீசியையடைந்தாள் மிருதியங்கிராவு டனுறைந்தாள், குற்றமில்பிரீதிபுலத்தியர்ப்புணர்ந்தாள் புலக னற்கமைமணங்கூர்ந்தான், சொற்றசந்ததியைக்கிருதுவேட்ட னனத்திரியன்னசூயையைத்தோய்ந்தான். (௮)

கன்னியங்கற்பினருந்ததிதன்னைக்கடிமணம்புரிந்தனன்வசி ட்டன், வன்னியைசுவாகையணைந்தனள்பிதிர்க்கள்வசுந்தையை யினிதினின்மணந்தார், முன்னர்யாமுரைத்ததருமதேவதத்தின் மனைவியராமொருபதின்மூன், றன்னலார்தம்மின்முகிழ்முலைச் சிரத்தையடக்கருங்காமத்தையுயிர்த்தாள். (௯)

அருளிலக்குமிவெஞ்செருக்கினையீன்றாள் திருதிநன்னியம த்தையளித்தாள், பொருவறுதுட்டிமகிழ்ச்சியையீந்தாள்புட்டி பூதியகத்தினைப்பெற்றாள், தருபுகழ்மேதைசுபத்தினையளித்தா ள்கிரிகைநற்சமமுநற்றமமு, மரிதினிற்பயந்தாள்புத்திநற்போத மப்பிரமாதமுமளித்தாள். (௧௦)

நாணலம்வினயம்பயந்தனள்வபுசுநல்விவசாயத்தையுயிர்த் தாள், மாணெழிற்சாந்திகமனமீன்றனணீள்சித்திவானகத்தினை யளித்தாள், காண்வருஞ்சீர்த்தியோசையைப்பயந்தாள்முன்ன வள்பயந்திடுகாமம், பேணருமகிழ்ச்சிகடவுளானந்தமிரண்டை யும்பெற்றதையன்றே. (௧௧)

கருதரும்பாவங்கொலையினைமணந்துவஞ்சமாங்கன்னியைப் பொய்யா, மருமகவினையாங்களித்ததுபொய்மை வஞ்சனைதன் னொடுமணைந்து,வெருவருநிரையமென்னுமைந்தனையும்வேதனை மாயையென்றேது,மிருமகளிரையுமளித்ததுமாயைபுயந்தழீஇ மிருத்துவின்றதுவே. (௧௨)

சொல்லியநிரையம்வேதனைதோய்ந்திட்டசுபமுந்துன்பமு ம்பயந்த, தல்லல்செய்மிருத்துநோய்நரைதுன்பம்வெகுளிபட் டிமையிவையளித்த, தொல்லையிற்சுருக்கித்தமோகுணசிருட்டி யுரைத்தனமெனவருள்சுரந்து, மல்லிடுதிணிதோள்வாலிமார்பு ருவவடிக்கனைபணித்தவனுரைத்தான். (௧௩)

தமோகுணசிருட்டியுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௨௩௨.

ஒன்பதாவது

பிரமவிஷ்ணுக்களுக்குச் சிவன்றோன்றி வரங்கொடுத்த வத்தியாயம்.

காலமுங்காலத்தளவையுங்கடந்துகருத்தளந்தறிவரும்பொருளாய், மூலமாமீசன்மலரயனுதலி னுதித்திடும்புதுமையென்முகுந்தன், கோலமாருந்திமலரயற்பயந்தகொள்கையென்சொல்கெனப்பசும்பொற், சோலைவாயுறையுங்கடவுள்யாழ்முனிவன்கேட்டலுமாயவன்சொல்வான். (க)

உலகமோர்மூன்றுமிடிந்துபாழாகு மூழியினிறுதியினேங்கு, மலைபுரண்டன்னவெறிதிரைபுரண்டுமறிதரும்வாரியினுப்ப, ணலர்கதிர்ப்பருதி யாயிரமெழுந்தோங் கவிர்மணிச்சூட்டரா வணையிற், கொலைபழுத்தொழுகுநேமியந்தடக்கைக்கொண்டல்கண்டுயின்றதையன்றே. (உ)

பாசடைத்துளவந்துயல்வருதடந்தோட் பண்ணவனுந்தியந்தடத்தி, னேசனையொருநூறகன்றுநீண்டோங்கியொள்ளிதழாயிரம்விரித்துத், தேசுறுகதிரோராயிரமெறிக்குஞ்சேட்டிளம்பருதியிற்பொலிந்து, மூசுவண்டரற்றமுருகுகொப்புளிக்குமுள்ளாமுளரிபூத்ததுவே. (ங)

தாமரையுந்தித்தடத்தினிற்பூப்பத்தாமரைக்கண்டுயில்வோனை, நாமகள்கொழுநனண்ணிமண்ணளந்தநளினமென்கரத்தினுற்றடவித், தோமறுயோகத்தருந்துயிலெழுப்பித்துளவினேன் மாயையின்மருளா, வேமமுற்றலைவாய்த்துயின்றநீயாரையென நகைத்திறையவன்புகல்வான். (ச)

உலகனைத்தினையுமள்ளியுண்டகத்தினொருபுடைகிடத்துநாரணன்யான், கலைவலாயாரைநீயெனவறியான்போலெதிர்வினவலுங்கடவுண், மலரயனுலகமனைத்தையுமீன்றதாதையானெனமறைவடித்தோ, யலகினின்சீர்த்தியறிவனென்னகட்டுட்புகுந்துலகனைத்துநோக்குதியால். (ரு)

என்னலும்வயிற்றிற்புகுந்தெழுகடலுமெழுபெருந்தீவுமேழுலகு, மன்னியபுவனமனைத்தையுநோக்கிமனத்திறும்பூதுறுங்காலைத், துன்னியவாயிலொன்பதுமாயோன்சுருக்கலும்வரும்வழியுணரான், பொன்னிதட்கமலநாளமென்றுளையிற்போந்துயர்பொகுட்டில்வந்தனனால். (சு)

போதருநெறிகள்யாவையுஞ்சுருக்கி யென்னைநின்னகட்டினிற்பொதியா,வேதமில்வென்றிகொண்டிடநினைந்தனியாதுகொலுலகனைத்தினுக்குந், தாதையானென்னைநிகருறுங்கடவுளெவர்கொல்நீசாற்றுதியெனலு, மாதவன்முறுவல் கோட்டியோர்வினையாட்டயர்ந்தனன்மனக்கொளேலென்று. (எ)

உலகனைத்தினையுமெளிதினிறுயிர்த்தாயுன்னையார்க்கர்வரு
ங்கடவுள், மலர்செழுங்கமலத்துதித்தலாற்கமலனெனும்பெய
ர்மருவியென்மகவாய், நிலைபெறவேண்டுமெனமலரயனுமகிழ்வு
டமுங்கவைநேரா, வலகில்சீர்க்கடவுணுமிருவருமேயன்றிவேறி
லையெனவுரைத்தான். (௮)

பித்தர்போல்மனத்திற்பிறந்தவைவாளா பிதற்றுவதெவன்
சொல்நான்முகத்தோய், மத்தமுமறுகும்வளர்பிறைக்கொழுந்து
ம்பவளவார்சடைமிசைவனைந்த, முத்தவெண்முறுவற்கனிபடு
துவர்வாய்முகிழ்முலையொருமருங்கமைத்துத், தத்துவங்கடந்
தமுக்கணெம்பெருமான்றனையுணராதுநீயென்முன். (௯)

எனவுளங்கனன்றுநான்முகக்கடவுளிளங்களிவண்டுபாட்ட
யரும், வனதுழாயலங்கற்கடவுளாம்மீயுமலர்ப்பொகுட்டுறைத
ரும்யானும், நினைவருந்தேவரெவரினுமேலாய் நிற்பவர்நம்மில்
யாருயர்ந்தோர், கனைகடல்வயிறுகிழியமத்தெறிந்துகடைந்தமு
தெடுத்தகார்முகிலே. (௧௦)

எல்லுறுமுருந்தனிளநகைகோட்டி நள்ளிருளொளியுறவி
ருண்டு, துன்னியமாயைப்படாம்புதைத்திடவுந்துரியமாய்த்துரி
யமுங்கடந்து, நின்றபேரொளியாந்திங்களங்கண்ணிநிமலனையறி
ந்திலபோது, மன்றயானறிவனென்றுதற்பரனைமனத்திடையி
ருத்துமேல்வையினில். (௧௧)

சேட்டிளம்பருதிமுதலியகோளுமுடுக்களுந்தொடுத்ததீர்ந்
தொடையல், தோட்டுணைமீதுதுயில்வரத்திங்கட்கண்ணிசூழ்
செஞ்சடைமௌலி, யோட்டறநிவர்ந்தவண்டபித்திகையினுரி
ஞ்சவேழ்பாதலமுருவுந், தாட்டுணைபெயர்த்துமறைகளுமறியா
த்தனிப்பொருடோன்றியதன்றே. (௧௨)

பொற்றருவிழுதுவிட்டெனக்கிடந்தபுரிசடைவெண்ணிலா
வெறிப்ப, நெற்றியங்கண்ணிற்றழற்சுடரெறிப்பநீற்றொளிமெய்
முழுதெறிப்ப, வொற்றைவெண்சங்கக்குழையழகெறிப்பவுரு
கெழுசூலவேல்திரித்து, முற்றுநீர்க்கடலிற்றமியனுப்போதுமு
தல்வன்யாரெனவயனுரைத்தான். (௧௩)

உரைத்தலுமுயர்வான்மழகதிரொன்னவொருமணிகிடந்தநீ
ண்மார்ப, னிரைத்தபைத்தலையபாம்பணைதுறந்துநீற்றொளியிள
நிலாவெறிக்கும், வரைத்தடந்திணிதோண்மழுவலான்செய்யம
லரடிதொழுதெழுந்தேத்தி, விரைச்செழுங்கமலப்பொகுட்டர
சிருக்கும்வேதியற்கிங்கிவ்வபுகல்வான். (௧௪)

உலகமற்றெவையும்படைத்தவையளித்து மொடுக்கியுங்க
டையுகந்தோறு, மலகிலாவிளையாட்டயர்பவன்யாவன்யாவனி

ற்பயந்தனனியாவ, னிலைபெறவமைத்தசத்தியானவனேநீறுபூத்தொளிர்தழற்பிழம்பின், மலைவறத்தோன்றுஞ்சங்கரனிவன்றாள்வணங்கெ[illegible]ப்பேருணர்வளித்தான். (௧௫)

மருங்கிறவாகமுமுவதுங்கவர்ந்த வருமுலைக்கலைமகள்மணாளன், ஞெருங்கறிவெய்திநனைவிடப்பாகனொண்மலர்ச்சேவடிநோக்கி, விரும்பியுண்ணெகிழவிழிபுனல்வாரமெய்ம்மயிர்சிலிர்ப்பநாக்குழறத், திருந்துநான்மறைகள்பாடிநின்றுடித்தேமலர்த்தா[illegible]வணங்கினனால். (௧௬)

வணங்கியகடவுட்கமலநான்முகத்தோன்வான்முகநோக்கிவாளெயிற்ற, வணங்கரவசைத்தோனெமதுகுற்றேவலடியரிற்சிறந்தனையுளத்தி, லிணங்குநல்வரநீகேட்டியென்றுரைப்பவிருகையிற்பவளவாய்புதைத்துப்,பணிந்தெனதுள்ளப்பருவரலொழியப்பாலனாய்வருதியென்றிரந்தான். (௧௭)

ஆங்கதுநேர்ந்தெவ்வுலகமும்படைக்குந்தொழிலுமற்றவற்கினிதருளித், தேங்கமழ்கன்னிப்பசுந்துழாயலங்கற்றிருமறுமார்பனைநோக்கி, வீங்குநின்னுளத்தினன்பினுக்குகந்தேம் வேட்டனகேளெனநினது, பூங்கழலிணையிலன்புநாணாளும்பொலிந்திடவேண்டுமென்றிரந்தான். (௧௮)

அளப்பருஞ்சகமாங்காரியநீயான்காரணமவிர்மதிநீயான், றுளக்கறுபருதிகங்குல்நீபகல்யான்சொல்பிரகிருதிநீயானேன், விளக்குறுபுருடனறிவுநீயானேயறிபவன்மாயைநீவிளங்க, வுளக்கணிற்றோன்றுமீசன்யானென்னவுணர்ந்தவர்யாவையுமுணர்ந்தார். ()

என்னநன்கியம்பியரவநாண்கொழுவி யிருவிசும்பளந்துயர்குடுமிப், பொன்வரைகுழைத்துப்புரமொருமூன்றும்புகையெழக்குறுநகைகோட்டு, மின்னவிர்சூலமுரட்படையேந்தும்வேதியன்விழியிணைமுகிழ்த்துத், தன்னிலையுணருந்தக்கவருள்ளத்தாமரைத்தடந்தொறுஞ்சார்ந்தான். (௨0)

பிரமவிஷ்ணுக்களுக்குச்சிவன்றோன்றிவரங்கொடுத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௨௫௨.

பத்தாவது

அட்டமூர்த்தியியல்புரைத்தவத்தியாயம்.

மரகதவல்லிபடர்மதிக்குடுமிமாணிக்கமலையகன்மிடலுந், திருமறுமார்பவ்வயனிழைத்தனகள் செப்புதியெனவழுதுகுக்கும், புரிநரம்புளருமகதியாழ்முனியும் பொன்னகர்க்கிறைவனுங்கேட்பக், கரைபொருகடல்வாய்புழுங்கமந்தெறிந்தகார்நிறவண்ணலிதுரைப்பான். (௧)

வேறு.

இரவியின்றியும்பகற்செயுமெரிமணிகிடந்த
மரகதச்செழுங்குன்றநான்மணிகெழுசெஞ்சூட்
டரவணைப்புறத்தறிதுயில்புரிதலுமுந்தித்
திருமலர்ப்பொகுட்டுறைந்தனன்றிசைமுகக்கடவுள். (௨)

ஆயகாலையிற்றாமரைக்காடலர்ந்தென்னப்
பாயதெண்டிரைக்கண்வளர்பண்ணவன்செவியிற்
றீயுந்தண்ணெனக்கொதித்திமைத்தீய்த்தொளிசெங்கட்
காயுஞ்சூலவேல்மதுவொடுகயிடவனுதித்தான். (௩)

மண்டுசெங்கனல்வடவையையவிப்பினுமவிப்ப
ரண்டம்யாவையுமொருதடக்கையினிலள்ளி
யுண்டுதேக்கெறிந்துலவினுமுலவுவரிவர்யார்
கொண்டல்வண்ணவென்றனன்மறைமழலைவாய்க்குழவி. (௪)

தண்ணந்தாமரையயன்வெறீஇச்சாற்றுதல்கேளா
வெண்ணையுண்டமால்விட்டுணுச்சிட்டுணுவென்ன
நண்ணுபேருடையிருவரைவகுத்துநான்முகத்தோன்
கண்ணனங்குறவருபவர்க்கடிதிரென்றுரைத்தான். (௫)

உரைத்தவாசகம்பிற்படமுற்படவோடி
வரைத்தடம்புயத்தவுணரைவலியினிற்பற்றிக்
கரைக்குறும்பெறிவெண்டிரைக்கணைகடன்முகட்டிற்
சிரக்குவட்டினையிருகையாற்றிருகினரெறிந்தார். (௬)

மறங்கொள்திண்டிறல்மதுவொடுகயிடவன்றன்னைக்
கறங்கெனத்திரித்தாருயிர்கவர்ந்ததற்பின்னர்ச்
சிறந்தமைந்தனிற்றாங்குவதரிதுதேன்மலர்விட்
டிறங்குகென்னலுமிழிந்தனனினிதுகண்வளர்ந்தான். (௭)

கள்ளயர்வுயிர்க்குஞ்செழுங்கமலமென்பொகுட்டு
வள்ளல்கங்குல்போம்புலரியிற்கணமதாநீங்கிப்
பள்ளநீர்கவர்ந்துண்டதொல்லுலகெலாம்படைப்பா
னுள்ளமுன்புபோற்சனகனைமுதலினோருதித்தார். (௮)

தோற்றுமைந்தரோர்நால்வரும்படைக்கெனத்தூய
நூற்றிதழ்க்கமலத்திறைநுவலலுமதனைப்
போற்றிலேமெனமுன்னையகற்பத்திற்புகன்ற
வாற்றருந்தவமாற்றினரரனடிபணிந்தார். (௯)

தந்தையாய்முகில்வண்ணனையென்னைமுன்றந்தோன்
மைந்தனாவலென்றுரைத்தனன்வந்திலனென்னாச்
சிந்தைமுக்கணான்சேவடிசேர்தலுமகிழ்வுற்
றெந்தைநான்முகனுதலிடையினிதுதோன்றினனால். (௧௰)

தோன்றியோர்விளையாட்டயர்ந்தெழுதலுந்தூயோற்
கேன்றவாகுமற்றுருத்திரன்முதற்பெயரொட்டு
மான்றகானமோரொட்டுமோரொட்டரிவையருஞ்
சான்றமைந்தரோரொண்மருஞ்சார்ந்தனரன்றே. (௧௧)

எய்துநாமமென்னெனிற்பவன்சருவனீசானன்
வைதிகந்தருபசுபதிவீமன்மாதேவ
னெய்திளம்பிறையணிந்திடுமுருத்திரனென்ப
மைதிகழ்ந்தொளிர்கண்டனெண்வடிவமும்வகுப்பாம். (௧௨)

பருதிவெண்கதிர்க்கட்வுணீர்புவியழல்பனிவா
னுருவநல்வளியருமகம்புரிந்தழலூட்டும்
பொருவினுன்மறையந்தணனென்பரப்புனிதர்
மருவிவாழ்வுறுமங்கையரொண்மர்பேர்வகுப்பாம். (௧௩)

மிருசுவாச்சலையுரோணிபாசுவையருள்விகேசி
திகழ்சுவாகையெண்டிசைசிவைதீக்கையாமைந்தர்
மகிழுமந்தனற்புதன்கவிவயங்குறுசெவ்வாய்
குகன்சருக்கநீள்மனோசிவன்கூறுசந்தானன். (௧௪)

முன்னரெய்தியசங்கரன்றனைமுகநோக்கி
மன்னுயிர்த்தொகைபடைக்கெனமலரயனுரைப்பத்
தன்னையொப்புறமுன்புபோற்சங்கரன்சமைப்ப
வின்னவாறமைத்திடலொழிகெனவயனிசைத்தான். (௧௫)

இனையவாறலாற்பிறந்திறந்தொழிபவர்சிருட்டி
நினைகலேமவைநீபடைத்திடுகெனநிகழ்த்தி
முனைவனுன்முகன்முதுக்குறைவெய்துணர்வளிப்பப்
பனிமலர்ப்பொகுட்டண்ணன்முக்கண்ணனைப்பழிச்சும். (௧௬)

கொண்டன்மேனியான்முதலியகடவுளோர்குப்புற்
றண்டம்பாவையுமிடிந்துபாழாகியவமையத்
திண்டிறற்கவைச்சூலவேல்திரித்துலகீன்றாள்
கண்டுவப்பநின்றாடியகடவுளேபோற்றி. (௧௭)

மாலைவெள்ளருவிப்புனற்குறுந்துளிவாரிச்
சோலைநெற்றியிற்றொடுத்தபூந்துகள்துதைந்தடுபோர்க்
கோலுந்தென்றலுந்தேர்கடாய்க்கொடியபூங்கழலிற்
கால்குனித்தவற்செற்றவெங்கண்ணுதல்போற்றி. (௧௮)

பறந்துவிண்ணிடைவிண்ணவர்பருவரலுழப்பக்
கறங்குபோற்றிரிமுப்புரமொருங்குதீய்க்கனல
நிறங்கொள்பொன்னவிர்குடுமியநெடுவரைகுழைத்து
நறுந்துழாய்முகிற்கணைதொடுநம்பனேபோற்றி. (௧௯)

சோற்றபாலனதாருயிர்சோவுருவண்ணங்
கூற்றினுருயிர்குடித்தபைங்கழலினாய்போற்றி
யாற்றல்வானவர்வெருவரவலைகடலகட்டிற்
றோற்றநஞ்சமுண்டருளியதோன்றலேபோற்றி. (உ0)

அருவமாயுருவாகியவமலனேபோற்றி
துரியமாயநுகடந்தொளிர்சோதியேபோற்றி
கருதுவாருளத்துறைதருங்கடவுளேபோற்றி
குருதிகக்குவெஞ்சூலவேற்குழகனேபோற்றி (உக)

என்றுதாள்பணிந்தெழுந்துநாத்தழும்பநின்றேத்தி
மன்றல்தாழ்மலர்தூய்வலம்வந்தனனிற்பக்
கொன்றைதேன்றுளிபிலிற்றநின்முடியகுழகன்
றன்றுணைக்கையாலயனுடல்தைவந்துசாற்றும். (உஉ)

அருளின்மைந்தனாய்வருகெனவறைந்தனையதனாற்
புருவநாப்பணிற்றோன்றினனென்னுடைப்புதல்வ
வுருவமாயுலகீன்றவையளித்துமீட்டொடுக்கல்
மருவுமென்விளையாட்டெனவுணர்தியால்மலரோய். (உங)

மைந்தவுன்னையென்வலப்புறத்தீன்றனனறிய
பைந்துழாய்மணிவண்ணனையெனதிடப்பாலிற்
றந்தளித்தனனிவிர்வெங்கரிமுகன்றழல்வேற்
கந்தனேயொனக்கருணையினுச்சிமோந்துரைப்பான். (உச)

கனைகருங்கடல்நஞ்சமுண்டுமெதுயிர்க்காத்த
முனைவனென்னுளத்துதித்தனன்மூவிருமெனக்குத்
தனையரிவ்வுருச்சதாசிவனேனையவுருவம்
புனைவுன்வேண்டுருக்குணங்குறிபுலனெமக்கிலையால். (உரு)

கள்ளயின்றுவண்டறைதருந்தாமரைக்கண்ணன்
முள்ளரைச்செழுந்தாமரைமுகட்டில்வீற்றிருப்போ
யுள்ளுவந்தெனைநினைப்புழியுறுவலென்றுரையா
வள்ளல்நான்மறையுபநிடதத்திடைமறைந்தான். (உசு)

திங்களின்னமுதுறைப்பமென்கொன்றைதேன்றுளிக்குங்
கங்கையஞ்சடைக்கண்ணுதல்காத்தலுங்கடவுட்
பங்கயத்தவிசுறைதருபண்ணவன்மரீசி
யங்கிராமுதல்முனிவரையளித்தனனென்றான். (உஎ)

அட்டமூர்த்தியியல்புரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—உஎகூ.

பதினொன்றாவது

பார்வதிதோற்றமுரைத்தவத்தியாயம்.

போதுறைகடவுண்மீட்டுலகம்பூத்தவை
யோதுகென்றின்னரம்புளரும்யாழ்முனி
நீதறுமகபதிகேட்பத்தேம்படு
தாதவிழ்பசுந்துழாய்முகுந்தன்சாற்றுவான். (க)

அள்ளிலைக்கமலவீட்டுறையுமந்தணன்
றெள்ளிதினமைப்பவைசிந்தைசெய்கலா
துள்ளமாழாந்துநெட்டுயிர்ப்புவீங்கிமே
லெள்ளருமருந்தவமியற்றுமேல்வையின். (உ)

பாடருமிடப்புறம்பணித்திட்டாயினி
நாடரும்வலப்புறந்தானுநல்கென
வேடவிழ்கூந்தலாய்நல்கினேமென
வாடியிற்காட்டியவையன்றேன்றினன். (ங)

பெண்ணொருபங்கினில்மைத்துப்பேரெழி
லண்ணலாங்கெய்தலுங்கமலத்தந்தணன்
கண்ணொடுதொடுத்தெனநோக்கிக்காதலிற்
புண்ணியச்சேவடிபோற்றிக்கூறுவான். (ச)

ஐயவிவ்வுலகினுக்காக்கமெய்துறத்
தையலோர்பங்கினிற்சார்ந்துநின்றனை
மையறுமிவ்வுருவகுத்துப்பாலிரண்
டெய்தநீசெய்தியென்றினிதினேத்தினன். (ரு)

பெண்ணொருபங்கினைப்பிரித்துப்பேரொழி
லொண்ணுதற்பேதைதன்னுருவமாக்கிமேல்
நண்ணரும்வலப்புறமதனைநாடரு
மண்ணலானுருவமாயமைத்திட்டானரோ. (சா)

மதியுறவகுத்துவானுருவமானுறப்
பதினொருகூற்றினிற்பகுப்பவாங்கவர்
கதிர்மதிமுடித்தகாபாலியாதியாம்
விதிமுறையுருத்திரராகிமேவினர். (எ)

பெண்ணொருபாதியாய்ப்பிரித்தகூற்றினை
யெண்ணறுஞ்சத்தியாலியற்றினன்வர
கண்வழுக்குறுமெழிற்கமலையாதியா
மொண்ணுதன்மகளிரொன்றுணைக்கலாயினர். (அ)

இன்னணமமைத்திடினன்றியாக்கையின்
மன்னுயிர்யாவையுமல்கிடாதெனக்

கன்னெடுஞ்சிலையிருகால்குனித்திடு
முன்னவனயனொடுமொழியுமேல்வையின். (௯)

மின்னுவீழ்வீழ்த்தெனக்கிடந்தமென்சடை
முன்னவன்பணிதலைகொண்டுமுற்றிழை
தன்னொருகூற்றினைவாங்கித்தாழ்சிறை
யன்னமூர்கடவுள்பாலடைதன்மேயினாள். (௧0)

என்னுடனுலகெலாமீன்றதாயிவண்
மன்னியதேவனென்மலர்கடுய்த்தொழு
தன்னைநிதக்கனன்புதல்வியாகென
சொன்னவாறவன்மகளாகித்தோன்றினாள். (௧௧)

தக்கனற்புதல்வியைக்கொன்றைதாழ்சடை
முக்கணார்க்களித்தனன்முரசமார்ப்பெழ
மிக்கதன்றந்தைதீவினையினன்னைபோய்ப்
புக்கனள்மேனைதன்புதல்வியாகவே. (௧௨)

தோலடியெயினமீதிவர்ந்ததோன்றலுங்
காலுமிழ்கொடுஞ்சிறைக்கருடப்பாகனு
மாலமுண்டவனுமேயன்றியார்கொலோ
பாலலோசனிதிறனறியும்பண்பினார். (௧௩)

பார்வதிதோற்றமுணர்த்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௨௯௨.

பனிரண்டாவது

திருக்கலியாண வத்தியாயம்.

என்றலுமிவ்வுலகின்முட்டக்கன்மகளாயுதித்தவியல்புஞ்செம்பொற், குன்றரையன்மகளாகிப்பிறந்ததுவும்விரித்தெமக்குக் கூறுகென்ன, மன்றல்கமழ்தருவினிழலுறைவோனுமகபதியாழ் முனியுங்கேட்பக், கன்றுகுணிலாய்விளவின்கனியுகுத்தமாமாயன்கழறலுற்றான். (௧)

மேருவரையுயர்குடுமிமுகட்டிருந்துவேதமுனிவிளம்பலுற்ற, தோர்வரியபவக்கடலின்வீழுமுயிர்கரையேற்றுந்தெப்பமோவில், சீர்கெழுதற்பரம்புணருஞ்சிற்சத்தியெவ்வுலகும்பொதிந்துநின்ற, பூரணநிடுலகுயிர்ப்பமலையரையன்மகளாகப்போந்ததன்றே. (௨)

பொருவரியசிவையாகிய வெந்தையாயேகையாய்ப்புராணைபாதி;விரிசதிருமொழியுமெனமடுகேசனை விட்டகலாதவிமலதோ

ன்று, முருவுறுமிவ்வுலகனைத்தும்படைத்தளித்துமீட்டுமிவை யொடுக்கியீசன், றிருமுன்விளையாட்டயருங்காந்தமணிமுனமி ரும்புதிரியுமாபோல். (௩)

கருவிகாரியமென்பகாலமொருமூன்றினையுங்கடந்துநின்ற, வொருமுதல்வன்றனையணுகா வுலகமனைத்தினுக்குமுபா தாந மாகி, மருவுபராசத்திதனதுருவாகியொருநான்குவடிவாஞ்சத் தி,தெரிவுறுபேர்சாந்திவித்தைநிவிர்த்திபிரதிட்டையெனச் செ ப்புவாரால். (௪)

இனையவொருநான்குகலைபுணர்தலாற்சதுர்வியூகனென்னு நாம, நினைவரியமகேச்சுரற்குநிகழ்த்துவரிக்கலைநான்கிலுருவ நான்காய்த், துனைவிலடைந்தருள்புரியுஞ்சோதியாம்பரன்பரை யைத்தோய்ந்துநாளுந், தனைநிகரிலானந்தந்தனில்மூழ்குமென மறைகள்சாற்றுமன்றே. (௫)

மற்றவட்குவிபூதி புகலடிப்பாட்டின் றெட்டர்பாகுமகேச னொடும், பற்றுறலாலிங்கிவளுமவன்போலவளவிறந்தபான்மை யாணீர், முற்றுலகமுறுசெயலினுஞற்றுவதுமைங்கரனைமுருக வேளைச்,சிற்றுதரந்தனிலீன்றுங்கன்னிமைநீங்காதொழியுஞ்செ ல்வியென்பார். (௬)

காலமுயர்மகேசனரிபிராணனுருத்திரனரன்வெங்கனலியெ ன்ப, வாலமயின்றேனென்னவருமறையின்பொருடெரிந்தவறி ஞர்சொல்வார், மாலுறுகாலச்செயலின்மன்னுமுலகனைத்துமி கமதிக்குங்கால, மேலுறுதொருசெயலுமொருமூன்றுசெயலுமஃ தியற்றுமாதோ. (௭)

காரியமாமுலகினுக்குக்காரணமாமிறைவனதுகலையாமாயை
திர்வருமம்மாயையினால்மாயாவியாயுறையுந்திங்கள்சூடி [யை
மாரியனெவ்வுலகினையு மயக்குறுத்துமாங்கவன்பா னீங்காமா
யோர்வரியவெவ்வுலகுந்தானாகியவைதாங்கியொளிருமன்றே.()

சாற்றரியஞானசத்திகிரியாசத்திஇச்சாசத்தியென்னத், தோற்றுமொருமூன்றாகித்தோற்றரிய சத்தியிலத்தொல்லோன் சத்தி, வீற்றுவீற்றாயளப்பில்பகுதியுறுமீங்கிவற்றைவிடாதுநிற் கு, மாற்றரியசத்திமான்களுமவன்றன்மாயையினால்வகுத்தான ன்றே. (௯)

ஆங்கவனைப்பிரியாதமாயையுமற்றவன்போலவநாதியாகுந், நீங்கறுமற்றதனுருவேயெவ்வுருவாஞ் சத்திகளுந்தேவர்தேவ, ரோங்கியபேரொளியாகும் பரமசிவன்முன்னெய்தி யொழியா மாயை, பாங்குறுநன்மாயைப்புருடன்பகுதியெனமூன்றுபகுதி யாமால். (௧௦)

ஒன்ருகிப்பலவாகிவிபுவாகிச்சிவையாகுஞ்சத்தியொன்றே
துன்மியதுநிங்காதநுரியாதீதப்பொருளாஞ்சிவமுமொன்றே
மன்றவுயிர்சத்திகளுஞ்சத்திமான்களுமீசன்மருவுமாயை
யன்றளித்தவாஞ்சத்தியனைத்துமுமைசத்திமா னெல்லாமீசன்.

நுகர்பவனெம்மிறைபாகுநுகர்பொருணற்கலையந்தக்கலை
யோனாளு, மகிலபுவநங்களையுமாக்கியளித்தழிக்கின்றததனுல்மு
த்தி, புகநினைவோர்பகிரண்டப்பிறைவடந்தாழ்ந்தழகொழுகி
ச்சுணங்குபூத்த, முகிழ்முலைச்செங்கனித்துவர்வாய்முற்றிழை
சேவடிக்கமலமுன்னுவாரால். (௧௨)

இத்தகையமடமயிலைமலையரையனிழைத்திடுநற்றவத்தாற்
றாய, முத்தவடங்கிடந்திமைப்பவழகுகுடியிருந்தோங்குமுகிழ்
மென்கொங்கை, மைத்தவழுங்கருங்கூந்தல்மேனையினிதுயிர்த்
துள்ளமகிழ்ச்சியோடுஞ், சித்தநனிசெம்மாப்பக்காதலனைவண
ங்கியிவைசெப்பலுற்றுள். (௧௩)

மழகதிரினெளிர்மெய்யுமிருஞ்சிலைநாண்மதிக்குழவிவள்ளை
வாட்டுங், குழைபுனையுங்கமலநிகர்நான்முகமுமுக்கண்ணுங்குல
வும்வேயி, னழகழிக்குமெண்டோளுமவிர்மதிக்கீற்றணிசடையு
ந்தாங்கியிங்ங, னிழையுயிர்க்குங்கொடியென்னவெய்துமகடனை
நோக்கென்றியம்பலோடும். (௧௪)

மலையரையன்குழவிமதியமுதுறைக்கு மணிமௌலிமகளை
நோக்கி, யிலவிதழினமிழ்தனையமழலைமொழிப்பேதைநீயாரை
யென்னக், குலவரையினுயர்குடுமிகுழையவரியரவநாண்கொ
ளுவிமுன்ன, மூலவுபுரமெரியூட்டுமொருமுதல்வன்பங்கிலினி
துறைகுவேனல். (௧௫)

மட்பகைஞர்திகிரியெனவருவினையின்வாய்ப்பட்டுமம்மரொ
ய்திக், கொட்புறுவெங்கொடும்பிறவியொழிப்பதெனதருளென
துகோலம்யாவுங், கட்புலனிற்கண்டுவப்பப்பேரறிவுதந்தனநீ
காண்டியென்ன, விட்புலம்போய்முடியுரிஞ்சகதிர்கோடியெழு
ந்தெனவேறுருவங்கொண்டாள். (௧௬)

தண்டுழாய்முடியோனுநான்முகனுமிந்திரனுந்தாழ்ந்துபோ
ற்ற, வண்டகோடிகளனைத்துமொருகாழ்முத்தெனமுலைமேல
ணிந்துவெய்ய,துண்டவார்பிறையென்னவெயிலிலங்கக்கதைநே
மிசூலஞ்சங்கங், கொண்டுநீள்தடக்கையினிற்கொடுவரியினுரிய
தண்மென்குறங்கிற்சேர்த்தி. (௧௭)

வெண்ணிலவுகதிர்கோடியொளிர்வதெனமணிமவுலிவிளங்
கவோங்கு, மண்ணல்மால்வரையரியிற்பெய்தநூபுரமடிமீதரற்
றியார்ப்பக்,கண்வழுக்குசுடர்மாலைமெய்முழுதுந்தவழமிகக்கன

ன்றுவெய்தா,யொண்ணுதற்கட்டழலெலிப்பவருங்கலன்யாவை
யுங்கதிர்களொடிப்பநீட்ட. (கஅ)

உலப்பரியவுயிரொவைக்குமுள்ளுமாய்ப்புறமுமாயுலகம்போ
ர்த்து, நலத்தகுசீறடிமுக்கணளினமலர்க்கைசெவிவாயெங்குமா
கிச், சொலற்கரியசிவக்கொழுந்தின்கூறுயமுதல்விதனைத்தொ
ழுதுநெஞ்ச, மலக்கணுேமகிழ்வெய்தவாங்கவளாயிரம்பெய
ருமறைந்துபோற்றும். (கசு)

சிவையனந்தைபராசத்திநிட்களைகேவலைமாயாநிதைசாந்தை
கவுரிமகேச்சுரியமிர்தையசலைசுமங்கலைநிவர்த்திகாளிகங்கை
பவகைாமாதேவிமகாநந்தைநாதாக்கியைபார்வதிமாமாயை
சுவதைமாணுதிதைபிரதானைபிரகிருதிதுருவைமேகை. (உ0.)

சுத்தைவியாபினிசாவித்திரிச்லகுக்குமைசுக்கிலைபுராணி
நித்தையநுப்பிரவேசிசொயம்பூதிமகாரூபைநிமலைசோதி
சித்திசருவாதாராைபிரசூதிதருமவித்தைசன்மாதீதை
சத்தியைமானினிதேவிதாமசிமாதவிமேதைசுனிதிநீதி. (உக)

சுருதிசருவாணிசரச்சொதியுருத்திராணிமானசிசுவாகை,
மிருதியோகினிசோபைசுந்தரியம்பிகைலோபைவிசுவரூபை,வர
தையதிசோபனைமாபெலைகாந்தை விபாவனைவாக்கியைபவானி,
பிரமவிஞ்சைபுருடமோகினிநாதரூபதாைபிராணவிஞ்சை. ()

பகவதிசம்பவைமகிடவாகனியச்சுதைபரமகலையநாதி
மகதிசத்தயோனிபிரதானபுருடேச்சுரிமாவிஞ்சைசாந்தை
குகைசருவசத்திகலையவ்வியத்தலக்கணைநிர்க்குணிபிராமி
சகமாதாவிபாவரிசின்மயையனந்தவிபவைசராதீததுற்கை. ()

இவைமுதலாகியநாமமாயிரமுமெடுத்தோதியிருகைகூப்பி
ப், புவிபுனல்தீவளிவிசும்புவெங்கதிரோன்மதியெச்சம்புரிவோ
ஞகுஞ், சிவனுருவினீங்காதசெல்விமலரடிக்கமலஞ்சிந்தைசே
ர்த்தித், தவலருஞ்சீர்மலையரையன்மகிழ்பூப்பவிங்கிதனைச்சாற்
றலுற்ருன். (உச)

வேறு.

குங்குமமெழுகியகொம்மைவெம்முலை
மங்கையிப்பேருருவொழித்துமாணுற
விங்குநன்னல்லுருவெடுத்தியென்னலு
மங்கலுழ்மேனிதன்னுருவமாகினள். (உரு)

மைம்மெழுக்கெறிந்தெனவளர்ந்தகூந்தலுங்
கொம்மைவெங்கதிர்முலைக்கோடுதாங்கலா
தம்மவென்றலம்வருமிடையுமாந்தளிர்ச்
செம்மையினலங்கவர்ந்தொளிருஞ்செங்கையும். (உசு)

குழைமறிந்தருள்பொழிகுவளையுண்கணுங்
கழையுறழிருதடந்தோளுங்கண்கவ
ரெழில்கனிந்தொழுகியமுகமுமீர்ங்கதிர்
பொழிதருமித்திலம்பொருவுமூரலும். (உஎ)

தவளையங்கிண்கிணித்தாளுமெல்லிதழ்க்
குவளையின்மணங்கமழ்கோலமேனியும்
பவளவார்கடிகைமெல்லிதழும்பன்மணி
திவள்கதிர்மேகலைதிளைக்குமல்குலும். (உஅ)

ஆயநல்லுருவினையன்பினோக்குறு
மீயுயர்பனிவரைவேந்தன்காதலி
னேயவன்பொடுமுழுதுலகுமீன்றருள்
தாயிருசேவடிதாழ்ந்துகூறுவான். (உகூ)

வருபிரதானநற்புருடன்மானுறத்
தெரிவருங்காண்மலர்க்கடவுள்செங்கண்மால்
பொருவருங்காலநல்லுயிர்கள்புங்கவ
ரரிவைநீயளித்தனவாகுமென்பரால். (௩0)

பேதமாயபேதமாய்ப்பெந்தம்யாவையுந்
தீதறப்பரித்திடுஞ்செல்விநீயுனைக்
காதலின்மகேச்சுரன்கலந்திலானெனி
லோதுமிவ்வுலகெலாம்படைக்கவொண்ணுமே. (௩க)

வேறு.

உயர்வானவரிலிந்திரனீயோதும்பிரமவாதிகளிற்
செயிர்தீர்கமலப்புத்தேணீமொய்ம்புள்ளவற்றிற்றிகழ்வளிநீ
பயிலும்யோகப்பண்பினரிற்சனற்குமாரனீபரத்தின்
முயலுமறைதேர்முனிவரரிலருள்கூர்வசிட்டமுனிவரனீ. (௩உ)

சாற்றுமறைதேர்முனிவரரில்வியாதனீநற்சாங்கியரிற்
போற்றுங்கபிலமுனிவரனீபுலவுக்கணிச்சியுருத்திரரி
லாற்றல்சான்றசங்கரனீயாதித்தியரிலுபேந்திரனீ
மாற்றற்கரிதாமுயர்சீர்த்திவசுக்கடம்மிற்பாவகனீ. (௩௩)

தவலில்மறையிற்சாமநீசந்தச்சினிற்சாவித்திரிநீ
நவிலும்விச்சைதனிற்பிரமவிச்சைநீநற்சத்திகளி
னுவலற்கரியமாயைநீவருணந்தனினான்மறையோனீ
யெவரும்விரும்புமாச்சிரமநான்கினில்வாழ்வுடையோனீ. (௩௪)

ஈசர்தம்மின்மகேச்சுரனீபுருடர்தமிலீர்ந்துளவோனீ
யாசின்றுயர்ந்தகற்பகத்தினருளீசானகற்பகநீ
பேசும்யுகத்திலாதியுகநீபேரொளியிற்கதிரோனீ
மாசில்கவியிற்பாரகிநீமாயாவிகளின்மாதவநீ. (௩௫)

கற்புள்ளவரிலருந்ததிநீபறவைகளில்வெங்கலுழனி
வெற்பிலுயர்ந்தபொலங்கிரிநீவெவ்வாயரவிலனந்தனீ
யற்பினிற்படைப்பனகளனைத்துநீமற்றுதலினுற்
சிற்பமாகிப்பெரிதாகிச்செறிந்தபிரமநீயாமால். (௫௬)

என்னுவிருகைமலர்கூப்பியிதயநெகிழக்கண்பனிப்பத்
தன்னுத்தமும்பநின்றேத்திப்புவநமனைத்துந்தனியீன்ற
நின்னைப்பயந்தமேனைக்குமெனக்குநிகரானொனவியந்து
பொன்னார்கமலச்சேவடிகள்போற்றுந்தந்தைக்கிவைபுகல்வாள்

புரியுங்கருமம்பலன்விழையாதுள்ளம்புனிதமாய்நாளு
மரியமகங்களினிதாற்றியென்னையினிதினடிபோற்றிற்
கருதற்கரிதாமுத்திநினக்களிப்பலென்னக்கருணையொடும்
வரமாண்டளித்துமீட்டுமுளமகிழ்ச்சிகூர்ந்திங்கிவைபுகல்வாள்.

அருமாமறைகண்முழுவதுமென்சத்தியாகுமாங்கவைகள்
திருமாலுந்தித்தடம்பூத்தசெல்வன்முன்னைப்படைப்பதனி[கார்
லொருநான்மறையாம் பெயரோடுநடக்குமன்னூல் வழியொழு
மருவார்முத்திவீட்டதனின்மம்மருறுநூல்வலைப்பட்டே. (௫௯)

வேதவொழுக்கமிகழ்ந்துபுல்லர்விரகின்றம்போற்றனிபுனையுந்
தீதுநூலின்வழிசென்றோர்செல்வர்நரகர்க்கதிகளா
யாதறன்னுற்புன்சமையங்கற்றோர்முகத்தினருமறைக
ளோதிபுணர்ந்தமுதுக்குறைவினுரவோர்சிறிதுநோக்காரால். ()

சாறுவாங்கங்காபாலஞ்சாற்றும்பாஞ்சராத்திரநூல்
மாறுசெய்யும்வாமமுளமயக்கச்செய்தநூலாகுந்
தேறியின்னூற்படிநின்றோரிவற்றையுலகிற்செப்புவோர்
பாறுதுடருநரகத்தினளப்பில்காலம்படிந்திடுவார். (௬௧)

வேதநூல்களவற்றின்வழிவிராட்டாஞ்சுவாயம்பூமனுமன்
னேதுநூல்கள்வியாதமுனியுரைத்தநூல்களவற்றின்வழி
திதிலருமாமறைக்கிழவர்செப்புநூல்களனைத்துமே
நீதிநூல்களிவற்றின்வழிநின்றோர்நெறியினின்றோரே. (௬௨)

அங்கமாறுமறைநான்குமீமாங்கியமென்றருள்கொழித்துத்
தங்குநீதிநூலொன்றுபுராணமொன்றுதவறெறிந்து
பொங்குதருமநூலொன்றுபுகன்றவீரோழ்விஞ்சையினை [ர்
யங்கணுலகீன்றவனளித்தானிவற்றையுணர்ந்தோரறிவுடையோ

இன்னவிஞ்சைத்துறைபோயவியாதன்முதலாமிருந்தவத்தோ
ரன்னமிவருநான்முகனோடழியாமுத்தியடைவரவர் [யிகழ்ந்து
பன்னுமறையின்பொரு டெளிந்தோர்பாழ்களொரு மூனரினை
துன்னவரிதாய்ச்சுடர்க்கொழுந்தாந்துரியாதீதந்தனிலடைவார்.

அருவாய்ச்சித்தர்மென்னிலைமையுளத்திலிருத்தவரிதென்னி
லுருவாய்நினைதியென்னுருவமுணர்தற்கரிதேலுன்னுளத்தின்
மருவாமின்றவெத்தேவினுருவாயேனுமனத்திருத்திற்
றருவன்முத்தியத்தேவினுருவாய்விபுவாந்தன்மையால். (சுரு)

என்றுதனதுநிலையனைத்துமியம்பித்தக்கன்புனிற்றிளமான்
கன்றுதனதோர்கரத்தேந்துங்கருணைக்கடலையிகழ்ந்தனனால்
மன்றமற்றுன்மகளாகவந்தேனென்னைமதிக்கண்ணிக்
குன்றவில்லிக்களித்தியெனவுலகம்பூத்தகொடியுரைத்தாள். ()

களிக்குங்கயல்போற்குழைதடவுங்கண்ணிபவளக்கனிமலர்ந்து
தெளிக்கும்பழையமறைமழலைச்சில்லென்கிளவிகேட்டுவகை
தளிர்க்கும்பசும்பொற்குடுமிவரைத்தலைவன்புனிற்றுமதியமுதந்
துளிக்குங்கொன்றைவேணியனைத்தொழுதுதவமாற்றிடுமேல்வை

இமையாச்செங்கணேற்றெகினப்பாகன்கவரிபுடையிரட்ட[டுப்ப
விமுதூற்றிருப்பக்கடல்கடைந்தோனண்ணலேற்றுக்கொடியெ
திமிரம்பருகிவெயிலுமிழுஞ்செங்கேழ்ப்பருதிவிளக்கெடுப்பக்
குமுதமலர்த்துங்குளிர்கதிரோன்கொற்றக்கவிகைமிசைநிழற்ற.

அண்ணலயிராவதப்பாகனடைப்பைதாங்கவெய்தினுயி
ருண்ணுங்கூற்றங்குற்றுடைவாளேந்தவீர்ந்தண்டுளியிறைப்பத்
தண்ணென்சிவழியிரங்குகடற்றலைவன்முங்கச்சாந்தாற்றி
வண்ணப்புரிகோட்டேற்றிரளைப்பாகன்போந்துமருங்கசைப்ப.

நிலவுக்கதிர்கால்முத்தவடங்கிடக்குந்தடந்தோணிதிக்கிழவன்
மலர்வாய்த்தம்பலுமிழ்பொன்னம்வட்டில்தாங்கிச்செம்மாப்ப
விலகுகதிர்வான்பிறையெயிற்றநிருதிவேந்தனெரிகான்று
புலவுகமழுமுத்தலைவேல்முடிமேற்றுங்கிமுன்போத (௫0)

ஏற்றத்துப்பிற்புரிகோட்டுச்செங்கணேற்றுத்தகளூர்வோன்
கூற்றையுதைத்தசேவடியிற்றொடுபாதுகைகைக்கொண்டேக
வேற்றையுயிர்த்தவீசானன்பிஞகமேந்திச்செலவயரப்
போற்றியமரர்முடியுமுதாள்வியாழம்விசையம்புகழ்ந்தேத்த. ()

அவுணரியக்கர்கந்திருவர்வசுக்கள்முனிவரருந்தவத்தோர்
நவையில்சித்தர்மருத்துவர்கள்வரைகள்கோட்கள்நதிநதங்கள்
நுவலுநாட்களனந்தன்முதலுரகவேந்தர்நோன்றருக்கன்
றுவலைபடுதெண்டிரையாழியாவுந்தொடர்ந்துபின்போத. (௫உ)

சனகன்முதலமுனிவரர்கள்மரீசிமுதல்வருலகுதந்தோர் [ருட்ர்
புனைதிந்தொடையாழ்க்கின்னரர்வான்பொருப்பிலுறையுங்கிம்பு
கனலுஞ்சுழல்கட்பேய்பூதங்களைபோற்கழற்காற்குய்யகர்வெவ்
வினைதீர்கருடர்பறவைகள்பல்விலங்குதொழுதுபின்செல்ல. ()

தக்கன்மகத்திற்புகுமமரர்தலைதோளுடலங்கண்விழுங்கிக்
கக்குங்குடுமிமுத்தலைவேல்வீரன்கடவுட்சிலைமணிமான்
மிக்கசீற்றத்தெறுழ்வலித்தோட்சண்டன்முதலாம்விளங்குசுடர்
முக்கட்பெருமான்கணமனைத்துமிருபாற்றொடர்ந்துமுன்செல்ல

அண்டமுகடுமோதைபடப்பானுகம்பனதிர்குரல்வான்
கொண்டலுருமினுயிரம்வெண்குட்வாய்ச்சங்கமெடுத்தூத
மண்டுதிறல்கூர்வெஞ்சினத்தவாணனோராயிரங்கரத்தால்
விண்டதுலகமெனச்சதியின்மயிர்க்கண்முழவமிகமுழக்க. (௫௫)

வேறு.

ஆள்வழக்கொழியநீண்டவரிமதர்மழைக்கட்செவ்வாய்
நாளிளமதியைநக்கநறுநுதல்நகைவெண்முத்தம்
நீள்வட்ஞ்சுமந்தகொங்கைபுருப்பசிமுதலோர்நேர்போய்த்
தாளிணைபெயர்த்துமுன்னஞ்சதிமுறைபிறழாதாட. (௫௬)

கன்னலினமுதுதேனிற்கனியினிற்கனிந்தபாட
லின்னிசைமகதிவீணைநாரதனிசைவழாத
கின்னரமிதுனநாணக்கிளைநரம்புளருநல்யாழ்ப்
பன்னருஞ்சிறப்பின்மிக்கதும்புருமுதலோர்பாட. (௫௭)

மருக்கிளர்துளவத்தண்டார்வானவன்முதலவிண்ணோ
ரருக்கனிலழகுகாட்டுமவிர்மணிமவுலிதோறு
நெருக்கன்மின்போமின்காண்மினிங்குமினின்மினென்னுத்
தருக்குடைநந்திதாக்கும்பிரம்பொலிதரணிபோர்ப்ப. (௫௮)

வெள்ளிவேதண்டத்துச்சியரசுவீற்றிருக்குந்தூய
பிள்ளைவெண்டிங்கட்கண்ணிவார்சடைமுடித்தபெம்மா
னுள்ளழற்செங்கட்பேழ்வாய்நரைவிடைதுணைவிநார்ந்து
தள்ளருந்தவத்தோர்வைகுமிமயமால்வரையிற்சார்ந்தான். ()

மழவிடையிழிந்துமுக்கட்பண்ணவன்மலரினோனும்
பொழிகதிர்நேமியோனும்பொருப்புறழ்தடக்கைதாங்க
விழைவொடும்போந்துமாமன்வியப்பொடுந்தொழுதுநல்கு
மழனுமிழ்தறுகட்பேழ்வாயரியணையினிதமர்ந்தான். (௬௦)

மருகனைத்தொழுதுவாழ்த்திமலர்த்தடங்கண்ணேவாயாய்ப்
பருகுவான்போலநோக்கிப்பண்ணவர்முனிவர்யார்க்கு
முருகியுள்குழையச்செம்மாந்துலப்புறுமுகமன்கூறி
யருவைமீருலகமீன்றவன்னையைக்கொணர்மினென்முன். (௬௧)

என்னலுங்குருதிக்காந்தள்முகிழ்விரலிருகைகூப்பி
யன்னமுமயிர்வாய்ச்செங்கட்பிடியுமுள்ளயர்ந்துசோரப்
பொன்னடிச்சிலம்புபைம்பொற்கிண்கிணிபுலம்பவேகி
மன்னவனுளாத்தமாற்றமேனையைவணங்கிச்சொன்னூர். (௬௨)

மைதவழ்கூந்தனல்லார்கூறலுமகளைப்புல்லி
யையெழின்மேனியெங்குமரிறபத்திருநீராட்டிக்
கொய்தளிர்த்தாமஞ்சூட்டிக்குங்குமமுலையிற்கோட்டிப்
பெய்தொளிர்பைம்பொற்பூணிற்பேரெழின்மறைத்திட்டாரால்.

எரிமணிமுகடுவேய்ந்திட்டிளங்கதிர்க்கற்றைகாலுங்
குருமணியடைப்பைதாங்கிக்கூற்றெளியிட்டுவைகு
மரிமதர்நெடுங்கட்செவ்வாய்ப்புலோமிசையலங்குகாந்தண்
மருமலர்க்கரத்தாற்றூயவெள்ளடைமடித்துநல்க. (௬௪)

அழகுபூத்தொசிந்தகொம்பினம்பகட்டல்குற்செவ்வாய்க்
குழைபுறங்கண்டவேற்கட்டிருவுநெய்த்திருண்டகூந்தல்
நுழைநுசுப்பலங்குவேய்த்தோள்வாணியுநொய்தினெய்திப்
பொழிகதிர்நிலவுகாலுஞ்சாமரைபுடையின்வீச. (௬௫)

கன்னியங்கற்புவாய்ந்தவருந்ததிவாழ்த்தக்கங்கை
பன்னருமறைகள்பாடியினியபல்லாண்டுகூறப்
பொன்னகர்க்கிறைவற்றந்தவதிதிபூம்பொறிகள்சிந்த
முன்னருந்தவத்திலோபாமுத்திரையாசிகூற. (௬௬)

தாழ்தடக்கையின்யார்க்குந்தழூமுற்றுவாராதோங்கும்
வீழ்முலையரம்பைசெம்பொற்சிவிறிநீர்விழைவிற்றூற்றக்
கேழ்கிளர்மயிலஞ்சாயற்றிலோத்தமைகிளைக்குஞ்செய்ய
சூழ்சுடர்ப்பருதிமானுஞ்சுடர்மணிவிசிறியேந்த. (௬௭)

புல்லிதட்குவளையுண்கட்காளிபொற்பிரம்புதாங்கி
மெல்லெனநடத்தியென்னுவியந்தடியீடுபோற்ற
மல்லலம்புவனம்யாவுமீன்றசிற்றுதரவல்லி
பல்லியங்கரங்கமன்றல்பயிலுமண்டபத்துட்புக்காள். (௬௮)

வேய்நெடுந்தோளியெய்தவிண்டுவைமுதலதேவர்
தூயினர்மலர்கள்கண்ணீர்துளித்தனருவகைபொங்க
வாயிரநாமம்பாடியாடினரடியின்வீழ்ந்தார்
தாயினைக்காணின்மைந்தர்மகிழ்வதுதக்கதன்றே. (௬௯)

கடிமணக்கருமம்யாவுநான்முகக்கடவுள்காட்ட
விடிமுரசிரங்கியார்ப்பவினைவளையலறியோங்க
வொடிவில்சிரிமையவேந்தன்வாக்கியவுதகத்தோடும்
வடிமலர்க்கண்ணினாளைமகேசனுக்கருளினானே. (௭0)

தூயவிக்கதைகற்றோர்கள்வீட்டின்பந்துய்ப்பரின்னு
ளாயிரநாமமோதியாரழற்கருமஞ்செய்வோர்
மாயிருஞாலங்காத்துப்பின்னர்வான்றருவினீழல்
மீயுயர்பசும்பொன்னாட்டுமேவிவீற்றிருப்பரென்றான். (௭௧)

திருக்கலியாணவத்தியாயமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—௩௬௩.

பதின்மூன்றாவது

பிருகுவாதியர்தோற்றமுரைத்த வத்தியாயம்.

அன்னநற்காதையாவுமுரைத்தனையையவென்னுப்
பொன்னகர்க்கிறையுநல்யாழ்முனிவனும்புகழ்ந்துவேதம்
பன்னியபிருகுவாதிமுனிவரர்படைப்புமுற்று
நன்னயத்தியம்புகென்னநாரணனவிலலுற்றான். (க)

வேறு.

பிருகுமுனிக்கவ்வளைத்தோட்குழையலைக்கும்பிணைநெடுங்கட்கயாதியென்பா,டிருவயிற்றிலஞ்சுணங்கார்ந்தழகுகுடியிருந்துநனிசெம்மாந்தோங்கும், வருமுலைச்செந்துவர்க்கனிவாய்வாரொலிமென்கருங்கூந்தல்மயிலஞ்சாயல், முருகுயிர்க்குஞ்செழுங்கமலப்பொகுட்டுறையுமுதல்வியினிதுதித்தாளன்றே. (உ)

பின்னரும்மம்முனியளித்த தாதாவும்விதாதாவும் பிறங்குகோட்டுப், பொன்னெடுமால்வரையுயிர்த்தவாயதியைநியதியைவெம்பொறிகள்சிந்து, மன்னியசெந்தழல்சான்றாய்மணம்புரிந்துபிராணன்மிருகண்டுவென்னும், பன்னருஞ்சீர்ப்புதல்வர்தமைமகிழ்வினொடுமுலகேத்தப்பயந்தாரன்றே. (ங)

போற்றரியமிருகண்டுப்புரமூன்றுமொருங்கெரித்தபுனிதற்போற்றி, யேற்றெருமைக்கடும்பாகன்றனியாணையரனடியார்க்கெய்தாவண்ண,மாற்றியிடுமார்க்கண்டமுனிவரனைமகிழ்ந்தளித்தான்பிராணனென்போ, னாற்றலருமறைதேரும்வேதசிரசெனுமுனியையளித்தானன்றே. (ச)

தழல்வேள்வியினிதாற்றுமரீசிமுனிசம்பூதியிடத்திற்றூய,நிழன்மேவுபவுரணப்பேர்மைந்தனையுங்கிருட்டிமுதனிகழ்த்துநான்கு, குழைமேவுமதர்நெடுங்கண்மகளிரையுமினிதளித்தான்கோதில்சீர்த்திப், பழமறைதேர்பவுரணனும்விசையனொடுபர்வதனைப்பயந்தானன்றே. (ரு)

புலத்தியற்குக்கமைவயற்றிற்கருத்தமனுஞ்சயிட்டுனுவும்பொருவிலாத, வ்லப்பறுசீர்மிகவோங்குவன்கபீவாசனும்வந்துதித்தார்நாளு, மலக்கணறுமத்திரிநல்லனசூயையவ்வயிற்றினலங்குசோமன், கலக்கமில்தத்தாத்திரயன்துருவாசனெனுமிவரைக்களிப்பிற்றந்தான். (சா)

அங்கிராவெனுமுனிவற்கமுதுயிர்த்துவிடமுமிழுமலங்குவேற்கண், மங்கையாமிருதிகுகுச்சினிவா.லிராகையனுமதியென்றோதுங், கொங்குசேர்நறுங்கூந்தற்குழைதடவந்துயிர்பருகுங்கொடியவேற்கட், டிங்கள்ாமெலிவார்வப்பற்றெழுவாண்முகத்தசிறுமியரைமீன்றாள். (எ)

மறைபயிலும்புலத்தியநற்பிரீதிநலமகிழ்வெய்திவேதவா ருத், திறல்கெழுநற்றெமபோனியெனுமைந்தரிருவரையுஞ்சிற ப்பினல்கி, நறைகமழுங்கருங்கூந்தற்சந்ததியையுயிர்த்தனள்சந் ததியென்பாளு, மறுபதினாயிரம்வாலகில்லியரைகிரதுவினைய ணைந்துபெற்றாள். (அ)

கற்புருவுகொண்டனையவருந்ததிநல்வசிட்ட னருள்கலந் துமேவிச், சொற்றரசன்பயனூர்த்தவாகுசேவனன்புகலுஞ்சுத பாவோடு, மற்புடையசக்கிரனல்லவனென்றுமெழுமகவைபயி ல்வேலுண்கட், பொற்புவழிந்தொழுகுமுகப்பூவையையிவ்வுல குய்யப்பொலிவினீன்றாள். (கூ)

வன்னியெனுமழற்கடவுள்சுவாகையெனுமனைவியிடத்தன்பு கூர்ந்து, பன்னுதிறற்பாவகனைப்பவமானன்றனைச்சுசியைப்பரிவி னீன்று, னன்னவரிலாணிதனிற்பிறந்தவழல்பவமானனழன்று விசு, மின்னிடத்திற்பிறந்தவழற்பாவகன்மென்சுசியெனுந்தீவ டவைத்தீயே. (க0)

அன்னவழற்கடவுளரோமூவருமற்றோரொருவராம்மூன் றாக,மன்னியநாற்பானைந்துமகவீன்றார்மற்றவர்மூதாதையோடு, துன்னுமழற்கடவுளர்தந்தொகையோதினைன் றொழித்தவைம் பானென்னப், பன்னிடுவரீங்கிவர்கள்சிவநெறியிலினிதொழுகு ம்பண்பினோரோ. (கக)

மறைகிடந்துவிளையாடுநன்னாவேதியனிட்த்தின்மகிழ்வினோ டு, முறையின்மகம்புரிந்தோரும்புரியாருமாய்ப்பிதிர்க்கண்மொ ய்ம்பினோடு, மறைதருமக்கினிச்சுவத்தாவெருகிடதரொனும்பெ யரோடமைந்தார்தேவர், செறியுமானுடரிவர்தம்பிதிர்க்களெ னமற்றிவரைச்செப்புவாரால். (கஉ)

உரைத்திடுமக்கினிச்சுவத்தரொனுந்தேவர்பிதிர்க்களுநீளுல ப்பில்சீர்த்தி, நிரைத்தவெருகிடதரொனுமானுடர்தம்பிதிர்க்களு நன்னெறிவழாது, முருக்கிதழ்மென்சுவதைதுணைமுலைமுகடுபு யந்தழைப்பமுயங்கிச்செய்ய, திருக்கிளர்மேனையைத்தூயவை தரணிதனையிதயஞ்சிறப்பவீன்றார். (கங)

மேனையெனுமணங்கரசிமலையரையன்புயந்தழுவிவியப்பினோ டு, மூனவறுமைநாகம்பறவைப்போர்வரைகங்கையொளிகுலாய, பானிலவுக்கதிர்பரப்பிநள்ளிருண்மேய்ந்தழகொழுகும்பனிமெ ன்கோட்டுக், கூனல்மதிவடந்தாழ்ந்தகொம்மைமுலையுமையிவ ளைக்குறிப்பினீன்றாள். (கச)

கொம்மைமுலைவேய்நெடுந்தோட்குழையலைக்குமதர்நெடு நகட்கொவ்வைச்செவ்வா, யெம்மையாளுடையவடன்கதைமு

ன்னரிசைத்தனமற்றியம்புதக்கன், செம்மைசேர்புதல்வியர்தம் மக்கள்வருதோற்றமனந்தெளியச்சொன்னேன், மம்மரீர்கேட்ப னகள்யாவையுநன்கியம்புவமென்றறைதலோடும். (௧௫)

வாளமரின்றிறம்புரியுமன்னவர்தந்தோற்றநனிவழங்குகென்ன, பாளைகமழ்நறுங்கூந்தற்புலோமிசைவெம்முலையானைப்பாகன்றூய, கேள்வியினற்றுறைபோயமகதியாழ்முனிவணங்கிக்கேட்டலோடு, மாளரியாயிரணியன்றனுரம்பிளந்தநெடுமாயனறைதலுற்றான். (௧௬)

பிருகுவாதியர்தோற்றமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௩௭௬.

பதினான்காவது

தக்கனைச்சபித்தவத்தியாயம்.

அலங்கலைவேற்சுவாயம்புமனுவென்போன் சதரூபையாகமேவி யிலங்குபுகழ்ப்பிரியவிரதனைப்புகழுத்தானபாதனையாங்கீன்றான் வலங்கெழுதோளுத்தானபாதனியற்றுருவனையுண்மகிழவீன்றான் றலங்கியசம்புவைமணந்துதாவியனைச்சிட்டனையத்துருவனீன்றான்.

எட்டானைத்தம்பத்தோடிகல்புரிதன்சயத்தம்பமினிதிருட்டுஞ், சிட்டனிலவிதழ்ச்சுமதிமுலைதோய்ந்துரிபுவிருகதேசன் விப்பிரன், மட்டவிழ்தாரிபுஞ்சயன்சொல்விருகலனென்பவர்ப்பயந்தான்ரிபுவும்வாய்ந்த, பெட்பினெடும்பிருகதிதன்முலைதோய்ந்துசக்குசனைப்பெற்றானன்றே. (௨)

திய்த்துமிழும்வெள்வேற்கைச்சக்குசனு மனமருட்டிச்சிறப்புவாய்ந்த, வேய்த்தடந்தோட்புட்கரணிமுலைதோய்ந்துசாக்குசனைவிருப்பினீன்றா, னேத்துபுகழ்ச்சாக்குசனும்நாக்கிடந்துகதிரெறிக்குமைதேய்ந்தல்குல், வாய்த்தபொலங்கொடியனைய நாட்டுவலைதனையினிதின்வதுவைசெய்தான். (௩)

ஐதெழிலார்நாட்டுவலையன்பினெடுமனங்கலந்தாருருவெய்தாம, நெய்திருவேற்சுசிபுருவக்கினியுக்கிரன்முனிசூழ்நிலனேம்போற்றச், செய்தவங்கூர்சுத்துய்ம்மன்சத்துய்ம்மன்மூன்றுலகிற்சிறப்பினோங்கு, மெய்தருஞ்சிரபிமன்னிமகனிவரோர்பதின்மரையுமினிதினீன்றான். (௪)

ஆங்கவரிலுருவென்போனம்பலைக்குங்கருந்தடங்கணாக்கினேயி,வீங்குதடமுலைபுணர்ந்திட்டங்கனைநற்சுமனசனைவிளங்குவேற்கை, யோங்குதிறலுக்கிரனைக்கிரீசனைச்சாரனைக்கயனையுவப்பினீன்றா, னீங்கிவரிலங்கனென்போன்வென்னென்னும்புகழ்வேந்தையினிதினீன்றான். (௫)

வேறு.

அரசுவிழுங்கிவாய்காய்ந்தவ்வில்வேலுழவன்வென்னென்போன்
கரைகொன்றிரங்குகடல்வலையமுழுதுமகவான்கன்றுக
வுரியபொருள்களனைத்தினையும்பாலாய்க்கறந்தின்னுயிர்புரந்த
பிருதுவென்னுமணிமவுலிப்பெரியோன்றன்னைப்பெற்றனனல்.

அன்னேன்வேள்விச்சாலைதனிற்காதைநவில்வானழல்நேமி [ர்
மின்னேன்சூதமுனியாகப்போந்தானென்பர்முதுக்குறைந்தோ
பைந்நாகத்தின்கதிர்பொழியுநெற்றிக்கிடந்தபாரேழுந்
தன்னேராணைதனிசெலுத்தும்பிருதுமாழ்கியிவைசாற்றும். (எ)

மழலைத்தீஞ்சொற்கிண்கிணிக்கால்மைந்தரில்லாவரசாகூ
விழையேயென்னவலங்குளேயச்சிங்காதனம்விட்டிழிந்தேகி [க்
மழைவீழ்ந்துறங்குநெடுங்குடுமிக்கோவர்த்தனமால்வரையெய்தி
கழையாலானின்கணங்குவித்தகன்னற்பழிச்சித்தவம்புரிந்தான்

இழுக்குத்தேறற்செஞ்சேற்றிற் பெடைவண்டெய்திச்சே
வல்முனம்,வழுக்கிவிழ்ந்துநாணெய்தும்வண்டாமரையாள்புண
ர்மார்ப, னெழுக்கந்தன்னினிகரில்லாவரசனுஞற்றுந்தவநோக்
கிப், பழுத்தகனிவிண்டமுதுகுக்கும்பான்மைபோலவிவையு
ரைப்பான். (கூ)

பாற்றினுடன்வெங்கழுதுதொடர்பருதிவேலோய்பன்னெடுநா
ளாற்றுந்தவங்கண்டுளமகிழ்ந்தேமமுதுங்கனியுந்தனிகுலவி
யூற்றுமழலைமொழிச்சிறுவரிருவர்தந்தேமெனவோதிக் [னல்.
கோற்றேன்குதலைச்செழுங்கமலை கொழுநன்மறைந்துபோயின

மழையினுதவுங்கொடைத்தடக்கைப்பிருதுவென்னும்வா
ழ்வேந்த,னழகுழலையுஞ்சுமக்கலாதிருகுமிடையுந்தரத்தாளைக்,
கழைமென்பசுந்தோணலனுகர்ந்துகதிர்செய் வடிவேற்சிகண்டி
யையும், நிழல்செய்கதிர்வாள்விரதத்தான்றனையுநெறியினினித
ளித்தான். (கக)

ஒன்னார்மகளிர்கலனழிப்பவொளிறும்வடிவர்ளுறைகழிக்கு
ம், பொன்னார்தடந்தோட்சிகண்டியென்போன்பொருவில்சுசீ
லன்றனைப்பயந்தா, னன்னேனிமையவரையடைந்துகங்கையாற்
றினகன்கரையின், மின்னுக்கதிரோன்மண்டலத்தின்விருப்பிலீ
சன்றுள்போற்றி. (கஉ)

பாலவெண்ணீரொளிபழுத்தசுவேதாச்வனும்பாசுபதன்
சாலவருமாதவம்புரியுமரசன்முன்னர்த்தானணுகி
மாலோனீசன்றுள்போற்றிவரம்பெற்றனனீண்டாம்பொருத
வேலோயென்னத்துறப்பித்துவிழுமாமறையுமொன்றுரைத்தான்

அருமாமறையாலுளங்தெருளூற்றன்னோனுங்குத்தவம்புரிந்தான், மருடீர்கேள்வியவிர்ததரனென்போனுலக்மகிழ்தாங்கப், பெரியோரோத்தும்பிருசீனப்பெருக்கிச்சென்போன்றனைப்பயந்தான், றெருளாலவனுங்கட்லுயிர்த்ததெரிவைமுலேயிற்றினைத்தனனுல். (கச)

இமையோர்பரவும்பிரச்சேதச்சென்னும்பெயரினெருப்தின்மர்
தமையாங்களித்தானம்மைந்தர்பதின்மர்தாமுந்தவலருஞ்சி
ரமையார்தடங்தோள்மாரிடையையன்பின்வநுவையாற்றிநனுங்
குமுதச்செவ்வாய்ப்புத்தமுதங்கூட்டுண்டமரரொனக்களித்தார்.

களிக்கும்வேந்தரொருபதின்மர் கலந்துகடவுளருங்கற்பிற், றுளிக்குந்தேன்முர்நறுங்கூந்தற்றுவர்வாய்த்தீஞ்சொன்மாரிடையாங், களித்தாள்தக்கன்றனைமகவாயெனலுமவனீண்டுதித்ததெவன், றெளித்தீண்டுமைத்தியெனலோடுந்திருமாலதனைபுமைசெய்வான். (கரு)

கடவுட்பொன்னங்குடுமிநெடுங்கயிலைவரையினமரர்தொழ
வுடனக்கண்ணனெடுந்தக்கனுவப்பினெய்திமுக்கணனை
முடியின்வணங்கவவர்க்கியன்றமுகமனேடுமருள்புரிய [ர்
விடைகொண்டேகித்தத்தமதுபதியின்விரைவிற்சென்றடைந்தா

காமனுட்லம்வெந்தொழியநுதற்கண்விழித்தகாபாலி
மாமனெனவுமதித்திலனென்றுள்ளமாழ்குமமைபத்திற்
றேமென்கூந்தலுலகீன்றசெல்விதாதைமனையெய்த [ன்
தூமம்பிறக்கத்தனினோக்கிச்சொல்லாற்சுடுசொல் பலசொன்னு

திங்கட்கண்ணிமுழுமுதலேயிகழ்ந்தமாற்றஞ்செவிப்படலு
மங்கைநீங்கியுலகீன்றவன்னையிமவான்மகளாகிக்
கொங்குவிரிக்கும்பசுங்கொன்றைநறவூற்றிருப்பக்குளிர்தூங்குங்
கங்கைவேணியிடமருங்கின்மகிழ்வினேடுங்கலந்தனளால். (கசு)

உலகமீன்றபொலன்கொடியைத்தக்கன்முனிந்தவுரைகேளா
வலகில்சோதியெம்பெருமான்சீற்றமெய்தியவனிதனி
லிலகுமவுலிமானிடவேந்தாகிப்பிறக்கவெனச்சபித்தான்
புலவுவேற்கண்மாரிடைபாலதனுற்புதல்வனுயினான். (உ0)

ஈரைந்தரசிற்றொருத்திவயிற்றுதித்ததக்கனிழைத்தவைகள்
பாரின்விளங்கவுரைத்தியெனப்பருவமயிராபதப்பாகன்
றேருமுதுநான்மறைவடித்ததெய்வமுனிவன்கேட்டிடலுங்
காரிற்கரியதிருமேனிக்கருணைக்கடலாண்டுரைசெய்வான். (உக)

தக்கனைச்சபித்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௪00

பதினைந்தாவது

தக்கன்வேள்வியழித்தவத்தியாயம்.

கரைபொருகடலந்தானைக்காவலன்றக்கனென்போ
னுரவுநீருலகமேமுந்தனதடிப்படுத்தியொன்னார்
தருதிறையளப்பவிண்ணோர்தனித்தனியேவல்கேட்ப
வரியணைப்புறத்துவைகியாழியொன்றுருட்டுநாளில். (௧)

முன்னையப்பவத்திலீசன்வைதவையுளத்தின்முன்னி
யென்னையாளுடையமுக்கட்கடவுளையின்றியோங்கு
பின்னல்வெண்டிரைத்தாழ்கங்காத்துவாரத்திற்பெட்பினெய்தித்
துன்னரும்வேள்விமற்றொன்றாற்றுவான்றுடங்கினானே. (௨)

குறுமுயலரத்தமேய்க்குங்கோசிகந்தாழ்ந்தவல்கு
லிறுமருங்குமையாள்பாகனின்றியானாற்றும்வேள்விக்
கறிதுயிலமர்ந்தமாயோன்முதலியவமரர்யாரு
முறுகெனமுடங்கல்போக்கயாவருமொல்லையுற்றார். (௩)

தாக்கணங்கமர்ந்தமார்பிற்றண்டுழாய்முகுந்தன்வெள்ளைக்
கோக்களிறூரும்விண்ணோர்கோன்முதலமரர்நாளுந்
தீக்கொளுவருத்தியுண்ணுமுனிவரரியக்கர்சித்த
ரேக்கறவெய்தவீக்குமிளமுலையமரர்மாதர். (௪)

குவளைநாண்மலரைவென்றுகுழைபொருதலைக்குமுண்கட்
டுவரிதழ்க்கமலைவாணிபழமறையினிதுதொக்க
வவையினிற்பால்வெண்ணீறுகண்டிகையணிந்துமிக்க
தவமொருவடிவுற்றன்னததீசிமாமுனிவன்வந்தான். (௫)

தொள்ளைபூத்தலர்ந்தநெஞ்சிற்றக்கனீகேட்டிதூய
வள்ளிலைக்கமலவீட்டிலந்தணனாதியாகு
மெள்ளருந்தருக்களீறாயியைந்திடுமுயிர்கட்கெல்லா
முள்ளுறைசோதிதன்னையிகழ்ந்ததென்னுரைத்தியென்னா. (௬)

தவத்துறைபடிந்தநெஞ்சிற்றதீசிமாமுனிவன்சாற்ற
வுவப்புடன்மறைகள்யாவுமுருத்திரபாகந்தன்னை
நிவப்புடனுரைத்ததில்லைநீயவைகேட்டியென்னா
வவித்துறைபோயநெஞ்சத்தக்கனுங்கறைந்திட்டானே. (௭)

பழுதுணர்தக்கனுங்குப்பகர்தலுநடுக்கமெய்தி
யிழுதைநீமடமைநெஞ்சத்தியைந்தவாறிசைத்திகொல்லோ
மழவிடையூர்தியன்றிமகம்புரிந்திடநீதென்னத்
தொழுதகுமறைகள்யாவுஞ்சொல்லியாண்டகன்றமர்தோ. (௮)

மன்பெருஞ்சிறப்புவாய்ந்தமலரயன்முதலினோர்தம்
மென்பணிந்தீமத்தாடியெறிவரந்தையமேற்குங்
கொன்படுசூலவேற்கைக்கூத்தனுங்கருத்தன்கொல்லோ
பொன்புனையறுவையார்த்தபூவைமேனியனையல்லால். (௯)

என்னவேதக்கன்கூறவிருந்தவமுனிவர்தாமு
மன்னுயிரனைத்துங்காக்குமணிநிறவண்ணன்யார்க்கு
முன்னையோனென்னநெஞ்சின்முதுக்குறைவனைத்துநீங்கத்
துன்னியமாயையுள்ளமறைப்பமாழாந்துசொன்னார். (க0)

என்றலுந்ததீசிநெஞ்சமெரியெழக்கனன்றுசீறிக்
குன்றவிற்கடவுடன்னையிகழ்ந்திடுங்குற்றந்தன்னாற்
பொன்றிவெந்நரகந்தன்னிற்புகுந்துநெஞ்சழிதிரென்னாத்
துன்றியமுனிவருள்ளஞ்சோர்வுறமுனிந்துவைதான். (கக)

மெல்லியவணுவைச்செம்பொன்மேருவோடிணைத்துநோக்கும்
புல்லறிவாளர்போலப்பூவைபோன்மேனியானை
யெல்லையில்குணக்குன்றாயவீசனுக்கிணையென்றோதுங்
கல்வியின்மடமைநெஞ்சக்கடவுளர்தம்மைச்சீறி. (கஉ)

விழுமியரல்லார்கேண்மைவெந்துயர்ப்படுத்துமென்னா
வழிமதுக்கமழுஞ்செய்யமரைமலர்ப்பொகுட்டில்வாழும்
மழமறைக்கிழவனீங்கப்பனிபிருவிசும்பினீங்கி
யுழையுறைதேவர்யாருந்தனித்தனியுள்ளஞ்சோர்ந்தார். (கங)

வருவனவெண்ணிவேதன்போயதுமனக்கொண்டுள்ளம்
வெருவரலின்றித்தக்கன்வேள்வியையியற்றநோக்கி
யருமறைவடித்தசெஞ்சொற்றதீசிமாமுனிவனங்கட்
கருமிடற்றெந்தைசெம்பொற்கழலிணைநினையுமேல்வை. (கச)

முன்னையபவத்திலென்னையிகழநீமுனிந்ததக்கன்
மன்னுமிப்பவத்தினின்னையிகழ்ந்தருமகஞ்செய்கின்றா
னன்னவனாற்றுமெச்சமழித்திடவேண்டுமென்ன
வென்னையாளன்னைகூறவிறைவனுமதனைநேர்ந்தான். (கரு)

ஆயிரமௌலியண்டமுகட்டினையளப்பச்செய்ய
வாயிரங்கமலப்பொற்றாளகனிலமளந்துசெல்ல
வாயிரந்தடந்தோளெட்டுதிக்கையுமளப்பவெய்ய
வாயிரங்கண்கடையவழற்சிகைபரப்பிமண்ட. (கசா)

பொழிகதிர்நேமிச்சங்கங்கப்பணம்புகையுமொள்வா
ளெழுவழல்கவிழ்க்குஞ்சூலந்தோமரமெறியும்வைவேல்
மழுமுதற்படைகள்யாவுங்கரந்தொறும்வயங்கித்தோன்ற
முழுமதிவகிர்ந்தாலன்னமுள்ளெயிற்றொளிவீச. (கஎ)

புவனகோடிகளுந்திக்கும்புராரிவெஞ்சீற்றத்தீயிற்
கவைபடுசூலவைவேற்காய்சினவீரன்தோன்றித்
துவரிதட்களிவாய்நீருசொற்றேகையோர்பங்கன்றுளி
றுவகையின்வணங்கிச்சூழ்போந்தினையனவுரைக்கலுற்றான். ()

வேறு.

அண்டகோடிகண்மிதக்குமலையாழியொருகைக்
கொண்டுமற்றதுபொதிந்தகனல்கோட்புரல்செயு
மண்டுகாலதனைமுற்றும்வெளிமுற்றுமடைவே
யுண்டுமீளவுமளித்திடுவனெந்தையுளையாய். (கசு)

என்றுகூறலுநகைத்துலகம்பாவுமழியேல்
வென்றிவீரவுயர்தக்கனழல்வேள்விவிரைவிற்
கொன்றுபோதுகவெனவிடைகொடுப்பவவனு
நன்றவீரமெனநாணொடுநடந்தனனரோ. (உ0)

மாலைவெள்ளருவிதாழிமையவல்லிகடிதிற்
காலனுஞ்சமரிலஞ்சவருகாளியையுயிர்த்
தாலமுண்டெரிகவிழ்த்துமுடைநாறுமழல்வாய்ச்
சூலநல்கவிடைகொண்டுதொழுதேகினளரோ. (உக)

எரிகவிழ்க்குமயில்கப்பணமுசுண்டியெறிவேல்
குருதிகக்குகதைகொண்டுகணநாதர்துடர
நரைவிடைக்கண்வருகாளியொடுமேறிநகைகால்
பருதிவேலுழவன்விண்ணவர்கள்பாலணுகினான். (உஉ)

சேட்டிளம்பருதிகோடிகதிர்சிந்தியெனலா
மோட்டுமாமணியணிந்திடுமுகுந்தன்முதலோர்
கூட்டமெய்துமுயர்சாலையிடைசென்றுகுறுகி
வாட்டிமற்குருசில்தக்கனுளமாழ்கவில்வான். (உ௩)

எந்தைபூசனையிகழ்ந்தனதுவெள்ளையறிவி
னந்துமாமகநடத்துதிகொலென்னநகையா
வந்தில்மந்திரமறைந்ததிலையென்றுமறையோ
ருய்ந்திடாதவழிதக்கனுரையாடுபொழுதின். (உச)

அடைவின்வேதமுதன்மந்திரமனைத்துமுதவுங்
குடிலைதக்கனைவெகுண்டரிமுன்வந்துகுறுகி
விடைவலானெழியநீகடவுளோவிடைவலா
னிடமருங்குறையுமங்கையுனையன்றியெவரோ. (உரு)

என்றுகூறுதலும்விண்ணவர்கள்யாருமிகழா
நன்றுநன்றெனவிலாவுறநகைப்பமிடல்கூர்
வென்றிவீரனும்விழிக்கடைசிவப்பமுனியா
வன்றுசாலையழலுண்டிடவழித்தனனரோ. (உசு)

வேறு.

இரும்புகுதட்டிவில்லாழியுமிழிவுளிவிக்குமணியூபங், கருந்தா
தென்னக்காய்ப்பிருந்தகாத்தான்முறித்தோர்குறும்பூதம், பொ
ருந்துமவிகள்பேய்குழிசிபுடைத்தாங்குடைத்து முத்தழற்கும்,
பருந்திற்படுத்தசயனமிசைபஞூஉத்தாளதனூற்புடைத்ததே. ()

உரறுசீற்றத்தெரிகுஞ்சிக்குறுந்தாட்பூதமுமிழ்கனற்கட் [கு
டிருகுசினத்தபேய்க்கணங்கள் செருவேற்றெதிர்ந்துதிசையளக்
கிருதோள்கொட்டிமகமாற்றுமுனிவர்ப்பற்றியெறிதிரைய
விரிநீர்க்கங்கையிடையமழ்த்திவிளையாட்டயர்ந்துதுள்ளுமால்.

கட்வுட்சாலைதனிலமரர்களிப்பக்குளிக்குமாமகளி [ருவி
ருடலுங்கூற்றுங்கண்புதைப்பவொறுக்குங்கணங்கள் வாய்வெ
வடிவேனெடுங்கண்புதைப்பவவை குடங்கைக்கடங்காவாற்றினு
படர்கூர்ந்துள்ளநடுங்கவயிறதுக்கிமயிலிற்பதைபதைப்பார். [ற்

அஞ்சிலோதிசுவற்பிறழவம்மென்சிலம்புகிடந்தலற
வஞ்சிமருங்குல்போயொளிப்பவளர்மென்முலைமேலுத்தரிகம்
பஞ்சியூட்டுபதம்பணிப்பப்பட்டர்தற்கரிதென்றிடைவீழ்ந்து
நஞ்சமமுதுங்கலந்தன்னநகுவேனெடுங்கண்பனித்தயர்வார். ()

பாழிநெடுங்தோட்காளியெதிர்பட்ரவெருவிக்கடைகாண்பா
னூழியூழியழிந்திடினுமுலவாநெடுங்கட்புலோமிசையு
மாழைநெடுங்கட்டிருமகளும்வயவர்ள்வயிரப்படையோனை[ட்டார்
யாழித்தடக்கைத்துளவோனையலம்வந் தோடித்தழீஇக்கொண்

தண்ணங்கமலத்திருவுமலர்தடங்கட்செவ்வாய்ப்புலோமிசையு
நண்ணுந்துயரந்தனைநோக்கிநகையாச்சினவியிதழதுக்கிக் [மு
கண்ணின்வட்வைக்கனலொழுகக்கனன்றுகடைவாய்ப்புகைதவ
வண்ணலயிராவதப்பாகனமரர்துடரவமரோற்றுன். (ருஉ)

செருவேட்டுறங்காப்பகடுகைக்குந்தறுகண்மறலிதீக்கட்வுள்
வெருவாத்தானைத்திறல்வருணனுலவைவேந்தனீசான
னிருதியுயர்புட்பகாடுவுநிதிக்கோன்முதலபுத்தேளிர்
குருதிகவிழ்க்குமுத்தலைவேற்கூற்றின்கூற்றத்தெதிர்சென்றார். ()

வேறு.

மண்டுவெஞ்சமருடற்றவெதிர்வந்தனீர்கொலேர்
கொண்டவூர்திமுதல்விண்ணவர்களென்றுகுறுகி
யண்டகோளகைவெடிப்பவயலண்டமுழுதும்
விண்டுமோழைபடவீரனகையாடிவெகுளா. (ருச)

கள்ளுலாநறியகற்பகந்கர்க்கிறைவனை
யள்ளிமண்ணிடைகளிற்றொடுமனைத்ததொருகை
பிள்ளைவெண்பிறையெயிற்றபிலவாய்மறலியை
யுள்ளமென்புதசைநைந்திடநெறித்ததொருகை. (ருரு)

ஆரமுற்கடவுளுவினையகழ்ந்ததொருகை
கார்நிறத்தநிருதிக்கடவுள்கைகள்விழிதோ
ளிருள்மூளைகுடர்சிந்திடவெறிந்ததொருகை
வாருதிக்கிறைமையைவாரியின்மடுத்ததொருகை. (௩௬)

மண்டமாக்கலையுகைத்தெதிர்வளிக்கிறைவனை
யண்டகோளகைமுகட்டினிலடித்ததொருகை
கண்டெறித்துயிர்சிதைந்திடநிதிக்கடவுளைச்
செண்டடித்தனவெறிந்தெதிர்திரித்ததொருகை. (௩௭)

பாயொளிப்பகன்விழித்துணைபறித்ததொருகை
யாய்கதிர்த்தொகைபரப்பரியமாவினிருதோள்
சேயவெங்குருதிசிந்திடவடித்ததொருகை
காய்கதிர்க்கடவுள்பற்றொகைகடிந்ததொருகை. (௩௮)

மருத்துவத்தலைவர்வாய்குருதிகக்கிமறிய
வருத்துமென்கனியினுருயிர்பிழிந்ததொருகை
செருக்களத்தெழுவசுக்களிருநால்வர்சிதைய
நெருப்பெழும்படிபிசைந்துடனெரித்ததொருகை. (௩௯)

இன்னவாறுதிறல்வீரனுயர்கைகளைவைப்
மன்னும்வானவரியக்கர்முனிவோர்கள்மறிய
முன்னியோரிமையொடுங்குமுன்முடித்திடுதலுங்
கன்னியந்துளவமாயனதுகண்டுவெகுளா. (௪0)

மறிதிரைக்கடல்களொன்றின்மிசையொன்றுமறியச்
சிறையடித்தொருகணத்தினிடையெண்டிசைசெலு
மெறும்வலிக்கலுழன்மேலினிதிவர்ந்துமுனியா
வுறுசமத்திடையெதிர்ந்தமருடற்றினனரோ. (௪௧)

மாயிரும்புவியருந்துமணிவண்ணன்வடிவேற்
சேயின்மிக்கதிறல்வீரனெதிர்சென்றுசினவா
வாயிரங்கதிரொருங்கெழுவதென்னவழல்கால்
பாயொளிப்பருதிவெம்படைபணித்தனனரோ. (௪௨)

ஊழிவெங்கனலுமாலமுமுயிர்ப்பதுட்லும்
பாழிவாய்மறலிமைக்கொலைபயிற்றுவதுவெஞ்
சூழ்சுடர்ப்பருதியன்னதொருசூலமதனு
லாழியம்படைசெருக்கறவகற்றினனரோ. (௪௩)

நேமியம்படையகற்றிநிகரற்றவிறலோன்
ருமனைக்கடவுளோடுலகுதந்தமுகிலைக்
காமர்மென்சிறையினிற்பொருதிறற்கலுழனைத்
தூமவெங்கணைதுரந்துடல்துளைத்தனனரோ. (௪௪)

வரைபெயர்ந்துகலுழன்சிறைவழங்குவளியாற்
சருகினிற்பிரியவோடியெதிர்சென்றுதளராச்
செருவிளைத்தகணநாதரையுடன்றுசினவிக்
குருதிகக்கும்வளைவாய்கோடெதிர்குத்திடலும். (சரு)

கலுழன்வெஞ்சமருடற்றவதுகண்டுவெகுளா
வலகில்வீரனுயர்புள்ளரசொராயிரம்வகுத்
துலகம்யாவையுமுன்னுண்டவனூர்தியுடனே
மலைகவென்னவவைசென்றமர்மலைந்தபொழுதின். (சசு)

வேறு.

திருகுசீற்றவெந்துப்பின்வீரன்விடுத்ததிறற்புள்ளேற்
றரசியாவுமணிவண்ணனிவரும்புள்ளேற்றினையடர்ப்ப
வெரிவந்தமரினூற்றுதுமேகவண்ணன்றனைவீழ்த்தி
யிரியல்போகவதுநோக்கியிகழ்ந்துவீரனிவைசெய்வான். (சஎ)

அண்ணலேற்றுப்புள்ளரசுவீழ்ப்பவாவிதீர்ந்தான்போற் [றி
றண்ணந்துளவோன்கிடந்திடலுந் தக்கனெதிர்போய்ச்சிவனன்
நண்ணும்வேள்வியாற்றியதுநன்றுநன்றென்றிகழ்ந்துரையாத்
துண்ணென்றுட்டலம்வெருக்கொள்ளச்சுரிமென்குஞ்சிபற்றினன்.

சுரிமென்குஞ்சியொருகையாற்பற்றியவன்றன்றலைதுமிப்பான்
பருதிவடிவாளுறைகழிப்பப்பனிமென்கமலப்பொகுட்டுறையு
மருமாமறையோன்வந்தெய்திவீரற்போற்றியளியேற்காய்க்
கருணைகூர்ந்திங்கிவனுவிகடியேலென்னுமேல்வைதனில். (சகூ)

எண்டோண்முக்கணெம்பெருமானிமயமுயர்த்தவல்லியொடு
தொண்டார்குழுவினொடுமெய்தித்தக்கன்சென்னிதுமித்திடேல்
விண்டுமுதலாந்தேவர்களும்விளியாதளித்தியெனவுரைப்பத்
திண்டோள்வீரனுயர்தக்கன்பங்கிவிடுத்துச்செருவொழிந்தான்

வெயிலேற்றெழுந்தமுத்தலைவேல்வீரனமருயிரளிப்பத்[னெழுந்
துயிலேற்றவர்போல்முகில்வண்ணன் முதலாந்தேவர் துனைவி
தயிலேற்றுலத்தொடுஞ்சினவியமூதிற்பழகுமரிநெடுங்கண்
மயிலேற்றிருந்தவிடைப்பாகன்பாதமுறையின்வணங்கினர். ()

குடந்தம்பட்டுச்சூழ்போந்துகுழைந்துவழுத்திநின்பாத,ம
டைந்ததேவரிழைத்தபிழை பொறுத்தியென்னவழகொழுகுங்,
குடைந்தமணிச்செப்பெனவீங்குகதிர் மென்கொம்மைமுலைக்க
னிவாய், மடந்தைவேண்டமதிக்கன்னிமறையோனிதனைவழங்
குவான். (ருஉ)

அவுணர்செகுத்தசுடர்நேமியண்ணல்முதலோரிழைத்தபி
ழை, துவர்வாய்ப்பேதைநின்னருளாற்பொறுத்தோமென்னத்
தொழுதிறைஞ்சு, மூவணப்புள்ளேற்றுயர்பறவையுயிர்த்தோ

ன்முதலதேவர்களு, நவையற்றிடவின்னருள்பூத்துநாதனினிதி ன்விடையளித்தான். (ருங)

எரிகொப்புளிக்குமணிமவுலித்தக்கன்முகம்பார்த்தெம்பெ ருமா, னரிகொப்புளிக்குமதர்நெடுங்கணணங்கினருளாலெம துகணத், தொருவனுகிக்கற்பாந்தத்துறைதியென்னவரநல்கி, மருவும்வீரன்முதற்கணங்களோடுமறைந்துபோயினனுல்.(ரு)

பள்ளக்கமலவட்டவணைக்கடவுட்க்கன்முகநோக்கி
யெள்ளவிசன்றனைமறந்துநெடுமாலீசனெனுமவர்க
ளுள்ளிலொருவர்திருநெடுமாலுமைபோலீசனுயர்சத்தி
வெள்ளையறிவின்மாயோனையிகழிலீசன்வெகுண்டிடுமால். (ருரு)

தன்னையிகழ்தல்பொறுத்திடினுந்தனதிற்கிழத்திதனையிகழின்
மன்னுஞ்சிற்றமிகுமெவர்க்குமற்றுங்கதுபோல்மாயோனை
யுன்னிச்சிறிதேயிகழ்ந்திடினுமொறுக்குமீசனுதலாற்
கன்னித்துளவோனிறைவனெனப்பிரித்தோதிடுதல்கடன்றே

என்றுகூறிச்செழுங்கமலப்புத்தேளகலவீற்றுளைந்து, செ ன்றவண்டுபொறையுயிர்த்துச்செழுந்தோட்டகட்டினடைகிடக் கு, மன்றல்கமழுஞ்செழுங்கொன்றைத்தொடையோன்செய்ய மலரடியி, னென்றுமுள்ளத்தொடுந்தக்கன்பன்னுள்வழிபட்டு றைந்தனனுல். (ருஎ)

கொண்டசீற்றத்தொடுமுனிந்துததீசிவைதகுலமுனிவர்
மண்டுகலியனல்குரவின்மறையோராகியுடனித்துப்
புண்டோய்நரகத்தழுந்திமலர்ப்புத்தேளருளாலுளந்தெருண்டு
பண்டுபோலமுனிவராய்ப்பரமன்பாதம்பழிச்சினர். (ருஅ)

தக்கன்வேள்வியிவ்வாறுபுகன்றேன்தக்கன்முனமீன்ற
மக்கள்மரபீண்டுரைத்துமெனமகிவிணைமுனிவரர்க்கு
நக்கவயிரப்படைகடவுண்முதலாநாகத்திமையோற்கு
மைக்கார்நிறத்தமணிவண்ணன்மகிழ்விஞேடுமிவையுரைப்பான்

தக்கன்வேள்வியழித்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—சுசுo.

பதினுருவது

அந்தகாசுரன்சாரூபமடைந்தவத்தியாயம்.

தாளதாமரையினரசுவீற்றிருக்குமந்தணன்றக்கனைநோக்கி, மீளவுமுயிர்களளித்தியென்றுரைப்பவிதித்தவைமல் கிடாவத ன, லான்வழக்கநீண்டம்பலேத்தொழுகுமரிமதர்நெடுங்கணா

ஊமென், ரூளிணேதழுவிப்பெறுமகவல்லால்மல்கிடாதெனவு
ளந்துணிந்தான். (க)

மாரனேயழகுமறலியையிரலுங்கவர்ந்திடுமலேயுறழ்தடங்
தோள், வீரனப்பிரமனரிதினிற்பயந்த வேய்த்தடங்தோளசி
க்கினிதன், னேர்குடியிருந்துசுணங்குபூத்தலர்ந்தவிளமுலேயின்
னலம்பருகிப், போரகெழுதிறல்வேற்றக்கன்மென்குதலேப்புத
ல்வராயிரவரைப்பயந்தான். (உ)

ஆயிரமகவுநாரதன்மாயைப்படுகுழிதன்னில்வீழ்ந்தவிய,
வேய்மருள்பசுந்தோடசிக்கினியென்னும்வேற்றடங்கண்ணியோ
டாடி, மாயிருஞாலமுழுவதுநல்கமீட்டுநான்மறைப்யில்தக்க
ன், காயெரிகவிழ்க்கும்பூண்சுமந்தொல்குமறுபதுகன்னியர்ப்ப
யந்தான். (ங)

ஆங்கவர்தம்மிற்பதின்மரைத்தருமதேவதைக்களித்தனன
ருளா, னீங்கருமுவப்பிற்காசிபற்கொருபான்மூவரைநெறிவழா
தீந்தான், நீங்கதிர்த்திங்கட்கடவுளுக்கிருபானெழுவரைச்சிறப்
பொடுமளித்தான், கோங்கிளமுலேயார்நால்வரையரிட்டநேமி
கைகொள்கெனக்கொடுத்தான். (ச)

வருமுலேசுமந்துதேம்புநுண்மருங்குல்மதியுறழ்நித்திலமு
றுவ, லிருவரைவெகுபுத்திரற்கினிதளித்தானிருவரைக்கிரீச்சுர
ற்கீய்ந்தா, னரிமதர்நெடுங்கண்ணிருவரைமகிழ்பூத்தங்கிராவி
னுக்குவந்தளித்தான், பொருவருமிவர்தம்பெயருமற்றவர்தம்
புதல்வர்நாமமுமினிப்புகல்வாம். (ரு)

அருந்ததியிலம்பைசியாமிசங்கற்பையருண்மருத்துவதிந
ல்விசுவை, முருந்திளமுருவிற்சாத்தியைபானுமுகுர்த்தைநல்
வசுவெனத்தருமன், பொருந்தியமடவார்பெயரினிதுரைப்பார்
புணர்முலேவிசுவைதன்புதல்வர், திருந்தெழில்விசுவதேவர்சாத்
திமைதன்சிறுவர்சாத்தியரொனத்தெரிப்பார். (சு)

அருந்ததிமைந்தரருந்ததர்வசுவின்மைந்தரெண்வசுக்களெ
ன்றறைவார், பொருந்தியபானுமைந்தர்பானுக்கள்முகுர்த்தைபு
த்திரர்முகுர்த்தங்கள், திருந்தெழிலிலம்பைபுதல்வர்கோடான்
மாச்சியாமிதன்மைந்தர்பேர்தெரிக்கின், மருந்தினுமினியநாக
வீத்தியரென்றுரைப்பர்நான்மறைமுழுதுணர்ந்தோர். (எ)

குலிகமென்செப்புமுலேமருத்துவதிகுமரர்கோடிகள்பிருது
வியர, லிலகுசங்கற்பைமைந்தர்சங்கற்பரென்னநற்றருமதெய்வத
த்தி,னலகறுபுதல்வர்பெயரினிதுரைத்தேமாங்கவர்தம்மிலெண்
வசுக்கள், மலேவறுநாமம்யாவருமுணரமகிழ்வுடனினிதெடுத்
துரைப்பாம். (அ)

குங்குமமெழுகுங்குலவரைத்தடந்தோளாபன்வேற்றுருப னாற்சோமன், றிங்களங்கவிகைத்தரனுயரணினலன்வனமெய்த ளிர்பிரத்தியூடன், றுங்கவேற்பிரபாசனெனவெடுத்துரைப்பர் சொல்லுமாங்கவரிலாபன்றன், பங்கமில்புதல்வர்சிராந்தன்வை தாண்டிசிர்மனற்றனியெனப்பகர்வார். (கூ)

துருவன்மெய்ப்புதல்வன்பொருவில்சீர்க்காலன்சோமனற் சேயருள்வர்ச்சன், றனியல்மைந்தன்றிரவிணனணிலன்றன்ம கன்செவனுலகேத்தவருள்விக்கினுாதநேதியனலனன்சேய்தெ ய்வசேனுபதியாகும், வருபிரத்தியூடன்குழவிதேவலனும்பிரபா சன்சேய்விச்சுவகாமன். (க0)

அதிதிவேற்றடங்கட்டிதிதனுச்சிறந்தவலர்முலைக்கத்துரு வரிட்டை, மதர்விழிச்சுரசைசுரபிவார்கூந்தல்வினதைதாம்பி ரைவனப்பொழுகுங், கதிர்முலைக்குரோதவசைமுனியெரைபொ ற்கமலைநேர்தருமையென்றுரைக்கு, மெதிரறுமிவர்களொருபதி ன்மூவர்காசிபன்மனைவியரென்பார். (கக)

அள்ளிருள்பருகுமங்கிசன்தாதாவலர்கதிர்ப்பகனுயர்துவட் டா,வெள்ளொளிவிரிக்குமித்திரன்வருணனரியமான்விவச்சுவா னுலகந், தெள்ளருஞ்சவிதாவிசைகெழுபூடாவனஞ்சுமான்விட் டுணுவென்னத், தெள்ளியீண்டுரைத்தபன்னிருவரையுமதிதித ன்சிறுவரென்றுரைப்பார். (கஉ)

சாக்குசமன்வந்தரத்தினிற்றுட்டிதப்பெயரொடுஞ்சார்ந்த னரிவர்கள், வீக்கியகழற்கால்விறல்கெழுவடிவேல்விளங்குவை வச்சுதமனுவின், காக்குநாளதிதிபுதல்வராதலினுலதியப்பெ யரொடுங்களிப்பிற், போக்கருஞ்செல்வத்தொடுமிருவிசும்பிற் புங்கவரோத்தவாழ்கின்றார். (கந)

கருங்கடல்போழ்ந்துவல்லவர்குளித்தகதிர்மணிநித்திலந்தா ங்கி, மருங்குறேய்த்தகல்வான்போக்கறவீங்கும்வருமுலைத்திதி யெனுமடந்தை, யருந்தவம்புரியுங்காசிபனருளாலாடல்வேலி ரணியன்றனையும்,பருத்துவிழ்நெடுவேலிரணியாக்கனையும்விண் ணவர்வெருவுறப்பயந்தாள். (கச)

ஆங்கவர்தம்மின்மறங்கனிந்தொழுகுமாட்ல்வேலிரணிய னென்போன், வீங்கொளிவிரிக்கும்வெள்ளிநல்லருளால்விரிசி கையைந்தழனுப்பட், டேங்கமழ்கமலப்பொகுட்டில்வீற்றிருக் குந்தேவனைத்தனதுளத்திருத்தி, நீங்குமைம்புலனுமொருவழி படுத்திநினைவருமருந்தவம்புரிந்தான். (கரு)

மழகதிர்ப்பருதிதிங்களஞ்செல்வன்வானவர்யாவரும்விசு ம்பின், னுழிதாவினிப்புகைப்பட்டாம்போர்ப்பவுனுற்றருந்தவ

த்திலேநோக்கிப், பழமறைக்கிழவனுவப்பின்வந்தெய்திப்பரிவுடனவுணர்கோனுளத்தின், விழைவனயாவும்வெறுப்பவாங்களித்துவியப்பொடுங்கரந்துபோயினனுல். (௧௬)

ஆயிரந்தோட்டுக்கமலவீட்டுறையுமந்தணனேகியபின்னர்,பாய்புலிப்போத்தினுருகெழுசீற்றத்திரணியன்பண்ணவரியக்கர்,மாயிருஞாலம்புரிந்திடுமரசர்வழுத்தநீண்மணிமுடிபுனைந்து,காயும்வாளமரினென்னலர்ப்பொருதுகளிப்புடனினிதுவீற்றிருந்தான்

கலைமகள்கொம்மைமுலைபொருதிணிதோட்கட்வுடன்படைப்பினைமாற்றி, மலர்தலையுலகமுழுவதுந்தானேவருந்தறவெளிதினிற்படைக்குஞ், சிலைவிழுங்குயர்தோள்மாயனையகற்றிச்சிறப்புடனுலகெலாமளிக்கு, மலைமகள்பாகன்சிறிதுகையாறவாருயிர்துடைப்பினுந்துடைக்கும். (௧௭)

நனந்தலைச்சுடிகைவாளராபோத்தின்சுமைகெட்நளிகடற்போர்வை, புனைந்தபேருலக்மொருகையினேந்திப்பொறையிலதிதுவெனப்புகலுங், கனம்படிந்துண்ணும்பெரும்புறக்கடலைக்குளப்படிநீரொனக்கருது, மினங்கொளேழ்வரையும் பொற்கழங்கென்னவிண்ணிடையெறிந்தெதிர்பிடிக்கும். (௧௮)

மங்குல்வான்புதைக்குநள்ளிருள்விழுங்கும் வானவன்புரிதொழின்மாற்றி, யங்கண்மாஞாலத்தொழிற்றையாழியந்தேராதவனெனவெயில்விரிக்குங், கங்குல்வாய்க்கமலநறுமலர்குவியக்கடிகமழாம்பல்வாய்நெகிழத், திங்களிற்பசும்பொன்மானமீதிவர்ந்துதெண்ணிலாக்கதிர்விரித்துலவும். (௨0)

உலகமோர்மூன்றுந்தனதடிப்படுத்தி யுயர்விசும்பொருதணிபுரக்கு, மிலகொளிவயிரவாட்படையுழவன்முதலியவெண்டிசைப்பாலர், மலர்தடஞ்சினையகற்பகத்தருவுந்தேனுவுமணியுமீணிதியு, மலகிலகொணர்ந்துதொழவிட்ம்பெருமலகன்மணிமுன்றிலிற்றுயில்வார். (௨௧)

விண்ணகடுருவும்போகுயர்குடுமிமேருமால்வரைமுதற்கிரியுங், கண்ணகஞாலமுடுத்ததெண்டிரையகருங்கடல்முதலவேழ்கடலு, மண்ணலஞ்சேடன்முதலியசெஞ்சூட்டரவமுநதிகளுமபிறவும், பண்ணவருருவின்வினாவின்வந்தெய்தியவுணர்கோன்பணித்தனபுரியும். (௨௨)

இன்னணமுலகமுழுவதும்வெருவாவெரிகதிர்த்திகிரியொன்றுருட்டி, மின்னகுபருதிவாட்படையுழவன்வியனுலகளிக்குநாளதனிற், பொன்னவிர்திதலைபூந்தழகுறங்கும்புணர்முலைப்புலோமிசைகொழுநன், றன்னுளந்துயரவிண்ணவரோடுமலரயன்சார்வுழியடைந்தான். (௨௩)

அரசவேற்றெகினப்பாகனைப்பழிச்சியடற்கரும்புலிப்பகட்டனைய, விரணியனிழைக்குங்கொடுந்தொழிற்காற்றாதெய்தினமளித்தருளெனலும், விளைவளங்கொழிக்குங்கமலமென்பொகுட்டுவேதியனவரொடும்போந்து, திரைபொருகடலினறிதுயில்கூறுஞ்செங்கண்மாலுறையுழிச்சேர்ந்தான். (௨௪)

கதிர்மணிச்சுடிகைநிரைவிளக்கெடுப்பநாகணைமீதுகண்டுயிலும், ததைமலர்க்கன்னிப்பசுந்துழாய்முகிலைத்தாழ்சிறைவண்டுபாட்டயர, மதுமழைபிலிற்றுமலரயன்முதலோர்வழுத்தலுமலர்விழியலர்ந்து, புதியதெள்ளமுதுஞ்சுவையறப்புளிப்பப்பவளவாய்மலர்ந்திவைபுகல்வான். (௨௫)

எரிவிடங்கடைவாய்மடையுடைத்தொழுகுமெரிமணிச்சூட்டராநெற்றி, மருவுநீர்வலையமுதலியவுலகமனைத்தையும்வகுத்திடுமலரோய், முருகுகொப்புளிக்குங்கற்பகநீழற்புரந்தரன்முதலினோரோடும், விரவினீண்டடைந்ததென்கொலென்றுரைப்பவிளைமலர்ப்பண்ணவனுரைப்பான். (௨௬)

இளவெயில்விரிக்குந்தமனியப் போர்வையெழில்பெறவணிந்தநீல்வரைபோற், றுளையெயிற்றகல்வாய்ப்பாம்பணைப்புறத்தினறிதுயிலமர்ந்திருந்தோன்றால், தளர்வொடுமெலிந்தேமிரணியற்காற்றாதடைந்தனந்தஞ்சநீயல்லாற், களைகண்மற்றெவரோவானவர்க்கென்னக்கண்பனியுகுப்பநின்றுரைப்பான். (௨௭)

வெஞ்சினதறுகட்கடாக்களிறனையவிறல்கெழுமிரணியற்காற்றா, தஞ்சினிர்போலும்வெருவல் நீரென்னாவாய்பிழித்துவுடுத்தோங்கு, மஞ்சுழல்மேனித்திருமறுமார்பன்மலர்க்கரங்குவித்துவானவர்க, ளுஞ்சிடும்வண்ணமுளத்திடநினையாவொல்லையினிங்கிவைபுரிவான். (௨௮)

படைக்கடல்துடைக்குஞ்சுடர்ப்படைத்திகிரிபான்மதிபொருவுவெண்சங்க, மடற்கருங்கதைவாள்கொடுமரந்தாங்கும்போகுயரஞ்சனக்குன்றுங், கடுப்பவோர்புருடன்றனையினிதமைத்துக்கலுழன்மீதிவர்ந்துவிண்ணவர்க்கு, முடற்றருஞ்செருவிலிரணியனாவியுண்டிவண்வருகெனவுரைத்தான். (௨௯)

குருந்தொசித்தாயர்கோனிரைமேய்த்தகொண்டல்கூறலுங்கரங்குவித்துக், கருந்தலையுகுத்தமூளைவெண்சோறுந்தடிபடுகருணையுங்குழைத்து, விருந்தயர்காலம்வந்ததென்றுன்னிவெள்ளெயிற்றலகைபாட்டயரப், பருந்தினந்தொடரப்பகட்டெழின்மார்பனிரணியன்பதிமருங்கிறுத்தான். (௩0)

திறைகொணர்ந்தொன்னார்புகுவதையன்றித்தெவ்வொடுவெஞ்சினமுருக்க, வுறைகுநர்பெறாதம்ணிமதில்வாயிலப்புறத்

திளிலும்பர்சூழ்போதப், பறவைவேந்திவர்ந்தோர்முகிலுறழ்மேனிப்பண்ணவன்புகுந்தனனென்ன, வறைகழலவுணர்க்கிறையொடுமொற்றுமவுணன்வாய்புதைத்திவையறைந்தான். (ருக)

கேட்டலும்வடவைத்தழல்விழிபொழியக்கிளர்க்கரும்புவனமோரேழு, மூட்டரக்குண்டகுலிகமென்செப்பினொள்ளழல்பரந்தெனச்சிவப்பத், தோட்டிணைபணைத்துத்தமனியத்திழைத்தவண்டமென்சுவர்த்தலைசொரிய, வாட்டலைபுகையவாளெயிற்றதுக்கிமைந்தனைநோக்கியீதுரைப்பான். (ருஉ)

விரிந்தசெங்கதிரும்போக்கறநிவர்ந்தவெயிற்புறத்திருத்தவிண்ணவனைக், கரும்புகைச்செந்தீச்சுடர்விரிப்பகுவாய்க்கட்செவிநெற்றியிற்கிடந்த, விரும்புவியதனினுயர்பனிவிசும்பிற்பாதலத்தொளிப்பினுமெய்தி, வருந்தநீள்தடந்தோள்பாசத்திற்பிணித்துவல்லையிற்கொணர்மினென்றுரைத்தான். (ருரு)

கடியவெங்கூற்றங்கண்புதைத்தேங்கக்காவலன்விடைகொடுசிறுவர், குடவளைச்சங்கங்குமுறிநின்றார்ப்பக் கோளரிநூற்றினைச்செகுத்த, வடுசினத்திமிலேற்றிருபுனைமுரசங்குணில்பொருமார்ப்பொலிகறங்கக், கிடுகொடுசுழலும்வயவர்சூழ்போதக்கிளர்சமம்வேட்டெதிரெழுந்தார். (ருச)

கனைகடாஞ்செருக்கிக்கண்படைபெருதுபடர்முறச்செவியெறிகாற்றிற், பனையெனநீண்டதிரட்டக்கையிற்பாவடிநான்கினிள்வாலிற், புனைமணிபொதிந்தவெண்பிறைக்கோட்டிற்பொருநனைநூழிலாட்டயருஞ், சினவுநீள்வரைப்போத்தெண்ணாக்கச்சம்புவிமுதுகுளுக்கமுன்செல்ல. (ருரு)

இலகொளிப்பருதிநட்வுபைம்புரவியேழுநீள்வரையினையோர்காவலம்வருமுன்னநேமியங்கிரியைப்பாயிரங்கால்வலம்வருவ [ல்
னிலவுநாற்றன்னகவரிதாழ்ந்துலவுநெற்றியவிசும்பினிற்பறப்பவலைகடற்பிறந்தகலினவாம்புரவியாயிரங்கச்சமுன்னடப்ப. ()

கொடுமரம்விசைத்தகணையிலக்குறுமுன்னெல்லையிற்குறேசமுற்செல்ல, கடுநடைப்புரவியாயிரம்பூண்டகதிருமிழ்கிடுகுசூழ்கிடந்த, விடுசுடர்ப்பருதிதழும்புறநிவர்ந்தகூம்பினம்விண்ணிடைப்படர, வடுதிறல்வலவர்தூண்டுபொற்றடந்தேராறனைக்கச்சமுன்னேக. (ருஎ)

ஆயிரங்களத்தின்இந்திரன்புரங்கண்டணிவிலாவிறநகைபுரிந்தோர், பாய்புலிப்போத்தின்பாழிவாய்கிழித்துப்பற்பறித்தணிந்தவெந்திறலோர், மாயிருஞாலம்வலம்வரும்புகழோர்வாளினர்வேலினர்வில்லர், காயெரிகுளிரக்கனலுமிழ்கண்ணர்கச்சமெண்ணுயிரந்தொடர. (ருஅ)

ஆள்வழக்கறுத்துக்கூற்றிவோச்சினவியம்பவேத்தொழுகும் வாடபடங்க,வள்ளிருங்கூந்தற்கூத்தியரல்குற்றட்டெனவகன்று நீண்டுயர்ந்த, கோளரிப்போத்தோராயிரம்பிணித்தகுருமணிக் கொடுஞ்சியந்தடந்தேர், வாளெயிற்றகல்வாய்மறலிகண்புதைப் பமைந்தர்நால்வருங்கடிதிவர்ந்தார். (௩௯)

மழைமதக்களிறுவழங்கலினிடந்தமண்ணினால்மழகதிர்ம ருட்டு,மொழுகொளிமணிச்சூட்டுரகர்வீற்றிருக்குமூலகுகோன் மண்ணுலகாய,தெழுதருஞ்சேனுபராகம்விண்படர்ந்தாங்கிமை யவர்மேயபொன்னுலக, முழுதுமண்ணுலகமாகவேற்றடக்கை மொய்ம்பினர்வெருண்டெழுந்தனரால். (௪0)

கூந்தன்மான்றடங்தேர்கடாம்பொழிகளிறுகொய்புளைப்பு ரவிபண்ணுறுத்தி, யாய்ந்தநூல்வழியிற்றுனையங்கடலைச்சக்கர வியூகமாயமைத்து, பாந்தண்மேற்கிடந்தபுவிமுழுதுகுளுக்கவவு ணர்கோன்பயந்தவேற்புதல்வர், காந்தெறியுமிழும்படையுடை யமரர்கடற்படைவெருவுறகடந்தார். (௪௧)

கூற்றெனவுரறியவுணர்கோன்சேனைவருதலுங்குருதிநீர் வெள்ள,மூற்றிருந்தொழுகுநேமியந்தடக்கைவிண்ணவனும்பர் சேனையைபபோர், மாற்றருமகரயூகமாய்வகுத்துவாய்மடித்தெ யிறுதின்றமரி, னேற்றனனவுணர்வயிறெரிதவழவீருளுமிதயமு ங்கருக. (௪௨)

நறவுகொப்புளிக்கும்பசுந்துழாய்முகுந்தன்றனவர்சேனை யினட்வு, முறுவலிக்கலுழனிமைசுடுங்கடைக்கண்ணுமிழ்புகை வடவையுஞ்செந்தி,யெறிபடையவுணர்தானையங்கடலையொருங் குவாய்மடுத்துநின்றெரிப்பச், சிறையுடைத்தெரியும்வல்விசை வளியிற்களிற்றினந்திசைதிசைகவிழ. (௪௩)

கூர்நுதிவயிரத்தொட்டியின்வாய்த்ததுண்டவெம்படையி னுற்குத்தி, மாரிவீழ்கடத்ததறுகண்மால்யானைமத்தகம்போழ் ந்துயிர்குடித்துத், தார்வயப்புரவியொன்றனைக்கச்சம்வள்ளுகி ர்த்தாளினலள்ளி, யிருளுங்குடருமென்புநெக்கொழுகவொல் லேயினிருவிசும்பகலும். (௪௪)

மாலையங்குடரும்பிணங்குவெள்ளிலைவேலவுணர்தங்கடற்ப டைமறியக், காலவெஞ்சிலையின்குடுமிநாண்கொளுவிக்கல்லெசய் தின்டோளுறவாங்கி, யாலமும்வடவையழலும்வாயுமிழுங்கொ டுங்கணையளப்பிலசொரிந்தான், ஞாலமோரேழுமளந்தவன்விடு த்தநாகிளம்பருதிவாளுழுவன். (௪௫)

இரணியன்சேனைத்தலைவர்பைந்துளவோனெனும்வலிநோ க்கினர்வெருளா, வரணிபினெழுந்ததியப்பொலிபென்னக்கட்க

டையழற்பொழிசிதற, முரணுடைக்கலிறுகலினமான்றடந்தேர்
கூந்தன்மாமொய்ம்புறச்செலுத்திக், குருதிதோய்வெய்யபகழி
யோரொருவர்கோடியின்மேற்பொழிந்தார்த்தார். (௪௬)

நிழலொடுகறுவியெண்டிசைக்களிற்றினீன் மதச்சுவடு
தோய்ந்தோடி,யிழுமெனப்பாயுங்கவிழ்தலையருவிவரையினைவே
ழமென்றேற்று, முழைபுகுசீயமரிசரப்பாய்ந்துமுழங்குவெங்க
டாமலைதாண்டி, யழலுமிழ்திகிரிகலுழன்மேலத்தம்படுகதிரொள
வெறிந்தார்த்தார். (௪௭)

கண்ணழற்சிற்றத்தவுணரோர்மூவருலகினதுயிர்கவர்ந்து
ண்ண, விண்ணிடைப்பறந்துதிரியுமுப்புரத்தின்விரை செலற்க
லினமான்றடந்தே ரெண்ணிலதாண்டி நாற்றுவர்கொல்லிவேழு
மாங்கப்பணமுசுண்டி, யண்ணலம்புள்ளேற்றரசின்மேற்றூவிய
கல்வரைத்தோள்புடைத்தழன்றார். (௪௮)

தாழ்கடற்கிடங்குந்திடர்படத்தாக்கித்தரைபிதிர்த்தெரிக
விழ்குளம்பிற்,காழ்படுகலினமென்றுமிழ்விலாழிக்கடுவிசைக்கூ
ந்தன்மானடவிப், பாழியந்தடந்தோள்வெஞ்சினவவுணர்கலுழ
ன்மேலமர்க்கெதிர்படர்ந்த, சூழ்கதிர்மணிச்செஞ்சூட்டராவெ
ன்னத்தீமுகப்பகழிதூயினரால். (௪௯)

கடங்கவுளயிராவணத்திறற்கோடுங்கவந்தமாட்டயர்தருக
ளத்திற், பிடுங்கிநின்றுடுந்திறலினன்பகைவற்பெருமையாற்றின
வுறுதடந்தோண், மடங்கலேறனையசீற்றவெந்துப்பின்வடவை
கொப்புளிக்கும்வெங்கண்ணார், கொடுஞ்சிலைப்பொருநருருமிடி
த்தென்னக்குரவையிட்டடுகணைபொழிந்தார். (௫௦)

வாளமரமுவத்தவுணர்கோன்சேனைமனத்திறும்பூதுறவுடற்
றுந், தோள்வலிநோக்கிப்பசுந்துழாயலங்கறுயல்வருமுழவுறழ்
தோளா,னீளிருந்தடக்கைவரிவிறன்புடைப்பவெழுந்தநீடொ
லியினினண்ட, கோளகைவெடித்ததிடியுறுமாவிற்றுணவராருயி
ர்குறைந்தார். (௫௧)

புற்றுறையரவினைவ்முற்றுறைந்துவெஞ்சமம்பெருதுடல்
புழுங்குங், கொற்றவெம்பகழிவிடுத்தலுந்தமரக்கொய்யுளைக்கலி
னவாம்புரவி, விற்றிறலவுணர்புள்ளியல்மான்றேர்வெள்ளமோ
ராயிரங்களத்தி, னற்றநுண்பொடியிற்சிதர்ந்தனவலகையாவல
ங்கொட்டியாட்டயர. (௫௨)

தம்முடைக்கடலந்தானைவென்கொடுத்தல்காண்டலுந்தழ
ல்விழியிறைப்பக், தெம்முனைகடந்துபொருநரைப்பெருதுதிவ
வுகண்படுக்குநீள்புயத்த, ரம்மவோருமதுவலியழதுடைத்தென்
றண்டமும்வெடிபடநகைத்து, வம்மெனவிறைகூய்ப்பசுந்துழா
ய்முகிலைமைந்தர்கால்வருஞ்சமர்மலைந்தார். (௫௩)

வேறு.

குருதிவாயலகைவெய்யசூர்மகடுணங்கையிட்டெதிர்குனி
ப்பநீள், விரிதலைப்புவனமுழுதுமஞ்சுவரவிண்ணுளோர்விழிபு
தைப்பவெம், பருதியாயிரமெழுந்ததென்னவொளிபடரநான்
முகன்வடிக்கணை, பிரகலாதன்வரிவிற்குனித்தவுணர்பெட்புறு
ம்படிவிடுத்தனன். (௫௪)

கனைகருங்கடல்குடிப்பதண்டருயிர்கவர்வதேழ்கிரியின்மு
துகுற, முனைபடும்பொழுதினுருவியோடுவதுமுடைகமழ்ந்துதி
ரமுமிழ்வதோர், புனைதுழாய்முகிலளித்தவெங்கணையெடுத்து
வாள்விழிபுகைந்திட, வனுகிலாதனுயர்கொற்றவெஞ்சிலைகுனி
த்தழன்றெதிர்விடுத்தனன். (௫௫)

மங்குழ்குடுமிவரைநிகர்த்ததொருமணிகடேர்கடவியெ
திர்செலாச், சிங்கவேறெனவுருத்துவாளெயிறுதின்றுதீயுகவிழ்
த்துநீ, ளங்கண்மாநிலநடுங்கவெஞ்சிலைகுழைத்துநின்றசனியே
றெனச், சங்கிலாதனடன்முருகன்வெங்கணைவிடுத்துநின்றெதி
ர்தழங்கினான். (௫௬)

அலாயிதங்கொடுமுன்மேருமால்வரையையைந்துவிற்கிடை
யிழுத்திடுங், கிலாதன்வானவருமஞ்சுறுமலமர்கிட்டினார்கொ
லெனமுனிவொடும், விலாவிறும்படிநகைத்துவெற்பனையவிற்
குனித்துநிணமூழ்கிவெம், புலால்கமழ்ந்தெரியுமங்கிவெண்கணை
விடுத்துநின்றெதிர்புழுங்கினான். (௫௭)

அவுணர்கோனுதவுபுதல்வர்நால்வருமழன்றுவிட்டகணை
யாவையு, முவணமூர்தியைவலஞ்செய்தேகமிகவுள்ளமாழ்கிய
யர்வெய்தலும், புவனகோடிகளுமுந்திதந்தமுகில்தந்தைபூவை
நிறவணண்ணுங், கவனவெம்பரிகொடேர்கணான்குமொருகையி
னள்ளியெதிர்வீசினான். (௫௮)

ஓர்குடங்கையினிலிரணியன்புதல்வர்நால்வர்தம்மையுமொ
ருங்கெடுத், தார்வமோடெறிதல்கண்டுவானவர்களலர்சொரிந்
தடிபராவினார், போர்புரிந்திடுதலஞ்சிநீளிடைபுறங்கொடுத்திரி
யுமவுணர்போ, யாருமஞ்சுவரவமருடற்றுமசுரோசனுக்கிவைய
றைந்தனர். (௫௯)

சொற்றதீமொழிகள்செவிமுதற்றடவுமுன்னர்வாயிதழ்து
டித்திட, நெற்றிமீதுறவெழுந்திழிந்துமிகநெரிகொடும்புருவநட
மிடக், கொற்றவாளிநெடுமெஃகம்வெவ்வழல்கொளுத்திநின்
றெரியநகைசெயாப், பற்றலார்மவுலியிடறுசேவடிகள்பார்குழி
ப்பவெதிர்போயினான். (௬௦)

எங்குளன்கொலவனெங்குளன்கொலெனவசனியேறெனவு
ரப்பிநீள், துங்கமால்வரைகள்கால்விசைக்குளெறிகூறையோட

யமுருடார்ந்திட், மங்குருழ்குடுமிவரைநடந்ததெனவந்துவெங்க லுழனேடுமெச், சிங்கவேறனையகுருசில்யோசனையின்விழவுதை த்துநனிசீறினன். (௬௧)

கருடன்வீழவும்விழாமலூர்திகள்பயிற்றுகல்விதருமாட்சி யாற், புருடனக்கலுழனுடனெழுந்துபுவியுண்டமாலுமைழயினெ ய்துரு, விரணியன்றனதுசெய்திகூறுதலுமிறைவனெல்லையி னெழுந்துபோய், முரனின்வெய்யநரசிங்கமாகிவெளிமுக்குடை ந்திடமுழங்கினன். (௬௨)

அண்டகோளகையின்மவுலிசென்றறையவாடகக்கிரிகிகர்த் ததோ, ளெண்டிசாமுகமுசப்பவெண்ணிலவிலங்குவாளெயிறு பொழிதர, மண்டுவெஞ்சிகைவிரித்தழன்றுதெறுவடவைகட்க டைவழங்கிட், விண்டுபார்முதுகுளுக்கமானிடமடங்கல்வெங்க ளமடைந்ததே. (௬௩)

அடர்ந்தமானிடமடங்கறன்னையெதிரற்றவெற்றிபுனையவுண ர்கோன், றொடர்ந்துபற்றியிவண்வருகவென்றுதிறலிரணியாக்க னொடுசேர்த்தலும், படங்கொள்வாளரவின்முடியின்வைகுமுயர் பார்நெளித்திடநடந்துபோய், மடங்கலேறுடல்புதைப்பவெய் யதிறல்வாளிபற்பலவழங்கினன் (௬௪)

அங்கியின்பகழிவருணன்வாளியொளிரலர்கதிர்ப்பருதிவெ ஞ்சரந், திங்கள்சூடிகணைமுதலவாகவெதிர்சிந்துகின்றகணையா வையு, மங்குருழ்வரையின்மீதெறிந்தபசுமட்கலத்தின்முனைமடி தலும், வெங்கண்வாளவுணனெஞ்சம்விஞ்சுறவெரின்கொடுத் திரியல்போயினன். (௬௫)

இரணியாக்கனமரிற்றொலைந்துதனியிரிதல்கண்டுதிறலவுண ர்கோன், பிரகலாதனைவிளித்துவெஞ்சமருடற்றுகென்னவுயர் பெட்பொடும், வரைகொண்மார்பிடையணைத்துரைத்தலும்வண ங்கியங்கையினில்வாய்புதைத், தரசவென்னுரைமறுத்திடேலெ னவிரைந்துநன்கினுரையாடினன். (௬௬)

தாமரைத்தவிசினரசிருக்குமுயர்சதுமுகக்கடவுணேமியா, னீமமுற்றுபொடியாடியென்னுமொருமூவிருந்தவ மிழைத்து ளோர், காமுறற்குரியதாமனத்தினிடைகாணுதற்கரியபிரமமு ந், தீமுகத்தவரியேறுவெய்யசமர்செய்திடேலெனவிலக்கினன்.

விலக்கிநின்றுரைசெய்பிரகலாதனைவெகுண்டுதீயெழவிழி த்துமே, லலக்கணுற்றிடர்படர்க்கவுஞ்சிறுவனருளினேடைவை விளம்பலுங், குலத்தினுக்கிசைகலாதவெய்யமொழிகூறனீயெ னமுனிந்துபோய்க், கலக்கநீரமாமுகிரங்கவெழுகாருநாணுற முழங்கினன். (௬௮)

காணிலாதொருவர்கண்ணுறுமென்றவிறைகருதிலெங்குமுளனெனிலித், தூணிலேனுமுளனேசொலென்றுசுடுசொல்லினாட் வணின்மோதுரு, வாணிலேறியெழுந்துதூணினிடையவுணன்வெஞ்சினமடக்கவோர், தாளுவாமெனமுனின்றுவெஞ்சமர்துடங்கினான்றருமவேலையின். (௬௯)

நிரையுளைப்பொருசினத்தமாவிடமடங்கலாளியைநெருக்கிநீள், வரைபிதிர்ந்துவிழவாளமீதுறையுமுடுக்கள்சிந்தமதிதிரையுலாங், குரைகடற்புனலுடைந்தெழுந்துகரைகொன்றுசெல்லவிசைபோயபோ, திரணியப்பெயரினவுணன்வெற்பின்விழுமிடிநிகர்ப்பவெதிர்குத்தினான். (௭௰)

அத்தவெற்புறழ்பணைப்புயத்திடையழன்று வெய்யதிறல்வுணர்கோன், குந்தவாலமிசைமுறுக்கிமண்பகவடித்துவாளரிகொதித்தெழா, மைத்தகார்தவழுமேருவோடிகலுமருமம்விண்டுதிரம்வழியவோர், கைத்தலத்தினையெடுத்துரப்பியெரிகனல்புகைந்தெழவடித்ததே. (௭௧)

பற்கறித்திதழதுக்கிவெவ்வுரைபகர்ந்தழன்றுவிறலவுணர்கோன், வெற்பிரண்டனையதோள்புடைத்தெழவெகுண்டுமெய்யினொடுமெய்யுறப், பொற்குவட்டுவரைவெள்ளியங்கிரிபொருந்திவெஞ்சமம்விளைத்தென, மற்பிடித்தனன்மடங்கலோடெதிர்வரைப்புயங்களினெருக்கியே. (௭௨)

தோளொடுந்தனதுதோளொருக்கியடர் சுடுசினத்திறலினவுணனைத், தாளொடுந்தனதுதாள்பிணித்துவரைதரைவிழுந்ததெனவிழ்த்திமே, னீள்குறங்கிடைகிடத்திவன்பிடரிறுக்கிவெற்புறழுநெஞ்சகம், வாளுகிர்த்தலைமடுத்தகழ்ந்துகுடர்மாலையிட்டுடல்பிசைந்ததே. (௭௩)

விண்ணுளோர்மலர்பொழிந்துநெஞ்சகம்வியந்துநின்றடிபணிந்திட, வண்ணலேறனையவவுணர்கோனுயிரருந்தியாளரியினுருவொழித், தெண்ணரும்புவனம்யாவுநான்முகனொடினிதளிக்குமலருந்தியந், தண்ணறுந்துளவமாயன்வெண்டிரைதயங்குநாகணையின்மேவினான். (௭௪)

வேறு.

வாளமரமுவந்தன்னிலிரணியன்மறிந்தபின்னர்
நிருருந்தடக்கைப்பேழ்வாய்நிகாறுமிரணியாக்கற்
காளரியேறுபோலுமடல்கெழுபிரகலாதன்
கோளொடுநன்றுடேர்ந்துகுருமணிமவுலிவைத்தான். (௭௫)

குடங்கையினெடியவாட்கட் புலோமிசைகோனன்றெண்ணீர்த்
தடங்கடற்சுறவமூர்வோன்முதலியதலைவர்யாரு
மடைந்துநற்றேவல்கேட்பவறந்தலைமயங்கிமாழ்க
விடங்கெழுசீற்றத்துப்பின்விரனேழ்வலகுங்காத்தான். (௭௬)

இன்னணமொழுகுநாளிலவுணர்கோன்மகப்பேறின்றிப்
பொன்னவிர்கடுக்கைவேய்ந்தபுராரியைக்கங்குற்போது
மன்றுமன்பகலுமன்பின்வரன்முறைவழாதுபோற்றி
யன்னவனருளால்வெய்யவந்தகாசுரனையீன்றான். (எஎ)

இலகுபொற்கண்ணன்றேவரியக்கர்விஞ்சையர்மற்றுள்ள
வலகில்மன்பதைகள்யாருமலக்கணுற்றுவிசோர
மலர்தலையுலகம்யாவுங்கவர்ந்துவண்டிரைகுலாய
வொலிகடலகட்டினுள்புக்கொளித்தனனொளித்தலோடும். ()

அலர்தலையுலகம்பூத்தவந்தணன்முதலதேவர்
கொலைபழுத்தொழுகுநேமிபண்ணவர்க்குறுகியேத்திப்
பொலநிறக்கண்ணன்செய்திபுகலவுஞ்செங்கண்மாய
னிலகொளியெயிற்றவெள்ளையெறுழ்வலியேனமானான். (எகூ)

துறுமயிர்க்குறுத்தாட்செங்கட்டுயவெண்பன்றிமுன்னீர்
மறிகடன்முழங்கப்புக்குவன்றிறலவுணன்மார்பம்
பிறைமருப்பதனாலூன்றிப்பிளந்திருகூறுசெய்து
நிறைபெரும்புவியைமுன்போனிலைபெறநிறுவிற்றன்றே. (அ0)

வண்டுவீழ்ந்தரற்றவாடாப்புதுமலர்மாரிசிந்தி
யண்டரார்ப்பெடுத்துவாழ்த்தவரும்பிளமுறுவற்செய்ய
தொண்டைவாய்க்கமலைக்கேள்வன்றுறுமயிர்ப்பன்றியாகக்
கொண்டபேருருவநீங்கிக்குளைகடற்பள்ளிசேர்ந்தான். (அக)

முரண்மிகுமிரணியாக்கன்சமர்த்தலைமுடிந்தபின்னர்க்
கரைபொருகடலந்தானைகைதொழப்பிரகலாத
னிரைமணிமவுலிசூடிநேரலர்வணங்கியேத்த
வரியணைப்புரத்துவைகியவுணர்கோனாயினனே. (அஉ)

மணிநிறவண்ணன்செய்யமலரடிக்கன்புபூண்டு
துணிகதிர்க்குளிர்வெண்டிங்கட்சுடர்மணிக்கவிகைநீழற்
பணிமுடிக்கிடந்தவோரேழுலகமும்பரிக்குநாளிற்
றணிவருங்கேள்வியானோர்மறையவன்வந்துசார்ந்தான். (அங)

வந்தனன்மறையோன்றன்னைமதிக்கலனாகிமிக்க
வெந்திறற்பிரகலாதனிகழ்தலும்வெகுட்சியெய்திப்
பைந்துழாய்ப்படலைமாலைப்பண்ணவர்ப்பழிச்சும்வாற்று
லிந்திரத்திருவிற்செம்மாந்திருந்தனனிவனென்றெண்ணி. (அச)

மழகதிர்ப்பருதியன்னகவுத்துவங்கிடந்தமார்பி
னழலவிர்நேமிப்புத்தேட்கன்பிலனாகவென்ன
முழைபுகுசீயமன்னமொய்ம்புடைப்பிரகலாதன்
பிழைபடவைதுவேதமுனிவரன்பெயர்ந்துபோனான். (அரு)

மறைவிளையாடுஞ்சென்னாமுனிவரன்வைதவாற்றாற்
சிறுகருந்துளவோர்க்கன்புசெய்கலனாகிமேனா
ளுறுசினத்தவுணர்கொன்றபழம்பகையுள்ளத்தோர்ந்து
கறுவொடும்பிரகலாதன்கதழ்சினந்தலைக்கொண்டானே. (அசு)

வேற்கடற்றானையோடும்வெகுண்டனனெழுந்துபொங்கிப்
பாற்கடற்புறந்தினெய்திப்பைந்துழாய்க்கரியமாலை
யேற்றமர்புரிந்தானோர்யாண்டிமையவர்பருவந்தன்னிற்
கூற்றுயிர்விழுங்கும்வைவேற்கொலைத்தொழிற்பிரகலாதன். ()

வாளமரழுவத்தாற்றாதுடைந்தனனாகிமாயோன்
றாளிணைக்கன்புபூண்டுதணப்பருந்திருவினெய்தி
நீளிருமாயைசேருமெனவவைநீத்துவெய்ய
கோளுடைப்புலன்கள்செற்றுக்குறிக்கருந்தவத்தனானான்.(அஅ)

மறந்துறைநீத்துவெய்யமைந்துடைப்பிரகலாத
னறந்துறைபோயபின்னரடுதிறலவுணர்யாரும்
பெறற்கருஞ்செல்வமெய்தவந்தகாசுரற்குப்பேராச்
சிறப்பொடுமிருள்கூட்டுண்ணுங்கதிர்மணிமவுலிசேர்த்தார். ()

பழிபடுமவுணன்காக்குநாளினோர்பன்னீராண்டு
மழைவளங்குன்றவேதமுனிவரருள்ளமாழாந்
தழிபசிவருத்தநீடியகலிகைகொழுநன்வைகுந்
தழைபுனைகுறுங்காற்சாலைவிழைவொடுஞ்சென்றுசார்ந்தார். ()

சந்தனப்பொதும்பர்சூழுந்தாருகாவனத்தினின்றும்
வந்தமாமுனிவர்யார்க்குங்கவுதமன்மனைவியோடு
மந்தமில்பூசையாற்றியழிபசியகன்றுநாளுஞ்
சிந்தனைமகிழநல்லூண்சிறப்பொடுநல்கினானால். (கூக)

அகிறவழ்ந்துறங்குங்கூந்தலகலிகைக்கணவனில்லி
னகைபடுமமுதமென்னாநாடொருமடிசின்மாந்தித்
தகவொடுமுனிவர்யாருஞ்சார்ந்திடுநாளிற்றூய
முகில்வளஞ்சுரந்துமின்னிமொய்ம்மழைபொழிந்ததன்றே. ()

பன்னிருபருவத்துள்ளபசிப்பிணிவெருவியோட்
மின்னிவான்பொழிந்தெஞ்ஞான்றுமிகுவளஞ்சுரத்தலோடு
மன்னியமுனிவர்தத்தமனைமருங்கெய்தவெண்ணிப்
பொன்னிறக்கபிலைமாயைப்புணர்ப்பினாலமைத்துவிட்டார். ()

ஊதினும்பறக்குமென்னவுயர்நரம்பெழுந்துதோன்றற்
கோதறுந்தோனைநோக்கிக்கோதமன்பொலிவினோடுந்
தீதுறாதளித்துமென்னச்சென்றுமெய்தொட்டலுமாழ்கி
வேதனையுழந்துபாரின்வீழ்ந்துயிர்மறிந்ததன்றே. (கூச)

ஆனுயிரிறத்தலோடுங்கௌதமனழுங்கிமாழ்க
நான்மறைமுனிவர்யாருமாவுயிர்க்கடிந்தோரில்லிற்
றுணினிதருந்திற்றீது தலைப்படுமென்னவோதித்
தேனமர்பொதும்பர்சூழுந்தாருகாவனத்திற்சேர்ந்தார். (௯௫)

கோதமன்ஞானக்கண்ணாற்குறித்தினிதுணர்ந்துநோக்கி
மாதவரிழைத்ததீதென்றறிந்துநான்மறைவல்லோர்கள்
வேதநூலொழுக்கமாறிவிடையவனன்பிற்றீர்ந்து
தீதுறுநரகின்வீழவென்றுவெஞ்சினத்தின்வைதான். (௯௬)

வைதவெஞ்சாபந்தன்னால்மறைபயில்முனிவர்யாரு
மைதுணர்விழந்துவேதமுதலியவனைத்துநீங்கிச்
செய்தவவொழுக்கமாறித்தீவினைச்சிமிழ்ப்புண்டியாரு
மெய்துதற்கரிதாம்வெய்யவிடர்க்கடலதனில்வீழ்ந்தார். (௯௭)

தீவினையுழக்கும்வேதமுனிவரர்சிறுகட்பேழ்வாய்ப்
பாவடிப்பருமயானையுரித்தபண்ணவனுமந்தண்
பூவைமேனியனும்வைகுமவையினிற்புகுந்துபோற்றி
யோவருதுட்ற்றுசாபமொழியுமாறுரைக்கவென்றார். (௯௮)

வேறு.

நெற்றித்தழற்கட்பெரியோனுநேமியோனுமீங்கிவர்க
ளுற்றதீமைநியாயத்திற்பன்னாளுழப்பினல்லாது
முற்றாதென்றுளத்தெண்ணித்தீமைபயக்குமுன்னூல்கள்
சொற்றாரவணாமதிமருட்டமுனிவரவற்றிற்றுவக்குண்டார். ()

அன்னநூலின்வழிநூல்கள்முனிவரோதியஞ்ஞொய்தி
யின்னற்கடலுள்வீழ்ந்திட்லுமெம்மானத்னுக்குளமிரங்கிப்
பன்னுமறையோர்துயர்தீர்ப்பான்பலியேற்றுண்டல்தலைக்கீடாய்
முன்னுமுயர்தாருகவனத்தினன்னோர்சாலைமருங்கடைந்தான். ()

வெயில்வீற்றிருக்குங்கடவுண்மணிவிளங்குமார்பன்முதலமா
ரயில்வீற்றிருக்குமதர்நெடுங்கணம்மெல்லோதிச்சிலைப்புருவ
மயில்வீற்றிருக்குமஞ்சாயன்மகளிராகிவளாவுயிர்த்த
குயில்வீற்றிருக்குமந்தீஞ்சொற்கோதையேவற்றலைநின்றார். ()

ஆலமுயிர்க்குமுத்தலைவேலடுபோர்நந்தியமரரொடுங்
காலக்கனலைக்கடைகக்குங்கணங்கள்யாவுஞ்சூழ்போதப்
பால்வெண்ணீற்றினொளிபழுத்தபடிவத்தண்ணல் பங்குறையும்
ஞாலம்பூத்தசிற்றுதரத்தணங்கினேவல்நயந்திருந்தார். (௧0௨)

அனையகாலைவிசும்பளக்குமம்பொற்குடுமிமந்தரத்திற்,கனை
தெண்டிரைநீர்க்கடல்கிளர்ந்தாலென்னக்கலினமாப்பூண்ட, பு
னைபொற்கொடிஞ்சிமணிநெடுந்தேர்முதனாற்படைகள் புடைசூ
ழச், சினவுங்கொல்லேற்றடலரியிற்சென்றானந்தகாசுரனே. ()

அரில்பூத்தலர்ந்தவுள்ளத்தினவுணன்மட்மைமீதூர		[ன்
வரிபூத்தலர்ந்தமதர்நெடுங்கணணங்கைக்கவர்வான் வந்தனனெ
றெரிபூத்தலங்குமுத்தலைவேலேந்திநந்திமுதலானோர்
செருவேற்றெழுந்தார்வாட்டலைகள்புகையச்சாரிதிரிந்தனரால்.

கொல்லேற்றுரிவைபுரம்போர்த்தகடுகுகுறங்கின்மிசைதாக்கி, யெல்லேற்றொளிகான்றலங்குதிறல்வடிவாள்விதிராவிதழ்மடியா, மல்லேற்றுயர்ந்ததிணிதடந்தோட்கணங்கள்வெகுண்டுவானோக்கி, யல்லேற்றுடையவிருள்பழுத்தநிறத்தோர்நெஞ்சமமுன்றெழுந்தார். (கOரு)

எழுந்தார்வரிவினுண்கொளுவியெய்தார்வைதாரெரியுமழற், கொழுந்தாலிமைதியந்தி டவிழித்தார்குனித்தார்கொம்மைகொட்டினார், பிழிந்தார்கணங்களுடற்குருதிபில்லியோடவவைநோக்கி, யழிந்தார்நெஞ்சம்விண்ணோர்களவுணருரறியார்த்தெழுந்தார்

கூற்றும்வெருவிக்கண்புதைப்பக்குளிக்கும்வரிவிற்றிறல்மணிமா, னேற்றையுயர்த்தவிறனந்திகண்டாகன்னனிவர்முதலோர், சிற்றங்கதுவவாளெயிறுதின்றுங்கவுணர்படைவெள்ள, நூற்றின்மேலினொருனொடியிற்கொன்றார்நூழிலாட்டயர்ந்தார். ()

சூர்த்தநோக்கின்வாளவுணர்தொலைதல்காணுவவுணர்கோ
னூர்த்தானண்ட்முகடிடியவமரார்வயிற்றினெரிதவழப்		[ன்
பார்த்தானரவின்முடிக்கிடந்தவவனி நெளியப்பதம்பெயர்த்தா
வேர்த்தான்கணங்கடமையள்ளியண்டச்சுவரின்விட்டெறிந்தான்

கணங்களுடைந்துபுறங்கொடுப்பக்காயாமேனித்திருநெடுமா
லணங்குநோய்செய்வரிநெடுங்கட்சத்தியொருநூறமைத்துவிட்
டிணங்கொள்வடிவேலந்தகப்பேரவுணன்றன்னைநிகர்வோனைத்
துணங்கையயர்ந்துபேய்க்கணங்குள்ளமலைதொனவிடுத்தான்.

விடுத்தவோராயிரமவுணர்விளியநந்திமுதற்கணங்க, ளடுத்தவிண்டுசத்திகள்வந்தடர்த்துவாகைபுனைந்திடலும், கடுத்தாழ்மிடற்றெங்கண்ணுதலோன்கணங்கட்காற்று துடைந்துபுறங், கொடுத்தானுலகமொருமூன்றுங்கொலைசூழந்தகாசுரனே. ()

அன்னகாலைமுனிவரர்களமருமுயர்தாருகவனத்திற்
பன்னிராண்டுநல்லருளிற்பலியேற்றுலவிவார்சடையிற்
பின்னற்றிரைவான்புனற்கங்கைமுடித்தபெம்மான்பிறைதவழும்
பொன்னங்குடுமிமந்தரமால்வரையின்கிழைவிற்போந்தனனால்.

அருவிமதவெங்கவுட்கலுழிவேழமுகன்வானகட்ணவுங்
குருகுபெயர்குன்டறவெறிந்தகுமரனடுபோர்விறல்நந்தி
செருவெங்கோலத்தலங்கிலைவேறிரிக்குங்காலவயிரவன்வெம்
பருதிவடிவேற்கணங்களொடும்பரமன்பாதம்பணிந்தனரால். ()

கொங்குகமழுமலர்ப்பொகுட்டிலுறையுங் கோதில்மறைக்கிழவ
னங்கண்விசும்புபொதுநீக்கியளிப்போன்வெய்யதழற்கடவுள்
வெங்கட்கூற்றஞ்சுறவுயர்த்தவெள்வேல்வருணன்முதற்றேவர்
திங்கட்குழவிவனைந்தசடைத்தேவின்கமலத்தாள்பணிந்தார். ()

பணிந்தகுமரர்தனையெடுத்தாங்குச்சிமோந்துபரிவினெடும்
வணங்குமமரருளங்களிப்பமகிழ்வினேக்கிமறைக்கிழவ
னணங்குமூரக்கங்கணத்தையேந்தவள்ளகைக்கிறைவழுத்தக்
கணங்கொள்மணிகூரிருடுருவிக்கதிர்செய்கோயிலுள்புகுந்தான்

கனைகொன்மிரங்குங்கருங்கடலினஞ்சுமமிழ்தாங்கடையுயிர்க்கும்
பொருவேனெடுங்கணரமகளிர்பொன்னங்கவரிபுடையிரட்ட
நிைவாலுலேயபைங்கண்ணபுலவுகமழும்நீளெயிற்ற
வரிமாச்சுமந்தமலரணையினண்ணல்செம்மாந்திருந்தனனால். ()

இமையாக்கருங்கண்முலைதாங்கியிடுகுமிடைபோயுள்வாங்க
வமையார்தடந்தோள்வளைபுலம்பவம்பொற்சிலம்புகிடந்தலற
வுமையாளோடும்பெண்ணுருவம்வாய்ந்ததிருமாலுவந்தெய்தித்
தமரக்கடலின்விடமயின்றதலைவனடியிற்றாழ்ந்தனனால். (கககூ)

வேறு.

நாணொடுமெருத்தங்கோட்டிநகைமுகம்விருந்துநல்கி
மாணிழையுருவினின்றமாயனையுமையினேடுங்
காணவரத்தனதுசெம்பொற்கவானிடையிருத்திநீங்கா
வேணவாவோடும்புல்லிமேதகவிருந்தானன்றே. (ககள)

திரும்றுமார்பனேடுமுமையொடுஞ்சிறந்துதோன்று
மரியணைப்புறத்துவைகுமண்ணலைவணங்கியேத்தி
யெரியுமிழ்தறுகணந்தகாசுரனிழைத்தவெல்லாங்
குருதிதோய்வயிரவொள்வாளிந்திரன்கூறினனே. (ககஅ)

மாயனுண்டளித்தநூறுசத்தியும்வணங்கியேத்தித்
தூயநியாரைமற்றுனிடமருங்கதனில்தோன்று
மாயிழையெவள்கொலுன்றன்வலப்புறத்தழகுபூத்த
சேயிழையார்கொலென்னத்திங்களஞ்சடையோன்கூறும். ()

தத்துவங்கடந்துநின்றதனிப்பொருளாகிமேலாய்
சித்தினிலறிவதாகித்தெரிவரும்பிரமமாகி
பத்திமையோடுந்தம்மைத்தம்முளேபார்க்குந்தூய
முத்தர்நல்விதயநீங்காமுழுப்பொருள்யாமேயாமால். (கஉ0)

உலகெலாமீன்றுங்காவல்புரிந்துமீட்டொடுக்குகின்ற
வலகிலாவிச்சைக்கென்றுங்காரணமாகியொன்று
யிலகுபேரொளியாயென்றனிடமருங்கொளிக்குஞ்செல்வி
நிலவுநான்மறையுமேற்றுங்கிரிசிற்சத்தியாமால். (கஉக)

வலப்புறமதனில்மேயவண்டுகெண்படுக்குங்கூந்த
லுலப்பருங்காலாதீதவுருவமாயொளியாயொன்றாய்க்
கலப்பிலவ்வியத்தந்தோன்றுங்காரணமாகியானாய்
நலத்தகுணக்குன்றாகுநாரணனாகுமென்றே. (௧௨௨)

பூந்துழாய்ப்படலைமாலைப்பூவைவண்ணனையுஞ்செய்ய
மாந்தளிர்கவறுமேனிமலைமகடனையும்வேறா
யோர்ந்துரைப்போரொன்னன்பிற்றீர்ந்தொருவராக
வாய்ந்துணர்கிற்போரொன்றனன்பரிற்சிறந்தாரன்றே. (௧௨௩)

அலத்தகம்விளர்ப்பச்செந்தசீறடியம்மெல்லோதிச்
சிலைக்கரும்புருவவாட்கணுமையைவண்டேறல்கக்கு
மலர்த்துழாயலங்கற்பூவைவண்ணனையிகழ்ந்துளோர்க
ளுலப்பிலாவெரிவாய்த்தீயநரகிடையுழப்பரன்றே. (௧௨௪)

என்றுவெண்டிங்கள்வேணியிறையவனிசைத்தலோடுங்
குன்றெறிவயிரவொள்வாள்குருசிலைமுதலதேவர்
மன்றனன்மலர்கடூவிவலஞ்செய்துவணங்கியேத்தி
யொன்றுபேருணர்வினோடுமீங்கிவையுரைக்கலுற்றார். (௧௨௫)

முருங்கெரிபுரத்தினிட்டமுதல்வனின்மேலுந்தெண்ணீர்க்
கருங்கடல்புகையவிற்கால்குனித்திட்டகடவுண்மேலு
மருந்தினுமினியதீஞ்சொன்மலைமகண்மேலுமன்பு
பொருந்திடவேண்டுமென்னப்பொலிவொடுநல்கினானே. ()

வேறு..

முத்தம்பருமிந்திடைதேய்த்துமுகிழ்த்துவிங்கி
யத்தம்பொருவுமணிமென்முலையம்மெலோதி
மைத்தங்குவேற்கட்டிருநாயகனாதிவானோர்
தத்தம்பதிக்குவிடைகொண்டெழுமேலவைதன்னில். (௧௨௭)

நிழல்கொண்டுதெவ்வருயிர்மேயுநிணங்கள்கொட்ட
வழல்வெஞ்சினத்தகளிறாயிரவெள்ளமேக
மழவெங்கதிரினிழறும்முகொடிஞ்சிமான்றேர்
குழுமிப்புவியோரிடமின்றெனக்குன்றினேக. (௧௨௮)

திரைமுற்றமுந்நீரிடைத்தெள்ளமுத்தோடும்வங்க
பரிமித்தகூந்தற்பரியாயிரவள்ளமேக
வுருமுக்குரலர்வடிவாளருலங்கொடோளர்
வெருவற்றமள்ளர்பதினாயிரவெள்ளமேக. (௧௨௯)

உடல்வெஞ்சினத்தவ்வயவெம்புலிப்போத்தினோடா
வடிவெந்திறல்வாளவுணர்க்கிறையாயவெய்யோன்
கடன்மொண்டெழுந்தமுகில்போற்கடற்றானையார்ப்ப
மிடல்கொண்டுபோதந்துயர்மந்தரவெற்படைந்தான். (௧௩0)

வேறு.

ஆலவிடமிகர்வெஞ்சினத்திறலந்தகாசுரனடுசமங்
கோலிவருவதையொற்றர்கூறவெகுண்டுகுன்றவிலந்தனன்
காலபயிரவனந்தியாதிகணங்கள்சூழ்வரவண்டுழாய்
மாலினோடுமிகலவுணர்வெருவரமலைதியென்றுவழங்கினான். ()

என்றுகூறலுமுத்தலைப்படையெம்பிரானடிகைதொழா
வென்றிமால்விடைமீதிவர்ந்துவெகுண்டுவிண்ணவர்கைதொழக்
கன்றுநெஞ்சினர்கர்லவேலினார்கனல்கவிழ்த்தெரிகண்ணினர்
வன்றிறற்கணநாதர்சூழ்வரவயிரவன்கடிதேகினான். (௧௫௨)

இலகுமுத்தலைவேல்திரித்திமிலேறுயர்த்தருணந்தியுங் . [லு
கொலைபழுத்தழனேமிகொண்டுயர்கலுழன்மேல்வரு கொண்ட
மலையினைச்சிறைவீழவெட்டியவச்சிரப்படையண்ணலு
மலைகடற்படையவுணர்நெஞ்சகமலமரத்தனியேகினார். (௧௫௩)

வெண்ணிணத்தொளிபூசியாருயிர்மென்றுமென்றுவிழுங்குபோ
ரண்ணலங்கதைசுற்றியந்தகனந்தகாசுரனெதிர்செலக்
கண்ணழற்பொறிசிந்தவெந்திறலளகையாளிகடற்படை
யெண்ணிடைப்புவிசிறிதும்வேறிடமின்றெனத்தனிசென்றதே.

இரலையூர்தியுமேழகத்திவர்வெய்யசெந்தழலிறைவனுங்
குருதியாடிநிணப்புலால்கமழ்கொற்றவாளுடைநிருதியுந்
திரைகொழித்தெரிவிரிகடற்கிறையாயதிண்டிறல்வருணனு
முருவமால்விடையூர்தியுந்திறலவுணரோடமருடற்றினார். ()

வின்முகத்தெறிபகழிதோமரம்வேலெழுப்படைகப்பணங்
கொன்னுனைத்திரிசூலவேல்கதைகுலிசம்வாள்மழுநேமிகொண்
டின்னலிற்றிமையோர்நடுக்குறவந்தகாசுரனெதிர்தலும் [தான்
பொன்னகர்க்கிறைபுருவ வில்லொடுவிற்குனித்தடு போர்செய்

கார்வரைப்படர்சிறையரிந்திருகைபடிந்ததிறத்தினாற்
கூர்நுனிக்குலிசாயுதப்படைகொண்டுதிண்டிறலமரர்கோன்
வார்மதப்புனலருவிதாழ்தருசூழிமால்வரைகோடிவெம் [னான்
போர்முகத்திடைகணங்கள்வெவ்வழல்பொழிய நூழில்படுத்தி

கனைகுரற்பொருபகடுகைத்திருக்கண்ணழற் பொறிகதுவவெஞ்
சினமிகுத்துயரண்டகோளகையிடியநின்றுசிரித்துலா
யனல்கவிழ்த்தெரிகதைகொடந்தகாசுரன்மெய்யினிற்
புனைமணிக்கவசந்தெறிப்பவடித்துநின்றுபுழுங்கினான். (௧௫௮)

அளகைகாவலனிரலையூர்தியழற்றுமங்கியரக்கர்கோ
னளிபுனற்கிறையீசனல்லுருநண்ணுவோர்பதினொருவருங்
களியுடற்றிறலவுணனென்னுமோர்கனமுகட்டிடைதூங்குவான்
துளிமுகிற்குலமேழுநின்றுசொரிந்தெனக்கணைதூவினார். ()

ஞாயிறின்றிருதோள்புடைத்தெதிர்துள்ளிவெய்தி னெதிர்ந்திடு
தேயிர்காளினியென்முன்வந்துயிரொங்கனுய்குவீர்தீர்கலா
வாவியோடுநும்முடல்பிழிந்துகுடித்தலாதயல்விடுவனோ[தான்
போவதெவ்வழியின்மினென்றறைகூய் வெகுண்டடுபோர்செய்

அந்தகாசுரனெதிர்புகுந்துயிராவணத்தின்மருப்பொசித்
திந்திரன்றடமார்பகந்தனிலென்பொடித்திடமோதுரு
வெந்திறற்பகடேர்திவெவ்வழல்விழிபிதுங்கவடித்துவெஞ்
செந்தழற்கிறைகவுணரித்துசிதர்ந்துவீழ்தரவெற்றினான். ()

நிருதிவாய்வழிகுருதிகக்கநெரித்துவாளமர்புரிதரும்
வருணன்மார்பிலுதைத்தழன்றளகேசனோடமலைந்துபோ
ரிரலையூர்திவணங்கவஞ்சலையேகுகென்றருளீசனல் [ன்.
லுருவுளோர்பதினொருவருஞ் செருவொழியவாகைபுனைந்தன

விண்ணுளோர்படைவெருவியோடுதல்கண்டுநெஞ்சம்வெ
குண்டுபோ, ரண்ணலங்கதைநேமிவாள்சிலைசங்கமங்கையமைத்
திடுந், தண்ணறுந்துளவப்பசுந்தொடைதாழ்தருந்திருமார்பின
ன்.பண்ணமைந்துயர்கலுழன்வன்பிடர்பருதிநானுறவேறினான்

ஊழிவாயதிருருமெனத்திறலுரகரஞ்சிவெருக்கொளப்
பாழியங்கிரிபுவியிடிந்தெழுபாதலத்தினொளிப்பமென்
மோழைபட்டுயரண்டகோளகைமுற்றும்விண்டுசிதர்ந்திட்
வாழிமாமுகிலவுணர்நெஞ்சகமஞ்சவால்வளையூதினான். (௧௪௪)

கொண்டல்மேனிமுகுந்தன்வெஞ்சமர்கோலி வந்தமைக
ண்ணுறுத், திண்டிறற்பரிகோடிபூட்டியதேரின்மீதிலிவர்ந்து
போ, யெண்டிசைக்கரிசெவிடுபட்டுயர்மால்வரைக்குலமிடியநீ,
ளண்டமுற்றுமுடைந்துபாழ்படவவுணர் கோன்வளையூதினான்,

வேறு.

புழைபடுதடக்கைவேழம்பொங்குளைப்புரவிநூறு
மிழைபகவெறியுமொள்வாளொருவலிவயவர்தம்மை
யிழைவொடுமமரர்மாதர்விருந்தெதிர்கொள்ளவில்வாய்க்
கொழுநுசிப்பகழிமாரிகொண்டல்பெய்திட்டவன்றே. (௧௪௫)

மலைதுணிந்தென்னவெம்போர்வாரணங்கவிழ்ந்தமுன்னி
ரலைமறிந்தென்னப்பொங்குமலங்குளைப்புரவிவீழ்ந்த
தலைகுயிந்திரவிமான்றேர்தடுத்தனகலுழப்பாகன்
சிலைகுனிந்தளவில்வெம்பேய்நிணச்சுவைதெவிட்டிற்றன்றே. ()

ஆரொடுங்குழிசிச்சில்லியற்றனகூம்புவீழ்ந்த
பார்துகளாகசெம்பொற்கிடுகொடும்பரிகள்வீழ்ந்த
லூர்தருபாகர்சென்னியுருண்டனகொடிகளற்ற
தேரணிசிதர்ந்துவீழ்ந்ததீமுகக்கணைகள்பாய. (௧௪௮)

ஊனுறுபெழுகிநெய்த்தோரொழுகுவெண்பிறைக்கோடற்ற
கானமதக்கலுழிதூங்குங்கவுளொடுந்தலைகளற்ற
பானிறக்கவரிதூங்கும்படர்முறச்செவிகளற்ற
நீனிறக்குன்றமென்னக்கிடந்தனநெடுங்கைவேழம். (கசகூ)

கணிகையர்மனத்திற்செல்லுங்கடுவிசைக்கால்களற்ற
துணிகதிர்ப்பருமமற்றசுடர்மணிக்கவினமற்ற
வணிமணித்தாரினோடுமலங்குழையெருத்தமற்ற
மணிநிறமாமைபூத்தவாம்பரியனைத்துமாதோ. (கரு0)

சேட்டிளம்பருதிமார்பந்திறந்தனமலைகளேய்க்குந்
தோட்டுணைதுணிந்தசெம்பொற்சுடர்மணிக்கவசம்வீழ்ந்த
தாட்டுணையற்றவெய்யதானவரொவர்க்கும்வீழும்
பாட்டளித்துளவோன்வில்வாய்ப்படைநெடும்பகழிபாய. ()

ஆங்கதுகாண்டலோடுமாரழல்கதுவநோக்கி
வீங்கியவெகுளிதூண்டவெந்திறலவுணர்கோமான்
வாங்கருங்கொடியவின்னாண்டெறித்தலும்வானோர்மாழ்கி
யேங்கினர்புவிகளேழுமிடைந்தனவுடைந்ததண்டம். (கரு௨)

திருகுவெஞ்சினத்தினோடுஞ்செங்கண்மால்முன்னரெய்தி
யிரணியனிரணியாக்கனிகலவிந்தாவிசோர
முரணொடுங்கொன்றவுன்னைமுடித்தரும்பழிகொள்ளேனே
லரனுடைவரிவிலென்றுமமரிடையெடுக்கலேனால். (கருங)

என்றுரையாடிவேதன்மனத்தினாலிழைத்தநீசன்
குன்றவில்லனையதாற்றுலிரணியன்குழைத்துநாணி
னொன்றிடவேற்றெறுதென்றெழுந்திடும்வலத்ததாய
வென்றியஞ்சிலைநாணேற்றிவெடிபடமுழங்கியார்த்தான். (கருச)

குடுமியம்பறவைக்குன்றமுருவிடக்குமரன்முன்ன
மடுதிறல்வடிவேறன்ஞலெறிந்திடுமாற்றல்கேளாய்
படர்தருமேருவெற்பையுருவிடப்பணித்தவாளி
கடையுகமுடிவினூழிக்கனலெனக்கனன்றுவிட்டான். (கரு[illegible])

மரகதக்குன்றமன்னமணிநிறவண்ணன்மேனி
விரைவுறவெடுத்தவாளிமெய்தனிற்பவளமேனிப்
புரமெரிசெய்தமுக்கட்புனிதனிற்றோன்றநோக்கிக்
கரையழிகடலந்தானையவுணர்கோன்களித்தல்செய்தான். ()

ஆங்கவன்களிப்பநோனுதஞ்சனவண்ணன்சீறிப்
பாங்கமைபரியுந்தேரும்பதாதியுநூழிலாட்டித்
தீங்குருவெடுத்தாலன்னவந்தகாசுரன்றிண்டோளி
லோங்குபொற்கவசம்வீழவொருகணைவிடுத்துநக்கான். (கருஎ)

கார்முகம்வளைக்கிச்செம்பொற்கலன்செய்தோள் கழியவ்வாங்கிப்
பார்முழுதளந்தமாயன்விடுத்தவெம்பகழியாவுங்
கூர்நுதிமழுங்கிவீழக்கொழுங்கதிர்ப்பருதியேய்க்கும்
போர்கெழுதிகிரிமன்னும்வாளமும்புகையவிட்டான். (கருஅ)

விட்டவெந்திகிரிக்கூற்றமின்னெடுமுருமுக்கான்று
பட்டனனவுணனென்னத்தானவர்பகைத்துமாழ்க
வெட்டுடனிரண்டுதிக்கும்வென்றவனகலத்தெய்திக்
கட்டழலிறைக்கும்வல்வாய்மடிந்தொளிகரந்ததன்றே. (சருகூ)

அவ்விலைவயிரவொள்வாளவுணர்கோன்வெகுளிபொங்க
வெள்ளெரிதவழ்ந்துநெய்த்தோரொழுகிவெம்புலவுநாறும்
புள்ளவாம்பகழியொன்றுவிடுத்தலும்பூவைமேனி
வள்ளல்பைந்துளவத்தண்டார்மருமம்போழ்ந்தேகிற்றன்றே.()

நீனிறக்குன்றில்வீழுங்குலிகநீளருவியென்ன
மானிறந்துறந்துநெய்த்தோர்சொரிதலுமயக்கமெய்தப்
பானிறவெருத்தச்செங்கட்பறவைவேந்தரியினோடுந்
தீநிறப்படைகொள்காலவயிரவன்மருங்குசேர்ந்தான். (க்சாக)

திருமறுமார்பன்வெய்யகணைபடுமயக்கந்தீர்ந்து
குருதிகொப்புளிக்குவைவேலந்தகாசுரனைக்கோற
லரிதரிதெம்மனோர்கட்கையநீபாணியாது
விரைவினிற்சேறியன்றேவுலகெலாம்விழுங்குமன்னோன். ()

வேறு.

என்னலும்விழிசெந்தீயெரிதரவிட்டெழ்கா
மின்னகுமழுவெம்போர்விறலுடையடனந்தி
பன்னகமுடிசாயப்படிநெளிதரமண்டிக்
கன்னவில்திரடிண்டோட்கணமயல்வரவந்தான். (கசாங)

வந்தடுதழல்காலுமலையுறழ்கதையொன்றிற்
கந்தடுவயவெம்போரக்கயர்த்துரகத்தோ
டந்தமிலகன்வேள்விக்கமைதருமறமள்ளர்
செந்தசையுகமோதித்திசைசெவிடுறநக்கான். (கசாச)

கரியொடுகரியெற்றிக்கால்விசையொடுதாவும்
பரியொடுபரியெற்றிப்பார்கிழிதரவோடித்
திரிதருசுட்ராழித்தேரொடுதேரொற்றிப்
பொருசமரிடையொன்னார்புறமிடவெதிர்சென்றான். (கசாரு)

சென்றெதிர்கொடியோனைப்புவியொடுதிசையாவும்
வென்றவனுயர்திண்டோள்விசயமுமடுபோரு
நன்றுகொல்நன்றென்னாநகையொடுமுனையாடி
மின்றிகழ்கணையந்தார்மார்பினிலுறவிட்டான். (கசாசா)

காய்கணைபடவெம்பிக்கதழெரிவிழிசிந்தப்
பாய்பரியொடுதேரும்பாகனுமுடன்வீழ
வாய்பிழியலர்கொன்றைத்தார்புனைபவனந்தி
தீயுமிழ்கதையொன்றால்மோதினனெரிசிந்த. (௧௬௭)

தன்னுடையுயர்நேமித்தொழிலொழிதரலோடு
மொன்னலருயிர்மேயாநுழைபுககளிவெள்கு
மின்னடுசுடர்வேலான்மேதினிமிசைகுப்புற்
றன்னவன்மணிமார்பத்தெற்றினனதிர்வுற்றான். (௧௬௮)

வேறு.

நந்திதன்னயர்வுநோக்கிநாகிளம்பருதிகோடி
யந்தரத்தெழுந்ததென்னவவிர்மணிக்கதிர்கள்வீசச்
சந்திரமவுலியண்டகோளகைசென்றுதாக்கக்
கந்தடுதிரடோட்காலவயிரவன்கடிதின்வந்தான். (௧௬௯)

ஆலமும்வடவைத்தீயுங்கொப்புளித்தவுணர்நெய்த்தோர்
வேலையிற்குளித்துத்தெவ்வர்வெண்ணிணச்சேறுபூசிக்
காலன்வெம்பசியுறாதுகளித்துயிர்விருந்துநல்குஞ்
சூலவேறிருவித்தந்தகாசுரற்றொடர்ந்துசென்றான். (௧௭0)

கந்தடுபுழைக்கைநால்வாய்க்கடாக்களிற்றொருத்தல்போலு
மந்தகாசுரன்றன்மார்பத்தழிபெருங்குருதிகால
விந்திரன்முதலதேவரிறைஞ்சினர்தொழுதுவாழ்த்தக்
கொந்தழற்சூலவேலாற்குத்திமீதேந்தினானே. (௧௭௧)

பொருப்புறழ்சூலவேலின்வைநுதிபுதையக்குத்தி
யருக்கன்மண்டலமட்டேந்தியந்தகாசுரன்றன்மேனி
கருக்கலும்பாவநீங்கிக்கண்ணுதற்கடவுடன்னை
யிருக்கினைமுதலவாயமறைகளாலேத்தலுற்றான். (௧௭௨)

விருப்பொடுவெறுப்புநீங்கிவெறுவெளியாகித்தோன்றுந்
திருக்கிளர்பவளக்குன்றேதிருமறுமார்பன்காணா
மருக்கிளர்கமலப்பொற்றாள்மாணிக்கமலையேபோற்றி
பொருப்புவிற்குழையவாங்கும்புனிதனேபோற்றிபோற்றி. ()

பானலங்கண்ணிபங்காபல்லுயிர்த்தொகைகள்யாவு
மீனமொன்றின்றியீனுந்தந்தையேயென்பதெல்லாம்
வானவரொருவர்க்கேயோமறத்தொழில்பூண்டபுன்மைத்
தானவர்க்கில்லைகொல்லோதாணுவேபோற்றிபோற்றி. (௧௭௪)

எனுமறைத்துதிகள்கேளாவெம்பிரான்மகிழ்ச்சிகூர்ந்து
முனைபடுசூலவைவேல்முகட்டினின்றிறக்கியேத்து
மனையவன்மேனிதைவந்தருட்கடைக்கண்ணினோக்கித்
தனதுபேருருவம்யார்க்குந்தலைமையும்வழங்கினானே. (௧௭௫)

நெற்றியங்கண்ணுந்தூயநீற்றொளிபழுத்தமெய்யு
மொற்றைவெண்குழையுநீலகண்டமுமொளிர்வெண்டிங்கட்
கற்றையஞ்சடையுந்தாங்கிக்கடவுளரிறைஞ்சியேத்தப்
பற்றலர்புரந்தீமூட்டும்பண்ணவன்வடிவமானான். (கஎசு)

தன்னுடையுருவம்யார்க்குந்தலைமையுமவண்ணெய்த
வின்னருள்புரிந்துநல்குமெந்தைதன்கருணைநோக்கிக்
கன்னியந்துளவோனுதிக்கடவுளர்மகிழ்ச்சிபொங்கப்
பன்மலர்தூவியெண்டோட்பரமனைவணங்கிநின்றார். (கஎஎ)

வணங்கியதேவரோடுவகிர்மதிக்கண்ணிசூடி
யணங்கரவசைத்தமுக்கணவுணர்கோனோடுமற்றைக்
கணங்கடம்மோடுங்காலவயிரவன்கடிதிற்போந்து
சுணங்கணிமுலையாள்பங்கன்சேவடிதொழுதுநின்றான். (கஎஅ)

அந்தகாசுரன்வெற்பீன்றவுமையொடுமரனைப்போற்றி
யெந்தையான்செய்ததிமையாவையும்பொறுத்தியென்ன
மைந்துடைவடிவேற்காலவயிரவனளித்தவண்ணா
நந்தியின்கணங்கட்கெல்லாம்நாதனாயிருத்தியென்றான். (கஎகூ)

மணிநிறவண்ணன்செங்கேழ்மலரயன்மகவானாதி
பணிதருந்தேவர்யாருந்தத்தமபதியினேகத்
துணிகதிர்த்திங்கட்கண்ணியமுதமூற்றிருக்குந்தூய
வணிகிளர்சடிலத்தெந்தைவிடையினிதளித்திட்டானே. (கஅ0)

தண்டுழாய்முகுந்தன்வெய்யசத்திகளூற்றினோடுந்
திண்டிறல்வடிவேற்காலவயிரவர்சிறந்தநாகர்
மண்டுபாதலத்தினெய்துகென்றலும்வணங்கியேத்திக்
கொண்டபேருவகையோடுமவ்வுழிக்குறுகினானே. (கஅக)

பாதலத்தெய்துங்காலவயிரவன்பருதியேய்க்குந்
தீதறுமணிச்செஞ்சூட்டுச்சேவல்வாலுனையச்செங்கட்
கோதில்வாளரியேறொன்றாய்க்கூடியவுருவைநோக்கி
மேதகவியந்துவிண்டுசத்திகள்விளம்புமன்றே. (கஅஉ)

ஒருருவாயதன்மையென்கொல்மற்றுரைக்கவென்னச்
சேரிராசதத்தால்வேதனாகுவஞ்சிறந்தசாத்தாற்
கார்நிறவண்ணனாவேங்கருதருந்தாமதத்தால்
மாரனைவிழியாற்செற்றவார்சடைப்புனிதனாவேம். (கஅங)

ஆதலினிலங்குசோதிமூவருமொருவராகத்
தீதறவுணர்ந்தோர்வெய்யநரகிடைச்சென்றுசேரார்
மாதவக்கிழமைபூண்டுவருத்துமைம்புலன்கள்செற்ற
மூதறிவுடையோர்சேருமுத்திவீடடைவர்மாதோ. (கஅச)

நீவிருங்கொலைகளாதிதீவினையெவையுநீத்து
மூவருமொருவராகிமுழுப்பொருளாகிநிற்குங்
காவியங்கண்ணிபங்கன்கழலிணைக்கன்புபூண்டு
மேவரிதாயமுத்திவீட்டின்பமடைதிரன்றே. (க௫)

என்னலும்விண்டுசத்திநாறுமங்கினிதினேத்திப்
பொன்னவிர்கடுக்கைசூடும்புரிசடைப்புனிதற்போற்றிப்
பன்னருமறைகள்பாடிப்பாழொருமூன்றுநீத்துத்
துன்னரும்பிரமந்தன்னிற்றோய்ந்தவென்றுரைத்தானன்றே. ().

அந்தகாசூரன்சாருபமடைந்தவத்தியாயமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—௬௬.

பதினேழாவது

மாவலிமூவடிமண்ணளித்தவத்தியாயம்.

அந்தகாசுரன்கடவுளாயபி
னெந்தையக்குலத்திறைவர்யாரென்
முந்தைவாசவன்முனிவன்கேட்டலும்
பைந்துழாய்முடிப்பரமனோதுவான். (க)

பீனமற்புயப்பிரகலாதனு
மானவெற்றிவேல்மன்னவன்றரும்
வேனல்வேணிகர்வில்விரோசனன்
ருனவர்க்கெலாந்தலைவனாயினான். (உ)

எறுழ்வலிப்பகட்டிந்திரன்றனைத்
திறைகவர்ந்துவெஞ்செறுநர்கைதொழ
முறையின்மிக்கபேருலகமூன்றுநல்
லறனிழுக்குறாதரசுசெய்யுநாள். (௩)

மராமரங்களூடுருவவாங்குவிற்
பராவரும்புகழ்ப்பரமனேவலிற்
றராதலந்தொழுஞ்சனற்குமாரன்வில்
விரோசனன்றனதருகுமேவினான். (௪)

வந்தமாதவற்றொழுதுவான்சிறப்
பந்தமில்லனவருளிநல்குரு
வெந்தைவந்தவாறென்கொலென்னலு
முந்தைமாதவன்மொழிதன்மேயினான். (௫)

அரியவெந்திறலவுணர்தம்மிலித்
தருமசிந்தையானுயதன்மையாற்
கருணையானினைக்காணவந்தனன்
மருவலார்தொழுமானவேலினாய். (௬)

தருமம்யாவினுந்தலைமையாகிய
வரியஞானமின்றருளுவாயெனக்
கருவினெய்துறுமுத்திகைதருந்
தெருள்செய்நுண்பொருடெளியவோதினன். (௭)

சனற்குமாரனன்மொழியிற்றனெனு
மனத்தையாகியாமலமிறந்துயி
ரனைத்துமாகிவேறற்றுநின்றிடு
முனிக்குழாங்தொழுமுத்தனாயினன். (அ)

மாவலிப்பெயர்மைந்தன்மாநிலங்
காவல்செய்கெனக்கதிர்செய்மாமுடி
யோவிலின்பொடுஞ்சூட்டியுண்மையான்
றவில்மாதவத்தலைமையெய்தினன். (௯)

தவறில்கேள்வியான்றமமார்பினன்
கவனவெம்பரிக்காலைமாவலி
யவுணர்தங்குலந்தழையவாழிசூழ்
புவனம்யாவையும்புரவுபூண்டனன். (௧௦)

அன்னகாலையிலவுணர்சூழ்வரப்
பொன்னகர்க்கிறைபோரினேற்றலுங்
கன்னவின்றதோளவுணர்காவலன்
வென்னிடத்திறல்வில்வணக்கினன். (௧௧)

இந்திராணிதன்னிழைகொள்வெம்முலை
மந்தராசலம்பொருதமார்பனு
னொந்துவென்கொடுத்தோடிநோன்மைசா
லுந்திபூத்துளானுலகமெய்தினன். (௧௨)

எய்திமாவலியிடரிழைத்திடுஞ்
செய்தியாவையுஞ்செப்புமேல்வையிற்
பையராவணைப்பரமனைப்பணிந்
தையநுண்ணிடையதிதிகூறுவாள். (௧௩)

வெந்திறற்படைத்தகுவர்வேரொடுஞ்
சிந்திமாயவெஞ்செருவிழைத்திடப்
பைந்துழாய்நறும்படலைமார்பவென்
மைந்தனாகநீவருகென்றோதினாள். (௧௪)

மைந்தனாகயாம்வருதுமன்னைநீ
சிந்தைசெய்திடேல்செல்கென்றோதிமற்
றிந்திரன்றனைவெருவல்நீயெனா
வந்தில்கல்விடையருளினானரோ. (௧௫)

வேறு.

சால்புறுதன்னகர்சார்ந்தபின்றயங்
கோலியகாசிபனருளின்கொள்கையால்
மாலினைத்தரித்தலின்மடந்தையவ்வயி
ருலிலையென்பதற்கையமில்லையே. (கசு)

அரிமதர்நெடுங்கணுளதிதியன்பொடுங்
கரியமைம்முகில்செழுங்கமலம்பூத்தன
திருமறுமார்பனைச்சிறந்தநாளினன்
மருவலர்வெருக்கொளவயிறுவாய்த்தனள். (கஎ)

ஆடினருவகையாலமரரச்சமுற்
றோடினரவுணர்களும்பர்நாயகன்
பாடினனருமறைகணவர்பாயலி
னூடியமகளிருமுவந்துபுல்லினர். (கஅ)

விண்ணவர்சரணியக்கர்விஞ்சைய
ரண்ணலங்கமலவீட்டுறையுமந்தண
னண்ணியக்காசிபன்மனையிறுதனை
யெண்ணறுந்துதிகளாலேத்தினரே. (கசு)

நறவுகொப்புளித்தலர்நளினகாதலன்
பிறையெனவளர்ந்திடுநாளிற்பெட்பொடு
மறைபயில்காசிபனென்னுமாதவன்
முறையினின்முப்புரிநூலுஞ்சாத்தினன். (உ0)

கரியபூந்திங்களிற்கதிரொறித்தொளிர்
திருமருமார்பினன்றிருந்துகேள்வியோர்
பரவுறமேம்படும்பரத்துவாசன்பா
லருமறைமுதலியவனைத்துமோதினன். (உக)

புள்ளிடைத்தட்பமுன்பொருந்தியேற்பினு
முள்ளவைமறுத்திடாதுதவுகின்றதோர்
வள்ளன்மைபூண்டருமகங்களாற்றினன்
றெள்ளிதின்மாவலியென்னுஞ்செல்வனே. (உஉ)

பாவவேரறுத்திடும்பரத்துவாசன
தேவலினுலகெலாமின்றவெம்பிரான்
மூவடிமண்விழைந்திரப்பமொய்கழன்
மாவலிமகம்புரிசாலைமன்னினன். (உங)

தாமரைக்கண்ணினன்சடிலன்றண்டினன்
வாமனவுருவினன்வந்துதோன்றிய
பூமகள்கொழுநனைப்புகழ்ந்துதானவர்
கோமகன்வந்ததென்கூறுவாயென்றான். (உச)

என்னலுமகிழ்சிறந்தெனதுதாளினன்
மன்னவமூவடிமண்வழங்கெனப்
பொன்னவிர்கரகநீரோடும்பொற்புறழ்
கன்னவிற்றேளினன்களிப்பினல்கினன். (உரு)

நன்றுபொற்புகளெனநாகர்நாட்டொடு
மண்ணகம்பொதிந்ததோர்பதமற்றோர்பதம்
விண்ணகங்கடந்துபோய்விரிஞ்சனுடிரீஇ
யொண்ணிறவண்டமுமுடையமீண்டதே. (உசா)

செங்கண்மால்மலர்ப்பதஞ்சென்றமோழையிற்
றுங்கவண்டத்தினைச்சூழ்ந்தநீள்கடற்
பொங்கவிழ்ந்தொழுகியபுனலையன்றுகொல்
கங்கையென்றின்னமுங்கழறுகின்றதே. (உஎ)

இறையவனற்புதவியற்கைநன்னுரு
மறைபயின்மாவலிவணங்கியேத்தலும்
விறல்கெழுவானவர்துதிப்பமீட்டுமக்
குறளுருவாயினன்கொண்டல்மேனியான். (உஅ)

மாவலிவாண்முகநோக்கிமாயவ
னேவறுநான்முகன்பகலொடுங்குநாட்
சேவடிதருவலவ்வளவுஞ்சீர்கெழு
தாவில்பாதலத்தினிற்சார்கென்றேதினன். (உகூ)

திருத்தயலுலகமோர்மூன்றுஞ்செவ்வனே
யருத்தியினிந்திரற்கன்பினேடளித்
திருக்கினன்மறையவரேத்திவாழ்த்துற
மருக்கமழ்துளவினன்மறைந்துபோயினன். (௩0)

கோவெடுத்தருந்தியகுருதிவேலுடை
மாவலிபாதலத்தெய்திவார்சடைத்
தேவினதடிமலர்சிந்தைசெய்திருந்
தோவறுந்தவத்தினுக்கொருவனுயினன். (௩௧)

மாவலிமூவடிமண்ணளித்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கூஎஎ.

பதினெட்டாவது

வாணாசுரன்சாரூபமடைந்தவத்தியாயம்.

என்றுமொழியவிவன்மகனும்வாணன்கதையுங்காசிபன்றன்
மன்னுமற்றைமனைவியர்தம்மைந்தர்திறனும்புகலென்னப்
பொன்னுடளிக்கும்புத்தேளும்பொருவின்மகதியாழ்முனியுஞ்
சென்னிதாழ்க்துவினவுதலுந்திருமாலருளினுரைசெய்வான்.

கொலைசூழ்வடிவேல்மாவலிதன்குமரரொருநூற்றுவர்தம்மிற்
றலைமைபூண்டமுதன்மைந்தன்றறுகண்வாணனெனுந்தக்கோ
னுலகமுழுதுந்தனித்திகிரியுருட்டிச்செங்கோலினிதோச்சி
மலையின்சிறகர்விழவெறிந்தவலியோனரசுமாற்றினான். (௨)

பொன்னந்தவிசினரசிருக்கையிழந்துகயிலைப்பொருப்பெய்திப்
பின்னற்றிரைதாழ்கங்கைமுடிப்பெம்மான்பாதம்பணிந்தேத்தி
மின்னுங்கதிர்வேற்றிறல்வாணன்விண்ணுடனைத்துமெரியூட்டி[ன்
யென்னதாணைவிலக்கினனென்றியம்பவிறையோனிவைசெய்வா

கொங்குகமழநறவுயிர்க்குங்குழங்கன்மாலைநறுங்கூந்தன்
மங்கைபாகனொருகணையால்வாணனகரந்தீமடுப்பப்
பொங்குமுவகையலதுள்ளம்புலம்புறாதினம்பழிச்சித் [தான்
தங்கண்மரபினவுணர்தொழுமிலிங்கந்தலைமேற் கொண்டெழுந்

அவுணர்பெருமானுளம்பிணித்தவன்பின்வீக்கந்தனைநோக்கி
யுவகைகூர்ந்துமற்றவன்றன்னுடலந்தடவந்தருள்பூத்து
நவையில்கணங்களனைத்தினுக்குநாதனாகவரமீய்ந்தான்
றவளநீற்றினொளிபழுத்தவெண்டோண்முக்கட்டனிமுதலே. ()

தேன்றோய்த்தெடுத்தகனிப்பவளமனைய செவ்வாய்த்திதியந்த, ஊன்றோய்த்தெடுத்தவேலவுணர்காதையுரைத்தோமிதுமிற்கச், சான்றோர்புகழுங்காசிபன்றன்மனையாட்டியரிற்றனுவென்னும், வான்றோய்மருங்கின்முதன்மாதர்மைந்தர்தம்மைவகுத்துரைப்பாம். (௬)

ஆரஞ்சுமந்தமுலைமன்றற்றனுவின்மைந்தரயில்வேற்கைத்
தாரன்கபிலன்சொற்பானுத்தழல்வெஞ்சுடர்வேல்விடபருவாய்
போரின்வெருவாச்சம்பரன் வெம்புலிப்போத்தன்னசங்கரனெ
றோருந்திறலோரோராறுவருளர்மற்றவர்சீருரைப்பரிதே. [ன்

அரசுவிழுங்கிவாய்காய்ந்தவயில்வேனெடுங்கண்பணைத்தோட்
சுரசைபுதல்வர்பகுறலையசற்பர்பலர்வீழ்சுரும்பூதர்
விளைசெய்மலர்ப்பைந்தருநீழல்விண்ணோர்மகிழமேதக்க
திருவீற்றிருக்குமாநகரிற்சிறப்பினோடுந்திரிந்திடுவார். (௮)

அழகஞ்சுமக்கலாற்றுமலலறுமருங்குலரிட்டையெனுங், கழைகொன்றொளிரும்பசுநெடுந்தோட் கதிர்வேற்கண்ணியருள் மைந்தர், மழவெங்கதிருஞ்செவிமழுங்கவயங்குமொளிகொப்புளித்தலரு, மிழைசேர்தடந்தோட்கந்திருவரீரைஞ்ஞூற்றின்மேலுளரால். (௯)

கடைந்தமணிச்செப்பெனப்பணைத்த கதிர்மென்முலைக்கத்துருவென்னு, மடந்தையனந்தன்முதனாகம்வயிறுவாய்த்தாளாங்கவைகள், துடர்ந்துபுகல்காப்பியக்கவிகளின்னுமுரைப்பத்

தொலையாத, மடங்காச்செல்வங்கடங்கோங்கியுயர்பாதலத்தின்
வைகியவே. (க0)

தாமச்செப்பினடிபரந்தகரளமுலைத்தாம்பிரையென்பாள்
காமர்க்கிளியையமென்பருந்தைக்கங்குற்றிரியும்பசாசினத்தை
தூமக்குழற்கட்சிறைக்கழுகைத்தோகைமயிலையோதிமத்தை
யேமம்பயக்குங்காசிபன்றனருளாலினிதினீன்றனளால். (கக)

பங்கப்பழனத்திடைப்பிறவாப்பதுமமலரி னெழில்கவர்ந்
து, கொங்குகமழுமதிமுகத்துச்சுரபியென்னுங் குவிமுலையாள்,
ளங்களுலகமினிதேத்துமானினேடுமழல்பொருவுஞ், செங்க
ட்கயவாய்மோட்டெருமையனைத்துஞ்சிறப்பினீன்றனளால். ()

வெல்வேற்றடங்கண்ணிராவதியென்றுரைக்கும்வேய்த்தோ
ட்கொடியன்றாள், புல்லுமரனும்பூங்கொடியுமானும்பொலிவி
னினிதுயிர்த்தாள், முல்லைக்கற்பினெதிரில்லாக்கிரீடையென்னு
மொய்குழலாள், மல்லிற்பொலிதோளியக்கர்தமையினிதின்வயி
றுவாய்த்தனளால். (கங)

கனியுமமுதுஞ்செழுந்தேனுங்கலந்தாலன்னவந்தீஞ்சொ
ன், முனியென்றுரைப்பாள்கோங்கரும்பின் முகிழ்த்துத்தரளவ
டந்தாங்கிப், பனிதோய்விசும்புகுடிவாங்கப்பணைத்துவீங்குகொ
ம்மைமுலை, யனமென்னடையவரம்பையரையமுதமுயிர்த்தா
லெனவுயிர்த்தாள். (கச)

குனிவார்புருவக்குரோதவசைகொடியவரக்கர்தமைப்பயந்தாள்
வினதையருணெடுங்கலுழற்பயந்தாளோங்குவிமன்முக்கட்
கனியைப்போற்றியவருனளாற்கதிரோற்கருணன்சாரதியாய்த்
தனிசென்றனன்வெங்கலுழனுமாலூர்தியாகிச்சார்ந்தனனால். ()

பொருவற்றொளிருங்காசிபன்றன்புதல்வர்செய்தியிவைதிங்கட்
கிருபத்தேழுமனைவியருமோரோர்மகவையீன்றனரா
லருவப்பொருளைத்தனியுணருமரிட்டநேமிபதினறுவ
ருருவிற்கநங்கனிகளொன்னுமைந்தர்தம்மையினிதுயிர்த்தான். ()

மின்போற்புதல்வர்நால்வர்தமைவிளங்கும்வெகுபுத்திரனீன்றா
ளன்பார்மைந்தர்நால்வர்தமையருள்சேரங்கிராவீன்றா [வையுங்
ளின்பம்பயக்குங்கிரீச்சுவப்பேர் முனிவன்றெய்வப்படையெ
தன்பேருலகமுழுதேத்தத்தவஞ்செய்தினிதினீன்றனனால். ()

மீட்டுமுயர்காசிபமுனிவன்றவங்களாற்றிவிழைவினெடுந்
தாட்டாமரைத்தார்வர்ச்சனையுஞ்சிதன்றனையுந்தானுயிர்த்தான்
கோட்டமில்லாவர்ச்சமுனிகுலவுஞ்சிர்த்தியிப்பியனை
நாட்டங்களிப்பயித்துருவன்றன்னையினிதினல்கினான். (கஅ)

பொருவில்சீர்த்தியிப்பியனும்புகலற்கரியரிப்பியரா
முருவமைந்தர்தமைப்பயந்தானுலவாக்கேள்விநயித்துருவன்
மருவுஞ்சவனர்மகட்புணர்ந்துமறைதேர்குண்டபாயியரை
யரிதிற்பயந்தான்றேவலனைக்கருத்தையின்றுளெனவறைந்தான்

வானுசூரன்சாரூபமடைந்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கூகூசு.

பத்தொன்பதாவது

புலத்தியன்மரபுரைத்தவத்தியாயம்.

கருணைப்பெருங்கடலாங்காசிபன்மாமைந்தர்கறைதீரமரப
னைத்துங்கட்டுரைத்தாய்மற்றை, யருள்சேர்புலத்தியன்றன்மை
ந்தர்மரபோதென்றந்தீந்தொடைமகதியாழ்முனியுஞ்செய்ய, ம
ருவூற்றிருந்தொழுகுபைந்தருவினீழல்வானோர்பணிந்தேத்தும்
வாசவனுங்கேட்பத், திருவீற்றிருந்தரசுசெய்யுமணிமார்பிற்செ
ங்கணெடுமொயன்செப்பிடுவனன்றே. (க)

திசைதிரிந்ததொல்பெருஞ்சீர்த்திரணவிந்துப்பயந்தசேயி
ழையையருந்தவத்துப்புலத்தியன்றீவேட்டு, வசையறுசீர்விச்
சிரவாவென்னுமறைமுனியைமகிழ்வினளித்தனனவனும்வாண
மிளிருந்தடங்க,ணிசைபெறுபுட்போத்கடையைக்காலையைக்கே
கசியையெழிற்றேவவன்னினியையினியமணஞ்செய்தா, னைச்சு
யுறுமற்றவர்தம்மிலமுதனையதீஞ்சொலத்தேவவன்னினியாங்க
ளகேசற்பயந்தாள். (உ)

கிடைபொருவும்பவளவிதழ்க்கேகசியென்றுரைப்பாள்கிளர்
திசைகளெட்டினையும்வென்றவிராவணனை, யடல்புனையுந்திற்ற
கும்பகருணனை வீடணனையம்பலைக்கும்வரி நெடுங்கட்சூர்ப்பன
கைதனையு, முடல்சினத்தவிண்ணவர்கள்வெருவவினிதீன்றுளு
ரைத்திடுபுட்போத்கடைவெங்கரனைமகோதரனை, மிடல்கெழு
மாரீசனைப்பிரகத்தன்றன்னைவிளம்பியகும்பனசியைவிழைவினு
யிர்த்தனளால். (ங)

தேனருஞ்சுருளோதிக்காலையெனுமடந்தைத்திரிசிராத்தூ
ட்ணன்வித்தியுச்சிவுகன்றன்னை,யானதபேரன்பினீன்றனள்மெ
ய்த்தவத்தினருமறைதேர்புலகமுனிவிலங்கினம்பேய்பூதம், கா
னருஞ்செம்மணிச்சுட்டரவினங்களின்றுன்கருதரும் வைவச்சு
தமன்மந்திரத்திற்கிருதி, யூன்வாடநோற்றதலான்மைந்தரையீ
ன்றிலன்மற்றுவப்போடுமரீசியுயர்காசிபனையுயிர்த்தான். (ச)

பிருகுமுனிபார்க்கவனையின்றனனந்திரிப்பேர்ப்பெரியோ
னுமுயர்பிரதிப்பிரபர்மூவரையாங், கருளினளித்தனன்றக்னரு

வியவச்சுவனையகவிடம்பார்த்தேகுகெனநாரதனேவுதலால், விரிபுவனமனைத்திலும்போய்வியந்தனனாதலினால் விளரியாழ்முனிவரனை விளம்பருஞ்சீர்த்தக்கன், பொருவருநன்மகவில்லாதிருத்தியெனச்சாபம்புகன்றனன்மற்றுங்கவனும்புதல்வரிலாதொழிந்தான். (ரு)

வான்றவத்தால்வசிட்டமுனிக்கருந்ததிசத்தியனை வயிறுவாய்த்தனள்சத்திபராசரனையீன்று, ஞன்றமறைப்பராசனும்வியாதனையீன்றனன்மற்றுங்கவனுஞ்சுகன்றன்னையளித்தனனலவனும், தோன்றுபுகழ்க்கிட்டிணன்பூதிச்சிரவாச்சம்புத்தோமிஸ்கவுரவன்பிரபுவெனுமைந்தர்தமையுஞ்,சான்றவருங்கற்புடையகிர்த்திமதியென்னுந்தரளநகைமயிலினையுமளித்தன னென்றுரைத்தான். (சு)

புலத்தியன்மரபுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்௭௦௨.

இருபதாவது

சூரியன்மரபுரைத்தவத்தியாயம்.

முனிவரர்தம்மரபனைத்தும்வழாதுகேட்டேமூசியளிபடிந்தாட்முகைவாய்விண்டு, பனிமலர்த்தாமரைமலர்க்கரங்கணீட்டும்பண்ணவன்றன்மரபனைத்தும்பகர்தியென்னக், கனிபடுந்தீந்தொடைமகதியாழ்முனியுமகல்வான்கற்பக நாட்டரசனுமக்கட்வுளருங்கேட்ப, புனைதுளவந்துயல்வருதோட்கமலச்செங்கட்பூவைமேனியனதனைப்புகலுமாதோ. (க)

வேறு.

அருமறைநான்குமங்கமோராறுமறத்தொடுமினி திருந்தாலும்,பொருவருஞ்சென்னுக்காசிபனென்னும்புரையறுமுனிவரன்மைந்தன், விரிதிரையுடுத்தவுலகமோரேழும்விழுங்கிருட்பிழம்புசித்தொளிரு, மெரிசுடர்க்கற்றையேழ்பரித்தடந்தேர்நடவியவிரவியஞ்செல்வன். (உ)

அரம்பொருதுகுத்தபொற்பிதிரன்னவவிர்சுணங்கணிந்தெழில்வாய்ந்து, கரும்புகைசெய்தபச்சிளங்குரும்பைக்கதிர்முலைதாங்குசங்கங்கை, முருந்தெழில்கவற்றுநகைவிருந்தருந்திமொய்கதிர்ப்பருதிநன்களித்த, திருந்துசீர்மைந்தன்றெவ்வடுசுடர்வேற்றிறல்கொள்வைவச்சுதனென்பார். (ங)

எழுதுவாட்டடங்கணின்னிளமுறுவலிராக்கினியிருட்குறும்பெறியு, மழகதிர்ப்பருதிவேந்தனைப்புணர்ந்தாங்களித்திடுமக்கள்வாளெயிற்று,முழுவலித்திண்டோள்மறலியும்வெள்வேலேநதிளவந்தனுமுதிராக், கழையுறழ்பசுந்தோள்யமுனையென்றுரைகுநகதிர்முலைக்கன்னியுமன்றே. (ச)

கவின்குழைத்தெழுதுமோவமுமருளுங்கரும்புசாத்தியபசு ங்கழைத்தோட், குவிந்துபொற்சுணங்காரிளமுலைப்பிரபைகுழு ந்துளிப்பனிகெடவிமைக்குஞ், சிவந்தவெங்கதிர்காலனையவெம் பருதிச்செல்வனதிருநலமுள்ளத், துவந்தனளாகியளித்தருள் மைந்தனொளிறுவேலுடைப்பிரபாதன். (௫)

சிறுபுறந்தாழ்ந்தகருநெறிக்கூந்தற்றீங்கரும்பனுக்கியவின் சொற், பிறைநுதற்சாயையன்னவர்தமக்குப்பெற்றருண்மக்கள் சாவனியா, மறைகழல்மனுவுமைந்தனுமிணையிலழகுகண்படுக் கும்வேய்த்தடந்தோள், நறுமலர்க்கூந்தற்றபந்திபுநளினத்திருநி கர்நலங்கிளருசையும். (௬)

கடல்திரைத்துடுத்தநெடுநிலமுழுதுங்களேகனுய்த்தனத டிப்படுத்து, மடுதிறல்வைவச்சுதன்றருமைந்தராடல்வேலிக்கு வாகுவுமந், தொடிபுனைதடங்கைதலையணையாகச்சுரும்புணவிரி ந்ததாரரச, ரிடுதிறைகொணர்ந்துதுயின்மணிமுன்றிலிளனென வுரைக்கும்வேந்தனுமே. (௭)

நெய்மிதிகவளங்தெவிட்டிநின்றடர்க்குமிழல்சுழிதறுகண்மா ல்யானை, பெய்முகிலென்னக்கொடைக்கடனிறுக்குமிக்குவாகு ப்பெயர்ப்பெரியோ, னையசெங்கமலமலரினுற்கங்குன்முகத்தினி லரனடியேத்தி, வெய்யவன்குலத்துவிளக்கெனப்பெற்றவிடலை வேல்விகுக்கியென்றுரைப்பார். (௮)

கொழுநிணத்தடிதின்றுதிரம்வாய்மடுக்குங்கோதைவேல்வி குக்கியென்றுரைக்கு, மழையுறழ்தடக்கைமன்னவன்றிங்கள்வா ரத்தின்மதுமலர்தூவிக், கழிமதஞ்செருக்கிக்கண்படைபெரு தகளிற்றுரிபோர்த்தவன்பாதம், விழைவொடும்போற்றியளித் தசேய்க்குத்தனென்றிடும்விறலுடைவேந்தன். (௯)

பளிங்குபோழ்ந்தறுத்தபத்திமண்டபத்திற்பருஉச்சுடர்ம ணிக்கடைப்புறத்தி, னளந்தறிவரியவிடுதிறைபோடுமாசுகண்டி யின்மணிமுன்றிற், றுளங்கலில்சீர்த்தியாடல்வேற்குத்தன்மைந் தன்விற்சுயோதனனென்னும், விளிம்புமுத்தெறிந்துகதிர்சொரி ந்தொழுகுமணிமுடிவேந்தர்கள்வேந்தன். (௧௦)

சிலைபயின்றகன்றதிருவளர்தடந்தோட்சுயோதனனளித்த ருள்சிறுவன், கலிபுறந்துரந்துமானிலமுழுதுங்களைகணுய்க்கா க்குமப்பிருக, னுலகமீக்கூறும்பெரும்புகழன்றேனுயிர்கிகர்சிறு வன்விச்சுவக, னலகறுவன்மையாங்கவன்சிறுவனடையலர்பர வுமத்திரகன். (௧௧)

தன்னறுங்கடுக்கைதுயல்வருதடந்தோட்டானுவைமறை யினுற்பழிச்சி, மண்ணகநிழற்றுமாலைவெண்கவிகைபத்திரகன்ற

ருமைந்த, னென்னலாமவுலிவாளமராருவத்திட்டிவெண்ணகரு
ஙிதேய்ந்த,வண்ணல்மால்யானைத்திறல்கெழுதடந்தோளடலுவ
ருச்சுவனென்பார். (கஉ)

திசைமுகங்கவிக்குமாலைதாழுவவுத்திங் களங்கவிகைநன்
னிழல், வசையறுமுலகமுழுவதும்புரக்குமாங்கவனளித்தருண்
மைந்த, னசையுணர்க்கடையாநன்பெருவாயினலங்கொளச்சு
வத்தியென்றுரைப்போ, னிசையுறுமன்னேனளித்தசேய்தன்
னைப்பிருகதச்சுவனெனவுரைப்பார். (கங)

இருநிலமளக்குமொருதனிச்செங்கோலெறும்வலிமுழவு
றழ்தடந்தோட், பிருகதச்சுவன்பெட்புடைமைந்தனியற்றிரிடா
ச்சுவனவன்சேய், வரைநிரைத்தனையகொடிநெடுமாடக்கடையி
னில்வான்றிறையோடு,மரசுகண்டுயிலுமணிநெடுமுன்றிலப்பிர
மேயனென்றுரைப்பார். (கச)

தமனியத்தாமந்தாழ்ந்துமின்கொழிக்குந்தடமுலையரிமத
ர்மழைக்கண், ணமையுறுதோளாரநங்கனென்றுரைக்குமழகு
டையப்பிரமேய, னிமிழ்கடல்ஞாலமேத்திடும்புதல்வனியலரிய
ச்சுவனவன்சேய், கமழலந்துறைசூழ்கங்கைநாடளிக்குங்கலன்
செய்தோட்கதிர்முடிநிகும்பன். (கரு)

புடைவளைத்துயர்ந்துவான்றொடுகுடுமிப்போகுயர்மணிம
திற்புரிசைக், குடபுலத்தெழுந்தமதிதவழ்ந்தேறுங்கோனகர்பெ
றுவதற்கிரந்தாங், கடைதருமரசரிடம்பெறுதுணங்குமுன்றிலா
ன்மடங்கலேறன்ன, மிடல்கெழுநிகும்பனளித்தருண்மைந்தன்
சம்பவாச்சுவனெனும்வீரன். (கசு)

குயில்குனிந்திருந்துமாந்தளிர்கோதுங்குழைமுகம்பொதி
மலர்சோலை, வெயினுழைந்தறியாதெயிற்புறஞ்சூழும்வியனக
ரயோத்திநாடளிக்குஞ், செயிரறுசம்பவாச்சுவனென்போன்றி
ங்களங்கண்ணியோன்பாத, மயர்வறவேத்தியளித்தசேயருணை
ச்சுவனெனும்வாகைவேற்குருசில். (கஎ)

வளர்முலைச்சாந்தமழிந்திடப்புரளுமணிநெடுங்குழையிள
ம்பிடியா, ருளமகிழ்தூங்கவாவுமான்றேரிற்சேட்டிளம்பருதி
யினுலவுந், தழையவிழலங்கறுயல்வருதடந்தோடிறலருணச்சு
வன்றனையன், களிமதஞ்செருககுங்குருதிதோய்கோட்டுக்களிற்
றுவனுச்சுவனுமால். (கஅ)

வேர்கிளைத்தெறிக்கும்விரிநிலாத்தவழுமிப்பிவாய்வெடித்
தவெண்முத்த, வார்வடந்திளைக்குமலையுறழ்திணிதோள்மற்றவ
னளித்தருண்மைந்தன், பார்முழுதளித்துப்பொன்னுலகெய்தி
ப்பாய்திரைபுரட்டுவானதிநீ, ரூர்வயப்புரவிக்களிக்குமாந்தாதா
வென்றிடுமொளிறுவேற்குருசில். (ககூ)

மணிகிடந்திமைக்குநண்டுகிற்தோகைமாழைமென்னேக்
கியர்விரும்பும், பிணிமுறுக்கவிழுமலங்கல்மாந்தாதாவினிநிவி
ற்பெற்றருண்மைந்த, ரணிகிளர்பொன்னங்குன்றுறழ்வான்றே
ளம்பரீடன்புருகுச்ச, னிணைபிறரில்லாவேனில்வேள்பொருவு
மிலங்கிலைவேல்முசுகுந்தன். (௨௦)

ஆங்கவர்தம்மிலாடகத்தடந்தோளம்பரீடன்றருமைந்தன்,
றூங்குறீக்குடக்காய்மடற்குலைத்தெங்கின் சொரிமதுப்பாளைபூ
விரிக்குந், தேங்கமழ்பொழில்சூழுந்தரகுருவிலரசனைத்திறை
யிடக்கவர்ந்த, வோங்குநீருவனுச்சுவனவன்மைந்தனுலம்பொ
ருமுயர்ந்ததோளிரதன். (௨௧)

கைம்முகந்தெடுத்தநெய்மிதிகவளங்களித்தெறிமும்மதக்க
ளிற்றின்,வெம்மைவெங்கோடுதாக்கலுமிழிந்துவீழ்தருமரத்தநீ
ரொன்னக், கொம்மைவெம்முலைகள்சாடலுமிழிந்தகுங்குமச்சே
தகமார்பின், செம்மைசேரிரதனளித்திடும்புதல்வன்றெவ்வடு
வேற்கையானரீதன். (௨௨)

வேய்த்தலைதொடுத்ததேனிறாலுடைந்துவீழ்தருபசுநறுவ
ளர்த்த, காய்த்துணர்ப்பசியகறிக்கொடிவிசும்பிற்கற்பகக்கோட்
டினிற்படருஞ், சேய்த்துமீதுயர்ந்தவளமலைநாடன்றிறற்புருகு
ச்சனன்மைந்தன், பேய்க்கணஞ்சூழுநெட்டிலைச்சுடர்வேற்றிரி
சதேச்சென்றிடும்பெரியோன். (௨௩)

கற்சிறையழித்துக்கரையலைத்தொழுகுஞ்சரயுவுங்கங்கை
யுமுடைய,மற்படுதிணிதோட்டிரிசதேச்சென்னுமன்னவனினி
தருள்புதல்வன், வெற்பகங்கிழியவேற்படைபணித்தவென்றிகூ
ர்முருகுறழ்தோற்றத், தெற்படுசுடர்வேலெறிழ்வலித்தடக்கை
யேந்தல்சம்பூதியென்றுரைப்போன். (௨௪)

பஞ்சிசூழ்கிடந்தபையரவல்குற்பாவையர்விரும்புசம்பூதி,
நஞ்சணிமிடற்றுச்சாமிதன்வரத்தாலளித்தருளுமவேற்குருசி,
லஞ்சிறையறுகாலேழிசைப்பாடலளிவிருந்தூட்டநெக்குடைந்
த, மஞ்சரிதவழும்பகட்டெழின்மார்பன்வாகைவேலுழவன்மா
ல்விருத்தன். (௨௫)

அருவரைச்சாந்துமாரமுமகிலுமருவிகொண்டிறங்குநீள்
பொருப்பன், முருகுறழ்தோற்றத்தெழில்கொண்மால்விருத்த
னளித்தருண்மூரிவேல்மைந்தன், குரவையிட்டார்க்கும்பெருங்
குரற்பேழ்வாய்க்கூன்பிடர்சங்கமுத்துயிர்க்கு,மருதநீள்வேலிய
யோத்திநாடளித்துவாழ்பவன்ரண்ணியனென்போன். (௨௬)

மாற்றருஞ்சிறப்பினுங்கவன்புதல்வன்கொள்ளைநீர்க்குளத்
தினில்வயலி, னிற்றுளோந்தலறுசுரிமுகப்பேழ்வாயினவளைதவழ்

ந்துமெய்ந்நூறங்கும், போற்றரும்வளங்கூர்மருதவைப்புடையபு
கழ்விடதர்சுவனவன்சேய், கூற்றுமெய்பதைப்பக்கோதைவே
லுளக்கும்விறலரியாச்சுவனுமால். (௨௭)

கரும்பறுத்தடைந்தகளைகுரற்சகடுநெற்கதிர்ப்பண்டியுநெ
ருங்கி, விரிந்திடம்பெருதவியனகர்புரக்கும்விறலரியச்சுவன்சி
றுவன், பருந்துவீழ்நாட்பிற்கூற்றெதிர்ப்படினும்பாயொளிப்ப
ருதிவேல்கிரியா, விரிந்திடவுடற்றுமசுமனுவென்னுமிசைதிசை
யளந்திடும்வேந்தன். (௨௮)

அரக்கிதழ்முளரிப்பொகுட்டினிற்செங்காலரசிளவன்னம்
வீற்றிருக்குந், திருக்கிளர்மல்லல்வளங்கெழுநாட்டுவசுமனுவளி
த்திடுஞ்சிறுவன், முருக்கிதழ்ச்செவ்வாய்முகிழ்முலைமகளிர்மு
கத்தினையுவவுவெண்மதியென், டிளைத்துவண்டறையவாம்பல்
வாய்விள்ளுமயோத்தியாளியற்றிரிதனுவாம். (௨௯)

வேறு.

அலங்கிலைவேல்வசுமனுப்புரவிவேள்வியாற்றுழியின்முனி
வோனையன்பினோக்கிப், புலன்களடக்கியதவத்தில்வேள்விதம்மி
ற்பொருவில்சந்நியாசத்திற்பொலிந்ததென்னை, துலங்கவுரை
த்திடுதியெனப்பலன்வெஃகாது நோற்றிடுதலருமறையின்றுணி
வாமென்ன, வலங்கெழுதோண்மைந்தனுக்குமவுலிசூட்டியுறு
தவந்தின்றலைநின்றுனரவுந்தோளான். (௩0)

ஆங்கவனற்றவநோக்கிமலரோனெய்தியாயுளொருநூறளி
த்தானமலனன்றே, யோங்குதவந்தனைநோக்கிவியந்துபின்னு
மாயுளொருநூறளித்தாரெளிசெய்பூணன், பூங்கமலமுகையவி
ழ்க்குங்கடவுட்போற்றிப்பொருவறுகாயத்திரியைப்புகன்றுவெ
ய்ய, தீங்கதிர்மண்டலத்திருக்குமெண்டோண்முக்கட்டேவின்ம
லரடிநிழற்சேர்ந்தானன்றே. (௩௧)

அய்யசெங்கமலத்தணங்கனார்குழலுக்கூட்டியகாழகிற்புகை
யுங், குய்வளக்கருணையட்டமென்புகையுங்குரோசமோரைந்தி
னிற்கமழுஞ், செய்யபொன்மாடமுடுத்தமாநகரந்தினந்தொறு
மிரவலர்க்களிக்கும், வையகம்புகழுந்திரிதனுவாவின்மைந்தன்
வேற்சூரியவண்ணன். (௩௨)

ஆயிரம்பகுவாய்முழைஞ்சுகொப்புளிக்குமழல்விட்சுடி
கைவாளரவின், மேயபாரனைத்துமொருகுடைநிழற்றுமிடல்கெ
ழுசூரியவண்ணன், சேயுயர்பறவைக்குன்றறவெறிந்துதாருகன்
கிளையொடுஞ்செகுத்த, பாய்கதிர்நெடுவேல்முருகுறழ்சிற்றப்ப
னைப்புயசசத்தியாதனனே. (௩௩)

ஆடகமுளரிப்பொகுட்டில்வீற்றிருக்குமாரமென்முலைத்தி
ருமடந்தை, பாடுறுமக்காகலம்வீற்றிருப்பப்பார்பொதுவறக்

ஞனிபுரக்கு, மோடைமால்யானைச்சத்தியாதலன்றனுயிர்கெமொழிலுடைமைந்த, னேடவிழ்நறுந்தார்மன்னவர்போற்றுமடலரிச்சந்திரனென்பான். (௩௪)

பொய்ம்மையும்வெய்யதீமையுமொழித்துப்புலம்புகொண்டினையவெவ்வுலகு, மெய்ம்மையுமறனுநிறுத்திடுஞ்செங்கோல்விறலரிச்சந்திரன்மைந்தன், கைம்மையராகியொன்னலர்மகளிர்கலுழ்ந்தநீர்ப்பெருக்கினெல்வளர்ந்து, செய்ம்முகத்தோங்கச்சிலைவுவாள்விதிர்க்குமுரோகிதாசசுவனெனத்தெரிப்பார். (௩௫)

கருங்கொடிக்கவலைக்கிழங்ககழ்பரப்பிற்கானவர்களிறுகோட்படுக்கும், விரிந்தபல்வளங்கூர்கானகநாடனுரோகிதாச்சுவனருள்விடலை, திருந்தலர்மடவார்பவளவாய்ச்செம்மைசேல்விழிக்கீய்ந்துகட்கருமை, பொருந்துநுண்டுகிலுக்களித்திடச்சிரிக்கும்புலவுவேலுரோகிதனென்பார். (௩௬)

உடைப்படுகபோலமதசலக்கலுழியுவட்டெடுத்தொழுகுமால்யானை, பிடியெனமதந்திர்ந்தோடவாள்விதிர்க்குமுரோகிதன்பெற்றவேல்மைந்தன்,றடவரைக்குடுமியிறுவரைத்தூங்குந்தண்ணறுப்பஃறலையிருலின், விடுகதிர்த்திங்கட்கோடுகிண்டுழக்கும்வியன்மலைநாடன்வேற்றுந்தன். (௩௭)

திரைபொருபரவையனைத்தும்வெண்ணிறத்திற்சிறந்ததீம்பாற்கடலதனைப், பொருவுறவிளர்ப்பப்புகழ்நிலாவிரிக்கும்புண்செய்வேற்றுந்துவின்மைந்த, னருவரைத்தரளமருவிகொண்டிறங்குமசைநடைத்தென்றலம்பொருப்பும், விரிகதிர்ப்பொன்னங்குடுமிமால்வரையுமுடையனும்விற்றிறல்விசயன். (௩௮)

மருவலர்மனைவாழ்மங்கையர்கழுத்தின் மங்கலநாணினைத்தாயர், வெருவொடுநோக்கிநாளையுங்காணவிதிக்கெனத்தெய்வதம்பரவ, வெரியுமிழ்கதிர்வாள்கைத்தலத்தெடுக்குமெறுழ்வலிவிசயனன்மைந்தன், கருதலர்வயிற்றிற்றீப்படவிழிக்குங்கல்செய்தோட்டிறல்கொள்காருகனே. (௩௯)

பொருசமத்தெதிர்ந்தோருயிர்குடித்தல்லால்மீள்கலாக்காருகன்புதல்வன், விருகன்மற்றவன்சேய்கழனியிற்சென்னல்வியப்பொடும்வாழ்கெனவித்துங், கருநெடுந்தடங்கட்செய்யவாய்வெண்பற்கடைசியர்குரவையார்ப்பொழியா, மருதநீர்வேலிவளங்கெழுநாட்டுமன்னவன்வாகுவென்றுரைப்போன். (௪0)

கொழுமுகந்தாக்கவயிறுநெக்குடைந்துகுழைகருஞ்சேற்றகமுழக்கிக், கழனியிற்குடவாய்ச்சங்கமூத்துயிர்க்குங்கங்கைநீர்நாடன்வில்வாகு, விழைவுறுமைந்தனுடவரோனும்பெண்மையையவாவமேக்குயர்வுற், றழகுவீற்றிருந்துநாடொறுஞ்சிறக்குமம்பொன்வெற்பனையதோட்சகரன். (௪௧)

விங்குபொற்றடந்தோட்சகானுக்கெழில்கூர்பிரபையின்றி டுவிறற்புதல்வர், தேங்குநீர்ப்பௌவமகழ்ந்திடுந்திறலாரறுப தினுயிரர்சிறந்த, வாங்கவன்றனக்குவேல்புரைதடங்கணம்பகட் டிளமுலைத்துவர்வாய்ப், பூங்குழற்பானுவதியருள்சிறுவன்புகழ் சபஞ்சதனெனப்புகல்வார். (சுஉ)

அடங்கலர்நகாந்நியக்குணுவருத்துமடலயிற்சமஞ்சதன்பு தல்வன், குடம்படுசெருத்தலபால்சுரந்தொழுகக்குண்டுநீருழக் கிடுமெருமை, தடந்தொறுங்கழுநீர்மென்முகைமேய்ந்துதாம ளக்கொட்டைவாய்குதட்டும், படர்ந்தநீர்நாட்டுமன்னவர்வண ங்கும்பருநிவேலஞ்சுமானுமால். (சுஙு)

அஞ்சுமான்புதல்வனெக்கினுங்குழையுமனிச்சமென்போ தின்வில்லெறிந்த, பஞ்சினில்மிதிப்பின்முன்னையிற்சிவக்கும்பா டகச்சீறடிமாளிர், நெஞ்சுகூட்டுண்ணுந்திலீபன்மற்றவன்செய்க ங்கைநீரிலத்தினிற்கொணர்ந்த, வெஞ்சவில்சீர்த்திப்ப கீரத னென்னவுலகெலாமேத்திடுங்குருசில். (சுசு)

வல்சிறைச்சுரும்பர்பேட்டளியோடுமருவியகாமவெம்மய க்கிற், கண்படைபொருந்துமாலைதாழ்புயத்துப்பகீரதன்காதன ன்மைந்தன், விண்டொடர்ந்தோங்குமாலைவெள்ளருவிக்குன்றி னில்வருடைபாய்ந்துழக்குந், தண்புனலுடுத்தகானகநாட்ன்றும வேற்குலுதனென்றுரைப்போன். (சுரு)

ஆங்கவன்புதல்வனுதுலர்க்கூட்டவட்டவெண்சோற்றுமா மலையைத், நீங்கறுவெள்ளிக்குன்றெனவியக்கர்தெருமரும்வள ங்கொனுட்டுறையு, மோங்குசிருலகையளக்குநாபாகன்வன்மக னுடையங்களிற்று, வாங்குவிற்சிந்துதிபன்மற்றவன்சேயட்ல யுதாயுவாமன்னன். (சுசு)

வரிவளையுறங்குநெடுமணற்குன்றத்தஞ்சிறைச்சேவலோ டேிக், குருகினங்கமலக்காட்டிடையொளிக்குங்குளிர்புனற்பழ னநாடுடைய, வருவரைத்தடந்தோட்டிறலயுதாயுச்சிறப்புட்ன ளித்திடும்புதல்வ,னிருதுவனனப்பேர்ப்புரவலனவன்சேய்சுதா சனென்றெடுத்தியம்புவரால். (சுஎ)

அன்னவனளித்தவிறல்கெழுபுதல்வனுடசப்பசியபொற்பி திரின், மின்னவிர்திதலையணிந்துகண்ணுருத்தவெம்முலைமதய ந்திகணவன், கன்னவில்திரடோண்மித்திரசகன்மற்றவன்மகன் கனைகதிரொதிக்கும், பன்மணிச்சூட்டுவாளராநெற்றிப்பார்முழு தேத்துமச்சுமகன். (சுஅ)

மற்றவன்புதல்வனுலகெலாம்வென்றநகுலன்மற்றவன்மக னெதிர்ந்த, கொற்றவர்மவுலிபூழிபட்டொழியக்குரைகழற்றுளி

ரூவிடரும், வெற்றிவேற்றடக்கைத்தயரதனவன்சேய்வரிதிரை
க்கடல்முகட்டெழுந்த, வொற்றையாழியங்தேர்ப்பன்னவனெ
ன்னவோசைபோமதிரதனுமால். (சகூ)

அதிரதன்புதல்வன்பருமணியிமைக்குமாடகக்கொடிமதிற்
குடுமி, மதியகடுரிஞ்சும்வளநகரரசர்மணிமுடிதேய்த்தபொற்க
ழற்காற், றதைமலர்ப்பைந்தார்புனையும்விச்சுவகனுங்கவனளித்
திடுந்தனைய, னெதிரொறிகட்டுவாங்கனென்றுரைக்குமெறுழ்வ
லித்தோளுடையுரவோன். (ருo)

கரும்பெனத்திரண்டுகெவின்வளர்மென்றோட்கன்னியர்கண்
ணொடுநெருங்கிச், சுரும்புவீழ்மலர்த்தாராங்கவன்புதல்வன்றீர்
க்கவாகுப்பெயர்த்தோன்றல், பொருந்தலர்க்கடந்தவாங்கவன்பு
தல்வன்புரந்தரன்வெஞ்சமத்தஞ்சி, யிரிந்துவென்கொடுப்பவா
ளமர்கடந்தவிரகுவென்றுரைத்திடுமேந்தல். (ருக)

வேறு.

அனையகதிர்வேலுழவன்றந்தமைந்தனரசர்மணிமுடியுரி
ஞ்சியலங்குசோதிப், புனைகழற்காற்றமும்பிருந்தவயனென்றே
தும்போர்வேற்கை முனைவன்முக்கட்புநிதற்போற்றி, வினையற
நோற்றினிதருளுமைந்தனுமம் வெள்வேலாற்றிசைபத்தும்வெ
ன்றசீர்த்தி, கனைகடலுநெடுவரையும்வெண்மைநிற்றுங்கதிர்
மௌலித்தயரதனென்றுரைப்பர்மாதோ. (ருஉ)

ஆங்கவனும்புதல்வரின்றிமகங்களாற்றவளியலம்புபசுந்து
ளவோனிராமனாகித், தீங்கறவந்துதித்திலங்கைமடியமாட்டிச்
சீதையைமீட்டமரர்தொழுந்தேவைதன்னிற், பூங்கடுக்கைவே
ணியற்குக்கோயில்கோலிப்பூசனைசெய் தயோத்திநகர்புரந்துபி
ன்னு, மோங்குமொருகுடைநீழலீரைஞ்ஞூற்றேடொருபதினா
யிரம்பருவமுலகுகாத்தான். (ருங)

சூரியன்மரபுரைத்தவத்தியாயமுற்றிற்று.
ஆக திருவிருத்தம்—எருடு.

இருபத்தொன்றாவது

இராமனவதரித்தவத்தியாயம்.

என்றலும்வெண்மதிக்கண்ணியிறைவன்பாதமினிதேத்து
மிராமனியற்சரிதையாவு, மன்றவிரித்துரைத்தியெனமகதிவீணை
வான்முனியுமுயர்குடுமிவானந்தேய்க்குங், குன்றினிருஞ்சிறக
ரிந்தவயிரவொள்வாட் குருசிலுங்கேட்டலுமகிழ்ந்துகுழைவி
னேடுங், கன்றுகுணிலாவிளவின்கனிகள்வீழ்த்துங்காயாம்பூவ
ண்ணனிவைகழறுமன்றே. (க)

விராய்மலர்ப்பூங்குழலிபங்கன்மகிழ்வினேங்கும்வெள்ளிம
லைக்கீழ்கிடந்துவிளரிபாடு, மிராவணனுக்காற்றலமென்றிமை

யோர்சித்தரியக்கர்முனிவரர்களெறிதிறைநீராடைத், தராதல
மேழுமபுரக்குமரசரோடுஞ்சதுமுகத்தோன் பாற்கடலிற்சார்ந்
துபோற்றக், கராமறியக்கதிர்நேமிபணித்துவேழங்காத்தருளு
ந்திருநெடுமால்கழறலுற்றான். (உ)

வேறு.

வாலிநிற்கேட்டிசொல்லென்வடிவமோர்நான்குகூறாய்ச்
சால்வுறுமுலகங்காக்குந்தயரதன்புதல்வராகி
ஞாலமீதுதிப்பமீயிர்நனிமலர்க்கானின்வெற்பிற்
பால்படுகுரங்கோடெண்காய்வருகெனப்பணித்தல்செய்தான்.

பண்ணவரொருவருமவ்வாறுதித்தனர்பருதியோட்டிக்
கண்வழுக்குறுசெஞ்சோதிக்கதிர்மணிமுகடுவேய்ந்த
வண்ணலங்குடுமிமாடமுடித்துயரயோத்திவேந்தன்
புண்ணியப்புதல்வரின்றிப்புலம்பொடுமிருந்தானன்றே. (௪)

வெளிதெரிந்தகன்றகேள்விச்சுமந்திரன்வேந்தைநோக்கி
யொளிறுவேலுரோமபாதன்காத்திடுமுலகம்யாவுந்
துளிமுகில்விளப்பஞானத்துறைபடிகலைக்கோட்டண்ண
லளியுடனெய்தின்வானம்பொழியுமென்றமைச்சர்சொன்னார்.()

அறைதலுமுருவவாட்கணன்னலார்வேந்தனேவ
மறைபயில்முனிபாற்போகிமார்பினிற்கோடுபூத்த
செறிதவமுனிவனென்னமுனிவனைமயக்கஞ்செய்தாங்
கிறைநகர்தன்னிலுய்ப்பவிரும்புயல்பொழிந்ததன்றே. (௬)

வேந்தர்கோன்மகிழ்ந்துதூயமெய்த்தவமுனிவன்வேட்பச்
சாந்தையென்றுலகமேத்துந்தன்னுடைப்புதல்விதன்னை
யீய்ந்தனன்முனியுமாங்கணிருந்தனனவணின்றெய்தி
ஞந்தகவுழவனியுகன்மகப்பெறுதியென்றான். (எ)

எனவுரைத்திடலும்வேந்தனிமைப்பினிலுரோமபாதன்
றனிநகர்க்கெய்தியாங்குத்தவம்புரிகலைக்கோட்டண்ணல்
முனிவனைக்கொணரவன்றனேன்பரிமகமுற்றிப்பின்னும்
வினையில்புத்திரகாமேட்டிமேதகவாற்றினானே. (அ)

ஆற்றியசழலிற்றோன்றுமவியினையணங்கனார்க்கு
வீற்றுவீற்றுகநல்கக்கவுசலைவிறல்கொள்வாலி
கூற்றையீன்றனள்கைகேசிகுணப்பெருங்கடலையின்றாள்
மாற்றிலாவிருவர்தம்மைசுமித்திரைவயிறுவாய்த்தாள். (௯)

இராமன்வேற்பரதன்றூயவிலக்குவனியக்கர்வேந்தர்
பராவுசத்துருக்கனென்னப்பழிப்பறுநாமஞ்சாத்தித்
தராதலமுழுதும்போற்றசவுளமேமுதலவாக
விராவுகற்கருமம்யாவும்விழுமிதின்வசிட்டன்செய்தான். (௧0)

நறைகமழலங்கன்மாலைநம்பியைமுதலமைந்தர்
பிறையெனவளருநாளிற்கவுசிகன்பெட்பினோடு
மறைகழலவனிவேந்தர்நெருங்குபேரவையினெய்தி
யிறையவன்போதந்தேத்தியிருக்கெனவிருந்துசொல்வான். ()

அரக்கர்தீவினையால்வேள்வியாற்றலனிடையூறின்றிப்
புரப்பதற்குன்பாலுற்றேன்புதல்வனையளித்தியென்ன
விரத்தலுமுள்ளமாழ்கித்தயரதனிராமனென்னும்
வரைத்தடந்தோளினானைமுனிபின்போய்வருதியென்றான்.(கஉ)

என்னவெஞ்சிலையிராமனிலக்குவனோடும்யார்க்கும்
பன்னருங்களிகொள்கேள்விப்பழமறைக்கிழவன்பின்போய்க்
கொன்னுனையெயிற்றுப்பேழ்வாய்க்கோளரிவழங்குங்கானின்
மன்னனுமிரண்டுவிஞ்சைமறையொடுமருளினானே. (கங)

நெடிபடுகானினேகுநெறியினோர்சாலைநோக்கி
விடலையீதென்கொலென்னக்கவுசிகன்விமலன்முன்னை
மொடிவறுதவஞ்செய்காலையுடற்றியவில்வேளங்க
மடலையினெரித்தநாள்தொட்டநங்கனாச்சிரமமென்பார். (கச)

என்றவணீங்கமேல்வையோரிருநகரநோக்கிக்
குன்றெனத்திரண்டதோளானிவையெவைகூறுகென்ன
மின்றிகழ்வயிரவாளான்விருத்திராசுரன்றனாவி
பொன்றுதல்செய்தபாவம்போக்கியதலங்களென்றான். (கரு)

சூர்வளியெறியுங்கானிற்றுனைவினினேகுமேல்வை
யாரியன்றோன்றுங்கானம்பாதுநீயறைதியென்னப்
போர்கெழுசுகேசுவேதன்பொன்னடிக்கமலம்போற்றி
வாரிறவீங்குகொங்கைமங்கையையினிதினின்றான். (கசா)

ஓடரித்தடங்கட்செவ்வாயொன்னுதற்பணைகொள்மென்றோட்
டாடகைதன்னைசுந்தற்களிப்பவத்தையனல்லா
ளாடல்மாரீசனோடுஞ்சுவாகுவையருளினீன்று
ளேடவிழ்நறுந்தார்சுந்தனின்னுயிர்தொலைந்தானன்றே. (கஎ)

தாட்கைமைந்தரோடுந்தமிழ்முனிதன்னைப்பற்றப்
பிடுறுதவத்தோன்சீறிப்பிறையெயிற்றரக்கியாகிக்
கோடிவேழத்தினுற்றபலத்தொடுங்கூடுகென்ன
நீடிருஞ்சாபம்பெற்றநிசாசரிவனமீதாமால். (கஅ)

ஆங்கவடன்னைபைபவணங்கெனவுளத்திலெண்ணா
றீங்குறும்விரோசனன்றன்சிறுவியைமகவான்கொன்றான்
பாங்குடைவெள்ளிதாயைப்பசுந்துழாய்முகுந்தன்கொன்றா
னீங்கிவைகருதிநீயுமிவளுயிர்செகுத்தியென்றான். (ககூ)

அத்தலைச்செறுநராவியயின்றுவெம்புலவுநாறு
முத்தலையெஃகமேந்திமுகிலெனவுரறியார்த்துப்
பைத்தலைச்சுடிகைநெற்றிப்பார்முதுகுளுக்கவந்தா
டத்துவெங்குருதிப்பேழ்வாய்த்தாடகையென்பாண்மன்னோ. ()

ஈங்கிவடன்னைக்கோறியெனமுனியியம்பவையன்
வாங்குவிற்பகழியொன்றாற்றாடகையாவிமாய்த்து
நீங்கலுமோரஞ்ஞூறுவெங்கணைநெறியினல்கி
யாங்கவையுபசங்காரம்புரியருமறையுமீய்ந்தான். (௨௧)

அவ்வழியகன்றுசெல்லுமருநெறியதனின்மற்றோர்
திவ்வியாச்சிரமநோக்கியாதிதுசெப்புகென்னப்
பவ்வநீருலகந்தன்னோர்பதந்தினிற்பொதிந்தோன்வைகு
மிவ்விடங்கன்னைச்சித்தாச்சிரமமென்றிசைப்பவென்றான். (௨௨)

ஆங்குநின்றேகியையனருமகச்சாலையெய்தித்
தீங்கறுமுனிவவேள்விசெய்கெனவியம்பலோடும்
வீங்கிவைகேள்விபோயகவுசிகன்வேள்வியாற்ற
வோங்குமாரீசனோடுஞ்சுவாகுவந்தமரினுற்றான். (௨௩)

ஏற்றவர்தம்மில்வெம்போர்ச்சுவாகுவையெரிவாயம்பிற்
கூற்றினுக்குணவுநல்கிக்கொடியமாரீசன்றன்னைக்
காற்றின்வெம்பகழியொன்றாற்கடலிடைகவிழ்த்தியாரும்
போற்றரும்வேள்விமுற்றப்புரந்தனன்புலவுவேலான். (௨௪).

கோவெடுத்தருந்தும்வைவேற்குமரருக்காசிகூறிப்
பாவடிப்பருமயானைப்பிடிமிசைப்பனைக்கைநீட்டி
மேவருகானம்யாவுங்கடந்துவில்வீரரோடுங்
காவுசூழ்சோணையாற்றங்கரைமிசையினிதுசென்றான். (௨௫)

இவ்விடம்யாவர்தேயமென்றிடவிராமன்கேட்ப
வவ்வியமவித்தசிந்தையருந்தவன்றெளிந்துசொல்வான் [தன்
றெவ்வருஞ்சுவைக்கும்வைவேற்குசனெனுந் திறல்கொள்வேந்
மவ்வலங்கூந்தற்செவ்வாய்விதேகர்கோன்மகளைவேட்டான். ()

ஆங்கவனான்குமைந்தர்ப்பெற்றனளவரின்மூத்தோன்
வீங்குதோட்குசனைப்பேர்விறல்கெழுவேந்தர்வேந்த
னோங்கெழின்மாடமுற்றுமகோதயமென்னவோதுந்
தீங்கறுநகரங்கோலித்திருவின்வீற்றிருந்தானன்றே. (௨௭)

கதிர்வடிவேற்குசாம்பன்கவுசாம்பிநகரஞ்செய்து
விதிமுறையரசுசெய்தான்தூர்த்தசனாமவேந்தன்
மதியினோர்வியக்குந்தன்மாரணியமாநகரஞ்செய்தான்
சிதைவிலவசுமாடஞ்சூழ்கொடிகதிர்விரகஞ்செய்தான். (௨௮)

இத்தலம்வசுவின்றேயமஞ்சுவெற்பிடையிற்றேன்று
மத்தலமகநதேயமன்னநீண்மலேயினின்று
முத்தமுந்துகிரும்வாரியகின்முருடுருட்டியோடுங்
தத்துநீர்த்தரங்கஞ்சிந்துமாநதிதானென்றுண்டால். (௨௯)

அன்னமாநதியின்றீர்த்தத்தாடல்வேற்குசனுபற்குக்
கன்னலங்குதலேச்செவ்வாய்க்கிருதாசியுட்களிப்பினீன்ற
கொன்னுனேவேற்கண்ணுரோர்நூற்றுவர்கொடியினுெல்கி
வன்னமேகலேகளார்ப்பவண்டுளாமலர்கொய்தாரால். (௩0)

காற்றிறையவரைநோக்கிக்காமனேயுழந்துமாழ்கி
யூற்றுறுமின்பம்யாழோர்கூட்டத்தினுறுதிரென்னப்
போற்றலுமறுத்தவேற்கட்பூங்கிளியனேயதிஞ்சொ
னூற்றுவருடலம்புக்குறுடங்குகூனுக்கினுனே. (௩௧)

மங்கையரிதனேத்தந்தைக்கோதலுமனத்தினெண்ணிப்
பங்கயமடந்தையன்னசோமதைபரிவினேடுந்
துங்கநற்சூளிக்கீன்றபிரமதத்தனுக்குத்தூய
சங்கினமுழங்கியார்ப்பத்தகுமணம்புரிவித்தானல். (௩௨)

பாம்புபைத்தன்னவல்குற்பாவையருடற்கூன்போகிக்
காம்பிலிதேயந்தன்னிற்களிப்பொடுபிரமதத்த
னேம்பலினிருந்துவாழ்ந்தானிவைநிற்கக்குசனுபப்பேர்
வாம்பரித்தடங்தேர்மன்னன்மகமினிதாற்றினுனே. (௩௩)

அருமகமாற்றுமேல்வையாடல்வேற்குசனுங்கெய்திப்
பொருவறுமைந்தவொப்பில்புதல்வனைப்பெறுதியென்ன
வரமளித்துடலினேடும்வானநாடதனிலுற்றுன்
கருணைகூர்குசனுபன்சீர்க்காதியையினிதினீன்முன். (௩௪)

ஆங்கவள்கவுசிகப்பேரணங்கொடுமென்னேயீன்று
டிங்கில்மற்றவளேதூயசெபிராறுகவுசிகப்பேர்
வீங்குநீராமுயீண்டுமேவினளென்னவோதி
நீங்கலுங்கங்கையென்னுநெடுநதிதோன்றிற்றன்றே. (௩௫)

வள்ளலன்னதியைநோக்கிவரன்முறைகூறுகென்னத்
தெள்ளிதின்மறைகடேர்ந்தகவுசிகன்செப்பலுற்றுன்
கள்ளவிழ்மலர்மென்கூந்தலுமையினேக்கங்கையோடு
மெள்ளருமிமயவேந்தனினிதினிற்பயந்தானன்றே. (௩௬)

உமையினேயயன்மால்காணுதெங்கொளியாகிநின்ற
விமயவிற்குழையவாங்குமீசனுக்கீய்ந்தானிந்த
தமரவெண்டிரைநீர்க்கங்கைபாதலங்கரணிவிண்ணரி
னமர்கலாலுலகினுள்ளோரமர்திரிபதகையென்பார். (௩௭)

இங்களங்கண்ணிப்புத்தேள்சிறப்பொடுமுலகமீன்ற
மங்கையோடொருநாளுண்டுமருவலுமமரர்யாரு
மிங்கிவையொழிதியென்னவிரப்பவீரியத்தையைய
னங்கியங்கடவுடன்னைத்தரித்தியென்றருளின்விட்டான். (கூஅ)

செந்தழற்கடவுண்மெய்யுந்தீய்த்தவிற்றரிக்கலாது
மைந்துடைப்புவியினுய்ப்பமற்றதுபொறுக்கலாற்று
துந்துநீர்க்கங்கையாற்றினுய்த்தலுங்கங்கையாற்று
தந்தமில்சரவணத்தினமைவுறவிடுத்ததன்றே. (கூகூ)

உலகெலாங்கமலத்தோனேடின்றசிற்றுதரவல்லி
குலமனையவர்பால்மைந்தர்ப்பெறுகவீனொன்றுகூறி
நலனுறுகடவுளோனைவைதகன்ஞாலந்தன்னைப்
பலர்விழைகணிகைபோலவாழ்கெனப்பகர்ந்துபோனாள். (சo)

சரவணமதனில்வெய்தாங்கழலுமிழ்வடிவேலேந்து
முருகவேளினிதுதோன்றிமொய்யமர்கடந்தவெற்றி
யெரியுமிழ்தறுகட்பேழ்வாயவுணாயிகலினூழித்
தருசிமலமரர்வைகத்தானையங்காவல்பூண்டான். (சக)

ஈங்கிதுகிடக்கக்கங்கைவரன்முறையினிதுகேட்டி
வாங்குவிற்சகரனில்வாழ்மனைவியரிருவர்தம்மிற்
றிங்கெறிபிருகுவென்னுஞ்செய்தவனருளாற்பொன்னங்
கோங்கிளமுலையாள்மற்றோர்குமரனையினிதினீன்றாள். (சஉ)

வேறு.

அறுபதினாயிரமாடல்மைந்தரை
மறுவறமற்றவள்வயிறுவாய்த்தன
ளிறையசமஞ்சதனென்னுமைந்தனைச்
சிறுவரையொறுத்தலாற்கானஞ்சேர்த்தினன். (சங)

ஆங்குசமஞ்சதனஞ்சுமானெனுந்
தீங்கறுபுதல்வனைச்சிறப்பினீன்றனன்
வீங்குதோட்சகரன்வாம்புரவிவேள்விகள்
பாங்கினிலொன்றொழிநூறுபண்ணினான். (சச)

மீட்டுமவ்வேள்வியின்விடுத்தவாம்பரி
பூட்டுவிலிந்திரன்புணர்ப்பின்வெளவுறு
வாட்டமில்கபிலமாமுனிவன்வான்றவ
மீட்டுறுசாலையினொளித்திட்டேகினான். (சரு)

தள்ளருந்பெரும்புகழ்ச்சகரர்வாம்பரி
யெள்ளருமபெரும்புவியெங்குங்காண்கிலார்
பள்ளநீர்வேலையைத்தொட்டுப்பாதலத்
துள்ளுறைகபிலன்மாட்டுறைதல்கண்ணுற்றார். (சசு)

தெள்ளிதிற்காண்டலுஞ்சினவுமன்னனைத்
தள்ளருமுனிமொழிசாம்பராக்கலும்
வள்ளறன்மைந்தரைவரவுகாண்கலா
துள்ளநொந்தஞ்சுமான்செல்கென்றோதினான். (௪௭)

அஞ்சுமான்பாதலத்தணைந்துமாதவன்
செஞ்சரண்பணிந்தவனருளிற்செல்பரி
யெஞ்சலில்சகரனுக்கீய்ந்துதந்தைய
ருஞ்சிடவருந்தவமுனாற்றினனரோ. (௪௮)

வேறு.

அருந்தவம்பன்னாளாற்றியஞ்சுமானென்னும்வேந்தன்
றிருந்தலர்புகழும்வேற்கைத்திலீபனையினிதினீன்று
விருந்தினனாகிவிண்ணோரெதிர்கொளவிசும்பிற்போனான்
மருந்தினுமினியகேள்வித்திலீபனும்வானஞ்சேர்ந்தான். (௪௯)

அன்னவனளித்தவெற்றிப்பகிரதனன்பினோடு
முன்னரும்பருவமுப்பானாயிரந்தவஞ்செய்காலைப்
பன்னருமறையோன்றோன்றிப்பகீரதவிழைந்ததென்ன
வுன்னருங்கங்கையிந்தவுலகினினுறுதல்வேண்டும். (௫0)

மைந்தனும்வேண்டுமென்னவளித்துவானதிமீண்டெய்தி
னெந்தையையன்றிமற்றுத்தரிக்குனரில்லையென்னா
நந்தலில்பிரமனேகநாமவேற்குரிசிறூய
சந்திரமௌலியெய்தவளப்பினாட்டவஞ்செய்தானே. (௫௧)

நீற்றொளிபழுத்தநெற்றிநிமலன்வந்தெய்தக்கங்கை
யாற்றினையளித்தியென்னவருந்தவம்பெரிதுமாற்றப்
போற்றருங்கங்கையீசன்புரிசடைக்காட்டுளெய்தித்
தோற்றமின்றாகமன்னனீசனைத்தொழுதுசொல்வான். (௫௨)

கங்கையையளித்தியென்னக்கடவுடன்சடையின்மீது
தங்குமோர்திவலைநல்கத்தளிபுமிழ்தரளஞ்சிந்தி
யெங்குநீர்பெருகியோடச்சன்னுவின்சாலையெய்த
வங்கவன்குடங்கைதன்னாலள்ளினனருந்தினானால். (௫௩)

அருந்தலுமரசன்வேண்டவரும்பெறற்கங்கைதன்னைப்
பெருந்தவன்செவியின்மீட்டும்விடுத்தலும்பெட்பினோடுந்
திருந்தலர்க்கடந்தவைவேற்பகீரதன்றிண்டேர்ச்சில்லி
பொருந்துறும்வழியினேகிப்பாதலம்புக்கதன்றே. (௫௪)

பாதலத்தெய்திவேந்தரடலையிற்படர்தலோடுந்
தீதுறுசகரர்யாருந்துறக்கத்தினினிதுசேர்ந்தார்
மாதவக்கிழமைபூண்டமன்னனுமயோத்தியுற்றா
னீதிதன்காதையென்னக்கவுசிகனியம்பினானே. (௫௫)

வேறு.

என்றுயர்கங்கைவரன்முறையுரைத்தாங்கேகுழிவிசாலைமா
னகரம், துன்றவின்னகரம்யாதெனவிராமன்சொற்றலுங்கவுசிக
னுரைப்பான், வென்றிவேலவுணர்தம்மொடுந்தேவர்கொடிய
வெஞ்சமங்கனிபுரிந்து, பொன்றலும்பொன்றுமருந்துவேட்ட
மரர்புணரியைப்பல்பகல்கடைந்தார். (௫௬)

மாயிருஞாலந்தாழியாய்மத்துமந்தரமாமதிதறியாய்க், காயு
ம்வெவ்விடத்துவாசுகிநாணுக்கட்புனல்வெண்டயிராக, வாயி
ரம்பருவங்கடைதலுமாலம்புறப்பமால்முதலியவமரர், பாய்வி
டையுயர்த்தபனிமதிக்கண்ணிப்பண்ணவன்பதம்பழிச்சினரால்.

வெயிலுடன்முளைத்துக்கிளைத்தசெம்மேனிவிமலனுங்கெய்
திமால்முதலாஞ், செயிரறுதேவர்பருவரறுடைத்துத்திகழ்வி
டமருந்தினனகல, மயிலியல்பாகனருளினைவியந்துமான்முத
லாகியதேவர், பயில்தருகடலைமீளவும்வியந்துபற்பலநாட்கடை
ந்தனரால். (௫௮)

மந்தரந்தாழமாயவனுமையுருக்கொடுவலியினாற்றுங்கி, யு
ந்துநீர்க்கடலைக்கடைதலுமோர்கைகமண்டலமோர்கைதண்டே
ந்தி, நந்தலில்தன்மந்திரிமுதற்பிறந்தார்நாடகக்கூத்தியராகு,
மந்தமிலரம்பைமகளிர்தெள்ளமுதோ டறுபதுகோடிவந்துதித்
தார். (௫௯)

நிலவுகொப்புளிக்கும்வெண்ணகைத்துவர்வாய்நிகரொறிய
ரம்பையர்தமக்குச், சிலதியரனந்தமகிளிர்வந்துதித்தார்திகழ்வ
ளிமனத்தினுங்கடிய, கலினவாம்புரவிபிறந்ததுபின்னர்க்கருங்க
டல்முழுவதுஞ்சிவப்பப், புலரியிலெழுந்தசேட்டிளங்கதிர்க்க
வுத்துவம்பிறந்ததுபொலிவின். (௬0)

வியன்சினைத்தருக்களைந்துமாங்குதித்தவிண்ணவர் முதலி
னோர்யாரும், பயன்படுதேனுப்பிறந்ததுமற்றோர்பான்மதிக்கு
டையவனுதித்த, நியங்குநூற்கோட்டுவாரணகரயிராவணப்பக
டெழுந்ததுபின்னர்த், தயங்கொளிமுகத்துக்காக்கைமீதுயர்த்
ததௌவையாங்குதித்தனளன்றே. (௬௧)

பூங்கதிர்பரப்பியுலகெலாம்விளக்கும்புண்ணியத்திங்களா
ங்குதித்த, தோங்குபைங்கணைக்காற்சேபிதழ்க்கமலத்தொழு
கொளிபரப்புபொற்பொகுட்டு, வாங்குநுண்ணுசுப்பிற்றிதலைபூ
த்தலர்ந்தவனமுலைச்சேயரிநெடுங்கட், டீங்குயிற்குதலைப்பொ
ன்னுறழ்மேனித்திருமகளுதித்தனளன்றே. (௬௨)

வாருணிநறவம்பிறந்ததுபின்னர்மற்றதுநுகர்தலாற்றேவர்
சீர்கெழுசுரராயினரஃதுண்ணாசுரராயினர்சிறந்தோங்கு

மாரமுத்திக்தகுலங்கொளிமணியுந்திருவையு மாயனுக்களித்தாரோர்செழுமமுதமெமநுமதென்னவவுணருமமரருமேற்றூர். ()

வற்றவர்தம்மைமாயவன்மிலக்கிமோகினியுருவொடு மெய்திக், கோறமியவமுதமுதலியவெவையுஞ்சுரர்தமக்களித்தலு மாற்ற, முற்றிருங்கொழுகும்வச்சிரப்படையாலடல்கெழுமவுணரையொழுத்தாங், காற்றமின்மகவான்பொன்னுலகனைத்துந் தனதடிப்படுத்தினனளித்தான். (கூச)

என்னுடைப்புதல்வர்வேரொடுமடிய விகலுடைச்சூட்சியினெறுத்த, வின்னுயிரனையவதிதிமைந்தரையீண்டொறுப்பவோர்சிறுவனையருள்கென், றன்னமென்னடையதிதியிரந்துரைப்பக்காசிபனுயிரம்பருவ, மன்னிநீபுனிதமாய்த்தவமியற்றின்மகப்பெறுவாயெனவறைந்தான். (கூரு)

ஆயிரம்பருவநோற்பவளொருநாளலேகுழல்விரித்துறங்குதலும், பாயொளிவயிரப்படையினுளைக்கிப்பைங்கொடிவயிற்றினுட்புகுந்து, சேயையேழ்கூறுயறுத்தலுமணங்குசிதைத்திடலெனவிரந்திடலு,மாயிருவிசும்பினேழ்மருத்துவராய்த்திரிவுறவரமளித்தகன்றுன். (கூசா)

அரும்பிளங்கொங்கைத்திதிமுனம்விரதமாற்றுழி யிவ்விடமாகும், பொருந்தலர்க்கடந்தவிக்குவாகுப்பேர்புரவலனலம்புசையென்னுங், கரும்பினைக்கலந்தாங்களித்திடும்விசாலன்கட்டியநகரமீதவன்றன், பொருந்தியமருமான்சுமதியிந்நகரம்புரவுபூண்டிருந்தனனென்றுன். (கூஎ)

கோசிகனிவ்வாறுரைக்குமேல்வையினிற்கோதறுசுமதிவந்தெய்தி, யாசைகடோறுந்தன்புகழ்நிறுவுமையனையளவளாய்த்தழீஇக்கொண்,டேசறுந்தனதுநகர்வயிற்கொணரவியற்றியவிருந்தெதிர்விரும்பி, மாசறுமுனியுந்தம்பியுந்துடரமிதிலையூர்மருங்கணைந்தனனுல். (கூஅ)

கூன்புறக்கனிதாழ்கவிழ்குலேதூக்குங்குறுங்கமுத்தரம்பையிற்றுவி,வான்படர்ந்தோங்குங்கமுகிளம்பாளைகிழிதரவாளைபாய்ந்துழக்குங், கான்படர்மிதிலேவளநகர்மருங்கோர்கண்கவர்சாலையைநோக்கி, யூன்கெடநோற்றமுனிவவிவ்விடமேதுரைத்தியென்றிடமுனியுரைப்பான். (கூகூ)

ஏர்கனிந்தொழுகுமிளமுலைத்துவர்வாயகலிகைநகைவிரிந்தருந்த, வாரொலிகழற்காலிந்திரனெய்திமருவுதல்கோதமனுணர்க்கிச், சீர்கெழுபலம்வீழ்ந்திடுகெனச்சபித்துச்சேயிழைதன்னையூணின்றி, யார்தருமடலேப்பாயலாய்ப்பன்னுளாருபியாயுறைகெனச்சபித்தாள். (௱)

கோங்கிளமுலையாள் முனிவவிச்சாபமொழியுநாட்கூறென
விராமன், பூங்கழற்றுகளுன்மெய்யினிற்கதுவிற்போகுமென்று
ரைத்தனனகலத், தீங்கறும்வலாரிக்கமரர்தென்புலத்தோர்கூற
தாய்த்திகழ்தரவீசம், வாங்கினரமைப்பக்கற்பகநீழல்வானவர்
போற்றவீற்றிருந்தான். (எக)

வேறு.

நீதறுமுனிவனிவ்வாறுரைத்தலுஞ்செம்மல்கேட்டுப்
போதருநெறியினையன்பொன்னடிதுகள்சென்றெய்தக்
கோதமன்பன்னிசாபநீங்கிவெங்குருதிவேற்கண்
மாதுருவாகியாசிவழங்கித்தன்மகிழ்நர்ச்சேர்ந்தாள். (எஉ)

வள்ளலுமிளையகோவும்வான்றவமுனிவன்பின்போ
யள்ளிலைப்பலவினெற்றியளிந்துவீழ்சுளையினூறுங்
கள்ளயின்றிளஞ்சூன்மந்திகடுவனோடினிதினோடும்
வெள்ளநீர்ப்படப்பைசூழுமிதுலைமாநகரம்புக்கார். (எஙு)

சேட்டிளம்பருதிப்புத்தேள்செலவயர்க்கவுள்மான்றே
ரோட்டறநிவர்ந்தசெம்பொற்சாலையுளுலங்கொடிண்டோள்
வாட்டிறலிளையரோடுமறைமுனியெய்தனோக்கித்
தாட்டுணைபணிந்துவெள்வேற்சனகனல்லிருக்கையீய்ந்தான். ()

அருகுறைகுமரர்தம்மையாய்பிழித்தாமமார்பன்
பருகுவான்போலநோக்கிப்பழமறைக்கிழவபோந்த
திருவினர்யாவரென்னத்தயரதன்சிறுவரீசன்
பொருசிலைமதுகைகாண்பானிவ்வுழிப்போந்ததென்றான். (எரு)

விற்றொழிற்கொருவனுயவிராமனைவிழைவினோக்கி
மற்றடந்தோளாய்கேட்டிகவுசிகன்வரலாறென்னப்
பொற்றளிர்பொருவுமேனியகலிகைபொற்பினின்ற
நற்றவக்கிழமைபூண்டசதானந்தனவிலலுற்றான். (எகூ)

கற்றிரள்பிறழுந்திண்டோட்காதிசேயுலகம்யாவு [ல்
மொற்றைவெண்குடையுள்வைத்துத்திகிரியொன்றுருட்டுநாளி
வெற்றிவேற்புளினரோடும்வேட்டமேற்கொண்டுகொன்போய்
நற்றவவசிட்டன்வைகுஞ்சாலையினண்ணினானே. (எஎ)

அருந்ததிகணவன்வேந்தோடளவளாய்முகமன்கூறி
விருந்தினிதளித்தியென்னத்தேனுவைவிழியினோக்க
மருந்தினுமினியவாயவான்சிறப்பியற்றமன்னன்
றிருந்துநற்றவத்தோயிந்ததேனுவையளித்தியென்றான். (எஅ)

என்றலுமறுப்பமன்னன்றேனுவையெதிர்ந்துபற்றத்
துன்றியமயிர்க்கால்தோறும்யவனரைத்தோற்றிவெய்ய
வென்றிவேற்றானைமாட்டவெஞ்சமத்தரசன்மைந்தர்
சென்றிடவுங்கார்த்தான்முனிவரன்செகுத்தானன்றே. (எகூ)

கூற்றமும்வெருவவேந்தன்கொடுஞ்சிலைகுழையவாங்கி
யேற்றருமுனிவர்க்காற்றுதிடைந்தனனுகிமைந்தர்
நூற்றுவர்தம்மினுய்ந்தமைந்தனை நோக்கிவையம்
போற்றுகென்றிமையத்தெய்திபுலனவித்திருந்துநோற்றான். ()

இமையவிற்குரிசிலெய்திவிழைந்தமையுணர்ந்தேனென்னு
வமைவருங்கடவுள்வாளியளித்தலுமரசன்போந்து
கமையுடைவசிட்டன்மெய்யில்விடுத்தவெங்கணைகள்யாவுந்
திமிரமெய்தகிரிற்றண்டந்தீயெழவிழுங்கிற்றன்றே. (அக)

ஆங்கதுகண்டவேந்தனரசர்வெந்திறலையெள்ளி
யோங்கழலூட்டியுண்ணுமுனிவரையுவந்துபோகித்
தீங்கறுமுனிவர்வைகுந்தென்புலமதனிலெய்திப்
பாங்குறத்தழலினுப்பணுயிரம்பருவநோற்றான். (அ௨)

நோற்றலுங்கமலப்புத்தேள்நொய்தின்வந்தெய்தமன்னன்
போற்றலுமுவந்திராசமுனிவனென்றுரைத்துப்போகச்
சாற்றினைநுகர்ந்துசெய்யகண்முகிழ்த்தழலினுப்ப
ணூற்றரும்விரதம்பின்னுமாயிரம்பருவஞ்செய்தான். (அ௩)

விழவுகண்டுயிலர்வீதியயோத்திநாடாளும்வேந்தன்
மழைநிகர்தடக்கைவண்மைவளர்திரிசங்குவென்போன்
றொழுதகுவசிட்டற்போற்றியுடலொடுந்துறக்கமெய்தப்
பழமறைதெரிந்தோரொச்சம்பண்ணுவித்திடுகவென்றான். (அச)

என்னலுமுனிவனெல்லாதென்றலும்புகல்வர்ப்போற்றி
மன்னவன்புரிதிரொன்னமறுத்தலும்பிறர்பாலெய்தி
நன்மகம்புரிவனென்னநான்மறைவசிட்டன்சீறி
நின்னிலைதிரிந்துமற்றோர்நீசனுயுறைதியென்றான். (அரு)

களைகணுபுலகம்யாவுங்காத்திடுந்தலைமைநீங்கி
யுளமெலிவெய்திக்காதிமைந்தனுக்குற்றகூறத்
தளரனீதுறக்கத்துய்ப்பனென்றருந்தவத்தோர்கூவ
வளர்தவவசிட்டன்மைந்தர்மறுத்தலும்வைதுகொன்றான். ()

அழலிடைநறுநெய்பெய்துதனிமகம்புரியத்தேவர்
விழைவொடுமவிசைக்கொள்ளார் விடுத்தலும்வெகுட்சிகூர்ந்து
தொழுதகுசுருவையேற்றிவேந்தனைத்துறக்கத்துய்ப்ப
விழிதொழிற்கிழீண்டெய்தலெனவும்பரிழித்திட்டாரால். (அஎ)

சென்னிகீழாகவீழுந்திரிசங்குவென்னும்வேந்தை
நின்னிலென்றமைத்துவானினிறுவிவாசவன்றன்னோடு
மின்னுமோருலகஞ்செய்வனெனவுடிக்கணங்கள்விண்ணோர்
பன்னருஞ்சராசரங்கள்சிற்சிலபடைத்தானன்றே. (அஅ)

படைத்தநும்மின்றோற்றசிக்கோசிகன்பால்வந்தெய்தி
யடற்கரும்வலத்தோய்நீயிண்டமைத்தவையமையுமுன்னந்
தடுப்பறப்படைத்தயாவுந்தராத்திரிசங்குவோடு
முடுக்கெரியுலகின்பாங்கர்வதிகவென்றுரைத்துப்போனார். ()

கடவுளர்போயபின்னர்க்கவுசிகன்றனைவினைகிக்
குடதிசையதனைநண்ணிக்கொடுந்தவமியற்றுமேல்வைப்
படிபுகழம்பரீடன்பசுவினைமகவான்வெளவ [ன்.
வடுவிலாருசிகன்சேயை வான்பொருள்கொடுத்துக்கொண்டா

பொற்றடந்தேரினேற்றிப்புருடமேதத்துக்காக
மற்றடந்தோளான்கொண்டமறைமுனிபுதல்வனோடுங்
கற்றடிப்படுத்தகிஞ்ஞைசக்கவுசிகன்சாலைநண்ணப்
பற்றறுமுனியைநோக்கிப்பாலகனழுதிட்டானே. (௧௧)

அழுதகண்குழையும்பாலற்கஞ்சலென்றினிதுகூறிப்
பழுதறுமுனிவனின்றமைந்தரைப்பார்த்துநீவிர்
விழைவொடும்பசுவாயிந்தவிடலையைக்காமினென்னத்
தொழுதனர்மறுப்பவேடராகெனத்துணைவின்வைதான். (௧௨)

அந்தணன்புதல்வனுய்யவாங்கவன்செவியினூடு
மந்திரமிரண்டுகூறிமறைமுனிவிடுப்பவேந்த
னெந்திரத்தேரினேற்றிச்சாலையினெய்திப்பூபக்
கந்தினிலார்ப்பனைமைந்தன்கடவுண்மந்திரத்தையோர்ந்தான். ()

அத்தலைப்பமரவெய்தியவியினையடைந்தோமிந்த
வித்தகசிறுவன்றன்னைவிடுக்கெனவிடுத்துவேந்தன்
பத்திமைவேள்விமுற்றிப்பதியினிலடைந்தான்பின்னும்
பொய்த்தலைப்புகாதநெஞ்சப்புண்ணியன்றவத்தினின்றான். ()

காதிசேயாற்றுகின்றதவத்தினைக்கமலப்புத்தேள்
மேதகவியந்துபோந்துமெய்த்தவவிருடியென்ன
வோதினனகலப்பின்னுமொழிவரும்புலன்கள்செற்றுத்
தீதெறிந்தழலினுப்பன்செய்தவமியற்றினானே. (௧௫)

வேறு.

வெண்ணிலாக்கதிர்கள்விழுதுவிட்டொழுகும்பிறைவடஞ்
சுமந்தறவிங்கி, வண்ணமென்சுணங்குபூத்தெழுந்தோங்கும்வன
முலைப்பொறையினிலந்தே, நுண்ணிடைமுரியுமுரியுமென்றே
ங்கிநூபுரமரற்றவெங்கூற்றம், பெண்ணுருக்கொண்டுவருதல்
போற்பெட்பின்மேனகையவ்வுழிபோந்தாள். (௧௬)

விளிம்புபூத்தெறிந்தமேகலையொலிப்பமின்னெனமென்மெல
வொதுங்கித், துளங்கிடைபொல்கமேனகைவரலுங்கோசிகனரு

ந்தவந்துறந்தாங், குளங்கனிந்துருகவாங்கவளோடுமொருபதி
னுயிரம்பருவ, மளந்தறிவரியவின்னலம்பருகியமரரினுளங்களி
த்திருந்தான். (௯௭)

மாயையின்கோட்பான்மேனகையோடுமருவினனெனத்த
னையிகழா,வாயிரக்காதமகன்றமேவேற்றடங்கணமிழ்தினையொல்லை
யின்விடுத்துப், போய்வடதிசையினுயிரம்பருவம்பொறியவித்த
ருந்தவம்புரியச், சேயநான்மலரோன்மாமுனியெனப்பேர்சிற
ப்பொடுமினிதளித்தகன்முன். (௯௮)

முனிவரன்பின்னுமாயிரம்பருவமூச்சவித்தருந்தவம்புரிய
க், கனியுறழ்தீஞ்சொலரம்பையையமரர்விடுத்தலுங்காதிசேய்
முன்னங், தனியவளெய்தப்பாறையாகென்னத்தையலைச்சபித்த
ருமுனிவன், புனிதநல்லொழுக்கம்பூண்டுகீழ்த்திசையிற்போயி
னனருந்தவம்புரிந்தான். (௯௯)

பருவமீரைஞ்ஞூறருந்தவம்புரிந்து பாரணம்பண்ணும்வெ
ஞ்சோற்றைத், தருதியென்றமரர்கோன்மறையவனுயிரத்தலுந்
தயாவொடுமளித்துப், புருவம்த்தியையினிருவிழிசேர்த்துப்புல
னெடுமூச்செறாதவித்துத், திரமுறுமுனிவனுயிரம்பருவந்தீயி
டையருந்தவம்புரிந்தான். (௧00)

பேசருந்தவத்துமுனிவரனுச்சி பிளந்தழற்பிழம்பெழுந்
தோங்கி, மாசறுபுவனமெங்கணும்புகையாய்மண்டலுமடவன
முகைக்கு, மீசனுங்கெய்திமகிழ்ந்தனம்பிரமரிருடிநீயெனமொழி
கென்னப், பாசடைக்கமலப்பொகுட்டினேனைக்கப்பழமறைவசி
ட்டனையடைந்தான். (௧0௧)

அன்னமாமுனிவனிவனெனவுரைத்துச் சனகனன்மரபுமா
ங்கியம்பிப், பன்னருங்கேள்வியுறுசதானந்தனிருத்தலுங்கவுசிக
ன்பருதி, தன்னுயிர்குலத்தினரசர்தந்தோற்றமுமுறைதுந்தரள
வெண்கவிகை, மன்னவன்சனகனுணர்ந்துளங்களிப்பமகிழ்வுட
னினிதெடுத்துரைத்தான். (௧0௨)

வேறு.

நல்லெழிற்புதல்வரின்றிவரைமகட்போற்றநங்கை
யல்லியங்கமலையன்னசீதையையரிதிற்றந்தாள்
வல்லியோர்பாகனம்பொன்வரிசிலைநல்கியிந்த
வில்லிறுத்தவற்கேயுன்றன்மெல்லியற்கொடுத்தியென்முன். ()

எனப்புகன்றிலங்குவைவேற்சனகனென்றுயர்த்தோன்றந்த
தனிச்சிலைகொணர்மினென்னச்சகட்டினிற்கொணர்ந்துகாட்ட
முனிக்கிறைகண்ணிற்றண்டமுகினிறப்பவளச்செவ்வாய்ப்
பனிப்பிறைபூண்செய்தோளான்பருதியினிழிந்துசென்முன். ()

சென்றதுமெடுத்துநாணிற்செறித்ததுந்திரண்டசெம்பொற்
குன்றவில்லனையவல்விற்குழைத்ததுமிறுத்தவாறு
மொன்றிடாவிமையாநாட்டத்தமரருமுணரகில்லா
ரென்றிடிலிமைத்துநோக்குமனிதரோவினிதுகாண்பார். (க0ரு)

முருகுறழ்தோற்றத்தையன்மூரிவில்லிறுத்தலோடு
முருகுபெருவகைவெள்ளமுவட்டெடுத்தொழுகவேந்தன்
கருணைகூர்முனியைநோக்கிக்கடிமணமுடித்தற்கின்னே
தருகெனானையவண்கைத்தயரதற்குணர்த்துகென்றான். (க0சா)

கோசிகன்விடுத்தவோலைகாண்டலுங்குமரரோடுந்
தூசுலாம்பருவமல்குற்றொண்டைவாய்மகளிரோடு
மூசுவண்டரற்றுந்தண்டார்த்தயரதன்முனிவர்சூழக்
காசுகண்படுக்குமாடக்கடிநகர்மிதிலைபுக்கான். (க0எ)

கூடவனையலறியேங்கக்குணில்பொருமுரசுமார்ப்ப
மிடைதிரைக்கடலந்தானையொளிறுவேற்சனகன்போந்து
தடமுலைப்பவளச்செவ்வாய்ச்சீதையைத்தழல்சான்றாக
மடலவிழ்துளவினாற்குநீரொடும்வழங்கினானே. (க0அ)

உருவவோடரிக்கட்செவ்வாயூர்மிளையென்னுமாதை
யருவரையனையதிண்டோளிலக்குவற்களித்துநாளு
மருவலர்க்கடந்தவைவேற்குசத்துவசன்றன்மக்க
ளிருவரைப்பரதனுக்குஞ்சத்துருக்கனுக்குமீய்ந்தான். (க0கூ)

மணவினைமுடிந்தபின்னர்மன்னர்கோன்மைந்தர்சூழப்
பணிவரும்பவளத்தாற்றுச்செந்நலம்படப்பைவேலி
யணிகெழுமிதுலைநீங்கியகநகர்க்கேகுமேல்வைத்
துணிகதிர்ப்பரசுராமனிராமனைநோக்கிச்சொல்வான். (கக0)

பாறினன்சுழலுஞ்சூலப்படையினோனளித்தவில்லை
யாற்றல்கோலிறுத்ததென்னவணிமணிமுறுவல்கோட்டி
யேற்றுதியிந்தவில்லென்றளித்தலுமிமைப்பினேற்றிக்
கூற்றுறழ்பகழிக்கென்கொலிலக்குநீகூறுகென்றான். (ககக)

ஈட்டியதவங்கள்யாவுமெய்துகொன்றிடுதியென்னப்
பூட்டியபகழியொன்றாற்பொன்னகர்ப்புகவுமாற்றி
வாட்டிறலிளையரோடுமன்னெடுஞ்சிலையிராமன்
சேட்டிளம்பருதிதாழுமணிமதிலயோத்திசேர்ந்தான். (ககஉ)

இராமனவதரித்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—அகூஎ.

இருபத்திரண்டாவது

இராமன்வனம்புகுந்தவத்தியாயம்.

நாகிளங்கமுகின்மிடறுகொப்புளிக்குநறவுபாய் வயல்விளிம்புடுத்த, கேகயத்தரசர்க்காணியவிருப்பிற்பரதனுமிளவலுங்கிளர்ந்த, வோகையினடைந்தகாலையினென்றுருதிரமுண்டூன்சுவைத்தொளிரும், வாகைவேலரசன்சுமந்திரன்முதலாமந்திரத்தலைவரோடுரைப்பான். (க)

கற்பகக்கானத்தரசுவீற்றிருக்குங்கடவுளுமேக்கறவெய்தப், பற்பலகாலமுலகெலாமளித்தேனினியொளிர்பருமணிமவுலி,யற்பினினிராமற்கனிபெறச்சூட்டியகனிலமவனடிபடுத்தி, யெற்பெழுந்துடலமுணங்கமாதவத்தினிருப்பதென்கருத் தெனவிசைத்தான். (உ)

காங்கெரிகவிழ்க்குங்கடகநீண்முன்கைகாவலன்மொழியெதிர்விரும்பி, யாய்ந்தநூற்கேள்விவசிட்டனேமுதலோரிராமனுக்காங்கதுவிளம்பி, யேங்கெழினகரம்புனைகெனமுரசமியம்பொலிகேட்டலுங்கூனி, பாந்தள்வாய்ப்படுத்தபறவையிற்பதைத்துக்கேகயன்பாவைபாலடைந்தாள். (ங)

மாற்றவண்மைந்தன்மணிமுடிபுனைந்து மாநிலம்புரக்கநின்மைந்த,னேற்றுழைவருந்தியிழிவுறுதிராமற்கெரிமணிமவுலிசூட்டிடுதல்,பாற்றினஞ்சுழலும்பருதிவேலரசற்குரைத்துநீவிலக்கெனப்பணிப்ப, வேற்றடங்கண்ணிமன்னவனுழைப்போய்முனிவொடுமென்மெலவுரைப்பாள். (ச)

முன்னநீதருவலென்றநல்வரங்களிரண்டுமீண்டுதவெனமொழிய, வென்னுயிர்தருதியென்கினுமளிப்பன்கேட்கெனவிருநிலமுழுதும், பன்னருஞ்சிறப்பிற்பரதனுக்களிப்பதொருவரமீரெழுபருவம், பொன்முடிதுறந்துகானிடையிராமன்போவதோர்வரவெனப்புகன்றாள். (ரு)

முரசொலிகேட்டவசுணமென்புள்ளின்மூச்சவிந்தொருவழிதேறிப், பரதனுக்குலகமளிப்பனென்மைந்தன்படர்வனம்புகாதளித்திடுகென்,றரசர்கோனிரப்பமறுத்தலுமெய்ம்மையாவியிற்சிறந்ததென்றளித்துப், பொருசிலையிராமன்றனைத்தருகென்னச்சுமந்திரனெடுந்தனிபுகன்றான். (சு)

மைம்முகில்கமலக்காடுபூத்தனையமணிநிற வண்ணன்முன்னெய்திக், கைம்மலர்குவித்துச்சுமந்திரனழைப்பக்கலினமான்றேரினிதிவர்ந்து, தெம்முனைகடந்தசினவுவேற்காளைதயரதன்மருங்குசென்றெய்தி, யெம்மையாளுடையாயழைத்ததேனென்னவிறைவனெஞ்சயர்ந்துசோர்ந்தனனால். (எ)

கல்லும்வல்லிரும்பும்வெண்ணையென்றுரைப்பக்காழ்படுமனத்தகைகேசி,மல்லடுதிணிதோட்பரதனுக்குலகம்வழங்கிநீயே

யிருபருவங், கொல்புலிவழங்குகானிடைத்திரியக்கூறினனுங்
கதையென்றுரைப்ப, வில்விழுங்குயர்தோட்செம்மல்நீபணித்தவி
லக்கலமெனத்தொழுதகன்றான். (அ)

கோசலையுறையுங்கோயிலுளெய்திக்கொற்றவன்பணியுரைத்
துள்ள, மாசறத்தேற்றிச்சுமத்திரையோடுமன்னுமைப்போகெ
னக்கூறிப், பூசல்வண்டறைதாரிளையவனோடும்புரிநரம்பிரங்குதீ
ங்குதலைத், தேசுகண்படுக்குஞ்சிறைநபின்றொடரத்தயரதன்மரு
ங்குசென்றடைந்தான். (௯)

தயரதன்வருத்தநோக்கியுள்ளழிந்துசுமந்திரன்றளர்வொடு
மாழ்கி, யயர்வொடுங்கலுழ்ந்துகொடியகைகேசிமுகத்தினைநோ
க்கிமீதுறைவான், செயிரறுகடவுண்முனிவனல்லருளாற்றிருவ
ளர்கேகயத்தரச, னுயிருடையெவற்றின்பாடையுமுணர்ந்தாங்
கொழுகுநாடன்னின்மற்றொருநாள். (௧0)

மற்றடந்தோளான்மனைவியோடினிதின்வைகியமலரணைப்
புறத்திற், சிற்றெறும்பொழுங்கிற்சேறலுமரசன்சேவடிகடக்கரி
தென்ன, வுற்றயல்மேவுமெறும்புமற்றயலோரெறும்புடன்வெ
குண்டுரைத்திடுதல், கொற்றவேல்மன்னனுணர்ந்தனனகைப்ப
க்கோற்றொடிநகைத்ததென்னென்றாள். (௧௧)

ஈங்கிதுநுவலின்முடியுமென்னுவி யியம்பலனென்னவுமறு
த்துக், கோங்கிளமுலையாள்கூறுகென்றுரைத்துமுனிதலுங்கோ
வடுவேலான், றீங்குறுமுள்ளத்தரிவைதோணலத்திற்றீதுவே
றின்றெனவிடுத்தா, னுங்கவள்குலத்திற்றோன்றியவுனக்குமரு
ளுறுமோவெனவறைந்தான். (௧௨)

மழையுறழ்தடக்கைத்தயரதன்மனைவாழ்மங்கையர்வயிறலை
த்தேங்கி, யழுகுரலோதைகடையுகமுடிவினார்கலிபுடைத்தென
வொலிப்பக், கழைசுழிதறுகட்கடாக்களிறனையான்காவலன்ப
ணிதலைக்கொண்டு, குழைபொருதடங்கட்கொடியொடுமிளைய
கோவொடும்வளநகர்கடந்தான். (௧௩)

கொடுஞ்சிமான்றடந்தேர்சுமந்திரன்விடுப்பக் கோனகரமு
துபின்றொடரத், நடந்திரைக்கரத்தானவமணிகொழிக்குங்கங்க
யங்கரையினிற்சார்ந்து, தொடர்ந்துபின்செலவோரறிவுறுவண்
ணந்துன்றிருளிடைமறைந்தேகி, மடங்கலேறனையான்முனிவர
ருறையுஞ்சாலையின்மகிழ்வுடனடைந்தான். (௧௪)

அலத்தகமருட்டிவருந்துயர்காவினணிகொள்சிறடியணங்
கோடு, மிலக்குவனொடுஞ்செல்வழிப்போந்தகுகனொடுந்தோழ
மையெய்தி, வொலித்தடந்திரைநீர்க்கங்கையாறகன்றுபரத்துவ
ற்கண்டவனருவிச், சிலைத்தழும்பிருந்ததடம்புயத்தண்ணல்சி
த்திரக்கூடமெய்தினனால். (௧௫)

கோதைவேற்றடக்கைத்தயரதனுக்கு கோசலைகேட்டியா ன்முன்ன, மேதமில்வேட்டமாடுவானெய்திக்கங்குலினிருடிதன்மகவைத், திதியல்விலங்கென்றெய்துவிடுத்திடலுஞ்சிறுவனன்மொழியினைக்கேட்டுக், காதலோடெடுத்துமற்றவன்றந்தைகைக்கொடுத்துள்ளவாறுரைத்தேன். (கசா)

மத்தரின்மயங்கிக்கண்ணிலாமுனிவ னிறந்திடுமைந்தனைத்தழுவிப், புத்திரசோகத்திறந்திநீயென்னப்புகைபெழவெனைமுனிந்துரைத்துச், சித்தமாழாந்துபன்னியோடெய்திச்சிறுவன்வெந்தழல்புகுந்தவிந்தார், வித்தகமுனிவன்சாபமீதென்னவிளம்பினனயருமேல்வையினில். (கஎ)

சித்திரக்கூடத்திராமனெய்தியதுசெப்பிய சுமந்திரன்மொழியா,மத்திறம்ரசன்மார்பகம்பிளப்பவிறந்தலுங்கனவுகண்டுழுங்கி, முத்தவெண்கவிகைப்பரதனுமொன்னார்முடைகமழ்குருதிவேற்றடக்கைச்,சத்துருக்கினனுங்கேகயமகன்றுதண்புனலயோத்தியிலடைந்தார். (கஅ)

மற்றடர்திணிதோண்மைந்தர்கைகேசி மலரடிவணங்கினர்நிற்ப, வுற்றவையனைத்துமாங்கவளுரைப்பவுருமுவீழரவெனநடுங்கிப், பெற்றவெங்கூற்றைமுனிந்துபோயரசனடியின்வீழ்ந்தழுதுபேதுறலும், கற்றவர்தெருட்டத்தாதையைவேள்வித்தழலினிற்கடன்கழித்தனரால். (ககூ)

களைகணுபுந்தையளித்தவிவ்வுலகங்காக்கெனவசிட்டனைமுதலோர், தெளிவுறவுரைப்பமறுத்தனனுகிச்சித்திரக்கூடம்வந்தெய்தித், தளையவிழ்கமலக்கண்ணனைவணங்கித்தந்தைவிண்ணடைந்தமைசாற்ற,வுளமெலிவெய்திக்கலுழ்ந்துதன்றந்தைக்குறுகடன்யாவையுங்கழித்தான். (உ0)

புரவுபூண்டுலகமளிப்பதுன்கடனிற்போற்றலென்கடனெனத்தொழுது,பரதன்வீழ்ந்திரப்பத்தழீஇக்கொடென்வாய்மைபழுதுறுதீரெழுபருவ, மரசனுயுலகமளித்திநீயென்னபணிந்தவன்பாதுகையிரண்டு, மெரிமணியிமைக்குமவுலியிற்புனைந்துநந்தியம்பதியிடையிருந்தான். (உக)

வேறு.

சித்திரக்கூடம்நீங்கித்திசைமுகனனையகேண்மை
யத்திரியுறையுஞ்சாலையடைந்தனன்சூயைபன்பிற்
கொத்தலர்மாலைசாந்தஞ்சானகிக்களிப்பக்கொண்டு
தத்துநீரருவிச்சாரற்றண்டகாரணியஞ்சார்ந்தார். (உஉ)

கழைபொருதுகுத்தமுத்திற்கவையடிபெயர்ப்பமாழ்கி
புழையினமொதுங்குகானினுறுதலுமுருமுச்சீற்றத்
தழலுமிழ்ந்குருதிப்பேழ்வாய்விராதனுயிழையைவெளவ
நிழலுமிழ்வாளின்வீட்டிநிலத்திடைப்புதைத்திட்டாரால். ()

அங்கவனெழுந்துமுன்னுறும்புருவரம்பைதன்றற்
பொங்குயிர்க்குமரனிட்டசாபம்போக்கினையென்றேத்தித்
தங்குதம்பதியினேகச்சரபங்கன்றனக்குமீளாத்
துங்கநன்முத்திநல்கித்தொன்னெறிசெல்லுமெல்லை (உச)

பசுவின்றோல்மெய்யிற்போர்த்துப்பாய்புலிகிரியுமாபோல்
வசையறுமுனிவர்வேடந்தாங்கியும்வனத்திலுள்ள
நிசிசரர்கோறலென்கொனீதியோவென்றுசீதை
வசிமுதற்படைகடாங்கில்வன்கண்மையடுக்குமன்றே. (உரு)

மன்னவோர்காதையுண்டுகேட்டியெம்பெருமவென்னாத்
தன்னிருகைகள்கூப்பிச்சானகியுரைக்கலுற்றாள்
முன்னமோர்முனிவன்செய்தவத்தினையழிக்கமுன்னிப் [னான்
பொன்னகர்க்கிறைவனோர்வாள்முனிகையிற் கொடுத்துப்போ

மற்றதுகாத்தல்வேண்டிவயிரவாள்கையிற்கொண்டு
நற்றவன்கொடிகள்வன்புன்மரங்குறைப்படுத்துப்பின்ன
ருற்றபல்விலங்கியாவுமொறுத்துவாள்பிடித்தவாற்றாற்
பற்றுதீநரகிலெய்திப்பருவரலுழந்தானன்றே. (உஎ)

ஆதலால்வரிவில்லேந்தியரக்கரைமுனிந்துகோறல்
தீதெனவுரைப்பவையன்சீதைசொல்மகிழ்ந்துகேட்டு
மாதவர்தமக்குமுன்னம்வஞ்சினமுரைத்தவாற்றாற்
பாதகர்க்கொல்லினன்மைபயக்கிடும்பழியுறாதால். (உஅ)

அன்றியுமரசரோதிதரிப்பதேயறமதாகு
மன்றலங்குழலாயென்னவரிசிலையிராமன்கூறித்
துன்றருந்தவத்தின்மிக்கசுதீக்கணன்வழிமுன்காட்டத்
தென்றமிழ்முனிவன்சாலையணித்தெனச்செல்லுமெல்லை. ()

செந்நெறியதனின்மற்றோர்தாமரைமடுவிற்றெய்வ
நன்முழவியம்பக்கேட்டுநண்ணுமோர்முனிவனோடு
மன்னுமீதென்கொலென்னமறைபயில்மாண்டுகண்ண
னென்னுநன்முனிவனிருளிருந்தவம்புரியுமெல்லை. (௩0)

அத்தருமுனிவன்செய்யுமிருந்தவமொழிப்பத்தெய்வக்
கூத்தியரைவர்தம்மைவயிரவாட்குருசிலேவ
வேய்த்தடந்தோளாரொய்தமுனியுளம்விழைந்துவாவி
நீத்தமோர்சாலையாகத்தவத்தினனிருவியன்றேன். (௩க)

திங்கரும்பனுக்குஞ்செஞ்சொற்றெரிவையர்நலனுண்டாட
வாங்கவர்சதியினோடும்மலையியம்முழக்கமென்ன
வாங்குவிற்றடந்தோளண்ணல்மற்றவைவிரும்பிக்கேட்டு
நீங்குழியிளவலோடுமிராகவனிகழ்த்தலுற்றான். (௩உ)

வில்வலன்றனைவனுகவெய்யவாதாபிதன்னை
யொல்லையிற்றகரதாக்கியொறுத்தவூன்புழுக்கலாங்குப்
புல்லியமறையோர்க்கூட்டிப்போதுகெனியம்பவெய்யோன்
வல்லையின்முனிவர்வியவயிறுபோழ்ந்தேகுவானுல். (௩௩)

செந்தமிழ்மணக்குஞ்செவ்வாய்க்குறுமுனிதனக்குத்தியோன்
வெந்திறற்றம்பிதன்னையின்னணம்விருந்துசெய்ய
வந்தமில்வலியோன்றன்னையகட்டிலுளறுத்தவெற்றி
மைந்துடைமுனிவன்சாலையிதெனவழங்கலுற்றான். (௩௪)

தமிழ்முனிசாலையெய்தியிறைஞ்சலுந்தவத்தின்மிக்கோ
னுமிழ்கதிர்வாளும்வில்லுந்தூணியுமுதவக்கொண்டாங்
கமைபுறழ்தோளியோடுமையனுமிளையகோவுங்
கமழலர்துறைசூழ்பஞ்சவடியினிற்கடிதுசென்றார். (௩௫)

அவ்வழியெருவைமன்னன்சடாயுவந்தணுகலோடுஞ்
செவ்விசேரிராமனேக்கியாரைநீசெப்புகென்ன
வெவ்வெவர்த்திசையும்வென்றதயரதன்றேழன்பானென்
கவ்வையின்மரபின்செய்திகேளெனக்கழறலுற்றான் (௩௬)

ஆசறுதக்கனின்றவறுபதுமகளிர்தம்மி
லேசறுமெண்மர்தம்மைக்காசிபற்கீய்ந்தானந்தப்
பாசிழைமகளிர்தம்மிலதிதிமுப்பான்முக்கோடி
தேசுறுமமரர்பெற்றாடிதிதயித்தியரையீன்றாள். (௩௭)

தனுவய்க்கிரீவற்றந்தாள்காளிகாளிகன்றனேடும்
புனிதமாநாகற்றந்தாள்தாம்பிரையென்னும்பூவை
செனிகிரவுஞ்சிபாசிதிருதராட்டிதியினேடுங்
கனிமொழிச்சுகியென்றேதுங்கன்னியர்தம்மைப்பெற்றாள். ()

பாசிபாசத்தையீன்றாள்செனிபருந்துவணமீன்றாள்
தேசுடைக்கிரவுஞ்சியென்பாள்கூகையைச்சிறப்பினீன்றா
ளாசறவுயர்ந்தசீர்த்திதிருதராட்டிநல்லன்ன
மேசறுநேமிப்புள்ளுக்கானனமிவற்றையீன்றாள். (௩௯)

வேறு.

சுகியெனவுரைப்பாணைகையினைத்தந்தாள்நகைநோழும்வி னதையைத்தந்நாள், துகளறுகுரோதவசையரிமிருகிசுவேதை மாதங்கிசார்த்தூலி,திகழ்தருசுரசைகத்துருச்சுரபிபத்திரமதை யுடன்சிறப்பின், வகைபடுமிருதமங்கையையீன்றாள்மிருகிநீள்மி ருகமீன்றனளே. (௪௦)

உரைத்திடுமிருகமங்கைவெங்கரடிசவரிமான்கவரிமோனுயி ர்த்தாள், நிரைத்தசிர்ப்பத்திரமதைபிராவதையையீன்றனளிரா வதைநிகரில், வரைக்கிணையயிராவதத்தினையீன்றாளரிக்குரங்க

னித்தனன்மானம், பரித்தசார்த்தூலிமந்தியோட்டழல்வாய்ப்பார்
ப்புளிதன்னையின்றனளே. (௬௧)

சொற்றமாதங்கிமாதங்கமுயிர்த்தாள் சுவேதைதிக்கயத்
தினைப்பெற்றாள், மற்றையசுரபிரோகணியோடுந்திருவியைமகி
ழ்ந்தினிதளித்தா, ளூற்றகந்திருவிகுதிரையையுயிர்த்தாளுரோ
கணிபசுவினைப்பெற்றாள், பற்றுறுசுரசைநாகங்களீன்றாள்கத்து
ருப்பன்னகமுயிர்த்தாள். (௬௨)

மனுவெனவுரைப்பாண்முகத்தினின்மார்பிற்றுடையினில்
வழங்குறுகாலிற், புனிதமாமறையோர்வேந்தர்நல்வணிகர்பின்
னவர்தமைப்பொறையுயிர்த்தா, ளனலையென்றுரைப்பாள்தரு
க்களைப்பயந்தாள்வினதையென்பவளருணனையுந், துனைவினிற்ப
றக்கும்புள்ளரசினையுந்துகளறவினிதினீன்றனளால். (௬௩)

அருணனென்றுரைப்போனருள்செய்சம்பாதி தன்னுடன்
சடாயுவென்றுரைக்கு, மெருவையின்வேந்தாவென்னையுமீன்
றனனமகிழ்ந்தினிதெடுத்துரைத்து, வரிசிலையுழவநிற்புறங்கா
த்திங்கிருக்குவனென்றயல்வனத்தின், விரிசிறைப்பறவையேக
லுமிராமன்விழைவொடுமாங்கமர்ந்தனனால். (௬௪)

வேறு.

சென்றவணிருக்குமேல்வைச்சிலைத்தழும்பிருந்ததிண்டோட்
குன்றினைநோக்கியாசைகூர்ந்துசூர்ப்பனகையென்னும்
வன்றிறலரக்கிபோந்துமானிடவுருவமெய்தி
யின்றெனைமருவியாவிதருகெனவிரந்துசொன்னாள். (௬௫)

அய்யனுமசதியாடிச்சினமொழியறையுமேல்வைப்
பையரவல்குற்செவ்வாய்ச்சீதைபாங்கெய்தனோக்கிக்
கையினலரக்கிவௌவவிளையவன்கண்டுகாதும்
வையவன்மூக்குங்கொய்தான்கரனடிவீழ்ந்துசொன்னாள். (௬௬)

அவ்வுரைகேட்டலோடுமழலெழவுருத்துப்பொங்கித்
தெவ்வடுகரனும்விற்றூடணனும்வேற்றிரிசிராவும்
வெவ்வழற்சூலமேந்திவிரிகடற்றானையோடு
மெவ்வெலாத்திசையுஞ்சூழ்போந்திராமனையமரினேற்றார். ()

எற்றவருடலம்புன்றோய்தெறச்சியென்பிருண்மூளை
விற்றுவீற்றுகவிழவெஞ்சிலைக்கலவிகாட்ட
வூற்றிருந்தொழுகுங்கண்ணாளிலங்கையினெல்லையெய்தி
யாற்றலங்குருதியொள்வாளிராவணற்கறியச்சொன்னாள். (௬௮)

கேட்டலும்வெகுளியோடுகாமமுங்கிளர்ந்துபொங்க
வாட்டிறலரக்கர்கோமான்மாமனல்லிருக்கையெய்தி
யூட்டரக்குண்டசெவ்வாயொண்டொடிச்சீதைகாணத்
தீட்டரும்படிவமானாய்ச்செல்லெனமருத்துச்சொல்வான். (௬௯)

மனாயுருவாகமுன்னர்வாளெயிற்றரக்கர்மற்றுந்
திருவரோடிராமன்முன்னமெய்தலுமவன்கையம்பாற்
பொருவருமென்றோடெய்துமிருவரும்பொன்றல்செய்தார்
வெருவியான்மாயைதன்னாலிலங்கையின்மேவினேனால். (ரு0)

கத்துருமகவானானைக்கருப்பெனவினதையென்னு
மைத்தடங்கண்ணாள்வெள்ளையென்றலுமைந்தர்செய்யும்
வித்தகச்சூட்சிதன்னால்வினதையைத்தாசியாக்க
வந்தலைக்கலுழனன்னையருஞ்சிறைநீக்கவெண்ணி. (ருக)

மேவிடுநெறியிலீராறியோசனையகன்றமேனிப்
பாவடிக்களிறுமன்னப்பரப்புறுமாமையொன்றுஞ்
சேவடியுகிரினள்ளிப்பழுமரஞ்சேர்தலோடு
மாவெனயாருமார்ப்பவதன்பணையொடிந்ததன்றே. (ருஉ)

நூறியோசனையினுற்றபணையினைநொய்திற்கவ்விச்
சேறலுமதனிற்சேரும்வாலகில்லியராந்தீதி
லாறறிமுனிவர்தம்மைமென்மெலவகற்றிவிண்போ
யூறமிர்தெடுத்துத்தாயர்க்குதவிவன்சிறையுந்தீர்த்தான். (ருங)

ஆங்கவன்வதிந்தவாலிற்றீத்தலையாற்றுகின்ற
தீங்கறுதவத்திற்றீரேனென்றலுமரக்கன்சீறி
வீங்குதோட்கரனைக்கொன்றதகம்பன்னவிளம்புஞான்று
மீங்குவந்துரைத்தேனென்றுமறுத்திவைபோல்வசொன்னாய். ()

எங்கைதன்செவியுமுக்குமிகலின்றியறுத்தவெய்யோன்
மங்கையையவ்வமானாய்ச்சென்றவண்மயக்கிடாயேற்
றுங்கநீண்மவுலிகொய்வனென்றலுந்துணக்கமெய்தி
யங்கவன்முன்னம்பொன்மானுருவமைந்துசென்றான். (ருரு)

பொற்பிதிரேய்க்கும்புள்ளிப்பொறியிளமானைவெளவி
யற்பினிற்றருதியென்னவிராமனுக்கமிர்தச்செவ்வாய்க்
கற்பினுக்காசிகூறத்தொடர்தலுங்கடிதினோட
விற்பழுத்துமிழும்வெய்யகணையொன்றால்வீழ்த்தினானே. (ருசா)

வீழ்தருபொழுதிற்சீதாயிலக்குவவென்னவீழு
மாழ்துயர்மொழியைக்கேட்டவணியிழையிளையகோவை
வாழியெங்கோமான்செய்திகண்டிவண்வருதியென்னத்
தாழிருந்தடக்கையயன்றளர்வொடுங்கடிதுபோனான். (ருஎ)

இருவருமகன்றவற்றநோக்கியவிலங்கைவேந்த
னருமறைபறையுமுக்கோற்பகவனாயருகினெய்தத்
திருவனாளையன்வேள்வித்தீயினிலொளிப்பச்செந்தீ
மருவருமாயாசீதைவகுத்துமுன்விடுத்ததன்றே. (ருஅ)

சீதையென்றிலங்கைவேந்தன்சில்லியந்தேரேற்றிப்
போதலுஞ்சடாயுவெம்போர்புரியவொள்வாளில்வீழ்த்தி
மூதெயிலண்டகோளமுகடுயரிலங்கையெய்தி
மாதினையசோகநீழலாக்கியர்மருங்குவைத்தான். (ருசு)

ஆங்கிவைநிற்கவெய்துமிலக்குவனிராமன்செய்ய
பூங்கழல்வணங்கியாங்கணுற்றவைபுகலலோடும்
வாங்கியசிலையோன்சாலைமருவினனணங்கைக்காணா
தேங்கிவெய்துயிர்த்துமாழ்கியெங்கணுந்துருவிப்போனான். ()

அறைகழல்வீரரெய்துநெறியினிலமரர்கோமான்
சிறையரிவனையின்வீழ்ந்தசடாயுவைத்திகைத்துநோக்கிப்
பெறலருங்கற்பிற்சீதைக்குற்றவைபேசுமெல்லை
மறிதலுமவற்குச்செந்தீக்கடன்கழித்தகன்றார்மன்னோ. (சுக)

நொச்சிமென்போதுவிள்ளுமிருளுநுண்புனற்குச்செல்லு
மச்சணங்கையில்வில்லேந்துமிலக்குவனயோமுகிப்பேர்
நச்செயிற்றரக்கிமூக்குநாக்கொடுங்கொய்தபின்னர்
கச்சமால்களிறுபோல்வார்கவந்தன்வாழ்நகரம்புக்கார். (சுஉ)

மையல்மால்யானையாதிவிலங்கெலாம்வயிற்றினூடு
கையரிக்கொண்டுவெய்யுங்கவந்தனைச்செகுப்பனென்று
மொய்கழலியக்கனாகிமுறையினிற்பணிந்துபோற்றி
யையன்மீர்சவரிதன்பாலடைகெனவடைந்தாரன்றே. (சுங)

அருந்தவத்துணங்குமேனிச்சவரியுமடகுமூலம்
விருந்தளித்தன்னாள்கேட்டிவிரிதலைமதங்கவெற்பிற்
பொருந்தினன்சுக்கிரீவனவனொடுநண்புபூண்டு
திருந்தலர்ச்செகுத்தியென்னவுரைத்துநன்முத்திசேர்ந்தாள். ()

வேறு.

மையகார்நிறவண்ணனுமிளவலுமணிதா
ழையதண்புனற்பம்பைமாநதிமருங்கணுமன்
பொய்யில்வாய்மைகேட்டளவளாயவனொடும்போந்து
செய்யதாமரைநாயகன்மதலைபாற்சேர்ந்தார். (சுரு)

தனிப்பருந்திறற்சுக்கிரீபனைத்தழல்சான்றாப்
பிணித்தவன்பினிற்பெட்பொடுந்தோழமைகொள்ள
வணக்குவெஞ்சிலைகொடுங்கணைவாலிமார்புருவப்
பணித்தியென்றலும்பங்கயக்கண்ணனேர்ந்தனனால். (சுசா)

வாலிதன்றிறலுரைக்குவன்மகிழ்ந்துகேட்கென்னச்
சிலமெய்தியசுக்கிரீவன்றெரிந்துரைப்பா
ஞலமன்னவயாவியென்றுரைத்திடுமவுணன்
காலனன்னவோர்வாலியைக்கடுஞ்சமர்க்கழைத்தான். (சுஎ)

ஆங்கவன்றனைத்துடர்ந்துபோய்பாதலத்தணைந்து
வீங்குதோளுடையவுணனதாருயிர்வீட்டி
யீங்குறுமையினிறந்தனனெனமனத்தெண்ணி
நீங்குபாதலமடைத்தியானெடுநகர்புகுந்தேன். (௬அ)

வாலியாருயிர்மறிந்தனனென்றெனக்கமைச்சர்
கோலநீண்முடிசூட்டலுங்கொடுந்தொழில்வாலி
காலினூற்பிலமடைத்திடுங்கல்லினையுடைத்தென்
பாலடைந்தியானிரப்பவும்பருவரல்விளைத்தான். (௬௯)

மந்திரத்தினைக்கடலினைமற்றொழிற்கழைத்துத்
துந்துமிப்பெயரரக்கனதாருயிர்தொலையா
வுந்திமேலெடுத்தெறிதலுமதங்கருற்றுறையு
மிந்தமாதவச்சாலையினெய்திவீழ்த்ததுவே. (எ0)

மதங்கமாமுனியாங்கதுநோக்கியவ்வாலி
கதங்கொடீங்குறிற்கதிர்முடித்தலையொருநூறு
விதம்படத்தனிதெறிக்கெனவெகுண்டுரைத்தகனு
லதிர்ந்துவாலியிங்கணைவுறானெனவிவணமர்ந்தேன். (எக)

துந்துமிப்பெயரரக்கனதென்பிதுதுனைவி
னந்தரத்தெடுத்தெறிகெனவிரவிசேயறைய
மந்தரக்கிரியனையதைமண்ணிவிரற்றலையா
லுந்தவையிரண்டியோசனைபொல்லையேகியதே. (எ௨)

காழ்கொண்டோங்கியெண்டிசையினுங்கவடுவிட்டுயர்ந்த
வேழமார்மரமுருவிடவெய்கெனவிராமன்
சூழ்தடக்கையினூற்றலந்தடஞ்சிலைகுனித்துப்
பாழிமாமரமுருவிடவோர்கணைபணித்தான். (எ௩)

வில்விழுங்குதோளையனதாற்றலைவியந்து
கொல்சினத்தவாலியைக்கதிர்சேயறைகூவ
மல்லினூலவனிவன்வலிதொலைத்தலுமாழாந்
தொல்லைமீண்டகுதுரைத்தலுமிராகவனுரைப்பான். (எ௪)

வேறுகண்டிலநுங்களையென்றுவில்வீர
னூறுதேமலர்ப்பிணையலொன்றணிந்தமருட்டிறச்
சேறியென்றலும்வாலியைச்சென்றுபோர்க்கழைப்ப
வேறிரண்டெதிர்ந்தமர்புரிந்தாலெனவேற்றூர். (எ௫)

ஏற்றவெஞ்சமர்புரிதலுமிராமன்வில்வணக்கிப்
பாற்றினஞ்சூழன்றொன்னலர்நிணப்புலால்பருகி
யூற்றிருந்துநெய்த்தோருமிழ்பகழியொன்றுகைப்பக்
கூற்றுமஞ்சுறும்வாலிதன்னுயிர்குடித்ததுவே. (எ௬)

பருதிவானவன்மைந்தனவ்வுலகடிப்படுத்துப்
புரவுபூண்டிடப்பொழிகதிர்மணிமுடிபுனைந்து
கருவிவான்பொழிகாலமாங்கொழிந்திடுகாறு
மருவிதூங்குயர்பிரச்சிரவண்மலையமர்ந்தார். (எஎ)

சிறந்தமல்லலந்திருவினுலிரவிசேய்நம்மை
மறந்தனன்கொலென்றிளவலைவிடுத்தலும்வணங்கி
யறங்கிடந்தொளிர்நெஞ்சினன்கிட்கிந்தையடைந்தாங்
குறைந்தவெய்யவன்மைந்தனுக்கியாவையுமுரைத்தான். (எஅ)

இரவிகாதலனிளவலோடிராமன்மாட்டெய்தி
வினைவின்வானரத்தலைவரைக்குணக்கினுமேற்கும்
பரவுமுத்தரதிசையினும்பனிமொழியணங்கைத்
தருவியொல்லையின்மிள்கெனத்துணைவினின்விடுத்தான். (எகூ)

அங்கதன்றிறற்சாம்பவன்நீலனென்றறையுந்
துங்கவெம்படைத்தலைவர்சூழ்வரச்சுடராழி
மங்குலார்குழன்மடவரற்களிக்கெனவழங்கிச்
சிங்கவேறெனவனுமனைத்தென்றிசைவிடுத்தான். (அ0)

நெடிபடுங்கொடுங்கானமும்வரைகளுநீந்திப்
புடைகொள்வான்பிலமருங்கினிலெய்தலும்போதந்
திடர்விளைத்திடுமவுணனையிராவணனென்ன
வடல்விளைத்தவனுருயிரங்கதன்செகுத்தான். (அக)

அங்கதன்முதலாகியவானரத்தலைவர்
சிங்கவேறெனப்பிலத்துவாரத்திடைச்சென்று
சங்குன்மேய்ந்தொளிர்கதிர்மணிக்குப்பைகால்விரிக்குந்
துங்கமாநகரிடத்திலோர்தோகையைக்கண்டார். (அஉ)

கண்டவானரருளமிறும்பூதுறக்கருதி
வண்டுபாட்டயர்வணிருங்கூத்தனியானா
யண்டரூர்நிகர்நகரம்யார்நகரரும்பவளம்
விண்டுகூறெனமின்கொடிமென்மெலமிழற்றும். (அங)

மயனெனுந்திறலவுணர்கோன்வரத்தினுல்முன்னம்
வெயில்செய்பொன்னினிற்செய்திடும்விழுநகரீது
பயிலுமன்னவன்விசும்பிடைப்பனிமதிமுகத்துக்
குயிலைவேள்வியிக்கோனகரதனில்விற்றிருந்தார். (அச)

அச்சணங்குவேல்மயனுடையாருயிர்மடிய
வச்சிரப்படையெறிந்துவானவர்க்கிறையகலச்
செச்சையங்குழற்றிருநிகரோமைக்கந்நகரம்
டச்சைமாதுக்கிருக்கவன்புரிவுடனளித்தான். (அரு)

காமச்செப்பெனப்பணைத்துயர்தரளமென்கொங்கை
யேமையென்பவளிங்ககோன்வயினளித்துக்
காமர்வானுலகடைந்தனளென்றலுங்கவிக
டுமேவோதியாஞ்சென்னெறிகாட்டெனத்தொழுதே. (அசு)

அஞ்சனப்புயறுதர்நீர்பிலமகன்றேகச்
செஞ்சவேவிழிபுதைக்கெனச்செங்கையாற்புதைப்ப
விஞ்சைபோன்றவளுரைத்தலும்வெம்பிலமகன்று
மஞ்சுகண்படுமயேந்திரவரையின்வந்தடைந்தார். (அஎ)

ஆங்கணெய்தியவங்கதன்முதலியவீரர்
கோங்கமென்முலைக்கொம்பினைக்கண்டிலமன்றி
விங்குபோரிடைச்சடாயுவைப்போலவீய்ந்திலமென்
றேங்குமாற்றங்கேட்டிருந்தசம்பாதியீதுரைப்பான். (அஅ)

எம்பிவீய்ந்தமைகூறுமின்னென்னலுங்கவிக
ணம்பிராகவனன்மனைக்கிழத்தியையரக்கன்
வெம்புகாட்டிடைவவ்வலுஞ்சடாயுமுன்விலக்கத்
தும்பைமோலியான்சுடர்மணிவாளினாற்றுணித்தான். (அகூ)

மாழைநோக்கியைக்கொண்டவனேகலும்வருந்திப்
பாழியம்புயத்திராகவன்பருதிசேயோடுந்
தோழமைக்கொடுவாலியைத்தொலைத்தரசளிப்ப
வேழைபோமிட்நாடுமென்றெங்களைவிடுத்தான். (கூ0)

என்னவோதலுமெருவைவேந்துளங்கசிந்துருகி
முன்னம்பானுமென்றம்பியுமொய்கதிருலகின்
மன்னுவான்பறந்திடுதலும்வருந்துமென்றம்பி
தன்னையென்னுடைச்சிறையினாற்றயாவொடுங்காத்தேன். (கூக)

வெய்யவன்கொடுங்கதிரினால்மென்சிறைகருகி
மையலோடுமிம்மயேந்திரவரையினில்வீழ்ந்து
பையுளுற்றனனெம்பியெவ்வுழிப்படர்ந்தனனோ
வையன்மீரஃதறிந்திலனிவ்வுழியமர்ந்தேன். (கூஉ)

யான்பயந்தருள்சுபாரிசனூனெனக்களிப்பான்
வான்படர்ந்துயர்மயேந்திரவரையின்மேவுதலு
மூன்படர்ந்தவேலிராவணனேரணங்கோடு
கான்படர்ந்தனனேகலுங்கனன்றுபோய்பிடித்தான். (கூ௩)

பொருந்தவெளவலுமிராவணன்புரந்தருள்கென்ன
வருந்திக்கூறலும்விடுத்திவண்வந்தவைபுகல
திருந்துமாதவர்சீதையுய்ந்தனளெனச்செப்பல்
பரிந்துகேட்டனன்பார்வைக்குந்தோன்றினனென்றான். (கூச)

முன்னிசாகரர்முனிவரனிராகவன்றூதர்
மன்னினின்சிறைமாண்புடன்முளைத்திடுமென்னப்
பன்னிருவொனப்பகர்தலும்பண்டுபோற்சிறகர்
துன்னிநன்கினின்முளைத்திடராமனைத்துதித்தான். (௯௫)

சீதையாண்டுறையிலங்கையுட்சேர்ந்தனளென்ன
வோதிவியந்தவச்சடாயுவுக்கிருகைநீருகுத்துக்
காதல்கூர்தரும்வானரர்க்கின்றுணைகழறி
யேதமற்றிடுமெருவைவேந்தேகினனன்றே. (௯௬)

துன்றுவார்சிறையெருவைவேந்தேகலுந்துவன்றி
நின்றுவீரருணினைந்தபேருவகையராகி
வென்றுமாருதிதிரைக்கடல்கடக்கெனவிளம்பக்
குன்றின்மீதிவர்கோட்புலிப்போத்தெனவிவர்ந்தான். (௯௭)

வேறு.

அங்கண்வானுலகணவுமாயேந்திரவரையினின்றனுமன்
றிங்களீன்முடியுரிஞ்சச்செல்வழிமகபதியொறுப்ப
மங்குல்சேர்வழிநீரினுண்மறைந்தமைஞ்ஞாகமென்னுமையிற்
றங்கியேகெனவதனைத்தடக்கையிற்றடவந்துபோனான். (௯௮)

திரைசெய்தெண்கடன்முகட்டிற்கலுழனிற்செல்லுமாருதியைச்
சுரசையென்பவடடுப்பத்தன்னுடைப்பேருடல்சுருக்கி
விரைவின்வாய்வழிப்போகிமெய்ந்நிழல்வவ்வுபேரரக்கி
குருதிவாயிடைப்புகுந்துகுடற்பறித்திலங்கையிற்குதித்தான். ()

கன்னிமூதெயிலுடுத்தகடிநகரிலங்கைகாத்தோம்பு
மின்னுநக்கவாளெயிற்றவணங்கின்வெங்கொடிற்றினிற்றாக்கி
யன்னமாநகர்முழுதுமங்கையிற்கனியெனநோக்கி
வன்னமேகலையணங்கைக்காண்கிலனாய்வருந்துற்றான். (௧00)

திங்களின்வடிம்பிடறுசினைமலரசோகநன்னிழலின்
மங்குலூடொளியெறிக்குமாசுபூத்தமென்கொடிபோல
வெங்கண்வாளெயிற்றகல்வாயரக்கியர்மருங்குவீற்றிருக்கு
நங்கைவான்முகநோக்கிநன்னுதற்சீதையென்றுணர்ந்தான். ()

அன்னகாலையினெய்தியரக்கர்கோனிரப்பவுமறுத்த
கன்னிமாதவக்கொழுந்தின்கற்புடைமாட்சிமைநோக்கித்
துன்னுகங்குலின்யாருந்துயில்வுழியாழிகைக்கொடுத்துப்
பொன்னின்வார்சிலைக்குருசில்புகன்றவையாவையும்புகன்றான்.

ஆங்குநின்றெழுந்தனுமனடகப்பசுந்தளிரீன்ற [ப
தேங்கொளுண்மலர்ப்பொதுளுஞ்சோலைகள்யாவையுஞ்சிதைப்
வீங்குதோளினாவில்லர்கிங்கரர்வெஞ்சமருடற்ற
வோங்கலன்னதோள்வலியாலன்னவராருயிரொறுத்தான். ()

கயிலைமால்வரையெடுத்தவன்பணித்தலுங்கடற்படைத்தலைவ
ரயிலெயிற்றவாளரக்கரைவருமமைச்சர்தம்மைந்தர்
வெயிலெறிக்கும்வாளுழவரொடுவரும்வெஞ்சமருடற்ற
வுயிர்குடித்தவர்புண்ணிநீரொழுகிடவுடல்பிழிந்தெறிந்தான். ()

மீட்டும்வாளெயிற்றரக்கன்விடுத்தருள்சம்புமாலியைத்தன்
றோட்டுணைப்பெருவலியாற் றொலைத்தலுமிலங்கையர்பெருமா
பூட்டுவெஞ்சிலைக்குமரனைநக்கனைப்போர்க்கெதிர்விடுப்பச் [ன்
சேட்டிளங்களிறனையானழலெழுநிலத்தொடுந்தேய்ந்தான். ()

வயிரவாட்படையுழவன்மறங்கெடவரிசிலைகுனிக்கப்
புயனிறத்தவெங்கழற்கணிராவணியமர்க்கெதிர்புகுந்து
வெயிலெறித்தழல்கவிழ்க்கும்விரிஞ்சன்வெம்படையினில்வீக்கி
யயிலெயிற்றவாளரக்கன்முன்னரவ்வனுமனையுய்த்தான். (௧௦௬)

ஆரைநீயெனமுனிவுறவரக்கரைக்கிளையொடுமறுப்பான்
வீரவெஞ்சினமுரைத்தவில்லிதன்றூதன்யானின்னே
சோர்வில்கற்புடையணங்கைவிடாயெனிலுன்றுடறுணியா
வீருளுன்சுவைபேய்க்குவழங்குமவ்விராகவன்பகழி. (௧௦௭)

என்றுமாருதியுரைப்பவிராவணனெளிதினிற்குரங்கைக்
கொன்றுநீக்குமினென்னலும்விட்டனன்றூதரைக்கோறல்
வென்றியன்றெனவிலக்கவாலினில்வெண்டுகில்சுற்றி
மன்றவெங்கனல்கொளுத்திவல்லையில்விடுக்கென வுரைத்தான்.

அன்னவாறுவெவ்வரக்கர்வாலிடையாரழல்கொளுத்தக்
கன்னிமூதெயிலுடுத்தகடிநகரிலங்கைதீயூட்டி
யன்னமேகலையணங்கைப்பணிந்துசூளாமணிவாங்கிப் [ன்
பின்னர்வெண்டிரைக்கடறாய்மகேந்திரத்தடைந்தனன்பெரியோ

வாலிமைந்தனைத்தொழுதுமாதினைக்கண்டமைவிளம்பிப்
பீலிமாமயில்கவுமதுவனமழித்தனன்பெயர்ந்து
நிலமால்வரையனையநெடியவன்சேவடிவணங்கிச்
சாலிமீன்பெருங்கற்பிற்றையலைக்கண்டமைபகர்ந்தான். (௧௧௦)

பகர்ந்தமாருதிபின்னும்பரிவொடும்வேறிருந்தேந்தி
முகிழ்ந்துவிங்கிளமுலையாள்வழங்கியமொய்ச்சுடர்மணியைப்
புகழ்ந்துநல்கலும்வாங்கிப்பொருப்புறழ்தடம்புயம்பணைப்ப
மகிழ்ந்துகண்மணிகுளிர்ப்பநோக்கினன்வரிசிலையிராமன். ()

ஒற்றையாழியந்தடந்தேருநர்பவன்மைந்தன்முன்னடப்பக்
கொற்றவெஞ்சிலைக்குருசில்குறுகலாருயிர்குடிக்கும்
வெற்றிவாளுடையிளவல்பின்வரவினைவினிற்போதந்
தெற்றுதண்டிரைசுருட்டுமிரங்குநீர்க்கடற்கரையிறுத்தான். ()

இராமன்வனம்புகுந்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௯௭௪.

இருபத்துமூன்றாவது

இராவணவதையத்தியாயம்.

அள்ளற்கருஞ்சேற்றிடைப்பெடையோடலவனுடுஞ்சிறுகு
ழியைக்,கள்வாயுயிர்க்குருகுறும்புன்னைத்தாதுதூர்க்குங்கடற்கரை
வாய், வள்ளல்கடலந்தானையொடுமிறுத்தல்கேட்டுவல்லரக்க
ன், மெள்ளருமறைநூற்றுறைபோயதேர்ச்சித்துணைவரொடுந்தே
ர்ந்தான். (௧)

அன்னகாலைவீடணன்போரரக்கர்கோமான் முகநோக்கிக்
கன்னிக்கற்பினுருவமைந்தகமலத்தடங்கட்சானகியை
யின்னேவிடுதல்நெறியெனலுமிலங்கைவேந்தன்முனிந்தார்ப்ப
மின்னுநகுவேல்வீடணன்போந்திராமனுழையின்மேவினான் (௨)

கல்லுங்கருங்கட்பெண்ணாகநடந்தகமலக்கழற்காலோன்
மல்லார்தடந்தோள்வீடணனைமதிநூற்றுறைபோமாருதிதன்
சொல்லாற்றேறியிலங்கைநகர்க்கிறைநீயென்னச்சுடர்பரப்பி
எல்லோன்போலவிருடுருவுமெரிமாமவுலிசூட்டினான். (௩)

உரவுத்திரைநீர்க்கடலடைப்பான்வருணர்ப்பழிச்சியுயர்க
ரையின்,விரியுந்தருப்பசயனத்தின்மேவியோரேழ்நாளுற்ப,வ
ருணன்போதந்திலனாகவெகுண்டுவரிவெஞ்சிலையினெடும், புரு
வச்சிலைகால்குனிந்திடலும்புகைந்தவோரேழ்புணரியுமே. (௪)

கரைகொன்றிரங்குகடல்புகையவருணன்வெருவிக்காகுத்
தன், விரைமென்கமலத்தாள்பணிந்துவேலையடைப்பானுரைத்
தேகச், செருவேக்கறவுற்றுயர்கிணிதோட்செம்மனளனாலணை
கட்டிப், பருதிமான்றேரெதிர்தடுக்குஞ்சுவேதவரையின்பாலிரு
ந்தான். (௫)

இறுத்ததானையிடைப்புகுந்தசுகசாரணரையெதிர்பற்றிச்,
செயித்தகழற்கால்வீடணன்போய்ச் செங்கட்கரியோன்முன்னு
ய்ப்ப,வொறுத்தலீதுவிடுத்தியெனவிடுப்பவொற்றர்பணிந்தேகி
க, கறுத்தநெஞ்சினிலங்கையர்கோனறியவனைத்துங்கட்டுரைத்
தார். (௬)

கரியதிரைவாருதிசிவப்பக்கடைக்கண்சிவந்தோன்றனைக்கா
ண்பான், றிருகுசினத்தவாளரக்கன்செம்பொன்மணிக்கோபுர
மிவர, வரைகொன்றுயர்ந்தமணித்தடந்தோளரக்கற்காண்பான்
மணிவண்ண, னிரவிதடந்தேர்ச்செலவகற்றுஞ்சுவேதவரையி
ன்மீதிவர்ந்தான். (௭)

வெள்ளிப்பொருப்பையெடுத்தபுயனிவனுமென்னவீடண
ன்போர், வள்ளற்குரைத்தல்கேட்டிடவுமணிக்கோபுரத்தின்மி

சைதாவிக், கள்ளக்கொடியவரக்கனெடுஞ்செருவேற்றவன்றன்
கதிர்முடிகள், தள்ளிச்சயங்கொண்டிராமனடிதாழ்ந்தானிரவி
காதலனே. (அ)

விலங்கற்றிணிதோளங்கதனையிராமன்றூதுவிடுப்பவவ
னிலங்கைநகரினிடையெய்தியிகல்வாளரக்கன்முன்னுறலு
மலங்கல்வடிவாளிராவணனுமாரைநீகொலெனவுன்றன்
புலங்கடேயவாலதியிற்பிணித்தோன்புதல்வனெனப்புகன்றான்.

என்றலோடுமிலங்கைநகரொரித்தகவியாண்டுளதென்ன
வுன்றன்சிறுவன்வீக்கவகப்பட்டவிழிவினுளங்கொதித்துக்
கன்றியுயர்வானரத்தலைவர்கடியக்கானத்திடையொளித்துப்
பொன்றியதுவோவுய்ந்ததோவறியேனந்தப்புன்குரங்கே. (௧௦)

பொற்பிற்காசைவிடுத்தியெனப்புகலமறுத்திப்புன்குரங்கை
மற்போரரக்கர்கோறிரொளவந்தோராவியறமாய்ந்து [ய்க்
வெற்பார்தடந்தோளங்கதனுமிராமனுழையின் விரவினிற்போ
கற்பாடழித்துபுயத்தரக்கன் செய்தியனைத்துங்கட்டுரைத்தான்.

வேறு.

செங்கட்புலிப்போத்தனவங்கதன்செப்புமெல்லை
கங்கைக்கிறைவன்றனைவிற்கடற்றானைசூழ
வெங்கட்கொடியோர்மிடைகின்றவிலங்கைமூதூர்
மங்குற்புறம்போகுயரிஞ்சிவளைந்துகொண்டார். (௧௨)

கரைகொன்றிரங்குகடலிற்கவிவெள்ளமெய்திப்
புரிசைப்புரத்தினிறுத்தார்க்கின்றபூசல்கேட்டு
வரைகொன்றதிண்டோளரக்கன்றிறல்மள்ளர்யாரும்
பொருவெஞ்சிலைக்கைப்பெரியோனெடும்போரினேற்றார்.(௧௩)

கம்பார்களிற்றுப்பிரசங்கன்கனன்றுசெல்லச்
சம்பாதிவெற்பொன்றெறிந்தவன்றன்னைமாய்த்தான்.
வம்பார்மலர்த்தாருவின்மாருதிபோதலோடும்
வெம்பாவுயிர்போகிவிழுந்தனன்சம்புமாலி. (௧௪)

வென்றுவேற்பிரதபனன்றன்னுயிர்வீயவெம்போ
ரொன்னார்வணங்குநளனோர்கதைகொண்டுமாய்த்தான்
கன்னுடுதிண்டோட்டபனன்றனைக்காய்ந்துகேசன்
பொன்னாட்டுமாதர்நலங்கூட்டுணப்போக்கினானே. (௧௫)

வின்னுங்கவீங்குதிணிதோளுடைமித்திராக்கன்
றன்னங்கம்விழவிறல்விடணன்றண்டின்மாய்த்தான்
மன்னர்க்கிளையோன்விருப்பாக்கனைவாளியொன்றாற்
றென்னம்புலத்தோர்விருந்தேற்பச்செலுத்தினானே. (௧௬)

வெயில்கான்றிருள்சீய்க்கெழுவெங்கதிர்ச்செல்வன்மைந்த
னயில்வேற்பிரகத்தனைவெங்களத்தாவியுண்டான்
றுயிலாகவென்றிமயிந்தன்பொருதோமரத்தால்
வயவெஞ்சிலைவச்சிரமுட்டியைவாகைகொண்டான். (௧௭)

அழல்வெம்பகுவாய்க்கிறலைக்கினிகேதுவோங்கு
மெழுவொன்றுகின்மேடாள்வலிரச்சிமிகேதுவொன்றூர்
தொழுமெய்சகோபனவிராழிச்சுதக்கனொன்றுங்
கழிவெஞ்சினத்தாருயிருண்டனன்கங்கைநாடன். (௧௮)

சுடுவெஞ்சினத்தவயமினிதுமிந்தனென்போ
னடல்கூர்சனிப்பிரபாபன்றனதாவிகொண்டான்
கடலுஞ்சுவற்றுங்கனல்வெங்கட்டுசேனன்வெய்ய
மிடல்வித்துன்மாலியுயிர்விண்ணகத்தேற்றினனே. (௧௯)

இவ்வாறிராமனெரிதும்பியிலங்குவைவேல்
வெவ்வாயரக்கர்தமைவிற்கொடுநூறிலாட்டு
மவ்வேலைதன்னிற்றிரைவேலையினூழிவெய்யோன்
செவ்வான்களம்போற்குடபாலுறச்சென்றுசேர்ந்தான். (௨௦)

அங்குற்பொழுதினிருதர்க்கிறைகாதன்மைந்தன்
வெங்கைச்சிலையின்கணைமாரிவிலக்கியன்றேன்
றுங்கக்கொடுஞ்சிற்றடந்தேர்துகளாகவீசிச்
சிங்கக்கொடும்போத்தெனவங்கதன்சீறியார்த்தான். (௨௧)

மான்றேரழிந்ததிரலிந்திரசித்துவானின்
மின்றோய்படலத்தின்மறைந்துவெகுண்டுநோக்கிச்
சான்றோர்புகழுந்தனிவிற்கைத்தலைவர்தம்மே
லூன்றோய்பகுவாயரவக்கணையுந்தியார்த்தான். (௨௨)

செங்கைப்பனக்கைக்கொலைவேழஞ்சிலம்பிநாலிற்
றங்கிச்சிமிழ்ப்புண்டுகிடந்தெனத்தம்பியோடும்
பொங்குந்தழல்வாய்ப்புயங்கக்கணைதோள்பிணிப்ப
வெங்கட்களத்திற்கிடந்தானிகல்வென்றிவீரன். (௨௩)

வேறு.

செய்யதாமரைக்கண்ணன்செய்திநோக்கியே
வெய்யவன்காதலன்வெகுளிமிக்கொள
வையிருதலைவர்போயரக்கன்மைந்தனைக்
கையினிற்கவர்கெனக்கடிதிற்றூண்டினான். (௨௪)

தூண்டியமாருதிமுதனாயவர்
தீண்டினர்வானிடைச்செல்லவெய்யவன்
காண்டலுங்கணைகளால்விழுத்திக்காதைபால்
மீண்டனன்புகுந்தமைவிளம்பினானரோ. (௨௫)

தாதையுமைந்தனைத்தழுவியொற்றரார்
சீதையைக்கொணர்ந்தவர்செய்திகாட்டென
வேதனும்புட்பகத்தேற்றியொல்லைபோய்ப்
போதரிநெடுங்கணாள்புலம்பக்காட்டினான். (௨௬)

அரிறபவுணர்ந்தனன்முழங்கனியெனத்
திரிசடைமனங்கொளத்தெருட்டத்தேறிய
புரிகுழலணங்கினைக்காக்கும்புன்மையோர்
மருமலற்சோலையிற்சிறைவைத்தாரரோ. (௨௭)

ஒளியிழந்திலர்முகமுயிருண்டாமெனத்
தெளிவொடும்வீடணன்செப்புமேல்வையிற்
களியொடுங்கடுஞ்சிறைக்கலுழனெய்தினான்
றுளையெயிற்றரவுதன்றொடர்ச்சிவிட்டதே. (௨௮)

தாள்வரைமுடிமுதற்றழும்புதீர்ந்துயர்
கோள்விடுமதியெனக்குமரருய்ந்தெழ
நீளிருஞ்சிறையினானீவியேகினான்
றோள்வலியாலமிழ்தெடுத்ததோன்றலே. (௨௯)

முருகுரழ்செவ்வியோர்குனித்தமொய்ம்புடை
வரிசிலைநாணொலிமடித்தவாயுடைப்
பருதிசேய்முதலியபடைஞரார்ப்பொலி
யுருமெனவிராவணன்செவியினுற்றதே. (௩0)

கேட்டலுமிராவணன்கிளர்ந்ததானைமேற்
பூட்டுவிற்புகைநிறக்கண்ணன்போகென
வாட்டிறலொடுஞ்செருமலையமாருதி
தாட்டுணைபிடித்தனன்றளையினொற்றினான். (௩௧)

கச்சையம்புகர்முகக்களிநல்யானைபோல்
வச்சிரத்தெயிற்றவன்மலையவாலிசேய்
நச்சுவாளவன்கையிற்பறித்துநாண்மலர்ச்
செச்சைதாழ்முடித்தலைசிதறவீசினான் (௩௨)

மாருதிக்ககம்பனனுடைந்துவான்றவழ்
கார்நிறத்திராவணற்குரைக்குங்காலையிற்
பார்புதைத்தெழுமிருள்பருதிப்பாய்திரை
யார்கலியகடுகீண்டருக்கன்றோன்றினான். (௩௩)

எரிகவிழ்த்திணைவிழிபுகையவேற்றெதிர்
வருபிரகத்தனைக்கிழைவாயிலிற்
குருதிவாய்வழியுகக்குத்திவீழ்த்தினா
னிருதர்வெங்கூற்றெனத்திரியுநீலனே. (௩௪)

அகம்பனன்றிரிசிராப்பசரசனுடல்வேல்
நிகும்பனென்பவனதிகாயனின்கும்ப
னருங்கதிர்வேலிராவணிநராந்தகன்
றிகழ்ந்தவேல்பகோதரன்றேவராந்தகன். (௩௫)

ஈங்கிவர்முதலியதலைவரெண்ணிலர்
வாங்கியவில்லினர்மடித்தவாயினர்
வீங்கியதோளினர்வெகுண்டநெஞ்சினர்
பாங்கினிலளப்பரும்படையொடேகவே. (௩௬)

மாற்றலர்வயிறெரிதவழ்ந்துமாழ்குறக்
கூற்றமுங்கண்புதைத்தஞ்சக்கொல்சினத்
தேற்றுரிமுரசினமிடியினார்ப்பெழ
வாற்றல்சாலிராவணனமரிலெய்தினான். (௩௭)

கொய்யுளைச்சுவாப்பரிகோடிபூட்டிய
வையமூர்ந்தடுகணைமழைபொழிந்திடும்
வெய்யனைக்கண்டனும்வெகுண்டுமாருதி
யெய்யெனுமளவையினெதிர்ந்துகூறுவான். (௩௮)

வேறு.

கருங்கடங்கண்ணிபங்கன்வாழ்கயிலை யெடுத்தநின்புயவலி காண்பான், பொருந்தினெனதுமார்பிடையொருகாற்குத்தெனநின்றுபோரிரப்ப, விரைந்தெனைமுன்னர்க்குத்துகென்றரக்கன்வெற்புறழ்மார்பெதிர்கொடுப்ப, விருந்தடங்கிரியினசனிவீழ்ந்தென்னகுத்தினனெறுழ்வலியனுமன். (௩௯)

எறுழ்வலிதடந்தோண்மாருதிபுடைப்பவிழிபெருங்குருதிகான்றெழுக, வழிவழிந்தொல்லைபுணர்வுவந்தெய்தியாற்றலங்கவியினைவியப்பக், கறைகெழுவேலோய்நின்முறையென்மேற்குத்தெனக்கல்செய்தோணிமிர்த்துக், குறுகிநின்றண்டகோளகைவெடிப்பவனுமன்மேற்குத்திநின்றார்த்தான். (௪0)

வாய்விழிகுருதிபொழிதரவனுமன்மண்ணிடைமயங்கிவீழ்ந்தயரப், பாய்புலிப்போத்தினமர்க்கெதிர்புகுந்தநீலன்மேற்பரிகொடேர்கடவிக், காய்கனற்பகழியொன்றினால்வீழ்த்திக்கவிக்குலத்தலைவனைத்துரந்து, சேயுறழ்தோற்றத்திலக்குவன்றடந்தோட்சிலைத்தொழில்வியந்தெதிர்புகுந்தான். (௪௧)

அல்லியங்கமலக்கடவுளேயாக வஞ்சனவண்ணனேயாகக், கொல்சினவடலேற்றண்ணலேயாகக் குருகலர்க்கடந்தயானாக, வில்லினாலிவனைவெலற்கரிதென்னவெண்ணிணச்சேற்றொடுங்குருதி, பில்குநெட்டிலைவேலெறிந்துவார்கழற்காலிலக்குவன்மார்பகம்பிளந்தான். (௪௨)

குருதிவேல்பாயக்களத்திடைவீழ்ந்தவரசிளங்கோளரிதன்னை, யிருபதுகையும்வருந்துறவெடுத்துமெடுப்பரிதாகிநின்றதையுந், திருவிழிமுகங்கள்பத்தினுங்குருதிசிந்திடக்குத்தி வீழ்த்தனுமன், வரிசிலையிளவறனையெடுத்தேகிமணிநிறவண்ணன்முன்னுய்த்தான். (௪௩)

எய்துமவ்வேலைவேல்படுமயர்ச்சியிளவறீர்ந்தெழுந்துநின்றையன், செய்யபங்கயத்தாடொழுதனனிற்பச்சிலைத்தொழிற்கொருவனென்றுணாக்கு, மையசெங்கமலக்காடுபூத்தனையவருசனக்கொண்டல்கண்சிவந்து, வையமேத்தெடுக்குமனுமன்மேலிவராவிராவணனோடமர்மலைந்தான். (௪௪)

காற்றுறழ்கடுப்பிற்கலினமான்றடந்தேர்கறைசுளிகவுண்மதக்களிறு, பாற்றினாக்கவரிக்கூந்தன்மாத்தறுகட்பாய்புலிப்போத்தெனவயவர், வீற்றுவீற்றுகமறிதரவிராமன்வரிசிலைகுனித்தலும்வெகுண்டு, கூற்றுமெய்பனிப்பவனுமன்மேலரக்கன்கொடுங்கணைபொழிந்துநின்றார்த்தான். (௪௫)

மாருதிமருமம்பிளந்திடவரக்கன்வடிக்கணை தொடுத்தமைநோக்கிக், கார்முகவினைதனிருதர்கோன்கவசங்கனலுமிழ்படைக்கலந்தடந்தே, ரூர்தருபாகன்வரிசிலையனைத்துமோரொருபகழியாற்றுணித்துத், தார்புனைமவுலியொருபதுங்கணையாற்றள்ளிமற்றீங்கிவைபுகல்வான் (௪௬)

கூந்தல்மான்றடந்தேரணிந்தபொற்கவசங்கொடுஞ்சிலையடுங்கணைப்புட்டில், கார்ந்தெரிகவிழ்க்கும்படைக்கலமின்றிநின்றனைசீதையைக்கடிதி, னீய்ந்துநின்னாவியுய்தியேலுய்தியன்றெனிலின்றுபோய்நாளைப், போந்துவெங்களத்தினின்கிளையோடுவிளிதியேற்போகெனவிடுத்தான். (௪௭)

வெள்ளியம்பொருப்புமெடுத்தவனுனைஞ் சுமக்கலனாகிவெய்துயிர்த்துப், பள்ளநீர்வேலியிலங்கையினெய்திப்பரிவுடனமைச்சரோடெண்ணி, யெள்ளருமதுகைக்கிணைகரயிலாக்கும்பகன்னனைப்படுதுயிலெழுப்பி, யள்ளிலைச்சூலந்திரித்துமானுடர்தமாவியுண்டிடுகெனவிடுத்தான். (௪௮)

விடுத்தலுமிமைப்பிற்செருக்களத்தெய்தி வானரவீரனையள்ளி, மடுத்துவாய்ப்படுத்துக்கவுட்புடைக்கு தட்டிமலர்கதிர்பருதிசேய்தன்னைப், பிடித்துயரிலங்கைபுகுதலுந்தடங்கணரக்கியர்பெய்தமென்சாந்தி, னடுத்தமெய்த்துயர்தீர்ந்திரவிசேயரக்கன்மூக்கொடுசெவிபறித்தகன்றான். (௪௯)

திருகுவெஞ்சிற்றமடங்கலேறனையான்செவியொடுமூக்கினைக்கவர்ந்த, விரவிகாதலனைத்தொடர்ந்துவெங்களத்தினேற்றவரு

யிர்பிழிந்துண்டு, வருதலுமிராமன்கொடுமரங்குழைத்துவடிக்கணைபற்பலதூண்டி, யருவரைத்தடந்தோள்மருமநீள்சென்னிவீற்றுவீற்றுய்விழவறுத்தான். (ருo)

களத்திடைக்கும்பகன்னனையிராமன்றடிந்தமைகேட்டுவெல்லரக்க, னுளத்திடைவெகுளிமீக்கொளக்கண்ணினெழுகும்வெங்கனற்சிகைகதுவித், துளிப்புயல்வறப்பக்கனன்றதிகாயன்றன்முகநோக்கிநீதுனைவி, னளப்பருஞ்சேனைசூழ்வரச்செல்கென்றறைதலுமடுகளத்தெதிர்ந்தான். (ருக)

பொருப்புறழ்தடந்தோள்வானர மெழுநூறுருவவோர்பொழிகதிர்வேலாற், செருக்களத்தெறியுநராந்தகன்றன்னையங்கதன்பரிவொடுஞ்செகுத்தா, னுருத்துவந்துடற்றுந்தேவராந்தகனையனுமனோர்குத்தினலொறுத்தான், பருப்பதமதனலமகோதரனுவிமழிந்திடவெறிந்தனனீலன். (ருஉ)

மாருதிசினவித்திரிசிராவங்கைவாள்பறித்தவன்றலைதுமித்தான்,போர்முகத்திடபன்மத்தனைக்கதையாற்புகையெழப்புடைத்துயிர்குடித்தான், கார்முகங்குழைத்துமலரயன்கணையாலிலக்குவனமரர்கண்களிப்ப, நேரலர்க்கடந்ததிறலதிகாயனெடுந்தலைதுமித்துநின்றார்த்தான். (ருங)

கறங்குதெண்டிரைநீருலகெலாம்வென்றகதழ் சினத்தட்லதிகாய, னிறந்தமைகேட்டுநிருதர்கோன்சினவியிந்திரசித்தனைவிடுப்பச், செறிந்தகூரிருள்வாய்வெஞ்சமருடற்றித்திசைமுகன்பகழியாலிராமன், மறங்கள்போரிளவல்வானரத்தலைவர்யாரையுமண்ணிடைவீழ்த்தான். (ருச)

வரிசிலைக்கலவிபுருவெடுத்தனையவாளெயிற்றரக்கன்வெஞ்சமரிற், புரிதொழிலனைத்துமிராவணற்குரைத்துப்பொங்குபேருவகையினிருப்ப, நிருதர்புங்கவனும்வீடணன்சாம்பன்றுணைவினினிகரில்போரனும, னருகுசென்றெய்திநீர்பிழைத்தமையாலிறந்திலர்யாருமென்றறைந்தான். (ருரு)

மெய்புகுகருவிமாற்றுறுமதகந்துணிபடுமெய்பொருந்ததக, மெய்தியதழும்புதீர்த்திடுமதகமின்னுயிரளித்திடுமதக, மைகளவெள்ளிவரைக்குநல்லிடபகிரிக்குநாப்பண்ணினிதமரு, மையறுமருத்துவரையினிலுளநீகொணர்கெனமாருதிபாய்ந்தான். (ருசு)

பாய்தலுமதனில்மருந்துகாண்கிலனுய்ப்பருவரை பறித்துவந்துய்ப்பச், சேயதாமரைகட்செல்வனைமுதலோர்துயிலுணர்ந்தாரெனவெழுந்தா, ரேயவம்மலையைமாருதிமுன்னரிருந்துழிவைத்துமீண்டெய்தக், காய்சினங்கதுவியிரவிசேய்முதலோர்கடிமதிலிலங்கைநிமடுத்தார். (ருஎ)

அன்னதுகேட்டுநிருதர்கோன்கும்பகன்னனன்மைந்தனையழையா, மின்னகுசுடர்வேற்றலைவரோடேகிவெஞ்சமர்புரிகெனவிடுப்பக், கன்னவிரிரடோட்குரக்குவெஞ்சேனைக்கனைகடலுடைதரக்கலக்கிக், கொன்னுனையயில்வேற்கப்பணஞ்சிதறிக்கூற்றமஞ்சுரவெதிர்மலைந்தார். (ருஅ)

அங்கதன்சினவியகம்பனனென்னுமரக்கனுக் கமருலகளித்து, வெங்கனலன்னபிரசங்கனைமறலிவிருந்தெதிர்கொள்கெனவிடுத்தான், செங்கைவள்ளுகிராலடுசினத்துவிதன்சுரோணிதக்கண்ணனைச்செகுத்தான், பங்கமில்யூபாக்கனைத்திறல்மயிந்தன்பறவைகூட்டுணவுயிர்படுத்தான். (ருகூ)

நள்ளிருள்விழுங்கிக்கதிரொதிரொடுக்கும் பருதிசேய்நாகிளம்பிறைதாழ்,வெள்ளெயிற்றகல்வாய்க்கும்பன்வான்மகளிர்நகைவிருந்தயின்றிடவிடுத்தான், கொள்ளைவண்டறைதார்நிகும்பனைத்திறல்கூரனுமனேர்குத்தினிற்கொன்றான், வள்ளலோர்கணையாலடல்புரிமகரக்கண்ணனையாருயிர்மாய்த்தான். (கூ0)

ஈங்கிவையரக்கன்செவிமுதலுறலுமிந்திரசித்தனைவிடுப்ப, வாங்கவன்மாயாசீதையைவிறல்கூரனுமன்முன்றடிந்திகல்வேள்வித், தீங்கறப்புரிவானிகும்பலைக்குறலுமாருதிதிருமறுமார்பன், பாங்குவந்தரக்கன்புரிந்தமையுரைப்பப்பருவரற்கடலில்வீழ்ந்தயர்ந்தான். (கூக)

ஆயபோழ்தனுமனுரைத்தல்கேட்டையவழுங்கிடேலிராவணிவஞ்ச, மாயையிற்சீதைவகுத்தனன்றடிந்துமகஞ்செய்வானிகும்பலைக்ககன்றான், மேயவெவ்வேள்விமுற்றுறினம்மால்வெல்லுதலரிதமருடற்றித், தீயனைச்செகுப்பானிளவலைவிடுத்தியென்றுவீடணன்றெளிந்துரைத்தான். (கூ௨)

உரைத்தலுங்கமலத்தடங்கணனிளவலெல்லைபோகெனத்தொழுதேகி,வரைத்தடந்திணிதோளனுமன்மேலிவர்ந்துவானரவீரர்பின்றொடர, வரக்கர்கோனிளவல்கனன்றுமுன்னடப்பவான்விழித்தெரித்தமுப்புரத்திற், செருக்களஞ்சிவப்பச்சிரிதுகண்சிவக்குஞ்சேவகனிகும்பலைசேர்ந்தான். (கூ௩)

அருமறைத்தக்கன்புரிமகங்கணங்களழித்தெனவடல்சினத்தரக்கன், புரிதரும்வேள்விவானரத்தலைவரழித்தலும்புண்டிறந்தன்ன, வெரியுமிழ்தறுகணரக்கர்கோன்சிறுவனிம்மகரிந்தழலுகவிழித்துப், பருதிமான்றடந்தேரனையபொற்றேரிற்பாய்புலிப்போத்தெனவிவர்ந்தான். (கூ௪)

அந்தரத்தமரரிமைப்புருக்கண்களிமைத்துவான்றுறந்தனரகல, மந்தரம்வெடிப்பவானரத்தலைவர்வயிறெரிதவழ்ந்துநின்

ரோங்க; கந்தடுபுன்புழைக்கைத்திக்கயம்வெருவிக்களிமதந்துறந்து
காம்பட, விந்திரன்பகைஞனண்டகோளகையுமிடிதரவிரிவிற
னொலித்தான். (௬௫)

களத்தெதிரோற்றவேவோரொருகவிகட்காயிர மாயிரங்கணை
கடுலைத்தவல்விசையினொழியங்கிரியுந்துணைவிளிறுருவிவிண்ப
டர, வலைத்தலைபுகுதுமாரவெனச்சிலபோயனுமனதாகமூடிரு
ளக், களிப்புயமேலுழுங்கடையுகத்திறைக்குந்தாரைபோற்கணைம
ழைபொழிந்தான். (௬௬)

கூற்றுமெய்பனிப்பவரக்கர்கோன்விடுத்தகொடுங்கணையா
வையுங்கணையால், மாற்றிவாளரக்கன்மருமமீள்தடக்கைமணிமு
டியும்புகள்படுத்திக், காற்றுமற்புரவிக்கலினமான்றடந்தேர்க
விற்றினந்துணித்துவெங்குருதி, யூற்றிருந்தொழுகக்கவந்தமாட்
டயாவிலக்குவனுறுகணைபொழிந்தான். (௬௭)

இந்திரன்மருமம்போழ்ந்ததுமறலி யிருளின்றீஞ்சுவைய
றிந்த, தந்தரத்தியங்கும்புட்பகவூர்தி யரத்தவெம்புனலினுடிய
து, செந்தழற்கடவுள்பழுவெனும்பொடித்ததாயவெந்தீமுகப்ப
கழி, மந்தரத்தடந்தோண்மாருதிமருமம்போழ்ந்திடவலிதினி
ன்விடுத்தான். (௬௮)

உருகெழுதோற்றத்தனுமன்மார்பகலத்துடற்றுவெம்பகழி
போழ்ந்துருவிக், குருதிகான்றிடலுமிலக்குவன்புருவத்தொடு
முயர்கொடுஞ்சிலைகுழைய, வரிசிலையற்றதூர்தருபாகன்மறிந்த
னன்வாம்பரிமறிந்த, விரைசெலம்மான்றேர்சிதர்ந்ததவ்வரக்க
ன்வியனகரிலங்கையிற்புகுந்தான். (௬௯)

ஓரிமையொடுங்குமுன்னரோர்தடந்தேர்பண்ணுறுத்தொ
ல்லையினிவர்ந்து, போர்முகத்தெய்திக்கவிக்குலமனைத்தும்பொ
ன்றவெங்கணைமழைபொழியுங், கார்நிறத்தரக்கன்கொடிஞ்சில
மான்றேரிற்கவனவாம்புரவிகளனைத்தும், பாரிடைமறியவீடண
னெதிர்போய்ப்பாழியங்கதையிற்புடைத்தான். (௭0)

நரைவிடையூர்ந்தகடவுளுமலர்மேல்நான்முகக்கடவுளும்
வியப்ப, வருவரைத்தடந்தோளிந்திரவிகழ்ந்தவாசியல்கிடைத்
ததென்றுவப்பக், திரையெறிகுருதிப்புனல்பறந்தோடிக்கருங்
கடல்முழுவதுஞ்சிவப்ப, விரவுநன்பகலுமூன்றுநாளொழியாதி
ருவருமவெஞ்சமர்விளைத்தார். (௭௧)

அந்தரத்தமரர்மலர்மழைபொழியவாடகப்பொருப்பினைக்
குழைத்த, சந்திரமவுலிக்கடவுளாமென்னத்தடஞ்சிலைகுழைவு
றவாங்கிக், கந்தடுபுழைக்கைக்கடாக்களிறனையவிலக்குவன்விசு
ம்புகாத்தருளு, மிந்திரன்கணையாலிராவணிசென்னியிருநிலத்
தறத்துமித்தினனால. (௭௨)

விண்ணவரியக்கர்விஞ்சையர்முனிவர்வானரர்வியந்தனரேத்தக், கண்ணகன்ஞாலமுழுவதுங்களிப்பக்கார்முகக்கலவியின்றுறைபோ, மண்ணல்சேவடியினிளவல்போய்வணங்கவாய்பிழிக்குறுந்துளிபிலிற்றுந், தண்ணறுங்கமலக்கண்ணனுண்மகிழ்ந்துதழுவிநின்றுசிகூறினனால். (௭௩)

ஈங்கிவைநிற்கவிராவணிபமரினிறந்தமை யொற்றர்போயிசைப்பத், தூங்கிசைமிழற்றுதிவ்வியாழுயர்த்தோன்றுன்பவாருதியில்வீழ்ந்தழுந்திப், பாங்குறைபரிதேர்வெஞ்சினக்களிறுபதாதியென்றுரைக்குநாற்படையும், வீங்குநீர்வேலிப்புவிமுழுதுகுலுக்கவெஞ்சமர்புரிகெனவிடுத்தான். (௭௪)

ஆயிரநாவோரளப்பினுள்வருந்தியெண்ணினுமெண்ணுதற்கரிதா, மேயபோர்மூலபலத்தினையிராமன்வில்விளையாட்டயர்ந்தெளிதிற், காயும்வெங்களத்திற்கடிகையோரோழிற்கனல்விழிப்புலவுநாறழல்வாய்ப், பேயும்வெங்குறுந்தாட்பூதமுமுவப்பப்பெய்கணைமாரியினறுத்தான். (௭௫)

உரவுநீர்த்தரங்கக்கடற்பெருந்தானைசிதைந்தமையொற்றர்போயுரைப்பப், புருவம்வானுதலினேறினவிழிந்தவிழிகளோரிருபதும்புகைந்த, வருவரைத்தடந்தோளிருபதும்பணையாவண்டகோளகைமுகடளந்த, வெருவிவானவர்களோடினரரக்கன்வெகுளியென்னுமெனநினைந்தே. (௭௬)

பொருப்புறழ்தடந்தோண்மாபெரும்பக்கன் மகோதரன்பொருநரைக்கடந்த, வுருப்பவெஞ்சினத்துதிறல்விருப்பாக்கனுடையம்புகர்முகப்பருஉத்தாள், மருப்புடைத்தடக்கைவாரணந்தடந்தேர்வாம்பரிபருதிவாளுழவ, ரிரைத்தெழுகடலினார்த்துமுன்செல்லவிகலமர்வேட்டெதிரொழுந்தார். (௭௭)

மூவகையுலகுந்தனதடிப்படுத்த முழவுறழ்தடம்புயத்தரக்கன், வாவுமான்றேரின்மதிக்குடைநிழற்றவயங்குவெண்சாமரையிரட்டக், கோவெடுத்தருந்துங்குருதிவாளவுணர்குற்றுடைவாள்சுமந்தேகத், தேவர்மெய்நடுங்கித்திசைதொறும்வணங்கச்செறுக்களத்தொல்லையினடைந்தான். (௭௮)

ஆயிரஞ்செருவின்மறலியைப்புறங்கண்டமர்பெருதருஞ்சமம்வேட்டு, மாயிருஞாலமுழுவதுந்திரிந்தவாகைவேற்றிறல்விருப்பாக்கன், காய்கதிர்ப்பருதிசிறுவனையெதிர்ந்தோர்கதையினாற்புடைத்தலும்வெகுண்டு, தீயுமிழ்தறுகண்பிதுங்கிவாளரக்கன்மறிதரச்சென்னியைநெரித்தான். (௭௯)

உலகெலாம்விழுங்குமறலிநாவென்னவுமிழ்கொடுந்தழற்சிகைபரப்பி, யிலகுவாள்விதிர்த்துக்கேடகந்திரித்துமகோதரன்க

ளத்தெதிரேற்பக், கொலைபுரூத்தொமுருங்குருதிவாளேந்திக்கூன்புறப்பலகைகைக்கொண்டு, மலையும்வெஞ்சமத்தின்வாலிதன் றுணைவன்மற்றவன்றலைதுமித்தெறிந்தான். (அ0)

கங்கமுங்கழுகுமார்க்கும்வெங்களத்திற்கவிக்குலத் தலைவ ரைத்துரந்து, சிங்கவேறென்னக்கொடுஞ்சமர்விளைக்குமாபெரு ம்பக்கன்முன்சென்று, துங்கமால்வரையிற்றிரண்டதோள்வலி யாற்சோர்வுறநிலத்திடைவீழ்த்தி, யங்கதன்சினவியாளரிப்போ த்திறுங்கவனுடல்பிளந்தனைந்தான். (அக)

தானையந்தலைவர்விளிந்தமைநோக்கித்தழலெழவிழித்துவ ல்லரக்கன், வானிடைப்பூத்தவுடுக்கணஞ்சிதறமற்றையவண்ட மும்வெடிப்பத், தேனவிழ்கமலப்பொகுட்டினிதுறையுந்தேவ னுஞ்செவித்தலம்புதைப்பப், பாணிறச்சங்கமொருபதுந்தனது பாழிவாய்தொறுமடுத்தொலித்தான். (அஉ)

பைபாரநெற்றிச்சுடிகையிற்கிடந்த பார்முகங்கிழியவோ ரெட்டு, மைதவழ்குடுமிவரைபறித்தெறியும்வானரத்தலைவர்க ளெவருங், கையிணைமுறந்தாள்மருமநீள்சென்னியெங்கணுங் காய்கணைசெருகி, யெய்யெனக்கிடப்பவுலகெலாம்வென்றவிரா வணனிருஞ்சிலைகுழைத்தான். (அங)

மற்றவைநோக்கியிலக்குவன்சினவி வடவரையனையவிற்கு ழைத்துப், பொற்றடந்திணிதேர்வலவனிள்சென்னிபொங்கழற் கணையினால்வீழ்த்திப், பற்றலர்முதுகுகண்டலர்நெடுங்கண்சிவ ப்பவுருப்பணைப்புயத்தரக்கன், கொற்றவெஞ்சிலைகளொருபதுந் துமியக்குருதிதோய்கணையினாலறுத்தான். (அச)

பாடகத்தொடர்ச்சிப்பழவினைச்சிமிழ்ப்புப்பற்றறப்பசும்பு யலனையா, னடைகப்பசும்பொற்செய்பதாமரைத்தாளரணமென் றடைந்தபேரறிவின், விடணன்வெகுண்டோர்கதையினாலடித் துவெஞ்சினத்தரக்கர்கோனடவுங், கோடியர்பசும்பொற்கொடு ஞ்சியந்தடந்தேர்க்குராகதமனைத்தையுங்கொன்றான். (அரு)

கொடுஞ்சியந்தடந்தேர்க் கொய்யுளைப்பரிகண்மரிதலுமி ரணியற்செகுத்த, மடங்கலேறனையவிராவணன்சினவிவாய்மடி த்தெயிறுதின்றுரப்பி, விடங்கவிழ்த்தெரிகால்சுடரிலைநெடுவே ல்விடணன்மேலெறிந்திடலுங், கடங்கவிழ்கரடக்கரிநிகரிளை யோன்கணையினாலாங்கதுதுணித்தான். (அசா)

புயனிறம்விளர்ப்பக்கருகியமேனிப்புலவுவாயரக்கர்கோன் சினவி, வெயிலிலையிழைத்துக்கொலைத்தொழில்பயிற்றிவெவ்வி டத்தொய்யில்மேற்பூசி, மயனுளம்வருந்தவளப்பினாட்சமைத்து வாத்தினான்மறையொடுமளித்த, வயிலினைபெறியவுரம்பிளந்தி ளையோன்மண்மிசைவிழ்ந்துபிரயர்ந்தான். (அஎ)

கலினமான்றடந்தேர்கொணரவல்லர்க்கன்கடிமதிலிலங்கை யிற்புகலு, மலையுறழ்தடந்தோண்மாருதிமுன்போல்மருத்துமா மலைகொணர்ந்திடலு, மலகில்பீர்ச்சுசேனன்மருந்தினையளிப்ப வையன்முன்போலவுய்ந்தெழுந்தான், சிலைவிழுங்குயர்தோளி ராமன்மாருதியைத்தழுவிமற்றீங்கிவைதெரிப்பான். (அஅ)

உற்றுழியாவியுதவினர்க்குயிரொருங்கர் பொருளுண்டெனி லன்றோ, மற்றொருருகைம்மாறளிப்பவொன்றுவப்பமருத்துமாமலை யினைமீட்டுங், கற்றடந்திணிதோளனுமன்முன்போலவைத்திவ ண்கடிதுவந்துறலும், வெற்றிவெலரக்கன்வேறொருமணித்தே ரிவர்ந்துவெங்களத்திடைப்புகுந்தான் (அகூ)

மலரயனடவுமெனைமென்புள்ளும்வலியழிந்திரியமோதிய து, நிலவும்வெங்கதிரோன்பரிகடோர்துரந்துநேமியங்கிரிவலம் வந்த, வலகறுபுவனமுழுவதுந்திரிந்ததாயவிண்ணிடைப்பரந் துலவுங், கலினமான்றடந்தேர்கடவிவல்லரக்கன்கவிக்குலமிரி யவந்தேற்றான். (கூ0)

தேரினின்றரக்கன்கொடுஞ்சமம்விளைப்பச்சிலைத்தழும்பி ருந்ததோளிராமன், பாரினின்றுடற்றலரிதெனவயிரப்படையு டைக்குரிசில்மாதலியை, யூர்பொலந்தடந்தேரிராமனுக்குதவு கென்றலுமொல்லையினிழிந்து, கார்வயிறுடைக்குங்கூம்புடைத் தடந்தேர்கார்முகக்குரிசில்முன்கொணர்ந்தான். (கூக)

அந்தரத்தமரர்வலிகெடவுடற்றுமிராவணனோடமர்மலைத ற், கிந்திரனளித்தகொடிஞ்சிமான்றடந்தேரிவர்கெனமாதலிவ ணங்கக், கந்தடுபுழைக்கைபெறும்வலிபெரூஉத்தாட்களைசுளிக டாக்களிறனையான், மந்தரத்திவருநிரையுளைத்தறுகண்வாளரிப் போத்தெனவிவர்ந்தான். (கூஉ)

விண்ணவரளித்ததேரிவரிறையும் வெஞ்சினத்தரக்கர்தங் கோவு, மண்ணினீள்வெற்பின்மாதிரமெட்டின்வானவர்தானவ ருறையுங், கண்ணகல்விசும்பிற்றிரிந்துதாங்கற்றகார்முகவிஞ்சை கள்காட்டி, யெண்ணியெவ்வுலகும்வெருவொடுந்தளரவேழுநா ளிராப்பகல்மலைந்தார். (கூங)

மைத்தகார்கமலக்காடுபூத்தனையமணி நிறவண்ணன்விற்கு னித்துப், பத்துடைத்தலையுந்தோள்களுந்துமிப்பப்பண்டுபோ ன்முளைத்தமருடற்றக், கைத்தலம்விரித்துக்கைகளுந்தலையுமாயி ரங்கால்கடிதகற்றி, யத்தவெற்பென்னவிரவிதேர்மருளவாடம ர்க்களத்திடைக்குவித்தான். (கூச)

கனைகடற்குவமையுரைத்திடிலந்தக் கனைகடலலதுவேறில் லைப், பனியிருவிசும்பிற்கிணையெடுத்துரைப்பிற்பனியிருவிசும்ப

லாவில்லை, வனைகழலிராமனிராவணனுடற்றும்போரினுக்கி
ணைவருத்துரைப்பி, னனையபோரிராமனிராவணனுடற்றுமருஞ்
சமரன்றிவேறிலையால். (௯௫)

என்றுவானவர்கடுதியெடுத்திசைப்ப விராகவனிருஞ்சிலை
குழைத்து, மன்றலங்கமலத்தயன்படைவிடுப்பமழவிடையுயரி
யகடவுட், குன்றெடுத்தோங்குந்தடம்புயத்தரக்கனுரம்பிளந்தா
ருயிர்குடிப்பப், பொன்றிநீணிலத்தில்வீழ்ந்தனனமரர்பூமழை
பொழிந்துநின்றார்த்தார். (௯௬)

ஆர்த்தனரமரர்விஞ்சையரியக்கரருமறைபாடிநின்றாடித்,
தூர்த்தனர்மலரால் மெய்ம்மையுமறனுந்தோமறத்தலையெடுத்து
யர்ந்த, வேர்த்துடல்புழுங்கிப்பொய்ம்மைபோயொளித்தவிழும
மையொழுக்கமெவ்வுலகும், போர்த்ததுதிங்கடோறுமும்மாரி
பொழிந்திடச்சிறந்ததெவ்வுலகும். (௯௭)

தாமரைக்கண்ணனருளின்வீடணனைத்தகைபெறுவிராவண
னாகினிதி, ஸ்ரீமகற்கருமமியற்றுதியெனலுமியாவையும்விரவினி
லியற்றித், தேமலர்த்துளவோன்சேவடிவணங்கிநிற்றலுந்திரும
றுமார்பன், காமர்வண்டறைதாரிலக்குவவிவற்குக்கதிர்முடிபு
னைகெனவுரைத்தான். (௯௮)

ஒழுகொளிப்பருதிவெண்மதிக்கடவுண்மாநிலமுள்ளநாள்
காறும், பழமறையனையவிராகவன்சரிதையுலகினிற்பயிலுநாள
ளவுங், கெழுமணித்திகிரிதிசைதிசையுருட்டிக்கிளர்மதிலிலங்
கைகாக்கென்ன, மழவிடையன்னவிடணற்கிளவல்வாளொளிம
ணிமுடிகவித்தான். (௯௯)

இருள்வயிறார்ந்தவெங்கதிர்க்கடவுள்சிறுவனைமுதலியவெவ
ர்க்குங், குருமணிக்கலன்களளப்பறுநிதியமறுப்பவுங்கொள்கெ
னவழங்கி, வரையுறழ்தடந்தோள்வீடணன்போந்துவள்ளறாள்
வணங்கலுமகிழ்ந்து, செருமலிதிணிதோளனுமனேடேகிச்சீ
தையைக்கொணர்கெனவிடுத்தான். (௧௦௦)

அன்னதுகேளாவரக்கன்மாருதியோடசோகநீள்வனத்தி
டைப்புகுந்து, கன்னியங்கற்பினணங்கினைவணங்கிக்களிபெருஞ்
சோபனம்விளம்பிப், பொன்னவிர்மணிப்பூஞ்சிவிகையினேற்றி
ப்புணர்முலையரக்கியர்சூழ, வென்னையாளுடையவன்னையையி
ராமனிருந்துழிக்கொணர்ந்துமுன்விடுத்தான். (௧௦௧)

அருந்தவக்கற்பிற்கரசினைநோக்கியெனதுசீர்கெடாதருஞ்ச
மத்தில், திருந்தலர்ச்செகுத்துமீட்டனனின்மேனசையினால்மீ
ட்டிலனினக்குப், பொருந்துழியேகென்றுரைத்தலுமணங்கு
பொங்கழலிளையவன்றருகென், றிரந்திடவள்ளலருளினாலிளை
யோனியற்றியவெரியிடைப்புகுந்தாள். (௧௦௨)

அங்கியங்கடவுளிராமன்முன்னெய்தியரக்கன்முன்கவரவந்துறாலும், பொங்குமிள்வேள்வித்தழற்புகவளியன்புணர்த்திய மாயையையரக்கன்,மங்கையென்றெண்ணிக்கொணர்ந்தனனந்த மாயையிண்டிழிந்ததென்னிடத்திற், றங்கியசீதையிவளவன்றிண்டிற்சாம்பராங்கற்பின்வெந்தழலால். (கoரு)

ஐயுறேலிந்தவணங்கினைக்கொள்கென்றங்கியங்கடவுளுமலர்ந்த, செய்யதாமரைமேற்புனிதனுமுக்கட்டேவனுந்தயரதனென்னும்,பொய்யிலுபுலமையரசனுமுறைப்பப்பூங்கழல்சென்னியின்வணங்கி, வெய்யவாட்டடங்கட்சீதையையிராமன்மேதகத்தெளிந்துகைக்கொண்டான். (கoச)

பரதனைத்தாயோடிகழ்ந்திடுமுனிவுதீர்ந்துநம்பருதியங்குலத்தி, லுரிமைபூண்பதற்கோர்வரமளித்திடுகென்றிராகவன்தொழுதுரைத்திடலும், வரையுறழ்தடந்தோள்மார்பகத்தொடுங்கமைந்தனைத்தழுவிவாள்வேந்த, னரசிளங்குமரவளிப்பரிதாகுமவ்வரமளித்தனனென்றான். (கoரு)

ஆள்வழக்கறநீண்டம்பலைத்தொழுகுமயில்விழிப்புலோமிசைக்கணவன்,றுளதாமரைக்கட்குரிசிலோரவர்நீகேட்கெனத்தசமுகன்விடுத்த, வாளியால்மறிந்தகவிக்குலமனைத்துமுய்ந்திடும்வரமளிக்கென்ன, நீளிருந்தடக்கையிராகவன்கேட்பவிந்திரனோர்ந்தஃதளித்தான். (கoசு)

விட்புலத்தமரர்மறைதலுங்கணையால்வீய்ந்திடுங்கவிக்குலமனைத்தும், கட்புலங்களிப்பவிராமனைநோக்கியுய்ந்துளங்களித்தவாவரக்கன், புட்பகமளிப்பவிளையவனோடும்புணர்முலையணங்கொடுமிராமன், நட்புடைக்கவிகடம்மொடுமிவர்ந்துநளிகடற்சேதுவையடைந்தான். (கoஎ)

இராவணவதையத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கo அகசு.

இருபத்துநான்காவது

இராமன்சிவலிங்கப்பிரதிட்டைபண்ணினவத்தியாயம்.

சேதுவினெய்திவரிசிலையிராமன்சினகரமணிபெறக்கோலி, யாதியுமுடிவுமறிவருலிங்கந்தன்பெயராலினிதமைத்துத், தூதுணைக்கனிவாயணங்கொடுமிளவற்னெடுஞ்சூழ்ந்துநின்றிறைஞ்சித், தாதவிழ்மலர்தூய்நெஞ்சகங்குழைந்துதடங்கணீரொழுகிடத்துதிப்பான். (க)

அருவமாயுருவாயருதியாயொன்றுமையம்பெரும்பூதமாய்வேறாய்த், தெரிவரும்பொருளாய்த்தெரிபவையாகிச்செங்கண்

மாலயனெனவுரைக்கு, மிருவருங்காணுமறைப்பொருளாகிச்ச சத்தினையியக்கியுமியக்காக், கரியதுவாகித்துரியமாய்த்துரியாதீதமாங்கடவுளேபோற்றி. (௨)

நீற்றொளிபழுத்தவெள்ளியங்கிரிபோலிலவுமிழ்மேனியாய்போற்றி, கூற்றினையுதைத்துச்சிறுவனையளித்தகுரைகழற்றுணைவாய்போற்றி, பாற்றினஞ்சுழலுமுவிலைச்சூலப்படையுடைக் கடவுளேபோற்றி, மாற்றலருறையுமுப்புரமெரித்தவாண்கைக் குரிசிலேபோற்றி. (௩)

பையரவணையிலறிதுயிலமர்ந்தபண்ணவன்முகிழ்முலைமுயங்கி, யையனையளித்தகடவுளேபோற்றியாதியாம்பரமனேபோற்றி, மையுறழ்கூந்தல்வரிமுலைத்துவர்வாய்மலைமகள்கொழுநனேபோற்றி, பொய்யிகழ்ந்துணரும்புண்ணியருளத்திற்புகுந்திடும்புனிதனேபோற்றி. (௪)

என்றுநாத்தழும்பவிதயநெக்குருகவிராகவனேத்தலுமிரங்கிப், பொன்றிகழ்சடையுமிலகுமுக்கண்ணும்புலியதளுடையுமெண்டோளு, மன்றலங்கூந்தற்கவுரியோர்பங்குமாயுயர்மழவிடையுயர்த்த, குன்றவிற்குழகனுங்கவனமைத்தகோதறுமிலிங்கமுடெழுந்தான். (௫)

குரவனைப்பிழைத்தோர்கள்ளுநர்நறவங்குடித்தவர்கொலைத்தொழில்புரிவோர், மருவிமற்றிவரோடிணங்குநர்முதலாம்பாதகரேனும்வந்தெய்தித், திரையெறிதண்ணீர்ச்சேதுவினாடித்தெளிந்துநீயமைத்தவிவ்விலிங்கம், பரவுதிற்பாவமுழுவதுந்தீர்ந்தெம்பதமலர்நிழல்வீற்றிருப்பார். (௬)

அங்கண்மாஞாலமழியினுமழியாச்சேதுவினிமகிழ்ந்தமைத்த, பொங்கொளியிலிங்கந்தகன்றிடாதுறைவலென்னவேவரம்புகன்றருளி, மங்கையோர்பாகன்மறையவீடணனும்வானரத்தலைவருஞ்சூழச், சிங்கவேறனையான்புட்பகமிவர்ந்துகிட்கிந்தைமருங்குசென்றடைந்தான். (௭)

அடைதலுமிரவிசிறுவனிற்கிழமைபூண்டிடுமயில்புரைநெடுங்கண், மடநடைத்துவர்வாய்த்தாரையுந்திஞ்சொன்மாசறுமதிமுகருமையுந், தொடர்புறுமற்றக்கவிக்குலத்தலைவர்துணைவியராவருஞ்சூழப், படர்தருவிமானமிவர்ந்தசானகிதன்பதமலரிறைஞ்சியேத்தெடுப்பார். (௮)

தமிழ்முனிமனையாள்வினவில்யான்செய்த தகுதிகளனைத்துமோதுகிறு, மிமிழ்கடலடைத்ததுளைத்திடேல்முனிவனங்கையினேற்றருந்தியதா, லமிழ்தினுமினியாயென்றருமுனிவர்சாலைகளனைத்தையுங்காட்டிக், கமழலர்த்துறைநிறைருழயோத்தியர்வேந்தன்பார்த்தவன்சாலைகள்றுற்றான். (௯)

பழுதறுமறைதேர்பரத்துவாசன்சேர்சாலைகண்ணுறுதலு
ம்பரம, ரெழுகொளிவிமானமிழிந்துசென்றெய்தவுயர்தவமு
னியெதிர்போந்து, தழுவிநன்கியம்பியாசனமளித்துத்தாமரை
க்கண்ணனேமுதலா, யுழையுறுமெவர்க்குநெஞ்சகங்களிப்பவு
வப்பொடுநல்விருந்தளித்தான். (க0)

தெள்ளுநான்மறைதேர்முனியொடுநெறியிற்கவிக்குலந்தி
ன்றுளங்களிப்பக், கள்ளமுதொழுகுங்கனிகளுங்கிழங்குங்காய்க
ளுமுறுவரம்பெற்று, வள்ளல்மாருதிபோய்ப்பரதனுக்கெனது
வரவுரைக்குதியெனவிடுப்ப, வுள்ளமுமுரையும்பிற்படவனும
ன்விரைந்துபோய்ப்பரதனுக்குரைத்தான். (கக)

இராமன்சிவலிங்கப்பிரதிட்டைபண்ணினவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—க0கஎ.

இருபத்தைந்தாவது

இராமன்முடிசூடியவத்தியாயம்.

உரைத்தமாருதியைத்தழுவியுள்ளுவந்து மான்மதச்சேற
ெறுடுங்குவவி, யரைத்தசாந்துகலத்தப்பியதென்னவகங்குளிர்ந்
தன்னையரோடும், வரைத்தடந்திணிதோளிளையவனேடும்வாட்
டிறற்பரதன்விற்றுனை, நிரைத்தெதிர்கொள்ளப்புட்பகமிவர்ந்து
நீனிறவண்ணனுங்கடைந்தான். (க)

அடைந்தகார்வண்ணன்வணங்கியபாத னகங்குளிர்ந்திட்
வெடுத்தணைத்து, மடங்கலேறனையவிலக்குவனேடுமன்னையர்
மலரடிவணங்கி, தடங்கொடாமரையோன்மனத்தினிலளித்தவ
சிட்டனைத்தாழ்ந்தினிதிருப்பக், குடங்கையினெடியகண்ணிமா
மியர்தாள்வணங்கலுந்தழுவியுட்குழைந்தார். (உ)

செயிரறுநந்திக்கிராமமாங்கெய்திச்சிலைத்தழும்பிருந்ததோ
ட்குமரர், மயிர்வினைமுடித்துவாசநீராடிவெண்டுகில்மாலைசாந்
தணியா, வுயிர்நிகர்நண்பினிரவிசேய்குகன்வேல்வீடணனெடு
மினிதுறைந்து, வெயில்கெடவிமைக்கும்புட்பகவிமானமளகை
யர்கோனுழைவிடுத்தான். (ஈ)

அய்யனும்பரதன்றேர்விடவிளவலவிர்மதிக்கவிகைமேற்கவி
ப்ப, பொய்யறுமரக்கனிலக்குவனேடுபொலன்கொள்வெண்சா
மரையிரட்ட, வெய்யவன்மைந்தன்சத்துருஞ்சயத்தின்மேற்செ
லவானரரொவரு, மையவாரணத்தின்மனுடரிற்போதமணிமதில
யோத்திவந்தடைந்தான். (ச)

ஏர்குடியிருந்துசுணங்குபூத்தலர்ந்தவிளமுலைத்தொண்டைட
யந்துவர்வாய்த், தாரையைமுதலாம்வானரமகளிர்மாமியர்க்கு

முழாத்தொகுத்துமுழவக், கார்புறங்கொடுக்குங்கருங்குழற்சீதைக்க ணிர்மணிச்சிவிகையினேறிப், பார்புகழ்ந்தேத்துமயோத்தியினி ராமன்பயிலருமுறையுளிற்புகுந்தான். (௫)

கங்கையைமுதலாநதிப்புனலோராகனைகடற்கடவுணீரனை த்துந், சிங்கவேறன்னவனுமனைமுதலோர்கொணர்தலுஞ்செழு மறைவசிட்டன், மங்கலமுழவங்கறங்கநீராட்டிமடங்கலந்தவிசி னிலிருத்தி, யங்கனும்மேலியணங்குடனிராமற்கவிரொளிமணி முடிபுனைந்தான். (௬)

இராமன்முடிசூடியவத்தியாயமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—௧௧0௬.

இருபத்தாறுவது

அகத்தியன்இராவணன்மரபுரைத்தவத்தியாயம்.

மரகதக்கொண்டல்மணிமுடிசூடி மகிழ்வுடனிருக்குநாட் டனில், பரவருந்தவத்தினகத்தியன்முதலாய்ப்பகர்ந்திடுமுனி வரர்யாரும், விளைவினிலெய்திவாழ்த்தலுமையன்வியப்புடன்பூ சனைபுரிய, வரவுநீர்க்கடலோரேழையும்பருகுந்தமிழ்முனியீங் கிவையுரைப்பான். (௧)

இந்திரசித்தையிருபதுபணைத்தோளிராவணன்றனையிகல் விளைக்குங், கந்தடுபுழைக்கைக்கடாக்களிறனையகும்பகன்னனை க்களப்படுத்தி, யுந்துலகேழும்வாழ்ந்திடவளித்தாயென்றலுமு ரவுவேலிராம, னந்தமில்சீர்த்திக்குருமுனியோடுமகங்குழைந்தீ ங்கிவையுரைப்பான். (௨)

வெள்ளியங்கிரியைவேரொடும்பிடுங்குமரக்கனைமுதல்விள ம்பாம, லெள்ளருந்திறல்கூரிந்திரசித்தையியம்பியதெவனவன் றிறலுந், தள்ளருஞ்சீர்த்தியரக்கர்தந்தோற்றமுழுவதுஞ்சாற்று தியென்னக், கொள்ளைவண்டறைதாரிராகவனுரைப்பக்குறுமு னியாங்கவைபுகல்வான். (௩)

குமரிவண்டாற்றுந்தாமரைக்கிழவன் குமரனற்புலத்திய னென்போன், றிமிரநீண்மாயைகடந்துநற்றவஞ்செய்திரணவி ந்துவினுயர்சாலை, யமைவுடனெய்தித்தவஞ்செய்காலத்திலம்ப கட்டிளமுலைத்துவர்வா, யிமையவர்மாதரளப்பிலரெய்தியீர்ம் புனலாட்டயர்ந்தனரால். (௪)

ஆங்கவர்தம்மைப்புலத்தியனோக்கியாயிழைமகளிர்யாரேனு, நீங்கினியெய்திற்கருப்பமுற்றிடுக வென்றலும்வாவெரீஇயகல, வோங்குசீர்த்திரணவிந்துவின்மகள் துணர்ந்திடாதாங்கணெய் திடலுங், கோங்கிளமுலையாள்கருப்பமுற்றிடத்தந்தைபாற் குறுகியீதுரைத்தாள். (௫)

உரைத்தலுந்திரணவிந்துவென்றுரைப்போன்புலத்தியற்கு வப்பொடுமந்த, விரைக்கருங்குழலையளிப்பமற்றவளும்விச்சிர வாவினையீன்றாள், பரத்துவன்மகளையாங்கவன்வேட்டுவயிச்சிர வணன்றனைப்பயந்தான், வரைப்பருமறைதேர்வயிச்சிரவணன் மூவாயிரம்வருடநோற்றனனால். (௬)

குறுந்துளிதூற்றுங்கங்கைதாழ்சடையோன்கோதறுமுனித வநோக்கிச், செறிந்திடுமியக்கர்வேந்தனுகென்னச்செப்பினனக றலும்வேந்தன், பறந்துசெல்விமானமளித்தனனேகப்பரிவொடு ந்தந்தையைவணங்கி, யுறைந்திடநகரொன்றளிக்கெனவிலங்கை மாநகருறைதியென்றுரைத்தான். (எ)

தொன்றுதொட்டரக்கர்வாழ்வுறுமிலங்கைத்தொன்னகர தனிடைக்குபேர, னென்றருஞ்செல்வத்தமர்ந்தனனென்னவு வப்பொடுவரிசிலையிராம, னன்றறிமுனிவபுலத்தியனளிக்குமு ன்னமுநாண்மதியெயிற்று,வென்றிசேரரக்கருளர்கொலோவவ ர்தங்காதையைவிளம்புகவென்றான். (அ)

வேறு.

முன்னங்கமலப்பொகுட்டின்முதல்வன்சிலரைப்படைத்தாங்
கன்னோர்தம்மிற்சிலரையியக்கரெனப்பேராக்கிப்
பின்னுஞ்சிலரையரக்கரெனப்பேரளித்தான்வருண
மன்னுங்கேதியோடும்பிற்கெதிவலியனுனன். (௯)

ஆலக்கருஞ்சேறுமிழுமலங்குசுடர்வேற்கேதி
காலனேடும்பிறந்தகதிர்மென்கொங்கைப்பயையைச்
சால்வதுவையாற்றிமின்னுக்கேசன்றன்னை
வேலையிடத்திற்பிறந்தவிடமாமென்னவுயிர்த்தான் (௧0)

மருவார்க்கிடியேறென்னவயவாள்மின்னுக்கேசன்
றரையாள்சந்திமகளாஞ்சாலகடங்கடையை
முருகார்மாலைசூட்டியுயிர்போன்முயங்குநாளிற்
கருவுட்கொண்டவ்வரக்கிக்கவின்மந்தரத்திற்கலந்தாள். (௧௧)

மைதோய்பைம்பொற்குடுமிவரையின்வயிறுவாய்த்து
வெய்யகாமங்கனற்றுமின்னுக்கேசற்றொடர்ந்து
தையலேகலோடுந்தனியேகிடந்தச்சிறுவன்
பையுளுற்றுக்கலுழ்தல்பரமன்கண்ணிற்கண்டான். (௧௨)

ஏயசிறுவன்றன்னையெம்மானருளினோக்கித்
தாயினளவினின்றேவளர்கவென்னச்சாற்றி
யாயவரக்கன்றனக்கோரம்பொன்னகரமளிப்ப
ேவெய்மென்றடந்தோட்கவுரிவிழைவினிதனைப்புரிவாள். (௧௩)

அரக்கர்மகளிர்கருப்பமடைந்தனன்றேபெறவும்
விருப்பினீன்றவன்றேமக்கள்விரைவின்வளர்ந்து
பரித்தனதாய்பொன்றிடவும்பவளச்செவ்வாய்க்கவுரி
யுரைத்தற்கரியவரமாங்குதவியிறையோடகன்றாள். (கச)

வேறு.

கற்சமரால்யானையின்றோல்போர்த்தாடுங்கடவுளருளினிதி ற்பெற்ற, பச்சிரத்தங்கொப்புளிக்கும்பருவேற்சுகேசனெனுமர க்கனெங்கை, யிச்சையுடனினிதளித்தமாநகரில்வாழுநாளியக்க ர்கோனை, நச்சிலைவேற்கிராமணிதனன்மகளைச்சுகேசனுக்குநல் கினனே. (கரு)

ஈற்றுயிளந்தசிறுதும்பிமென்மேல்போய்ப்பறந்திடுமீர்ஞ்சி றையினுற்ற, காற்றினலமருமருங்குற்றேவவதிசுகேசனொடுங்கல ந்துவெய்ய, மாற்றெறியுமாலியவான்சுமாலியொடுமாலிதனைவ யிறுவாய்த்தாள், கூற்றும்வெருவருந்திறலோர்கொடுந்தழலினி ன்றுதவங்கோலினாரால். (கசு)

மற்றவர்தந்தவநோக்கிமறைக்கிழவன்மகிழ்ந்தனனீர்வரங் கேட்கென்னப், பற்றலரைவென்றுலகமெங்குடைக்கீழ்வைக்க வருள்பாலியென்னப், பொற்றசெழுங்கமலத்தோனவையளித் துநிங்குதலும்புவனம்யாவும், கொற்றமுறவடிப்படுத்திவிச்சுவக ன்மாவொடிவைகூறலுற்றார். (கஎ)

விண்ணகர்போலெழிலிகழும்விழுத்தகுநன்னகரமொன்றீ ங்கியற்றுகென்னக், கண்வழுக்குகதிரொளிகால்திரிகூடமால்வ ரையினூடலக்கண், எண்ணவொருநகரமுனமமைத்தனனுங் கமர்திறனலவிறலோடும், பண்ணியவாம்பரித்தடந்தேரரக்க ரொருமூவருமப்பதிபுக்காரால். (கஅ)

கந்திருவர்குலத்துதித்தகயனெடுங்கணருமதையாங்கன்னி வேற்கட், சுந்தரியின்னமுதமொழிக்கேதுமதிசுவதைபெனுஞ் சுடர்வேலுண்கட், பைந்தொடிமாதரையீன்றாளாங்கவரோர்மூ வரையும்பருதிவேற்கை, மைந்துடைமாலியவானுஞ்சுமாலியு மாலியுமுறையின்வதுவைசெய்தார். (கசு)

மாலியவான்றேள்புணர்ந்துசுந்தரிவச்சிரமுட்டியெச்சகோ பன், காலனிகருன்மத்தன்விருப்பாக்கன்றுயில்வோரைக்கடி வோன்மத்த, னலங்கிர்தன்முகனேடனலையெனுமணங்கினையு ம்வயிறுவாய்த்தாள், சிலமுறுகேதுமதிசுமாலியைத்தோய்ந்தீ ன்றவரைத்தெரிக்கலுற்றாம். (உ0)

விகடனுயர்பிரகத்தன்விறற்கால கார்முகன்வெம்பாசகன் ....சல்செயகம்பனன்டகன்சங்கிருதிபுதைக்கண்மனை

ழிற்பிரசங்கன், நிகரில்சுபாரிசனெடுகைகசிகும்பனசிவேனெடு
ங்கட்செவ்வாய்ப்,பகையமுதமுறமுமொழிப்பாவைபுட்போற்க
டையென்னப்பகர்வரன்றே. (உக)

மாலியெனவுலகேத்தும்வல்லரக்கன்வசுதைவனமுலையிற்
றேய்ந்து, சிலமிகுநீலனெடுமனலனரன்சம்பாதியென்னுந்திறி-
ல், கோலமணிமுடியரக்கர்நால்வரையுமினிதுயிர்த்தான்குறுகா
ற்செற்று, ஞாலமுழுவதும்வெருவமாலியவான்கொடுங்கோன்
மைநடத்துநாளில். (உஉ)

விண்ணவர்வெவ்வரக்கர்புரிகொடுந்தொழிலுக்காற்றாதுக
யிலைமேவித், தண்ணிலவுக்கதிர்க்கற்றையமுதிறைக்குந்தாழ்ச
டையோன்சரணம்போற்றிக், கண்ணறையராமரக்கர்மூவரையு
ங்கடிந்தெமக்குக்களைகணாகி, யண்ணலெமக்களித்தியெனவிரந்
திடலுங்கறைமிடற்றெம்மடிகள்கூறும். (உ௩)

தூயநறுமலர்தூவிவழிபாடுபுரிந்தருளுஞ்சுகேசன்மைந்த,
ராயிரம்வெம்பிழைசெயினுமாங்கவரைக் கோறலெமக்கடுப்பத
ன்றாற், றீயரைக்கொல்கெனமாலைப்பணித்தனனீர்விரைந்தாங்
குச்செல்மினென்னப், போயமரர்குறையுரைப்பநெடியோனும
தற்கிசைந்துபோமினென்றான். (உச)

அவ்வுரைகேட்டபினெடுங்கட்புலோமிசைவெம்முலையா
ளையணைக்கும்பாகன், கௌவையொழிந்தமரர்தொழவிண்ணாடு
புகவிழைந்தகருமம்யாவும், வெவ்வினைத்தூதுவருரைப்பமாலி
முதலரக்கருளம்வெகுண்டுகேட்டுப், பௌவநெடுங்கடற்றானை
புடைசூழப்பண்ணவரூர்வளைந்துகொண்டார். (உரு)

வேறு.

திருந்தலர்புகுந்தமாற்றஞ்செவிந்தலைவெதும்பக்கேட்டுக்
கருங்கடற்சிவப்பவந்தகவுத்துவமணிந்தமார்பன்
முருங்கெரிகவிழ்க்குஞ்செங்கண்மூரிவெங்கலுழனூர்ந்து
வருந்தலீரமரரொன்னவாளமரமுவத்துற்றான். (உசு)

தோற்றமுமுடிவுமில்லான்றூண்டுபுட்சிறகர்வீசுங்
காற்றினாலரக்கர்சேனைகவிழ்தலுமாலிவெம்போ
ரேற்றுவெங்கலுழனஞ்சியிரியவெங்கதையாலேற்றக்
கூற்றுறழ்திகிரியேவியவன்றலைகுறைத்திட்டானே. (உஎ)

மாலிவெங்களத்தின்வீழமாலியவான்வந்தெய்தி
வேலினாலெறியவையன்விலக்கிமற்றதனைப்பற்றி
யாலமேயனையான்மெய்யினெறிதலுமயர்ந்துவீழ்ந்து
சூலமொன்றெடுத்துப்பின்னுந்தோன்றல்மேல்விடுத்துநக்கான்.

கங்கவாளரக்கன்பின்றுங்கலுழன்மேனடந்துசெல்லச்
செக்கர்வானனையவெய்யசிறைவிசைக்காற்றின்மொத்துண்
டொக்கலோடுடைந்தாங்கவலைவைசேர்சருகிற்சிந்தி
மைக்கடலிலங்கைநீங்கிப்பாதலமருங்குபுக்கான். (உகூ)

பாதலத்துறையுநாளிற்பாசிறைப்பருமவல்குற்
காதளங்கொளிரும்வேற்கட்கைகசிவதுவைபாற்றத்
திதருவானைத்தேடித்திரிவுழியியக்கர்வேந்தைப்
போதரக்கண்டுகோனுன்பாதலம்புகுந்துசொல்வான். (ங0)

நச்சயில்பொருவுமொண்கணங்கைகைகசிநீகேட்டி
யிச்சிரவாவைமேவிவிறன்மகப்பெறுதியென்னப்
பச்சிளங்குரும்பைமானும்பணை முலைக்குழைகொல்மென்றேட்
செச்சைதாழ்கூந்தல்போந்துதெய்வமாமுனியைக்கண்டாள்.()

காளெனுடுமீண்டுபுக்கநங்கைநீயாதையென்ன
வேணவாவோடுநின்றனருளினால்விறலின்மிக்க
மாணுடைமைந்தர்தம்மைவயிறுவாய்த்திடுவான்போந்தேன்
பூணருந்தவத்தோயென்னப்புணர்ந்திவையுரைக்கலுற்றான். ()

பொன்புனைதிகலைபூத்தபொம்மன்மென்முலையாய்கேட்டி
நண்பகலணைந்தவாற்றானிலம்வெருவச்செய்யும்
வன்புடைமனத்துவெய்யமைந்தனைப்பெறுதியென்ன
வன்பொடுவணங்கிநின்போலருமகவேண்டுமென்றாள். (ஙங)

கன்னலுமமுதுங்கைப்பக்கனிந்தமென்குதலைகேட்டிப்
பின்னர்நீயுயிர்க்குமைந்தன்பெட்பொடுமென்போலீண்டு
மன்னுடற்றுன்பாற்றேன்றிவரம்பறுமாயுளெய்தி
யுன்னருங்குணத்தனாகியுலப்பிலுள்வாழ்வனென்றான். (ஙச)

இருபதுகரமுஞ்சென்னியீரைந்துந்தாங்குகின்ற
திருவிலிதன்னைமுன்னஞ்சிறப்பொடுவயிறுவாய்த்துக்
கருவரையனையகும்பகன்னனையீன்றுபின்னு
முருவவேவாடரிக்கட்சூர்ப்பனகியுமுயிர்த்தாளன்றே. (ஙரு)

விடனைன்றன்னைப்பின்னும்வியப்பொடுமினிதினீன்றாங்
கோடரிக்கண்ணுறைவந்தமைந்தனையுவந்துநோக்கிச்
சேடமில்திருவின்மிக்கவியக்கர்கோன்செல்வமெய்த
நீடருந்தவங்களாற்றிநின்மின்களென்னப்போனார். (ஙசா)

இத்தழனடுவினின்றோராயிரம்பருவஞ்சென்றால்
மைந்துடைச்சென்னிபத்திலொன்றறத்தழலின்மாட்டி
வெந்திறலரக்கன்பத்தாஞ்சென்னியும்விட்டுமேல்வை
வந்துசெங்கமலப்புத்தேள்வரங்கொளென்றுரைத்தலோடும். ()

விஞ்சையரவுணர்சித்தருரகர்விண்ணவர்கடம்மாற்
றுஞ்சுதலின்றியெல்லாவுலகமுந்துனேவில்வெல்ல
வெஞ்சமத்தற்றசென்னிதோளவைமீளவெய்துக்
கஞ்சநான்மலரோய்நல்கென்றிரத்தருங்கடவுளீய்ந்தான். ()

வீடணன்முன்னமெய்திவேண்டியகேட்டியென்ன
நாடொறுந்தருமசிந்தையெய்திநாளுலவாதாவி
பீடுறநல்கென்றேதப்பிதாமகனளிப்பவிண்ணோர்
மாடுறுகும்பகன்னற்குயர்வரம்வழங்கலென்றார். (௩௯)

என்னலுமரக்கனுவில்வாணியையேவியெந்தை
மின்னுமேவற்கும்பகன்னவரமொன்றுவேண்டுகென்ன
மன்னுநித்திரைதாவென்றுமருண்டவன்கேட்பநல்கிப்
பொன்னவிர்கமலப்புத்தேள்தன்னுலகதனிற்புக்கான். (௪0)

ஊழ்வினைப்பயத்தான்மாந்தர்க்கொழியநல்வரங்கள்பெற்றுப்
பாழியம்புயத்தார்மற்றோர்படர்வனத்தெய்துமேல்வைச்
சூழ்சுடர்ப்பருதியொள்வாட்சுமாலிதன்மைந்தரோடும்
வாழியென்றேத்தியன்னோர்த்தழீஇயிவைவழங்கலுற்றான். (௪௧)

கொடிமதிலிலங்கைமூதூர்கொள்கெனமறுத்தல்கேட்டாங்
குடல்சினவுருமேறன்னபிரகத்தனுருத்துநோக்கி
யுடல்கெழுமவுணர்தம்மைத்துணைவனொன்றெண்ணுதன்னோர்
மிடைதருதுறக்கம்விண்ணோர்விரகினிற்கொண்டிலாரோ. (௪௨)

ஆதலாற்கோடியென்னுமருட்பிரகத்தன்றன்னை
மேதகுகுபேரன்பாற்போயினிதினில்வேண்டுகென்ன
வீதுசென்றியம்பலோடுமியக்கர்கோன்றந்தைபாற்போய்த்
தூதிறுற்றசக்கிரீபன்சொன்னவையாவுஞ்சொன்னான். (௪௩)

அளகைமாநகரில்நீபோயமர்தியவ்விலங்கைதன்னைத்
தளையவிழலங்கற்றிண்டோட்டசக்கிரீபற்குநல்கென்
றுளமகிழ்தந்தைகூறவுவப்பொடுமளித்துப்போனான்
வளமிகுமிலங்கைதன்னின்முடிகவித்தரக்கன்வாழ்ந்தான். (௪௪)

மின்னுநர்க்காலகேயன்விழைவொடும்வதுவையாற்றத்
தன்னுடைத்தங்கைசூர்ப்பனகையினைத்தயாவினல்கி
மன்னியகானின்வேட்டமாடலுமயனேடெய்துங்
கன்னலங்குதலைச்செவ்வாய்க்கன்னியைக்கண்டுசொல்வான். ()

ஈங்குநீயாரையென்னமயனென்பேனேமையென்னும்
பூங்குழலணங்கைப்புல்லிப்பொருவில்துந்துமிமாயாவி
யாங்குலமைந்தரோடுமம்பலைத்தகன்றவாட்கட்
கோங்கிளமுலைசிறந்தக்கோதையையினிதினீன்றேன். (௪௬)

மேயநீயாரையென்னவிச்சிரவாமுன்னின்ற
நேயநன்மைந்தனென்றுநிகழ்த்தலுமயனன்போடு
காயெரிசான்றாய்மண்டோதரிதனைக்களிப்பினல்கிப்
பாய்கதிர்ப்பருதிவேலும்பரிவுடனளித்துப்போனான். (௪௭)

முருக்கிதழ்பூத்தமுரல்முகிழ்முலைக்கன்னியோடு
மரக்கர்கோனிலங்கையெய்தியன்புடனிருக்குநாளின்
விரைச்செழுந்தெரியல்மார்பன்விரோசனன்புதல்வியீன்ற
திருக்கொள்வச்சிரச்சுவாலைதனைக்கும்பகன்னன்சேர்ந்தான். ()

ஆடல்வேற்சயூடனன்பின்னளித்தருள்சாமைதன்னை
விடணன்விழியின்வேட்டுமேதகவொழுகுநாளி
னேடவிழ்கூந்தல்வண்டோதரியிகலிலங்கைவேந்தன்
பீடுறுமகிழ்ச்சியெய்தவிராவணிதன்னைப்பெற்றான். (௪௯)

கனைகுரல்முகிலிரார்த்துக்கலுழ்தலால்மேகநாத
னெனுமுயர்நாமம்பெற்றாங்கெரியெனவளருநாளில்
வனைகழலரக்கர்கோனைமன்பதைவருத்தலென்றைத்
துனைவினிலளகைவேந்தன்றூதனுலுரைத்தல்செய்தான். (௫0)

தூதுவனரக்கன்முன்போயுன்றுடைத்துணைவன்வெய்ய
மாதவம்புரிந்துதிங்கட்கண்ணிசேர்வரதனோடு
மேதமில்நண்புபூண்டானின்னையுமுலகுக்கெல்லாந்
தீதிழைத்தருளலென்றுச்செப்பினனென்னலோடும். (௫௧)

வெஞ்சமமென்னில்வெய்யவிரிதழற்பிழம்புகக்கி
நஞ்சுகொப்புளிக்கும்வாய்வாட்டடற்றீஇநாமவேலான்
றுஞ்சலில்விடையானோடுந்தோழமைக்கொண்டானென்னி
லஞ்சுவன்கொல்லோவென்றுவவன்றலை துணித்துவீழ்த்தான்.

வீழ்த்தவனுடலைவெய்யவரக்கர்க்குவிருந்துநல்கிக்
காழ்த்தவெம்மனத்துப்பேழ்வாய்க்கதழ்சினத்தரக்கர்கோமான்
சூழ்த்ததன்சேனையோடுமமைச்சொடுந்துனைவின்விண்ணோர்
வாழ்த்திடுமளகைமூதூர்மருங்குறவளைந்துகொண்டான். (௫௩)

கொடிமதில்வாயிலோரைக்கொன்றுவாளரக்கர்கோமான்
முடிசிதர்ந்தொதுங்கவெய்யமாணிபத்திரனைமோதி
யுடல்சினக்குபேரனுவியுலந்திடவடித்துவீழ்த்திச்
சுடர்செய்புட்பகவிமானந்துனைவினிற்கவர்ந்துபோனான். (௫௪)

இருநிதியியக்கர்வேந்தன்றுயரொழிந்திமைப்பினெய்தி
விரிகதிரிமைக்கும்பைம்பொனளகையின்மேவவெய்யோன்
பொருவருங்கிரியினிங்கிச்சரவணம்புகுதுமேல்வைத்
தெருளொடும்விமானநிற்பவரக்கர்கோன்சிந்தைசெய்தான். ()

இத்தலையெய்தலெந்தையிரைவியோடமர்ந்தானென்ன
மைத்துகுமிடற்றுநந்திவிலக்கவான்முகத்தைநோக்கிக்
கைத்தலம்புடைத்துவெய்யோனகுதலுங்கனன்றுநந்தி
துய்த்தலைக்குரங்காலுன்சீர்தொலைகவென்றுருத்துவைதான். ()

வைதலுந்தசக்கிரீபன்வான்றொடர்கயிலைவெற்பை
வெய்தினிலெடுப்பவேந்தைவிரற்றலைநுனியாலூன்றப்
பையுளுற்றழுங்கிமாழ்கிப்பரமனைப்பழிச்சிவெய்யோ
னைதுணர்சாமகானமறிவொடுபாடலுற்றான். (௫௭)

ஆயிரம்பருவமிவ்வாறழுதலாலரக்கர்கோனுக்
கேய்வுறவியம்புநாமமிராவணனென்றுகூறி
மாய்வறுவரமுநல்கிவிடுப்பவாளரக்கன்போந்து
மீய்யரிமையவெற்பின்மேவியோரணங்கைக்கண்டான். (௫௮)

கண்டுநீயாரையென்னவந்தணன்களிப்பினோடு
மண்டரோத்தெடுப்பவின்றவருட்குசத்துவசனென்போ
னெண்டகுவேதமோதுமவர்க்கிடைப்பிறந்தேனென்னைத்
தண்டலின்மறையோன்வேதவதியெனச்சாற்றினானல். (௫௯)

சொல்லருந்தந்தைதன்னைத்தோன்றியோரரக்கன்கொன்றான்
முல்லைசால்கற்பினன்னைமுனிவொடுமுடிந்தாள்யானுங்
கல்லெனீர்வேலைநாப்பட்கண்டுயில்நெடியோன்றன்னைப்
புல்லுவான்றவஞ்செய்கின்றேன்புலவுவேலரக்கவென்றாள். ()

என்றலும்வலிதின்வெய்யோன்பற்றுமீர்ங்குழலைநங்கை
தன்றுணைக்கையானீக்கிக்கிளையொடுஞ்சாம்பராகப்
பொன்றிடவுன்னையெய்தும்பிறப்பினிற்புரிவேனென்னக்
கன்றியவுளத்தினோடுங்கனலின்வீழ்ந்தாவிமாய்ந்தாள். (௬௧)

கோற்றொடியிறந்தபின்னர்கொல்புலியனையவீரன்
போற்றருமருத்துவப்பேர்ப்புரவலன்சாலைநண்ண
வீற்றுவீற்றாகவிண்ணோர்பறவையின்வெருவிப்போக
வேற்றமர்க்கெழுதியென்னமருத்துவனெழுந்துவந்தான். (௬௨)

வெஞ்சினமொழிதியென்னமுனிவரர்விலக்கமன்ன
னெஞ்சலில்சாலையெய்தவிராவணனிகழ்ந்துபோனா
னுஞ்சவானவர்கள்மீட்டுமுயர்மகமுடித்துக்காக்கை
யஞ்சிறையன்னமஞ்ஞைக்கருள்வரமளித்துப்போனார். (௬௩)

காதியைமயனைவெம்போர்கருதுதுற்சந்தன்றன்னைத்
தீதுறவரக்கன்வென்றுதிசைக்கடற்றனைசூழத்
தூதுறும்புறவம்வைகுந்துகிற்கொடிமாடத்துச்சி
யாதவன்றடந்தேர்தேய்க்குமயோத்திமாநகரஞ்சேர்ந்தான். ()

வேறு.

அனான்னியன்போர்வேண்டியவரக்கன்முனமெய்திச்
சினவெங்கணைபொழியத்தனிதோர்நின்றுமிழிந்தே
பனையொத்திடுகையால்நனியடிப்பப்பதைபதையா
நினைவற்றயர்தலும்வெய்யவனிருபன்றனைநக்கான். (சுரு)

மன்னர்க்கியல்படுபோரிடைமடிதல்வயங்கோட
லென்னத்தனியென்றுநெதனையெள்ளிச்சிரித்தமையாற்
றுன்னுற்றவென்மரபின்னெருதோன்றல்நனிதோன்றி
யுன்னைச்செகுத்திடுவானெனவைதாருயிரொழிந்தான். (சுசு)

ஆற்றலொடுங்கொடியோன்பிலமடையப்புகுமேல்வைத்
தோற்றுமிசைபயில்மாமுனியரக்கன்முனந்தோன்றிச்
சாற்றும்பிலவழியன்றிதுகழல்கால்வடிவேலோய்
கூற்றின்னகர்க்கேகும்வழியீதென்றுகுறித்தான். (சுஎ)

என்றுமுனிகூற்றேருடுமிவ்வுரைகூறினனேகப்
பைந்நாகரோடமர்செய்குதல்பனிவெங்கடல்கடைதல்
பின்றுகுமென்றடல்கூர்தருபிறைவாளெயிற்றரக்கன்
றென்னந்திசைசென்றூர்கழல்நமனேடமர்செய்தான். (சுஅ)

காற்றின்கணைவெய்யோன்கணைகனலின்கணைகொல்லுங்
கூற்றின்கணைமுதலாகியகணையைச்சிலைகோலி
மாற்றிச்சமர்புரிவேலையிலஞ்சித்திறன்மறலி
போற்றம்பிறிதில்லாதுயர்யமதண்டமெடுத்தான். (சுகூ)

அக்காலையின்மலரோனவனைய்தாவடலரக்கன்
மிக்கானவன்வரத்தாலிதுவிடலென்றுவிலக்க
மைக்கார்நிறக்கூற்றும்வெருவோடும்மறைந்தோடப்
புக்கானிலங்கையின்மீட்டுமப்புலிப்போத்தனவரக்கன். (எ0)

வேறு.

துணிகதிர்நெடுவேலிராவணன் பிலத்திற்றுன்னிவாளுரக
ரைத்துரந்து, மணிமதினகரில்வைகிடுநிவாதகவசரூாவாளமரோ
ம்ப, வணிகிளர்கமலத்தயனவனைய்தியாங்கவற்கிராவணனோ
டு, பிணையுறுநட்புச்செய்தலுமவனுங்கொன்றொழிதிங்களுறி
ருந்தான். (எக)

விரைவினன்னகரநீங்குழிக்கால கோபரில்விந்தியுச்சிகுவ
ன், செருவினிலெம்பவவனுயிர்தொலைத்துத் தேனுவைக்கண்ட
டிபோற்றி, வருணனூர்புகுந்துமைந்தரைவென்றுவனப்புடை
மாதரைக்கவர்ந்து,பொருவருமிலங்கைபுகுந்தநூற்பனகைதனை
க்கரனூர்புகுத்தினனெல். (எஉ)

அருவரைத்தடந்தோ ளிராவணியொண்டோளந்தனைரு
ளினுடைக்குந், செருவினிலெவர்க்குந்தெரிவுறுதொளித்துச்

செருச்செயுமாயையுமொன்னூர், வெருவரவெங்குன்றிரிதருதே ருநிகும்பலைவேள்வியிற்பெற்று, மருவினனவனேடிலங்கையி ற்புகுதவிடனன்வணங்கியாங்குரைப்பான். (எ௩)

வெருவரலின்றிமதுவெனவுரைக்கும்வெந்திறலவுணனின் டெய்திப், பொருவருங்கும்பினசியினைக்கவர்ந்தானென்றலுமி ராவணன்புழுங்கி, யுரைபெறுதானைகடலெனச்சூழக்குரோணி னாலாயிரத்தோடு, மருவலுங்கும்பினசியிரந்துரைப்பமதுவொ டுமரக்கர்கோனட்டான். (எச)

பாழியந்தடந்தோண்மதுவொடுஞ்சூழ்ந்த பலகிளைப்பரப் பொடுமரக்கன், மாழைமென்னேக்கிற்புலோமிசைகணவன்மா நகர்தனதடிப்படுத்த, வீழியங்கவிவாயியக்கியரமரர்கின்னரர்மி துனம்வீற்றிருக்குஞ், சூழ்சுடர்ப்பருதிபோக்கறிவர்ந்தகயிலை யிற்றுனைவின்வந்தடைந்தான். (எரு)

வேறு.

கள்ளூற்றிருக்குநறுமலர்ப்பைங்காவினரக்கனிறுத்திடலும் பிள்ளைத்தென்றனறவுயிர்த்துப்பிரிந்தாருயிர்மேற்றனிநடப்ப வெள்ளிவிழின்கதிர்பரப்பிவிழைவோர்ப்பிரிந்தோராருயிரை யள்ளியுண்ணுந்திங்களொடுமடைந்ததந்திமருண்மாலை. (எசு)

குணக்கும்விசும்புமுகம்விளர்ப்பக்குருக்குந்திங்கட்கொழு ந்தன்பாத், தணக்குமகளிர்மார்பனைத்துங்கவர்ந்துதரளவடந் தாங்கி, யணக்குமுலைமேற்றீயிறைக்குமாலைப்பொழுதிலடலர க்கன், வணக்குமருங்குல்மடவார்தங்காமமெண்ணிவருந்துற் றான். (எஎ)

குடபாற்பிறந்தகுழந்தைமதிக்கொழுந்திற்பொழியுநிலாக் கற்றை, வடவாமுகம்போலுடல்வெதுப்பமம்மரோடுமடலரக் கன், கடல்வாய்தோன்றியமுதுயிர்க்குங்கதிர்வெண்முத்தவட ம்பரியா, வுடலுஞ்சிலைவேள்வின்மையினைவியந்துவருந்தோடு றைபோழ்தின். (எஅ)

வேறு.

விளிம்புறந்தூக்குசெஞ்சுடர்க்கற்றை மேகலைமறுவுடனி மைப்ப, விளம்பிறைவடந்தாழ்ந்தேர்குடியிருந்தவிளமுலைவெற் பினைத்தாங்கித், தளர்ந்திடுமிடுகுநுசுப்பெனவிரங்கித்தவளவா ய்க்கிண்கிணிபுலம்ப, வளந்தழிவரியகருங்குழன்மீதிலஞ்சிறை த்தும்பிபாட்டயர. (எகூ)

கண்கவர்வனப்பிற்கதிர்சுமந்தொழுகக்கடல்வயிற்றரிக்கவா ன்முத்த, வொண்கதிர்முறுவலினொடுராருயிரைவேரொடுமகழ் ந்தொளிபரப்ப, விண்குடிவாங்கமேக்குயர்ந்தோங்குமென்முலை யுலகெலாங்கவரப், பண்கனிந்தொழுகுமென்மொழிக்குதலைபா சொடுசேதாழுமைடேயள்ள. (அ0)

காவியுங்குமிழுங்கடங்கெறிநடங்கண்கடிபகூற்றினைமுதல மா, ராவியுண்டுமிழ்ந்துசெவ்வரியொழுகியயிலொடுங்தோழமைகொள்ளா, வேலினைமுனிந்துகொலைத்தொழில்ப்பழக்துந்த வக்குறும்போன்றறவெரிந்து, மாவயிர்மருட்டிமதாவைகொப்புளித்துவள்ளைவார்குழைமிசைநடப்ப. (அக)

கனையெறிகடல்வாய்க்குழித்தமுத்திமைக்குங் காஞ்சிசூழ் கைவளரல்கு, லுருவமேகலையினயர்ப்பறக்கைபோயுயர்திசைமுழுவதுங்கவாத், திருவநீள்புருவக்கொடிமதன்பிடித்தசிலையெனவழகுகண்படுப்ப, விரியிருள்பருகுசேட்டிளமதியின்விழுத்தருவாலுதலிலங்க. (அஉ)

வேறு.

வன்னமுலைமாதரடியீடுதனிவாழ்த்தப்
பொன்னசலமொத்துவளர்பூண்முலைசுமந்தே
மின்னிடைவருந்துமெனமேகலையிரங்க
வன்னமெனுமென்னடையரம்பையவண்வந்தாள். (அங)

வந்திடுமரம்பையையிராவணன்மகிழ்ந்து
பைந்தளிர்மருட்டியபதத்துணைபிடித்துச்
செந்துவரிதழ்க்கனிதிருந்தகவளித்தே
யுந்திடவெனைத்தனிபுரக்கெனவுரைத்தான். (அச)

என்னலுநின்முன்னவனிளக்கிழவனின்ற
மன்னனளகாபரனெனைத்தனிவரித்தா
னுன்றுடன்மணப்பதுதகாதெனவுரைத்துக்
கன்னல்புளித்தென்னநனிகட்டுரைபுகன்றாள். (அரு)

சில்லெனமொழிக்கிளவிகேட்டருளில்தீயோ
னல்குல்பகர்வோர்க்குமுறையோவெனவறைந்தே
வல்லியினடந்துவலிதிற்றனிபிடித்துப்
புல்லியமுதன்னமயில்போகநனிதுய்த்தான். (அசு)

ஆங்கவன்விடுத்திடலுமாரமுதமன்ன
கோங்கமுலைமாதுநளகூபரனைநண்ணி
யீங்கிவையியம்பவவனின்றுமிதுபோலுந்
தீங்குசெயினவன்றலைதெறிக்கவெனவைதான். (அஎ)

ஓங்கமலப்பொதியவிழ்ப்பவரிமான்றேர்
வெய்யவனுதித்திடலும்வெந்திறலரக்கன்
மொய்யமருடற்றுபலதானையுடன்மொய்ப்ப
மையிலமரர்பதியில்வந்தனன்வளைந்தான். (அஅ)

இந்திரமுகுந்தனுமைமெய்தியிவைகூற
வெந்திறலரக்கனுயிர்விட்டியிடுகாலம்
வந்திலவனின்றுநல்தகாதெனமறுப்ப
வந்தியுயர்வானவருஞ்சமரினுற்றார். (அகூ)

வேறு.

விண்ணவர்கடலந்தானைவெருக்கொடுமுறியவெற்றி
யண்ணலஞ்சுமாலிவெம்போர்புரிதலுமழன்றுசீறி
நண்ணியவசுக்கடம்மினவையில்சாவித்திரப்பேர்ப்
பண்ணவன்கதையினலேசுமாலியைப்படுத்திட்டானே. (கூ0)

அள்ளிலைவயிரப்பைம்பூணிராவணனழன்றுசீறிக்
கொள்ளைவெம்பகழிவாங்கிமலையினைக்குரீஇமொய்த்தென்ன
வெள்ளைமால்யானைமேலும்விண்ணவர்க்கிறைவன்மேலு
மெள்ளிடையிடமின்றென்னச்சிலைகுழைத்தெய்திட்டானே. ()

இந்திரன்வருணன்காற்றுக்கிறைவன்வெங்கூற்றமங்கி
நந்தலிலளகைவேந்தனமவேல்நிருதிதண்ணென்
சந்திரமவுலியன்னோர்மருத்துவத்தலைவர்தாக்கி
வெந்திறலரக்கர்கோனைவளைந்துவெம்பூசல்செய்தார். (கூஉ)

தாப்புலியனையசீற்றச்சயந்தனைமேகநாதன்
யாப்புறுத்திடுதற்கெய்தவிகற்பவுலோமன்போந்து
காப்பனென்றெடுத்துப்போகிக் கடலிடையொளிப்பவெய்யோ
பாப்பனைப்பள்ளியான்றன்முன்னவன்பால்வந்துற்றான். [ன்

வச்சிரப்படையால்வெய்யவரக்கரைமறியமாட்டிக்
கச்சையங்களிற்றிற்றோன்றுங்கதிர்முடியமரர்கோனை
நச்சரவணியும்புத்தேள்நல்கியமாயைதன்னு
லிச்சையன்மேகநாதனயர்ப்புறுத்திதனைச்செய்தான். (கூச)

இந்திரன்றன்னைவவ்வியிராவணியிகலினேற்ற
வந்தமிலமரர்யாருமமர்தொலைந்தோடமோதித்
தந்தைமுன்னுய்ப்பவெய்யோன்றனையங்கடலினோடு
மெந்திரப்பொறிசேறிஞ்சியிலங்கையில்வந்துசார்ந்தான். (கூரு)

இன்னவையமரர்கூறவீர்ங்கமலத்தின்மேய
முன்னவனிலங்கையெய்திமுகமனன்கியம்பிவிண்ணோர்
மன்னனைவிடுதியென்னநிகும்பலைமகத்திற்றோன்றும்
பொன்னெடுங்தேரினெய்திற்பொன்றிடாவரநல்கென்றான். ()

அவ்வரமலரோனல்கியருளினிந்திரனைமீட்டுச்
செவ்விசேரரக்கனமமிந்திரசித்தென்றோதி
யெவ்வெலாத்திசையும்போற்றுமிந்திரனயர்ச்சிதீர
மௌவலங்கரியகூந்தல்வாணிதன்கேள்வன்சொல்வான். கூஎ)

ஆள்வழக்கறுக்கும்வேற்கணகலிகைமுலையிற்றோய்ந்த
நீளிரும்பாவந்தன்னனெடுந்துயருழந்தாயீது
வேள்வியொன்றியற்றிற்றீருமென்றலும்வேள்வியாற்றி
வாளொளித்துறக்கம்புக்கான்மலரயன்மறைந்துபோனான். ()

என்றருமுனிவன்கூறவிராமனுமியம்பலுற்றான்
குன்றினையெடுத்தநின்றோளிராவணன்குறுகும்போரில்
வென்றவையான்றிதோற்றதுண்டெனில்விளம்புகென்னத்
தென்றமிழ்கோத்தசெஞ்சொல்முனிவரன்செப்பலுற்றான். ()

பொன்வரைவிழுந்துவிட்டாலன்னதோர்பொற்புவாய்ந்த
மன்னுமாயிரங்கையோடும்வாளமர்க்களத்தினெய்துங்
ஆன்றுபோரருச்சுனன்றன்றூழலினிராவணப்பேர்
மன்னவனெய்தியன்றோர்காண்கலான்வல்லைமீண்டான். (க00)

நருமதையாற்றிறுடிவெண்மணற்குன்றினன்கி
னராவுடைப்பூசையாற்றியிராவணனமருமேல்வை
மருவுமாயிரம்பொற்கையால்வரநதிதடுத்துவேந்தன்
பொருவருமகளிரோடும்பூம்புனலாடலுற்றான். (க0க)

குடபுலந்தெதிர்ந்துதெண்ணீர்வருதலுமரக்கர்கோமா
னடுத்திறற்சுதனைக்கண்டுறலறிகெனத்தூண்டவன்னோன்
மிடலுடையருச்சுனப்பேர்வீரியன்கரத்தாலாற்றை
யடலொடுந்தடுத்துநீராட்டயரநீரெதிர்ந்ததென்றார். (க0உ)

சுற்றமுந்தானும்வேறுநெறிகலாவரக்கன்சீறி
யேற்றலுமருச்சுனப்பேரோங்கனீர்குடைந்துமூழ்குங்
கோற்றொடியவரையஞ்சலென்றுவெங்குருதிவெள்ள
மூற்றிருந்தொழுகும்வெய்யகதையொடுமுருத்துவந்தான். ()

வருதலுமரக்கர்கோமான்வாய்மடித்தெயிறுதின்றுங்
கிருபதுகரத்தினாலுமெடுத்தொருகதையாலேற்ற
வெருவரலின்றிக்காத்தவீரியன்கதையாலேற்ற
வருவரைவீழ்ந்ததென்னவஞ்சுவிற்கிடைபோய்வீழ்ந்தான். ()

வீழ்ந்தவாளரக்கன்றன்னைவிரைவின்யாப்புறுத்திமன்னன்
சூழ்ந்துதன்சேனைவாழ்த்தத்தன்னகர்புகுதுமேல்வை
யாய்ந்தநாற்கேள்விமிக்கபுலத்தியனரசர்போற்றி
வாழ்ந்திடுகென்றுவெய்யோன்வன்சிறைநீக்கினானே. (க0ரு)

தளர்வொடுமிலங்கையெய்தித்தன்கிளைப்பரப்பினோடு
மளிமுரல்தாமமார்பன்சிலபகலமர்ந்தபின்னர்க்
களியொடும்வெம்போர்வேட்டுக்கதழ்சினக்களிறுபோலக்
கிளரொளிமாடஞ்சூழ்ந்தகிட்கிந்தைநகரினுற்றான். (க0சா)

வாளமர்வேட்டுவந்தேன்வாலியெங்குளனோவென்ன
வாளரியேறுபோலுமிராவணனறையத்தாரை
நீள்கடல்நான்குமெய்திநீறணிகடவுள்செய்ய
தாளிணைவணங்கப்போனான்வல்லையேற்சார்தியென்றாள். (க0எ)

என்றலுமரக்கன்றென்னங்கடலினிலிமைப்பினெய்தி
வன்றிறல்வாலிபின்போய்ப்பற்றலுமறங்கொள்வாலி
குன்றனுன்றன்னைவாகுமூலத்திற்குழையச்சேர்த்தித்
துன்றுநாற்கடலுந்நாளிக்கிட்கிந்தைச்சூழல்சேர்ந்தான். (க0அ)

அவ்வழியரக்கர்கோனைவிடுத்துநீயாரையென்னச்
செவ்விதின்முகங்கள்பத்துங்கோட்டிநாணோடுந்தீயோ
னெவ்வெலாத்திசையும்வென்றவிராவணனென்பேனுன்றன்
கவ்வையில்தோழனென்னவெரிகரியாகச்சொன்னான். (க0கூ)

ஆங்கவனோர்திங்கள்வைகியடல்புனையரக்கர்கோமான்
வீங்குநீர்வேலைசூழ்ந்தவெண்மதிநெற்றிதோயு
மோங்குசீரிஞ்சிமுற்றியொள்ளொளிமாடம்போர்த்த
தீங்கெறியிலங்கைதன்னிற்சேர்ந்தினிதிருந்தானென்றான்.(கக0)

பாரினில்விசும்பினீண்டபாதலத்திணையில்லாத
மாருதியிருப்பவாலிக்கிரவிசேயஞ்சிமாழ்கிக்
கார்வரையிடங்கடோறுமொளித்ததென்கழறுகென்று
சீர்கெழுமிராமன்கேட்பத்தென்றமிழ்முனிவன்சொல்வான். ()

வேறு.

கேசரியென்னுங்கவிக்குலக்கிறைவன்மனைவியாங்கிட்பு
னைசெவ்வா, யாசறுவனப்பினஞ்சனைவயிற்றின்வளிக்கவதரித்
தவஞ்ஞான்றே, மாசறுகனியென்றிரவியையாகுவவ்வழிப்பாய்
தலுமிராகுத், தேசுறுமகவாற்குறைப்பநாற்கோட்டுத்திக்கயமூ
ர்ந்தவனடைந்தான். (ககஉ)

இந்திரனடவும்பகட்டின்மேற்றுவ வெரியுமிழ்வச்சிரப்ப
டையால், நந்தலன்றெய்துநாகிளங்கவியின்கொடிற்றின்மேற்
றுக்கலுமிறப்ப, மைந்தன்வீய்ந்தமையாலுலவைவந்தெய்திவ
ளியியங்காமலெவ்வுயிரு,மெந்திரப்பொறிபோனின்றிட்வியற்ற
மலரயனுங்கண்வந்திறுத்தான். (ககந)

கையினற்கமலப்பொகுட்டுறைகடவுணீவலுங்காற்றிளஞ்சிறுவ
னுய்தடிபரவவச்சிரப்படையோனனுமனென்றொருபெயர்பகர
வைதுணரீசன்முதலியதேவரனைவருந்தத்தமபடையால்
மெய்யினிலூறுபடாவரத்தோடும்வீந்திடாவாயுளுமளித்தார்.()

கஞ்சனைமுதலதேவர்கண்மறையக் காற்றிறைகையினற்று
ங்கி, யஞ்சனைகையிற்கொடுத்தனனகலவனுமனவ்வரத்தினன்
முனிவ, ரொஞ்சுமாறியற்றவன்னவரிராமனிணையடிசேர்ந்திடும
ளவுஞ், செஞ்செவேதனதுவலியினையறியாதிருக்கெனச்சிறின
ர்சபித்தார். (ககரு)

இடம்புனையிருக்காச்செனவுரைக்குந் தீதறுகவிக்குலவேந் த, மறமுடைவடபால்மகளிராந்தலத்தினண்ணலுமணங்குரு வெய்த, மறமுடைமகவான்முன்னரும்பின்னரிரவியுமணைத்தலா லன்றோன், விறல்கெழுவாலிதன்றெடும்விளங்குசுக்கிரீபன்ற னைப்பயந்தான். (ககசு)

தாமரைக்கிழவனருளினூற்பின்னுந்தன்னுருவெய்தியக்கவி வேந், தேமுறநாளுஞ்சிறந்தகிட்கிந்தை யெய்தியாருயிருலந்தி டலும், நாமவேல்வாலிதனைக்கவிக்கிறையாய்நன்முடிகவிப்பம ற்றவனும், காமருசடந்தோளிரவிசேய்தன்னைக்கதழ்சினத்தொ டுதுரந்தனனால். (ககஎ)

ஆங்கவனமைச்சர்மாருதிதனதுவலியினைமுனிவரரறைந்த, நிங்குறுசாபத்தாலுணராதுதிரிந்தனனெனவிவைகூறி, வாங்கு விற்றடக்கையிராமனுக்காசிவழங்கிமாமுனிவரரோடு, நீங்கருந் தவத்துக்குறுமுனிகிரில்பொதிய வெற்படைந்தனனென்றான்.

அகத்தியரிராவணன்மரபுணாத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கஎ௨க.

இருபத்தேழாவது

இராமன்வைகுந்தமடைந்த வத்தியாயம்.

என்றலுமுனிவரியாழ்முனியோடுமிந்திரன்கேட்டிட்டமுகு ந்தன், மன்றகல்லிராமன்பின்னிழைத்ததுவும்வைகுந்தமடைந் திடுஞ்செயலு, நன்றுறவுரைத்தபடியெமக்கிசைத்தியென்றலுந வையறுஞ்சூதன், றன்றுணைக்கையால்வியாதனைவணங்கித்தய வொடுமினிதெடுத்துரைத்தான். (க)

அய்யசெங்கமலமிதழ்க்கதவடைப்பவாக்கிதழாம்பல்வாய்ம லர, வெய்யவன்குடபாற்கடல்குளித்திடலும்விற்றொழில்பழுத் ததோளிராமன், செய்கடன்முற்றித்தீங்கனித்துவர்வாய்ச்சீதை யோடருந்துயில்புரிந்து, மொய்கதிரிரவிமுளைத்தலுமீசர்ப்பழி ச்சிவேத்தவையிடைப்புகுந்தான். (௨)

புகுதலும்பரதனிலக்குவனிளவல் புண்ணியவசிட்டனைமு தலாந், தகவுடைமுனிவர்சுமந்திரன்முதலாய்ச்சாற்றியமந்திர த்தலைவர், பகல்கெடவிமைக்கும்பருமணிமவுலிவீடணன்பருதி சேய்முதலோ, ரகமகிழ்வோடுந்தத்தமக்கினிதினமைத்தபொ ன்னாசனத்திருந்தார். (௩)

அடற்கரும்வெற்றிக்கிளையருசனகன்கேகயனற்பிரகத்தன், மடக்கொடிச்சிதைதன்னைவாளரக்கன் வவ்வினனென்னவேற்ப ரதன், படைத்துணையழைத்தகூற்றுறழ்மொய்ம்பிற்பலவகைப்

பாடைமன்னவர்தங், கொடைக்கடளிறுக்குந்தடக்கைவேலிரா
மன்கோதறுவேத்தவையடைந்தார். (௪)

சனகனைமுதலாமன்னவர்தம்மைத்தழீஇக்கொடுமுகமனன்
பியம்பி, பனையுறழ்தடக்கைக்களிறுவாம்புரவிபாய்பரித்தேருய
ர்நிதியம், புனையுநற்கலன்கள்விலைவரம்பறியாப்பொற்றுகிலளவ
றவழங்கிக், கனைகழலிராமன்விடைகொடுத்தருளக்காவலர்யா
வரும்போனார். (௫)

நனந்தலையுலகமொருகுடைநிழற்றுநம்பிநன்றெடும்வேற்
சனகன், கனம்படிகூந்தற்சீதைதன்னிருக்கைசேர்ந்துதன்கண்
பனியுகுத்து, மனங்களிகூர்ந்துவாகைவேற்பரதன்வழிவிடுத்த
யோத்தியினெய்த,வனம்படிதடஞ்சூழ்வயல்விளிம்புடுத்தவணி
கெழுமிதுலையினடைந்தான். (௬)

கேகயத்தரசனிலக்குவன்பின்போய் விடுத்திடக்கேகயம
டைந்தான், சேகெறிகாசிக்கிறையவனிளையோன்விடுத்திடத்த
ன்னகர்சென்றான், வேகவெம்பரித்தேரானைமன்னவர்கள்வீட
ணனொடுசுக்கிரீபன், போகுயர்நெறிபோய்விடுத்தனர்மீளத்தத்
தமபதியிடைப்புகுந்தார். (௭)

அலர்கெழும்பருவம்பின்னுமொன்றகலவரக்கர்கோனிரவி
சேயனும, னிலகுபொற்கழற்காலங்கதன்சாம்பன்குகன்முதல்
யாவருமகிழ,விலகிவில்லுமிழும்பலகலன்காமவிழுநிதிக்குப்பை
கள்வழங்கி, மலர்மகள்கொழுநன்விடையினிதருளத்தத்தமப
திமருங்கடைந்தார். (௮)

ததைமலர்கூந்தற்குழைபொருதடங்கட்டாரையைமதிமுக
ருமையை, முதலியவெவர்க்குமளப்பருநிதியமொய்கதிர்க்கல
ன்பலவழங்கி,மதுமழைபிலிற்றுமலர்க்குழற்சீதைவிடையினித
ளித்தலும்வணங்கிக், கதிர்மணிச்சிவிகையூர்ந்துகிட்கிந்தைநகரி
னங்கவர்கடிதடைந்தார். (௯)

நீங்கருஞ்சிறப்பிற்புட்பகவிமான நீனிறமாயன்முன்னெய்
தித்,தீங்கறுநிதிக்கோனினக்கெனையளித்தானென்றலுந்திருமறு
மார்ப, னாங்கதுநொந்துநினைப்புழியென்மாட்டணுகெனவிடுத்
தலும்விமான, மோங்குசீர்க்குபேரன்றன்னுழையெய்தியுவப்
பொடுமிருந்ததையன்றே. (௧௦)

கருங்கழுத்தீன்றவெள்ளிவெண்பாளைக்காய்க்குலைக்கமுகநீ
ள்வனத்திற், பருந்திருந்துயருமேழ்நிலைமாடப்பான்மதிபயங்
கொள்முத்தத்திற், செருந்தில்தாழ்வாவிக்கரைகளிற்பளிக்குத்
திண்ணையிலுயர்ந்தசெய்குன்றின், முருந்தவெண்மூரற்சீதை
யோடாடிமுகிலிறவண்ணனின்புறுநாள். (௧௧)

கொம்புறைவாழ்க்கைக்குயில்குடைந்துகுத்த பூந்துகள்கு
விமணற்குன்றி, னம்பரமுழுதும்பொற்றுகள்சொரிந்தவாறெ
னச்சொரியவந்தளிர்கள், செம்பொன்மென்றகட்டின்பொற்பி
லைக்காட்டத்திருவநீள்படப்பைகள்யாவும், வம்பலர்தூற்றத்த
ணந்துவாதுயரவந்ததுபங்குனித்திங்கள். (கஉ)

பங்குனிப்பருவம்வருதலுமையன் பராரைமென்சாந்தணி
யாக, மங்கலும்மேனிச்செய்யவாய்ச்சீதையம்பகட்டிளமுலைபு
முக்கக், திங்கள்வெண்மணியைத்தெளித்தெனவாவித்தலந்தொ
றுந்நீங்குயிற்குதலை, மங்கையரோடுவாசநீர்குடைந்துமதுமலர்
ச்சோலைதோறமர்ந்தான். (கங)

பட்டிகையுடுத்தபங்கயவல்குற் படர்முலைப்பவளவாய்ச்சீ
தை, யிட்டிடைமெலியநுண்டுகிற்றுகையிருநிலந்தைவரப்பெ
யர்ந்து, கட்டமுகுடையகாலையோடாடிக்காமர்மென்செழுமலர்
கொய்து, வட்டிகைநீட்டுமோவமுநாணமாதவிப்பந்தரினடை
ந்தான். (கச)

மட்டவிழ்பெண்ணைக் குரும்பையைநோக்கும்வள்ளலைமு
னிந்துபைங்கோதை, படைமலிநெடுங்கண்சிறிதுசேப்பூரப்பை
ந்துழாய்துயல்வருந்தோளா, னடிமலர்நீவித்தொழுதகைமுனி
யினுய்யுமாறறிதெனவிறைஞ்ச, விடுகதிர்முத்துமுருந்தமுநாண
வெண்ணிலாநகைமுகிழ்த்தனளால். (கரு)

அழிந்துதேன்குமிழியெழமலர்ப்பொகுட்டிஞெசனிக்கின்
றபாலன்னங், கழிந்தபேரன்பிற்பெடையொடுந்துயிலுங்கழனி
சூழ்கோசலநாடன், றெழிந்துமட்டொழுகுநாண்மலர்க்கோ
தைத்துணைமுலைமணந்திடுநாளிற், கொழுந்துணர்க்கொழுதிமா
குயில்வேலைக்கூவவந்திறுத்ததுவேனில். (கசு)

வேறு.

வண்ணக்கழுநீர்மாலையுடன்மலையச்சாந்தமெய்பணிந்து
தண்ணங்கமலத்தடங்குடைந்துதகைபாராட்டிச்சனகியொடு
மண்ணல்செம்மாங்கின்புறலுமினிவாய்த்தும்பியருங்கைதைச்
சுண்ணமாடிமுருகுயிர்த்துத்தோன்றிற்றந்தண்முதுவேனில் ()

நானநெய்யிற்கருநெல்லிச்சாற்றினன்கினீராடிக் [கணிந்து
கான்வாய்ச்சுரும்பர்முருகுயிர்க்குங்கலவைத்தொய்யின் முலைக்
தேன்வாயுயிர்க்குங்கோதையொடுநம்பிசெம்பொற்கிழ்நிலையிற்
பானலுண்கட்கூத்தியர்வாய்ப்பாடல்கேட்டுமகிழ்வுற்றான். ()

அந்தண்கழுநீர்நறவருந்தியளிமென்பிள்ளைகறிகற்குங்
கொந்துகமழுமல்லிகைப்பூங்குழங்கன்மாலைசுவற்பிறழச்
செந்தார்ப்பசியகிள்ளைமொழித்தெய்வத்திங்கள்வாண்முகத்து
நந்தாவிளக்கின்முக்கநகைவிருந்துமாந்திநயப்புற்றான். (கசு)

முல்லைப்போதுமுறுவலிப்பமுகிழ் மென்காந்தள்கைகுலைப்ப, மல்லலோங்குகனமுகட்டினிமையாக்கருங்கண்மயிலாலக், கொல்லுங்கூற்றிற்பிரிந்தவர்மேல்வாடைநடப்பக்கடல்குடித்துக், கல்லென்றிடித்துத்துளிபிலிற்றிப்புகுந்ததந்தண்கார்காலம்.

தண்ணென்முத்தவடநீக்கித்தழல் வெண்பொறியுண்பேரொலியின், வண்ணச்செங்கேழ்மயிர்ப்போர்வைபோர்த்துநானம்வடிகொண்ட, சுண்ணமாடிச்சண்பகமென்றுணர்ப்பூந்தாமங்கமழுமுடித், தண்ணல்வளியுமிடைபோழாமுயக்கினணங்கோடின்புற்றான். (௨௧)

பருத்தாட்செந்நற்கொழுங்கதிர்கள் பவளக்கோர்வைத்துணர்நூக்கக், குருத்துவிரிக்குங்கோளளாயவரம்பைசுமந்தகூன்புறக்காய், விரித்தமென்றோற்சிறைப்பறவையணில்வாய்க்கொண்டுமேவுதுணைக், கருத்தவழல்வாய்வாடையொடுங்கூதிர்காலமணைந்ததால். (௨௨)

மயிர்வாய்க்கூந்தற்பிடியூர்ந்து வள்ளைபுரட்டுமதர்நெடுங்கண், வெயில்கொப்புளிக்குமருமணிப்பூண்மகளிர்போந்துவிளைசெறிவிற், பயிலுமன்னத்தொடுமொதுங்கிப்பைந்தாட்செந்நெற்கதிர்சூடிக், கயவாய்வாளைப்பகடுழக்கும்புதுநீராடிக்களிப்புற்றான். (௨௩)

கவைத்தாளலவன்திளைத்தகுழிக்கழைகண்வெடித்தபருமுத்தங், குவித்துத்தூர்க்குஞ்செழும்பழனவிளையாட்டயர்ந்துகுவளைக்கண், செவித்தாரகற்றுஞ்சீதையொடுந்திண்டோட்செம்மல்செம்மாப்புற், றுவப்பினோடுமுறைநாளினுற்றதுடற்றும்பனிக்காலம். (௨௪)

பளிதச்சுண்ணமுகிரளைந்துப்பருக்காழாரநறுந்துகளின்
வளவித்திதலைமுலையணிந்துவடிக்கண்கரியமையெழுதி [திற்
நளிகொன்றேங்குகுருஉப்புகைதாழ் நகைவெண்முத்தமஞ்சத்
றுளவநெடுமால்சீதைமுலைக்குவட்டினுள்ளந்துவக்குண்டான்.

வேறு.

பூந்துகள்கமழவட்டிப்பொற்புவீற்றிருந்தமார்பிற்
சாந்தகங்கிழியச்சாடித்தடமுலையுழக்கநங்கை
யேந்தலோடிருக்குநாளின்வலம்புரிசூற்கொண்டென்ன
மாந்தளிருறழுமேனிவாலுதல்கருப்பமுற்றாள். (௨௬)

அய்யசெங்கமலமன்னமுகம்விளர்ப்பெய்தவம்பொற்
றொய்யில்மென்முலைகள்வீங்கத்துடியிடைகண்ணிற்றோன்ற
மையவாங்கரியகூந்தல்கரியமட்சலாகையுண்டு
மெய்மெலிந்துபாங்கநாளும்விழத்தகுவயர்நோயுற்றாள். (௨௭)

இருந்தெழிற்குழையுங்கோடுமொளிகெழுதிருவில்லீசக்
கருங்கண்வெம்முலைகடாங்கிறுசுப்பிறுமென்றுகாமர்
மருங்குதாய்நாவினன்னமலரடிச்சிலம்புபம்ப
முருந்தினமுறுவற்சீதையிராகவன்முன்னருற்றாள். (௨௮)

வந்தடிவணங்கிநின்றவணையிருங்கூந்தற்செவ்வாய்ப்
பைந்தொடிதன்னைப்புல்லிப்பவளவாய்க்கனியைமோந்தாங்
கந்தமிழ்வகையோடுகுறங்கின்வைத்தமுதச்செவ்வாய்ச்
செந்திருவயர்நோய்தன்னால்விளைந்ததென்செப்புகென்றான். ()

என்றலுநாணினோடுமெழில்புனையெருத்தங்கோட்டி
நன்றறிமுனிவர்தங்கள்பன்னியர்மருங்குநண்ணிப்
பொன்றருநிதியநல்கிப்போந்திடவேண்டுமென்னக்
குன்றனோனேர்ந்துபுல்லவெண்ணெயிற்குழைந்திட்டாளே. ()

அத்தவெற்படைந்தவெய்யோனுதயவெற்படையுங்காறுங்
கத்திகைக்கருமென்கூந்தற்காம்புறழ்பசியமென்றோள்
முத்தகமுரிஞ்சும்பொம்மன்முகிழ்முலைப்பவளச்செவ்வாய்
மைத்தவழ்கரியவுண்கண்மங்கையோடாடினானால். (௩௧)

வேறு.

புலரியிலையனங்கையோடெழுந்துபூம்புனலாடிவெண்கதி
ர்காலிலகொளிந்திங்கட்கண்ணியோர்ப்போற்றியெண்ணலாதி
றைபொடுமனைங்கும், விலகிவில்லுமிழும்வேத்தவையதனின்
மடங்கலந்தவிசின்மேவுதலு, முலகெலாமுழன்றுதிரியுமாகதரு
மொற்றருமவ்வழியடைந்தார். (௩௨)

எங்கணுந்திரியுமாகதர்தம்மிற்பத்திரன்றனையிறைநோக்கி,
யங்கண்மாஞாலத்தென்செயல்யாருமுரைக்கு மாறறைகுதியெ
னலும், பொங்கியதருமவொழிக்கினனெறியிற்பொறற்பினில்வி
றலினில்நினக்குத், துங்கநீடுலகிலிணையிலையென்னச்சொல்லு
வாரெனத்தொழுதுரைத்தே. (௩௩)

பின்னுமொன்றுரைப்பருலகினிலரக்கன் வவ்வியபெய்வ
ளைதன்னை, மன்னினனென்னவென்றலுமொற்றர்வாண்முகமெ
ந்தைநோக்குதலு, மன்னதுசரதமெனவவருரைப்பவேத்தவை
யகன்றவளகத்திற், றன்னுடைத்துணைவரோடுமாங்கெய்தியில
க்குவனோடிதுசாற்றும். (௩௪)

தொக்கபேருலகம்பழித்தவையொழியாத்தோமுறுமாந்த
ரையாரு. மக்களிற்பதடியென்பர்கள்சீதைமாண்புடைப்பத்தி
னிபேனும், பொக்கமதறையோர்செல்வமேபோலமுனிவரர்சா
லையிற்போக்கித், தக்கபேருணர்வோய்மீள்கெனவிளவல்தாம
ரைக்கண்பணிபுகுத்தான். (௩௫)

வெற்புறழ்தடந்தோ ளிளையவன்பொலந்தேர் சுமந்திரன் கொணர்கெனவிடுப்பப், பொற்புறுமணித்தேராங்கவன்கொண ரப்பூங்குழலுறையுளினெய்திக், கற்பினுக்கரசைத்தொழு.துமா முனிவர்சாலைகண்ணுற்றிவண்மீள, வற்புடனெழுகென்றுரைத் தலுமகிழ்வுற்றுய்கொடித்தேர்மிசையிவர்ந்தாள். (௩௬)

கோமதியென்னுநதிக்கரையெய்திக் கூரிருட்கங்குலாங்க மர்ந்து, காமருகதிரோன்றோன்றியபின்னர்க்கங்கையங்கரையி னிற்புகுந்து, நாமவேற்றடக்கைச்சுமந்திரன்றனையவ்வுழிநிறு வினனம்பி, யேமுறுமம்பிதன்னிலாயிழையோடெறிதிரைக்கங் கையாறகன்றான். (௩௭)

கங்கைமாநதியைக்கடந்துவான்மீகி கருதருஞ்சாலையினணி த்தாய்ச், சிங்கவேறனையவிலக்குவனெய்திச்சீதையைவணங்கியீ துரைப்பான், மங்கைகேளரக்கன்வெளவியநின்னைமனையகமீட் டுவைத்திடலா, லங்கண்மாஞாலம் பழித்ததென்றுணர்ந்தாங் காரியன்றுறந்தனனென்றான். (௩௮)

எனறலுங்கற்பிற்கரசிவெய்துயிர்த்தாங்கிருகணீர்முலைமுக ட்டொழுகப், பொன்றினள்போலவிருநிலத்தயர்ந்துபுலம்பொ டுமொருவழியெழுந்து, நன்றுநங்கேள்வனருளெனவெண்ணி நாப்புலர்ந்துள்ளழிந்தாயன், கொன்றநீண்மரம்போலெழினல ம்வாடிக்குற்றுயிரொடும்பதைபதைத்தாள். (௩௯)

அழுதுவெய்துயிர்க்குநிலத்திடைப்புரளுமஞ்சனவண்ண வோவென்று, தொழுமுயருழின்வலியினைவீய்க்குந்துணையெவ டொன்றுகைந்நெரித்து, விழுமிளையவன்றன்வாண்முகநோக்கிவி டுத்தமைசரதமோவென்னு,மழலையங்குதலைச்சீதையைநோக்கி யிலக்குவன்மற்றிவைபுகல்வான். (௪௰)

மாழைமென்னோக்கிதுயருறுமினதுகற்புடைமாட்சியையி ந்த, வாழிசூழுலகின்யாவருமுணரவாரியன்றுறந்தனனன்றி, யூ ழினையாரோயுப்புறங்காண்பாரொன்று கண்ணுற்றிருந்தொழுகச், சூழிமால்யானை யிளையவன்போகிச் சுமந்திரனிருந்துழியடைந் தான். (௪௧)

வலைப்படுமடமான்பிணையெனவயருமயிலைவான்மீகிகண்டி ரங்கி, யலக்கணுற்றழுங்கலன்னைநீவிதியையாருளருலகினில் வென்றார், கலக்கணீருகுத்துமாகுமாறென்கொல்கலங்கலையெ ன்றுளந்தேற்றி, நலத்தகுசாலைத்தவம்புரிமட்வார்கையடையா கநல்கினனால். (௪௨)

அண்ணலையெண்ணிநோற்றுயர்சீதையருந்தவர்மகளிரோ டிருப்ப, வண்ணவெஞ்சிலைக்கையிளையவன்றடந்தேர்ச்சுமந்தி

ரன்வாண்முகநோக்கி, யெண்ணம்வேறின்றி விளைத்தவிச்செய
லாலிறந்துபாடுறுவன்யானென்னக், கண்ணிறைந்தொழுகுபுன
லினைத்தன துணையினாற்றுடைத்திவைபுகல்வான். (சங)

அருந்ததிகணவன்றவப்பெருஞ்சாலைதனிற்றுருவாசன்வ
ந்தடையப், பருந்துவிழ்நெடுவேற்றயரதன்சென்றென்பாலர்த
ம்மாயுளுந்திறனுங், திருந்தநீயுரைத்தியென்றலுமுனிவன்றேவ
ரோடேற்றமருடைந்து, பெருந்தவப்பிருகுமனைவிகையடையா
ப்பிறையெயிற்றவுணர்சென்றடைந்தார். (சச)

உடல்சினத்திகிரிப்படையினோன்பிருகுமனைவியையொறு
த்தலுமுனிவ, னடுசினங்கதுவிநீயுநின்மனையையளப்பினாட்பிரி
ந்துமானுடனாய்ப், படுதுயருழத்தியென்றலுமுகுந்தன்பையுளு
ற்றவிர்மதிக்கண்ணி, விடையுயர்கடவுள்சேவடிவழுத்தமெல்லி
யல்பாகன்வந்தடைந்தான். (சரு)

பன்றியாய்முன்னமளப்பினாடேடிக்காண்கலாப்பங்கயமல
ர்த்தா, வின்றியான்காணப்பெற்றனனென்னாவிருகணீர்வாரவே
த்துதலு, முன்றனைப்பிருகுவுரைத்தவெஞ்சாபமொழிவதற்கி
ராமனாயரக்கர், பொன்றிடத்தோன்றிச்சீதையைப்பிரிந்துபாற்
கடற்பொருந்துகியென்றான். (சசு)

ஆங்கவனின்றமைந்தரின்மூத்தோனலைகடல்விளிமடுத்தோ
ங்கு,நிங்கறவுலகம்பதினொராயிரமாண்டொருகுடைநீழலிற்செ
லுத்தி, நிங்குதன்னுருவிற்பொருந்துவனென்னநிகழ்த்துதல்கே
ட்டனனதனாற், கோங்கிளமுலையைத்தணந்தனனென்னக்கோம
திநதிமருங்கடைந்தான். (சஎ)

தத்துநீர்த்தரங்கக்கோமதிகடந்துபுலரியினயோத்தியிற்சா
ர்ந்து, முத்தவெண்கவிகையிராமனைத்தொழுதுபுரிந்தவையா
வையுமொழிந்து, வித்தகமூன்றுநாளவையுறாது வெறுநிலத்த
யர்வொடுமிருப்பி, னெத்தலத்துள்ளவுயிர்களுமுய்யாதிறந்து
பாடுறுமெனவுரைத்தான். (சஅ)

எழுவுறழ்தடந்தோளிலக்குவனுரைத்தமொழியினையிகந்
திகலிராமன், மழையுறழ்தடக்கைநிருதனாடோறுமறையவர்க்
காயிரம்பெற்றம், விழைவுடனளிக்கவொருவனுக்களித்தபசுவி
னையுணர்கலான்வேறோர், பழமறைமுனிக்குநல்கமுன்பெற்றோ
ன்பசுவினைத்துருவினனறிந்தான். (சகூ)

கனகலநகரின்மறையவன்மனையிற்கண்டுதன்பசுவெனத்தொ
டர, முனிவரர்தம்மினெனதெனதென்றுமூரிவேல்மன்னவன்
கோயிற்,புனைமணிவாயிலெய்தியோர்பகற்போதிருப்பவும்புகல்
பவர்ப்பெறாமல், வனைகழல்வேந்தையோங்கியாகென்னவைது
தம்பதியிலிற்போனார். (ரு0)

மன்னனுமீர்வாள்புரைமுறுகோந்தி வடிவினிற்பலபகல்வி
டந்து, பொன்னவிராழிக்கண்ணனல்லருளாற்புண்ணியத்துறக்
கவிடைந்தான், றுன்றுமோர்பகலின்வேந்தவையுறுதோனெ
ய்தியநுயரிதுதோன்ற, லின்றுமோர்காதைகேட்டியிவ்வுலகா
ள்நிமியெனவுரைக்குமோர்வேந்தன். (ருக)

சீர்கெழுவசிட்டமுனிவனைப்போற்றிந் தீர்க்கசத்திரமெனு
மெச்ச, மேர்பெறவெனக்குப்புரிதியென்றுரைப்பமுனிவரனிங்
கிரற்கெச்சம், வேரியந்தொடையோயியற்றிமீண்டெய்திப்புரிவ
னென்றேகலும்வேந்த, ஞரியர்புகழுங்கௌதமன்றன்னாலருமக
மினிதினிற்புரிந்தான். (ருஉ)

அவ்வுழியரசன்கடையினில்வசிட்ட னமர்தலுமெய்தியேத்
துறுமற், றெவ்வடுவேலான்கண்படைபுரியச்சினவிநான்மறையு
ணர்முனிவ, னெவ்வெலாத்திசையும்வென்றவேலிறைவனிறந்
திடவைதலுமிறைவன், செவ்விதிற்றுயில்வோற்சபித்தலான்மு
னியுமிறக்கெனச்சீறினன்சபித்தான். (ருங)

ஒருவருக்கொருவர்சாபமாநெருப்பி லுருயிருலந்தனரொ
ழியப், பொருவரும்வசிட்டனுடற்பொறைநீங்கிப்புனிதமென்க
மலவீட்டுறையு, மருமறைக்கிழவனருகுவந்திடலுமித்திரர்வரு
ணனுக்கன்பு, தருமகவாகியோனியினன்றிப்பிறக்கெனச்சாற்றி
னன்விடுத்தான். (ருச)

உருவவொண்கதிர்கால்மித்திரர்ப்புணரவுருப்பசியெய்திடு
மேல்வை, வருணனுங்கெய்திவனமுலைப்போகந்தருகெனமறுத்
தனளாகத், திருவமேகலைநிற்குறித்துவீரியத்தைச்செழுங்குட
த்துய்ப்பனென்றிடலு, மருமலிகுழலாள்நொந்தனளேகவருண
னக்கடத்தினுள்விடுத்தான். (ருரு)

விடுத்தபொற்குடத்தினகத்தியன்றோன்றமித்திராவருணி
யென்றுலக, மெடுத்திடுபெயரின்வசிட்டனுங்குதித்தானிலவிது
முருப்பசியென்னு, மடக்கொடிதன்னைமித்திரர்நோக்கிமானிட
வேந்தனைப்புணர்கென், றடுத்திவைபுகன்றுனிமியினையமரர்கண்
ணிமைதொறுமமர்கென்றார். (ருசா)

நிமியுடற்பேணியரும்கழுடித்துங்கரறுமுனிவரர்யாரு, ம
மையுமவ்வுடலையரணியின்மதிப்ப நிமியெனுமரசனுங்குதித்தா
ன், கமையுடைஞானச்சனகனென்பதுவும்விதேகனென்பதுவும்
வார்கழற்கா, லுமிழ்கதிர்வேலானுமமென்றையனுரைத்தலுமி
லையவனுரைப்பான். (ருஎ)

பொருவருங்குருவோடெதிர்முனியாதுபொறுத்திலன்வே
ந்தனென்றுரைப்ப, வருவரைத்தோளாயருளிறொற்பொறுத்தவ

ரசனற்காதைகேளென்னத், திருவமரியாதிதெய்வயானையைச்சி ர்சிறந்தசன்மிட்டையைச்சேர, மருவுசன்மிட்டைபுருருவைப் பயந்தாள்மற்றவளெது வினையின்றாள். (ருஅ)

தேங்குழற்றெய்வயானையைவெறுத்துச்சிறந்தசன்மிட்டை யைப்பொருந்தும், விங்குதோள்வெந்தைச்சுக்கிரன்கிழவனுகெ னச்சபித்தலும்வேந்தன், டாங்குறைமைந்தர்தம்மொடுமெனது கிழவுருப்பரிக்கெனயாரும், வாங்கலர்மறுப்பப்பூருமற்றதனைவ வ்வவாண்டாயிரமகிழ்ந்தான். (ருகூ)

ஆயிரம்பருவமகளிரோடின்புற்றமர்ந்தபின்கிழவுருவதனை [து யோயநன்மைந்தனளிந்திடவாங்கி யிளமையைமைந்தனுக்களித் மாயிருஞாலம்புரக்கெனமவுலிபூருவைச்சூட்டிமற்றெதுவைத் தூயநன்மவுலிக்குரியையியல்லையென்றுயர்துறக்கமேயினனால்.()

என்றிடராமன்வேத்தவையெய்திமகிழ்வொடுமிருந்திடுமே ல்வைப்,பொன்றருந்தவத்துப்பார்க்கவச்சவனர்முதலியமுனிவ ரர்புகுத,வென்றிவேற்குரிசில்பூசனையாற்றிப்போந்ததென்விள ம்புதிரென்ன, நன்றறிமுனிவரிராகவற்காசிநவின்றிவைபுகறன் மேயினரால். (சுக)

கூற்றுறழ்மொய்ம்பிற்கோபனன்மைந்தன்மதுவெனுங்கொ ல்சினத்தவுண, னிற்றெளிபழுத்தபவளவார்வேணிநிருமலக்க டவுளைநாளும், போற்றலுமொன்னார்கடற்படைவிழுங்குஞ்சூல மொன்றளித்திறைபோக, மாற்றெறிகும்பினசிமுலைபுணர்ந்துவ யங்கெழுமிலவணற்பயந்தான். (சுஉ)

பயுந்திடுமிலவணுச்சுரன்கொள்ளப்பாய்கதிர்ச்சூலமும்வ ழங்கி, வயங்கெழுகதிர்வேல்மதுவெனுமவுணன்வருணலோகத் தினிலடைந்தான், கயம்படுகோதாவரிக்கரையுடுத்ததேயமாண் டருந்தவர்கவல்வுற், றயங்கிடவருத்திப்பறவையின்விலங்கினள ப்பிலவோர்பகலுண்பான். (சுரு)

ஆங்கவனிழைக்குந்தீவினைக்காற்றுதடல்கெழுமிராவணற் செகுத்த, வாங்குவிற்கல்விகேட்டிவணடைந்தேமற்றவற்செகு த்தருளென்னத், திங்கறுமுனிவருரைத்தலுமிராமன்றிறல்கெ ழுசத்துருக்கினனை, யோங்கெழிற்செம்பொன்மணிமுடிகவித் துத்தழியினனுச்சிமோந்துரைப்பான். (சுச)

அவுணர்கோனிசனளித்தவெஞ்சூல மெடுக்குமுன்னறிவு ற்றடைந்தாங், குவரியின்மதுகையிடவராமாயோனெறுத்தவி ககணையினுற்கொல்கென், றிவர்வொடுநல்கிவிடையளித்திட்லு ந்துணைவர்தஞ்சேவடியேத்திக், குவலயமுளுக்கத்தானைமுன் செல்லக்கோட்புலிப்போத்தெனநடந்தான். (சுரு)

திறல்கெழுதானைக்கடலுடனேகித்திங்களொன்றதரிடைக் கழிப்பி, மறைமுழுதுணர்ந்தநவத்துவான்மிகிமாதவச்சாலையி னெய்திக், குறைவறுபூசைமுனிவரனாற்றக்கொண்டுளமகிழ்ந்த நற்கயலே, யுறையுமிச்சாலையாதெனவினவவருந்தவனுவகை யோடுரைப்பான். (௬௬)

மறங்கெழுசுதாசன்றவத்திறலின்றமித்திரசகனெனுமன் னன், சிறந்திடுவேட்டமாடலுமங்கோ ரரக்கனுமரக்கியுஞ்சே ர்ந்து,. பிறங்கெயிற்றகல்வாய்க்கொல்சினப்புலியும்பெட்டையு மாய்ப்புணர்ந்திடலு, நிறங்கிளர்கணையாற்பெட்டையைக்கொ ல்லவரக்கன்வெம்புலியுருநீத்தான். (௬௭)

புலியுருநீத்தவெஞ்சினவரக்கன்புரவலநினக்குமோர்தீமை, நலிதரவிளைப்பனென்றவனேக நாமவேலிறைநகரடைந்து, ம லைவறமகமொன்றியற்றிடுபோழ்தின்மறைபயில் வசிட்டனல்லு ருவி, னிலகெயிற்றரக்கன்போந்துவெந்நசையோடுணவுநல்கெ னவிறைநொந்தான். (௬௮)

அன்னவல்லரக்கன்மடைத்தொழிலாளனுருவினிலடைந் துமானுடர்தந், துன்னுசெந்தசையையினிதினிலட்டுத்தூயவெ ண்சோற்றொடுங்கூட்டி, மன்னவன்கையின்வழங்கமற்றவனும்வ சிட்டனுக்குணர்கலாதளிப்ப,. வுன்னருநரருனளித்தலால்மன் னவரக்கனாயுறைகெனச்சபித்தான். (௬௯)

மன்னனும்வெகுண்டுமுனிவனைச்சபிப்ப வார்புனல்கொள் மதயந்தி, தன்னருளோடும்விலக்கவப்புனலைத் தாள்மிசைப்பெ ய்தலும்வேந்தன், பன்னுகன்மாடப்பாதனாநாமமருவுறப்பன்னி ருபருவ, மின்னவாறிருந்துபின்னர்நின்னுருவமெய்தெனமுனி வரனிசைத்தான். (௭௦)

ஆங்குவேல்மன்னன்பன்னிருபருவமடுசினத்தரக்கனயமர் ந்து, திங்கில்கோகன்னத்திறைவனதருளாற்றீத்தொழிற்புரியும வ்வுருவ, நீங்கியிங்கிருந்துநிகரறுவேள்வி யியற்றியசாலையீதெ ன்று, ஞேங்குமக்கங்குல்புலருமுன்சீதை மைந்தரோரிருவரை யுயிர்த்தாள். (௭௧)

குசத்தினல்முனிவன்றடவலுமுன்னோன்குசனெனும்பே ரொடுமமர்ந்தா, னிசைத்தநல்லிலவங்கொடுதடவுதலாலிலவ னயினனவற்கிளையோன், வசைப்படாவிழுச்சீரிளவலம்மைந்த ர்பிறத்தல்கேட்டுவகையின்வருந்திப், பசுந்தவேழ்புரவித்தேரி ஞேனுதிப்பமுனிவரர்தம்மொடும்படர்ந்தான். (௭௨)

பின்னுமேழ்வைகல்மேற்றிசைநோக்கிப்பெயர்வுழிப்பார்க் கவச்சவனன், றன்முகநோக்கியிலவனாற்றல்சாற்றுதியென்ன

லுமுனிவன், மன்னனுங்குலத்தினுதித்திடும்புவனுச்சுவனருண்
மைந்தன்மாந்தாதாப், பொன்றுலகெய்தினின்னரசுரிமைபாதித
ந்தருளெனப்புகன்றுன். (எங)

மன்றுலகதனிலிலவனுச்சுரான்றன் வலிதொலைந்திடாத
நிகொல்லோ, விண்ணுலகாளவையொன்றுவிண்ணவர்கோன்வி
ளம்பலும்வெருண்டிலவனன்பால், நண்ணிவெஞ்சமரோற்றிடு
தலுமீசனல்கியசூலவேல்பணிப்ப, வெண்ணருஞ்சேனையோடு
மாந்தாதாவெறிந்திடமுருக்கிமீண்டதுவே. (எச)

என்றலுஞ்சேனைமுழுவதுமாங்கணிறுவிவில்லிலக்குவற்கி
ளையோன், வென்றிவேலவுணன்வேட்டமேற்படர்ந்துமீள்தலு
முயர்பொலங்குடுமிக், குன்றுகண்டிறந்தாலன்னவான்புரிசைக்
கோபுரவாசலிற்குறுகி, நின்றெதிரோற்றவெஞ்சினத்தவுணன்ற
ன்றெடுநெடுஞ்சமம்புரிந்தான். (எரு)

விண்ணகடுரிஞ்சிப்போகுயர்சோட்டுத் தருவினைவேரொ
டும்பிடுங்கி, யண்ணல்மேலடிப்பச்சிறிதுமெய்தளராவிராகவன
ளித்தவெங்கணையால், நண்ணியவவுணனுருயிர்வவ்வி நிற்றலு
நான்மலர்ப்பொகுட்டுப், பண்ணவன்முதலோர்புகழ்ந்தனர்சூ
லம்பசுபதியிடத்தின்மேவியதால். (எசு)

வளங்கெழுசூரசேனனுடென்னநாட்டினுக்கொருபெயர்வ
குத்து, விளங்கெயிலுடுத்தபதியினைமதுரையென்னவோர்விழு
ப்பெயர்புனையா, வளந்தரிவறியபுகழ்கிடந்துறங்கு மங்நகர்தன்
னிலிராறு, துளங்கலில்பருவமிருந்தடிப்படுத்தி யிராகவற்றொ
ழுவெழுந்தனனுல். (எஎ)

எழுந்துதன்சேனைக்கடல்புடைநடப்ப விலக்குவற்கிளைய
போரேறு, தொழுந்தவநெறியினுயர்ந்தவான்மீகிசாலையிற்று
னைவினடைந்து, தழங்கொலியாழினிராகவன்சரிதைமைந்த
ர்பாட்டயர்தல்கேட்டுருகி, முழங்குவார்முரசங்கண்டுயின்றறி
யாமுதுநகரயோத்தியினடைந்தான். (எஅ)

சொரிதிரையளந்துவெயிற்கதிருருத்தநொடிக்கைமென்ற
லையணியாக,வரசுகண்டுயிலமுரசுகண்டுயிலாவருங்கடிவாயிலே
ழ்கடந்து, வரிசிலைபுழவன்மலர்ப்பதம்போற்றிப்பரதனைபணிந்
திலக்குவன்றன், விரைமலர்ப்பாதந்தொழுதிலவணனைவென்ற
மைவிரித்தெடுத்துரைத்தான். (எகூ)

ஆங்கதுகேளாவிராகவன்மகிழ்வுற் றளப்பரும்வான்சிறப்
பியற்றித், திங்கருபுதல்வவெம்பகலிந்தத்திருவதின்காவையின்
வைகி, போங்கெயிலுடுத்தமதுரையிற்செல்கென்றுரைத்தலு
மெய்ப்பகுதுவைந்து, வாங்குவிற்படைத்தொகுதியோடவன்வளங்கூர்
மதுராமாநகரடைந்தனனால். (அ0)

கடையளந்தறியாவிடுதிரைசொரிந்துகாவலர்கையனைத்து
ஞ்சுங், கொடிபுனைவாயில்மருங்கினேர்மறையோன்புகுந்துமெ
ய்குழைந்துளைந்தழுது, வடிவுடையொன்றன்காதலனுயுன் மடி
ந்திடுங்காலையினன்றி, யிடையினிலிறந்தானிராகவன்செங்கோ
லிழுக்கினுலடைந்ததென்றிரைந்தான். (அக)

வேதியன்மொழிகேட்டிராகவன்வசிட்டன்காசிபன்விளை
மாமுனிவன், கோதமன்காத்தியாயன்மார்க்கண்டன்மவுற்கலன்
கோதில்சாபாலி, திதெறிவாமதேவனென்றிசைக்குந்திருந்தகு
முனிவரைநோக்கி,யாதினுற்புகுந்ததிதுவெனக்கேட்பவிளைமா
முனிவரனிசைப்பான். (அஉ)

வேறு.

மருவுங்கொடியகலியுகத்தினன்றிவாளாபின்னவர்கட்
குரியதவமிவ்வுகந்தன்னிலுஞற்றல்நீதன்னெறியிகந்திட்
டரியதவமோர்பின்னவனிண்டாற்றுகின்றனதுபிறுற்
றெரியுமறையோனிளஞ்சிறுவனிறந்தானென்னச்செப்பினன்.

வள்ளல்கடவுட்புட்பகத்தைநினைப்பவாலுமகிழ்வர்ந்து
தெள்ளுதிரைநீருலகனைத்துந்தேடித்தென்னம்பொருப்பெய்திக்
கள்ளார்கமலவாவியகன்கரையினுச்சிற்றலைகிழா
யுள்ளானுகித்தவஞ்செய்வோற்கண்டுநீயாருரையென்றான். ()

உடலினேடுந்துறக்கத்தினுறுவான்றவமீண்டுஞற்றுகின்றே
னடையுமென்பேருயர்சம்புப்பின்னேன்யானென்றறைந்திடலு
தடறுநீக்கிவடிவாளாலன்னேன்சென்னிகடிந்திடலும் [ந்
விடயத்துள்ளம்போகாதமறையோன்வியந்தமகனுய்ந்தான். ()

விண்ணோரிராமன்றனைவரங்கேட்கென்னவியந்தமைந்தனு
யிர், நண்ணவரநீரளித்திடுமினென்னநாமவடிவாளா, லன்னால்
பின்னேன்றலைபொறுத்தகாலத்துய்ந்தானருஞ்சிறுவன், றெண்
ணீர்நடத்துட்குறுமுனிசெய் தவங்காண்பதற்குச்சேருதியால்.

என்றுதேவரிராமனுடனியம்பிமதிதாழ்பொதியநெடுங், கு
ன்றமெய்திக்குறுமுனிக்குவரமீய்ந்தகலக்கோவிழுங்கும், வென்
றிவேற்கையிராகவன்புட்பகத்தினிழிந்துவேதியன்முன், சென்
றுபோற்றக்குறுமுனியுஞ் செங்கேழ்க்கலனென்றளித்தனுல்.

உலகம்விளக்குங்கதிரோனிலொடிப்பக்கதிர்விட்டுமிழார,ம
லையப்பொருப்பவளித்தவன்யார்வழங்குகென்னவுரைத்திடலு,
மலைநிர்பவ்வக்கடலேழுமழன்றுவெய்யபுகைமண்டச், சிலைகால்
வளைத்தோய்கேட்டியெனத்திருமாமுனிவன்செப்புவான்.(அ்அ)

இலகுதருமந்திரம்பாதவிரண்டாமுகத்துனிரைம்பா
னலகுபொருந்தும்யோசனைத்தாமரியகாட்டிற்செழுங்கமல
மலருந்தடத்துள்வெற்றுடலொன் றிருப்பமருண்டுநோக்குதலு
நிலவுக்கதிர்கால்மானமொன்றுநெடுவானகத்தினின்றியதால்

கொல்லுங்கூற்றமிருந்தாலுங்குவளைப்பொருவுமதர்நெடுங்க
ண், வல்லிபோல்வார்வளைக்கரத்தின்மணிக்காற்கவரிபொதியவி
ழ்ப்ப, வொல்லையிழிந்தோர்கடவுள்புகுந்நுணங்குகுணபந்தனை
யருந்திச், செல்லனேக்கவிழிதொழிலீ செய்வதெவன்கொல்பு
கலென்றேன். (௩0)

குடக்காய்தூங்குமுடத்தெங்கம்பழமூழ்த்நீந்தேன்கொப்பு
ளிக்கு, மடற்பூங்கமுகின்மிசைவிழுவாளைகுதிக்கும்விதற்பநாட்,
டடற்கோளரியையிகர்சிற்றச்சுவேதனருள்கூர்சுவேதனையும், த
டக்கார்முகத்துக்கொருவனெனுஞ்சுரதன்றனையுந்தந்தனனல்.()

தந்தையிறப்பச்சுவேதனெனுந்தாமவடிவேற்சிறுவனுக்காங்
கந்தார்மவுலிபுனைந்திடலுமறிவின்வீக்கத்தாலிளைய
பைந்தார்ச்சுரதன்றனக்குமுடிகவித்துப்படர்கானிடையெய்தி
மைந்தார்சுவேதனிராஞ்ஞூறுண்டுதவத்தின்மருவினன். (௩௨)

அடையுந்தவத்தினுடல்நீங்கிக்கமலப்புத்தேளுலகடைந்து
மிடையும்பசியாலுழந்நரசன்மலரோனேடுமிதென்கொலென
வுடலம்விக்கிந்நவம்புரிந்தவாற்றலுற்றதுன்னுடலைத்
தொடரிற்பிணித்நருமலியெனத்துய்த்தியென்னவுரைத்தனனல்.

உடலம்விக்கிந்நவம்புரிந்தபாவமென்றுளொழியுமெனக்
கடவுட்கமலப்பொருட்டுறைவோனேடுகேட்பக்கலனல்கி
விடயந்துள்ளம்போக்காதவெளிதில்கேள்வியகத்தியனை [ல்.
யடையிற்றீருமெனவுரைத்தானன்னேன்யானென்றறைந்தனனு

என்றுகூறிச்சுடர்மணிப்பூணெனக்குநல்குமேல்வையினிற்
றுன்றுபாவமகன்றருந்துகுணபந்தோன்றுதகன்றெளிப்ப
மன்றல்கமழுங்கற்பகப்பூமாலைமார்பனெனையேத்திப்
பொன்றூழ்விமானந்தனிலேறிப்புத்தேள்விசும்பிற் போயினன்.

அன்னேவளித்தவருவிலைப்பொற்கலனிதையவெனலோடு
ம்,பன்னுமொருநூறியோசனையும்படர்கானையதுரத்தியென,நன்
னக்கேள்வியருமறையோ னவில்வான்மனுவினுயர்மைந்தன், ம
ன்னுவிக்குவாகுவென்போன்மைந்தரொருநூற்றுவர்ப்பயந்தான்

மைந்தர்தொன்னூற்றொன்பதின்மர்க்கிளையோனுலகைவரு
த்துதலாற், றந்தைதண்டனெனுநாமஞ்சாத்தியுயர்சைவலத்து
க்கும், விந்தவரைக்குநடுவிலுற்றதேயம்வழங்கவடல்வேந்த, ன
ந்துமதுமாவென்னுமொருநகரம்புனைந்தாங்கிருந்தனனல்(௩௭)

வெளிறில்கேள்விச்சுக்கிரனையாசானுக்கிவியப்பினெடு
மொளிறும்வடிவேற்றண்டனந்தவுலகங்காத்துவருநாளில்
வளையார்மென்றோளாசையெனும்வெள்ளிமகளைவலிதாகக்
களிசேர்தண்டன்கலந்திடலுங்கன்னிதாதையொடுமுரைத்தாள்

வேறு.

மண்டுநீர்வளங்கூர்தேயமறைமுனிசாபந்தன்னாற்
றண்டகாரணியமாகிக்கிடந்ததுசனங்களெல்லாம்
விண்டவனுறைதறன்றால்வியன்சனத்தானமாகி
யண்டரூர்போன்றதையவவ்விடமென்றுசொன்னான். (சுசு)

வில்ஞாநருயிர்கூற்றுண்ணவிருந்திடுவெள்வேல்தாங்கும்
வள்ளறென்பொதியவெற்பின்மாதவனருளிறேடுங்
கள்ளயின்றினவண்டோடுமென்மலர்களுலியோங்கு
மள்ளலங்கழனிசூழுமயோத்திமாநகரஞ்சேர்ந்தான். (க00)

முடியொடுமுடிகடாக்கவுதிர்ந்தபொற்றுகளின்மூழ்கிப்
படிநிலமுழுதுந்தேவருலகினிற்பசும்பொன்னாக
வடிதொழவேந்தரீண்டுமவையினிலண்ணலெய்தி
வடிவுடையிளைஞர்செய்யவாண்முகநோக்கிச்சொல்வான். (க0க)

ஆய்மறைகூறுகின்றவரும்பெறலிராசசூய
மேய்வுறப்புரிதல்வேண்டுமென்றலுமிளையோன்சொல்வான்
ரூயெனநின்னையெய்திச்சரண்புகுமரசர்கையின்
மேயநன்பொருளைவவ்விமகஞ்செய்தல்விழுமிதன்றால். (க0உ)

அயமகமாற்றலெங்தைக்கடுத்ததம்மகத்தால்முன்னர்
துயருறுகொடியபாவந்தொலைந்தநற்காதைகேட்டி
பயனுடையுடலமுன்னூறியோசனைபறந்துநீண்டு
வியனுடையுலகைவென்றான்விருத்திரனென்னும்வெய்யோன்.

சுடர்பொறிசிதறுவெங்கண்விருத்திரன்றுரப்பவோடி
யுடல்சினவயிரவாளானேமியோற்குரைப்பவன்று
னடல்கெழுபோரிலுன்றன்வச்சிரத்தமர்வனென்ன
மிடலொடுமகவான்மீண்டும்விருத்திரனோடுமேற்றான். (க0ச)

தாரைகடோறும்வெய்யதழலுமிழ்வயிரவாளா
லார்கலிநடுவுணிற்கும்விருத்திரனகலத்தோச்சப்
பாரில்வீழ்ந்தவுணன்வீயப்பற்றியபிரமகத்தி
சீர்கெழுமயமேதத்தாற்றீர்த்தனன்விண்ணோர்வேந்தன். (க0ரு)

என்றலுமிராமன்சொல்வானிளவனெனும்வேந்தர்வேந்தன்
மன்றலங்கானின்வேட்டமாடுவான்மருவிமல்லற்
குன்றவிற்குமுகன்பெண்ணுய்க்கோதையோடாடுகின்ற
துன்றருஞ்சரவணத்திற்சேனைபின்றொடரச்சென்றான். (க0சு)

சரவணத்தெய்துகின்றவிளனுயர்தானையோடு
மரவுபைத்தன்னபைம்பொனம்பகட்டல்குலேந்தி
வரையெனவளர்ந்துவிங்குவருமுலைமங்கையாகி
முருகவிழ்கூந்தற்செவ்வாய்க்கவுரியைமுறையிற்றாழ்ந்தான் ()

ஓர்மதியமுகச்செவ்வாயொள்ளிழைமடந்தையாகி
யோர்மதிபுருடனாகியுறைகெனவரமீந்தேக
வாரொலிகழற்கால்வேந்தன்மகளுருவாகிச்சேனை
யேர்கெழுமகளிராகிச்சூழ்வரவேகினானே. (௧௦௮)

செலவயர்கானின்மற்றோர்திருவநீள்வாவிதன்னி
னிலவொளித்திங்களீன்றபுதனிருந்தவத்தினீங்கி
யலர்முலையந்திலோதியிளையிளையாங்குநோக்கிக்
குலவியயாறோர்கூட்டப்புணர்ப்பினிற்கூடினானே. (௧௦௯)

மற்றவளோடும்வந்தமகளிராயாறோர்க்கியந்து
கொற்றவேற்புதனென்றோதுங்குரிசிலவ்விளையினோடு
முற்றிழையாகுந்திங்கள்முயங்கிவெந்தாகுந்திங்கள்
மற்றவனோடுநின்றுமாதவமியற்றினானே. (௧௧௦)

இன்னணைத்திங்களிணைத்திறத்தலுமிளையென்றோதுங்
கன்னிவேற்புரூரவாவைப்புதனுக்குக்களிப்பினல்கித்
துன்னியமற்றைத்திங்களாணுருவாகித்தோன்ற
மன்னவரிருவர்முன்னுமருத்துவமுனிவன்வந்தான். (௧௧௧)

மருத்துவெண்டிங்கள்சூடும்வானவன்மகிழ்ச்சியெய்தத்
திருத்தகுபுரவிவேள்வித்தறவியற்றுங்காலை
யுருத்திரவெய்தியென்றுமாணுருவுறுதியென்ன
வருத்திகூரிளனுமுன்போலாண்டகையாயினானே. (௧௧௨)

ஆணுருவதனிற்பெற்றவடற்சயவிந்துதன்னை
வேணவாவோடும்வெய்யோன்குலத்துறும்வேந்தனுக்கி
யாணர்மாநுருவநாளினின்றிடும்புரூரவாவை
நீண்மதிக்குலத்துவேந்தாய்நெடுமுடிசூட்டினானே. (௧௧௩)

இளனெனும்வேந்தர்வேந்தனிருங்கடலுலகுக்கெல்லாங்
களைகணாயுலகங்காத்துக்கதியினிலடைந்தவாற்றால்
வளமிகுமிவுளிமேதம்புரிகுவன்வல்லையென்ன
வுளமகிழ்ந்திளவற்கோதிவெதிரிகாச்சிரமத்துற்றான். (௧௧௪)

கோமதிக்கரையினெய்திக்கூந்தன்மாவிளையோன்போக்க
நாமவேற்பருதிமைந்தன்விடணன்முதலோர்நண்ணப்
பூமகளனையபொற்பிற்சீதையாய்ப்பொன்னிற்செய்து
தூமலர்த்துளவமாயன்பரிமகந்துடங்கினானே. (௧௧௫)

பருவமொன்றிவுளிமேதமிராகவன்பண்ணுமேல்வைப்
பொருவில்வான்மீகியெய்திச்சானகிபுதல்வர்தம்மை
யிருடிகள்வேந்தரெய்துந்தலந்தொறுமிசைத்தகாதை
தெரிவுறப்பாடிநிற்பத்தெரிதருமேல்வைதன்னில். (௧௧௬)

மரகதவண்ணன்கேட்டுவம்மின்களென்னிலெய்தி
யிருபதுசருக்கமாகத்தினந்தொறுமியம்பியண்ண
றருபொருள்கவரல்நும்மைபாலொனில்தகைவான்மீகி
பொருவின்மாணாக்கரொன்னப்புகலுமினென்னப்போனார்.(௧௧௭)

மைந்தர்நீப்பாடலைமறையவனுரைப்பவைய
தந்திடுகென்னப்போந்துதந்திரியுளர்ந்துபாடு
மெந்திரமிடறீதென்னவுணர்கிலாதிராமன்காதை
நந்தலில்குமரர்பாடயாவருநயத்தல்செய்தார். (௧௧௮)

கைகளுமுகமுங்காலுங்கண்களுங்கமலம்போலு
மையவான்முகிலிற்றோன்றுமைந்தரையினிதினோக்கி
யையன்மூன்றுருவாயிங்ஙனடைந்தனன்கொல்லோவென்னா
வொய்யெனவரசர்யாருமுளத்தினிலிரும்பூதுற்றார். (௧௧௯)

இன்னணமைந்தர்பாடுந்தன்னுடைச்சரிதம்யாவு
மன்னவனிராமன்கேட்டுமைந்தரொன்றுளத்தினெண்ணிப்
பொன்னொருகோடிநல்கப்புனத்திடைத்தவஞ்செய்கின்றோர்
நன்னிதிகொள்ளிற்பாவநண்ணுமென்றுரைத்துப்போனார். ()

சீதையைநாளையீண்டுக்கொணர்ந்துதீபூட்டியுண்ணு
மாதவர்வேந்தர்வெய்யவானவரரககர்காண
வேதமொன்றின்றிச்சூளிற்கொள்வன்யானென்னவேந்தன்
றாதரால்வான்மீகிக்குச்சொல்லவாங்கவனுநொந்தான். (௧௨௧)

ஓதியவழிநாடன்னிலரக்கரொள்ளிலைவேல்வேந்தர்
தீதெறிமுனிவர்வெய்யவானரர்செறிந்துவைகு
மேதகுமவையின்ஞாலம்வியக்கும்வான்மீகிவேற்கட்
சீதையோடெய்தனோக்கியாவருஞ்சிந்தைநொந்து. (௧௨௨)

பற்பலபாடைமாக்கள்யாவரும்பரிவுகூற
வற்பொடுங்கலுழுமேல்வையருளின்வான்மீகிநாளு
மெற்பெழநோற்றயாவுமீங்கிவள்பிழைத்தாளென்னிற்
பொற்பறச்சிதைந்தியானுநரகிடைப்புகுவனென்றான். (௧௨௩)

கலைபயில்முனிவசீதைகற்பினுக்குயர்ந்தாளாகு
முலகெலாந்தெளியவேண்டியுரைத்தனனெனினும்வென்றிச்
சிலைவலான்பாதம்போற்றிச்சேயரிநெடுங்கட்சீதை
மலர்தலைஞாலநோக்கியீங்கிவைவழங்கலுற்றாள். (௧௨௪)

முல்லைசால்கடவுட்கற்பின்வழிநின்றுமுழவமேய்க்குங்
கல்செய்தோளிராமன்செய்யகழலிணைதிறம்பேனாயின்
மல்லலம்பூமிதேவிவழியெனக்களித்தியென்னச்
சொல்லலும்பூமிவிள்ளமணியணைதோன்றிற்றன்றே. (௧௨௫)

தோற்றியவலங்குசெம்பொற்சுடர்மணித்தவிசின்மீது
கோற்றொடிச்சீதைதன்னைப்பூமகள்குடங்கைதாங்கி
யேற்றனள்கொண்டுபோகயாவருமிரங்கிமாழ்கப்
பாற்றினஞ்சுழலும்வெற்கையிராகவன்பரிவிற்சீறி. (கஎசு)

மண்டுலகனைத்துமின்னேவடிக்கணையதனிற்போழ்ந்து
பண்ணமைகுதலைத்தீஞ்சொற்பாவையைக்கவர்வனென்றே
வண்ணமன்றுளத்திலெண்ணுமமைதியினயன்வந்தெய்திக்
கண்ணகன்ஞாலந்தன்னைக்கடிந்திடேலென்னச்சொல்வான். ()

தேங்கமழுஞ்சிலோதிச்சீதைவைகுந்தஞ்சேர்ந்தாள்
வாங்குவிற்றேறுளாய்நீயும்வைகுந்தமடைந்தாலன்றி
யாங்கவட்புல்லலொல்லாதறையும்வான்மீகியென்னப்
பூங்கழற்றேவரோடுமலரயன்போயினனே. (கஎஅ)

ஏந்தலுமுள்ளமாழ்கிமைந்தரையிருகைபற்றி
யாய்ந்தநூலிளைஞரோடுமமர்ந்தனவழிநாடன்னிற்
கூந்தன்மாவேள்விமுற்றிக்குலமறையவர்க்கும்வைவேல்
வேந்தர்கடமக்குநன்கின்விடைநல்கியயோத்திசேர்ந்தான். ()

அளவறுமகங்களாற்றியாருயிர்த்தொகைகட்கெல்லாங்
களைகணாயிராமன்செங்கோல்நடத்திடுங்காலந்தன்னிற்
றளர்வுறுமுப்பாற்றாயகவுசலைமுதலதாய
ருளமகிழ்ந்தாவிநீங்கித்தயரதனுழையிற்சேர்ந்தார். (கஅ0)

தாயரையிமத்தேற்றித்தழல்படுகருமமாற்றி
யேயநற்சபிண்டியாதியாவையுமுடித்தபின்னர்ப்
பாய்வயப்புரவிகோடிப்பழமறைக்காக்கன்கையின்
மாயிருஞாலம்போற்றுங்கேகயன்வரவிட்டானே. (கஅக)

வந்தமாமுனிவன்றன்னையெதிர்கொண்டுவழுத்தியையன்
முந்தநீபுகுந்ததென்கொலறைகெனமுனிவன்சொல்வா
னந்தலிலிசையில்யாடப்பேழ்க்கினர்நல்குமைந்தன்
சிந்துவின்மூன்றுகோடிசேனையோடிருக்கின்றனல். (கஅஉ)

அன்னவன்றன்னைவென்றேயாங்கவனளுந்தேய
முன்னடிப்படுத்தியென்றனுறுதுயர்துடைத்தியென்னப்
பன்னருஞ்சிறப்பின்மிக்ககேகயன்பகர்ந்தானென்ன
மன்னவன்பரதன்மைந்தற்கணிமுடிவனைந்துசொல்வான். ()

பரதநீயாங்கணெய்திச்சிந்துதீரத்தின்பாங்க
ருறைபெருமியாழோர்தம்மைவென்றுயர்மைந்தர்தம்மை
யரசராயாங்கணுய்த்துவருகெனவையற்போற்றி
விடைசென்மான்றேரினேறிவில்லுடைப்பரதன்போனான். ()

பாகடுபெருமயானைப்பரதன்றன்மைந்தரோடுங்
கேகயந்தன்னிலெய்திக்கிளர்முடிவேந்தர்ப்போற்றி
யாகவந்தன்னிலேற்றபின்னராராகமுற்றுங்
காகமுங்கழுகுமுண்ணக்காலவெங்கணையாற்கொன்றான். (கங-ரு)

தாரைவேற்றக்கன்றன்னைத்தக்ககமென்னுநாட்டிற்
சீர்கெழுமவுலிசூட்டிச்சிறந்தபுட்கலனென்போனைப்
பூரியர்பொருந்தல்செல்லாப்புட்கலாவர்த்தந்தன்னி
லேர்கெழுமுடிவைத்தையாண்டிருந்தடிப்படுத்தினானால் (கங-சு)

மைந்தரையாங்கண்வைத்துவார்கழற்பரதனென்று
மிந்திரதிருவன்போந்தாங்கிராமனைவணங்கியேத்தித்
தந்திரர்ச்செருத்தயாவுஞ்சாற்றலுமகிழ்ச்சிகூர்ந்து
கந்தடுகளிறல்யானைக்காகுத்தனுரைக்கலுற்றான். (கங-எ)

இலக்குவன்மைந்தற்காயதேயநீயியம்புகென்ன
நலத்தவங்கதற்குங்காராபதமெனுந்தேயநன்றாந்
தலத்தினிலிணைமற்றில்லாத்தகைபெறுமல்லல்தேயஞ்
சிலைத்தொழிற்சந்திரகேதுவமர்ந்திடச்சிறந்ததாமால். (கங-அ)

என்றியற்பரதன்கூறராகவன்மகிழ்ச்சிகூர்ந்து
மன்றநல்லோரைதன்னில்வால்வளைமுரசமார்ப்ப
வென்றிவில்லிளையகோமான்மைந்தர்க்குவிழைவினோடும்
பொன்றிகழ்மௌலிசூட்டியவ்வழிப்போக்கினானே. (கங-கூ)

வேறு.

அங்கதனோடுமிலக்குவனகர ராபதந்தடைந்தங்கதியென்றுந், துங்கமாநகரொன்றமைத்துமைந்தனையத் தொன்னகரத்திடையிருத்தித், தங்கியோர்பருவமுலகடிப்படுத்தித்தானையங்கடலொடும்போந்து, சிங்கவேறனையவரிசிலையிராமன் சேவடிதொழுதுவிற்றிருந்தான். (கசo)

சந்திரகேதுதன்னொடும்பரதன்மல்லல்தேயத்திடைச்சார்ந்து, சந்திரகாந்தியெனுநகரமைத்துத்தாமவேல்மைந்தனையிருத்தி, மைந்துடனோர்யாண்டங்கரமர்ந்து வாம்பரிக்கடலொடும்போந்தங், கிந்திரதிருவா ரயோத்தியினெய்தி யிராமனதடிதொழுதிருந்தான். (கசக)

திருமகள்முலைகண்டிழைந்திடுதழும்பிற்சிலைத்தழும்பிருந்ததோளிராமன், புரவிமாமகமோர்பத்தினிதாற்றிப் பூசுரர்க்கிருநிதிவழங்கி, யுரவுநீர்வேலியுலகெலாம்பதினோராயிரம்பருவமோர்குடைக்கீழ்த், தருமமுந்தவமு மெய்மையுமென்மேற் றரைப்புறப்புரந்தனனன்றே. (கசஉ)

இன்னணம்பதினோராயிரம்பருவமிராகவன்ராசளித்திட லு,
மன்னியகாலன்மாதவருருவாய்மணிமதில்வாயிலினெய்தி, பொ
ன்னெடுவேற்கையிராகவற்கெனது வரவுரைக்கெனவிலக்குவன்
போ, யன்னவாறுரைப்பக்கொணர்தியென்றிட லுமுனிவனையவ்
வுழியுய்த்தான். (கசங)

முனிவரன்மகிழப்பூசனையாற்றியிராகவன்முகமனன்குரை
த்து, வினையறுதவத்தோய்போந்தமையென்கொல்விளம்பென
விளம்புமேல்வையினி, லெனையராயினுமீண்டடைந்திடிற்கொ
ல்கென்றிசைத்தலுமாங்கதுநேர்ந்து, வனைகழலோம்பியெவரு
மிங்குறுமல்வாயினிலிருக்கெனவிருந்தான். (கசச)

அலகில்பல்லுயிருமொறுத்திடவன்னியழித்திடுகாலன்யா
ன்கடலி, னிலகெயிற்றாவிற்றுயிலுமேல்வையினிலவுரைரோரி
ருவர்வந்துதிப்ப, மலைசமத்தவனைக்கொன்றவருடலால் மேதி
னிவகுத்தயன்றனைநீ, யுலகெலாமிளவுந்தியங்கமலப்பொகுட்டி
னிலுதித்திடப்பணித்தாய். (கசரு)

அன்றுநீபடைத்தவுலகினைவருத்துமரக்கரைவேரொடுங்க
ளைய, மன்றலம்பசுந்தார்த்தயரதன்மகவாய்வந்துவல்லரக்கரை
த்தொலைத்தாய், சென்றனபதினோராயிரம்பருவஞ்சிறந்தவைகு
ந்தமாநகரி, லொன்றிடவேண்டில்வருதிமற்றிவணிறுறைதியே
லுறையெனவுரைத்தான். (கசசு)

உரைத்தலுமிராமன்றனதுபேருலகி லுறுவதற்குள்ளநொ
ந்துவப்புற், றரத்தமென்சாந்தினகங்குளிர்ந்திருக்குமேல்வையி
னணிநகர்க்கடையிற், றிருத்தகுதவத்தினுயர்துருவாசன்சிலைத்
தொழிலிலக்குவன்முன்னம், வருந்துவெம்பசியோடெய்துமெ
ன்வரவுமன்னவர்க்குரைக்கெனவருத்தான். (கசஎ)

அமைதியன்றென்ன விலக்குவன்கூற வழலெழவெகுண்டு
மாமுனிவன், கமழலம்பொழில்சூழின்னகரோடுமிராமனைக்கன
ற்றுவனெனலு, மிமிழ்கடன்ஞாலத்தொடுமிராகவனையெரிப்பதி
ல்யானிறப்பதுவே, தமரினைப்புரப்போர்கடனெனமுனியைத்
தாமரைக்கண்ணன்முன்னுய்த்தான். (கசஅ)

உய்த்தலுங்காலன்மறைந்திடவைய னுபசிடதப்பொருடே
ர்ந்து, தத்துவமுணர்ந்தோய்வந்தவாறென்கொல்சாற்றெனவா
யிரம்பருவ, மெய்த்தவவிரதம்பூண்டுணவொழிந்தேனடிசினீவ
ழங்கெனவிளம்பப, பைத்தலையரவினறிதுயில்கூறும்பண்ணவ
னின்னமுதளித்தான். (கசகூ)

இன்னமுதருந்திமுனிவரனேக விராகவன்மனங்குழைந்தி
ரங்கித், துன்னுபேரவையுட்கலுழ்ந்தனனிருப்பச்சுடர்முடியில

க்குவனெய்தி, புன்னுடைவாய்மைவழுவுறுவென்னையொறுக் கெனவுரைத்திடவசிட்டன், மன்னவநுமந்துலொறுத்ததாமெ ன்னவழுங்கலுமூர்ச்சனையடைந்தான். (கரு0)

களையழிவெள்ளந்தன்னிடைப்பிழற்ந்து கண்மணிநீங்கிட விழித்துப், பொருவருமாவி துறந்துவேற்றுடல முய்புமோ போதியென்றுரைப்பச், சரையுமாநதியினகன்கரையெய்தித்தரு ப்பையினிருந்துமூச்சவிந்தாங், குரையுணர்விறந்தயோகினிலெ ய்திப்பிரமரந்தரத்துயிருய்த்தான். (கருக)

விண்ணவரியக்கரிந்திரன்முதலோர்விரைவின்வந்தெய்திவ ண்டுளவத், தண்ணறன்னன்குகூற்றினேர்கூறு வந்ததென்றடி மலரிறைஞ்சிக், கண்ணகன்விமானத்துடலொடுமேற்றிக் காமர் வைகுந்தமுய்த்திடலும், வண்ணவிற்குரிசில்மாலொடும்பாலிற் பாலகந்தெனமருவினனால். (கருஉ)

விலக்கருநிலவுக்கதிரினைச்சிறந்தவெண்மதிபிரியினும்யாவு ந், துலக்குறும்வெய்யோன்கதிர்தணந்திடினுஞ்சுடுதழல்வெம் மைநீர்ந்திடினு, மிலக்குவர்ப்பிரிந்தோர்கணப்பொழுதேனுமு ய்ந்திடேனுய்ந்திடேனென்ன, வலக்கணுற்றையன் பரதனைம வுலிகவித்துலகளித்தியென்றுரைத்தான். (கருங)

ஐயநிற்பிரிந்துமுய்குவன்கொல்லோவடியனேனிம்மொழி யறையேல்,வையகம்புரப்பமைந்தமைமவுலிவனைகெனப்பரதனு ங்குரைத்துச், செய்யதாமரைக்கட்சத்துருக்கினர்க்குங் குகனு க்குஞ்சிறந்தவீடணற்கும், பொய்யெறிவாய்மையிரவிகாதலர்க் கும்பொறித்திடுமுடங்கல்போக்கினனால். (கருச)

முடங்கலிற்றீட்டும்பாசுரமுணர்ந்துமுழுவலிதுயின்றதோ ளிளையோன், மடங்கலேறனையசுவாகுவைவளங்கூர் மதுரையி ன்மணிமுடிசூட்டி, யடங்கலர்க்கடந்தசத்துருக்காதி வித்தியா தேயமாள்கென்ன, மிடைந்தொளிபரப்புமணிமுடிசூட்டிவிரை வின்வந்திராமனைக்கண்டான். (கருரு)

செங்கதிர்ச்செல்வனினிதினின்றளித்ததேம்படுதுணர்ப்பு யக்குரிசி, லங்கதன்றனக்குமணிமுடிசூட்டியணிமதிலயோத்தி யினடைந்தான், கொங்கவிழ்நறுந்தார்க் குகனும்வீடணனுங் கொற்றவர்யாவரும்போந்து, பங்கயத்திருவின்படர்முலையுழக் கும்பகட்டெழில்மார்பனைத்தொழுதார். (கருசா)

கண்சிறைபடுத்துக்கவின்குடியிருக்குமுத்தரகோசலந்தன் னில், விண்டொடுபுரிசைக்குசாவதிநகரிற்குசனைநீண்மணிமுடி மிலைச்சி, யெண்படுத்தென்னங்கோசலநாட்டிற்சரவதியென்னு நன்னகரின், மண்டமர்கடந்தவிலவனைச்செங்கேழ்மணிமுடிமி னிதினிற்புனைந்தார். (கருஎ)

வேறு.

விறல்கெழுமாக்கள்கோனையனுமனையொன்றின்வேந்தை
யுறைகழல்பணிந்தரோடுதமிந்தனையையனோக்கி
யுறைதிர்நும்பதியினென்னமுகமரோடிளைத்துப்போக்கி
மறைபுகல்வேள்வித்தியைமனத்திடையினிதுசேர்த்தி. (கறுஅ)

கார்புரங்கொடிக்குங்கூந்தற்கரும்புராழ்குதலைத்திஞ்சொ
லார்மினைமுதலாயுள்ளகொழுந்தியரயோத்தியுள்ள
வேர்கெழுமடவார்நாட்டுமடந்தையர்யாருஞ்சூழ
மாரியினெழுந்தமஞ்ஞைக்குழாமெனமருங்குசென்றார் (கறுகூ)

சுரந்தொளியொழுகும்பைம்பூண்சுடருமிழ்மைந்தரோடு
மாந்தினப்பிறந்தசெம்பொனரும்பிளமுலையார்மாலாய்ப்
பரிந்துகோளூன்றிச்செல்லும்பண்புடைக்கிழவராதி
விரிந்தவந்நாட்டினுள்ளோர்வியனகர்தன்னில்வாழ்வோர். ()

நால்வகைத்தோற்றத்துள்ளசராசரநண்புபூண்டோர்
பால்படுமாக்கள்மற்றைவானரர்பரிந்துசூழச்
சாலுமைம்படையுமைந்தருருவினிற்செல்லத்தாவின்
மேலுநற்றருமஞ்சிர்த்தியிருந்திமுன்னரோக. (கசுக)

திருமகள்பூமிவெற்றிச்சயமகள்தொடர்ந்துசெல்ல
வருவிலையொண்பட்டார்த்தாங்கங்கையிற்குசப்புல்லேந்திப்.
பரதனுமிளையகோவும்பருதிசேயோடுஞ்செல்ல
முருகவிழ்துளவத்தண்டாரிராமன்முன்னடந்துசென்றான். ()

தாப்புலியனையவெற்றித்தம்பியர்சனங்கள்யாரு
நிப்புறச்சூழ்ந்துசெல்லநெடுந்திரைக்கடலினுப்பட்
பாப்பணைத்துயில்வோன்றூயபாய்திரைச்சரையுண்மேய
கோப்பிரதானமென்னுந்துறையினிற்குறுகினனே. (கசுந)

அன்னைல்பின்றுடர்ந்துசெல்லுஞ்சராசரமனைத்துமேற்கக்
கன்வழுக்குறுசெஞ்சோதிக்கதிர்மணிவிமானங்கோடி
யெண்ணிலகொணர்ந்துவின்றூட்டிந்திரன்முதலோர்சூழத்
தண்ணறுங்கமலவிட்டிற்சதுமுகனுங்கனூற்றான். (கசுச)

சரையுமாநதியினையன்றம்பியரோடுமெய்தி
புரியவாசமனஞ்செய்யாவுற்றவவ்வுடலினோடும்
விரைகமழ்துளவத்தண்டார்விண்ணவனுடலினூடு
கரையெறிநீரினீர்போய்க்கலந்தெனக்கலந்திட்டானே. (கசுரு)

முருகவிழ்தருவினிழலிந்திரன்முதலவிண்ணோர்
மருமலர்தூவியார்ப்பவாசமென்கமலப்புத்தே
ளருமறைபாடியாடமுனிவரராசிகூறத்
திருமறுமார்பன்போற்றுமலரயனோடுசெப்பும். (கசுசு)

அற்பொடுமென்றேடுற்றசராசரமனைத்தும்வைகப்
பொற்புடையுலகமொன்றுங்களிக்கெனப்பூவின்மேலோன்
கற்பகநாட்டின்வையிக்கடவுளர்ப்பணிந்துபோற்றப்
பற்பலவூழிகாலமமர்கெனப்பணித்திட்டானல். (கசுஎ)

ஆன்றபேரறிவின்மிக்கவிரவிசேய்முதலோர்யாருந்
தோன்றியதேவர்தத்தமுடல்தொறுமினிதுதொக்கார்
தேன்றருபொழிலயோத்திமைந்தருந்தெரிவைமாரும்
வான்றிகழ்விமானமூர்ந்துதருநிழல்வைகினரே. (கசுஅ)

சீர்கெழுமயோத்திநாட்டிற்செறிமலப்புழுவையாதி
பேர்பெறுமானும்புல்லுங்கற்களும்பேசாநின்ற
வேர்பெறுசராசரங்கள்யாவையுமானமூர்ந்து
வார்கழற்றேவராகித்தருநிழல்வதிந்ததன்றே. (கசுகூ)

திருமகளாயசீதைசிறந்தபாதலத்தினின்று
மருமலிதுளவோன்மார்பில்வதிந்திருந்தரசுசெய்யப்
புரிகுழற்பூமியோடுங்கலுழனிலிவர்ந்துபோகி
யருமறைமுழக்கந்துஞ்சாவைகுந்தமமர்ந்துவாழ்ந்தாள். (கஎ0)

வண்டொடுஞிமிறுந்தேனுந்தும்பியும்வழிந்ததீந்தே
னுண்டுதேக்கெறிந்துபாடவொண்பொதியவிழ்க்குஞ்செய்ய
முண்டகப்பொகுட்டின்மேயமுனிவன்வான்மீகியோடு
மண்டநீண்முகட்டின்மேயவண்ணல்மாநகர்ஞ்சேர்ந்தான். ()

விரியல்வெண்டோட்டுக்கைதைவிளைகமழ்ச்சுண்ணஞ்சிந்திப்
பொருகடற்புலவுபோக்கும்புண்ணியச்சேதுதன்னி
லரனுடையிலிங்கபூசையாற்றிவீட்டின்பம்பெற்றோன்
றிருவமர்காதைகேட்டோர்சிவனடிநீழல்சேர்வார். (கஎஉ)

வேறு.

வள்ளவாய்க்கமலவாவியங்கரையின் வாளைபாய்ந்துழக்கிய
வயலிற், புள்ளிவெண்முகட்டுக்கவட்டடியலவன் புடைபடக்கி
ளைத்தசேற்றளையில்,வெள்ளிவாய்ப்பாளைவிரிந்துமூத்துகுக்கும்
வியன்புனலயோத்திநாடளிக்கு, மள்ளிலைநெடுவேலிராகவன்
மைந்தராடல்வேற்குசனெடுமிலவன். (கஎங)

பின்செலுமேகமன்றெனவாரிப் பெரும்புனல்குடித்துயர்
கொண்டல், மன்படுவரையிற்றவழ்தலுமற்றோர் களிறெனவய
க்கரிபாய, மின்பொதிவயிறுகிழித்துமுன்னுண்டவெள்ளநீரரு
வியிற்பொழியும், பொன்பொதியிமையப் பொருப்புடைக்குச
ன்றன்புதல்வன்வேலதிதியென்றுரைப்பார். (கஎச)

வேறு.

மழைசூன்முதிராவகடுளைந்துவாய்விட்டலறப்பிடியென்ன
முழைபூடுறங்கும்வாளுளைகள்சிலைக்குமூரிமலைநாடன்

றையுஞ்சீர்த்தியதிதியருண்மைந்தனென்றார்தசைவீக்கிப்[ன்
பொழியுங்குருதிவாய்மடுக்கும்போர்வேல்நிடதன்புலிபோல்வா

வேறு.

பாட்டுவண்டரற்றுந்தோட்டிளங்கமலப் பருமுகைவெடித் தபூந்தடமும், பேட்டுவண்டணைத்துச்சுரும்புகண்டுயிலும்பெய் மலர்ச்சோலையுமுடுத்துச், சேட்டிளம்பருதிதழும்புறநிவர்ந்தவி ஞ்சிசூழ்திருநகராளிக்கும், வாட்டிறனிடதனளித்திடுமைந்தனள னெனும்வாகைவேலுழவன். (கஎசு)

ஆலைவாய்த்துழனி முகிலெனவொலிக்கு மகன்வயற்றலை தொறும்வளர்ந்த, பால்வயிற்றிளங்காய்ப்பசுங்கதிர்ச்செந்நெல் பாளைவாய்க்கமுகினைமறைத்து, மேலுயர்வளங்கூர்மருதநாடளி க்குநளனெனும்வேந்தர்கோன்மைந்தன், ஞாலமோரேழுமொ ருகுடைநிழற்றுநபனெனுநாமவேற்காளை. (கஎஎ)

பழம்படுசடைத்தாற்றிளம்பசுங்கமுகிற்பரியநல்வாளைபாய்ந் துளக்குந், தழைந்தவான்புகழ்சேர்மருதநாடளிக்குந்தாண்வே ல்நபனருண்மைந்தன், றெழிந்துமட்டொழுகுமாலைதாழ்தடந் தோட்டோன்றல்புண்டரிகன்மற்றவன்சேய், செழும்புகட்சுதை யாலுலகெலாந்திற்றுங்கேமதன்னுவாவெனுஞ்செல்வன். ()

நெட்டிலைக்கரும்புஞ்சாலியுந்துவைத்து நெறிமருப்பெரு மைமேய்ந்துறங்கும், மட்டுவார்கழனிவிளிம்புடுத்தோங்குவள ங்செழுமருதநீர்நாடன், கட்டழகுடையவிவன்மகன்றேவாநீ கன்மற்றவன்மகன்களத்தி, லொட்டலர்நெய்த்தோர்மடுவெனநி றைக்குமொளிறுவேற்பினகுவாமால். (கஎகூ)

குண்டலந்திளைக்குங்குழைமுகமுளரிக்கொடிச்சியர்கிளிக டிந்தோச்சும், பண்டருகிளவிகேட்டுவானவர்கள்கின்னரர்பாட் டினைவெறுக்குந், தண்டலில்வளங்கூர்செழுமலைநாடன் பினகு வளித்தருட்னையன், மண்டலவேந்தர்மணிமுடியுரிஞ்சிவழன் றதாட்சகச்சுவாவென்பார். (கஅ0)

வலைத்தலைகிழித்துப்பருவராற்கன்று வாளையம்பகட்டொ டுதாவக், குலைத்தலைப்பாளைக்கொழுமடற்கமுகின்குறுங்கழுத் துடைந்துதேனொழுகி, யலைத்தெழிதாங்கவருவியிற்பாயுமகன் வயலயோத்திநாடளிக்குஞ், சிலைத்தடந்திணிதோளாங்கவன்மை ந்தன்றிறலுடைக்குத்திரவலோகன். (கஅக)

கூத்தியர்கதுப்பினறுமணம்விரிக்குங்கொழுமலர்ப்பட்பை சூழ்கிடந்த, வேத்தருமல்லற்றிருநகரரசிறைஞ்சிடுங்குத்திரவ லோகன், வாய்த்தருண்மைந்தன்சூரபீடப்பேர்மன்னவனுங்கவ ன்புதல்வன், றேத்துனைதெவ்வர்வழுத்திடுங்கழற்காற்சந்திரசிர கவென்றுரைப்போன். (கஅஉ)

வாயுமிற்சிலம்பிறால்வலந்தெனக்கூன்முதுகிருல்வலேவி ரித்துப், பாய்திரைக்கடலிற்பரதவர்கவரப்பருமணியிப்பிவந்த டையு, மாயிருஞ்செல்வம்வழங்குநீர்ச்சேர்ப்பன்சந்திரசிரசுவி ன்மைந்த, ஞயுநூற்கேள்வித்திறல்கெழுபாநுச்சித்திரனெனவ றைகுவரால். (கஅங)

திரிமருப்பிரலேயேறழத்தாக்கித் தின்றிடுஞ்சிறுபுலிவெரு வக், கரிமருப்பினேயும்பறித்துவெம்மடங்கலுண்டிடுங்கானகாட ட, ஞருகெழுசீற்றம்பாநுசித்திரனென் றுரைத்திடுமன்னவன், மைந்தன், பருதிவேற்றடக்கைச்சுதாயுவென்றேத்தும்பார்புகழ் மன்னனென்றுரைத்தான். (கஅச)

இன்னநற்காதைபடிக்கருளோர்கேட்டோ ரெழுதினேரினி தெனவியந்தோர், பன்னெடுங்காலமிந்திரதிருவிற் பார்பொது வறத்தனிபுரந்து, பொன்னகரொய்தியரம்பையர்தெய்வப்புணர் முலேதிளைத்திடவாழ்ந்து, பின்னல்வெண்டிரைதாழ்கங்கைபஞ் சடையோனடிநிழல்பெட்பின்வீற்றிருப்பார். (கஅரு)

இராமன்வைகுந்தமடைந்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கசoசு.

இருபத்தெட்டாவது

சந்திரவங்கிஷமுரைத்தவத்தியாயம்.

பருதிநன்மரபினெம்பிரானடியார் யாரையுமினிதின்றிபகர் ந்தாய், விரிகதிர்த்திங்கண்மரபினிற்றேன்றிவெள்விடைப்பாக னைப்பழிச்சுங், குருதிவேலரசர்யாரையுமுரைத்தி யென்னலுங் கூன்முதுகாமை, யுருவுகொள்கடவுளிந்திரன்மகதி யாழ்முனி யுவந்திடவுரைப்பான். (க)

பானிலாச்சொரியுங்கலேமதிக்கடவுள் பரிவொடுமுயிர்த்தி டுஞ்சிறுவன், வேனில்வேளனேயபுதனவன்மைந்த னேக்குநர் விழிகவர்வனப்பிற், றேன்மழைபொழிந்தாலன்னதீங்குதலேயுரு ப்பசிநசையுறுதிண்டோள், மானவேற்றடக்கைப்புரூரவாவெ ன்னுமதியுறழ்தனிக்குடைவள்ளல். (உ)

சிந்துரம்பூத்தசிறுபிறைநெற்றிச்செவ்வரிக்கருங்கயல்மழை க்கட், பந்தணிகாந்தண்முகிழ்விரற்செவ்வாயுருப்பசிபடர்முலே தழுவி, யந்தமில்சீர்த்திப்புரூரவாவென்போனளித்தருள்வேற் படைமைந்தன், கந்தடுசீற்றக்கடாக்களிறனேயவாயுவென்றுரை த்திடுங்காலே. (ங)

வேறு.

ஆயுவென்றுலகேத்தியவறைகழல்வேந்தன்
வேய்மருட்டுதோட்பிரபையென்றுரைத்திடுமேலோன்
சாயன்மங்கைவெம்முலைமணந்தீன்றருடனையன்
மாயிரும்புவிவழுத்துசீர்மானவேல்நகுடன். (௪)

நரலைமாக்கடலுனிலம்புகழ்ந்திடுநகுடன்
றனைநிகழ்த்திடுங்கடாமலையுரிபுனைதடந்தோட்
பரமன்சேவடித்தாமரைபணிந்தருண்மைந்த
னிருநிலம்புகழியாதியென்றுரைத்திடுமேந்தல். (௫)

அள்ளிலைக்கதிர்வேற்படையாதியென்றறைவோன்
வெள்ளிநல்கியதெய்வயானையைமணம்விரும்பி
யெள்ளருந்திறல்விடபருவாவினிதீன்ற
வள்ளிநுண்ணிடைச்சன்மிட்டைமுகிழ்முலைமணந்தான். (௬)

எவ்வெலாத்திசையும்புகழ்ந்தேத்துசீரொதுவுங்
கவ்வைநீர்ப்புவிகாத்தருள்வேற்றுருவசுவுங்
கொவ்வையங்கனிமருட்டுவாய்க்குதலையந்தீஞ்சொற்
றெய்வயானையென்றுரைப்பவளீன்றருள்சிறுவர். (௭)

அச்சணங்குவேற்றுருகுவுந்திறல்கொள்வேல்மனுவுங்
கச்சைமால்களிறனையவெம்பூருவுங்கவினிச்
செச்சைகொட்டியவிளமுலைத்தீங்கனித்துவர்வாய்
நச்சுவேல்விழிச்சன்மிட்டைநல்கிடுமைந்தர். (௮)

தெய்வயானையைத்திர்ந்துசன்மிட்டையென்றுரைக்குங்
கொவ்வைவாய்ச்சியைநசையுறுமியாதியைக்கொதித்து
வெவ்வழற்பொறிவிழியுகவெள்ளியென்றுரைப்போ
னெவ்வமுற்றுவன்கிழவுருவெய்திடச்சபித்தான். (௯)

உருவமைந்தவொன்கிழவுருவாங்கிநும்மிளமை
தருதியென்றலுநால்வருந்தனித்தனிமறுப்ப
வெறிபொலங்கழற்பூருவாங்கிசைந்தனனளிப்ப
மருமலர்க்கணைவேனில்வேளெனவடிவமைந்தான். (௧௦)

பருவமாயிரமகளிர்தம்மின்னலம்பருகி
யுருவுபூண்டிடுமிளமைதன்மைந்தனுக்குதவி
மருவிமுப்பினைவாங்கியம்மைந்தனெவ்வுலகும்
புரவுபூண்டிடப்பொழிகதிர்மணிமுடிபுனைந்தான். (௧௧)

தென்னந்திக்கினிற்றென்னனுகெனத்துருவசுவா
மன்வர்மன்னனைமணிமுடிபுனைந்துதென்கிழக்கிற்
பொன்னவாங்கழலெதுவினைப்புரத்தியென்றளித்துப்
பன்னுமேற்றிசையளிக்கெனத்துருகுவைப்பணித்தான். (௧௨)

கடகளிற்றினைநிகர்தருமனுவெனுங்காளை
வடபுலத்தினைக்காக்கெனமணிமுடிகவித்துக்
கொடியிடைத்துவர்வாய்ச்சியரோடுகான்குறுகி
யுடலம்வாடநோற்றியர்தியாங்குயர்கதியடைந்தான். (கங)

தரைபுகழ்ந்தசீரொருவினிதளித்தருடனையர்
வரைகொண்மார்புடைச்சகத்திரசித்துவண்குரோட்ட
னிருபர்போற்றிடுநீலசிதப்பெயர்க்குரிசி
லிரகுவென்னுமோர்நால்வரொன்றினிதியம்புவரால். (கச)

மோட்டராமுடிக்கிடந்தபார்பரித்துமூவுலகுந்
தீட்டுவண்புகழ்ச்சகத்திரசிந்தெனுந்திறலோன்
சேட்டிளம்பிறைக்கண்ணியோற்றெருமுதருள்சிறுவன்
வாட்டிறற்சதசித்தெனுமன்னவர்திலதன். (கரு)

வேறு.

நெடுவெண்கவிகைநிலாக்கொழிப்பநிணங்கால்வடிவேற்சத சித்த, னடுவெம்புலிப்போத்தனையதிறற்சிறுவனடற்கேகயனவ ன்சே, யுடலஞ்செருவென்றுறைத்திடினு மொன்னாருதிரம்ப ருகியல்லாற், மடறுபுகுதாதொளிர்வடிவாட் டருமனென்னச் சாற்றுவரால். (கசா)

அன்னோன்மைந்தன்றீம்பாலு மமிழ்தும்புளிப்பத் தித்திக் குங், கன்னற்குதலைமடமாதர்காமனெனனமபல்கூரு, மன்னன் றருமநேத்திரனு மவன்சேய்விளங்குமணிப்புயத்தாற், பொன் னங்கிரியின்வனப்பழித்தபோர்வேற்கீர்த்தியெனும்வேந்தன். ()

அரசுகுவிந்துதிறையளக்குமோதையம்பொற்குணில்பொ ருமும், முரசுமுழங்குமோதையினையவிக்குமம்பொன்முற்றத் து,விரைசெல்மான்றேர்க்கீர்த்தியெனும்வெள்வேற்காளையருண் மைந்தன், புரசையானைவேல்வேந்தர்போற்றும்புகழ்ச்சஞ்ஞக் கினனே.. (கஅ)

அன்னோன்முன்னைப்பவத்தினிலோர் புறவமாங்கோர்பாசு பதன், பொன்னங்கமலப்பதத்துகடன்மெய்யிற்பொருந்தப்பட் டதனல், மன்னனுகியெவ்வுலகுமதிவெண்குடைக்கீழ்த்தனிபுர ந்தாங், கொன்னார்வணங்குமயிட்டுமானென்னும்புதல்வன்றனை யுயிர்த்தான்.. (ககூ)

வேறு.

கத்திகைக்கருமென்கூந்தற்கன்னியர்விரும்புதிண்டோட்
பத்திரசிரேணியென்போன்மயிட்டுமான்பயந்தமைந்தன்
முத்தவெண்கவிகைமன்னர்முடிமணிகிழிக்கும்பொற்குட்
டுத்தமனென்னும்வெவ்வேற்றோன்றல்மற்றவன்றன்மைந்தன். ()

அன்னவன்மைந்தன்றிங்கட் கூன்புறத்தனவவோங்குந்
தென்வரைச்சாந்துமாதர்திரண்முலைச்சுவடுநீங்காக்
கன்னவின்றுயர்ந்தநிண்டோட்டனகன்மற்றவன்றன்காளை
யென்னிலத்தரசும்போற்றுங்கிருதவீரியனென்பாரால். (உக)

வேறு.

ஏத்தும்வார்குழலாங்கவன்மகனிராவணனை
யார்த்துவன்சிறைப்புகுத்தியெவ்வுலகமுமடர்த்த
கார்த்தவீரியனுருமக்காவலன்றனக்குக்
கோர்த்துவண்புகழ்க்குமாரரோர்நூற்றுவருளரால். (உஉ)

வீரன்மைந்தரோர்நூற்றுவர்தம்மில்வேற்சூரன்
சூரசேனன்போர்விட்டுனிமிட்டினைன்றாங்கு
மாரமாவிகைச்சயத்துவசன்றனேடைவர்
பாரனைத்தையுந்தமதினிதோளினாற்பரித்தோர். (உங)

வெற்றிவேற்சயத்துவசன்மாலன்பினன்விறல்கூர்
மற்றைநால்வருமதிவகிர்கண்ணியோன்மலர்த்தாட்
பொற்றுதாமரைப்போதினில்வழிபடும்புனித
ருற்றவன்பினேடைவாசயத்துவசனுக்குரைப்பார். (உச)

திங்கடங்குலத்துதித்தவர்யாவருஞ்சிறந்த
கங்கைசூடிதன்னன்பினர்நீயதுகருதாய்
மங்குல்போன்மெனுநிறனுடைமாலடிபழிச்சி
லங்கண்மாநிலமுழுவதுநிகழுமென்றறைந்தார். (உரு)

அறைந்தவையன்மிர்வம்மின்கள்முனிவர்பாலணுகிச்
சிறந்ததேதெனுத்தேர்குதுமெனச்சயத்துவசன்
றுறந்தவேழ்பெருமுனிவரைத்தொழுதிடலுங்
கறங்குபோற்சுழலும்புலன்கடிந்தவருரைப்பார். (உசு)

யாவரொப்பெருந்தேவரைப்பழிச்சினரோனும்
பாவடிக்களிறுரித்தவர்ப்பழிச்சியதாமால்
மூவராகிமுத்தொழில்களுமுறைமுறையியற்றுந்
தேவதேவனெப்பொருளினுஞ்சிறந்துநிற்பதனல். (உஎ)

அரசர்விண்டுவின்கூற்றினிலவதரித்ததனல்
விரைசெய்தண்டுழாய்முகுந்தனைவிண்ணவர்கோவைப்
பரவவேண்டுநான்மறையவர்பசுபதிகூற்றின்
வருதலாலரன்சேவடிவழுத்துதல்வழக்காம். (உஅ)

தேவர்மாயனையசுரருமரக்கருஞ்சிறந்த
தாவருந்திறல்வயிரவக்கடவுளைத்தகைசா
லோவில்கல்லிசையாழினேரியக்கரொண்மதியை
வியவில்விஞ்சையர்வாணியைப்பழிச்சுதல்வேண்டும். (உகூ)

ஒடிவில்சாக்கியரிரவியைக்கின்னரருமையைக்
கடவுண்மாதவர்மகேசனைக்கமலவிட்டயனை
யடலமனுக்கள்பார்ப்பதியைமாயவனையில்லறந்தோர்
தொடர்பினேத்துமெத்தேவையாயினுந்தொழல்வேண்டும். ()

பிரமசாரியராயனைவைகானசம்பிடித்தோர்
பருதிவேந்தனைப்பற்றறத்துறந்திடுமெதிக
ளருள்புரிந்திடுமகேசனைப்பூதங்களரனைக்
கருதருங்கணமைங்கரனைத்தொழல்கடனும். (ருக)

பலபிதற்றியென்பங்கயக்கடவுளைமுதலாக்
குலவுநீள்சினைத்தருக்களையிறுதியாய்க்குறித்த
வலகில்பல்லுயிரொவைக்கும்வெண்ணீறணிந்தாடுங்
கலவமாமயில்பங்கனேயாதியாங்கடவுள். (ருஉ)

என்றுநான்முகனெமதுளத்திருளெறிந்திசைத்தான்
மன்றலந்துழாய்முகுந்தனையிவன்வழுத்திடினுங்
கொன்றைசூடியைப்பழிச்சியதாமெனக்கூற
நன்றெனத்தெளிந்தரசர்தம்பதியினண்ணினரால். (ருரு)

அரசவைவருமகனிலமளித்திடுநாளில்
வெருவருந்திறல்விதேகனென்றுரைபெறுமவுணன்
கரைகொல்மாக்கடற்படையொடுமிகவுளங்கனன்று
பொருகளத்திடைமன்னரோடெதிர்ந்தமர்புரிந்தான். (ருச)

சூரனென்பவனுருத்திரன்வெங்கணைதொடுப்ப
வாருணப்படைசூரசேனன்றனிவழங்க
வீரவிட்டுணிவிரிஞ்சன்வெம்படையினைவிடுப்ப
போர்செய்கிட்டிணன்வாயுவின்கொடுங்கணைபொழிந்தான். ()

விட்டவிட்டவெங்கணையெலாம்விலக்கிவாளவுணன்
வட்டவெஞ்சிலைகுழைத்தலும்வருசயத்துவசன்
கட்டழற்புகைசான்றெறிகனைகதிராழி
தொட்டுமற்றவன்மணிமுடிக்கருந்தலைதுணித்தான். (ருசு)

வெய்யதானவப்பசுப்படுத்தடுகளவேள்வி
செய்துமுற்றியசயத்துவசனுக்கருள்சிறந்து
மையில்கோசிகன்மாலுளமகிழவோர்வேள்வி
யெய்தியாற்றினனங்கவனெழுமையுந்துடைத்தான். (ருஎ)

மற்றமன்னவர்நால்வற்குமகத்தியன்வசிட்ட
னற்றவம்புரியத்திரிகவுதமனண்ணிக்
கற்றைவார்சடைக்கண்ணுதலுவப்பநல்வேள்வி
முற்றுவித்தனரவர்களுமுத்திவீட்டடைந்தார். (ருஅ)

உரைத்தமைந்தரிற்கிட்டிணனுயிர்த்தருண்மதுவாம்
வரைத்தடம்புயன்வசணனையாதியாசசேடன்
பரித்தபாரினைத்தமதுதோள்வலியினாற்பரிக்கு
மரக்தமேனுடைமைந்தர்நூற்றுவர்தமையளித்தான். (௫௯)

மால்விருப்புறுசயத்துவசன்றருமைந்தன்
காலசங்கனீரைம்பதுகாதலர்ப்பயந்தான்
சாலுமைந்தரின்விதிகோத்திரனெனுந்தக்கோன்
பாலலோசனனருளினாலனந்தனைப்பயந்தான். (௬0)

அனந்தனென்றுலகேத்தியவரசிளங்குமர
னனந்தலைப்புவிமுழுவதுநளிர்கதிர்பரப்பி
தினஞ்செய்வோனெனத்திகிரியொன்றுருட்டிவான்மகளிர்
மனங்கவர்ந்திடுதுர்ச்சயன்றனைமகிழ்ந்தளித்தான். (௬௧)

கருப்புவெஞ்சிலையகற்றியகாமனென்றெவரும்
விருப்பமெய்துறுதுர்ச்சயன்விழிகவர்வனப்பி
னருப்புவெம்முலையம்பலைத்தொழுகும்வாட்டடங்கட்
டிருக்கண்டன்னவோர்சேயிழைமுகிழ்முலைமணந்தான். (௬௨)

கற்பின்விக்கமுங்கதிர்முலைவிக்கமுங்கவின்செய்
பொற்பின்விக்கமும்பூத்தமென்பொலங்கொடிதடந்தோ
ளற்பின்விக்கமுற்றணைந்திடுநாளின்மற்றொருநாள்
வெற்பின்விங்கியதிரள்புயன்யமுனைமேவினனால். (௬௩)

அன்னமாநதிக்கரையினிலமிழ்துருவெடுத்தும்
பொன்னவாஞ்சுணங்கரும்பியபுணர்முலைதாங்கிக்
கன்னல்மென்மொழியுருப்பசிபேரோடுங்கவினி
மின்னிளங்கொடிமென்மெலவொதுங்குதல்கண்டான். (௬௪)

கண்டகண்வழியுணர்வுபோய்க்கதிர்முலைகலப்பக்
கொண்டவன்பினிலவிவழிந்தரசிளங்குமரன்
கெண்டையந்தடங்கட்கடையின்னருள்கிடைத்துத்
தொண்டனென்மொழிகேட்டி யென்றிரந்திவைசொல்வான். ()

பொன்செய்கம்மியர்கைசெயாப்பூண்சுமந்தோங்கி
மின்செய்நுண்ணிடைவருத்தியவெம்முலைத்திருவே
கொன்செய்வேல்விழிகோடியன்நோடியன்வளிய
னென்செய்கேனெனத்தொழுதலுமிளநகைமுகிழ்த்தாள். (௬௬)

திதலைகொப்புளித்தோங்கியவனமுலைத்தீஞ்சொன்
மதர்வைநோக்கிதனின்னகைவாயில்பெற்றரசன்
புதுநறுந்துளிபருகிவிழ்பொன்னிறச்சுரும்பர்
ததைபுமென்மலர்மாதவிப்பந்தரிற்சார்ந்தான். (௬௭)

வண்ணமேகலைவீக்குறவளர்ந்ததேர்த்தட்டுந்
தண்ணந்தாமரைகவற்றிவேல்தாங்கியமதியு
மண்ணலஞ்சிலைவேணிகரரசிளங்குமரன்
கண்ணிமைப்பறநோக்கலிற்கடவுளர்போன்றான். (சஅ)

அரைக்கலாதபூந்தேய்வைகோட்டிளமுலையகன்ற
வரைத்தடம்புயத்துள்புகுந்தொளித்திடமருவி
யிரைத்துவண்டுறுப்பூங்குழலணங்கொடுமிறைவ
னுரைக்கநெஞ்சிடையுன்னவொண்ணாநலமுற்றான். (சகூ)

பிதிர்சுணங்கணிவனமுலைவிசும்பிடைப்பிரியன்
விதலையெய்துவனென்றலும்விண்ணவர்நலனு
மதிர்திரைக்கடலமிர்தநீயணைதொறும்பயக்கும்
புதுநலத்தினுமினியகொல்போக்கலனென்றான். (ரு0)

அழகுகண்படுமவிர்மதிவாண்முகத்தணங்கின்
றழுமுற்றெய்திடாக்குவிமுலைத்தடத்திடைமூழ்கி
யுழுவலன்பொடுபலபகலுவந்துவேலரசன்
முழவுகண்டுயிலாததன்முதுநகரடைந்தான். (ருக)

அடைந்தமன்னவன்வேனில்வேளங்கையால்வருந்திக்
கடைந்தசெப்பெனக்கதிர்முலைப்பணைமருள்கழைத்தோட்
குடங்கையுள்ளமைந்தடங்கலாக்குவளையந்தடங்கண்
மடந்தைவைகியவுவளகத்தடைந்தனன்மாதோ. (ருஉ)

கற்பருங்கலம்புகுதருகணவனைவணங்கி
யெற்பிரிந்துநீயெவ்வழிப்படர்ந்தனையெனலும்
வெற்பின்வீங்கியதடம்புயன்வெள்கினனாகி
நிற்பமூரல்பூத்தணங்கனாளுணர்ந்திவைநிகழ்த்தும். (ருங)

ஊடுகின்றிலன்வெருவனீயுருப்பசிமுலைமேற்
கூடுதீவினைதவிர்ந்திடக்கண்ணுவர்க்குறுகி
நீடுவேள்விகளியற்றெனநெஞ்சழிந்துருகி
வாடிமன்னவன்கண்ணுவன்மருங்குபோயடைந்தான். (ருச)

அரங்கக்கூத்தியரணிமுலைமுன்றிலிற்றிளைப்ப
விரிந்ததீவினைதுடைக்குநல்விதியுரையென்னத்
திரிந்துமாதவம்புரிந்திவண்சேர்கெனவரச
னிரங்குபூங்குயிலொலியருவிமையவெற்படைந்தான். (ருரு)

அய்யசெங்கதிராதவனெனக்கதிரெறித்து
மையெறிந்தொளிர்பன்மணிகுயிற்றியமாலை
கையினேந்தியோர்கின்னரன்புகுதலுங்கனன்று
நெய்கொள்வேலுடைத்துர்ச்சயனமர்க்கெதிர்நேர்ந்தான். (ருசா)

காமனன்னதோர் துர்ச்சயன்கனன்றுவாளுருவித்
தாமவேலுடைக்கின்னரற்றுணித்தவன்கொணர்ந்த
தாமங்கைக்கொடுகளிரியற்பவளவாய்த்தீஞ்சொல்
வாமமேகலையுருப்பசிபால்மனம்வலித்தான். (ருஎ)

கமழலந்துறைசூழ்தருங்கங்கையங்கரையின்
யமுனைமாநதிதீரத்தினேமகூடத்தி
னமரர்நாட்டினிற்றேடியுமமுதுகொப்புளிக்குங்
குமுதவாய்ச்சியைக்காண்கலனாகியுட்கொதித்தான். (ருஅ)

வேனில்வேணிகர் துர்ச்சயன்விரைவினிலெய்தித்
தேனளாயசொற்றிலோத்தமைவெள்குறப்பசிய
கானலந்துழாய்முகுந்தனாருவில்வருங்கரும்பை
மானதப்பெருவாவியிற்கண்டுளமகிழ்ந்தான். (ருகூ)

மலரின்மேலுறைகடவுளும்வானவர்க்கிறையும்
புலமைமேம்படுகின்னரர்ப்புகழ்ந்துமுன்னளித்த
விலைவரம்பறியாதபொன்மாலையைவியவா
வுலகமேத்தெழிலுருப்பசிமுலைமுகட்டணிந்தான். (சூ0)

திங்கள்வெண்மதித்தலத்தினிற்செங்கதிர்கொழுதிக்
கொங்குயிர்ப்பமென்குயில்குடைந்தாடுதண்டலையின்
மங்குல்கண்படுமால்வரைச்சாரலின்மன்ன
னங்கையம்பகட்டிளமுலைநன்னலநுகர்ந்தான். (சூக)

வாருடுத்தமென்முலைத்தடம்புயத்திடைமருவி
யூரங்கட்பினுமாயிரக்காதம்விட்டகன்று
சோருநெஞ்சினர்போலவுள்ளாருயிர்துடியா
வீரவெண்மதிக்கஞ்சிவிள்ளாதினிதிருந்தான். (சூஉ)

மணக்கும்பல்பகலோர்நொடிவனமுலைமருமந்
தனக்குமோர்கணமூழிநாளாமெனத்தயங்கித்
துணர்த்தகோதையுந்தோன்றலுமொழுகுநாட்டேவர்
புணர்ப்பினுற்செழும்பூங்கொடியீங்கிவைபுகல்வாள். (சூந)

கைதவந்தெறுகண்ணுவனென்னைநீகலந்து
பைதலுற்றவெவ்வினையறப்பகர்ந்தவையனைத்துஞ்
செய்திடாமையாலென்னெடுநின்குலந்திய
வைதுகொன்றிடுமென்னவுமனமருண்டிருந்தான். (சூச)

வள்ளல்பெட்பறவேற்றுருக்கொண்டிடுமடந்தை
யுள்ளநோக்கிவெங்கூத்தியருளத்திடைக்குனிக்குங்
கள்ளம்வேதனுங்கணிப்பரிதேவசைநிங்கி
வெள்ளிவிழெனவருவிதூங்கிமையவெற்படைந்தான். (சூரு)

வளியருந்தியோர்பன்னிருபருவமாதவஞ்செய்
தளிகொளெஞ்சுடைக்கண்ணுவன்மருங்குவந்தடைந்து
துளிகொள்கண்ணினன்றீவினைநுடைக்கெனவுரைப்ப
நளிகொள்கண்ணியாய்நடுங்கலென்றீங்கிவைநவில்வான். (சுசு)

மாசுபூத்தொடரித்தீவினையுடைக்குமாமருந்து
காசியல்லதையில்லெனக்கண்ணுவனுரைப்பத்
தேசிகன்றிருத்தாளிணைபணிந்துதிதெரிந்த
வாசில்கேள்வியானனந்தகானனத்தடைந்தான். (சுஎ)

காசிமாநகர்க்கேகவோர்கழல்பெயர்த்திடுமுன்
பேசுபாவமாயிரமடிப்பின்னிடவேகி
வீசுதெண்டிரைக்கங்கைநீர்படிந்துவெண்ணீறு
பூசுமேனியான்பூங்கழல்போற்றிசெய்திருந்தான். (சுஅ)

முத்திகண்படுகாசியின்முழவுறழ்தோளான்
பைத்தபாம்பணிவிமலனைப்பல்பகலிறைஞ்சித்
தத்துவந்தெரிகண்ணுவன்றவவனமெய்திக்
கைத்தலங்குவித்தாங்கவன்கழலிணைதொழுதான். (சுகூ)

தொழுதமன்னனைத்தட்வந்ததுகளறுமுனிவன்
பழுதில்நின்பதிக்கேகெனப்பதிமருங்கெய்தி
யழகுகண்படுமம்பகட்டிளமுலைத்துவர்வா
யுழுவலன்புடைமனைவியோடுவந்தினிதிருந்தான். (எ0)

கருணையங்கடலாகியகண்ணுவமுனிவ
னிருநிலம்புகழ்துர்ச்சயன்மருங்குசென்றெய்தி
யரியமாமகமாற்றுவித்தகன்றனனவன்சேய்
விரைகொள்தார்முடிமேவலர்வணங்குசுப்பிரீதன். (எக)

வேறு.

முன்னர்யாமெடுத்துக்கூறுமுழுவலிதுயின்றதிண்டோண்
மன்னவன்குரோட்டுவென்னும்வரிசிலையுழவன்மைந்தன்
பன்னகமுடியின்வைகும்பார்பொதுநீக்கியாள்வோன்
றன்னலர்வணங்கியேத்துந்துவசனியாகுமென்றே. (எஉ)

நச்சிலைக்குடுமிவெள்வேற்றுவசனிநாமமைந்தன்
கச்சயங்களிநல்யானைக்கழிப்புலால்சுவைத்துவேந்தர்
பச்சிரத்தங்களுண்டுபசிப்பிணியகற்றுமொள்வாட்
செச்சையங்கண்ணிசூடுந்திண்புயமூர்த்தியென்பார் (எங)

கலைச்செருவிளைக்குமல்குற்கன்னியர்கதிர்த்தபொம்மன்
முலைச்செருவிளைக்குமார்பின்மூரிவேள்மூர்த்திமைந்தன்
மலைச்செருவிளைக்கும்யானைவிசங்குவாமவன்றன்மைந்தன்
சிலைச்செருவிளைக்குந்திண்டோட்சித்திரத்தேரனுமால். (எச)

திருவிருக்ககன்றதிண்டோட்சித்திரத்தேரன்மைந்த
னிருநிலமனைக்குஞ்செங்கோலியற்சசிவிந்துவாகு
மரவுடைத்தேந்துஞாலமளித்தருளவன்றன்மைந்தன்
பிருதுவிரயசுவென்னவுயர்நிலம்பேசுமன்றே. (௭௫)

ஆங்கவனருளுமைந்தனுடல்வேற்பிருதுகன்ம
னீங்கிலன்புதல்வன்வேள்விபார்க்கவனிவன்றன்மைந்தன்
வாங்குவில்விழுங்குதிண்டோண்மன்னவர்மவுலிதேய்த்துப்
பூங்கழல்சிவந்தவெற்றிப்புரவலன்பிருதுவென்போன். (௭௬)

குடாதுநீள்குன்றுதுதாயகொழுநிதிக்குப்பைதுஞ்சும்
வடாதுநற்றமிழ்நூற்கேள்விவாய்த்திடுந்தெனாதுமுற்றும்
விடாதுகாவுடைமைபூண்டவிறல்கெழுபிருதுமைந்தன்
கடாமலையனையசீற்றபிருதுசத்தமனுங்காளை. (௭௭)

நெடுமதிநெற்றிதோய்ந்துநீள்கதிர்ச்செலவுமாற்றுக்
கொடுமுரட்புரிசைசாய்த்துக்கூர்நுனைமழுங்குகோட்ட
வடுதிறற்களிறுபோலுமாங்கவனருளுமைந்தன்
மிடலுடையுசனுமன்னோன்விறல்மகன்சிதெடுவென்போன். ()

மற்றவன்மைந்தன்வெள்வேற்கவசன்மற்றவன்றன்மைந்தன்
கொற்றவர்மவுலிதேய்த்துக்குலாகழல்விளங்குநோன்றாள்
வெற்றிவேற்றடக்கைச்சாரவிருத்தனுங்கவன்றன்மைந்த
னொற்றைவெண்கவிகைச்செங்கோலுருவியனென்பர்மாதோ. ()

கைந்நிறைமயக்கமேந்திக்களிறுவீழ்ஞாட்பினேற்ற
பொன்னகர்க்கிறையைவென்றுவிசும்பினிற்புரவுபூண்ட
மன்னவன்வயிரத்திண்டோளுருவியன்மைந்தன்வாழ்த்தி
யென்னிலத்தரசும்போற்றும்விதர்ப்பனென்றியம்புமேந்தல். ()

முலைபொரக்குழைந்தபைந்தார்முழுவலிதுயின்றதிண்டோள்
விலகியில்லுமிழும்பைம்பூண்விதர்ப்பர்கோனளித்தமைந்தர்
கலையுணர்கிருதனேள்வாட்கேசிகன்களைகனுக
வுலகடிப்படுத்திவென்றவொளிறுவேலுரோமபாதன். (௮௧)

அறந்தலைமணக்குஞ்செங்கோலரசரிலுரோமபாதன்
பிறங்குசீர்மைந்தன்வெள்வேற்பெப்புருவவன்றன்மைந்தன்
கறங்குநீர்வேலைஞாலங்களைகனுவினிதுகாக்கு
மறந்துயில்வயிரத்திண்டோள் மன்னவன்விருத்தியென்போன்.

கலையறவிங்கியோங்குங்கைவளரல்குலல்லார்
முலைமுகங்குளிரத்தூங்குமுத்தம்வெண்ணிலவுகாலு
மலைபொருதிணிதோட்சந்தன்விருதிசேயவன்றன்மைந்த
னிலைமுகப்புணைசெய்மார்பன்விச்சுவசமனென்பாரால். (௮௩)

மடல்வாயிருடைத்துத்தீங்தேன்வழிதருமாலைமார்பன்
மிடல்கெழுவயிரத்திண்டோள்விச்சுவசமன்றன்மைந்த
னுடனும்வெருசமத்தினென்றுன்சுவைந்துதிராமார்ந்து
மடல்கெழுவயிரவொள்வாட்சுமந்துவென்றவைரவன்றே (அச)

விழுதுவிட்டொழுகுமுத்தவெண்ணிலாமாலைதாழு
மெழுவுறழ்குவவுத்திண்டோட் சுமந்துவிலொழில்கொண்மைந்
கழுதுகைகொட்டியாலவொன்னலர்க்கடிந்தவாய்வாள் [தன்
முழுதுலகொருகோலோச்சுநளனெனுமுரிவேலான். (அரு)

அல்லவைகடிந்துநானுமறந்தலைவளர்க்குஞ்செங்கோற்
கல்லுறழ்திணிதோள்வெற்றிக்கேசிகன்கருணைமைந்தன்
கொல்புலியனையசோதியாங்கவன்குமரன்றூய
தொல்புகழ்படைத்தசோதிட்டுமனெனச்சொல்லுவாரால். ( )

கடவிலம்புரக்கும்வெய்யகடாக்களிற்றுழவனூய
வடல்கெழுமன்னேன்மைந்தன் வபுட்டுமானவன்றன்மைந்தன்
குடி புறங்காவவொன்னார்கொடிமதிற்குடிமிகொண்ட
மிடல்கெழுவயிரத்திண்டோள்விறம்படைப்பிரமமேதி. (அஎ)

அருட்கடன்பூண்டசெங்கணுடல்வேலன்னேன்மைந்தன்
றிருக்கிளரம்பொன்மோலிச்சிதரனவன்றன்மைந்தன்
முருக்கிதழ்முத்தமூரல்முகிழ்முலையின்சொனல்லார்
விருப்புறுகாமனன்னவிகாதனென்றுரைப்பான்மே. (அஅ)

இடங்கர்வெங்கராமோடுடியெறிதிரைகிழியமோதுங்
கிடங்கர்சூழொன்னாரிஞ்சிக்குடுமிகொள்கிருதுமைந்தன்
மடங்கலேறனையசிற்றக்குணியவன்மைந்தன்வெய்ய
விடங்கவிழ்த்தொளிரும்வைவேல்விருட்டுணியென்பர்மாதோ.

மூழிவாய்த்தாமஞ்சூடிமார்பகமுழுதுங்கொண்ட
விழ்முலைத்துணைகடாக்கிவிழுத்தமும்பிருந்துவிங்கும்
பாழியந்தடந்தோள்வேற்கைவிருட்டுணிபயந்தமைந்த
னேழையர்கிழியிற்றீட்டுமெழிலிருவிருத்தியாமால். (கூ0)

கருமருப்பின்றகைதைக்கானகநாடன்மன்னர்
வெருவரவரிவில்வாங்கும்விறனிருவிருத்திமைந்தன்
குருகிகொப்புளிக்கும்வேற்கைத்தெசாருகனவன்றன்மைந்த
னிரவலர்மகிழயாவுமீய்ந்திடுந்திறலாரோகன். (கூக)

மொய்சமத்தெதிர்ந்தோர்மேனிமுதுமரப்பொந்திற்றோன்றப்
பெய்கணைமாரிசிந்தும்பெருந்திறலவன்றன்மைந்தன்
வெய்யாசிமுதனன்னேன்விறலுடைச்சிறுவனேந்து
மையல்மால்யானையன்னவயங்கெழுவிருத்தியாமால். (கூஉ)

வெண்டலைப்புலவுவாட்கைவிருதிதன்மைந்தனென்னார்
புண்டலைதோய்ந்துகாதம்புலால்மணங்கமழும்வைவேல்
மண்டலவேந்தர்வேந்தன்பலாச்சுவனவன்றன்மைந்த
னெண்டிசைபுரக்குஞ்செங்கோனவாச்சுவனென்பர்மாதோ. ( )

யாழிசைமிடற்றசெங்கணிருங்குயிலகவுஞ்சோலை
சூழ்தருமருதநாடனவாச்சுவனளித்தகோன்றல்
தாழியங்குவளைக்கண்ணார்நகையுறுதாமஞ்சூழ்ந்த
பாழியந்தடந்தோள்வெற்றித்தயாதன்பகடுபோல்வான். (கூ·)

வாலரிகழுவுஞ்செந்நீர்ப்பாய்ந்துவண்கமலத்தோடு
சாலியும்வளருமல்லறகைபெறுமருதநாடன்
மால்வயக்களிறுபோலுந்தயரதனளித்தமைந்தன்
காலவேற்சகுனியன்னானென்மகனுயர்காந்தியென்போன். (கூரு)

சோறுவாய்திறந்தசெம்பொற்றெருகுமடற்கைதைசாயா
வேறுநீர்முத்தஞ்சிந்துமிருங்கடற்சேர்ப்பனுய
வீறுசேர்காந்திமைந்தன்றேவரனவன்சேய்விண்ணோ
ராறறிமறையோர்போற்றவறம்புரிதேவபக்கன். (கூகா)

இலைத்தொழிற்றெய்யிரீட்டியெழில்குடியிருந்துவீங்கு
மலைக்கவின்கொண்டகொங்கைமங்கையர்க்கநங்கனன்ன
சிலைத்தொழிற்றேவபக்கன்சிறுவன்வேல்மதுவாமன்னேன்
குலக்குறுமைந்தன்வெற்றிக்குரவசனென்பர்மாதோ. (கூஎ)

மணிக்குடம்பதித்ததன்னவருமுலைமகளிர்வேட்பத்
துணைப்புயமழகுகாட்டுங்குரவசனளித்ததோன்றல்
கணிப்பருமனுவென்றேதுங்காளைமற்றவன்றன்மைந்தன்
புணர்த்தபூந்தாமமார்பன்புருகுச்சனென்பர்மாதோ. (கூஅ)

தூக்குபொன்மணிநாவென்றுந்துயில்விழித்தசைதல்செய்யா
மேக்குயர்ந்தோங்குவாயில்விறற்புருகுச்சன்மைந்த
னக்கடைபுரட்டிச்சிந்துநச்செயிற்றரவம்போலுங்
கோக்களிறனையவெற்றிக்குறுகலர்ச்செற்றவஞ்சன். (கூகூ)

அஞ்சுவின்மைந்தன்போரிலடையலருதிரமாந்தி
நஞ்சுகொப்புளிக்கும்வைவேற்சாத்துதனவன்றன்மைந்தர்
வெஞ்சமத்திடியேறன்னவேல்விருட்டிணியுமிக்க
மஞ்சுறழ்தடக்கைவெய்யமறங்கொளந்தகனுமென்பார். (க00)

வேறு.

முத்துவிரித்தமுலைமுற்றத் துயர்பூங்கரும்புதுனித்தெழுதிப், பைத்தவரவவல்குலராவழங்குமதுரைப்பதிவேந்த, னத்தம் பொருகோன்விருட்டிணிதன் மைந்தரடல்வேல்மித்திரனென், றேத்ததிறல்கூர்சனியென்போன் வனமித்திரனென்றுரைப்பா ரால். (க0க)

வேறு.

பாற்கடல்சிவப்பவெழுந்தசெம்மணித்தோண் மித்திரன்பயந்திடுமைந்த, னூற்கடல்கடந்தநகிக்னெனவன்றனுவலருந்திறலுடைமைந்தர், வேற்கடற்றுனேச்சத்திராசித்தும் வெம்பரித்தேரமர்க்களத்தி, னேற்குனராவிகூற்றினுக்களிக்குமியற்பிரசேனனுமென்பார். (௧௦௨)

கூற்றிருந்தாலுங்கூர்நுதிச்சுடர்வேற்சனியெனுங்சொற்றவன்புதல்வன், மாற்றலர்மவுலிதேய்த்தொளிபிறங்கும் வார்கழற்குரிசில்சத்தியகன், போற்றுநன்மைந்தனென்னலருகிரப்புலான்முடையோசனைகமழும், பாற்றினஞ்சுழல்வேற்சாத்தகியவன்சேய்பழுதிலாச்சஞ்சயனென்பார். (௧௦௩)

ஆங்கவன்புதல்வன்குணியவன்மைந்த னடையலர்புணர்ந்திடுமகளிர், கோங்கிளமுலையிற்றெய்யிலுங்கலனுங் குங்குமச்சேதகக்குழம்பு, நீங்கிடினல்லானெம்முகந்தோயாதழலுமிழ்நெட்டிலைச்சுடர்வே, லோங்குசீர்பரப்பியுலகெலாம்விளக்குமுகந்தரனெனவுரைக்குவரால். (௧௦௪)

வேறு.

குங்குமச்சேறுதோய்ந்தகுறிஞ்சிப்பூங்கோதைபோலு
மங்கலுழ்திதலைபூத்தவரும்பிளமுலையினல்லார்
பைங்கணைக்காமனென்னப்பகரனமித்திரப்பேர்ச்
சிங்கவேறனையான்மைந்தன்மிகழ்பிருச்சினியென்பாரால்(௧௦௫)

வேறு.

கொழுங்குடாதெவிட்டிமிணப்புலால்குதட்டுங்குருதிவேற்பிருச்சினிமைந்தர், பழங்கணுற்றென்னர்வெறுக்கொளநடவும்பாய்பரிச்சுவர்க்கனுங்களத்தி, னெழுந்துவெங்குறுத்தாட்பூதமும்பேயுமிருள்வாய்ப்பெய்துநின்றுடக், கழுந்துநாண்கொளுவிவரிசிலைகுழைக்குங்கல்செய்தோட்சித்திரகனுமே. (௧௦௬)

ஆங்கவர்தம்மிற்சுவர்க்கனன்மைந்த னறநெறியொழுகுமக்குரூரன், றீங்கறுமவன்சேய்தேவவானருமவன்மகன்விச்சுவச்சேனன், வாங்குவிற்றிணிதோளாங்கவன்மைந்தன்வாகைவேற்பிருதுவுமொன்னு, ரோங்கெயிலிடிக்கும்வேழவித்தகனென் றுரைத்திடும்விப்பிருதுவுமே. (௧௦௭)

உலகமோரேழுந்தனதடிப்படுத்துமங்தகனுயிர்த்திடுமைந்தர், நிலவுவெண்கவிகைக்குகுரனுங்களத்தினேரலரீருள்வாய்க்குதட்டிப், புலவுநாறழல்வாயள்ளிலைவேலாற்புரந்தரன்பகையறத்துறந்த, வலகறுசீர்த்திவளர்பயமானனென்றிடுமரசனுமாதோ.

களிறழத்தாக்குங்கடுங்குரற்சீயமனையவெங்குகுரானன்மைந்தன், வெளிறெறிகேள்விவிருட்டிணியென்போனுங்கவன்விறல்கெழுமைந்த, னொளிருவேற்றடக்கைத்திறல்புனைகபோதரோம

ணமைவர்மான்சாந்தன், வளருநெறாய்தின்றோள்விலோமகனவ
னசெய்கபனென்னவுரைகுவரன்றே. (௧0௯)

மையாரச்சுடிகைநெற்றியிற்கிடந்தபாரிவில்மன்னவரிட்ட, கையுறைமெய்முழுக்கைகளவித்தேகுமு கிளாந்திடுங்குப்பைகள்குவிந்து, வெய்யவன்றடந்தேரோட்டறவிவர்ந்தவாயிலானவன்விறல் மைந்தன், வையமோரேழுமொருகுடைநிழற்றுமன்னவனனு னெனவுரைப்பார். (௧௧0)

ஈருமெனவிடிக்கும்பெருங்குரல்வேழத்தினமருப்புழுகிடுந்தழும்பு, மரிவையர்முலைக்கோடழுந்திடுந்தழும்புமாரமுமணிந்திடுமார்பன், பொருவருதடந்தோளனுவினன்மைந்தன்புலால் கமழ்ந்தாக்கநீரொழுகு, மெரியுமிழ்ந்திலங்கு மலங்கிலைநெடு வேலானகதுந்துபியென்பான். (௧௧௧)

இலைத்தொழில்மதாணியிமைக்குநீண்மார்ப னனகத்துந் துபிமக்கள், மலைத்தடந்திணிதோட்டிறல்கொளாகுகனு மான வெற்றடக்கையிந்திரனு, மலைத்தெறிதரங்கக்கருங்கடலெனநீண்டவிபரந்தொழுகும்வாட்டடங்கட், சிலைக்கரும்புருவத்திருமதியென்னுங்கிளிக்குதலையாந்திருவும். (௧௧௨)

மித்திரனென்போன்பொருவில்கந்திருவமெல்லியற்றழுவி யோனைந்து, புத்திரர்ப்பயந்தான்றிரிமதியென்னும்பூங்கொடிதன் னையோரியக்கன், கைத்தலத்தடங்காவிளமுலைதழுவிக்கதிர் கொள்வாட்சுசேனன்வேல்விர, னுத்தசுக்கிரீவன்போசனுவா கமென்னுமோரைவரையுயிர்த்தான். (௧௧௩)

வலம்புரியின்றவெண்ணிலாத்தரள வாணகைமடந்தையர் காலிற், சிலம்பொலியென்னப்பெடையனமாற்றித்திரிதருதீம் புனலுட, லலங்கலந்திணிதோளாகுகன்மைந்தராடல்வேல்வலங்கொடேவகனு, மூலம்பொருதிணிதோளுக்கிரசேன னெனவுலகேத்துமன்னவனும். (௧௧௪)

புரைமாக்களிறுமளப்பருந்திருமிடுதிறைகொணர்ந்துபொன்முற்றத், தரசிருந்துயிர்க்குந்தேவகன்மக்களாடல்வேற்றேவவான்முதலா, முருகெழுசிற்றந்தரசரோர்நால்வரோடரிபரந்தமைத்தடங்கண், வருமுலைத்துவர்வாய்த்தேவகிமுதலாமங்கையர்மற்றுமோரெழுவர். (௧௧௫)

உடைமாலியானையனையவெந்திறல்கூருக்கிரசேனனன்மைந்த, ராடகப்பகம்பொற்கிரிநிகர்தடந்தோளடுதிறற்கஞ்சனேமுதலாய்ச், செடைமைபருகிபொருவுநீண்மார்பிற்சிற்றமுந்தாழும் வேறனலாப், பிடிகண்டிரிலும்பெருவரைத்தடந்தோட்பெட்புறுமைந்தரோரெழுவர். (௧௧௬)

முன்னெடுத்துரைத்தவந்தகன்மைந்தன்முருகவிழ்மலர்க்கலையைந்துங், கன்னலஞ்சிலையுமொளித்திவண்போந்தகாமனை நிகர்பயமானன், றன்னருட்புதல்வன்றனைத்துகளடங்கத்தானை மும்மதமழைபொழியும், பொன்னணியோடைப்பொருகளிற்று முவன்விரேதனெனப்புகலுவரால். (ககஎ)

விரிந்திடுவேந்தர்தியதாய்வேந்தர்விறல்கெழுபசுவதாச்சுருவை, சொரிந்திடுநறுநெய்யரத்தநீரருவிதூங்கிநீப்பின்றிநின்றெழுகப், பருந்துவிழ்ந்துலவுமள்ளிலைவேலாற்பண்ணவர்புகழ்ந்துநின்றேத்த, வருங்களவேள்வியாயிரம்புரியும்விரேதன்மகனடற்சூரன். (ககஅ)

கயமலர்துவைத்துக்கதவிழ்பணிலங் கான்றிடுநித்திலக்குப்பைப், புயறெடுகுடுமிவரையெனக்கிடக்கும்பொருதிரைத்தென்கடற்சேர்ப்ப, ஞயவுவெம்பேயும்பூதமுங்களிப்பவொளிறுவாளுறையுரீஇவிதிர்க்கும், வயமுடைச்சூரனளித்திடுமைந்தன்வண்புகழ்ச்சமியெனவுரைப்பார். (கக௯)

ஈன்றடைக்கிடக்கும்பேட்டிளவெகினமிரைதருசேவல்பார்த்துணங்கும், வான்றெடுபேரின்மதிமுதுகுரிஞ்சும்வளங்கெழுமருதநீர்நாட, ஞன்றபேருணர்விற்சமிமகன்பிரதிக்கேத்திரனுங்கவள்புதல்வன்,மூன்றுபேருலகுந்தனதடிப்படுத்தமூரிவேற்போசனென்றுரைப்பார். (க௨0)

ஆம்பலந்தீஞ்சொலரிவையர்முகத்தைபாய்கதிர்மதியமென்றெண்ணித், தூம்புடைநெடுந்தாட்குவளைவாய்திறந்துசுறவுவாய்நறவுகொப்புளிக்குந், தீம்புனனுட்டுப்போசனன்மைந்தன்றீஞ்சுவைதயமிழ்திளஞ்சாயற், பாம்படுமல்குன்மடந்தையர்விரும்பும்பணைப்புயக்கிருதியென்றுரைப்பார். (க௨க)

விரைகமழ்தடஞ்சூழ்புளினமண்டபத்தில்விரிசிறைபுடைத்துநின்றுதறி, நரைமுதிர்கிழட்டுமுடைமுதிர்தடந்தாணாரைவெண்குருகொடுதிளைக்கு, மருதநீள்வேலிச்செழும்புனலூரன்கிருதிநன்மைந்தன்வெங்களத்திற், றரைமுதுகுளுக்கப்பிணக்குவைகுவிக்குங்கிருதவன்மாவெனுந்தக்கோன். (க௨௨)

சேற்றிதழ்க்கமலவவபளிவிற்கன்றைநினைந்துசெங்கடகருமேதி, பாற்கடல்வயிறுசூற்கொளுஞ்செருத்தற்பருமுலைகண்டிறந்தொழுகு, மாற்றெறிதீம்பால்குளம்பலபெருக்கமல்குநீர்வளங்கெழுநாடு, போற்றிடுங்கிருதவன்மனன்மைந்தன்றெய்வகனெனப்புகலுவரால். (க௨௩)

வெற்புறழ்தோற்றத்திளங்களிற்றீட்டம்வேற்றிளம்பணைக்கையாலோங்குங், கற்பகச்சோலைபசுந்தழைமுழித்துக்கருங்கவு

ட்சாரல்வன்டோட்டும், பொற்புடையிமையப்பொருப்புடை
வெற்றிக்தேவகனினிதருள்புதல்வன், மற்படுதிண்டோட்சூர
னென்றுரைக்கும்வயங்கெழுவாகைவேலுழவன். (கஉச)

நவையறுசெங்கோல்திசைதிசைபோக்கி நானிலமுழுவது
ம்விளர்ப்பத், தவலருஞ்சீர்த்திவெண்சுதைதீற்றுந்தாமவேற்சூ
ரனன்மைந்த, னுவவுவெண்டிங்கட்கவிகைபாரேழுநிழற்றிடவா
ழியொன்றுருட்டிக்,கவனவாம்பரித்தேர்பார்த்தனுக்கூருங்கண்
ணனைத்தரும்வசுதேவன். (கஉரு)

வேறு.

இனையமாக்கதைபடிக்குநர்கேட்குநரெவரும்
பனிமதிக்குடைநிழற்றிடப்பார்பொதுநீக்கித்
தனிபுரந்தெழிற்றளர்நடைப்புதல்வர்தீங்குதலைக்
கனிநுகர்ந்துயர்கடவுளர்போலவாழ்ந்திருப்பார். (கஉசு)

சந்திரவங்கிஷமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கருஅஉ.

இருபத்தொன்பதாவது

கண்ணனவதரித்தவத்தியாயம்.

சிலைமுத்தங்கொண்டதிண்டோட்டேவகனின்தினீன்ற
கலைமுத்தங்கொள்ளுமல்குற்கன்னியரெழுவர்தம்மை
மலைமுத்தங்கொண்டமார்பின்வாள்வசுதேவன்வேட்டாங்
கலைமுத்தநிலவுகாலுமணிநகர்வலஞ்செய்போழ்தின். (க)

தேவகியெட்டாமைந்தன்றேர்விடுங்கஞ்சவுன்ற
னுவிகொண்டிடுவனென்னுமந்தரவாணிகேட்டு
மாவடுப்புரையுநோக்கிற்றங்கைதன்னுவிவவ்வக்
கோவடுங்குருதியொள்வாளுறையுரீஇக்கொதித்துச்சென்றான். (உ)

மங்கையர்தம்மைக்கோறல்வான்பழியாகுமுன்றன்
றங்கையென்பதனாற்சிற்றந்தவிர்ந்திவள்வயிற்றிற்றோன்றும்
பங்கமில்புதல்வர்தம்மைக்கொல்கெனப்பணிந்துபோற்றிக்
கொங்கவிழுருவத்தண்டார்க்கோமகன்கூறினானே. (௩)

அன்னதற்கிசைந்துகஞ்சனுய்பிழியுறைக்குங்கூந்தன்
மின்னகுமருங்குற்செவ்வாயணங்கொடும்வேலைஞால
மன்னவர்வணங்குநோன்றாட்புகழ்வசுதேவன்றன்னை
யின்னலுற்றழுங்கிமாழ்கவிருஞ்சிறைப்படுத்தினானல். (ச)

ஈங்கிவைநிகழுங்காலத்திருநிலமடந்தையேகித்
தேங்கமழ்கமலப்புத்தேள்சேவடிவணங்கியேத்தி
வாங்குவிற்காலநேமிமுதலினோர்மண்ணிற்றீமை
தாங்கருங்கஞ்சனாதிமன்னராய்த்தலைமைபூண்டார். (ரு)

ஆதலிம்பரித்தலொல்லாதையவென்றுரைத்துநிற்ப
மேதகுமமரர்சித்தர்விஞ்சையரியக்கர்சூழப்
பூதலமடந்தையோடும்பாற்கடற்புறத்தின்மேவிச்
சீதரற்போற்றிவேதனீங்கிவைதெளியச்சொன்னான். (சு)

முருகவிழ்கமலப்புத்தேள்முதலியவமரர்யாரு
மிருநிலத்தரசராகியெய்துகயாமுந்தூய
பொருவருங்கடவுட்கற்பிற்றேவகிவயிற்றிற்பொற்பா
ரொருகுழையொருவன்செங்கட்கண்ணனாயுதித்துமன்றே. (எ)

என்றுரைபகர்ந்துவெண்மைக்கருமைசேர்மயிரிரண்டு
நன்றெனவழங்கிப்போற்றுநான்முகன்முதலினோர்கட்
கொன்றுபேரன்பினோடும்விடைநல்கியுலகம்பூத்த
மன்றலந்துளவப்புத்தேள்மாயையைநோக்கிச்சொல்வான். (அ)

ஓவில்சீரிரணியன்றன்மைந்தரோரறுவர்தம்மை
மேவுபாதலத்தினின்றுகொணர்ந்துநின்விரகான்மிக்க
தாவில்சீர்வசுதேவர்க்குத்தலைமைசேர்மனைவியாய
தேவகிபுதல்வராகமுறைமுறைசேர்த்திப்பின்னர். (கூ)

உதித்தவேழாங்கருப்பந்தேவகியுயிர்க்குமுன்ன
மதிக்குநின்மாயைதன்னால்வயிற்றினின்றெடுத்துப்போகித்
துதிப்பருங்கருப்பமிக்கவ்ரோகணிவயிற்றிற்றூய்தாய்ப்
புதுக்கடிக்கமழுஞ்செவ்வாய்ப்புதல்வனாயமைத்தியன்றே. (க0)

தேவகியெட்டாமைந்தனாதிநன்சிறப்புவாய்ந்த
வாவணித்திங்கண்மேயவள்ளிருட்பக்கந்தன்னின்
மேவுமட்டமியில்யானும்வருவனீவிரும்பசோதை
யோவில்சீர்ப்புதல்வியாகிநவமியிலுதித்தியன்றே. (கக)

மன்னுசீர்வசுதேவன்றன்றாள்செறிவல்லினீங்கத்
துன்னிருட்பிழம்பினூடியமுனையைத்துனைவினீங்கி
யென்னையாய்ப்பாடிதன்னில்வளர்த்தியாங்கசோதையீன்ற
வுன்னைவல்லிரவிற்கொண்டுதேவகிகரத்தினுய்ப்பான். (கஉ)

கஞ்சனின்கமலப்பொற்றாள்கைப்படுத்தரையின்மோதச்
செஞ்சவேயெடுக்கும்போழ்திற்றிருமணியாரந்தாழ்ந்த
மஞ்சுதாழ்குன்றமன்னமார்பிறவுதைத்துவிண்போய்
வெஞ்சினவயிரவொள்வாள்வேந்தன்மாட்டிருத்தியென்றான் ()

ஈங்கிவையனைத்துந்தெய்வமகதியாழ்முனிவனெய்தி
வாங்குவில்விழுங்குதிண்டோட்கஞ்சனுக்குரைப்பமாழ்கித்
தாங்கரும்வல்லிதன்னிற்றிறல்வசுதேவன்றன்னைத்
தீங்கரும்பனுக்குஞ்செவ்வாய்த்தேவகியோடுஞ்சேர்த்தான். கச

வல்லியிற்சிறுப்புன்றுள்ளமரசொடுமையங்குநாளின்
முல்லையங்கற்பின்மிக்கமொய்குழல்வயிறுவாய்த்தல்
புல்லியகாவலாளர்புகறலுங்கஞ்சன்போந்து
கொல்லியவெழுந்தகூற்றின்மகவினைக்குறைத்திட்டானே (௧௫)

இன்னணம்பின்னுமைந்தராறுவரையெறிவேற்கஞ்சன்
கன்மிசைப்புடைவெற்றியாருயிர்கடிந்தபின்னர்
பன்மணிச்சுடிகைநெற்றிச்சேடனைப்பவளச்செவ்வாய்க்
கன்னியங்கற்பின்மிக்கதேவகிகருக்கொண்டாளே. (௧௬)

சூன்முதிர்ந்துயிர்க்குமுன்னந்தொல்லுலகிறும்பூதெய்தப்
பாலிறக்குழலிதன்னைமாயைதன்புணர்ப்பிற்பற்றி
யாளிவாபுரக்குமாயர்பாடியிலொளிந்துவைகு
மான்மருவேலுக்குரோணிவயிற்றிடைவைத்ததன்றே. (௧௭)

கங்குல்கண்படுக்குங்கூந்தற்கதிர்முலைப்பணைகொண்மென்றோ
ளங்கலுழ்மேனிச்செவ்வாயுரோகணியடையாவொன்றும்
பொங்கிருட்பிழம்புமேய்த்துபுகழ்நிலாவிரிக்குந்தூய
திங்களன்செல்வனன்னசிறுவனையினிதினீன்றாள். (௧௮)

காம்பிசைகுழிக்குஞ்செவ்வாய்க்கருமுகில்வண்ணன்றன்னை
யேம்பலோடறம்வழாமலிருநிலமுழுதுமுய்யப்
பாம்பிணைப்படத்தைமானும்பங்கயப்பருமவல்குற்
றேம்படுகுமுதச்செவ்வாய்த்தேவகிகருவுட்கொண்டாள். (௧௯)

இந்துவென்றுரைக்கும்புத்தேள்தன்குலத்தினிதிற்றோன்று
மைந்தனைக்காக்கக்கங்குல்மனைவியைவிடுத்தல்போலுஞ்
செந்துவர்மருட்டுஞ்செவ்வாய்த்தேவகிசிறப்புவாய்ந்த
வந்தளிர்வயிற்றிற்பூத்தவணிமயிரொழுக்கந்தானே. (௨௦)

வருமுலைவயர்நோயெய்திமண்ணினைநுகர்தல்தேன்சேர்
முருகவிழ்துளவத்தண்டார்முகுந்தனைமல்லலோங்கு
திருமகள்சேருமுன்னஞ்சேர்ந்திடவேண்டுமென்ன
விருநிலமங்கைமுன்போயெய்துதல்போன்றதன்றே. (௨௧)

விண்ணிடையிரண்டுவெற்புநின்றிடாவென்னமேலோ
ரெண்ணியவனுமானத்தாலெய்துநுண்மருங்குல்மங்கை
யண்ணலங்கருப்பந்தாங்கும்வாற்றினவ்வளவையன்றிக்
கண்ணளவானுமியார்க்குங்காணவாத்தோன்றிற்றன்றே. (௨௨)

உலகனைத்தினையுமுண்டோன்றமதிடத்தூறுதீம்பால்
மல்லுறநுகர்ந்துநாளும்வளர்வனென்றுவந்துகொல்லோ
யிலங்கிழைக்கோதையெல்லாவுறுப்பினுமெழில்கொண்டோங்கி
புலர்கணங்கறுத்துவீங்கியவிர்முலைபருத்ததன்றே. (௨௩)

அருப்பமென்றெவருங்கூறுமருங்குலும்வருமையன்
கருக்குழியுற்றனான்றெரிர்த்தகாரணத்தால்யார்க்கு
முருப்பநோய்செய்யும்வெய்யதுறமைவிட்டோடநாளுந்
திருக்கிளர்பதஞ்சேர்ந்தோர்க்குத்தீர்ப்பதற்கையமின்றே. ()

வாட்டடங்கண்ணிமார்பின்வந்தடிக்கொண்டநான்றே
கோட்டமுற்றெல்கித்தேய்ந்தகொடியிடைப்பகைநாணூரு
மீட்டியகருவால்விங்குமிகழ்ச்சிநோனுமையன்றே
மோட்டிளங்குரும்பைபோலுமுலைமுகங்கறுத்ததன்றே. (௨௫)

ஆவணித்திங்கடன்னிலமரபக்கத்தினன்கு
மேவுரோகணியிற்றாய்தாய்விளங்குமட்டமியினுநத்
தாவில்சீர்புதன்வாரத்திற்றகைபெறுநங்குற்பானு
டேவகியுலகமீன்றசெல்வனையினிதினின்றாள். (௨௬)

சங்கொடுநேமியொள்வாள்தழலுமிழ்கதைவில்லேந்திப்
பங்கயக்காடுபூத்தபருவமைம்முகிலிற்றோன்று
மங்கலும்மேனிச்செவ்வாய்ச்சிறுவனையமையநோக்கிப்
பொங்குபேரன்பிற்றாதைபொலிவொடும்வணங்கினனே. (௨௭)

வணங்கியதந்தைதன்னைமாயையாலறிவுநீக்கி
யணங்கரவனையிற்றுஞ்சுமஞ்சனக்கொண்டலன்று
விணங்கமழ்கதைவாள்சங்கநேமியம்படைவில்லாய
கணங்கொள்வெம்படைகள்யாவுங்கரந்திவைபுகலுமன்றே. ()

அரிமதர்நெடுங்கட்செவ்வாயசோதைமாமாயைதன்னைப்
பரிவொடுமீன்றுளென்னையாயர்பாடியிற்கொண்டேகி
மருவுறுநந்தகோபன்மனையினுய்த்தசோதையீன்ற
புரிகுழலணங்கையிங்குக்கொணர்கெனப்புகன்றனன்றே. ()

என்றலும்வல்லேநீங்கித்தேவகியிரங்கிமாழ்க
மன்றலந்துளவினானைத்திறல்வசுதேவன்கொள்ளா
வொன்றுதாட்கதவம்வாளாதிறப்பவாங்கொல்லையேகிக்
கன்றியநெஞ்சினோடும்யமுனையங்கரையினுற்றான். (௩0)

தமரவெண்டிரைக்கைதன்னாற்சங்கொடுமுத்தஞ்சிந்தும்
யமுனையெவ்வுலகுமீன்றகுழவியையினிதினோக்கிக்
குமரிவண்டரற்றுமுட்டாட்கொழுமலர்க்கரங்கள்கூப்பி
யமைவருமுவகையோடுமருநெறிவிடுத்ததன்றே. (௩௧)

ஆயிரஞ்சுடர்க்கும்விள்ளாவள்ளிருட்பிழம்புதன்னிற்
பாய்திரையமுனைநல்குநெறியினிற்பரிவோடேகிச்
செய்நலங்கடந்தவெற்றிமன்னவன்சிறுவனோடு
மாயிருஞாலம்போற்றுநந்தகோன்மனையினுற்றான். (௩௨)

பொறையுயிர்த்திட்டமாயைப்புணர்ப்பினாலசோதையோடு
முறைதருமகளிர்யாருமுறங்குழியுலகம்பூத்த
விறைவனையசோதைதன்பாற்கிடத்தியவ்வசோதையீன்ற [ன்
கறைகொள்வேற்கண்ணிதன்னைக்கைக்கொடுவிரைவிற்போந்தா

போந்துயர்குடுமிமாடப்பொன்னகர்மதுரையெய்திக்
காந்தெரிமணியிற்செய்தகடிமனையதனிற்புக்காங்
கேந்திளங்குழவிதன்னைத்தேவகிகரத்தினீய்ந்தான்
சாந்தணிகுழலாள்வாங்கித்தடமுலையூட்டினாளே. (௩௪)

வல்லியுமுன்போற்பொற்றாள்பிணித்ததுவாயில்யாவு
மொல்லையினடைத்துத்தாள்கள்செறிந்தனவொழுகியோடுங்
கல்லெனீர்வேலிசூழ்ந்தகாசினியனைத்துங்கேட்ப
வல்லலுற்றழுங்குவாரின்மாயையுமழுததன்றே. (௩௫)

அழுகுரலோதைகேட்டவாயிலோரடியிற்றாழ்ந்து
கழைசுழிகளிநல்யானைக்கஞ்சனுக்குரைப்பப்போந்து
குழவியைத்தங்கைநெஞ்சங்குழைந்திடவலிதிற்பற்றி
நிழலுமிழ்பளிக்குப்பாறைநிலத்தினிலடிக்குமெல்லை. (௩௬)

கஞ்சன்வெங்கரத்தினீங்கியாங்கவன்கல்செய்தோளி
ணஞ்செஞ்சிறடியானெஞ்சமலமரவுதைத்துப்போகிச்
செஞ்சுடர்நெற்றிக்கண்ணுந்திரண்டவெண்டோளுமாகி
மஞ்சுறழ்கரியமேனிமாயையீதுரைக்குமன்றே. (௩௭)

உன்னுயிர்க்கிறுதிகாண்பானுதித்திடும்புனிற்றுச்சீய
மன்னவன்னகரின்பாங்கர்வதிந்ததென்றினிதினேகிக்
கன்னவில்திரடோட்காளிகதிர்மணிமுகடுவேய்ந்த
பொன்னகர்மாடமெய்திப்பொலிவின்வீற்றிருந்தாளன்றே. ()

செய்த்தலைவாளைதாவுஞ்செழும்புனல்மதுரைகாக்கும்
பைத்தபாம்பனையசிற்றுக்கஞ்சனும்பரிவின்வைகு
மைத்துனன்றன்னைத்தங்கைதன்னொடும்வல்லிநீக்கி
வித்தகவமைச்சரோடும்வேறிருந்தெண்ணினானால். (௩௯)

மாலைவாயமுதத்தேறல்மார்பகனைப்பச்செல்லும்
பாலனின்றுவியுண்பனென்றுரைபகர்ந்தவாற்றால்
வேலைசூழ்ஞாலத்துள்ளசிறுவரைவிரைவிற்கோறல்
சால்புறுமென்னத்தேர்ச்சித்துணைவர்கள்சாற்றினாரால். (௪0)

தீதுருவெடுத்தாலன்னகஞ்சன்வெஞ்சினத்தினோடும்
பூதனையாதியாயபேய்களைப்பொருந்தநோக்கி
யோதியவுலகிலுள்ளசிறுவர்களுயிரையேகிக்
காதலினொருத்திரொன்னக்கடிதினிற்போயவன்றே. (௪௧)

ஈங்கிவைநிற்பவாயர்பாடியினசோதையென்பாள்
திங்களிக்குதலைச்செவ்வாய்ச்சிறுவனையுயிர்த்தாளென்ன
மாங்குயில்மருட்டுந்தீஞ்சொலாச்சியர்மகிழ்வினோடுங்
கோங்கிளமுலைகள்வீங்கக்குரவையாட்டயர்ந்தாரன்றே. (சஉ)

அள்ளிலைவயிரப்பைம்பூணந்தகோனகிலமீன்ற
பிள்ளையையுச்சிமோந்துபிறந்துழியியற்றுகின்ற
தள்ளருங்கருமமாற்றித்தன்கிளைத்தலைவரோடும்
வெள்ளணியணிந்துகோடிவிழுநிதிமறையோர்க்கீய்ந்தான். சங

நஞ்சுகொப்புளிக்கும்பேழ்வாய்க்கறைபணநாகமன்ன
கஞ்சனுக்குவப்பினல்குங்கரங்கொடுசேறுமென்று
வெஞ்சலில்கிளையினோடுமிலகுசீர்நந்தனென்போன்
செஞ்சவேமுல்லையாயர்தீங்குழலிசைப்பப்போனான். (சச)

வேறு.

வெண்ணெய்பெய்தகுழிசிவெண்டிங்களிற்
றண்ணென்வெண்டயிர்பெய்திடுசாடிகள்
பண்ணிகாரம்பெய்பண்டிகள்தம்மொடு
மெண்ணில்மாடமதுரையினெய்தினான். (சரு)

எய்திமன்னற்கிறையளித்தேகலும்
வெய்தினெய்திவிறல்வசுதேவனீள்
கைதவந்தெறுநந்தனைக்கையினாற்
பைதலோடுந்தழீஇயிவைபன்னுவான். (சசு)

காதற்றோழவென்கண்ணிடனாடிற்றாற்
றீதுபூத்தநிமித்தமுஞ்சேர்ந்தென
வேதமெய்திடும்பாணித்திடாதுநீ
போதியென்றுபுகறலும்போயினான். (சஎ)

நந்தகோனுயர்பாடியினண்ணுமுன்
சிந்துதெண்டிரைவைப்பினெண்டிக்கினின்
மைந்தராருயிர்வவ்வியபூதனை
கொந்துதாழ்பொழிற்கோகுலத்தெய்தினாள். (சஅ)

வன்னவெம்முலைபால்வழிந்தோடுதல்
தன்னகையிற்கயக்கித்தளரிடை
மின்னினொல்கவிழியுயிர்கூட்டுண
வன்னமென்னடந்தவணெய்தினாள். (சகூ)

தெள்ளுநான்மறைதேடுஞ்சிறுவனை
யள்ளியேந்திமடியில்வைத்தன்புபோற்
கள்ளவஞ்சகிகாதலிற்காதுரீஇ
வள்ளலுண்ணவருமுலையூட்டினாள் (ரு0)

கணங்குழுத்துயர்சொமருவெம்முலை
மணங்கொடாமனைக்கையின்வருடிமே
லணங்குபார்த்துநகைமுகிழ்த்தாயிபோ
ருணங்குபெய்முலையுறவுண்டானரோ. (௫௧)

சாறுபாலொடியிரதக்காமுனம்
வேறுகன்னருமெய்யப்புகளை
யாறுகூப்பிடுகாத்தகனமா
நிறுசெய்துநிலத்துறவிழ்ந்தனர். (௫௨)

மையிருள்வயிறெற்றிக்கரநெரித்
தையலெங்களிர்மேனியசோரசுபோய்
வையமுண்டமகவெடுத்தாங்குறை
தையலாரொடுக்தான்மகிழ்ந்தாளரோ. (௫௩)

சங்ககோளவினைப்பிறழ்ந்துழாய்
மைந்தன்செய்திமகிழ்வுறக்கேட்டவுஞ்
சிந்தைமாழ்கித்தெளிந்துகிளையொடு
மந்தமற்றவுவகையனாயினன். (௫௪)

மாய்கொறைச்சிறிப்புகளைமாறுடல்
சிரந்துணித்சமமெமத்திற்சேர்க்கனு
மரிந்தமற்குழலையளிக்கிட்டதால்
நரந்தநாரினநாலிருநாதமே. (௫௫)

ஓயிருண்டுதிரைகளுமாயர்தந்
தையலாரொடுஞ்சங்கிமிகிப்பியா
மையில்கேள்விமறையவர்க்கார்பத
நெய்யிற்பாலிவிரம்பவருத்தினர். (௫௬)

பண்ணிகாரங்கொணர்ந்திடுபண்டிவந்
தண்ணல்மேவியகோட்டிலணைதலுந்
தண்ணக்காமனைத்தாளிலுதைத்திடா
விண்ணிலோடிவெறுந்துகளானதே. (௫௭)

மெய்சாடிறமென்பதகிட்டனு
மாயர்மங்கையரன்போடயின்றிர்
சேயுறைகிருசேவடிசுற்றுறக்
காயும்வெவ்வியகண்ணைச்சிவிக்கினர். (௫௮)

வேறு.

வன்றிப்பேனுமிருந்தசுரும்புமவழங்குந்துளவத்
தன்டாதினவுறன்னைத்தாங்கித்திரிநுவரக்கன்
கொண்டுதுறைவழியிற்கோட்பினேதுமேல்னை
விண்டிரிவிப்போகவிழ்த்தியவளைக்கொன்றான். (௫௯)

கொன்றவசுரன்மெய்யிற்குழவிதவழக்கண்டோர்
மன்றமேலாதிரியவன்னையுஞ்சிலம்புயிரங்கச்
சென்றமைந்தன்றன்னைச்செங்கைத்தளிரினேந்தி
யன்றிற்பெடைபோலரற்றுமசோதைகையிலளித்தார். (௯௦)

ஆயர்குலக்குவிளக்காமசோதையமுதல்காணாத்
தூயமுறுவல்கொட்டுந்தோன்றச்செங்கேழ்ப்பவள
வாயிலுலகமனைத்துங்கண்டேதொழுதுவழுத்தக்
காயாமேனிச்சிறுவன்மாயையதனாற்கரந்தான். (௯௧)

கையுமுகமுங்கண்ணுங்காலுமுந்தித்தடமுஞ்
செய்யகமலம்பொருவுங்கரியசெம்மறன்னை
மையமருங்குற்செவ்வாயசோதைகுறங்கினேற்றி
வையமுழுதுமுண்டமலர்வாயுச்சிமோந்தாள். (௯௨)

செந்தேன்றுளித்தாலன்னவாம்பல்செவ்வாயூற
லந்தாரகலத்தொழுகவாயர்மனையிற்றவழ்ந்து
நந்தன்விரல்கள்பற்றிக்குறுந்தாள்பெயர்த்துநடத்து
மைந்தனாயர்பாடிமகிழ்வித்துலவுநாளின். (௯௩)

மாசில்வசுதேவன்றனருளாற்காக்கமறையோ
னாசிலாயர்பாடிவனாகிவெள்ளைமேனி
யேசில்புதல்வர்க்காங்கேயிராமனெனப்பேரிட்டுக்
காசில்கரியோன்றனக்குங்கண்ணனெனப்பேரீந்தான். (௯௪)

மண்ணையளந்துமுண்டுமனையாளாகப்புணர்ந்துந்
தெண்ணீர்ப்பவ்வத்தெடுத்துஞ்சிறிதுநசைதீர்ந்திலன்போ
லண்ணல்தவழும்போதிற்கையால்மண்ணையள்ளி
யுண்ணக்கண்டவன்னையோடிவந்தாங்கடித்தாள். (௯௫)

கவ்வைநெடுநீர்வாவிக்கடவுட்கமலமுகத்தின்
செவ்விவழிதல்போலக்கண்ணீரொழுகச்சிறுவன்
பவ்வத்திரையின்பிறவாப்பவளமலர்வாயன்னை
யெவ்வெத்திசையுமுலகுமிறைவன்வாயுட்கண்டாள். (௯௬)

கண்டாள்காயாமேனிக்கண்ணன்களிவண்டுளருந்
தண்டாமரையாள்புணருந்தலைவனென்றெண்ணிக்
கொண்டேபழிச்சும்போழ்திற்கொடியவிருளும்விளர்ப்ப
மண்டுமாயையதனால்முன்போலறிவைமறைத்தான். (௯௭)

தெண்ணீர்க்கயத்துட்பூத்தசெவ்விக்கமலமன்ன
கண்ணீர்கையாற்றுடைத்துக்கதிர்மென்முலைப்பாலூட்டி
யண்ணலழுகையாற்றியம்பொற்குழிசிதன்னிற்
றண்ணாந்துயின்மத்தெறிபடவாரோடுஞ்சார்ந்தாள். (௯௮)

செறிவண்டாற்றுங்கூந்தற்றேமென்மலரோடவிழ
நறைபெய்குடத்திற்றதும்புநகைவெண்முத்தமுலையின்
பொறையாற்றுதமருங்குல்தயிர்கொல்பூசலொழியென்
றறைபோன்வளையும்பூணுமலறத்தயிர்மத்தெறிந்தாள். (௬௯)

மயிர்வார்முன்கைவளையும்வண்டும்பூணுமொலிப்பத்
தயிர்கண்ணுடைக்குமன்னைதடமென்முலைப்பாலருந்தி
யுயிர்போல்மைந்தன்குளிப்பவுவக்குமேல்வைதன்னிற்
செயிர்தீர்மனையிற்காயுந்தீம்பால்பொங்கிற்றன்றே. (௭௦)

பொங்குந்தீம்பாலாற்றப்பூவைவண்ணனுண்ணுங்
கொங்கைவலிதிற்பறித்துக்குழங்கன்மாலைவீழ
மங்கையோடுமேல்வைமத்தாற்குழிசியுடையா
யங்கைதளிராலையன்வெண்ணெயெடுத்தேயயின்றான். (௭௧)

வேறு.

தாளாம்பயிர்க்குழிசியனைத்தினையுந்தகர்த்துருட்டிக்
கோளார்ந்தமதிமுகத்துக்குறுநடையகுற்றாயன்
மீளாநற்றாய்போதின்வெகுளுமெனவுளம்வெருவி
வாளார்ந்தகருநெடுங்கண்மற்றொருத்திமனைபுகுந்தான். (௭௨)

எந்தைபுகுந்தொளித்தமனையுறிவெண்ணெயெட்டாமற்
குந்தியுரன்மீதேறிக்கல்லினுற்குழிசியுடைத்
தந்தளிர்க்கையாலேந்தியினிதருந்தியாங்கெய்து
மைந்தருக்குமிகவளித்துப்பூசைக்கும்வழங்கினான். (௭௩)

வடித்தசெழுமறைதேடிக்காணாதமணிவண்ண
னடிச்சுவடுதனிச்சென்றங்கையனைக்கண்டங்கனிவாய்
மடித்துறுக்கியெத்தேவுமறியாதமழைமுகிலைப்
பிடித்தன்னைநெடுந்தாம்பினுரலோடும்பிணித்தனளால். (௭௪)

உரலினொடுந்தனிபோகிமணிவண்ணனேரிரண்டு
மருதினிடைத்தவழ்போழ்தின்மலைமுறிந்தாலெனமுறிந்து
தரைகுழியவீழ்ந்தவைகள்வினைமுனிசாபம்போ
யரியநளகூபரனுமணிக்கிரீவனுமானார். (௭௫)

நிதிக்கிழவனுயிர்ச்சிறுவர்நேமியோற்றொழுதுதம்
பதிக்கணடைந்தினிதிருந்தார்நந்தகோன்பழமறைதேர்
முதுக்குறவினோர்போற்றுமுதலையுரற்பிணிப்பவிழ்த்துக்
கொதித்துளமாழ்குறவெடுத்துத்தன்மனையிற்கொடுபோனான் ()

மருவுநகர்தனிற்றீமைபற்பலவந்துற்றதனால்
பொருவிலுரோகணியோடுமசோதையொடும்புதல்வரொடும்
விரிதருநற்கிளையோடுங்கருந்துளவின்விரைநாறுந்
திருவிருந்தாவனத்தன்னிலந்தகோன்சென்றிருந்தான். (௭௭)

குடம்பொருவுசெருத்தலான்குழக்கன்றுதனிமேய்த்து
மடங்கலேற்றிளம்போத்தின்மணிவண்ணனிராமனுடன்
றடங்களினுமரிபரந்ததளவநறுங்கானகத்தி
னிடங்களினுங்கன்களிப்பவினிதின்வழங்குறுநாளின். (எஅ)

வேறு

குறுந்தாம்பணைத்தகுழக்கன்றினுருவாயசுரன்கொடுங்காலிற்
செறிந்தாண்டுறலுமணிவண்ணன்செங்கட்கமலமலர்பரப்பி
யறிந்தோரிமைப்பினிளங்கன்றுகுணிலாய்விளவின்கனியதனி
லெறிந்தான்விளவின்கனியோடும்வீழ்ந்தானவிபிழந்தானே. ()

நாளீன்றணியபசியகுழக்கன்றுமேய்த்துநள்ளிருளிற்
றொளொன்றூன்றிக்காழ்பூத்ததடிமேலுமங்குமாயரொடும்
வேணுக்கழகுமுருகனுக்குவிறலுங்கொடுத்தசிற்றாயன் [ன்.
வாளார்கண்ணார்முகம்போலுங் கமலத்தடத்துள்வந்தடைந்தா

வினைகொப்புளிக்குமலர்த்தடத்தோரசுரன்வெவ்வாய்ப்புள்ளா
மருதமொடியத்தனிதவழ்ந்தமாயன்றன்னைவிழுங்குதலு [மி
மெரியின்மிடறுசுடவுமிழ்ந்துகுத்தவிவரவெம்பெருமான்[தான்
குருகின்பகுவாய்செய்யமலர்க் கரத்தாற்கிழித்தாங்குயிர்குடித்

மற்றோரசுரன்மலைப்பாம்பிற்கிடப்பவவன்றன்கல்வாயை
வெற்பின்முழையென்றான்கன் றோடகல்வாய்ப்புகுந்துவினைவி
னொடுங், கற்பாடழித்ததிரள்புயத்துக்கண்ணன்வாளால்வாய்கி
யா, முற்பாற்சாபத்தொடுமாவிமுடியமுன்னையுருவுற்றான். [ழி

அருந்தும்பசும்புல்லுணுத்தெவிட்டியசைவிட்டுறங்குங்கன்
றோச்சிப், பொருந்தும்பொதுவர்சிறுவரொடும்பூவைநிறத்தசிற்
றாயன், செருந்தில்கமழுங்காளுந்தித்திரமெய்தித்துகிலிடத்தின்
மருந்திற்பொதிந்தவாற்றுணுமகிழ்வினோடுமிருந்தயின்றான். ()

அன்னபோழ்திற்புறகுதட்டியருந்துங்குழக்கன்றனைத்தினையும்
பொன்னங்கமலத்தரசிருக்கும்புத்தேள்கவர்ந்துகொடுபோகப்
பன்னுமறைதேடருங்கடவுள்கன்றுதேடிப்படர்போழ்தின்
மன்னுஞ்சிறுவரனைவரையும்பின்னுமாயைதனிற்கவர்ந்தான். ()

துள்ளுமிமிலேற்றிளங்கன்றினமுந்தொறுவாமைந்தரையும்
வள்ளல்காணதுளத்தெண்ணிமலரோன்செய்தியெனத்தேறி
யெள்ளற்கரியமாயையினாற்கன்றினத்தோடிளைஞர்தமைக்
கள்ளம்பூத்தமாமாயன்முன்போல்வகுத்துக்களித்தனனால். ()

வேறு.

ஐயனிளங்கன்றினொடுமாளினைகளோடுஞ்
செய்யகதிரத்தவரைசென்றணையுமுன்ன
மையின்மனையெய்தமகிழ்தூங்கிவருகன்றிற்
கெய்திமுலைப்பாலளித்தவான்களிளங்கன்றின். (அக)

ஓர்பருவமின்னணமிறப்பவுயர்வேதன்
கார்முகினிறந்தனையகண்ணனைவழுத்திச்
சீர்பெறுநன்மைந்தரொடுவவ்வுசிறுகன்றுஞ்
சோர்வறவளித்துமிளிர்தொல்லுலகடைந்தான். (அஎ)

ஒருகுறையொருத்தனும்வரைக்குறிகரொக்கு
மருதமரமுன்றவழுமாயனுமுலைப்பால்
பருகலொழிகன்றினிரைபண்பினுடன்மேயா
தில்பெருகுகானினிடையானிரைக்கண்மேய்த்தார். (அஅ)

கழுதையுருவாகியசுரன்கடிதினெய்த
விழைவெயிலெறிப்பவெதிர்சென்றிகலிராமன்
பழுவொடியவெற்றியோர்பனம்பழமெறிந்தான்
விழுதலுமிலத்திடைபுரண்டுயிர்விளிந்தான். (அசு)

யமுனாநதியின்கரையினெய்தியிடுமாயா
குமரரொடுமானிரைகள்கோதில்புனலென்ன
வமரும்விடநீரினையருந்தியுயிர்மாயக்
கமழ்துளவமாலைபுனைகண்ணனதுகண்டான். (கூ0)

கண்ணனமுதம்பொழிகடைக்கணருணோக்கா
லுன்றுமறலுற்றவிடம்யாவையுமொழிப்பத்
துன்னினவெழுந்திடையருந்தொறுவுநிற்ப
விண்ணவர்களண்ணலைவியந்தனர்துதித்தார். (கூக)

விடமொழுகுமென்படுகளுடுதனிமேவிக்
கடுவுடையெயிற்றினெடுகாளியன்விரித்த
படமுழுதுமெல்லடிபதித்துமுகில்வண்ண
னடநவிலமெய்ந்நனிநடுங்கியயர்வுற்றான். (கூஉ)

காளிகன்விழைந்துபுணர்கன்னியரவங்கள்
மீளிமையுடைக்குரிசில்மென்கமலமானுந்
தாளிணைவழுத்தவருடங்கியுயிருய்வா
னீள்கடலினேகெனவிடுத்துநிரைகாத்தான். (கூந)

அன்னவைகளொற்றரிலறிந்துபுகழ்நந்தன்
றன்னமர்விருப்பினெடுமைந்தனுழைசார்வான்
மன்னலுறுகங்குல்புலர்வைகறையின்வெய்தாய்த்
துன்னரியகானினழல்சுற்றியதையன்றே. (கூச)

தந்தையைவளைந்துடல்தருக்கறவுருக்கும்
வெந்தழலைமுன்னநுகர்வெண்ணெயெனவாரி
யந்தளிர்மலர்க்கையினினள்ளினனயின்முன்
வுந்திடுகடாமலையழைக்கவருகண்ணன். (கூரு).

ஆயர்குலமைந்தரினடைந்தபிரலம்பன்
மாயையையறிந்துவரிபந்துபுடைகோல்கொண்
டேயவிளையாடலுமிராமனவனிவெல்லத்
தீயனவனைத்தனிசுமந்துயிர்சிதைந்தான். (௯௬)

நெடிபடுவனத்தினிடைநின்றுவிளையாடு
மிடையர்குலமைந்தனையிருந்தழல்வளைப்பக்
கடிதினவர்கண்மலர்புதைப்பவருகண்ணன்
விடநுகருமீசனெனவெவ்வழலுகர்ந்தான். (௯௭)

குட்டநிகர்செருத்தன்மடிகொள்கவடடங்கா
நடைதளருமானிரைபுரந்துமறைநாதன்
படர்தருநெடுஞ்சினையபாண்டிரமெனும்பேர்
வடதருவினீழலிடைவந்தினிதிருந்தான். (௯௮)

கண்ணனிறமென்னவொளிர்கார்முகில்விளர்ப்பத்
தண்மதியிராமனுடல்போலொளிதயங்கா
வெண்ணிலவுகாலவெயிலாதவன்விரிப்ப
நண்ணியதுகூதிர்பிரிவோருயிர்நடப்ப. (௯௯)

முகிழ்ந்தகமலச்செழுமுலைக்கவடைசைத்தே
மிருந்தவலையுந்தரிகம்வீசிநதியாவு
மகிழ்ந்துகணவர்ப்புணரவேகுமடவாரிற்
புகுந்தனகடற்றலையிலன்னமுறைபோத. (௧00)

மங்குறுடுசாலியிடுவேலியின்வளைந்த
பைங்கழைகணுந்தொறும்வெடித்தபருமுத்தந்
தங்குகவணுய்த்தெறிகலென்றுவயல்சாருஞ்
செங்கண்வளைவாயகிளிசேணிடைபறப்ப. (௧0௧)

ஓர்புடைகடற்புனலருந்தியுறைசிந்தா
வார்வமொடிடித்துரறிமின்னியதிர்மேகம்
வாரிமுழுதுண்டமுனிபெய்திவளமாழ்கி
வேர்வினெடுவான்முகம்விளர்த்தெனவிளர்த்த. (௧0௨)

வேனிலினகன்றவனமேவவெதிர்வைத்த
வீனமறுபார்வையினெழுந்ததொளிர்திங்கள்
வானதிமணற்குவையின்மைம்முகில்விளர்த்த
கானுறைகருங்குயிலின்வாய்கடிதடைத்த. (௧0௩)

நீர்குறையநீர்குறையநின்றுவெளிதோன்றும்
வார்தருமணற்குவைபுதுக்கடிமணந்தோ
ரார்வமொடுமுத்தரிசமென்மெலவகற்றா
சோர்குழலின்மாதர்முலைதோன்றுவனபோதும். (௧0௪)

நிம்புனல்வாய்த்தலைவிளைந்தவளைசெந்நெ
லேம்பலொடுவண்டுவிடர்போலவிசைபாடா
வாம்பலிதழுண்ணுமதுகண்டறிவுநாணித்
தாம்பரிவினோடுதலைசாய்த்தனமானும். (க0ரு)

செந்நெல்வயல்காவல்புரிதீங்குதலைநல்லார்
மென்மெலமிழற்றுமொழிகண்டுகிளிவீழா
டிரின்னநடைகண்டறியுமாநமுலைவேழ
மென்னவெருவுற்றுமதவெங்கரிகளெய்தா. (க0சு)

ஆதவன்வெயிற்கதிர்கள்புல்லவளியோடுந்
தாதவிழிதழ்த்தளையவிழ்ந்துநகையாதே
கூதிரிடைதாமரைகுவிந்தமழைநாளிற்
போதராலொழிந்தவையினாடியதுபோலும். (க0எ)

இத்தகையவாயபருவத்தெழிறயங்கு
மைத்தகருமேகநிறமொத்தமணிவண்ணன்
மொய்த்தசிலைவானவெளிமுடுவடநிழற்
கைத்தலமெடுத்தகுழலோடுகடிதுற்றான். (க0அ)

ஒருபதமிதித்தொருபதத்தையுடன்மாறிப்
பெருவிரன்மணித்தலைபிறங்கநனியூன்றி
முருகுவிரிதாமரைமுகஞ்சிறிதுகோட்டிக்
கருகுதுளைவேயிசைகனிந்திடவிசைத்தான். (க0கூ)

ராம்பணைதுறந்திடையர்பாடிவளைய
ஞம்பல்பொழிதீங்குழலிசைக்குருகியன்பா
லேம்பலொடுமானுழுவையோடுமிகலின்றித்
தாம்பரிவுகூரவயறங்கியதையன்றே. (ககo)

பாறைபடுவெண்டயிருடைத்தபருமத்தின்
மாறுபடவிக்குறுமணிக்கயிறெறிந்தே
கூறையொடுமேகலைகுலைந்துமடநல்லார்
காறுடரவையனவில்கானவலைபுக்கார். (ககக)

பாங்கொளிவிரித்திலகுபச்சைமணிவண்ண
னேங்குலலைமென்றழைகுழைப்பநனியூதுந்
தூங்கிசையெழுந்துளைகடொட்டவிரல்பட்ட
வேய்ங்குழலுமென்றழைவிரித்ததுகடுக்கும். (ககஉ)

வெண்ணெய்கமழ்செய்யபவளக்கனிவிளைக்கும்
பண்ணமுதமஞ்செவியின்வாயிடைபரப்ப
வண்ணமுதுகந்தெனவொழித்தமரர்மாதர்
மண்ணுலகினாயர்குலமங்கையரின்வந்தார். (ககங)

புலவியினிலாசைவிளைவித்துநனிபுல்லுங்
கலவியினிலாவினிகர்காதலரைநீங்கி
யிலவெறிதுவர்ப்பவளவாயிடையர்மாத
ருலைமெழுகினைந்துகுழலோசைவழியுற்றார். (ககச)

பட்டமரமுங்குழைதழைத்தபகலோனும்
விட்டகதிர்தண்கதிரினொத்ததுயர்மேகந்
தொட்டகடன்முத்தினினறுந்துளிதுளித்த
கட்டழகுடைக்குரிசில்கானவிசைதன்னால். (ககரு)

காந்தளிதழுழ்ந்ததெனக்கையின்வளைவீழ்ப்ப
பாந்தளுரிவிட்டதெனவேயழகுபாய
வேந்தெழிலவல்குலணிமேகலையிறப்பச்
சாந்தமுலைமங்கையர்தரிப்பிலரடைந்தார். (ககசு)

வேய்ங்குழலிசைப்பதுவிடுத்துமணிவண்ணன்
றூங்குயர்செருந்தநிறைகானிடைதுரந்தா
னுங்கவன்மணப்பவிடைமங்கையர்களம்பைப்
பூங்கழலருச்சனைபுரிந்துநனிநோற்றார். (ககஎ)

வேறு.

ஐங்கணைக்குரிசில்கேள்வற்றணந்தவரகலத்தெய்தப்
பொங்குமென்கணைகள்சிந்தும்பூந்துகளெழுந்ததென்னச்
செங்கதிர்வெம்மைநீங்கித்திங்களிற்றிரிந்துதோன்றப்
பங்கயமுகங்கள்வாடவெழுந்ததுபனியின்பம்மல். (ககஅ)

பொழிதருபனிக்குநாணிப்புகையொழிந்தோடவெப்பி [த்
னழல்கனல்பொடிப்படாம்போர்த்தஞ்சனக்கொழுந்துபோக்கி
தழல்படவெரியுந்தீயும்வெம்மையிற்றணந்துவல்லோ
ரொழுதியதீயின்வைத்ததகளிநோறெரியுமன்றே. (கககூ)

பனிக்கிடைந்தஞ்சொனல்லார்பாண்டிலந்தகளிதன்னின்
மனைத்தலைதோறும்வைத்துவளர்த்ததீசனெற்றிக்
கனற்கணால்மதனைச்செற்றானென்பதுகருதிமாரன்
றனக்குமன்னுதற்கண்ணியவான்றனித்தனியமைத்தல்போலும்.

மெய்ம்மயிர்பொடிப்பச்செய்யும்வாற்றினால்விழைவினோடு
மையசிற்காரம்பல்காற்றேற்றுவித்திடலாலந்தஞ்
செய்யவாயழகின்றன்மைதிரித்திடுஞ்செயலால்மாதர்க்
கெய்தியபனியுங்கூடுங்கொழுநர்போன்றிருந்ததன்றே. (கஉக)

ஈட்டியபனிவெங்கூற்றமெழுதியதழலிற்றேன்ற
மூட்டியதழலுநிக்கார்தாமரைமுகங்கள்கோட
வாட்டியவாட்டந்தீரவெய்யவன்மாற்றான்மாதர்
மோட்டிளங்கொங்கையின்றேவலமெலாமுடிக்குமென்றே. ( )

இலங்குவெண்டழலின்மாதரோங்கெழிற்குடங்கைகாட்ட
லலங்கலங்குன்றமன்னவருப்புவெம்முலையால்மைந்த
ருலங்கெழுபுயத்திற்சேர்த்திப்பனிக்குடும்பொழிப்பெம்பியிர்
கலங்கலியொன்றுகாந்தட்கரமலர்கவித்தல்போலும். (கஉங)

பற்றலர்புரந்தியுண்ணைநகைத்திடும்பவளக்குன்றி
னெற்றியங்கண்ணும்வெய்யவலக்கணுமழற்சிநிங்கா
தற்றிடுமென்றுல்மற்றைமதிக்கண்டொழியுங்கொல்லோ
பொற்றாமரைகள்வேவப்பனிக்கதிர்பொழிந்திடாதோ. (கஉச)

வானதியகனிற்பூத்துவயங்குபொற்கமலம்போன்றும்
வேனில்வேள்கன்னியான்மாதர்நோக்கிவெய்துயிர்ப்புவீங்கத்
தானொளிமழுங்கித்தோன்றுந்தயங்குபொன்னுடிபோன்றும்
பானுமண்டலத்தின்செவ்விபனியினுல்மழுங்கிற்றன்றே. (கஉரு)

வாமமேகலையினுடுவளர்ந்தகாழகிலினிட்டந்
தாமவான்முகத்திற்றேய்த்துறைந்துவண்டரற்றியூதுந்
தாமரைகருகச்செய்யுந்தண்பனிக்கூற்றமாதர்
காமருமுகமுஞ்செய்யகமலமென்றணைதல்போலும். (கஉசா)

கையினுதலிற்கண்ணின்மெய்யினிற்கனலிசிந்து
மையனும்பனியின்றீயதன்மையையாற்றாதன்றே
வையமோரேழுமீன்றமங்கைவெம்முலைகணீங்கி
னுய்வரிதென்னப்புல்லியோருடலாயினனே. (கஉஎ)

[illegible]ரித்தபார்மகளைப்புல்லாதளிகெழுபதுமமேய
திருக்கிளர்முலையின்மாயோன்புல்லினனென்னச்சிறி
யுருக்கிளரிமையவேந்தவொண்டொடிகமலவீட்டைக்
கருக்கினன்போலும்வெய்யபனியெனுங்கனல்கள்வீசி. (கஉஅ)

இருள்வயிருர்ந்தபுக்தேட்கினமெனக்கமலப்போதைக்
கருகவெம்பனியாற்றியந்தகலைமதிதன்னைமீட்டு
மருவுமப்பனியேசெவ்விமறைத்ததால்மனத்தினேனு
மொருவருக்கின்னுசெய்யிற்றனக்கவையுறுவதன்றே. (கஉகூ)

இன்னவெந்துயரஞ்செய்யுமிரும்பனிப்பருவங்காலுங்
கன்னல்வென்றனையதீஞ்சொலாச்சியர்கழைகொளண்டோ
னன்னைசேவடிகள்போற்றியாற்றியவிரதமுற்றிப்
பின்னல்வெண்டிரைகள்சிந்திப்பெருகுநீர்யமுனையுற்றூர். (கங0)

விரைகமழ்கமலப்போதின்வேல்கிடந்தனையகண்ணு
ரரவமேகலையுந்தூசுமகன்கரைமருங்குசேர்த்தி
முருகவிழ்மலரின்மேயபறவைகளிரியமொய்த்துப்
பெருகுநீர்யமுனையாற்றிற்பெட்பொடுமினிதுபுக்கார். (கஙக)

கறைபொழிதிங்களன்னகதிர்முகவாயர்மாதர்
சுறவவார்குழையுந்தோடுஞ்சுடருமிழ்ந்திருளையோட்ட
வெறிகமழ்சுண்ணந்தோடுமென்றுவர்திமிர்ந்துமென்பூஞ்
சிறையளியோச்சித்தண்ணந்திம்புனலாடினாரோ. (௧௩௨)

ஓவியத்துறைகைவல்லோனெழுதொணாவுருவம்வாய்ந்த
தூவிமாமஞ்ஞையன்னார்தண்புனறோயுமேல்வைப்
பூவைபோல்வனப்புவாய்ந்தபூந்துழாயலங்கற்றோளான்
கோவியர்தூசுவாரிக்குருந்தின்மீதிவர்ந்தானன்றே. (௧௩௩)

உள்ளமுந்துகிலும்வௌவியுயர்குருந்திவர்ந்துதோன்றுங்
கள்ளவெஞ்சேலைநல்கென்றீர்த்தலுங்காயாமேனி
வள்ளனீள்கரையிலேறிவணங்கினோர்க்களிப்பனென்னா
தெள்விளிக்குழலின்வைத்ததீங்கனிப்பவளம்விண்டான் (௧௩௪)

ஒருகையாலல்குல்பொத்தியொளிமுகஞ்சிறிதுகோட்டிக்
கரையினிலிவர்ந்துமற்றக்கரமலர்குவிக்கின்றோருங்
குருமணியல்குன்மற்றோர்குடங்கையினடங்காதென்ன
வெருவொடுநாணிமீட்டும்விரிபுனற்படிகின்றோரும். (௧௩௫)

தாமரையிலைகடம்மாற்றாமரைத்தலங்கள்மூடிக்
காமனையனையசெவ்விக்கண்ணனைத்தொழுகின்றோருந்
தூமமென்கூந்தனீலவாடையின்மருங்குசுற்றிப்
பூமகள்கொழுநன்செய்யபூங்கழல்பணிகின்றோரும். (௧௩௬)

ஐதெழில்பரந்தவல்குலாள்வழ்க்கறுக்கும்வேற்கண்
மைதவழ்கூந்தனல்லார்மாதரைமயக்கியாசை
செய்திடுந்தூர்த்தசேலையருள்கெனச்செங்கைகூப்பி
வைய்துநின்றிரப்பமாயன்வண்டுகில்வழங்கினானே. (௧௩௭)

ஆவியந்துகில்கள்சுற்றியஞ்சனங்கண்ணிற்றீட்டிப்
பூவிரிகூந்தல்வாசப்புகையினிற்புலர்த்திவீக்கிக்
கோவைதாழ்முலையிற்செய்யகுங்குமத்தேய்வைகோட்டிக்
காவியங்கண்ணினார்கள்காமப்போர்க்கோலங்கொண்டார். ()

தாற்றிளங்கதலிக்கானிற்சந்தனச்சோலைதன்னிற்
கோற்றொடிசிலம்போடார்ப்பக்குவிமுலைதிளைப்பவல்கு
லூற்றிருந்தமிர்தங்காலமுகங்கள்வேர்வுறைப்பமாயன்
விற்றுவீற்றுருவாய்மாதரொவரொடுமேவினானே. (௧௩௯)

இன்னணமாயர்மாதரிளமுலைப்போகமாந்திக்
கன்னல்வென்றனையசொல்லார்கலன்கள்கைசெய்துநீங்கித்
தன்னமர்தோழரோடுநெடியொலிதழங்குகாட்டிற்
அன்னரும்விறல்கொள்மாயன்றொறுவினங்காக்குமேல்வை. ()

அழிகொடும்பசியால்நொந்தேமையவூணளித்தியென்ன
முழையாரைசுற்றுமாயர்தனித்தனிகேட்பக்கொண்டல்
விழைவொடுமகஞ்செய்கின்றார்வேதியராங்கணெய்தி
தழறுமவிசையர்பீர்தருகெனக்கேண்மினென்றான். (கசக)

என்றலுமறையோர்சாலையெய்தி வெண்சோறுகேட்ப
மன்றவம்மறையோர்சீறமற்றவர்மாதர்ஞானக்
குன்றினுக்கவிகடாமேகொணர்ந்தனரளிப்பவைப
நென்றியதோழரோடுமுவந்தினிதருந்தினனே. (கசஉ)

அருமகப்புருடனந்தவவியினையயின்றவாற்று
லுருகெழுதியினாட்டும்பேற்றினுமொன்றுநூறாய்
மருவிநற்பலன்வந்தெய்தமாதர்தங்கேள்வரோடுந்
தெரிவருமுத்திவீட்டிற்சிறப்பின்வீற்றிருந்தாரன்றே. (கசங)

அரக்கினையூட்டிச்செய்யவமுதினைத்தீற்றியன்ன
முருக்கிதழிந்திராணிமுலைமுகந்திளைப்பவீங்குந்
திருத்துயில்மார்பன்பூசைசெய்திடாநந்தகோபன்
விருப்பொடும்பண்ணிகாரம்வேண்டுபவியற்றினனே. (கசச)

ஐயநீயாரைப்பூசையாற்றுவான்றுணிந்ததென்னச்
செய்யதாமரைக்கண்மாயன்செப்பலுநந்தகோபன்
மையவாங்குவளையுண்கட்புலோமிசைமணாளன்றன்னை
வெய்யதீவினைகளீங்கப்போற்றுவன்விழைவினென்றான். கசரு

வேறு..

கோவர்த்தனகிரியைத்தழைவளருங்குளிர்கானை
மேவிச்செயிரறுபூசனைபுரிவீருயர்விண்ணிற்
றேவுக்கருளொடுபூசனைசெய்யாதொழிவீரொன்
றாவிக்குறுமுயிராகியவையனுரைசெய்தான். (கசசு)

ஐயனுரைசெய்யாமுனமாயர்க்கொருதிலக
னெய்யின்கடல்கருணைக்குவைநெகிழாவடிதயிர்பால்
வெய்தாகியவடிசிற்குவைவெளிமூடநிறைத்துச்
செய்தான்மணிவண்ணன்றனிமகிழத்திகழ்பூசை. (கசஎ)

கண்ணன்றிகழ்கோவர்த்தனகிரியின்கவினெய்தித்
தண்ணந்தயிரடிசிற்குவைமுழுதுந்தனிவாரி
யுண்ணுந்திறனுணராவிழிசிவவாவுடன்வெகுளா
விண்ணந்தனியாள்வானுயர்முகிலேழும்விடுத்தான். (கசஅ)

காரேழுமெழுந்தோரொழுகடல்வற்றமுகந்தாங்
கோர்தாரைநல்லயிராவணமுயர்நீள்கரமொப்ப
வாராவுமிழ்தலுமாணிரைதுயராதனிநுளவோன்
பேராவுயர்கோவர்த்தனங்கொடையாமெனப்பிடித்தான். ()

ஓரேழ்தினமிவ்வாறதிர்மழைபெய்தலுமிளிருங்
கார்மேனியன்வரையைக்குடைகவியாகிரைகாப்பப்
பார்மேல்மகவான்வந்துயர்பனிவான்புனலாட்டிச்
சீரார்பெயர்கோவிந்தனெனச்செப்பியகன்றான். (௧௫0)

இவ்வாறெழுகுறுநாளினிலீராறுறுதிதியின்
வவ்வாவுயர்நந்தற்கொடுவருணனுழைச்செல்லும்
வெவ்வாளசுரேசன்கையின்விடுவித்துயர்மழையு
மொவ்வாதருள்கொடைநந்தனையுயர்கோகுலமுய்த்தான் (௧௫௧)

நந்தன்முதலியவண்டர்நயப்புற்றுளமகிழ
மந்தாரவனஞ்சூழ்தருவைகுண்டமனைத்துங்
கந்தார்களிறுரைசெப்திடுகண்ணன்றனிகாட்டி
வெந்தீவினைசெயுமாயையின்மீட்டுந்தனிமறைத்தான். (௧௫௨)

தேமாநனைகொழுநுத்திரிசெங்கட்குயில்களியாக்
காமாவெனவொழியாமலரற்றுங்கடிகானிற்
பூமாதவிசினின்மேவியபொன்னங்கொடிகொழுநன்
பாமாண்படுமிசைவேய்ங்குழல்பயில்வானினிதுற்றான். (௧௫௩)

கஞ்சங்கழைசெங்காலிகருங்காலிதழைக்குஞ்
செஞ்சந்தனமெனுமைந்தினினிதென்றுரைசெய்பு
மஞ்சாரடவியினுற்றிசைவளிதைவரலின்றி
விஞ்சுஞ்சமதலமுற்றுயர்வேயின்முதறுணியா. (௧௫௪)

ஓராண்டிடையிட்டேவளைவூனம்புரைதிருக
லாராய்ந்திருபதுமேல்விரனீளத்துறுமளவாய்ச்
சேரும்விரலொருநாலரைதிகழ்சுற்றுளவாக
வீருங்குழல்கஞ்சத்தினிடவாய்வெளியடையா. (௧௫௫)

இருமேல்விரலிடவாயினில்விட்டோர்துளையிட்டேழ்
விரல்விட்டெழுதுளையிட்டவைமேல்முத்திரையீரு
வுரைபெற்றிடுதுளையெட்டினுமொன்பான்விரனீக்கிப்
புரையற்றிடவிருமேல்விரல்வளைவாய்முனம்போக்கி. (௧௫௬)

அருமாமறைவிளையாட்டயர்திருநாவுடையைய
னொருநாண்முழுதுள்ளத்திடையுன்னித்தனிசெய்யாத்
தருவேய்ங்குழறனைநீளுமித்தடவுங்கையினேந்தி
கருமாமுகிலுலகம்பொதிகனிவாயிதழ்வைத்தான். (௧௫௭)

இடக்கைப்பெருவிரலுஞ்சிறுவிரலுமெழில்வலப்பாற்
றடக்கைப்பெருவிரலும்மிவைதவிரச்செறிவிரலா
லடைத்துத்திறந்தியலேழிசையமிர்தந்துளைதோறு [தான்
முடைத்துப்பெருக்கெடுத் தோடிடவொலிவேய்ங்குழலிசைத்

வேறு.

திருவேயன்னார்வேயிசைநத்தஞ்செவியோரா
முருகார்சந்தச்சேறணிபொம்மன்முலைதாங்கி
மருகாநிற்குநுண்ணிடையந்தோவிறுமென்ன
விருதாள்பற்றிநூபுரமார்ப்பவெதிர்புக்கார். (கருசு)

நாணுந்தாசுமாமையுமெய்தாநலனும்பொற்
பூணும்நெஞ்சும்பொற்புடையாவுங்குழலூதும்
யாணர்ப்பைந்தாரண்ணலையுள்ளத்திடைமெச்சிக்
காணுந்தெய்வக்கையுறைநல்கிக்கவலுற்றார். (கசு0)

வேயாலாவின்பின்றுடர்செங்கண்விடைமீட்கும்
காயாமேனிக்கண்ணனுமம்மென்முலைதாங்கித்
தேயாநிற்குஞ்சிற்றிடையார்தஞ்செயனோக்கி
மாயாவேடத்தெண்ணரிதாகும்வடிவுற்றான். (கசுக)

மாதவியந்தண்சோலையில்மன்றற்புளினத்திற்
றாதவிழ்முல்லைப்பந்தரின்வெற்பிற்றனியெய்தி
வேதமுமின்னங்கண்டறியாதோன்வெளிநின்றே
போதரியுண்கட்கோவியரோடும்புணர்குற்றான். (கசுஉ)

இன்னணமின்சொற்கோவியரோடுமினிதாடிப்
பொன்னவிராழிக்கன்னவிறிண்டோட்புயல்வண்ண
னன்னநிகர்க்குமிராதையெனும்பெண்ணமுதோடு
மன்னியிமைப்பிற்பூமலிகாவின்மறைவுற்றான். (கசுந)

ஐயனொளிப்பக்காணலராய்நின்றலர்கொங்கைத்
தொய்யிலழிப்பக்கண்ணினைமாரித்துளிதாங்க
மையன்மனத்தோடின்னமுதன்னார்வனமெங்கு
மெய்தினர்காணார்மாழ்கியுயிர்த்திங்கிவைசெய்வார். (கசுச)

பூதனையென்றோர்பேதையைவைத்துப்புயல்மேனி
மாதவனாகச்சென்றுமுலைக்கண்வாய்வைப்ப
நூதியகொன்றைத்தண்குழல்வாய்வைத்துழல்கிற்பா
ரோதமில்கோலங்கொண்டுகுருந்தினிவர்கிற்பார். (கசுரு)

ஐயனிழைத்தவைபாவையுமிம்முறையநல்லார்
செய்துவிருப்பொடுசென்னெறிதேடிச்செல்போதின்
வையமளந்துயர்கங்கையினடியமலர்வைப்புந்
தையலிராதையடிச்சுவடுந்தங்கண்ணுற்றார். (கசுசு)

அங்கவர்செய்யவடிச்சுவடொற்றினர்செல்போழ்தின்
மங்கைபதக்குறிகண்டிலர்மாயன்மலர்ப்பாதச்
சங்கொடுசக்கரரேகையமுந்தறனைக்காணா
விங்கவட்ன்னையெடுத்தனனேனவெண்ணுற்றார். (கசுஎ)

தேடிவிருப்பொடுமங்கையரந்நெறிசெல்போழ்தி
னேடவிழ்நாண்மலர்கைவளையுக்கவிடங்காணு
ஆடல்திருத்தியிதம்பலசொல்லியுவப்போடுங்
கூடினனிவ்வழியென்றுநினைந்துகுழைந்தாரால். (௧௬அ)

ஆயிடைசென்றவர்நின்றதலத்தினணித்தாக
மாயன்விடுத்தயலேகவிராதைவருந்தோடுஞ்
சேயரிமைக்கணிறைத்திடநின்றதிறங்காணு
வேயினரங்கவணின்றுழிமங்கையரெல்லோரும் (௧௬௬)

வேறு.

எய்துமங்கையரிராதையைநோக்கி
வையமுற்றுமுன்னளந்தமலர்த்தா
ளையனெங்குளனறைந்திடுகென்ன
நையநெஞ்சமொடுநாணியுரைப்பாள். (௧௭0)

முன்னர்நுங்களைமுயங்கிவிடுத்து
பின்னரொன்னுடியர்பெட்புளர்போல
மன்னியுள்ளுயிராவவ்வியகள்வ
னென்னையுந்தனிதுறந்தனனென்றாள். (௧௭௧)

என்றுகூறுதலுமங்கையர்யாருங்
கன்றுகாமவனனின்றுகனற்ற
வென்றிவேள்கணைவருத்தமெலிந்து
பொன்றினாரினுயிர்போகியயர்ந்தார். (௧௭௨)

மாரிகற்குமதுமாலைமிலைச்சுங்
கார்கொளோதியினர்கையறவெய்திச்
சோர்தல்கண்டுதுயர்கொண்டவர்கண்முன்
வேரியந்துளவமால்வெளிநின்றான். (௧௭௩)

பருதிகண்டுமலர்பங்கயமோத்து
முரவுநீர்சுவறவுண்டெழுதண்கார்
வரவெதிர்ந்தகளிமாமயில்போன்றுங்
கரியமால்வரவுகண்டுகளித்தார். (௧௭௪)

வேறு.

வெண்ணிலாக்கதிர்கள்பாயவிரிமணற்குன்றுதோறுந்
தண்மலர்ப்பந்தல்தோறுஞ்சண்பகக்காடுதோறும்
பெண்ணையங்குரும்பையன்னபேரிளமுலையிற்புல்லி
கண்ணனன்மடவாரோடுந்தனித்தனிகலந்திட்டானே. (௧௭௫)

சிலருறும்புலவிநீங்கப்பணிந்திடுஞ்சிலரையன்பிற்
கலவியின்மகிழ்ச்சிசெய்புஞ்சிலர்குழல்கைசெய்தேர்ந்து
முலையினிற்றொய்யில்தீட்டுஞ்சிலரொடுமுகமன்கூறி
யொலிபடுநரம்புவீக்கித்திவ்வியாழுளருமன்றே. (௧௭௬)

ஊரவுநீர்த்தடத்தினொடுஞ்சிலரொடுஞ்சிலரோடொன்றிக்
குரவைகோத்தினிதினொடுஞ்சிலரொடுங்குளிர்பூங்காவின்
விரிமணல்வண்டற்பாவைக்கணிந்திட விளைமென்போது
தெரிதருஞ்சிலரோடொன்றிச்சிலம்பெதிர்கூவுமன்றே. (௧௭௭)

இன்னணங்கங்குன்மேவுமெரிகதிர்ப்பருதிமான்றேர்
ஆன்னிடுங்காறுமாடித்தொறுவர்தம்மகளிரோடுங்
கன்னவில்முழவுத்திண்டோட்கருமுகில்வண்ணத்தண்ணல்
பன்னருஞ்சிறப்பினாயர்பாடியினெய்தினானே. (௧௭௮)

எய்தியவ்வாயர்பாடியினிதமர்ந்துறையுநாளிற்
றெய்வநீர்ப்பெருக்கருதசரச்சொதிதீரந்தன்னின்
மையணிமிடற்றுப்புத்தேள்விழாவணிவணங்கியேத்தக்
கொய்துழாய்முகுந்தனாயர்குழாத்தொடுமெய்தினானே. (௧௭௯)

இளம்பிறைக்கண்ணியண்ணலுவந்திடவெழிலிவண்ணன்
வளம்படுகருணையார்ந்தவான்சுவைக்குன்றமென்ன
விளங்குவெண்சோறுபெய்யாவானெய்பால்வெறுப்பவேந்தி
யிளந்தயிர்வரியசீர்த்தியங்கணர்க்கூட்டினானே. (௧௮௦)

நீறுபூத்தலர்ந்தமேனிநெற்றியங்கண்ணினெந்தை
சாறயர்மறுகினெய்தித்தாமரைத்தடங்கண்மாய
னோயிவர்ந்தையனெய்தத்தொழுதடியிறைஞ்சியேற்றி
வீறுயர்தம்முனோடும்விட்டகமதனிற்புக்கான். (௧௮௧)

கங்குலினந்தகோபன்கண்டுயில்புரியுமெல்லை
வெங்கண்வாளரவம்பற்றிவிழுங்கலுங்கண்ணன்காணாப்
பைங்கழற்றாளிற்றாக்கப்பைத்தபாம்புருவநீங்கி
மங்குல்வாயியக்கன்முன்னைவடிவுபெற்றியம்புமன்றே. (௧௮௨)

ஓரொருமுனிவர்முன்னமுரைத்தவெஞ்சாபந்தன்னாற்
கூரெயிற்றரவமாகிக்கிடந்தனன்குரிசிலுன்றன்
வார்கழல்திண்டப்பெற்றவன்மையால்முன்னமேய
வேர்கெழுமுருவம்பெற்றேனெனத்தொழுதேகினானே. (௧௮௩)

சாறொழிவழிநாளையன்றமரொடுந்தம்முனோடும்
வீறுயர்பாடியெய்திப்புலரியினாகண்மேய்ப்பா
னாறுபூந்துணரின்வீழ்ந்துநாகிளவண்டுபாடத்
தேறல்கொப்புளிக்குங்காவிற்சென்றினிதிருந்தானன்றே. ()

பொருதிரையமுனையாற்றங்கரையினிற்பூவைவண்ணன்
சரிகமபதனியென்னுந்தானத்திற்றோடுதொட்டு
விரல்வழியமுதஞ்சிந்தவேய்ங்குழல்மணிவாய்வைத்துக்
குரல்முதலாயவேழுபண்களுங்குறித்திட்டானே. (௧௮௫)

கொன்றையங்குழலினோதைகேட்டலுங்கொம்பரன்னார்
மன்றலங்கூந்தல்சோரவால்வளைவாய்விட்டார்ப்பப்
பொன்றிகழ்முலையினோர்காழ்மணிவடம்புதைப்பவோடிச்
சென்றிளமயிற்குழாம்போற்செல்வனைவளைந்துகொண்டார். ( )

ஆயிடைச்சங்கசூடனென்னுமோரவுணனெய்தித்
தீயனபுரிதனோக்கித்தாமரைச்செங்கண்மாயன்
வாய்வழிகுருதிகக்கக்குத்திமாய்த்தவன்கைவைகுங்
காயெரிமணியைவெளவிமுன்னவன்கையினீந்தான். (கஅள)

வங்கியவிஞ்சைவல்லோர்மணிக்கரம்விதிர்த்துநோக்கப்
பங்கயக்கண்ணன்மீட்டுங்குழலிசைப்பயிலுமேல்வைப்
பொங்குதேனசையின்மொய்க்கும்பொறிவரிவண்டுபோல
வங்கரவல்குனல்லாரனைவருஞ்சென்றுமொய்த்தார். (கஅஅ)

வண்டொலிசுருதியாகமணிமிடற்றிரங்குமோதைப்
பண்டருகானமாகப்பைந்தொடிசிலம்போடார்த்தல்
கொண்டதோர்முழவமாகக்குவிமுலைத்தரளந்தாக்கி
யண்டர்தமகளிர்காமநாடகமாடினாரே. (கஅகூ)

ஓவியமெழுதவொண்ணாப்பேரெழிலுருவம்வாய்ந்த
கோவியரோடுமின்புற்றின்னணங்கூடுமேல்வைச்
சேவினதுருவாயெய்துமவுணனைச்செங்கண்மாயன்
மேவுகோடிறுத்துவீழ்த்திவேற்றுடலாக்கினானே. (ககூ0)

கோவுருவெய்திவந்தவவுணனைச்செற்றகொற்றம்
யாவையுங்கஞ்சற்கோதியாழ்முனிக்கண்ணனென்போன்
றேவகிமைந்தன்மற்றோர்குழையினளுரோணிசெம்மல்
காவலநீமுன்செற்றகன்னிமற்றசோதையீன்றாள். (ககூக)

மைந்தரோரிருவர்தம்மைவாள்வசுதேவனஞ்சி
நந்தகோன்மனையினுய்த்தானெனமுனிநவிறல்கேட்டுச்
சிந்தையின்வெகுளிபொங்கமைத்துனன்றன்னைச்சீறி
வெந்திறற்கஞ்சனொள்வாட்டறுரீஇவிரைந்துசென்றான். (ககூஉ)

வளிதடவரினுங்கீதமிழற்றிடுமகதியாழோ
னளியொடுமிவனைக்கோறறகாதெனவிலக்கியந்தண்
டுளிமுகில்வண்ணனோடுந்தம்முனைதொலைக்குஞ்சூட்சி
நளிகடலவனிவேந்தேநாடுதிவிரைவினென்றான். (ககூங)

வெளிற்றறிவுடையதேர்ச்சித்துணைவரோடாய்ந்துவெய்ய
வுளைப்பரியுருவிற்கேசிகோகுலத்தொல்லையெய்தித்
துளிப்புயலனையமேனிக்கண்ணனைத்தொலைத்தியென்ன
வளைத்தலையரவிற்சீறிகஞ்சனாண்டறைதல்செய்தான். (ககூச)

கலினவாம்பரியாய்வெய்யகதழ்சினத்தவுணனோங்கு
மலைநடந்தென்னவேகிமாயன்முன்னதிர்ந்துசெல்ல
வலகைமென்முலைப்பாலுண்டோனாங்கவன்வாயிற்செங்கை
குலவுறநீட்டியன்னோனாருயிர்குறைத்திட்டானே. (௧௯௫)

கள்ளுநராகச்சில்லோர்சிலர்குழக்கன்றதாக
வெள்ளிடையெய்தியையன்மிகவிளையாடுங்காலை
யள்ளிலைவயிரப்பைம்பூண்மயன்மகன்வியோமனாயர்
பிள்ளைகளுருவாய்வஞ்சப்புணர்ப்பினிற்பிடிக்கவந்தான். ௧௯௬

எய்தியவவுணனீங்குநின்றசிற்றாயர்தம்மைக்
கைதவத்தெடுத்துப்போகிக்கன்முழையதனிற்சேர்த்தி
மைதவழ்பாறைதன்னாலடைத்தலுமாயனன்னோன்
பைதலுற்றிடவாய்மூக்குப்புதைத்துயிர்படுத்திட்டானே. ௧௯௭

அடைத்திடும்பாறைதன்னையணிவிரற்றலையிற்றாக்கி
யுடைத்துநீண்முழையில்வைகுந்தோழரையொல்லைமீட்டு
வடித்தநான்மறையுங்காணாமரகதக்கொண்டல்வண்ணன்
படிக்கொருதிலகமானபாடியிலெய்தினானே. (௧௯௮)

அஞ்சனக்கொண்டன்முன்னர்நாரதனணுகிவெய்ய
கஞ்சனைமூன்றுநாளிற்கடிந்துநீளுலகம்யாவு
முஞ்சிடவளிற்றியென்னவுரைத்துயராசிகூறி
விஞ்சையருலகந்தன்னில்விரைவொடும்போயினானே. (௧௯௯)

கேசியைவியோமன்றன்னைத்தொலைத்தவைகேட்டுக்கஞ்சன்
மாசுறுமனத்தனாகிமரகதவண்ணன்றன்னைத்
தேசுறுமிராமனோடுஞ்செகுத்திடுஞ்சூழ்ச்சியாவு
மேசுறுமதியிற்பல்காறனியிருந்தெண்ணினானே. (௨௦௦)

சாணூரன்முட்டிவெய்யசலன்கவுசலனைப்போரி
லாணாடுசிற்றத்துப்பிற்குவலையாபீடமாயச்
சேணாடர்போற்றும்யானைசெலுத்துபத்திரனைக்கூவிக்
கோணாகமனையகஞ்சன்றனியிருந்திதனைக்கூறும். (௨௦௧)

முருகுவாய்மடுத்துண்டாடிமூசிவண்டரற்றுந்தீந்தேன்
விரைகமழ்துளவத்தண்டார்க்கண்ணனைவெள்ளைமேனி
யொருகுழையொருவன்றன்னைமல்லினாலோடைநெற்றிப்
பொருமதக்கரடநால்வாய்ப்பொருப்பினாலொறுத்திரென்றான்.

அலைகடலவனிகாக்கும்யாதவர்மற்போர்காண்பான்
மலையுறழ்குடுமிமாடந்தனித்தனிவகுத்துவாய்ந்த
சிலைமகம்புரிவித்தெய்தும்விரரைச்சிறப்புச்செய்யாக்
கலைபயிலக்குரூரன்றனக்கிவைகழறலுற்றான். (௨௦௩)

கொல்சினத்தறுகண்வேகக்குஞ்சரமிடற்றும்போர்க்கு
மல்லடுபோர்க்குந்திங்கட்கூன்முதுகுரிஞ்சவான்றோய்
கல்செய்தோளிராமன்றானுங்கண்ணனும்வலியரென்று
றொல்லையினந்தகோனோடவரையீண்டுய்க்கவென்றான். (உ0ச)

கொய்யுளைப்புரவிநான்குபண்ணியகொடிஞ்சிமான்றே
ரொய்யெனுமளவிலேறிநந்தகோன்பாடியெய்திப்
பெய்முகில்கமலக்காடுபூத்தெனப்பிறங்குமேனி
யையனைவெள்ளைமேனியமலனையினிதுகண்டான். (உ0ரு)

பருகுவான்போலநோக்கிப்பங்கயமருட்டுஞ்செய்ய
விருபதங்கண்ணிலொற்றியிறைஞ்சலுமிராமனோடு
முருகவிழ்துளபமாயோனளவளாய்முகமன்கூறி
யுருகுபேரன்பிற்புல்லிப்போந்தமையுரைத்தல்செய்தான். ( )

அற்றைநாட்கழிந்தபின்றையஞ்சனக்கொண்டலன்னா
னொற்றைவெண்குழையோனோடுநந்தகோனோடுமோங்கு
வெற்றிவேலக்குரூரன்விரைசெலற்புரவிபூண்ட
பொற்றடந்தேரினேறிப்போகியதுடங்கினானே. (உ0எ)

அழுதலம்வந்துமாழ்குமாச்சியர்தன்னையையன்
குழைவுறக்கஞ்சனாவிக்குடித்திவண்வருவனென்னா
வுழுவலன்போடும்விள்ளாதொருவருக்கொருவனாகித்
தழுவினனிறுத்திவல்லேயமுனையங்கரையிற்சார்ந்தான். (உ0அ)

சார்தலுமக்குரூரன்றண்புனல்படியுமெல்லை
தேரினிற்புனலிற்கண்ணின்மனத்தினிற்றிசைகளெட்டி
னாரியன்றன்னைக்கண்ணுற்றற்புதநீரனாகி
யீர்மலர்தூவியையனிணையடியேத்தினானே. (உ0கூ)

பின்னுமத்தடந்தேரேறிநால்வரும்பெட்பினோடுங்
கன்னியம்புரிசைமுற்றிககவின்வளர்மதுரையென்னும்
பொன்னகர்க்கணித்தாய்மற்றோர்பூம்பொழின்மேவக்கண்ணின்
மன்னியவக்குரூரன்றன்னொடுமகிழ்ந்துசொல்வான். (உக0)

மன்னுழையாங்கணாளைவருதும்வேத்தவையினீபோய்த்
துன்னியவனைத்துஞ்சொல்கென்றுரைத்தலுமக்குரூரன்
கன்னவில்திரடோட்கஞ்சன்கடிநகர்விரைவினேகி
யின்னவையனைத்துங்கூறித்தன்னகர்க்கேகினானே. (உகக)

கூன்பிறைமுதுகுதேய்க்குங்குடுமியம்புரிசைசுற்றி
வான்றொடர்மாடமோங்குமதுரைமாநகரங்காண்பா
னூன்சுவைத்தொளிருநேமியொருவனும்வெள்ளைமேனித்
தேன்படுதாரினானுந்தொறுவரும்விரைந்துசென்றார். (உகஉ)

பாசிலைப்பதுமக்காடுபூத்தனபடிவத்தண்ணல்
தேசுகண்படுக்குஞ்செல்வத்திருநகர்நோக்குமேல்வைக்
காசுலாங்குவவுத்திண்டோட்கதிர்முடிக்கஞ்சன்சுற்றுந்
தூசுதூய்தாக்குவோன்வந்தெதிர்தலுமிதனைச்சொன்னான். ()

விழுமியதுகிலொன்றீதியென்றலும்வேந்தராடை
தழையரைச்சுற்றுமாயர்புனைந்திடத்தகைந்துகேட்டல்
பிழையெனவண்ணான்கூறவவன்றலைபிடுங்கியோரோ
ரிழையொருகோடிபெற்றதுகிலெலாமிடையற்கீய்ந்தான். ()

விலைவரம்பரியலாகாவெண்டுகில்மருங்கில்வீக்கிக்
கலைவலாரோதுமேல்வைக்கஞ்சனுக்கணிவோன்போந்து
நலனுறுகலன்கள்யாவுநன்கினிலணியச்செம்மாந்
துலைவிறன்னுருவமன்னோனுற்றிடவுதவினானே. (உகரு)

புதுக்கடிபொருந்தும்வண்டினுணறப்புதியதேறன்
மதுத்துளியருத்திப்புல்லுஞ்சுரும்புவீழ்மாலைகட்டு
முதுக்குறையுடையோன்போந்துமுருகவிழ்மாலைநல்க
விதிக்குமோர்விதியாமையன்வீட்டின்பமருளினானே. (உகசு)

ஐயிருகாதநாறியலைகடலதனிற்சிந்தின்
வெய்யவெம்புலவுமாற்றிவெறிகமழ்நறியசாந்தங்
கையகத்தேந்திக்கூனிகண்ணனுக்களித்தலோடுஞ்
செய்யசாந்தணிந்துமாயோன்மற்றிவைசெய்தானன்றே. (உகஎ)

பூங்கழல்விரல்கள்யாவும்புறவடியதனிற்சேர்த்தி
யாங்கவளணரிதன்னையண்ணல்செங்கையினேந்தி
வாங்கலுங்கூன்கண்மூன்றுநிமிர்ந்துவான்மகளிரோனுந்
தாங்கரும்படிவந்தாங்கித்தாக்கணங்கென்னநின்றாள். (உகஅ)

எழிலும்வெம்முலையுந்தாங்காதிடுகிடையணங்குநாணி
மழையெழில்கவிற்றுநம்பிவருகவென்மனையினென்னக்
கழைசுளிக்களிநல்யானைக்கஞ்சனைக்கொன்றுநாளை
விழைவினுன்மனையினெய்திமேவுவனென்றுபோனான். (உகசு)

வின்மகமியற்றுஞ்சாலைவிரைவினிலெய்தியாங்கண்
மன்னியசிலையைப்பற்றிவலிதினின்முறிப்பக்காக்குங்
கன்னவில்தோளார்வெம்போரோற்றலுங்கமலக்கண்ண
னன்னவராவிகூற்றுக்களித்தவணகன்றுபோனான். (உஉ0)

எயிற்புறந்தன்னினந்தணிறுத்தபூங்காவிலையன்
வெயிற்கதிருமிழும்பைம்பூணிராமனோடெய்தவேந்தன்
செயிர்ப்பொடுமினையவெல்லாஞ்செவித்தலைபுதையக்கேளா
வுயிர்த்திருள்கழியுங்காறுந்துயிலின்றிவெருட்சியுற்றான். (உஉக)

அந்தவெற்படைந்தவெய்யோனுதயவெற்பணுகலோடு
முத்தவெண்குடையினிழல்முகிழ்முலைமகளிர்செய்ய
கைத்தலந்தேந்துபைம்பொற்கவரிகாலசைப்பக்கஞ்சன்
விந்தகர்வயவர்சூழவேந்தவையெய்தினானே. (௨௨௨)

மதுகையோடொன்னார்தம்மைவாளமரமுவந்தன்னின்
முதுகுகண்டன்றிமீளாமுழுவலித்துயின்றதிண்டோ
ளெதுகுலமன்னர்யாருமற்றொழில்காண்பானெய்திக்
கதிர்மணித்தவிசுதோறுங்கவின்பெறவிருந்தாரன்றே. (௨௨௩)

உலம்பொருதுயர்ந்ததிண்டோண்முட்டிகனுயர்சாணூரன்
சலன்றிறற்கூடன்சாற்றுங்கவுசலன்முதலாமல்ல
ரிலங்குமெய்முழுதுஞ்செம்மண்டுகளிறைத்தினிதினாடிப்
பொலங்கிரிகாலினொடும்புகுந்தெனவவையிற்புக்கார். (௨௨௪)

நந்தகோன்றன்னையீண்டுத்தருகெனநவிலத்தூதர்
சிந்தையின்விரைவினேகிநின்னுடைச்சிறுவரோடும்
வந்திடுகென்னப்போந்துகஞ்சனைவணங்கிநிற்ப
விந்திரதிருவன்கண்ணாலிருக்கெனவிருந்தானன்றே. (௨௨௫)

உவரிநீர்வண்ணன்வெள்ளையோர்குழையொருவனொடு
மவையினிலெய்தவேந்தன்கடைத்தலையணுகுமெல்லை
யிவர்வுறுபத்திரன்றன்பெருவிரலிணையிற்றூண்டிக்
குவலையாபீடமென்னுங்குஞ்சரமேவினானே. (௨௨௬)

கோலிவெங்களிறுகுத்தக்கோட்டிடையொளித்துநான்கு
காலிடைக்கரந்துவவ்வுங்கரத்திடைமறிந்துமுன்போ
மோலொடும்வெருவிபோடமத்தகமுடையக்குத்தி
வாலினைப்பற்றிநூறுவிற்கடைவலித்திட்டானே. (௨௨௭)

வாளுகிர்த்தலையான்முன்னமிரணியன்மருமம்போழ்ந்த
கோளரியென்னச்சீறிக்குஞ்சரம்வெருவத்தாக்கி
நீளிருந்தடக்கைபற்றிநிலத்திடைவீழ்த்தியம்பொற்
றாளினான்மிதித்தோர்கோட்டைத்தடக்கையாற்பிடுங்கினானே.()

பறித்தவெங்கோடுதன்னாற்பத்திரன்சென்னிமூளை
தெறித்திடவடித்துநெய்த்தோர்மெய்ம்முழுதொழுகிச்சேப்ப
முறித்தவெங்கோடுதன்னைமுழுவலித்தோளின்வைத்து
நறைத்துழாயலங்கன்மார்பன்வேந்தவைநண்ணினானே (௨௨௯)

மற்றைவெங்கோடுதொட்டுமல்லலம்புயத்திற்சேர்த்தி
யொற்றையங்குழையோன்வானினோங்குயர்வெள்ளிவெற்பைச்
சுற்றியமுகிலினீணுண்டுகிலொளிசிறப்பநோக்கும்
பற்றலர்வயிற்றில்வெந்தீப்படர்தரவவையிற்புக்கான். (௨௩0)

அற்றமில்வலியின்மிக்கமுட்டிகனடற்சாணூர
னொற்றையங்குழையினானைக்கண்ணனையுருத்துநும்மை
மற்றொழில்வல்லனென்பார்வல்லிரேல்வருதிரென்னப் [னார்.
பொற்றடந்திணிதோள்கொட்டிக் கனன்றுவாய்புகையச்சொன்

என்றவர்கூறமைந்தரிருவரும்வெகுண்டுசீறிக்
குன்றொடுகுன்றந்தாக்கிக்கொடுஞ்சமம்புரிவதேபோல்
வன்றிறன்மையவர்கூற்றமற்றொழிற்கல்விகாட்டி
வென்றிவேலரசர்செங்கைவிதிர்ப்பவெம்பூசல்செய்தார். ()

பொருந்துசாணூரனென்னும்பொருப்பினைத்தூசுவாரிக்
குருந்தின்மேலிவர்ந்தகொண்டலாருயிர்குடித்தானாகத்
திருந்தலர்க்குருமேறன்னமுட்டிகன்றன்னைச்சீறி
யருந்திறலோடும்வெம்போரலாயுதன்கொன்றுவீழ்த்தான். ()

கல்லெனத்திரண்டதிண்டோட்கவுசிகன்றன்னைமற்றைக்
கொல்லியவந்தகூற்றமன்னவெங்கூடன்றன்னை
மல்லினாற்கண்ணன்கொல்லமல்லமர்க்கிணையின்றென்னச்
சொல்லியசலனைவெள்ளைமேனியன்றொலைத்திட்டானே(உ௩௪)

ஆங்கவையினிதுநோக்குமுக்கிரசேனனாதி
வாங்குவில்விழுங்குதிண்டோண்மன்னவரெவரும்பைம்பொற்
பூங்கழற்குமரர்தம்மைப்புகழ்தலுங்கஞ்சனென்னுந்
தீங்குறுமனத்தன்வெம்பிக்கண்ணிணைசேப்பச்சொல்வான். ()

நந்தனைவல்லிபெய்தச்சிறுவர்மேனண்புகூர்ந்த
தந்தையைச்சிறையினுய்த்ததேவகிதலைவனாவி
யுய்ந்திடாதொறுக்கமற்றையரசர்வாழ்வொழிக்கவிந்த
மைந்துடைச்சிறுவர்தம்மைவாளின்வாயிடுகவென்றான்(உ௩௬)

என்றவனுரைத்தலோடுமெரியெழவிழித்துநோக்கி
மன்றலந்துளவத்தண்டார்துயல்வரும்வயிரத்தோளான்
பொன்றவழ்குடுமிநெற்றிப்போதுதாழ்மஞ்சமீதிற்
குன்றின்மேலிவருஞ்சிங்கக்குருளையிற்குப்புற்றானே. (உ௩௭)

கோட்புலியுரிவைபோர்த்தகேட்கமேந்திக்கொட்பின்
வாட்படைதடறுநீக்கிவாய்மடித்தெயிறுதின்று
சேட்டிளம்பருதிநேமிச்சிறுவபோர்க்கஞ்சலென்னத்
தாட்டுணைபெயர்த்துவிண்ணிற்சாரிகைதிரியலுற்றான். (உ௩அ)

உறைகழித்தெரியும்வைவாள்விலக்கிவன்கிடுகினுள்புக்
கெழுவலிக்கலுழன்புற்றினிடைச்சிறையொடுக்கியெய்திக்
கறையணாம்பாந்தடன்னைக்கௌவியதென்னப்பற்றி
மறைகழலவனிவேந்தைநிலத்தில்வீழ்த்தாவியுண்டான்(உ௩௯)

விண்ணுறையமரரோடும்வேதமுமின்னுங்காணாக்
கண்ணனைக்கண்ணிற்கண்டுங்கையினாற்றீண்டப்பெற்று
முண்ணிறைவொடுங்கவாவியுலத்தலாற்கஞ்சனென்போ
னண்ணாறனுருவமாகியமருலகெய்தினானே. (உச0)

கம்பமால்யானையன்னவொன்னலர்ச்செருக்ககஞ்சன்
றம்பியரொண்மார்சீறித்தானைவாள்விதிர்த்துச்செல்ல
நம்பியைவிலக்கிவெள்ளைமேனியோனகைத்துச்சீறி
வெம்புவெங்கோட்டாலன்னோராருயிர்வீட்டினானே. (உசக)

பூமழைபொழிந்தார்வானோர்புரந்தரன்கமலப்புத்தேள்
தாமரைக்கண்ணன்செய்யதாள்பணிந்தேத்தலுற்றார்
காமர்வண்டறையுந்தண்டார்க்கஞ்சனுக்கண்ணலெய்தி
யீமநற்கருமம்யாவுநன்கினிலியற்றினானே. (உசஉ)

தந்தையைத்தாயினோடுந்தளைபடுசிறையினீக்கிப்
பைந்துழாய்மார்பன்வெள்ளைமேனியோன்பணிந்துபோற்ற
மைந்தனைத்தழுவியுச்சிமோந்துகண்மழைநீராட்டி
யந்தமிலுவகையோடுமகங்களிப்புற்றாரன்றே. (உசங)

அலங்கல்வேற்கஞ்சன்றன்னையினிதினிலளித்தவெற்றி
யுலம்பொருதுயர்ந்ததிண்டோளுக்கிரசேனன்றன்னைப்
புலம்புறுகாவனீக்கியாதவர்பணிந்துபோற்ற
வலங்கெழுதிகிரிமாயோன்மணிமுடிசூட்டினானே. (உசச)

எதுகுலக்கிறைவனாகவுக்கிரசேனனென்று
மதுகைவேலரசற்கம்பொன்மணிமுடிபுனைந்தபின்னர்ச்
சிதைவறுகளிகொள்கேள்விக்கிறல்வசுதேவன்றன்னை
விதிமுறையமைச்சனாகவிழுமிதினிருத்தினானே. (உசரு)

கண்ணனவதரித்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—எஎஎ.

முப்பதாவது

கண்ணன்மணம்புணர்ந்தவத்தியாயம்.

இன்னணம்புரிந்தபின்னரெய்தியங்கிராமனும்
கன்னல்வில்லொளித்துநின்றகாமனன்னகாளையும்
பொன்னுமுத்துமணியுமோர்பொருப்பினல்கிமகிழ்வுறு
மன்னுநந்தகோனையன்பின்வந்துபுல்லினாரரோ. (க)

இந்திரற்குமளகைமேவுமிறைவனுக்குமெய்தொணா
வந்தமற்றநன்சிறப்புவப்பினோடுமருள்செயா
நந்தகோனையாயர்பாடிநண்ணுகென்னவிடையளித்
துந்துதெண்டிரைப்புறத்துறங்குமண்ணலுறையுநாள். (உ)

ஞானமிக்குறும்வெள்ளைமேனியண்ணலுக்குமாசர்கோன்
மெய்யுணர்ந்தகார்க்கமாமுனிவனால்விருப்பொடு
மையிலொண்பதிறைறிரித்தமும்மைநூல்வனைந்துபின்
செய்யநின்றகருமநன்குசெய்துமுற்றினனரோ. (௩)

மாசிலாதவெள்ளைமேனிவள்ளலோடுகண்ணனுங்
காசிமாநகர்க்கணிற்கலந்துசாந்திப்னியொடு
மாசிலாதமுனிவனோடுமாறுபத்துநான்கென
பேசில்வித்தையாறுபத்துநான்குநாளிலெய்தினார். (௪)

மதலைமைந்தாளவில்செம்பொன்மாமுனிக்களித்தலு
முதலைவெவ்வவாரியின்கண்முன்னிறந்துபோனவென்
புதல்வனுய்ந்துவரவளிப்பினதுகொல்கோடிபொன்னென
விதலையுற்றுரைப்பமைந்தர்விரைவின்வாரியெய்தினார். (௫)

இடங்கர்வெளவுகுருவின்மைந்தனெய்தநீயளிக்கென
மடங்கலன்னகண்ணனெய்திவருணனோடுரைத்தலுந்
தொடர்ந்துபஞ்சசன்னியன்கொணர்ந்தனன்றொலைக்கென
வடைந்துவாரியெய்தும்வெய்யவவுணனெஞ்சுகிண்டனன். (௬)

அங்கவன்றனுடல்பிளந்தணைந்துநெஞ்சின்வைகிய
சங்கெடுத்துமறலியூர்தனிற்புகுந்துதாமரைச்
செங்கண்மாயனூதவஞ்சிமறலிகொண்டசிறுவனை
மங்குல்போலுநீலமேனிவள்ளல்கையினல்கினான். (௭)

மைந்தனைக்கொணர்ந்துவள்ளல்குருவினுக்குநல்குறு
வந்தமற்றதிதியினோடருஞ்சிறப்பளித்தபின்
கொந்துமொய்த்தகண்டலைக்குழாமுடுத்தமதுரையி
னந்தகோபனாயினையொத்தநாதனன்பினெய்தினான். (௮)

வேறு.

அந்நகர்தன்னிலடைந்திடுமண்ணல்
தன்னமர்தாயொடுதந்தையையேத்தி
மன்னியவுத்தமன்வாண்முகநோக்கி
நன்னயமோடிவையன்பினவின்றான். (௯)

அன்னையசோதையைநந்தனையன்பின்
மன்னியகோபியமங்கையர்தம்மை
யின்னலுறுவகைதேற்றியினமப்பிற்
றுன்னிதிரென்றுணாசொல்லிவிடுத்தான். (௧௦)

நந்தனிருக்கையினுக்கவனண்ணிச்
சிந்தையுநேலுயர்தேவகிமைந்தன்
வந்திடுமென்னவகுத்துரைகூற
வந்தமில்பேரெழிலாச்சியர்சொல்வார். (௧௧)

மாடமுடுத்தொளிர்மாமதுரைக்கண்
ணோடரிமைக்கணுருப்பசியன்று
ராடல்நயந்தவனாச்சியர்கொங்கை
தேடுவனோவெனநின்றுதிகைத்தார். (கஉ)

இத்தகையானவிகூறியிரங்கு
மைத்தவமோதியர்மம்மரொழித்தி
டுத்தவன்வாழ்மதுரைப்பதியுற்றே
வித்தகனோடயல்மேவிபுரைந்தான். (கங)

உலகமளந்தவனுத்தவனோடு
விலவிதழ்வெம்முலையேந்தெழிலுண்கட்
கலையிறவோங்கியகைவளரல்கு
னலனுறுகூனிதனில்லினடந்தான். (கச)

அகன்மனையெய்தியவையனணங்கின்
முகிழிளவெம்முலைமார்பிடைமூழ்கத்
துகிர்படுமெல்லிதழ்துய்த்தகில்வாசப்
புகைதவழ்மெல்லணைமீதுபுணர்ந்தான். (கரு)

வேறு.

என்னைநாளுமின்னண, மன்னிவாழ்வுசெய்கென
வன்னநேர்ந்திட்டையனு, நன்னர்மாடநண்ணினான். (ககூ)

ஓர்குழைபொருத்தனுங், கார்நிறத்தகண்ணனு
மார்வவக்குரூரனோ, டூரமுற்றியம்புவார். (கஎ)

தருமனோடுதம்பியர்க், குரிமையெய்தவோதெனாத்
திருதராட்டிரன்னுழைப், பொருவிறாதுபோக்கினார். (கஅ)

பொருவிலத்தினாபுரம், வினாவின்மேவிவென்றிசால்
திருதராட்டிரன்றனக், குணைசெயாவுமோதினான். (ககூ)

அறத்தின்மைந்தனாதியோர், திறத்தினன்புசெய்கென
வுறுத்திநூற்றுவர்க்குளக், குறிப்பினோடுகூறினான். (உ0)

அண்ணலக்குரூரன்மீண், டுண்ணிறைந்தவுவகையா
லெண்ணிமுற்றுமிவையெலாங், கண்ணனோடுகழறினான். (உக)

வேறு.

இன்னவாறெழுகுநாளிடைக்கஞ்சனதில்லின்வாழ்
மின்னினாரிருவர்தங்கைதனிலவையின்மேவுறு
வன்னைசேவடியின்வீழ்ந்துபர்கஞ்சனையாழியான்
மன்னுமாருயிர்குறைத்தவையாவும்வழங்கினார். (உஉ)

அழுதுநின்றிவையுரைத்தவணங்கனையார்தமைத்
தழுவியன்பினுடன்கொடுபோயவர்தங்கைபாற்

ெருமுதுறைத்தலும்வெகுண்டிருகண்ணழலுண்டிட
வெழுகனம்படையொடப்புனைதேர்மிசையேறினான். (௨௩)

வென்றிகூர்ச்சராசந்தனுமடல்வேலினா
னொன்றுசேனையிருபானொடுமூன்றக்குரோணியு
மன்றல்மாடமதுராபுரியிஞ்சிவளைத்தலுங்
கன்றுநெஞ்சமொடுயாதவர்சிந்தைகலங்கினார். (௨௪)

கலங்கலிலெனவண்டுளவோனெதிர்கைகவித்
தலங்கல்வேலுடையலாயுதனோடெழுகாலையிற்
பொலங்கொள்வானினிடைநின்றிருதேரெதிர்போதலு
மிலங்குமைம்படையோடெய்தியதேர்மிசையேறினான். (௨௫)

ஏறினார்களிருபானொடுமூன்றக்குரோணியு
மாறினார்குருதியாறெழயாவுநுறுக்கினார்
சீறினாரெதிர்சராசந்தன்றோளினைசிக்கயார்த்
தாறினாருடன்விடுத்தகன்மாநகரெய்தினார். (௨௬)

இன்னவாறுப்பதினேழ்முறையாடமரோற்றலு
மன்னுபோர்வயவர்தேர்பரியானைமறித்திடத்
துன்னுவெங்குருதிவெண்ணிணமூளைசொரிந்திடக்
கன்னியந்துளவமாலிருகட்கடைசேந்தவே. (௨௭)

வேறு.

வென்வேற்காளைசராசந்தன்விளாவினோடிக்கிரிவிரசந்
தன்னிற்புகுதமிகத்துரந்துதண்டாமரையாள்புணர்மார்பன்
கன்னிக்கமுகுசூன்மிடற்றிற்கயவாய்வாளைக்கன்றுகளுஞ்
செந்நெற்கழனிசூழ்கிடந்தமதுராநகரிற்சென்றடைந்தான். ()

கூந்தற்கமுகினிடைசாய்ந்த கொம்மைக்குடக்காய் முடத்தெங்கிற், பாய்ந்துகடுவன்மந்தியொடுதுயில்கூர்மதுரைப்பதியதனி, லேந்தலின்புற்றிருக்குநாளிசைதேர்மகதியாழ்முனிவன், போந்துகாலவயவனெனும் புலிப்போத்தனையா னெடும்புகல்வான். (௨௯)

தேன்றோய்பவளச்செங்கனிவாய்த்தொறுவர்மகளிர்நலந்திளைத்த, வூன்றோய்திகிரிப்படைக்கண்ணனுடற்றும்வெம்போர்ச்சராசந்தன், மான்றேர்ப்படையாலழிந்தனனீ மலையினாற்றானெனமகிழ்ந்து, மூன்றுகோடிபடையொடும்போய்மதுராநகரமுற்றினான். (௩0)

கன்னிப்புரிசைமதுராநகர்வளைந்தகாலவயவனொடுங், துன்னிச்சமரோற்றிடவெய்தித் துலங்குவடிவேற்சராசந்த, னின்னேயெய்தியதுகுலத்துக்கிறைவர்தம்மைக்கைப்படுத்து, கொன்னேயிசற்குறுபலியாய்க் கொடுப்பனெனமாலிவைசெய்தான்.

முகிலிற்கரியமணிவண்ணன்மயனால்முழங்குகடலகட்டி
ணகலமீராறியோசனைத்தாய்நிகழ்த்துநீளமந்துணைத்தாய்ப்
பகலோன்காப்பவெயிலெறிக்கும்பைம்பொன்மாடமறுகுடுத்த
நகரமொன்றுதுவரையெனும்பெயரானன்கினமைப்பித்தான். ( )

சிந்தாமணியுமிருநிதியுஞ்சிறந்தசுதன்மைமண்டபமுங்
கொந்தார்சினையவைந்தருவுந்துவரைநகரிற்குடியிருப்பத்
தந்தான்குலிசன்மாயையினால்மாயன்மதுரைதனிலமரு
மந்தாரரசருணராமற்றுவரையதனிலமர்வித்தான். (௩௩)

இமையாக்கருங்கண்மயிலாலவண்டுஞ்சுரும்புமிசைபாடக்
குமரியன்னமுகையவிழ்ந்தகொழுந்தாமரையினரசிருக்குந்
தமரத்திரைக்குண்டகழுடுத்தமதுரைகாக்கத்தாமரைக்க
ணமலன்வெள்ளைமேனியனைவைத்தாங்கமரேற்றெழுந்தனனால்.

காலவயவனுடற்றுசமர்க்காற்றான்போலக்கருந்துளவ
மாலோன்மான்றேரிழிந்தோடிமலையின்முழையிற்கண்டுயிலு
ஞாலம்புகழுமுசுகுந்தன்பின்போயொளிப்பநனிதுடர்ந்து
சாலுமுழையினிடைபுகுந்துதுயிலுமரசன்றனையுதைத்தான். ( )

ஆலக்கருஞ்சேறமுதினுகரண்ணல்விழிப்பவுடலழிந்த
கோலச்சுறவக்கொடியுயர்த்தகுரிசில்போலவவுணருயிர்
வேலிற்படுத்தமுசுகுந்தன்விழித்துச்சிறிதுநோக்குதலுங்
காலவயவனுடல்முழுதுங்கனன்றுசாம்பராயினனால். (௩௬)

பூந்தாதருந்திப்பெடையினொடும்பொறிவண்டுறங்கும்புனைமலர்
மாந்தாதாவின்மகனென்பேர்வாவுமான்றேர்முசுகுந்த [த்தார்
னேந்தாலுந்தனருள்பெறுவானெண்ணியோகத்துறங்கினேன்
சார்ந்தாயென்றன்புன்கணெதிர்தளராமுத்திதருகென்றான். ( )

தெவ்வூன்சுவைத்துநிணம்பருகிக்குருதிதேக்கித்தசைகுதட்டி
வெவ்வாய்சிவந்தவடிவேலோய்மறுமையதனில்வேறொருவ
ரொவ்வாமறையோர்குலத்தினில்வந்துதித்துவேதமொருநான்
மெவ்வானவருந்தொழுதேத்துமீசன்பாதம்பெறுதியால். [கு

என்றுவயவாண்முசுகுந்தற்கினியவரமொன்றீய்ந்தருளி
குன்றமெடுத்துமழைதடுத்துநிரைகாத்தருளுங்கோவிந்தன் [ன்
பொன்றாழ்புரிசைவிளிம்புடுத்த மதுரைநகரிற்புகுந்துமுன்னே
றன்றாள்வணங்கியவனோடுந்துவரைநகரஞ்சார்போழ்தின் (௩௯)

உருமுக்கதிர்வேற்சராசந்தனுலப்பில்கடலந்தானையொடுஞ்
செருவேற்றதரினிடைவளைப்பச்செங்கட்கரியோனிராமனொடும்
வெரிவந்தோரிற்பிரவருணகிரியினொளிப்பவெகுண்டேகி
யரில்சூழ்வெற்புச்சூழ்போதவழலுந்தெறுதீயூட்டினன். (௪௦)

வழங்குங்கரியயோசனையோர்பதினொன்றுயர்ந்தவரைநின்றுங்
குழங்கன்மாலைசுவம்புரளப்புவிப்போதென்னக்குப்புற்றுத்
தழங்குமுரசங்கண்டுயிலாத்தகைவிற்றிருக்குந்துவாரகையிற்
செழுந்தாமரைக்கட்டிருநெடுமாறம்முனோடுஞ்சென்றடைந்தான்

செந்தாமரைக்கட்டிருநெடுமாறம்முனோடுஞ்செழுந்தழலின்
வெந்தாவென்னச்சராசந்தன்மேநியுழக்கிப்பூந்தடத்திற்
பைந்தாட்குவளைமலர்மேய்ந்துப்பலவினீழற்கண்டுயிலுங்
கொந்தார்பொழில்சூழ்கிரிவிரசுமென்னுநகரிற்குறுகினான். ()

களைகொன்றிரங்குநந்திமருங்கிற்கமுத்துமிடைந்தசூற்கமுகம்
விளைகொப்புளிக்குநறும்பாளைவிரிக்குமுயரானத்தமெள
வுளைசெய்நாடுதனிபுரக்குமொளிர்வேற்செங்கையிரோவதனு
மாசன்மகளைவிதிமுறையால்வெள்ளைமேனியவற்களித்தான். ()

வயலிலலவன்கிளைத்தகுழிதேமாந்துணரின்வாய்மடுத்துக், குயி
லுஞ்சுரும்புங் குடைந்துதிர்க்குங் குளிர்பூந்தாதுதிடர்படுத்து
ரு, செயிர்நீர்விதர்ப்பநாடளிக்குந்தீதில்கீர்த்திவிட்டுமக, னயி
ல்சேர்நெடுங்கட்டன்மகளைக் கண்ணற்களிப்பானமைவுற்றான்.()

தங்கையோடுமுருக்குமணிதடறுகழித்தவயில்வேற்கட்
செந்தாட்பசியகிள்ளைமொழியுருக்குமணியைச்சிசுபால
னந்தாரகலம்புணர்ந்திடயாமளிப்பதல்லாலாயனுக்கின் [டாள்.
றெந்தாய்கொடுத்தறகாதென்ன மறுத்தலிளம்பூங் கொடிகேட்

தமையனுரைத்தவாறனைத்துஞ் சாற்றித்தண்பூங்காவகத்தி, னி
மயமீன்றபூங்கொடிதன் னிருதாள்வழுத்தறலைக்கீடா, யமைவ
லாங்குற்றெனைக்கவராளென்னிலழல்வாய்ப்புகுவனெனக்,கமழ்
பூங்குழலோர்மறையோனைக்கண்ணற்குரைத்தியெனவிடுத்தாள்

சுடுபொற்றகடுதூக்கியெனத்துணர்த்தகைதைக்காடுடுத்த,
கடல்சூழ்துவாரபுரியெய்திக்கண்ணற்குரைப்பமகிழ்சிறந்து, மி
டல்சேர்வென்றிப்பனைக்கொடியோனோடும்விரைமான்றேர்கட
விக், கொடிவான்றொடுகுண்டினபுரத்துக்குளிர்பூஞ்சோலைமரு
ங்கணைந்தான். (௪௭)

தரிபாரேற்றுஞ்சராசந்தன்றகைதேர்தந்தவக்கிரன்றீப், பொரு
வேல்வென்றிச்சாலுவனேமுதலவரசர்பொங்குளைய, விரைசெ
ல்மான்றேர்ச்சிசுபாலன்றனக்குவிழைவின்மணமுடிப்பான், பரி
விறேடுங்குண்டினபுரத்திற்சேனையோடும்படர்ந்திருந்தார். ()

அன்னகாலைத்தூதுசென்றமறையோனுலகமுழுதளந்தோன்
மன்னுநமதுகோனகர்சூழந்தண்சோலைமருங்கிறுத்தா
னென்னமகிழ்ந்துகூறுதலுமிலவத்துவர்வாயுருக்குமணி
மின்னுங்குவேற்றங்தையொடுமன்னையோடும்விளம்புவாள். ()

என்டோன்முக்கட்கவுரிபதமிறைஞ்சநமதுங்கருடுத்த, விண்டோய்பொழிலின்மேவுதற்கு விடைநீரளித்திடுனலோடுந், தண்டார்வேந்தன்மனைவியொடுந்தழீஇக்கொண்டருளக்கருந்தடங்கண், வண்டார்கோதையாய்வெள்ளம்பரவச்சோலைமருங்கணைந்தாள். (௫0)

கண்டோருள்ளங்கொடுமெணங்கொண்டெழுந்துவிங்குங்கதிர்முலைப்பூந், தண்டாமரையாள்கண்ணனிருதடந்தோள்புணரவவித்தியெனப், பண்டோய்குதலைமொழியதனைப்பழிச்சிக்கவுரிப்பதம்போற்றி, வண்டார்சோலைமாதவிப்பூம்பந்தர்மருங்குதனிநின்றுள். (௫க)

தண்ணங்கமலத்திருக்குவளை மலர்ந்துகுமுத மலர்தாங்கி, விண்ணங்குடிவாங்கிடவிங்கும் விணாமென்கோங்கமலர்முகிழ்த்து, வண்ணமலர்ப்பூம்பசுங்கொம்பர்வண்டார்சோலைமருங்கணைதல், கண்ணனுள்ளமுவகையொடு மிறும்பூதெய்தக்கண்ணுற்றுன். (௫உ)

பொன்னங்குடிமிநெடுவரையோ பொழிவண்டிமிராத்தாமரையோ, பின்னற்றிரைதாழ்பாற்கடலோவங்கண்விசும்போபேருலகோ, மின்னுக்கதிர்மாமணிச்சுடிகைநாகருறையும்வியன்பதியோ, தன்னந்தனியீங்கெனையாள நின்றுருறையுந்தனியிடமே.

பொன்செய்புலவர்கைசெய்துபுனிற்றுக்கதிரின்வெயிலோட்டி, மின்செய்பசும்பொற்கலன்சுமந்து நாணுநுதலின்வெயர்வுறைப்பக், கொன்செய்வேற்கண்ணிமைப்பநிழற் ருேன்றவீங்குக்குறுகியதாற், றென்செய்வரிவண்டுழல்கோதைபூமாதென்னத்தெளிவுற்றுன். (௫ச)

வண்டுஞ்சுரும்புநறுந்தேனுஞ்ஞிமிரும்வழங்குகருங்கூந்தற்
பண்டோய்குதலைச்செங்கனிவாய்ப்பரவைதடங்கணருணேக்கந்
தண்டாதோங்குங்காமனேய்தீர்க்குமருந்தாய்த்தளராமால்
கொண்டேனுவிவேனில்வேள் கொள்ளாதெளிதினிறுத்தியதே.

ஆற்றலுடைவெங்கொடுங்கூற்று மலைவாய்விட்டுமுங்கொலைகற்ப, மாற்றும்புகல்வபோலிமையாவுயிர்மேனடக்குவரிநெடுங்கட், கோற்றேன்குதலைப்பேதையொடுந்தமியேனுள்ளக்குறையனைத்துஞ், சாற்றிப்பொன்னஞ்சுணங்கணிந்ததடமாமுலைமேற்றழுவுதுமே. (௫சு)

கிள்ளையேந்திக்கிளைநரம்பினடந்துசிவந்தகாந்தளங்கைத்
தெள்ளாரமுதேமலர்த்திருவேதேனேகனிந்தசெழுங்கனியே
கள்ளக்கருங்கட்குடங்கையாற்றமியேனுயிரைக்கள்ளுநர்போ
லள்ளியள்ளியருந்துதிங்காகாதுன்பேரழிவினுக்கே. (௫எ)

முலையிற்றிரண்டவரிபரந்துமுகிழ்மென்காந்தட்கரத்தடித்து
மிலகுமணிப்பொற்கழங்கெறிந்துமெரிநீர்த்தண்ணங்கயங்குடைந்தும்
திலகநுதலார்குழுவினொடுமாடாதம்பொற்றிருவனையாய் [ந்துங்
கலைவல்லுநர்தீட்டோவியம்போனின்றவாறென்கழறுகவே. ()

வளியூடியங்காதறநெருங்கிவருவெம்முலையிற்செம்மாப்பு
மளியமருங்கின்வறுமையுநீரந்தோகண்டீரிலைபோலுந்
தளவமுமாற்கருங்குழன்மேற்றணைவாதிருந்தீர்மணிவண்டீர்
களிகொணறவம்வாய்மடுத்தமயக்கங்கொல்லோகழறுகவே. ()

பண்ணூர்குதலைபந்தீஞ்சொற்படைவேலுண்கட்படர்முலை
யாய், தண்ணூர்பசியபொலம்பொகுட்டுத்தடந்தாமரைநின்முக
ம்போல்வான், கண்ணீர்வாரவொருதாளினின்றுகதிரோன்றனை
நோக்கித், தெண்ணீர்க்கயத்துணடோறுமுயலாநிற்குஞ்செய்த
வமே. (௬0)

விழைந்தோர்கொம்மைமுலையல்லால் வேற்றோர்மருந்தினமை
கழிந்தகாமப்பிணியகலக்கனிவாய்த்தம்பன்மருந்தருந்திப் [யாத
பிழிந்ததேறலனையமொழிப்பேதைதடந்தோணலனுகர்வா
னெழுந்தவுள்ளமிவ்விடமேசேர்தற்கியைந்தவிடமென்றான். ()

துளிகொணறவங்கொப்புளித்துப் பொன்னந்தாதுதுதைந்தாடு
மளியினோடுமலர்முகத்தவலகில்சினையமாதவியே
களிகொணந்தண்சோலையினீபுகலென்றடைந்தேன்மிகநடுங்கு
மெளியனுவிதுயராமற்காற்றனினக்கேயியல்பென்றான். (௬௨)

உருவமருங்கிலுள்வாங்கத்தேய்த்துக்கரிகளெட்டினொடுஞ்,
செருவேற்றெழுந்த திரண்முலையை மறையாதணங்கென்றைய
முறு, மருள்போயொளிப்பவிமைத்தனங்கன் வாளியாயின்வரு
ந்தாம, லருணோக்களித்தமதர்நெடுங்கண்புதைத்தலென்மேலன்
பேயோ. (௬௩)

கன்னிப்பெடைவண்டினஞ்சூழ்ந்து களிக்குஞ்சுரும்பர்தா
தாடும், புன்னைப்பொதும்பர்நெடிதுயர்த்துப்புலம்புற்றிருக்கும
டநெஞ்சே, மின்னுக்கொடியினொசிமருங்குல்வெள்வேனெடுங்
கண்வேய்த்தடந்தோ, ளன்னப்பெடையின்செங்கனிவா யமுத
மென்னுடருமென்றான். (௬௪)

கனைவெண்டிரைக்கைபலநீட்டியுலகமனைத்துங்கவர்ந்தோடித்
துனைவிற்பெயருங்கடலினையோர்துகளான்மறிப்பப்புந்தியிடை
நினைதல்போலுமீங்கிவர்தங்காமக்கடலைநிறையினொடும்
புனையுநாணல்யான்றடுப்பநினைதலென்னப்புலம்புற்றாள். (௬௫)

கொண்டவிரகத்தடங்கடற்கோர்புணையாய்க்குழையுமுளந்தேற
விண்டமலரினறவிழுக்கிவிழ்ந்துமெழுந்துஞ்சூழ்போந்தும்

வண்டின்கோதைமதிமுகத்தின்மலர்ந்தகுமுதநாணுரு
முண்டநிலவுக்கதிர்தெவிட்டியுமிழ்ந்தாலென்னநகைபுரிந்தாள்.

வருந்துந்துன்பவிருளகற்றிவயங்குமமரர்கடைந்துமுன
மருந்துமமிழ்திற்கையறவுற்றுயுமாவிதளிர்ப்பிக்குஞ்
செருந்திகமழும்பூங்கோதைத்தெய்வக்கமலமுகத்தரும்பி [யே.
முருந்தும்வெள்ளைநிலாக்கொழுந்துமுத்தும்பொருவுமுகிழ்நகை

ஊன்றோய்த்தெடுத்துநிணம்பருகியொளிறுவடிவேற்றடங் கண்ணாள், தேன்றோய்த்தெடுத்தசெங்கனிவாய்த்தேறலெளிதிற் பெற்றமையால், மான்றேரிரவிகெடவிமைக்குஞ்சிந்தாமணியும் வளர்நிதியுங், கான்றோய்தருவுமிந்நிலத்தின் முயன்றாற்கடிதிற் பெறலாமே. (௬௮)

பெற்றமுயர்க்குமுற்றலைவேற் பெம்மான்சடைக்காட் டிடைப்ப யின்று, நெற்றிக்கனிக்கட்டழலருகுநின்றுதவநீபுரிந்தாலுங், க ற்றைக்கதிர்கான்றொளிர்புனிற்றுத்திங்காள்கமலமலர்முகத்துக், கொற்றவடிவேற்றடங்கண்ணா ளுதல்போன்றிருத்தல்கூடாதே.

ஐதேய்ந்தல்குற்கலைதிருத்தியம்மென்முலைதாழ்வடஞ்சேர் த்தி, மைதாழ்கூந்தல்கமழுமுடித்தயில்வேலுண்கண்மையெழு தி, வெய்தாமுன்போற்கைசெய்தேனையுற்றுள்ளமெலிவுறேல், பைதாழல்குல்வேய்மென்றோட் பவளத்துவர்வாய்ப் பசுங்கொ டியே. (௭௦)

களவுங்கொலையும்பயின்றவிழிகனியிலமிழ்திற்கோற்றேனி
லளவுந்தீஞ்சொற்படர்முலையாளழகுபூத்தமுகம்போலக்
குளனினதியிற்றடஞ்சுனையிற்கண்டதுண்டோகுளிர்வண்டீர்
தளவம்பொதிந்தகுமுதமொடுங்கழுநீரலர்ந்ததாமரையே.(௭௧)

பரிவுற்றுரைப்பநுதல்பசலைபூத்ததென்கொல்பணிமொழியாய்
பிரியேனின்னைப்பிரியிலுயிருய்யேனென்றுப்பெய்வளையைப்
புரவித்தடந்தேர்மிசையேற்றிக்கண்ணன்போரேற்றிடுமரசர்[ன்
வெருவவரிவெஞ்சிலைகுழைத்துத் தம்முனோடும்விளைந்தகன்று

குறுகார்சேனைமுற்றுதகுடுமியெயிற்குண்டினபுரத்து
மறுகினெதிர்ந்தசராசந்தன்முதலவரசர்வலிதொலைத்துக்
கறைவெண்மதியமுதுகுரிஞ்சும்புரிசைவாயில்கழிந்திடலு [ன்.
மறைபொற்கழற்காலுருக்குமனோரக்குரோணியோடும்வளைந்தா

செருவேற்றெழுந்தபடையனைத்துந் திருகுசினத்த வலாயுதன்
யுருமென்றன்னபகழிகளாலூழிலாட்டவுலகளந்த [போ
கரியோன்பற்றியுருக்குமனைக்கல்செய்தடந்தோளிணைவீக்கி
மருவூற்றிருக்குழலர்ப்பைந்தார்ப்பங்கிவாளாலரிந்தெறிந்தான்.

வெள்ளைமேனியலாயுதனும்விரைத்தேன்றுவலையளிபுனிற்றுப்
பிள்ளைக்கருத்திப்பின்னுகரும்பிணையன்மாலைக்கருங்குழலுந்
தொள்ளையறிவினுருக்குமன்றன்னுவிதுலையேலெனவுரைப்ப
வள்ளல்விடுத்துத்தம்முனொடுந் துவராநகரின்வந்தடைந்தான்.

மாசுபூத்தவன்னெஞ்சின்மறங்கூர்வெற்றியுருக்குமனுந்
தேசுபூத்ததிருநெடுமாறன்னையமரிற்செகுத்தல்லா
லாசின்மதிற்குண்டினபுரத்தினடையேனென்னநாணினொடும்
போசகடமென்றொருநகரம் புனைந்தாங்கதனில்வீற்றிருந்தான்.

தண்ணந்துளவோனிகரில்லாத்தருமன்முதலவைவர்க்கும்
வண்ணவரிவினூற்றுவரைமுதலாமறங்கொள்கவுரவர்க்கு   [து
மெண்ணில்கிளைஞர்யாவர்க்கு முடங்கல்போக்க விரைந்தெழுந்
விண்ணுடையைதுவராநகர்தன்னில்விரைவினெய்தினர். (எஎ)

நந்தகோபன்வசுதேவ னலங்கூரசோதைதேவகிதஞ், சிந்தைம
கிழவியங்கறங்கவல்லோர்தெரித்தநன்னளிற்,சந்தமணிந்தபொ
ம்மன்முலை யுருக்குமணியைத்தழல்சான்றாய்ப், பைந்தார்துள
வோன்மணம்புரிந்துபசியவேய்த்தோளலருகர்ந்தான். (எஅ)

வேறு.

உருவத்தடமுலையொண்டாமரையினள்
பருவக்கருமுகில்பணையென்றிரள்புய
மருவிப்பொருசிலைமதனைப்பரிவொடு
கருவுற்றிடவெழில்கனிவுற்றனளே. (எகூ)

வான்றோய்நிலவுமிழ்மழவெண்பிறையெனச்
சான்றோர்மகிழ்வுறுதனிநாளதனிடை
தேன்றோய்கனிநிகர்செவ்வாய்மடமயி
லீன்றாள்சிறுவனையின்புற்றிடவே. (அ0)

சம்பரனென்றுயர்தானவனோடு
நம்பிபிறந்தமைநாரதனோத
வெம்புறுமாயையின்வெண்டிரைசிந்து
மம்பரமுடுறவள்ளியெறிந்தான். (அக)

அள்ளியெறிந்திடவார்கலிவீழும்
பிள்ளையைவாயிடையெய்தகன்மீனை
வள்ளுறுதூண்டிலினோர்வலைவாண
னெள்ளிதின்வவ்வியுவந்திதுசெய்தான். (அஉ)

பவ்வநெடுந்திரையூடுபடுத்து
வவ்வியமீனினையவ்வலைவாண
னெவ்வமில்சம்பரனுக்கினிதீயக்
கோவ்வையிதழ்க்கொடியங்கைகொடுத்தான். (அங)

மாயாதிப்பெயர்மங்கையம்மின
மாய்கதிர்வாளினறுப்பவகட்டின்
மேயவிளம்பிறைபோலவிளங்குஞ்
சேயையெடுத்தனள்சிந்தைகளித்தாள். (௮௪)

அச்செனநங்கையகங்குழைவெய்தி
யுச்சியின்மோந்தமுதூறலருத்திப்
பச்சிளமேனியபாலகனைக்கண்
ணெச்சிலகற்றியெடுத்துவளர்த்தாள். (௮௫)

விழைவொடுகண்கவர்மெய்யெழினம்பி
மழகதிரொன்னவளர்ந்திருகோலத்
தெழுதருநான்மறையாழ்முனியெய்திக்
குழைபொருகண்ணியொடின்னவைகூறும். (௮௬)

திங்களணிந்திடுதேவன்விழிக்கே
யங்கமிழந்திடுகாமனினன்ப
னிங்கிவனாகுமெனத்தனியோதிப்
பொங்கியநற்றவமாமுனிபோனான். (௮௭)

போயிறுநுண்ணிடைமங்கைபுகுந்தே
சேயுறழ்மைந்தனைநின்றுதெருட்டி
வேயுறுதோணலமேவுதியென்னத்
தாயெனவின்னுரைசாற்றிமறுத்தான். (௮௮)

மறுத்தலும்வெண்பிறைமாலயின்முன்ன
மொறுத்தவைகேட்டுளயாவையுமோதிச்
செறித்தவில்வேளெனநெஞ்சுதெருட்டி
நறைக்குழலங்கவனன்னலமுண்டாள். (௮௯)

நம்பிகருப்புவில்நல்லிசைபாடுந்
தும்பிகொணாணின்வளைத்தெதிர்தோன்றி
யம்பெனமென்மலரைந்தும்விடுத்துச்
சம்பரனைவிதடிந்தன்னன்றே. (௯0)

இரதியொடும்பிரத்துய்ம்மினனென்போ
றிரிதருதென்றலந்தேர்மிசையேறிப்
பொருந்திரைமேற்றுயில்புண்ணியமூர்த்தி
மருவுதுவாரகைமன்னினனன்றே. (௯௧)

வேறு.

வண்டுவளைமாநகரிலிரதியொடும்வந்தடைந்த மைந்தன்றன்னைக், கண்டுருகியுருக்குமணிகதிர்முலைப்பால்வழிந்தொழுகக் கண்ணீர்வார, வண்டர்பிரான்முகநோக்கியார்கொலிவனைப் போல்வானறைதியென்னப், பண்டரும்யாழ்முனியெய்திமுன் னிகழ்ந்தவாறனைத்தும்பகர்ந்திட்டானே. (௯௨)

மறைமுனிவனுரைகேட்டவருக்குமணிமைந்தனைமார்போடிம்புல்லிக்,கறைகெழுவேற்கண்ணனெடுங்கதிர்முடிமோந்திரதியைக்கண்களிப்பநோக்கி,யுறையுநகர்க்கிளையோடுமாசனங்கள்புகழ்ந்தேற்றவலப்பிலாது, வெறிதிரைநீர்க்கடல்போலவெழுந்துவகைபெருக்கெடுப்பவிருக்குநாளின். (௬௩)

தாரைவடிவேற்றடக்கைச்சத்திராசித்தனெனுந்தரணிவேந்தன், காரிருண்மேய்ந்தொளிவிரிக்குங்கதிரோனைப்பணிந்தேத்தியெட்டுப்பாரஞ்சீர்கெழுசெம்பொன்னீனுஞ்சிமந்தகமாமணிபெற்றுந்துவரைநண்ணிப், பார்மகள்கேள்வனுக்களிப்பமீண்டுமவன்றனக்கிறைவன்பாலித்தானே. (௬௪)

சேட்டிளஞ்செங்கதிரொன்ன விருள்பருகித்திசைவிளக்கிச்சிறக்குந்தெய்வ,மோட்டுயர்மாமணியதனைச்சத்திராசித்தனெனுமூரிவேலான், ஞேட்டுணைபோல்வருதம்பி பிரசேனன்கழுத்தினிடைதுலங்கவீக்கி, வேட்டநினைந்தாங்கவனுங்கானிடையோர்கோளரிமேல்விரைந்துசென்றான். (௬௫)

கொய்யுளைவாம்புரவியொடும்பிரசேனன்பச்சிரத்தங்குடித்துவிழ்த்தி, வெய்யபகுவாய்மடங்கல்சிமந்தகமாமணிகவர்ந்துவிரவினேக, மொய்கெழுதோட்டிறற்சாம்பன் மடங்குளைவாளரியாவிமுடியச்சீறிக், கையிணையாலுடல்பிளந்துகதிர்மணிகொண்டுறுபிலத்திற்கடிதுசென்றே. (௬௬)

வேல்கிடந்துகுழைபுரட்டும்வெண்மதிபோன்றொளிர்முகத்துவிளைமென்கூந்தற், பால்கடந்துதேனினெடுந்தோழமைக்கொண்டிருந்தமொழிப்பசியவேய்த்தோட், கோலமுலைச்சாம்பவதியினிதமருந்தோட்டிறனிற்குலவுஞ்செங்கேழ், காலுமெழில்மணியதனைக்கதிரோனென்றையமுறக்கட்டினனே. (௬௭)

ஈங்கிதனையுணராமற்சத்திராசித்துமுதலெவருமாயோன்,
நீங்குறவெம்பிரசேனனுயிர்செகுத்துச்சிமந்தகத்தைக்கவர்ந்தானென்னுந், தாங்கரும்வெம்மொழிகேட்டுச்சத்திராசித்துமுதற்கிளைஞரோடும், பூங்கமலமலர்க்கண்ணன்பிரசேனன்போனவழிதுருவிப்போனான். (௬௮)

ஆங்கவன்றன்வாம்புரவித்தடநோக்கிச்செலவயருமதரின்பாங்கர், வீங்கியதோளரசனெடும்விளைசெல்வாம்பரியாவிவிளியநாடிப்,போங்கடுங்கண்வாளரியின்றடந்தோன்றவவைநோக்கிப்போகுமெல்லைத், தாங்கரும்வெஞ்சினமடங்கறனைநூறிச்செலுங்கரடித்தடமுங்கண்டார். (௬௯)

கண்டமுதற்றடமொற்றியருநெறியின்விரைந்துசெலவயருங்காலை, விண்டபிலத்தூடுகடம்போதுதலும்விளைகொழித்துக

றவந்தூற்றுந், தண்டுளவோன்மழைத்தடக்கைச்சத்திராசித்து
முதற்கிளைஞர்தம்மை, மண்டுமிருள்செறிபிலத்தின்வாயிலின்
வைத்ததனூடுவல்லைசென்றான். (க00)

நன்னரியபிலம்புகுந்திட்டாறிருநாள்காறுமண்ணனன்று
ஞக, வெண்ணரியதமர்யாருந்துவரைநகர்வந்தெய்திபெண்டோ
ண்முக்கட், டண்ணிலவுக்கண்ணிபுனைகொற்றவைபொற்றாமரை
த்தாள்தாழ்ந்துபோற்றிக், கண்ணனுறுபகைமுடித்துக்கடிதெய்
தத்தமதுளத்திற்கருதிநோற்றார். (க0க)

ஈங்கிவர்களிவ்வாறுநோற்புழிமால்பாதலத்தி னெல்லையெ
ய்தித், தூங்கியபொற்றேட்டிறனிற்றாக்குகதிர்மணிநோக்கித்து
னைவிற்கையால், வாங்குதலும்வெகுண்டெய்திச்சாம்பவானெதி
ரேற்றுமலையவைய, ஞங்கவனோடோரிருபத்தெட்டுநாளமராற்
றிவாகைகொண்டான். (க0உ)

வாகைபுனைந்திடுகண்ணன் முகநோக்கித்தாமரைக்கண் மா
யோனென்ன, வோகையொடுமுளத்தெண்ணிவலஞ்செய்துபணி
ந்தேத்திபுலவாவன்பிற், பாகனையமொழிச்சாம்பவதியென்னுந்
தன்மகளைப்பரிவுகூர்ந்து, நாகமிசைநடம்புரியு மண்ணலுக்கும
ணியோடுநல்கினனே. (க0௩)

நல்கியபெண்மணியோடுநாகிளவெங்கதிரொன்னக்கதிர்கனீ
ட்டி, மல்கியபேரிருடுருவுமணியோடுமெய்தியவான்பிலத்துநீங்
கி, யொல்குமிடைச்சென்றுவர்வாயுருக்குமணியொடுங்கிளைஞரு
வந்துபோற்ற, வல்கருஞ்சீர்த்துவாரகையினுய்ப்பிழிதூற்றிடுந்து
ளவோனணைந்தானன்றே. (க0௪)

ஓசையுயர்திசையளக்குஞ்சத்திராசித்தனெனுமுரவுத்திண்
டோ, டேசுறுமன்னவன்கரத்திற்சிமந்தகமாமணிதன்னைத்திரு
மானல்கக், காசறுவேத்தவைதன்னுட்கவிழ்தலையிட்டரசனுள
ங்கலுழ்ந்துநாணிப், பேசரியபிழையுரைத்தேங்கண்ணனையாமெ
னமிகவும்பேதுற்றானே. (க0௫)

பெரியோர்க்குப்பிழைசெய்தோர்பிழையுட்ன்பட்டுயிருய்த
ல்பெரிதுமோரின், மருவிசுமலர்க்கூந்தல்மகட்கொடுத்தாலாகு
மெனமனத்தினேர்ந்து, தரியாரூன்பருகுவைவேற்சத்திராசித்
தனெனுந்தரணிவேந்தன், கரியோன்றன்கரம்பற்றிவேறிருந்தன்
பொழுகவிவைகழறலுற்றான். (க0௬)

வேறு.

முத்தகமுரிஞ்சுங்கொம்மைமுகிழ்முலைப்பவளச்செவ்வாய்க்
கத்திகைகருமென்கூந்தற்கணைபுறங்கொடுக்கும்வேற்கட்
சத்தியபாமைதன்னைத்தருவனிகோடியென்ன
வித்தகனுரைப்பக்கண்ணன்மறுத்தனன்விழைவினேர்ந்தான். ()

குனில்பொருமுரசம்விம்மக்குடவளையலறியார்ப்பக்
கனிநர்தேர்ந்துரைத்தநாளிற்கண்ணனுக்கழல்சான்ருகத்
தனிவருமழகுவாய்ந்தசத்தியபாமைதன்னை
மனியெழுவனையதோளானீரொடும்வழங்கினுனே. (௧0௯)

கடல்வயிறுளைந்துபெற்றகவுத்துவமணியிற்சேர்ந்த
படர்கதிர்க்கற்றைகாலுஞ்சிமந்தகமணியைப்பண்பா
லுடல்சினந்திகிரிமாயோற்குதவலுமண்ணல்மீட்டுங்
கடவெழிந்தொளிரும்வைவேற்சத்திராசித்துக்கீய்ந்தான். ()

நெய்த்திருள்கனிந்தகூந்தனேர்வழக்கறுக்குஞ்செவ்வாய்ச்
சத்தியபான்மையம்மென்றடமுலைஞெமுங்கப்புல்லி
நத்தமும்பகலும்விள்ளாநறைகமழ்துளவத்தண்டார்
வித்தகனுறையுநாளிற்புகுந்தமைவிளம்பலுற்ரும். (௧௧0)

வலம்புரித்தாமம்வேய்ந்தசுயோதனன்வஞ்சமெண்ணி
யலங்கல்வேலேவர்மாழ்கவரக்கறையெரித்தல்கேளா
வலம்பொருதடந்தோட்கண்ணன்றம்முனேடுபர்தேரேறிச்
சலஞ்சலமலறியார்ப்பத்தருமன்மாட்டெய்தினுனே. (௧௧௧)

தருமன்மாட்டிராமனேடுந்தாமனைபொருவுமுண்கட்
டிருமறுமார்பனெய்திச்சிறப்புடன்வைகுநாளிற்
கிருதவன்மாவினேடுங்கிளர்ந்தசிரக்குரூரன்
வருசதத்தன்னுவாவைத்தழீஇனன்வழங்கலுற்ருன். (௧௧௨)

பைத்தபாம்புறழுமல்குற்சத்தியபாமையென்னுங்
கொத்தலர்வேய்ந்தபைம்பொற்கோதையைநினக்குக்கூறி
மைத்தவழ்கரியமேனிமாயனுக்களித்தவெய்ய
சத்திராசித்தைக்கொன்றுதகுமணிகவர்கவென்ருன். (௧௧௩)

என்றலுங்கங்குற்பானுடகர்ந்தவனிருக்கைதன்னிற்
சென்றுவேற்சத்திராசித்துறங்குழிச்சினவுவைவாள்
பொன்றவழ்தடறுநீக்கிப்புனேமுடிதடிந்துகோடி
மின்றவழ்மணியைவவ்விமீண்டுதன்னிருக்கைசேர்ந்தான். (௧௧௪)

கந்தடுபுழைக்கைகால்வாய்க்கடாக்களிறனையசீற்றத்
தந்தையைக்கொன்றமாற்றஞ்சத்தியபாமைகேளா
வெந்திரத்தயிலத்தோணியிட்டமுதிரங்கிமாழ்கி
யந்தில்வண்டுளவன்மேவுமத்தினபுரத்திற்சார்ந்தாள். (௧௧௫)

அத்தினபுரத்தினெய்தியாம்பலங்குழல்வாய்வைத்த
மைத்தவழ்கரியமேனிமரகதவண்ணன்பொற்ருள்
கைத்தலத்திறைஞ்சியேற்றிக்கண்ணினைமாரிகால
முத்தகமுரிஞ்சும்பொம்மன்முகிழ்முலைபொழியலுற்ருள். ()

எந்தையைக்கங்குற்பானுளியற்சததனுவாவெய்தி
மைந்துடைவாளிற்செம்பொன்மணிமுடிகடிந்தாலென்னப்
பைந்துழாய்முகுந்தன்சிறிப்பனைக்கொடித்தோன்றலோடும்
வெந்திறன்மான்றேரோலிவிரைந்துவண்டுவரைபுக்கான். (௧௧௭)

மழைநிறவண்ணன்சீறிவந்தனனென்னவஞ்சி
யழலவிர்மணியையக்குரூரன்பாலளித்துத்துன்பந்
தழைசததனுவாவெய்தித்தாவுவெம்புரவிமேற்கொண்
டுழையர்தேர்வுறுதுநூற்றெட்டியோசனைவிரைவிற்போனான். ( )

மிதிலைமாநகரின்பாங்கரெய்தலும்புரவிவீழ
வதிர்பொலங்கழற்கால்சேப்பவாங்கவனோடனோக்கி
மதுவிரிதுளவத்தாரோன்வலங்கெழுநேமிதூண்டிச்
சததனுவாவின்பைம்பொன்மணிமுடிதடிந்திட்டானே. (௧௧௯)

காய்ந்தெரிகவிழ்க்குஞ்செய்யகதிர்மணியவன்பாலின்மை
யாய்ந்துவண்டுளவோன்மீண்டுதம்முனுக்கறியக்கூறி
வீய்ந்ததன்மாமன்றன்னைவிதிமுறையீமத்தேற்றித்
தேய்ந்தநுண்ணுசுப்பினாளைத்தேற்றிவெந்துயரந்தீர்த்தான். ( )

எரிமணிகவர்ந்துகண்ணன்கரந்தனனென்னவெண்ணி
யொருகுழையொருவனம்பொனுயர்மதில்மிதிலையெய்தி
யரவவெங்கொடியினோனையாற்றலங்கதையின்விஞ்சை
பருவமோர்மூன்றின்வல்லோர்வியப்புறப்பயிற்றுவித்தான். ( )

கரியபைம்புயல்போன்மேனிக்கண்ணனுக்கஞ்சிவெய்திற்
கிருதவன்மாவுமக்குரூரனுங்கேடில்சீர்த்தித்
திருவருள்காசியெய்தவொன்னலர்கொடித்தேர்த்தானை
மருவருந்துவரைமூதூர்மழைவறந்திட்டதன்றே. (௧௨௨)

மழைவளஞ்சுரத்தலின்றியிருத்தலுமதிநூற்றேர்ச்சி
கிழவரைக்கண்ணன்கேட்பவின்னணங்கேடில்காசிப்
பொழிபுயல்வறத்தறன்னுலந்நகர்புரப்போன்கேள்வி
தழைதருசுவர்க்கர்கூவித்தன்மகடன்னையீந்தான். (௧௨௩)

காந்தினிமுறுவன்மாந்திக்கலைபயில்சுவர்க்கனென்னும்
வேந்தர்கோன்மேயவாற்றால்விண்மழைபொழிந்ததன்றோ
னேந்தெழிற்புதல்வனாகுமிசைபெறுமக்குரூரன்
போந்திடிற்பெய்யுமென்னவொற்றரிற்புகுவித்தானே. (௧௨௪)

மைத்தகார்பொருவுமேனிவள்ளலுக்கக்குரூரன்
கைத்தலத்தமைத்தசோதிக்கதிர்மணிவழங்கனோக்கி
யித்தகைமணியைநீயேகோடியிதின்றசெம்பொன்
சத்தியபாமைக்கீதியென்றனன்றாமவேலான். (௧௨௫)

காலையிற்குணபாலெழிற்கமலம்வாயவிழ்ந்துதோன்றுங்
கோலநன்மனையின்செய்திவண்டுழல்குழுங்கன்மாலைப்
பால்புரைமேனியண்ணலையுரும்பரிவுதிர
வேலையிற்போக்கிவல்லையபழைத்துடனுறைந்தானன்றே. (கஉசு)

பார்புகழ்தருமனுதியையவரும்பவளச்செவ்வா
யேர்கிடந்துறங்கிவிங்குமிளமுலைப்பனைகொள்மென்றோ
டார்வயிருர்ந்தகூந்தற்றுரோபதைதன்னையன்பா
லோரொருபருவம்புல்லியன்புடனுறையுநாளின். (கஉஎ)

நிரைகவர்ந்தெயினரேகநெடுஞ்சிலையெடுக்கப்பார்த்த
வரசனதுறையுளெய்தவம்பலைத்தொழுகும்வேற்கட்
டுருபதன்மகளைநோக்கியாழ்முனிசொற்றதுன்னிக்
கலையெரிகடவுட்டீர்த்தமாடுவான்கடிதிற்போனான். (கஉஅ)

கங்கைநீராடுமேல்வையுலூபியைக்கண்ணினேக்கி
யங்கலும்மேனிச்செவ்வாயணிமுலைப்போகமாந்திச்
சிங்கவேறனையவெற்றிமைந்தனைச்சிறப்பினீன்று
தங்குபாதலத்தினின்றுந்தமிழ்தெரிமதுரைசார்ந்தான். (கஉகூ)

சித்திராங்கனையைக்காணுச்சித்திரப்பட்டத்திற்கோட்டி
மத்தரில்விசயனெஞ்சமருளலும்வழுதிகேட்டு
முத்தவெண்முறுவற்கொம்பைமுழங்கெரிசான்றதாக
வித்தகச்சிலைவல்லாற்குவியப்பொடுமளித்தானன்றே. (கங0)

துப்புறழ்தொண்டைச்செவ்வாய்த்துளிமுகிலனையகூந்தற்
செப்பினைத்தன்னகொங்கைதிருநலமினிதுமாந்தி
வெப்பிரவாகுதன்னையீன்றவில்விசயன்வல்லே
மைப்புயறவழுமாடத்துவரையின்மன்னினனே. (கஙக)

அருமறையுரைத்தமுக்கோற்பகவனாயடைதனேக்கி
யொருகுழையொருவன்வேற்கட் சுபத்திரையென்னுமொப்பில்
திருவினையன்னேர்க்கேவல்செய்தியென்றுரைத்தகாலைக்
கருமுகிறம்முனேடும்விழவுகண்ணுறுவான்போனான். (கஙஉ)

மற்றடந்தோளான்செங்கையிரண்டினுல்வடிம்புதாக்கும்
விற்றழும்பதனைநோக்கியாரைநீவிளம்புகென்னப்
பொற்றதாமரையின்மேவுபொங்கிளமுலையாய்வெய்தாய்க்
குற்றமில்குமரியாடக்குறுகியவிசயனென்றான். (கஙங)

நாணெடுமெருத்தங்கோட்டிநகைமுகவிருந்துநல்கிப்
பாணிகர்த்தனிச்செவ்வாய்ப்படர்முலைநிற்றனேக்கிப்
பூணுலாஞ்செம்பொற்றேளான்பொற்றெடிதளிர்க்கைபற்றச்
சேணுறையமரரோடுங்கண்ணனவ்வழிபிற்சேர்ந்தான். (கஙச)

ஆறறிபுலவர்நன்கின்வளர்ந்திடுமெழல்சான்றாக
நாறிருங்கூந்தறன்னைவிசயனுக்கினிதுநல்கி
யூறுதேன்பிலிற்றுநொச்சிப்பூவுதிர்ருளிறெல்லை
சாறயர்நகரினீசற்றெழுநாதம்முன்றேற்சார்ந்தான். (௧௩௫)

கொடிநெடுந்தடந்தேரோறிக்கோற்றொடிபுரவிதூண்டக்
கடிமதிற்றுவனாகாக்குமரசனைக்கடிந்துபோகி
யடுதிறல்விசயனென்னுமாளரியேறுபோல்வா
னிடிமுரசறைந்துவிம்மவிந்திரப்பிரத்தம்புக்கான். (௧௩௬)

புலரியிலிராமன்கேட்டுப்போர்க்கெழல்வில்க்கியைய
னலனுறுகிளைஞரோடுமிந்திரப்பிரத்தநண்ணி
யுலகெலாம்வென்றசிர்த்தியுலங்கொடோள்விசயன்வேட்பக்
கலவமாமயிலன்னாளைக்கடிமணம்புரிவித்தானே. (௧௩௭)

ஆயிரங்கோடிமான்றேரஞ்சனாக்கச்சம்யானை
பாய்வயப்புரவிவெள்ளம்பாவையரொண்ணூத்தெண்மர்
காய்கதிர்விரிக்கும்பைம்பூண்கணக்கறுசெம்பொனல்கி
மீயுயர்மாடமோங்குந்துவாரயின்மேவினானே. (௧௩௮)

எரிமணிமாடஞ்சூழ்ந்தவிந்திரப்பிரத்தந்தன்னிற்
றருமனைக்காணச்செங்கேழ்த்தாமரைக்கண்ணனெய்தி
விரிபுகழுலகம்போர்க்கும்வில்லுடைவிசயனோடு
மரில்படுகானின்வேட்டையாடுவானமைந்துசென்றான். (௧௩௯)

வருந்துகுன்றுதிர்ந்துமாழ்கித்தளர்வொடும்வயிர்நோயெய்தி
விரிந்தபூந்தகட்டின்மேவும்பெடையினைவிளரிபாடுஞ்
சுரும்புமென்மலர்த்தாதூட்டித்துயில்வரச்சிறையானீவும்
பொருந்துபூந்தளிர்களீன்றபொங்கரினசோகநீழல். (௧௪0)

சேட்டிளம்பருதியீன்றகாளிந்தியாறுசெந்தேன்
பாட்டளிநுகர்ந்துதுஞ்சும்பைந்துழாய்முகுந்தன்மார்பின்
மோட்டிளமுலைகள்சாடமுயங்குதல்விரும்பித்தேன்றே
யூட்டரக்குண்டசெவ்வாயொண்டொடியாயிற்றன்றே. (௧௪௧)

அம்மலர்நெடுங்கட்பேதைபலர்சுணங்கணிந்துவீங்குங்
கொம்மைவெம்முலையந்திஞ்சொற்றேழியைக்குறிப்பினேக்கி
மைம்முகில்வண்ணன்சீர்த்திவருந்தறவினிதுபாடப்
பெய்மதுத்துளிக்கும்பண்டோய்பேரியாழ்தருதியென்றாள். ()

வேறு.

கொன்றையோடுகருங்காலிகொட்டுக்காக்கும்பத்தற்கு
மன்றமுருக்குமுயர்தணக்கும்வனவில்குமிழுமாமென்பா
ரொன்றியிடப்பேரியாழ்க்குரைத்த கோட்டினளவைபதிற்றொரு
பொன்றப்பத்நால்வேறுசாண்புட்டிலளவுமுச்சாணே. [சாண்

மருவுந்திறன்போதிசைபெருத்தந்தனைநீண்முகத்தின்வடிவுதனை
யுரைநூல்வல்லோரிசைத்தபடிகொளலாமென்னவுரைசெய்வர்
பொருவிலிசைத்தந்திரிபதற்குப் புகன்றவளவை பதின்முச்சா
விரவியிருபத்தொருநரம்புவீக்கலாகுமெனவுரைப்பார். [ன்

அணில்வாற்குரலசெந்தினையினவியலன்னபன்னரம்பைப்,
பிணியாவுயர்கோட்டிடைவிக்குந்திவவின்கடையிற்பெட்பினொ
டு, மணிசெய்கவரிமுண்டகத்தைவயங்கச்சேர்த்தல்யாழ்மரபு,
துணிவினுணர்ந்தோர்பேரியாழி னுறுப்பென்றெடுத்துச்சொல்
லுவரால். (கசரு)

வழுவிலேந்தாங்கோல்முதலாவெழுவாயளவுந்தொடல்வார்த
லெழுவாய்முதலாவிறளவுமெலிதல்வடித்தலிசையனைத்துந்
தழுவுநரம்புமுழுதினையுந்தடவித்தள்ளலுந்தல்பைந்தே
னொழுகல்போலுநரம்பிரண்டைமாறிமாறித்தொடலுறழ்தல். ()

நரம்பையடித்தொட்டேற்றளவுநன்கின்வருடலுருட்டல்மிகத்
திருந்துநரம்பைப்புறத்தொட்டுத்திரிகிவிடுத்தறெருட்டலரா
மரும்பொற்சுட்டுவிரல்சேடன்றன்னொலள்ளலள்ளலென்பர்
பரிந்தேமுற்றும்விளிமுறையாற்பற்றியெழுப்பல்பட்டடையே.

நன்றுமிவைகள்புரிந்திடுதற்குழிற்கையென்னநவில்வரா
லென்றுந்தானமினிதினுறவியைந்தநரம்பைநனிதிருத்தல்
பண்ணினரம்பையொத்தபடியிருத்தல்பரிவட்டணைநரம்பி
னுண்ணின்றொலிக்குமோசைசெவியுறவாராய்தலாராய்தல். ()

கூடவுமுறையினரம்புகளையினிதிற்றடவல்தைவரலா [டோர்
மிடையாதிசைகள் பெறவியக்கி யிசைகளெழுப்பல் விளையாட்
டுடவிநரம்பையிடையிடைவிட்டெய்தலெறிதலறிந்தியற்ற
லுடையகையூழ்செலவுமிந்தாங்கினிதினெற்றல்சிலவாமால். ()

எற்றுநரம்புதமையெல்லாமிசைவந்தெழநீண்மெல்விரலாற்
குற்றமின்றிநனிவிளங்கவியற்றல்குறும்போக்கெனவிசைநூல்
முற்றுந்தெளிந்தயாழ்முனிவன்முறையிற்கோர்த்தவிசைமரபு
கற்றுவல்லமுதுக்குறைவின்மேலோர்யாருங்கட்டுரைத்தார். ()

தாரத்துழையுமுழையுதனிற்குரலுங்குரலிற்றயங்கிளியு
மோருமிளியிற்றுத்தமுமத்துத்தந்தன்னில்விளரியுமொண்
சீரார்விளரிதனில்மிகவுஞ்சிறந்துதோன்றுங்கைக்கிளையு
நேரோயுதிக்குங்கைக்கிளையினிகரில்தாரம்பிறந்திடுமால். (கருக)

அறைந்தகுரலுந்தாரமுங்கைக்கிளையுமாணுமிளிதுத்தஞ்
சிறந்தவிளரிபெண்ணாகுமலியாமுழைதேர்குரல்துத்த
நிறைந்தவிளிமாத்திரைநான்காய்நிகழ்த்துமூன்றுமாத்திரைசீ
ருறைந்தவிளரிகைக்கிளைமாத்திரையோரிரண்டாமுழைதாரம்.()

தலையிலுழைநீண்மார்பிலிளிவிளரிநெற்றிதனின்மிடற்றி
லலைவில்குரானுக்கினிற்றுத்தமன்னாந்தன்னிற்கைக்கிளைமற்
றலைவில்தாரங்கொடிமூக்கிலுதிக்குநெடிலாமுயிரோமூங்
கலைமுற்றுணர்ந்தோர்நிரைநிரையிற்றோன்றுமென்னக்கழறினர்

குரலின்கிழவனயன்றுத்தக்கிழவன்குழவிமதிச்சடையோன்
பரிவுகூர்கைக்கிளைக்கிழவன்பாரத்துவாசனுழைக்கிழவ
னரியவியத்தாங்கியனிளிபின்கிழவனங்காரகன்விளரிக்
குரியகிழவன்பார்க்கவனெண்டாரக்கிழவன்சுகனுமால். (௧௫௪)

சங்குகுயில்கார்மயில்பானைபுரவியன்னங்காடைதரும்
பொங்குகுரலேகுரல்துத்தம்புகல்கைக்கிளைநீளுழையிளிசொற்
பங்கமெறிந்தவிளரியொடுதாரத்திசையாமெனப்பகர்ந்தா
ரங்கணுலகின்யாழ்மரபின்விஞ்சைவல்லவழிவினரே. (௧௫௫)

பரவுஞ்செம்பாலையிற்பிறக்கும்பண்ணேரொட்டும்படுபாலை
மருவிப்பிறக்கும்பண்ணிருபத்திரண்டும்வளர்செவ்வழிப்பாலை
விரவிப்பிறக்கும்பண்ணொருபானிரண்டு மரும்பாலையில்விளங்க
வரிதிற்பிறந்தபண்ணாறுதலையிட்டமைந்தவிருபானும். (௧௫௬)

வளருங்கொடிப்பாலையிற்பிறந்துவயங்கும்பண்ணேர்பன்னிரண்
விளரிப்பாலைப்பிறக்கும்பண்ணைஞ்சுமேற்செம்பாலைதனிற் [டும்
றளராதுதிக்கும்பண்ணொருபத்தெட்டுமாகத்தனிப்பேர்யா
முளரும்விஞ்சைநூல்வல்லோர்நூற்றுமூன்றென்றுரைப்பாரால்

வேறு.

பாலையாழ்குறிஞ்சியாழ்நன்மருதயாழ்பழிப்பில்பண்ணி
லேலுஞ்செவ்வழியாழ்த்தாரப்பண்ணுடனியைந்துகூட்டிச்
சால்புறுமகம்புறத்தோடருகொடுபெருகுஞ்சார
னாலுணர்ந்துறழினூற்றுமூன்றதாகுவதும்பண்ணே. (௧௫௮)

புரிநரம்பதனிலேழாநரம்பினைப்புகலுநான்காய்
மருவியநரம்புநட்பாம்வகுத்தவைந்தாநரம்பு
தெரிதரிற்கிளைதானாகுந்திகழ்ந்திடுமாறுமூன்று
முரியநற்பகையாமென்பர்யாழ்மரபுணர்ந்துளோரே. (௧௫௯)

இன்னணம்யாழ்வல்லோர்களியம்பியமுறைவழாமற்
கன்னலிற்கனிந்ததீஞ்சொற்றோழியர்க்குரைத்துக்காமர்
பொன்னவாய்க்கிடந்துவிங்கும்புணர்முலைக்காளியென்னும்
வன்னமேகலையாள்பேர்யாழ்வாசித்தறுடங்கினளே. (௧௬0)

முளிசினைத்தருக்கள்யாவுமுன்னையிற்பசுமையெய்தித்
தளிர்குழைத்தரும்புதோன்றப்பாடியதையறன்னைக்
களியொடுங்கண்ணனோக்கியாசைநோய்கவற்றமாழாந்
தளிபெறுவாயில்காணான்பார்த்தனதருகுசார்ந்தான். (௧௬௧)

எண்ணம்வெருவிநெஞ்சங்கலுழ்ந்துளமிடைந்தவாற்றாற்
கண்ணன்முன்போலத்தூக்குமுறிதடவந்துகையால்
வெண்ணெயைவாரியுண்ணவிக்கின்றாருண்டோவென்ன
வண்ணலையசதியாட்டிப்பார்த்தனாண்டறைந்தாளன்றே (௧௬௨)

தண்ணறுங்கமலவிட்டிற்றுக்கணங்கனையகோதை
வண்ணப்பூஞ்சோலைசூழுமாதவிப்பந்தர்தன்னிற்
பெண்ணலங்கனியநின்றுபெரியாழுளர்ந்துபாடும்
பண்வலைவீசியென்றனாருயிர்படுத்தாளென்றான். (௧௬௩)

உலகெலாம்பவளவாயினுண்டுமிழ்ந்தளந்துகாத்து
மலகிலாமாயைசெய்யுமையநீயறிவிலாரி
னிலவுகொப்புளிக்குமுத்தநிரைத்தமென்பவளச்செவ்வா
யிலவிதழ்கண்ணிற்பட்டதேழமைப்பாலதென்றான். (௧௬௪)

காவியுங்கயலும்வேலுங்கருவிளமலரும்வென்று
மாவடுமருட்டுநோக்கின்வருமுலைப்பவளச்செவ்வா
யோவியமெழுதவொண்ணாவொண்டொடிவனப்புமுற்று
மேவரக்காணிலீதுவிளம்பலைநீயுமென்றான். (௧௬௫)

நீளிருந்தூணிற்றோன்றியிரணியனெஞ்சஞ்செய்ய
வாளுகிரதனிற்போழ்ந்தமானிடமடங்கல்பைம்பொற்
றாளதாமரைநுண்ணூலிற்சிமிழ்ப்புண்டதன்மைத்தன்றோ
காளமாமுகிலோர்பேதைக்கண்வலைப்பட்டதென்றான். (௧௬௬)

அறற்கருங்கூந்தற்கண்வாள்போழ்ந்தநேர்வரியாதென்னைத்
திறப்படத்தேற்றுமாறுசெருவினில்வளைந்தவொள்வா
ணிறத்திடைக்கதிர்வேல்பாய்ந்தநிளிரும்புண்ணிற்சேர்த்தி
யிறைக்கொளிதிருத்தம்வென்றிவீரர்தஞ்செயலாமென்றான். ()

காழ்ப்டுபொரைச்சாந்தின்கலவையஞ்சேறுகோட்டிக்
கேழ்கிளர்நிலவுத்திங்கள்மணிவடங்கிடந்தகொங்கை
மாழைமென்னோக்கிக்கண்ணின்வள்ளல்கோட்பட்டவாற்றா
லாழ்வினைதன்னையாரேயுப்புறங்காணவல்லார். (௧௬௮)

நிறையறிவொழுக்கங்கல்விநெறியுறுவாய்மைதூய
பொறையொருவடிவுகொண்டபுனிதயான்புகல்வதெல்லாஞ்
சிறைகொள்வான்புனலின்மீதுதீட்டியவெழுத்துப்போலு
மறைகடற்கரைகொன்றேகின்யாவரோயமைக்கவல்லார். (௧௬௯)

மதுக்குடம்விரித்தன்னவண்டுவிழ்கமலப்போதோ
புதுப்புனல்படியுந்தெய்வப்புணரியோவிடம்பொற்பார்ந்த
கதிர்க்குலமுமிழுஞ்செய்யகவுத்துவமார்பவுன்றன்
முதுக்குலைமொழிக்குந்தீஞ்சொன்முற்றிழையிடலதென்றான்.

முழுநெறிக்குவளையுண்கண்முத்தமென்முறுவல்வெற்பி
னெழில்குவிந்தனையகொங்கையிலவிதழ்க்காந்தளங்கை
யழகுவீற்றிருந்தவேய்த்தோளணங்கிடங்கமஞ்ஞைமேய
மழைமுழுதுகுரிஞ்சுங்காவின்மாதவிப்பந்தரொன்றான். (௧௭௧)

துளிப்புயலுறங்குகாவின்மாதவிப்பந்தர்சோதிப்
பளிக்கறைமருங்கினெய்திப்பணைமுலைப்பவளச்செவ்வாய்க்
களிக்கயத்தடங்கணாளைக்கண்டியான்மீளுங்காறு
மளிக்கொருபுணரியன்னவையநீவருந்தேலென்றான். (௧௭௨)

அண்டகோடிகளும்பூத்தவண்ணல்பேரறிவுமுற்று
மொண்டுகொண்டருந்தும்வேற்கண்பரப்பியெத்திசையுநோக்கி
தண்டலைமருங்குபுக்குத்தனிவிளையாடுங்கொல்லோ [த்
வண்டுளர்கோதையென்னவெண்ணினன்மருங்குசென்றான். ()

குங்குமமெழுகியோங்குகுலிகமென்செப்பேகொங்கை
செங்கயலிணையேவாட்கண்டிருமறுமார்பன்சொன்ன
வங்கலும்மேனிச்செய்யவாரணங்கிவளேயின்ன
கொங்கவிழ்சோலைதானேகுறிந்திடுமிடமதாமால். (௧௭௪)

ஈர்க்கிடைபுகாதுவீங்குமிளமுலைநெருக்கிற்பட்டுப்
போக்கறக்கிடந்தநெஞ்சமொருவழிமீட்டுப்போதந்
தேக்கறவனைத்துமென்பாலியம்பியவேந்தன்றன்னை
வாக்கினாலிகழ்ந்தவென்போலியாருளர்வன்கணாரோ. (௧௭௫)

குயில்குடைந்தாடுமந்தண்கொழுமலர்ச்சோலைவைகும்
புயல்புறங்கொடுக்குங்கூந்தற்புரிகரம்பிரங்குதீஞ்சொன்
மயிலனாள்கண்ணிற்பட்டுமாங்குவந்தெய்திவாய்ந்த
செயலொடுமுணாத்ததாளைதிண்ணியனாகுமென்றே. (௧௭௬)

அஞ்சனமெழுதிவேல்போன்றம்பலைத்தகன்றவாட்க
ணஞ்சுதன்றலைக்கொண்டுள்ளநடுங்கியநம்பியாவி
துஞ்சுதலொழித்துமீட்குஞ்சுணங்குபூத்தலர்ந்தகொங்கை
வஞ்சிநுண்மருங்கிற்செவ்வாயமுதெனமனக்கொண்டானே. ()

சங்கொடுகுலிசமீனஞ்சக்கரம்பொறித்தசெய்யப்
பங்கயமலர்த்தாடோய்ந்தவழியினைப்பரிவிறைக்கி
யிங்குயிர்தொடரப்போக்கினின்னிறையெளிதிற்கொண்ட
பொங்கிளமுலையினாளைப்புனத்திடைக்கண்ணுற்றேனால் (௧௭௮)

என்னலும்புயங்கள்வீங்கியின்னிளமுறுவனல்கி
முன்னெனையளித்தபைம்பொன்முகிழ்முலைக்கனிவாய்வல்லி
மன்னுமக்காவிலின்னும்வரந்தரவதிந்ததென்னாப்
பொன்னினார்ப்பொதும்பர்நாடிப்போயினன்புலவுவேலான். ()

ஙமழகதிர்ப்பருதிநோக்கிவாண்முகமலர்ந்துதோன்றும்
பொழிமதுக்கமலம்போன்றும்புயல்வரவெதிர்ந்துநோக்குந்
தழைசிறைமஞ்ஞைபோன்றுந்தளருமென்வரவுநோக்கி
நிழலுமிழ்மதிதாழ்சோலைநின்றதென்னுவிதானே. (௧௮0)

குமிழ்மிசைமயிந்துமீண்டுகுழைபொருதலைக்குங்கண்ணு
ளமிழ்துறழ்பவளவாயினருத்தியிற்குழித்ததூய
கமழ்தினையமுதமாந்தப்பெற்றதாற்புலவுகாலு
மிமிழ்தினையமுதமுண்டபுலவரோவென்னநேர்வார் (௧௮௧)

அங்கலுழ்மேனிச்செவ்வாயாய்பிழியமுதந்தூற்றும்
பங்கயப்பருமவல்குற்பைந்தொடிபழிப்பிற்செவ்வி
தங்குமின்னுதற்காற்றுதரிப்பறவுடைந்தேயன்றே
திங்களஞ்செல்வநாளுந்தேய்ந்துடல்விளர்ப்பதென்னு. (௧௮௨)

சிந்துரத்திலகநெற்றிச்சேயிழைசெல்விபோற்றி
மந்தரப்பொருப்பைமானுமணித்தடந்தேரினேற்றி
வெந்திறல்விசயன்மான்றேர்செலுத்தவிண்ணிழந்ததன்ன
விந்திரப்பிரத்தந்தன்னிலெளிதின்வந்தெய்தினானே. (௧௮௩)

பரவைசூழ்ஞாலமேழுந்தனதடிப்படுத்திவாழுந்
தருமனைமுதலவீரர்தாழ்ந்தெதிர்கொண்டுபோற்றி
விரிகதிர்கவிழ்க்கும்பைம்பூண்வெண்டுகில்மாலைசாத்தி
மருமலர்த்துளவினானைக்கடிமணக்கோலஞ்செய்தார். (௧௮௪)

கத்திகைக்கருமென்கூந்தற்றுரோபதையுலூபிகாமர்
சித்திராங்கனையிடுஞ்சுபத்திரைதிருவைமானு
முத்துறழ்முறுவற்செவ்வாய்முகிழ்முலைக்காளிதன்னை
வித்தகப்பூண்கள்யாவும்விழுமிதிற்புனைந்தாரன்றே. (௧௮௫)

வலம்புரிச்சங்கமார்ப்பவார்முரசுயர்த்ததோன்ற
லலங்கலங்குன்றமன்னக்கண்ணனுக்கழல்சான்றாகக்
கலஞ்சுமந்தெழுந்துவிங்குங்கதிர்முலைக்காளிதன்னை
நலம்படுமோரைதன்னினன்மணமுடிப்பித்தானே. (௧௮௬)

காண்டவத்தனஞ்செய்வான்கருதியபார்த்தனுக்குப்
பூண்டபேரன்பினோடுந்துணைசெய்துபொருவிறிண்டேர்
மாண்டகுவரிவிற்றூணியழற்கிறைவழங்கநல்கிச்
சேண்டொடுகொடியுநானுமயனல்கச்சிறப்புச்செய்தான். ()

மைத்துனத்தோழரெய்திவான்சிறப்பியற்றநாளும்
பைத்தபாம்பணையவல்குற்படர்முலைக்காளியின்பந்
துய்த்திருதிங்களாங்குவைகிமென்றுளவமாயன்
செய்த்தலைவாளைதாவுஞ்செழும்புனற்றுவரைசேர்ந்தான். ()

வேறு.

அன்னமேவியகழனிசூழவந்திவேந்தனளித்தருண்
மின்னுநக்கவொள்வாளுடைவிந்தனுமனுவிந்தனு
மின்னுயிர்த்துணையாயபேரொழில்கோணமித்திரவிந்தையைப்
பன்னகக்கொடிமன்னர்கோன்பாலளித்திடவெண்ணினன். ()

தண்ணந்தாமரைத்தவிசின்வாழ்தாக்கணங்கெனவழகுறும்
வண்ணமேகலைபவளவாய்மடந்தைமித்திரவிந்தைதான்
கண்ணன்மேலுறுநசையுளங்கவற்றவிள்ளரிதாயமா
லுண்ணிறைந்திடவேனிலானுடற்றுவாளியொடொழுகுநாள்.

விடங்கவிழ்த்தொளிமானவேல்விந்தனுமனுவிந்தனு
மடந்தைமித்திரவிந்தையைவதுவையாற்றிடுசேயமர்த்
தடங்கமன்னவர்வருகெனுவங்கையாழிபொறுத்திடு [ர்.
முடங்கல்போக்கினரொல்லையின்மன்னர்மொய்த்தவணெய்தின

பொதுவொழித்துயருலகெலாம்புரக்கும்வேற்றுரியோதன
னதிர்கொடுஞ்சிலைக்கன்னனோடங்கர்வங்கர்கலிங்கர்மற்
றெதுகுலத்தொருதீபமாங்கண்ணனெண்ணறுமன்னவர்
வதுவையாற்றிடுசயமரமண்டபத்திடையெய்தினர். (ககூஉ)

இறுமருங்கொழியப்பணைத்தின்னும்வீங்குதும்பாமெனுக்
கொறுகொறுத்தெழுந்தோங்கியகொம்மைவெம்முலைக்கோதை
மறுவில்பேரொழில்பாவைபூமணியின்முற்றிமறைப்பபோற்[தன்
செறிகலன்பலகைசெயாவதுவைமண்டபஞ்சேர்த்தினர். ()

முருகுயிர்த்தழிநறவுகாண்மொய்த்துழாய்முடியண்ணலைப்
பருகுவன்னதன்னேக்கிறைப்பாசிழைக்கொடிநோக்கலு
மரசவெள்ளமுளம்பதைத்தஞ்சவஞ்சனவண்ணனூர்
விரைசென்மான்றடந்தேரின்மேன்மின்னையேற்றினனேகினன்.

ஏகலேகலெனத்தொடர்ந்தமரினேற்றெதிர்கண்ணனு
நாகவெங்கொடியோனுமேனண்ணும்வெய்யதுரோணனு
மாகவெங்கணுமம்புபாய்ந்தஞ்சவல்வில்வணக்குரு
வாகைகொண்டுயர்புரிசைசூழ்துவரைமாநகர்மருவினன். ()

எதுகுலத்துறுமன்னர்தாம்யாருமுள்ளமுவப்புறப்
பதலைசங்கமுழங்கவப்பாவைமித்திரவிந்தையை
வெதிரிசைத்தருள்செங்கண்மால்வெய்யசெந்தழல்சான்றதாய்
வதுவையாற்றிவிருப்பினொல்வனமுலைத்துணைபுல்லினன். (ககூசு)

வேறு.

குரவமீன்றபூம்பாவையைக்குறத்தியரோந்திக்
கருணைகூர்ந்துதாலாட்டிறுங்கவுசலதேயம்
புரவுபூண்டுயர்நக்கினசித்தெழில்பூத்த
வரவமேகலைச்சத்தியதனைமகிழ்ந்தளித்தான். (ககூஎ)

கன்னலின்சுவைபுளித்திடக்கனிந்திடுந்தீஞ்சொற்
பொன்னம்பூஞ்சுணங்கரும்பியப்புணர்முலைக்கொடியைக்
கொன்னுனைப்பெருங்கோட்டிமிலேற்றையேழ்தழுவு
மன்னவர்க்கியான்கொடுக்குவலெனமனம்வலித்தான். (கசஅ)

கொங்குகொப்புளித்தலர்ந்தபூங்கொம்பரிற்றேன்று
மங்கையாக்கமுமனைத்தினியற்கையுமறித்துச்
செங்கண்மால்விடைதழீஇயினர்கொள்கெனச்சிறந்த
வங்கண்மாநிலத்தரசருக்குணர்த்தினனளித்தான். (கசகூ)

அழகுகண்படுத்தவிர்சுணங்கலர்ந்தெழின்மார்ப
முழுவதுங்கவர்ந்தோங்கிவெண்முத்தணிதாங்கித்
தழுவுதற்கடங்காதுயர்தடமுலைபுணர்வான்
விழைவின்மன்னவர்யாவரும்விரைவின்வந்திறுத்தார். (உ00)

ஞாலமேம்புகழ்நக்கினசித்துநன்னகரிற்
காலனுருயிர்பலியுணக்கடுங்கணைதுரக்குந்
தாலமாத்திரமுயர்சிலைவிசயனுந்தாங்க
வேலைவாய்த்துயில்கண்ணனும்விரைவின்வந்திறுத்தார். (உ0க)

காழகிற்புகைமுகிலெனக்களிமயிற்கதுவு
மேழ்நிலச்சுடர்மாளிகைக்கவுசலத்திறைவன்
குழிருங்குழற்சத்தியதனைக்குணர்கென்ன
மாழைநோக்கியர்வதுவைமண்டபத்தினிற்கொணர்ந்தார். ()

வேட்டம்போகியகளிறனார்விளங்கிழைதரள
மோட்டுவெம்முலைக்கோட்டினுக்காற்றலர்முனிந்து
பூட்டுவிட்டெதிரொழவிடைதழுவமுன்புகுந்து
கோட்டின்மாய்ந்தனர்சிலர்சிலர்வெரீஇப்புறங்கொடுத்தார். ()

செங்கணேற்றினைத்தழுவுதலரிதெனத்திரண்ட
வங்கண்மாநிலத்தரசெலாநெஞ்சழிந்திடலும்
பங்கயச்செழுங்காடுபூத்தலர்ந்துயர்பருவ
மங்குன்மேனியன்மற்றுமோர்விடையெனநடந்தான். (உ0ச)

எழுந்துதன்னுருவேழுருவாகியேழ்விடையு
மழுந்துறத்தழீஇவீழ்த்தலுமலர்கதிர்த்திங்கட்
கொழுந்துபோனுதற்சத்தியைக்கொணர்ந்தபொன்மாலை
தொழுந்திறற்றிருமாலுக்குச்சூட்டினளன்றே. (உ0ரு)

அன்னகாண்டலுமலங்கிலைவேற்சராசந்தன்
கன்னன்வெந்திறற்சுயோதனன்சகுனிகார்முகத்துக்
கென்னையொப்பவர்யாரொனும்விறற்சிசுபாலன்
மின்னுநக்கவேற்சல்லியன்முதலினோர்வெகுண்டார். (உ0கூ)

ஏற்றமன்னரையெறும்வலிப்பொருவிருள்விசயன்
கூற்றுமஞ்சுறக்காண்டிபநெடுஞ்சிலைகுழைத்துப்
பாற்றினஞ்சுழல்பகழிகடேர்ந்தகன்மார்ப
மூற்றிருந்துவெங்குருதியாறெழுமெடப்பிளந்தான். (உ0எ)

பைத்தபாம்பணைத்துயிலருபங்கயக்கண்ணான்
கைத்தலத்துறுகார்முகக்கணைகளுக்காற்று
தெத்தலத்துறுமன்னருந்தனித்தனியிறைஞ்சித்
தத்தமாநகர்பகல்படுகெங்குலிற்சார்ந்தார். (உ0அ)

நாமவேலுடைநக்கினசித்தெனுமுரவோன்
காமர்வண்டுழல்கருந்துழாய்முகிற்கழல்சான்றாய்த்
தாமரைத்தவிசுறைதருசத்தியதனையை
யேமவார்முரசியம்பிடீரொடுமீய்ந்தான். (உ0௯)

அரங்கக்கூற்றியராயிரமாயிரம்புரவி
பொருங்கடாக்களிறயிரமாயிரம்பொலிதேர்
நரந்தநாவியோராயிரமளப்பநன்னிதியம்
பரிந்துநல்கினன்பங்கயச்செங்கணான்றனக்கே. (உ௧0)

தாரைவேல்விழிச்சத்தியைதட்முலைபுல்லி
யார்வமீக்கொளவேழ்பகலமர்ந்தவளோடும்
வீரவெஞ்சிலையருச்சுனன்றன்னொடும்விரைவிற்
காங்கிறத்தினோன்கடிமதிட்டுவரையினடைந்தான். (உ௧௧)

வேறு.

குழவிமதிக்கூன்முறுகுறிஞ்சுங் குடுமிமாடமுடுத்தோங்கி, யெழில்கண்படுக்குங்கேகயநாட்டிறைவற்கமுதாஞ்சுதகீர்த்தி,விமைவினீன்றவேய்த்தடந்தோண் மின்னுக்கொடிபத்திரையென்பாள், கழையாலாவின்கணங்குவித்தகண்ணன்மடந்தோள்விருப்புற்றாள். (உ௧உ)

அன்னகாலைவேய்த்தடந்தோளம்மென்முலைபத்திரையென்பாடன்னதுயரின்மிகச்சிறந்ததமயன்சந்தாத்தன்றெளிரும்பொன்னங்குடுமிவெயிலுடுத்ததுவராநகரிற்றனிபோந்துமன்னுமன்பினெடுஞ்சிறந்தமாமனுழையிற்புகுந்துரைப்பான். ()

வடிவேற்றடக்கைவசுதேவன்பாதம்வணங்கியுன்றங்கை, யொரடிலன்பிற்சுதகீர்த்தியுவப்பினீன்றபத்திரையாங், கொடிமென்மருங்குப்படர்முலையைகண்ணற்களிப்பான்குறுகினனென், மடல்கூர்ச்சந்தாத்தன்னுரைப்பமகிழ்வினேடுமெவைநேர்ந்தான். உ௧௪

வண்ணத்தடந்தோள்வசுதேவன்மகிழ்வினெடுந்தானுயிர்த்த
கண்ணற்கிவைகளனைத்தினையுங்கழறிக்கடலந்தானையொடு
மண்ஞங்கதிர்வேன்மருகநெடுமைந்தரோடுநளிநிரைய [ன்.
தெண்ணீர்வளங்கூர்கேகயநாடதனில்விரைவிற்சென்றடைந்தா

அடைந்தவசுதேவனைமுதலா மரசரெவர்க்குஞ்சிறப்பளித்து, கடைந்தமணிச்செப்பெனவீங்கிக்கதிர்த்தமுலைபத்தினையென்றுங், குடங்கைக்கடங்காமதர்நெடுங்கட்கொம்பர்தன்னையமல்சான்றாய், மடங்கலனையகண்ணனுக்குநீரோடினிதின்வழங்கினான். (௨௧௬)

தாமமணிச்செப்பெனப்புடைத்துத் தழுமுற்றெய்தாத்தரளமுலை, நாமவடிவேற்கண்ணியொடுங்கிளைஞரோடுநனிக்கடலின், காமரகழிசூழ்கிடந்தகன்னிப்புரிசைத்துவரைதனி, லேமமுரசமெழுந்தார்ப்பக்கண்ணன்போதந்தினிதிருந்தான். (௨௧௭)

கரும்புமேய்ந்தமோட்டெருமைக் கறிக்கும்பசும்புலுணுத்தெவிட்டி, விரிந்தபலவின்வீழ்ந்தசுளைகுதட்டியவிழ்ந்தவிளைக்கழுநீ, ரருந்தித்துயிலுமத்திரநாடாளுங்கதிர்வேல்விருசேனன், புரிந்ததவத்தாலிலக்கணையாம் பொன்னங்கொடியையினிதுயிர்த்தான். (௨௧௮)

உலகமனைத்தும்வேனில்வேளொருகோலோச்சியடிபடுத்த
வலகில்சமயக்குறும்பகற்றியானைநிறுத்திமதர்வேற்க
ணிலவத்துவர்வாயிலக்கணையென்றியம்புங்கோதைகாதொிர்ந்த
கலவமஞ்ஞையென்னநாளுங்களிப்போடினிதின்வளருநாள். ()

செங்தேன்பருகித்தேக்கெறிந்து தெவிட்டிச்சுரும்பர்கிடந்துறங்
பைந்தார்கோதையிலக்கணைதன்பருவமுதிர்ச்சிநோக்கியவ[கும்
டந்தைமதிநூற்றுறைபோயதவறிறேர்ச்சித்துணைவரொடு
நந்தாதெண்ணிமணம்புரிவானன்கினுள்ளத்திடைவலித்தான்()

விண்ணினியங்குமோர்கயலைவிரைசேமிகிரிமேனின்று
தெண்ணீர்நிழலிற்றனிநோக்கிச்சிலைகால்வளைத்துவிடுகணையா
லெண்ணவெய்துவீழ்த்தோர்க்குநங்கையுரியளெனநகரின்
மன்னுமுரசமறைவித்துமன்னர்க்கோலைபோக்கினான். (௨௨௧)

ஓலைப்பொருடஞ்செவியுறலுமொலிக்குங்கடலினுவகையெழ
மாலைக்குன்றமெனத்தடங்தோள்பணைத்துவீங்கமான்றேரில்
வேலைப்புவியிலினிதமரும்வேந்தர்யாரும்விரைந்தெழுந்து
காலைக்கதிர்வேன்மத்திரன்றன்கடிமாநகரம்வந்தடைந்தார். ()

வந்தவரசரெல்லோர்க்கும் வழுவாதியைந்தவான்முறையி, னந்தமறுவான்சிறப்பியற்றியிருந்தபின்னரணிசுமந்த, நந்தாவிளக்கையிருநிலத்திடைக்குமின்னுச்சுடர்க்கொடியைச், செந்தார்க்கிளியைமன்னருறை.செம்பொன்மாடந்தனிற்கொணர்ந்தார்.

வேந்தர்யாருங்கேண்மின்கள்விண்ணிற்சுழலுமிலக்குமிஃ
தேந்துங்கரியவில்லுமிஃதம்புமிஃதேயெய்தோர்க்குச்

சாந்தங்கோட்டிச்செம்மாந்துநராளஞ்சுமந்துதனிவனப்பு
வாய்ந்தமுலையாளுரியளெனத்தாதையுள்ளமகிழ்ந்துரைத்தான்

தண்ணங்கமலமுகங்குவியவழகுவிரிக்குந்தயங்கொளிய
வண்ணமுகத்தினிடைகிடந்துவள்ளைபுரட்டுமிருகயற்கும்
விண்ணவிற்குலவுமொருகயற்குமாற்றாகிவிறல்வேந்த [ர்.
ரண்ணல்வரிவிலெடுத்தேறுநாணேற்றலரிதென்றகன்றுயிர்த்தா

தரியார்வயிற்றினெரிதவழவடிவாள்விதிர்க்குஞ்சராசந்தன்
வரிவிலெடுத்துநாணேற்றிவாங்கலாற்றாதுளமெலிந்தான்
பொருவேற்றடக்கைச்சிசுபாலன்புரிநாணொருநால்விரல்வாங்கி
மருவுந்தடக்கைமலர்போலமனமுங்கன்றிவருந்துற்றான். ௨௨௬.

சாந்தமூழ்கிபுலம்பொருததடந்தோட்டுந்தவக்கிரனும்
வேந்தன்வரிவிற்புரிநாணிலொருசாணவாங்கிவெய்துயிர்த்தா
னேந்தற்கரியவரிசிலையைக்கன்னனெளிதினெடுத்தேந்திப்
பூந்தார்புரளுந்தோள்கழியவாங்கியுள்ளம்புலர்ந்துயிர்த்தான் ()

கொல்லுங்கூற்றுங்கண்புதைப்பக்கொடித்தேர்கடவுந்திறல்வீம
வில்லின்வரிநாண்டோள்கழியவாங்கியுளத்தின்வீக்கமற்றான்[ன்.
கல்லென்வேலையுலகளிக்குந்துரியோதனன்வெங்கார்முகத்தை
மல்லார்திரடோளுறவாங்கிமகுடந்தெறிப்பவீழ்ந்தொழிந்தான்.

மண்ணின்விசும்பிற்பாதலத்தில்வரிவிற்கொருவனெனநின்ற
வண்ணல்விசயன்சிலைக்குடுமிகுழையவாங்கியம்புதொடுத்
தெண்ணற்கரிதாய்க்கறங்கிலக்கநீருணைக்கித்திகிரியிவர்ந்[தால்.
துண்ணின்றியங்குங்கயல்பொதுங்க வெய்தானூழின் வீழ்ந்தில

குருகின்பகுவாய்க்கிழித்தெதிர்ந்தகொல்லேறடர்த்தகோபா லன், வரிவெஞ்சிலைகால்குனித்ததும்பொற்றடந்தோள்கழியவா ங்கியதும், விரைசெறிகிரியிவர்ந்ததுநீர்நிழலின்வெங்கோல்செ லுத்தியதுந், தெரியக்காணார்கயன்மறிந்துநிலத்தின்வீழ்ந்தசெ யல்கண்டார். (௨௩௦)

விண்ணோரந்தண்மலர்மாரிபொழிந்தாரரசர்வெள்கினு
ரண்ணாந்தெழுந்துசெம்மாந்தவம்பொற் சுணங்கார்முலைசுமந்து
வண்ணமருங்குலிறுமென்னச்சிலம்புபுலம்பவந்தெய்திக்
கண்ணன்மார்பிலவள்மாலைபுனைந்தாள்கமலமனைதுறந்தாள். ()

சுரிசங்கலறமுழவதிரவளவார்முரசந்துவைப்பவுயர், கனை கொன்றிரங்குகருங்கடலின்மாதர்குரவையொலிகலிப்ப, விரை கொப்புளிக்கும்பசுந்துளவோன்விளரிநீத்திஞ்சொலிலக்கணையை ப், பரிவின்வேட்டுவளர்பச்சைப் பசுங்காம்புறழ்தோணலநுகர் ந்தான். (௨௩௨.)

நிம்பால்புளிப்பத்திக்குஞ் சில்லென்கிளவிக்கிள்ளையொடுங்
காம்பாலினியவிசைமுரலுங்காயாமேனிக்கோபாலன்
பாம்பார்கொடியோன்வீமன்முதலரசர்யார்க்கும்பணியருளி
யேம்பால்புரியும்விசயனொடுந்துவரைநகரமெய்தினான் (௨௩௩)

சுரும்புமுசாமலர்க்கோதைசுடர்வேலுண்கணுருப்பசியும்
விரும்புந்தடந்தோள்விசயனுக்குச்சிறப்பினோடும் விடைநல்கிக்
கரும்புமழுதுங்கோற்றேனுங்கலந்தகனிவாயந்தீஞ்சொன்
முருந்தின்முரன்மகளிரொடுங்கண்ணன்முயங்கியுறைபுநாள். ()

வேறு.

புயல்போன்மதமாரிபொழிந்துலவு
மயிராவணமேலமரர்க்கிறைவன்
வெயிறும்மியவெங்கதிர்நெற்றியுறு
மெயில்சூழ்துவரைப்பதியெய்தினனால். (௨௩௫)

எய்தாமுனியைந்தசிறப்பினிதிற்
செய்தாய்பிழிநாற்றுசெழுந்துளவக்
கொய்தாரினன்வந்தவைகூறுகென
வையார்வயிரப்படைமால்பகர்வான். (௨௩௬)

திருமார்பவென்னைதிருக்குழையிற்
குருமாமணிசேர்த்தியகுண்டலமும்
விரிமாமணிமாடமும்வெண்குடையு
நரகாசுரன்வெள்ளவிடந்தனனால். (௨௩௭)

என்றுமுனிரும்பறவைக்கரசை
முன்றுமுகில்வண்ணனினைந்திடலு
மின்னார்சிறைவிட்டுவிளங்குசெழும்
பொன்மால்வரைபோன்மெனவந்தனனே. (௨௩௮)

வந்தெய்துவணத்திறைவன்பிடரிற்
சங்கங்கமழ்சத்தியபாமையொடுங்
கந்தார்கரிகொன்றகருந்துளவத்
தந்தார்புனையண்ணலிவர்ந்தனனால். (௨௩௯)

கள்ளூறுகருந்துளவோனுவணப்
புள்ளூர்திபெருத்தின்மிசைப்பொலியா
வெள்ளானையிவர்ந்துயர்விண்ணவர்கோ
னள்ளார்புரவாயிலினண்ணினனே. (௨௪௦)

நரகாசுரனன்றுபிலத்திடைபோய்
வரைசூழரண்வான்கதைகொண்டுடைத்
தெரிசூழரணைமிதிபினெற்றிவிடா
முரபாசமறுத்துமுனிந்தனனால் (௨௪௧)

எழிநீரரணொற்றிடுகோலரணீள்
தெறுவெம்படைசூழரணஞ்சிதைய
விறலோன்வடிவெங்கணைதூவவெயிற்
பொழிசிந்தவொலித்ததுபோர்வளையே. (௨௪௨)

வரைகொன்றுயர்வச்சிரவாள்வலனேந்
துரவோன்மகிழ்வுற்றிடவும்பர்பிரான்
முரனாவிமுடித்தவன்மைந்தர்நெடுஞ்
சிரம்வீழவடிக்கணைசிந்தினனால் (௨௪௩)

உருமுக்குரலோடைமுகத்தழல்கட்
பொருவேழமிவர்ந்துபொருப்புறமும்
வரிவெஞ்சிலைவாளிகடூய்வெகுளா
நரகாசுரன்வந்தெதிர்நண்ணினனால். (௨௪௪)

நண்ணுநரகாசுரனீண்முடியும்
பண்ணுங்கரியேந்துபனைக்கரமும்
வண்ணத்திரள்வாலதியுந்துணியக்
கண்ணன்றிகிரிப்படைகட்டதுவே. (௨௪௫)

வேறு.

சேணுறையமரர்மலர்மழைபொழிந்து திருமறுமார்பனையேத்த, நீணிலமடந்தையதிதிபாற்கவர்ந்தநிழலுமிழ்மகரகுண்டலமும், வாணிலவெறிக்குமுத்தவெண்குடையுமளித்தடிவணங்கினளேகப், பூணணிமார்பன்புரிசைசூழ்பார்க்குச்சோதிடவளநகர்புகுந்தான். (௨௪௬)

காய்சினத்தவுணனிருஞ்சிறைப்படுத்தகாவலர்தமைவிடுத்தவர்த,மாயிருஞாலமுழுவதும்வழங்கிமற்றவன்சிறையினில்வைத்த, சேயரித்தடங்கட்சுணங்குபூத்தலர்ந்தவருமுலைச்செங்கனித்துவர்வா, யாயிழைமகளிரொருபதினாறாயிரருநல்லணிபெறுகலையும். (௨௪௭)

நிலந்தினக்கிடந்தநீணிதிக்குவையு நிழல்சுளிகடாத்தநாற்கோட்டு, வலம்படுவேழத்தொகுதியுங்கட்வுட்கலினவாம்புரவியின்றிரளும், பொலன்கொடிதொடுத்தகொடிஞ்சிமான்றேரும் பொன்செய்நன்புலவர்கைசெய்யாக், கலன்களும்பிறவுமதிவடிம்பிடறுங்கடிமதிட்டுவரையின்விடுத்தான். (௨௪௮)

துணிகதிர்ப்புரவித்தழும்புறநிவந்த தூச்சுடர்விரித்திருள்விழுங்கு, மணிநெடுவரையைமண்டபத்தோடும்வள்ளுகிர்க்கலுழன்மேலேற்றித்,தணிவருங்கற்பினருந்ததியனையசத்தியபாமையோடேகி, யணிகெழுவிசும்பினதிதியைவணங்கியாய்கதிர்குண்டலமளித்தான். (௨௪௯)

கொடுத்தடி வணங்குமைந்தனேத்தழுவிக்குட்ங்கையினெடிய வாட்டடங்கட், சுடர்த்தொடிக்கனிவாய்ச்சத்தியபாமையுளமகி ழ்ந்தாங்கவெஞ்ஞான்று, மடுத்தகன்றிடாதவிளமையுந்தெய்வவா சமுமளித்தனளுவப்பின், விடுப்பவைந்தருவுங்கவர்ந்துபைந்து ளவோன்வேலைசூழ்துவரையினடைந்தான். (உ௫0)

பொன்னெயிலுடுத்தபிலத்திடைநின்றுங்கொணர்ந்திடும்பு ணர்முலைத்தடந்தோட், கன்னியர்பதினாறுயிரர்தமையுங்கடிம ணமுடித்திடக்கண்ணன், றன்னுருபதினாறுயிரமுருவாய்ப்பிரித் தவர்தங்களைமணஞ்செய், தன்னலார்தம்மைக்கங்குலும்பகலும் பிரிந்திடாதருநலநுகர்ந்தான். (உ௫க)

ஆலமுமமுதும்வென்றுவெங்கூற்றையமர்க்குநீவல்லையேல் வருகென், றோலைவிட்டுலவிமதர்க்கும்வேற்றடங்கணொண்டொ டிவண்டுபாட்டயரு, மாலைதாழ்கூந்தற்செய்யவாயுருக்குமணி யொடுமன்னிநிறவண்ணன், கோலநீண்முடியுங்குலமுமற்றில்லா வென்னைநிவிழைந்ததென்குறித்தே. (உ௫உ)

என்றலுமுள்ளநடுங்கிவாய்புலரவெழில்செய்வாண்முகஞ் சவிமழுங்கப், பொன்றினள்போலக்கையறவுற்றுப்பொலங்கொ டிவீழ்தலுமையன், றுன்றிருங்கூந்த லொருகையான்முடித்தங் கொருகையான்மழைக்கணீர்துடையா, மன்றவோர்கையாலணை த்தொருகையால்வருந்தறவாசநீர்தெளித்தான். (உ௫௩)

ஐயரிபரந்துகுழைகிழித்தோடி யாங்கனூர்க்குழையிடுங்க ண்ணி, கையறவொழியவுளஞ்சிறிதுணர்ந்துகண்ணன்வாண்மு கத்தினைநோக்கி, மெய்யினுண்மெய்யாய்வெளியினுள்வெளியா ய்வேதமுமறிந்திடாநினக்கு, மையன்மானுடர்போல்வடிவமுங் குலமும்வண்மையுமுளகொலோவுரையாய். (உ௫௪)

என்றவளேத்தவசோதைபொற்குறங்கி னெழுதருமறையி னொலிலையி, னன்றுணரன்பருளத்தினினமருநாரணனினிதுளம கிழ்ந்து, மன்றலங்கமலமலர்மனைதுறந்து மன்னவர்மனையினில் வளரும், பொன்றவழ்முலையாணன்னலம்பருகிப்பொலிவுடனு றைதருநாளின். (உ௫௫)

கண்ணன்மணம்புணர்ந்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—உ0௬உ.

முப்பத்தொன்றாவது

கண்ணன் சிவதீக்ஷைபெற்றுநோற்றுச் சாம்பனைப்பெற்ற வத்தியாயம்.

ஒள்ளிழையுருக்குமணியெனுமடந்தையுயர்பிரத்தும்மன
ன்முதலா, மள்ளிலைவடிவேல்விறல்கெழுமைந்தர்பதின்மரைய
ழகுறவுயிர்த்தாள், கள்ளவிழ்மலரின்வண்டுவீழ்ந்தரற்றுங் கரு
ங்குழற்சத்தியபாமைத்,தெள்ளுநூற்கேள்விப்பானுவைமுதலா
ஞ்சிறுவரோர்பதின்மரையுயிர்த்தாள். (க)

தாளதாமரையினெழினலங்கவற்றுந்தளிரியற்சீறடிக்காளி,
வாளமர்நீந்துஞ்சுதனையேமுதலா மைந்தரோர்ப்பதின்மரையீன்
று, ணீளிருங்கூந்தன்மித்திரவிந்தைமிகாறுமிருகனைமுதலா, மீ
ளிமைமைந்தர் பதின்மரையுலகம் வியப்புறவிழைவொடுமளித்
தாள். (உ)

வேனில்வேள்குனிக்கக்குனித்திடும்புருவச்சத்தியைவிறல்
கெழுசுடர்வேற், பானுவைமுதலாயுரைத்திடுமைந்தர் பதின்ம
ரையினிதினிற்றந்தா, டேனமர்கூந்தற்பத்திரையென்பாள்சங்க
ரசித்தனைமுதலாங், கூனல்விற்றடக்கைமலையுறழ்தடந்தோட்கு
மரரோர்பதின்மரைப்பெற்றாள். (ங)

பானலங்கடந்தபணிமொழித்துவர்வாய்ப்படர்முலையிலக்க
ணையென்பா, டேனவிழ்தெரியற்பிரகோடனையாதிசிறுவரோர்
பதின்மரையீன்று,ளேனையபதினாறாயிரத்தொருநூற்றேந்திழை
மடந்தையரிகலு, மானவேற்புதல்வர்பதின்மரோரொருவர்மகி
ழ்வொடும்வயிறுவாய்த்தனரால். (ச)

விரைக்குழற்சாம்பவதிதளர்நடைய மைந்தரில்லாதுவெய்
துயிர்த்துக், கரைக்குறும்பெறியுங்கனைகடன்முகட்டின் கண்டு
யின்முகுந்தனைவணங்கித், திருத்துயின்மார்ப மகவுயிர்த்திருக்
குந்தெரிவையர்மலடியென்றேசத், தரைக்கொருபொறையாயு
யிர்சுமந்திருத்தறகாதெனக்கலுழ்ந்துரைத்தனளால். (ரு)

தன்னுயிர்புரந்தோர்தையலிற்றோன்றித் தளர்ந்துநின்றழு
தல்போற்கலுழு, மின்னிடைச்சாம்பவதியினைத்தேற்றி மெலிந்
திடேலளிப்பனென்றருளிக், கன்னவிழிரடோட்கண்ணனோர்ப
கலிற்சென்றுபமன்னியுநாளு, மன்னியசாலைமருங்கணைந்தவன்
றன்மலரடிவணங்கியீதுரைப்பான். (சு)

புண்டரமணிந்துதவளவெண்பூதி புனிதமாமெய்யினிற்பூ
சிக்,கண்டிகைபுனைந்துகடவுளிற்றோன்றுமுனிவகார்மிட்றுழு
க்கண்ண, வண்டர்நாயகனைக்கண்ணுறநோக்கிபெரும்பெறன்மை
ந்தனைப்பெறுதற், கெண்டருந்தவமே தியற்றிடிற்கூடு மெளிய
னேற்கியம்புதியென்றான். (எ)

அரில்வழக்கொழியநோற்றுவெண்டிங்கள் வனைந்திடுமங்க ணனருளாய், பிருகுமாமுனிவன்வெள்ளியென்றுணாக்கும் பெ ருந்தவமுனிவனைப்பெற்றான், பிருமறுயார்பகைக்கெவையரிய வாயினுஞ்செஞ்சடைக்கடவுள், மருவருங்கொடியதவமிழை த்தல்லாலல்வரம்வழங்கலனென்று. (அ)

வேறு.

மதிபுனன்மீனினோனுக்கியாமைபோன்மனத்தினுன்னிப்
பறவையிற்பரிசஞ்செய்துபழிப்பறுமொழிகள்கூறி
நறையவிழ்துளவினோனைநண்ணியபாசநீக்கி
யிறைவனஞ்செழுத்தினுண்மைகண்ணனுக்கியம்பினானே. (௯)

புண்டரமூன்றுநெற்றிப்பொலிந்திடவினிதுசாத்திக்
கண்டிகைமாலைசேர்த்திக்கதிர்நிலவுறழும்பூதி
வண்டுளவோன்றன்மேனிவயங்குறச்சாத்தியீசன்
றொண்டரிற்பொலிந்துதோன்றத்தூயவனாக்கினானே. (௧௦)

தண்ணறுந்துளவோன்சாற்றுமுனிவரனருளால்யார்க்கு
நண்ணரும்விரதம்பூண்டுநானிலந்தன்னிலுள்ள
புண்ணியவிலிங்கம்யாவும்வலஞ்செய்துபோற்றிப்பின்னர்க்
கண்ணுதறன்னைக்காண்பான்கருதருந்தவத்தினின்றான். (௧௧)

வார்சடைகட்டித்தூயமருங்கினிற்சீரைசுற்றிக்
கார்நிறத்தண்ணல்செய்யுந்தவத்தினைக்கருதிநோக்கி
யேர்குடியிருந்துவீங்குமிளமுலைக்கவுரியோடும்
போர்விடையிவர்ந்துமுக்கட்புனிதன்முன்றோன்றினானே. (௧௨)

இந்திரன்முதலதேவர்நான்முகனெடியவேற்கந்தன்
கந்தடுபுழைக்கைவேழமுகத்துடைக்கடவுண்மற்றை
நந்தியைமுதலவாயகணங்கள்சூழ்போதநண்ணுஞ்
சந்திரமோலிதன்னைத்தாமரைக்கண்ணன்கண்டான். (௧௩)

காண்டலும்பருதியேய்க்குங்கவுத்துவங்கிடந்தமார்பன்
சேண்டவழ்திங்கட்கண்ணிச்செல்வனைவணங்கிமுன்ன
மாண்டகுபன்றியாகிமாநிலமளப்பில்காலந் [ன்.
கீண்டுகண்ணுறாதபொற்றாள் கிடைத்தலுந்தலைமேற்கொண்டா

தொழுமகிழ்தூங்கிநின்றுதுள்ளுமெய்சிலிர்ப்பநோக்கி
யழும்வலஞ்செய்யுந்தூயவருமறைபாடித்தாளில்
விழுமிருகமலப்பொற்றாள்விழிமலர்குளிரவொற்றி
யெழுமளியோடுமீட்டுமிறைஞ்சுமீர்ந்துளவினோனே. (௧௫)

அடுத்தடுத்தன்பினோடும்வணங்குமாய்துளவினோனை
யெடுத்திருகையானீவிவிழைந்ததென்னியம்புகென்னக்
கடுத்திகழ்மிடற்றோன்கூறக்கண்ணன்வாய்புதைத்துநின்மேல்
விடற்கருமன்புமற்றோர்சிறுவனும்வேண்டுமென்றான். (௧௬)

மழகதிர்ப்பருதியேய்க்குங்கவுத்துவங்கிடந்தமார்ப
விழைவினீகேட்டவெல்லாம் விருப்பொடுமளித்தோமென்னாக்
குழவிவெண்டிங்கட்கண்ணிமிலைச்சியகூத்தன்கூறக்
கழையிசைவடித்தகண்ணன்கவுரிதாண்மலரிற்றாழ்ந்தான். (௧௭)

வணங்கியகண்ணன்றன்னையெழுகெனவாழ்த்திவண்ணச்
சுணங்கணிதுணைமென்கொங்கைதொலைவிலாவரங்களல்க
வணங்கரவசைத்தவண்ணலாய்ப்பிழிதுளவோனோடுங்
கணங்கடாள்போற்றிச்செல்லக் கயிலைமால்வரையிற்சென்றான்.

கயிலையினமர்ந்தபின்னர்க்கண்ணுதலருளாற்கண்ணன்
மயிலியல்விஞ்சைமாதர்கின்னரமாதர்நாளு
மியல்பெறுசித்தமாதரியக்கியருரகமாத
ரயில்விழியரம்பைமாதரமர்ந்திடுஞ்சூழல்சேர்ந்தான். (௧௯)

முருகவிழ்கமலக்காடுபூத்துமொய்துளவந்தாங்கும்
பருவமைம்முகிலிற்றோன்றும்பண்ணவன்றன்பாலெய்துங்
கரியபைங்கூந்தலார்க்குத்தனித்தனிக்கண்ணனாகி
யொருபகல்போலப்பன்னாளுவப்பொடுமருவுநாளில். (௨௦)

கண்ணனைக்கலுழன்றேடிக்காண்கலான்றுவரையெய்த
வண்ணலம்புரிசைதன்னையவுணர்சூழ்ந்திருப்பநோக்கி
வண்ணவார்சிறையிற்றாளினுங்கவராவிமாட்டிப்
புண்ணியநகரங்காத்துப்பொலிவொடுமிருந்தானன்றே. (௨௧)

புயறவழ்புரிசைசூழ்ந்ததுவரையிற்பொலிவினோடு
மியலிசைதெரியும்வீணைநாரதனெய்தத்தாழ்ந்து
வயமிகுங்கலுழன்கண்ணனெங்கனம்வதிந்தானென்னக்
கயிலையில்வதிந்தானென்னயாழ்முனிகழறிப்போனான். (௨௨)

இருஞ்சிறைக்கலுழனந்தண்கயிலையினிமைப்பினெய்தி
யரும்பிளமுறுவற்செவ்வாய்ச்சத்தியபாமையாதி
மருந்துறழ்குதலைத்தீஞ்சொன்மனைவியர்வருத்தம்யாவுங்
கருந்துழாய்புனையுந்திண்டோட் கண்ணனுக்குரைத்தானன்றே.

ஆங்கவைகேட்டலோடுமரும்பிளமுறுவற்செவ்வாய்க்
கோங்கிளமுலையாள்பங்கன்குரைகழல்வணங்கியேத்தி
யிங்குபேரன்பினோடும்விடைநல்கக்கருடன்மேற்கொண்
டோங்கிரும்புரிசைசூழ்ந்ததுவரைமாநகரையுற்றான். (௨௪)

எம்பலுற்றண்ணலோடுஞ்சிலபகலினிதுண்டாடிப்
பாம்பரையசைத்தமுக்கட்பரமனல்லருளாற்செங்கே
ழாம்பலங்கனிவாய்ச்சாம்பவதியெனுமணங்கோர்சாயல்
சாம்பனைமுதலாமைந்தர்பதின்மரைத்தகவினின்றாள். (௨௫)

பந்தணிகாந்தட்செங்கைமனைவியர்பரிவினின்ற
மைந்தர்நீங்குதலையென்னும்வழக்கறுதேறன்மாந்தி
யிந்திரதிருவிலின்புற்றிருக்குநாளிவைமூடும்
வெந்துயர்மாயைசெற்றமார்க்கண்டன்விழைவினுற்ருன். (உசு)

கண்ணன்சிவதீக்ஷைபெற்றுநோற்று, சாம்பனைப்பெற்றவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—உ0௫அ.

முப்பத்திரண்டாவது

கண்ணன்சிவபூசைபண்ணினவத்தியாயம்.

வந்தமார்க்கண்டனென்னுமுனிவரன்மகிழ்வுகூர
வந்தமில்சிறப்புச்செய்யாவந்தணர்க்கமுதமூட்டிச்
சந்தநீர்மூழ்கிநீறுகண்டிகைமாலைசாத்திச்
செந்திருமார்பனன்புவளர்சிவபூசைசெய்தான். (க)

நீங்கறக்கண்ணன்செய்யுஞ்சிவலிங்கபூசைநோக்கிப்
பாங்கினிலினிதுவைகும்பழிப்பின்மார்க்கண்டனென்போ
னிங்கரும்பிரமநீயேநின்னினுமுயர்ந்தோர்யாவ
ரீங்குநீபூசைசெய்வதியாவனையியம்புகென்ருன். (உ)

என்றலுமறியார்போலமுனிவரனிசைத்தானென்னு
குன்றினன்மாரிகாத்தகோவிந்தன்முறுவல்கோட்டி
மன்றலங்கமலத்தோனைபென்னைமுன்மகிழ்வினின்ற
பொன்றிடாப்பொருளொன்றுண்டாங்கதனிலைப்புகலக்கேட்டி.

ஆதியுநடுவுமற்றையந்தமுமின்றியொன்ருய்ச்
சோதியாம்பிரமந்தானேதூமதிக்கண்ணியெந்தை
வேதமுமவனையின்னும்விளங்குறவறியாதென்ருற்
பேதமைமனுடரோயோவவனிலைபேசவல்லார். (ச)

இலிங்கமேயவ்வியத்தமிலிங்கியச்சிவனேயாகுந்
துலங்குமவ்விலிங்கம்யானவ்விலிங்கிநீள்சுடர்வெண்டிங்க
ளலங்கலந்தாரோனென்னவறிகுனரறிஞரொன்றைப்
புலன்கள்போம்வழியினேசம்போக்கிடாமுனிவர்சொல்வார். ()

அண்டகோடிகளொன்ருென்ருேடறைந்துநுண்டுகளிற்சிந்தத்
தெண்டிரைக்கரத்தாலேற்றுங்கடலின்வெஞ்சேடன்மீதின்
முண்டகமலர்த்தாள்செங்கைமுடியோராயிரமதாகக்
கண்டுயில்புரிதல்போல்யான்யோகினிற்களிக்குநாளின். (சு)

புள்ளுவிழ்ந்தரற்றவந்தண்பொதியவிழ்ந்தமிர்தங்காலும்
வெள்ளிமண்டபத்தின்மேயவிளங்கிழைகொழுநனெய்திப்
பள்ளநீர்நாப்பண்வெய்யபாம்பணைமீதிற்றுஞ்சும்
வள்ளனியாரையென்னமனச்செருக்கோடுஞ்சொன்னுன். (எ)

உலகெலாமயின்றுமீன்றுமோரடிப்படுத்துங்காத்து
மலகிலாமாயைசெய்புமண்ணல்யானென்றேனுக
மலரயன்முறுவல்கோட்டிவகுத்துலகளித்துப்பின்னர்
நிலையறத்துடைக்கின்றேனும்யானெனநிகழ்த்தினுனல். (அ)

என்றுசெங்கமலத்தோனுமியானுமேற்றிகலுமேல்வை
புன்றெழில்புரியுமெங்கள்புன்மைதீர்த்தடிமைகொள்வான்
மின்றவழ்சுடர்கள்வீசிவிரிதழற்பிழம்புபோல
நின்றதோரிலிங்கமாதியந்தநெஞ்சுணராவண்ணம். (கூ)

மண்டுதீப்பிழம்பினின்றுவயங்குமிவ்விலிங்கந்தன்னை
யொண்சுடர்முடியுந்தாளுமுலப்பிலாவலியாற்றேடிக்
கண்டவர்பெரியோனென்னக்கழறலுங்கமலப்புத்தேள்
வண்சிறையெகினமாகிவானிடைத்துருவிப்போனுன். (க0)

குறுங்கழுத்தகல்வாய்ச்செங்கட்கூன்பிறைக்கோட்டுவெய்ய
மறங்கிளர்பன்றியாகிமண்முழுதகழ்ந்துதாயிற்
சிறந்தவன்கமலபாதமளப்பினுட்டேடிக்காணு
திறங்கியவுள்ளத்தோடுமீட்டும்வந்திறைஞ்சினேனல். (கக)

முடிவிலாப்பொருளின்றூயமுடியினேக்காண்பானேகு
மடலவிழ்கமலப்புத்தேள்வானகமுழுதுந்தானே
தடையறவளப்பில்காலந்தேடிமெய்தளர்ந்துங்காணு
தொடிவறுமன்பின்மீளாவுவப்பொடுந்துதிக்கலுற்றுன். (கஉ)

தண்ணறுங்கமலமென்பூந்தவிசினிலினிதுவைகு
மண்ணலுமியானுமேத்தியருமறைமுடிவின்வைகுங்
கண்ணுதற்சாமிபாதந்தேனித்துக்களித்தலோடு
மெண்ணறுமுவகைபொங்கவிங்கிவைபுரியலுற்றுன். (கந)

முச்சுடர்க்கண்கள்பூத்தமுகமொருகோடிமென்பூஞ்
செச்சைதாழ்புயமோர்கோடிசேவடிகோடியாக
கச்சையானையின்றேல்போர்த்துக்கனலுமுத்தலையவாகு
மச்சணங்கயில்வேறுங்கியாயிடைத்தோன்றினனே. (கச)

தோன்றியசுடரைத்தோற்றுஞ்சராசரத்தொகுதியாவு
மீன்றிடுதந்தைதன்னையிறைஞ்சலுமுயிர்கட்கெல்லாஞ்
சான்றெனநின்றவீசன்றடக்கையாலெடுத்துப்புல்லி
யான்றபேரன்பினேடுமீங்கிவையறையலுற்றுன். (கரு)

என்னுடையிடத்தோடன்னில்வலப்புறத்தினிதுதோன்றி
மன்னுமென்மைந்தர்நீவிர்வருந்தலீர்வருகவென்னு
வன்னையும்பிதாவுமாயவந்தணனுச்சிமோந்து
முன்னியதளிப்பன்கேட்டினனமுகமலர்ந்துசொன்னுன். (கசூ)

குன்றவிற்குழகன்வார்த்தைகேட்டலுங்குடந்தம்பட்டுப்
பொன்றவழ்கமலபாதமெமதுபுன்றலைமேற்சேர்த்தி
நின்றுநின்றிரங்கிநின்மேனீங்குதற்கரியபேரன்
பின்றெமக்களித்தல்வேண்டுமென்றலுமிறைவன்கூறும். (௧௭)

மைந்தர்நீர்விழைந்துகேட்டவரமினிதளித்தல்செய்தேஞ்
செந்திருமார்பவேதனின்னுடைச்சிறுவனாக
வந்தவதரிக்குமென்னமணிமிடற்றெந்தைகூறி
யந்தமுமுதலுமில்லாவிலிங்கத்துண்மறைந்தானன்றே. (௧௮)

அன்றுதொட்டின்றுகாறும்யானுநான்முகனுமன்பாற்
பொன்றிடாவிலிங்கந்தன்னைப்பூசனையாற்றுகிற்பே
மன்றவெம்பிறவிநோய்க்குமருந்துவவ்விலிங்கந்தானே.
என்றரிமுனிவவென்றுநான்முகன்றந்தைசொன்னான். (௧௯)

நன்னாறுந்துளவத்தண்டார்த்துயல்வரத்தயங்குதிண்டோட்
கண்ணனைப்புகழ்ந்துபோற்றிக்கருதருமறைகடேரும்
வண்ணன்மாதவத்தின்மிக்கமார்க்கண்டனருளினோடு
முண்மகிழ்ந்தீசன்பாதமுளத்திடைநினைத்துப்போனான். (௨0)

கண்ணன்சிவபூசைபண்ணினவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௨0௭௮.

முப்பத்துமூன்றாவது

கண்ணன்பூமிபாரந்தீர்த்தவத்தியாயம்.

போசகடத்துறைபோர்வேலுருக்குமன்
மாசறநல்கியசாருமதிதனக்
காசில்சயமாமென்னவறைதலு
மாசைபெறுமன்னர்யாரும்வந்துற்றார். (௧)

கேடில்விழுச்சீர்க்கிருதவன்மாவொடு
பீடுகெழுகோட்பிரத்தியும்மனென்னுங்
கூடார்க்கடந்தகுருசிலுருக்குமன்
மாடமுடுத்தவளநகர்புக்கான். (௨)

மன்னருண்ணிறையுஞ்சயமாமடத்துத்
நன்னிகர்வேறிலாச்சாருமதியெனும்
பொன்னங்கொடியவன்பொற்றோள்விழைதலுந்
தன்னமர்தேரினிற்றையறனையுய்த்தான். (௩)

சாருமதியைக்கடத்தேரினிலேற்றிப்
போர்விழைசீர்ப்பிரத்தியும்மனென்னும்
வீரன்றுணையின்மேவிவிரைமலர்க்
காரோதிதன்னைக்கடிமணஞ்செய்தான். (௪)

மணவினைமுற்றிமகிழ்ந்துறைநாளிற்
றணிவருங்கற்புடைச்சாருமதியா
மணியிழைவெள்வேலனுருத்தனென்னு
மிணையறுநின்றோட்புதல்வனையீன்றாள். (௫)

அலங்கல்வடிவேலனுருத்தனென்னு
முலங்கெழுதோளாற்குருக்குமன்மைந்த
னலம்பெறவீன்றருணங்கையைவேட்பத்
தலம்புகழ்கண்ணன்றமரொடுஞ்சென்றான். (௬)

உருக்குமன்மைந்தனொருமகடன்னை
யரத்தவடிவேலனுருத்தனென்போன்
விருப்பொடுவேட்டபின்வெள்ளைநிறத்துப்
பொருப்பேறிசூதுப்போர்முயன்றிட்டான். (௭)

ஓர்குழைவள்ளலுருக்குமன்றன்னொடு
மார்வமிகுந்திடச்சூதாட்டயர்வுழிப்
பார்புகழும்பலபத்திரன்றோற்றலுஞ்
சீர்சாலுருக்குமனெள்ளிச்சிரித்தான். (௮)

சிரித்தவுருக்குமன்சென்னிசிதற
விரித்தபலகையின்வெண்ணிறத்தண்ண
லுரப்பியடித்தவனுருயிருண்ணாப்
பரித்தகலிங்கர்கோன்பல்லுகுத்திட்டான். (௯)

அருமணமுற்றுமனுருத்தனோடும்
விரிதுளவப்புயல்விண்ணுடணவும்
புரிசையுடுத்ததுவாரபுரியின்
மருவவியப்பின்மகிழ்கூர்ந்திருந்தான். (௧0)

வேறு.

இன்னணங்கண்ணனுங்கிளைஞருமினிதினிற்
பொன்னகர்த்துவரையிற்பொற்புடனுறையுநாண்
மன்னுதோளாயிரங்கொண்டவாணசுரன்
றன்னருங்கயிலையிற்றனைவின்வந்தெய்தினான். (௧௧)

திங்களங்கண்ணிதாழ்செஞ்சடைப்பண்ணவன்
பங்கயச்செய்யதாள்பரவிவாணசுர
னங்கண்மாஞாலமும்விண்ணுமுற்றமர்பெரு
திங்குவந்தெய்தினனெந்தையோடமர்செய்வான். (௧௨)

என்றுவாணசுரன்கூறலுமெறுழ்வலிக்
குன்றவில்லந்தணன்குறுநகைக்கோட்டியுன்
வென்றிசேராயிரந்தோள்களும்வெட்டிட
மன்றவோர்மாலிடன்வருவனிமலதியால். (௧௩)

என்னலுஞ்செருநமக்கெய்துமென்றுளமகிழ்ந்
தன்னவனென்னுழையடர்வதென்னுளென
வுன்னுடைத்நுவசம்வீழ்போதெனுவுளாசெயத்
தன்னுடைநகர்வயின்வந்துசார்ந்தனனரோ. (கச)

வள்ளல்வாணசுரன்பெற்றிடுமொண்புடை
யொள்ளிழையுசையெனுமோங்கெழிற்பணைமுலைக்
கள்ளவிழ்கூந்தலாள்கண்டுயில்கனவினி
லள்ளிலைவேலனுருத்தனைக்கண்ணுரு (க௫)

வேறு.

கண்டவிளங்காளைகதிர்முகந்தடந்தோளின்கவினுமந்தோ,வு ண்டதெனதுயிராயென்செய்கேனமரங்காளுய்யேனென்னு, வண்டுகிடந்நுறங்கிமதுவருந்திதேக்கெறியுமலர்ப்பூங்கோதை,கொண்டபெருந்துயரங்கூறுநெடிதுயிர்த்துகுழைந்துநைந்தாள்.()

கொழுதியிளவண்டுகூட்டுண்ணுஞ்சில்லோதிக்கொம்பர்காணப், பழுதின்மதிமுகத்துத்தோழியர்பொற்றாரிகையாற்படத்தின்மீது, முழுதுலகின்மன்னாையுமுன்னெழுதியனுருத்தன்முழுவுத்திண்டோ, ளெழிலெழுதிக்காட்டுதலுங் காமவிடந்தலைக்கொண்டாங்கினைந்துவிழ்ந்தாள். (கள)

செந்தார்க்கிளிக்குதலைத்தலைக்கொண்டகாமநோய்திறல்வேற்காளை, யந்தாரமணிமார்பம்புல்லினுலல்லதையிங்ககலாதென்ன, கொந்தாங்கருங்குருந்ததோழியர்கடுவளாநகர்நொய்தினெய்திக், கந்தார்களிறனையகாளைதனைமாயையினுற்கவர்ந்துவந்தார்.()

வந்தாங்கருகுய்த்தவயவாளனுருத்தன் வனப்புவீங்குஞ், சந்தார்தடந்தோளிற்றழுமுற்றுவாராதமுலைகடாக்க, நந்தாவிளக்கனையவுசைமென்றேணலம்பருகிநண்ணுங்காலைச், செந்தாமரைமலரப்பகற்செய்வோன்குணதிசையிற்சேர்ந்தானன்றே. ()

வேறு.

உலம்பொருதுயர்ந்ததிண்டோள்வாணனங்கதனையோரா
வலங்கெழுமைந்தனேடும்வாளமரமுவத்தேற்றுப்
பொலங்கொடிப்புலம்பிநையப் பொருப்புறழ்தடந்தோள்வீக்கி
யலங்கலங்குன்றன்னனையருஞ்சிறைப்படுத்தினனே. (உ0)

ஈங்கிவையனைத்துந்தேராயாழ்முனிதுவளாயெய்தி
வாங்குவில்விழுங்குதிண்டோன்மணிநிறவண்ணற்கோதப்
பாங்கினிற்கடலந்தானைப்பத்தாக்கச்சத்தோடும்
பூங்கழற்குரிசில்வாணன்பொன்னகர்வளைந்துகொண்டான். ()

வெண்மதிநெற்றிதோய்ந்துவிழுத்தழும்பிருப்பநீண்ட
கண்ணகன்புரிசைமூதூர்கண்ணன்முற்றுதலும்வாணன்
வண்ணவிற்கூபகண்ணன்முதலியமறவர்சூழ
வண்ணலங்கொடிஞ்சிமான்றேர்கடாவிவாளமரினேற்றுன். ()

ஏற்றெதிர்கூபகண்ணன்முதலினோரிறப்பவெய்ய
கூற்றெனத்தெழித்துவெள்ளைமேனியோன்கொன்றுவீழ்த்தா
னாற்றலுந்தேரும்வெற்றித்துவசமுமறுத்துக்கண்ணன்
மாற்றமர்தொடங்கும்வாணன்மார்பிலோர்பகழிதொட்டான்.()

மைந்துடைமுழவுத்திண்டோள்வாணனையீன்றநற்றா
யந்துகிலின்றிவெய்யவமரிடைப்புகுதனோக்கிப்
பைந்துழாய்முகுந்தன்செங்கைப்படையொழிந்திருப்பவாண
னெந்திரமான்றேர்மற்றொன்றிவர்ந்துவெம்போரினேற்றான். ()

கொடுஞ்சிறைக்கலுழன்மேலுங்குவலையம்பொதிந்தபொற்றாண்
மடங்கலேறனையகண்ணன்மருமத்தும்வாணன்வெய்தாய்
விடங்கலுழ்பகழிதூண்டவெகுண்டுசெங்கமலக்கண்ண
னடங்கலராவிபுண்ணுமாழிகைக்கொண்டுசென்றான். (௨௫)

காயெரிகவிழ்க்கும்வெம்போர்க்கணிச்சியெம்பெருமானெய்தி
மாயிருஞாலமுண்டோய்செருக்கினன்மலையும்வாண
னாயிரம்புயத்தினான்குபுயமொழித்தறுத்தியென்னப்
பாயொளிப்பருதிதூண்டிப்பகர்ந்தவாறரிந்திட்டானே. (௨௬)

அரிந்தபைந்துளவினோனையாடமர்விலக்கியாங்குப்
பரிந்திருகன்றுக்குள்ளமிரங்கியபசுவேபோலத்
திருந்துவெண்ணிலவுகாலுந்திங்களங்கண்ணிப்புத்தேள்
பொருந்துபேரன்பர்தம்மைப்போரொழித்துறவுசெய்தான். ()

சிறந்ததொண்டரைமற்றெண்ணிற் சிறுவிரன்முடக்கவொட்டா
நறுந்துழாய்முகுந்தன்வெய்யநாமவேல்வாணனோடு
நிறைந்தபேரன்பினேத்தநீற்றொளிபூத்தமேனி
மறங்கிளர்கணிச்சிப்புத்தேள்வரமளித்தகன்றானன்றே. (௨௮)

ஆடகச்செம்பொன்மேனியனுருத்தற்கன்பினோடு
மோடரிநெடுங்கட்செவ்வாயுசையினையளித்துவாணன்
கோடிமேற்கோடிசெம்பொன்கொடுத்தடிபோற்றக்கண்ண
னீடுயர்மாடமோங்குநிகொறிதுவரைசேர்ந்தான். (௨௯)

குண்டுநீர்க்கிணத்தின்மற்றோர்குஞ்சரக்குழக்கன்றென்ன
மண்டுநீருலகங்காப்போனோந்தியாய்க்கிடப்பமாயோன்
றிண்டிறற்கையாற்பற்றவவ்வுருத்திரிந்துவானி
னண்டர்கோனுருவின்மற்றோர்விமானத்தினமர்ந்தானன்றே.()

யாரைநீயென்னலோடுநிருபன்யானளப்பில்பெற்றஞ்
சீர்கெழுமறையோர்க்கீந்தேனவற்றிலோர்சேதாமீட்டென்
னூர்வயிற்புகுந்தவண்ணமுணர்கலாததனைப்பின்னு
மார்வமோடறஞ்செய்வான்போலந்தணர்க்களித்திட்டேனால்.()

ஆயவெம்பாவங்கன்றுமேலோங்கியாயமர்ங்கேதுன்றன்
சேயதாமனைக்கைதீண்டப்பெற்றதால்வினைகடீர்ந்து
மீயுயர்விசும்பின்வைகும்விண்ணவருனேனென்ன
மாயனைவணங்கியேத்திவானநாடதனிற்புக்கான். (௩௨)

ஓர்குழையொருவனுயர்பாடியினெல்லையெய்தி
வாருணித்தேறன்மாந்திக்கோவியர்மகளிரோடு
மார்வமோடாடவாவென்றழைத்தலுமணுகாதாக
வேர்கெழுகலப்பைதன்னால்யமுனையையிழுத்தானன்றே. (௩௩)

வெருவொடுயமுனையென்னைவலித்திடேல்விடுத்தியென்னப்
பரிவொடும்வெள்ளைமேனிப்பண்ணவன்பாதம்போற்ற
வொருகுழையொருவன்வாங்காதொழிதலுமுவப்பினேடுங்
கரையெறிதொழுனையன்னேன்கருதுழியொழுகிற்றன்றே (௩௪)

பானிறவண்ணனையர்பாவையரோடுநண்ணித்
தூநதியமுனைத்தெண்ணீர்தோய்தலுந்தொழுனையாங்கு
நீனிறத்துகிலிரண்டுநிலவுபொன்மாலையொன்றும்
வேனில்வேளனையவெள்ளைமேனியோர்க்களித்ததன்றே. (௩௫)

பாவடிப்பருமயானைப்பவுண்டரன்வாசுதேவன்
றேவருங்கடக்கையோடுசமைத்திருகரங்கள்சேர்த்திக்
கோவடுநேமிசங்கங்குருதிவாள்கதைவில்லேந்தி
யேவருமருளமார்பின்மறுவுமொன்றிலங்கத்தீட்டி. (௩௬)

எந்திரவுவணமூர்ந்துகொடியுமற்றதனையேந்திக்
கந்தடுகளிறுபோலுங்காசிவேந்தோடுநட்டுப்
பைந்துழாய்முகுந்தன்யானேதானெனிற்படைஞரோடும்
வந்தமருடற்றுகென்னுவல்லையிற்றூதுவிட்டான். (௩௭)

தூதுவனுரைத்தமாற்றங்கேட்டலுந்துளவத்தண்டார்
மாதவன்முறுவல்கோட்டிவண்சிறைக்கலுழனூர்ந்து
போதரவமரிற்புக்கபவுண்டரவாசுதேவன்
மேதகுமவுலிநேமிப்படையினால்வீழ்த்தினனே. (௩௮)

பண்ணமைகளிநல்யானைப்பவுண்டரவாசுதேவ
னண்ணலந்திகிரிதன்னாலற்றுவீழ்ந்திறந்தவாற்றாற்
கண்ணனதுருவமெய்திக்கனைகடற்சுவேதத்தீவின்
விண்ணவர்தொழுதுபோற்றவீற்றிருந்தின்பந்துய்த்தான் (௩௯)

கூற்றெனவுருமேறென்னக்குலவரைபெயர்க்குமூழிக்
காற்றெனவமரினேற்றகாசிநாடாளும்வேந்தைப்
பாற்றினஞ்சுழலுநேமிப்படையினாற்றடிந்துகண்ணன்
மாற்றலரடுபோர்முற்றித்துவரைமாநகரிற்புக்கான். (௪0)

விண்டலர்துளவோன்செற்றவாரணவாசிவேந்தன்
றிண்டிறற்புதல்வன்கண்ணனுருயிர்செகுப்பானெண்ணித்
துண்டவெண்டிங்கட்கண்ணிசூடியபரனையேத்தி
மண்டுசெந்தழலின்வெய்தாய்மாரணமியற்றினானே. (௬௧)

அழலுமிழ்தறுகட்பேழ்வாய்ப்பூதமொன்றதனிற்றோன்ற
மழவிடையுயர்த்தோன்றொன்மெய்ம்முனமடியார்மேலிச
சுழல்விழிப்பூதந்தாண்டிற்றாண்டினோரவிதுய்க்கு
நிழலுமிழ்வேலோயென்னநிகழ்த்தினன்மறைந்துபோனான். ()

நண்ணியகுறுந்தாட்பூதந்தன்னையந்நாமவேலான்
கண்ணனைக்கோறியென்னவிடுதலுங்கடிதினேகித்
தண்ணளிபெருகிவேற்கட்சத்தியபாமையோடு
மண்ணல்சூதாடுமெல்லையடைந்துமுன்னின்றதன்றே. (௬௩)

மண்டுவெந்தழலிற்றோன்றும்வாளெயிற்றழல்வாய்ப்பூதங்
கண்டுநெஞ்சழியநேமிவிடுதலுங்காசியெய்தித்
திண்டிறல்வேந்தவீசன்சேவடிக்கன்புசெய்யுந் [றே
தொண்டன்மேல் விடுத்ததென்னென் றவனுயிர்தொலைத்ததன்

கூன்பிறையெயிற்றுப்பேழ்வாய்ச்சுழல்விழிக்குறுந்தாட்பூதம்
வான்படர்ந்தேகிவிட்டமன்னனைக்கோறலோடு
ஊன்சுவைத்தொளிருநேமியமர்பெருதொல்லைமீண்டு
காண்படுதுளவோன்செங்கைக்கமலத்தினுறைந்ததன்றே. (௬௫)

ஒருகுழையொருவனுயர்பாடியினுறையுநாளின்
மருவிவெந்துவிதனென்னும்வானரவீரன்வெய்ய
செருமலைந்தேற்பவன்றானென்சிரத்தினையலத்திற்சிந்திக்
கருமுகில்வண்ணற்காண்பான்றுவரையிற்கடிதினுற்றான். (௬௬)

வழங்குவிற்றடக்கைமன்னர்மணிமுடியுரிஞ்சித்தேய்ந்து
பழந்தழும்பிருந்தபொற்றாட்சுயோதனன்பரிவினீன்ற
செழுங்கனிதுவர்ப்பநாளுந்திதிக்குமமிர்தந்தீஞ்சொற்
கொழுங்கயற்கண்ணிகன்னிமாடத்திற்குலவுநாளின். (௬௭)

காம்படுதோளிசெவ்விகேட்டலுங்கலங்கிமாழ்கிச்
சாம்பனல்லிருளிற்கன்னிமாடத்திற்றனிச்சென்றெய்தி
யேம்பலின்யாழோர்கூட்டத்திளமுலைப்போகமாந்திப்
பாம்படுமல்குலோடுங்கரந்தனன்படருமெல்லை. (௬௮)

அன்னதுகேட்டுவெம்பிச்சுயோதனன்சகுனியாடற்
கன்னன்விற்றுரோணன்வெம்போர்க்காங்கயன்முதலவீரர்
பொன்னணிதடந்தேர்தூண்டிப்புலிவளைந்தென்னச்சூழ்ந்து
மன்னெடுங்குமரன்றன்மேல்வடிக்கணைமாரிபெய்தார். (௬௯)

பெய்தவெம்பகழியாவும்பிறைமுகக்கணையான்மாற்றி
வெய்தின்மற்றவர்கடிண்டேர்வெஞ்சிலைதுணித்துவீழக்
கொய்தகன்மார்புந்தோளுங்கொழுங்கணைத்தூணியென்ன
வெய்துவிற்சாம்பன்றிண்டோளெழும்வலிகாட்டினானே. (ருo)

ஆடமர்க்கொருவனென்னவுகளிலத்தோசைபோய
வீடுமன்சாம்பனங்கைவில்லினையறுத்துவீழ்த்தான்
கூடலர்ச்செகுக்குங்கன்னன்கொடுஞ்சியந்தேரைமாய்த்தான்
பீடுறுசகுனிசெங்கைப்பாசத்தாற்பிணித்திட்டானே. (ருக)

புலியையாப்புறுத்ததென்னப்போர்கெழுசாம்பன்றன்னை
வலியினிற்பற்றிமன்னர்வன்சிறைப்படுத்தமாற்றங்
கலையுணர்கண்ணன்கேட்டுவெகுளலுங்கடிதினேகி
மலைதிறனொழிதியான்போய்மீட்குவன்வல்லையென்று. (ருஉ)

பானிறப்படிவத்தண்ணல்கதுமெனப்படர்ந்துபோகி
வேனிறத்தானைமன்னனத்தினபுரியின்மேவி
மானவேற்சாம்பன்றன்னைவல்லையில்விடுக்கிலீரோ
ஆனமற்றுமக்குண்டென்றுவுக்கிரசேனன்சொன்னான். (ருங)

என்னவோர்தூதுபோக்கவரவுயர்த்திட்டவெற்றி
மன்னவர்க்கவன்சென்றோதமறுத்தமைகேட்டலோடுங்
கன்னரியம்புரிசைசூழுதூர்கங்கையிற்கவிழ்ப்பனென்னக்
கொன்னுனைக்கலப்பையாலோர்குழையினன்வாங்கினானே. ( )

அத்தினபுரியையலத்தினால்வாங்கநோக்கி
முத்தவெண்கவிகைச்செங்கோற்சுயோதனன்முதலவேந்தர்
தத்துறவெய்திவவ்வுஞ்சாம்பனைத்தையலோடும்
வித்தகன்முன்னருய்த்துவிரைமலர்த்தாளின்வீழ்ந்தார். (ருரு)

ஒருகுழையொருவனுள்ளமுவந்திடச்சாம்பனென்னு
முருகவிழ்தாரினாற்குமுழங்கழல்சான்றதாகத்
திருவமேகலையைநல்கியளப்பருஞ்சிறப்புச்செய்யப்
பரிவுறுமைந்தனோடுந்துவரையம்பதிபுக்கானே. (ருசு)

வேறு.

எண்ணிரண்டாயிரமகளிரின்புற
நண்ணுதல்யாங்கெனநாதயாழ்முனி
கண்ணுறநோக்கவோரொருவர்க்காழ்கடல்
வண்ணனோருருவமாய்வதிதல்கண்ணுறூஉ. (ருஎ)

மனத்திறும்பூதுறமகதியாழ்முனி
புனத்துழாய்மார்பனைப்புகழ்ந்துபோற்றுறூஉக்
கனைத்துவண்டிமிர்தருகற்பகாடவி
நனைத்துணர்நறைகமழ்நாட்டினெய்தினான். (ருஅ)

திருந்தலர்தொழுஞ்சராசந்தன்பீதுற
வருஞ்சிறைப்படுத்தியவரசர்யாவரும்
வருந்தறவெங்களைவல்லிநீக்கிநீ
புரந்தருள்வாயெனத்தூதுபோக்கினர். (ருசு)

தூதுவர்மன்னவர்சொன்னயாவையு
மாதவன்சேவடிவணங்கிக்கூறலு
நாதயாழ்முனிவரன்றருமனன்மகந்
தீதறப்புரிவதுசெப்பினனரோ. (சுo)

தருமனதோலைபைந்தண்டுழாய்புனை
கருமுகிலனையமெய்க்கண்ணன்காண்கயா
னருமகம்புரிகுவனதற்குவல்விரைந்
துரிமையாங்கிளையொடிங்குறுதல்வேண்டுமால். (சுக)

என்றிவைபொறித்திடுமுடங்கலேடவிழ்
மன்றலந்துளவினேற்களித்துவல்லையி
னென்றியதூதுவர்வணங்கவொண்மணிக்
குன்றனானுவகையிற்குளித்திட்டானரோ. (சுஉ)

ஆறியனமைச்சரோடலங்கற்குன்றனான்
வேறிருந்தோலையின்பொருள்விரித்துணர்ந்
தூறுசெய்வேற்படைமிடையவொக்கலோ
டேறனனிந்திரப்பிரத்தமெய்தினன். (சுங)

தருமன்வெந்திறலுடைத்தம்பிமாரொடுங்
கருமுகிறனையெதிர்கொண்டுகண்ணனுங்
கரியநற்பூசனையாற்றியன்பொடு
முரிமையினளவளாயுவந்துபுல்லினன். (சுச)

வேறு.

ஆற்றருமிராசசூயமாற்றுவான்மைந்தனென்னைப்
போற்றிவேற்றருமன்கூறப்புயனிறவண்ணன்சொல்வான்
கோற்றொடிப்புரிசைசூழுங்கொடிக்கிரிவிரசங்காக்கு
மாற்றலர்ச்செகுத்தல்லாமன்மகவினைமுடியாதென்றான். (சுரு)

ஈங்கிவைமுடியும்வண்ணமென்கொலென்றிசைத்தலோடும்
வாங்குவில்விசயன்வீமன்றன்னொடுமென்னைவல்லே
யாங்குநீவிடுத்தியென்னிலரும்பகைமுடிப்பேமென்னப்
பூங்கழலரசனீவிர்போமினென்றுரைப்பப்போனார். (சுசு)

கடகரியனையவெற்றிமூவருங்கடிதினேகிக்
கொடிமதிட்புரிசைதாவிக்கோநகரதனிலெய்தி
முடிகெழுவேந்தன்முன்போய்மொய்யமரிரந்துநிற்ப
வடையலர்பரவுநோன்றாட்சராசந்தனறிந்துசொல்வான். (சுஎ)

அந்தணரல்லிர்நீவிரருச்சுனன்சிறியன்மற்றை
நந்தகோன்சிறுவன்பல்காற்றோற்றவனாமவெவ்வேற்
கந்தகெகளிநல்யானைபோன்றிடுங்கழற்கால்வீமன்
வந்தெதிர்ப்பகெவென்றுவாய்மடித்தரப்பிச்சொன்னான்.(௬௮)

இருவருங்களத்தினெய்தியெறுழ்வலித்தடக்கைவேழம்
பொருவதுபோலச்சீறிப்புயவலிதோன்மைகாட்டி
மருவுமூவைந்துவைகல்கங்குலும்பகலுமாறா
வருமிடித்தெனக்குத்தியுடன்றுவெம்பூசல்செய்தார். (௬௯)

கண்ணிறைவீமன்காணக்கற்றிரள்சுண்ணஞ்செய்யு
மண்ணெலாழுமுழவுத்திண்டோண்மணிநிறவண்ணன்மற்றோர்
நண்ணியபசும்புனேரேகிழித்தலுங்குறிப்பினுடிப்
பண்ணமைதிணிதோள்வேந்தைவலியினாற்பாரின்வீழ்த்தான்.()

காப்புடையனையவெற்றிச்சராசந்தன்குறங்கைத்தாளா
னிப்பறமிதித்துமற்றைத்தாணெடுங்கையாற்பற்றிக்
கோப்பெருஞ்சிங்கமன்னானுடலிருகூறதாகப்
பாப்பணைக்குரிசிலேத்தக்கிழித்துயிர்படுத்திட்டானே. (௭௧)

மற்றவன்புதல்வன்றன்னைமணிமுடிசூட்டியன்னோன்
செற்றுவெஞ்சிறையிலிட்டமன்னரைச்சிறையினீக்கிக்
கொற்றவரோடும்வேந்தன்பயந்தவேற்குமரரோடும்
பொற்றடந்தேரினேறியிந்திரப்பிரத்தம்புக்கான். (௭௨)

நறைகமழ்த்துளவோன்வீமனருச்சுனனுமவேற்கை
யறைகழலவனிவேந்தனவையினிலமர்ந்தபின்னர்த்
திறையொடுபுகுந்தவேந்தர்க்களப்பருஞ்சிறப்புச்செய்து
மறைபுகலிராசசூயமகிழ்வுடனியற்றினானே. (௭௩)

வீடுமன்றுரோணன்கன்னன்சுயோதனன்விதர்ப்பர்கோமா
னுடைவர்பணிபுநோன்றாளடற்சிசுபாலன்வெம்போர்ப்
பிடிசான்முழவுத்திண்டோள்வழுதியர்பெருமானாதி
நீடிரும்புவியில்வேந்தர்யாவருநிறைந்தாரன்றே.. (௭௪)

எற்படுபருதிவைவேற்றருமன்வீடுமனையேத்தி
முற்படப்பூசையார்க்குப்புரிவதுமொழிகென்றோதக்
கற்படநிவந்ததிண்டோள்கண்ணனுக்காற்றுகென்ன
மற்படநிமிர்ந்ததோளான்வரன்முறையாற்றினானே. (௭௫)

அற்றைப்பூசைநோக்கியடற்சிசுபாலன்சீறி
யேற்றமெய்க்கும்புன்மையிடையனியிவர்கள்செய்த
மாற்றருநம்பூசைதன்னைமறுத்தெனென்றுவெய்தா
நாற்றினமேற்பட்டதிற்சொற்றெரித்திடக்கொதித்துவைதான். ()

மூன்றுகைமூன்றுசெங்கண்முடியொருமூன்றினோடுந்
தோன்றயானெடுப்பவின்னோன்மனிதர்போற்றிரிந்துதோன்ற
வீன்றவள்பத்துவெஞ்சொற்பொறுக்கெனவிசைத்தவாற்றாற்
சான்றுநீர்நூறுவெஞ்சொற்றகவொடும்பொறுத்தேனென்றான்.

தாருகனடவுத்திண்டேர்தாமரைக்கண்ணனேறிப்
போர்புரிகளத்தின்வெய்திற்புக்கறைகூவலோடுங்
கார்முகங்குழைய்வாங்கிக்கட்கடைவடவைதூங்கச்
சேரலர்க்கிடியேறன்னசேதிபனமரினேற்றான். (௭௮)

சீற்றமுந்தானும்வேறுதெரிப்பருந்தகையனாகி
யேற்றுரிமுரசமார்ப்பவெரிமணித்தேரினேறிக்
காற்றெனவசனியென்னக்கனைகடலென்னவார்த்துக்
கூற்றிருகடைவாய்நக்கக்கொடுங்கணைதூவினானே. (௭௯)

ஆங்கவன்கடலந்தானையனைத்தையுநாழிலாட்டித்
தூங்கிருட்பிழம்புநக்கித்துறுகதிர்விரிக்கும்வெய்ய
வீங்கொளிநேமிதூண்டிசேதிபன்வில்லினோடு
மோங்கிருஞ்சென்னிதன்னையொல்லையினறுத்தானன்றே. (௮௰)

முற்பவமதனில்வெய்யவிரணியன்முறையிற்றோன்றும்
பிற்பவத்துலங்கொடிண்டோளிராவணனாயபேற்றா
லற்புடனிறந்தவிந்தச்சேதிபனாவிசோதி
வெற்பெனவெழுந்துகண்ணன்மலரடிமேவிற்றன்றே. (௮௧)

விரைமலர்தூவிவிண்ணோரார்ப்பவேயிசைக்கும்பச்சை
முருகலர்துளவத்தண்டார்துயல்வருமுழவுத்தோளான்
றருமனல்வேள்விமுற்றத்தகவுடனினிதினாற்றிப்
புரிசைசூழ்துவரைமூதூர்பொருந்திவீற்றிருந்தானன்றே. (௮௨)

பெய்மலர்ப்பகழியங்கைப்பிரத்தியும்மனன்வந்தெய்தி
யையகேள்சவுடத்தோடுஞ்சாலுவனணைந்துவெம்போர்
செய்துநஞ்சேனையாவுஞ்செருக்களத்துழக்கிப்போனான்
வெய்தினிலென்னக்கண்ணன்வெகுண்டுதேர்குணர்தியென்றான்.

தாருகன்கொணர்ந்தமான்றேரிவர்ந்தடலாழிதாங்கி
யார்கலிநடுவணெய்தியடற்கருஞ்சேனையோடும்
பாரினின்றெழுந்துவிண்ணிற்பறந்திடுஞ்சவுடமீது
சேருஞ்சாலுவனைவெய்திற்றிருமறுமார்பன்கண்டான். (௮௪)

காண்டலுமவுணன்சீறிக்கப்பணமுசுண்டிசூலம்
பாண்டவர்சகாயன்வெய்யப்பணைப்புயத்தெறிந்துநக்கான
மாண்டகுவரிவில்வாங்கியவுணர்கோன்வரிவில்வீழத்
தூண்டிவெந்தூணுக்கன்னப்படையினாற்றலைத்திட்டானே. ()

வேறு.

மல்லினான்மல்லனாமாய்த்தகண்ணனை
வில்லினால்வெலற்கரிதென்றுமீயுயர்
கல்வினாலமைத்தனகலைவைத்தோளினா
னல்லல்கூர்மாஙியையொன்றமைத்தன்மேயினான். (அசா)

ஆனகதுந்துபியென்னுமாற்றல்சால்
மானவேலரசனைமாயையாலமைத்
தானுகர்நேமியோனுள்ளமாழ்குறத்
தானவன்வாளினாற்றடிந்திட்டானரோ. (அஎ)

மாயனுமயங்கிவெம்மாயையென்றுணர்ந்
தேயசாலுவனொடுசவுடமிற்றுவெந்
தீயெழவடவையுந்தியத்தித்தெழு
மாய்கதிர்ச்சக்கரமழன்றுதூண்டினான். (அஅ)

தூண்டியசக்கரந்தொலைவில்சாலுவன்
மாண்டகுசென்னியுமியங்குமானமு
மீண்டியமிளையுடனிமைப்பிற்சிந்துறு
மீண்டதுகண்ணனும்வெகுளிநீங்கினான். (அகூ)

மாதவன்சாலுவற்செகுத்துமாண்பொடும்
போதருநெறியினிற்பூசல்வண்டறை
தாதலர்பசுந்தொடைத்தந்தவக்கிரன்
காதிவெஞ்சிலையுமிழ்கணைகடுவினான். (கூ0)

தந்தவக்கிரனுடறளையின்விழ்தரக்
கந்துகடாக்களிறனையகார்முகின்
மந்தரக்கிரிநிகர்க்கதையின்மாட்டினா
னெந்திரக்கலினமான்றேரினேறினான். (கூக)

வம்பவிழலங்கலந்தந்தவக்கிரன்
றம்பிமேல்விடூரதன்சமரினேற்றலுங்
கம்பவெங்கரிநிகர்கண்ணன்கார்முகத்
தம்பினாலவன்றலையறுத்துவீழ்த்தினான். (கூஉ)

அங்கலுழ்மேனியர்முகத்தையாய்கதிர்த்
திங்களென்றும்பல்வாய்திறக்கும்வாவியும்
பொங்கருமுடுத்துயர்துவரைபுக்கனன்
சங்கொடுசக்கரந்தரித்தகொண்டலே. (கூங)

வேறு.

மூண்டவெஞ்சமரின்முன்னம்புகுந்தெனையழைத்தவெற்றி
மாண்டகுவரிவிலாண்மையருச்சுனன்றனக்குமான்றோர்
தூண்டுவனென்னக்கண்ணன்போதலுமிராமன்றாய்தா
யீண்டியதெய்வநன்னிராடுவாவியைந்துபோனான். (கூச)

போதருநெறியிற்சூதமுனிவரன்புராணம்யாவு
மாதவர்க்கோதுமெல்லைவயிராமனைவணங்காதாகத்
தீதுறுவெகுளித்தீயாலவனுயிர்சிதைப்பவெய்தி
யேதஞ்செய்பிரமகத்தியிராமனைத்தொடர்ந்ததன்றே. (௯௫)

பற்றியபாவநீங்கமாதவர்ப்பணியாலையன்
மற்றவன்புதல்வன்றன்னைச்சூதனாய்வைத்துப்போற்றி
யெற்றுதெண்டிரைநீர்க்கங்கையாதியாய்க்கன்னியீறா
யுற்றநற்றீர்த்தம்யாவுமொல்லையினாடுமெல்லை. (௯௬)

கொல்சினக்கூற்றமென்னவந்தணராவிகொல்லு
மில்வலன்புதல்வனாயவல்வலனமர்க்கெதிர்ந்துசீற
மல்லடுதிண்டோள்வெள்ளைமேனியோன்வலியிற்பற்றி
யொல்லையினலத்தாலன்னோனாருயிரொழித்திட்டானே. (௯௭)

வீடுமன்முதலாயுள்ளவேந்தரையைவர்தம்மா
லாடமர்க்களத்தின்வீட்டியடற்குமீரொன்பானாளிற்
பீடுசால்வீமனோடும்பெய்கழன்மன்னர்மன்ன
னீடமர்புரியுமெல்லையலாயுதனிமைப்பின்வந்தான். (௯௮)

அரவுயர்க்கொடியோன்சென்னிதகர்ந்திடவாடல்வீம
னுருமெனக்காலாற்சீறியுதைத்தலுமிராமனேனு
தெரியெழவிழிப்பக்கண்ணனிரந்துயர்வெகுளிமாற்றப்
புரிசைசூழ்துவரைதன்னினுங்கவன்போயினானே. (௯௯)

பாரதமுடித்துக்கண்ணன்புவியுறுபாரந்தீர்த்து
வார்முரசுயர்த்தவெற்றித்தருமனைமவுலிசூட்டி
நேரலர்பணிந்துபோற்றவொருகுடைநீழறன்னி
லார்கலியுலகம்யாவுமவனடிப்படுத்தினானே. (௧௦௦)

கச்சைமாவியானைபோலுந்தருமற்குக்களிப்பினோடு
மெச்சுவமேதமோர்பத்தினிதினிலாற்றுவித்துச்
செச்சையந்துளவத்தண்டார்திளைத்திடுமுழவுத்திண்டோட்
பச்சைமால்துவரையெய்திப்பரிவின்வீற்றிருந்தானன்றே. (௧௦௧)

விசயன்மான்றடந்தேரூர்ந்தகண்ணனைவிழைவிற்காண்பான்
குசலமாமுனிவனெய்தித்தருப்பணமுதவக்கொண்ட..
னசையினேர்பிடிவாய்க்கொண்டுபின்னருநயத்தனோக்கி
வசையறுகமலவீட்டின்மடமயில்விலக்கினானே. (௧௦௨)

அளவளாய்முகமன்கூறியந்தணன்றன்னையைய
னுளமகிழ்ந்தன்பினோடும்விடைநல்கவொல்லையேகித்
தளர்வரும்வினையாலொன்றுந்தந்திலன்றளர்ந்தோர்யார்க்குங்
களைகணுங்கண்ணனென்னாமுகமலர்ந்துதன்மனையிற்சென்றான். ()

மடுவியகுறிஞ்சவோங்குமாடத்தின்மகளிர்சூழத்
தகைமலர்ச்செல்விபோலத்தன்மனையாட்டிவைகும்
புதுமையுமளகைமூதூர்புரந்தருளியக்கர்வேந்த
னிதியனைநிறைந்தாலென்னநீணகர்வளனுங்கண்டான். (௧0௪)

காண்டலும்வியந்துநோக்கிக்கண்ணனைப்போற்றியன்பு
பூண்டிடுமனைவியோடுங்கிளையொடும்புதல்வரோடுஞ்
சேண்டகுறிப்பின்மிக்கவிந்திரதிருவனுநி
மாண்டகுமறையோனுள்ளமகிழ்ந்துவீற்றிருந்தானன்றே. ௧0௫

பருதியஞ்செல்வன்றன்னைப்பாந்தள்வாய்ப்படுத்துங்காலத்
திருதிலக்காசர்யாருஞ்சமந்தகமடுவினெய்தி
மருவிநீராடுமேல்வைவாள்வசுதேவனென்போ
னரியநல்வேள்வியொன்றுங்கினிதினிலாற்றினனே. (௧0௬)

முருகுறழ்தோற்றத்தைவர்முதுமனைக்கிழமைபூண்ட
தருமனன்புதல்வராதிமங்கையர்துளவத்தண்டார்க்
கருமுகில்வண்ணனில்வாழ்கரும்புறழ்குதலைச்செவ்வா
யரிவையர்தன்னைக்காண்பான்சாலையினடைந்தாரன்றே. (௧0௭)

கலவமாமஞ்ஞையன்னார்தழீஇக்கொளவெய்துங்காலை
மலையொடுமலைகள்சேரும்வாறுபோல்வளர்ந்துவீங்கு
முலையொடுமுலைகடம்மின்மோதலுமுயன்றுபுல்ல
விலகுபொற்றொடிக்கைநீளமின்மையாலிறைஞ்சிநின்றார்.(௧0௮)

தளரிடைமெலியவீங்குந்தடமுலைக்கோதைமாத
ரளவளாய்முகமன்கூறிச்சிலபகலமர்ந்தபின்னர்
வெளிறெறிகேள்விமிக்கதருமனைமுதலாய்மேவு
நளிர்கடலவனிவேந்தர்தத்தமநகரிற்போனார். (௧0௯)

கண்ணனுமூன்றுதிங்கண்மதுரையிற்களிப்பின்வைகி
நண்ணுசீர்நந்தகோனைப்பாடியினண்ணுகென்ன
வெண்ணருஞ்சிறப்பினோடும்விடைநல்கித்துவரையென்னும்
புண்ணியநகரினெய்திப்பொலிவின்வீற்றிருந்தானன்றே. (௧௧0)

இடங்கர்வாய்ப்பட்டவுன்றன்குருமகனினிதினெய்தத்
தடங்கடலதனிற்புக்குத்தந்தனையதுபோற்றுவ
மடங்கலேறனையகஞ்சன்மாட்டியமைந்தர்தம்மை
யடங்கலர்ச்செகுத்தவேலோயளித்திடவேண்டுமென்றாள். ௧௧௧

தேவகியுரைத்தமாற்றங்கேட்டலும்பிலத்திற்சேர்ந்து
மாவலிமுன்னரெய்திமரீசிதன்மைந்தர்வேந்த
னேவுறுசாபத்தன்னாலிரணியர்க்குதித்தாரன்னோர்
மேவுமென்முன்னோராகிக்கஞ்சனாலாவிவிந்தார். (௧௧௨)

ஆங்கவர்நின்பான்மேவுமருவருமளித்தியென்னப்
பூங்கழற்குமரர்தம்மைமாவலிபுகழ்ந்துநல்கித்
தேங்கொள்பைந்துளவோன்பாதம் வணங்கலுஞ்செங்கண்மாயா
னோங்கெழிற்புதல்வர்தம்மைத்தேவகிமுன்னருய்த்தான். (ககந)

மைந்தனைக்காண்டலோடுமவண்முலைசொரிந்துதிம்பால்
சிந்திடவுச்சிமோந்துதேவகிமகிழ்ச்சிகூற
வெந்திறற்புதல்வர்கண்ணன்மென்கரத்தமைந்தபேற்று
லந்தமில்சாபநீங்கியமரராய்விசும்பிற்போனார். (ககச)

சுருதிநூன்மறையோனயசுவேதனுமமரிற்றுன்னார்
வெருவவாள்விதிர்க்கும்வெற்றிவிறல்வெகுலாச்சுவப்பே
ரரசனுமினிதுவைகுமிதுலையினுயர்பாடி
மருதிறத்தவழ்ந்தகண்ணன்மாதவரோடும்புக்கான். (ககரு)

இருவருமொருங்குபுக்குவிருந்துறைத்திருப்பவையன்
மருவுதன்னுருவம்போலமறையவருருவையெல்லா
முருவிரண்டாக்கிச்சென்றோர்காலையினிருவரில்லிற்
பொருவரும்விருந்துண்டன்னோர்க்குயர்கதியளித்துப்போனான்

கண்ணன்பூமிபாரந்தீர்த்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—உககூச.

முப்பத்துநான்காவது

கண்ணன்வைகுந்தமடைந்தவத்தியாயம்.

சுருதியோர்நான்குவேதமுனிவரருருவிற்றோன்றிக்
கருமுகிலனையமேனிக்கண்ணனைவணங்கியேத்தி
முருகவிழ்துளவோன்வேதன்முக்கணெம்பெருமானென்ன
மருவியமூவர்தம்மிலளியுள்ளாவர்கொன்மாதோ. (க)

என்னலுங்கண்ணனென்னைநான்முகன்றன்னையீன்ற
முன்னவன்கருணைக்கெல்லாமுதலவனுருமன்னோன்
றன்னுடைக்கருணைதன்னைசாற்றுவன்கேட்டிரென்னாக்
கன்னியந்துளவத்தாரோன் கருத்திடைவணங்கிச்சொல்வான்.

வெந்திறற்சகுனிமைந்தன்விருகன்வெவ்விடத்தையொப்பா
னந்தமுமுதலுமில்லாவண்ணலைப்பணிந்துபோற்ற
வெந்தைமுன்னின்றுவேண்டுநல்வரங்கோடியென்ன
முந்தியார்சிரத்தைத்தொட்டேனவருயிர்முடிதல்வேண்டும். ()

என்றலுமளித்தேமென்னவின்சிரத்தென்கைவைத்தாற்
பொன்றிடுமென்னிலீதுசரதமென்றுரைத்துபொங்கிக்
குன்றவில்லவன்றன்செல்வக்கூற்றின்வெங்கூற்றமோடப்
பின்றுடரவுனையுள்ளமயக்கியான்பேதித்தேனல். (ச)

மத்தமுமரவுஞ்சூடிப்போயுடன்மயானத்தாடும்
பித்தனதுரையைக்கேட்டுப்பின்றொடர்ந்திடுவதென்றே
முத்தலைச்சூலமேந்துமவுணனின்முடிமேற்செங்கை
வைத்திடுகென்னவைத்தான்மணிமுடிசிதர்ந்துவீழ்ந்தான். (ரு)

ஆங்கவன்மாயயான்போயவிர்மதிமுடித்தவண்ணல்
வீங்கியகருணைநோக்கிமெய்ம்மயிர்சிலிர்ப்பக்கண்ணீர்
தாங்கிடவலஞ்செய்தன்பிற்றுறுமலர்தூவியன்றேன்
பூங்கழல்பணிந்துபோற்றவிடைநல்கிக்கயிலைபுக்கான். (சு)

ஆதலாற்பணிந்துபோற்றுமடியவர்க்கெளியனொரு
மாதுமைபங்கனல்லான்மற்றுமோர்தெய்வமுண்டோ
வேதமற்றவன்பொற்றாளேயிறைஞ்சுமினென்றுசெப்பத்
தீதறுமறைகள்யாவுந்தெளிவொடுபோயவன்றே. (எ)

பொன்றிணிதுவரைமூதூர்ப்பொருந்துமோர்மறைவலாள
னென்றொழிபத்துமைந்தர்பிறந்துழியொல்லைவியக்
கன்றியவுளத்திரேடுங்களியினவண்டுபாடு
மன்றலந்துளவமாயன்மணிநகர்விதிபுக்கான். (அ)

யானுமென்மனையும்பாவமிழைத்திலேநறுந்தேனூற்றுங்
கானமர்துளவோன்செங்கோன்முறைமையிற்காத்திடாம
லீனமதிழைத்தறன்றோலெய்தியதென்னமாழ்கிக்
கோனகர்வாயிறன்னிற்குறுகினன்முறையிட்டானே. (கூ)

கன்னனைமுதலாயுள்ளயாதவர்காக்கொணாதென்
றெண்ணினரிருப்பத்தெண்ணீரொழுகடன்ஞாலம்போற்று
மண்ணலந்தனிவில்லாண்மைபருச்சுனன்மறையோன்முன்னர்
நண்ணிவெஞ்சிலையைநோக்கிநகைத்திவையுரைக்கலுற்றான். ()

மாயிருஞாலமேற்றுமுனிவவுன்மனைவியுற்ற
தூயநற்கருப்பந்தன்னையுயிர்ப்புழிமுன்னர்த்துஞ்சுஞ்
சேயெனநினையல்வெய்தாச்சினவுவெம்பாசம்வீக்கி
யாயிரங்கூற்றம்போதந்தழிப்பினுமழிக்கொணாதால். (கக)

என்றுவில்விசயன்கூறவிரங்கியமறையோன்றேறி
மன்றநன்மனையினெய்திமகிழ்வுடனிருக்குநாளிற்
றுன்றிருங்கூந்தற்றாயகருமுதிர்ந்தகடுநொந்தா
ளின்றுயிர்த்திடுவளென்னவருச்சுனர்க்கியம்பினானே. (கஉ)

மறையவனுரைத்தமாற்றங்கேட்டலும்வரிவில்லேந்தி
நறவுகொப்புளிக்கும்பைந்தார்நாறிருங்கூந்தற்பேதை
பொறையுயிர்த்தருளுஞ்சாலைகளையிறைற்பொதிந்துகாவா
வனநகழலவனிவேய்ந்தனந்துபின்றினின்றான். (கங)

காற்றும்வெம்பொறிகள்சிந்துங்கனலியுந்தறுகட்பேழ்வாய்க்
கூற்றுமுன்னூறுதலஞ்சக்கொடுமரங்குழையவாங்கி
யேற்றியவிசயன்காத்துநிற்பவுமின்றமைந்தன்
றோற்றமுமற்றதூழின்சூழ்ச்சியார்காக்கவல்லார். (௧௪)

ஈன்றசேயாவியன்றியுடலமுங்காணாதேங்கி
யான்றநூற்கேள்விபோயவந்தணனழுதுவிம்மி
மூன்றுலகத்திலுள்ளூமரிவிற்கொருவனென்னுந்
தோன்றனிகாத்தவண்ணநன்றெனவழன்றுசொன்னான். (௧௫)

அவ்வுரைகேட்டலோடுமருச்சுனனழன்றுசீறிப்
பவ்வவாருதியோரேழும்பாதலமேழுமெய்தாச்
செவ்வனேதிசைகளெட்டுந்திசைமுகனுலகமாதி
யெவ்வெலாவுலகந்தேடிக்காண்கிலாதினைந்துசொல்வான். (௧௬)

வஞ்சினமிழுக்கித்தாவிவாழ்கலேனெரியின்வீழ்ந்து
துஞ்சுவனென்னப்பார்த்தன்றுணிதலுங்கண்ணனெய்தி
நெஞ்சழிந்திரங்கிநையேனிகொறிமுனிவனீன்ற
மஞ்சனைத்தருவல்சேறுமைத்துனத்தோழவென்றான். (௧௭)

இருவரும்விரைவினெய்தியிரவிதேர்த்திகிரிசெல்லும்
பொருவருநேமிவெற்பைக்கழிந்துபோயிருளின்பொம்மல்
மருவியவுலகினெய்தநெறிமயங்குற்றவாற்றால்
விரிகதிர்க்கவிழ்குமாழிநினைத்தனன்மேகவண்ணன். (௧௮)

பாய்கதிரிரவிகோடியெழுவபோற்பருதியெய்தி
மேயநள்ளிருளின்குப்பைவிழுங்கிமுன்செல்லவேகி
யாயிரஞ்சுடிகைநெற்றியரவணைப்புறத்திற்றுஞ்சு
மாயிருஞாலமுண்டமரகதக்குன்றங்கண்டார். (௧௯)

காண்டலுமகிழ்ச்சியெய்திக்கருந்துழாய்புனைந்தகண்ணன்
பாண்டவனோடுமெய்திப்பதமலர்பணிந்துபோற்றச்
சேண்டிகழிரவியேய்க்குந்திருமணிகிடந்தமார்ப
னாண்டகையினிதினோக்கிவந்தவாறறைதியென்றான். (௨௦)

மறைவிளையாடுஞ்செந்நாவந்தணன்மகிழ்வினீன்ற
சிறுவரைத்தேடிவந்தேந்திருமறுமார்பவென்ன
வறைதலுஞ்சிறந்தமைந்தரையிருவரையுநல்கி
நறைகமழ்துளவத்தண்டார்நாரணன்புகலலுற்றான். (௨௧)

தகவுடனும்மையீண்டுக்காண்பதுதலைக்கீடாகப்
புகொறிமறையோனீன்றபுதல்வரைக்கொணர்ந்தேனீவிர்
நிகரறுபுவியின்பாரநீக்கினிர்சிறிதுநீக்கி
யுகமுடிவதனிலீண்டுப்புகுதுகவொல்லையென்றான். (௨௨)

மணியெழுவனையதிண்டோளிருவரும்வணங்கியேத்திப்
பணியலைபுறத்திற்றுஞ்சும்பரமனல்விடைகொண்டேகி
யணிகெழுதுவளையெய்தியரும்பெறற்குமார்தம்மைப்
பிணியுறுமறையோர்க்கீய்ந்துபெட்பின்வீற்றிருந்தாரன்றே. ()

பண்ணமைமருதலைத்தீஞ்சொற்பவளவாய்ப்பாவையல்கு
லெண்ணறுமகளிர்கொம்மையிளமுலைப்போகமாந்தி
மண்மகள்பாரநீக்கிவண்டுழாயலங்கற்றிண்டோட்
கண்ணனெவ்வுலகுமேத்தக்களிப்புடனிருக்குநாளில். (உச)

பிருகுவைமுதலாயுள்ளபெருந்தவமுனிவர்யாருங்
குருகின்வாய்கிழித்தவெற்றிக்கொண்டன்முன்னெய்திவெய்தா
கருகுவெந்தீமைசெய்யுங்கலியுகம்வருதலெண்ணி [ங்
வெருவொடுமுள்ளமாழ்கிவெய்துயிர்த்துரைக்கலுற்றார். (உரு)

அறந்தலைமயங்கவெய்துங்கலியுகமணைந்ததைய
மறந்துமிவ்வுகத்தில்யாங்கண்மருவுவதொல்லாதாவி
யிறந்திடவேண்டுமென்னவியம்பலுமீன்றதாயிற்
சிறந்திடுகண்ணனுள்ளந்தெருட்டிமற்றிதனைச்சொல்வான். உசா

சீர்கெழும்யுகங்கடம்மிற்பல்பகறவஞ்செய்தாலுஞ்
சார்வருமுத்தியெய்தார்கலியுகமதனிற்றாழ்ந்தோ
ரோர்கணந்தவஞ்செய்தாலுமுத்தியினுறுவரொன்றாற்
பாரினில்யுகங்கள்யாதேகலிக்கிணைபகர்வதம்மா. (உஎ)

திங்களங்கண்ணிப்புத்தேள்சேவடிக்கமலமுண்டு
கொங்கவிழ்மலருமுண்டுகுளிர்தருபுனலுமுண்டு
தங்குமஞ்செழுத்துமுண்டுதவளவெண்ணீறுமுண்டு
வெங்கலிக்குடைவதென்னீர்வெளிற்றறிவுடையர்போல. (உஅ)

ஆணவமலத்தையாதிமலங்களென்செய்யுமன்றேற்
காணவாவிண்டுபுக்ககலியுகம்புரிவதென்னே
மாணமர்கமலந்தேவையென்னைமுன்வயிறுவாய்த்துத்
தாணுவாயுலகமீன்றோன்றாளிலன்புளதேன்மன்னோ. (உகூ)

என்னையுங்கமலவிட்டிலிறையையுமடிமைகொண்ட
முன்னவன்றன்னையேத்தியுய்ம்மின்கண்முனிவீரென்ன
வன்னநான்மறையோர்யாருமகந்தெளிந்தாசிகூறிக்
கன்னியந்துளவோன்செய்யகழலிணைவணங்கிப்போனார். (கூ0)

தனைபெறுதுருவாசன்றன்சாபமேதலைக்கிடாக
வகைபடுகின்றகடம்மைவானமாமுவந்திட்டுப்
புகரறுகண்ணனென்னும்புண்ணியமூர்த்திசோதி
நகைநிலாத்தலழுந்துபவைகுந்தநண்ணினானே. (கூக)

வேறு.

ஆயிரஞ்சுடிகைமணிவிளக்கெடுக்குமரவவெம்பாயலினமர்ந்து, சேயிதழ்க்கமலப்பொகுட்டுவீற்றிருக்குந்திருமகடன்னொடுஞ்சிறந்த, மாயிருஞாலமடந்தையுந்தழுவலானவர் பணிந்து போற்றிசைப்ப, பாய்திரைசுருட்டுப்பாற்கடலதனிற்பங்கயக்கண்ணன்வீற்றிருந்தான். (௩௨)

கண்ணனன்மரபிலுதித்தவச்சிரனைக்கழிபெருங்கேள்வியின்றுறைபோ, மண்ணலந்தருமணிந்திரப்பிரத்தத்தணிகெழுமணிமுடிசூட்டி, யெண்ணருந்திறல்கூரடற்பரிச்சித்தையத்தினபுரத்திறையாக்கி, யுண்மகிழ்தூங்கத்தம்பியரோடுந்துரோபதையோடும்வீடுற்றான். (௩௩)

வச்சிரன்பிரதிவாகுவைப்பயந்தானவன்மகன்சுவாகுமற்றவன்சே, யச்சணங்கயில்வேலுக்கிரசேனனவன்றனக்கருட்சதசேன, னிச்சைகூர்புதல்வனிளமதிமுடித்தவேந்தைதன்றொண்டரிற்சிறந்த,செச்சையங்கண்ணித்திங்கணன்மரபின்மன்னரைத்தெளிந்துரைத்தனமால். (௩௪)

இன்னநற்காதைபுகன்றவர்கேட்டோர்படிக்குநரொழுதிவைத்தோர்கள், கன்னலங்குதலைத்தளர்நடைப்புதல்வர்ப்பயந்துதங்கிளையொடுங்களித்துப், பொன்னகர்புரக்கும்புரந்தரனென்னப் புவியினினளப்பினாள்வாழ்ந்து, பன்னகமணிந்தமுக்கணெம்பெருமான்பதநிழலுறைகுவரென்றான். (௩௫)

கண்ணன்வைகுந்தமடைந்தவத்தியாயமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—உஉஉ௬.

முப்பத்தைந்தாவது

யுகதன்மமுரைத்தவத்தியாயம்.

தகைபெறுமுகங்கணான்கினடந்திடுந்தருமம்யாவும்
வகைபடவுரைத்தியென்னமகதியாழ்முனிவனோடும்
புகரறுவிசும்புகாக்கும்புரந்தரன்கேட்பமுன்ன
மகனிலமுண்டவாமைபுருவுறுமண்ணல்சொல்வான். (க)

விற்றொழில்விசயன்கேட்பவியாதமாமுனிவன்முன்னஞ்
சொற்றவாறுரைப்பக்கேண்மின்றாய்ச்சிறைவெகினப்பாகன்
கற்பத்தினணித்தாமுன்னையுகமுதல்கலியீறாக
வற்புறும்யுகத்தின்செய்திவழுவுறுதனைத்துமாதோ. (உ)

முந்தையயுகத்தின்றெய்வம்பிரமனாமுக்கட்டேவைச்
சிந்தைசெய்திருப்பர்நான்குபதத்தொடுந்தருமஞ்செல்லு
மந்தமில்கானமும்வெற்புநகரமென்றையுறுது
மைந்தர்வீற்றிருப்பர்தம்மிற்பிரிந்திடாமகளிரோடும். (௩)

நிலைத்தவையாய்மங்கைநெல்லியின்முன்னர்த்தோன்று
கலைத்தலையுலகம்விண்ணோர்நாடெனப்பிரிக்கொணாது
மலைக்களிகூரப்போகமகிழ்வர்யானெனதென்றேதுஞ்
சிலைக்கொளாங்காரமின்றிமலமெறிசித்தராகி. (ச)

வருந்தறமுன்னமொய்தும்யுகத்தினைவகுத்துச்சொன்னோந்
திருந்திரண்டாம்யுகத்தின்செய்தியுந்தெளித்துச்சொல்வாம்
விரிந்தகள்ளிருளின்குப்பைவிழுங்கிவெங்கதிர்கணீட்டு
மிருங்கதிர்ச்செல்வனந்தயுகத்தினிற்றெய்வமென்பார். (ரு)

முன்பயில்யுகத்தினுற்றமுதுக்குறைவின்றித்தோன்று
மன்பதையதனுன்முன்போனினைத்தவைமருவல்செய்யா
வன்பொடும்வேறோர்சித்தியணைதலின்மழையுண்டாகப்
பொன்பயிறருக்கள்யாவும்புவியினிற்றோன்றுமன்றே. (சு)

வியன்சினைத்தருக்களல்கும்விழுத்தகுசிறப்புவாய்ந்த
பயன்படுபோகமாந்திப்பண்ணவர்போலவாழ்வர்
நயம்படுதருமமூன்றுகால்கொடுநடக்கும்வேள்வி
முயன்றினிதாற்றிமுக்கட்பரமனைமுன்னுகிற்பார். (எ)

யானெனதென்னுமுள்ளச்செருக்குறத்தருக்கள்யாவு
மானிலத்தொளிக்குமைந்தர்மகளிர்பாற்புணரத்தோன்று
மூனுடையாக்கைமாக்களொளித்தமற்றெவையுமெய்தும்
பான்மையசித்திமுன்னப்பரிவுடன்சேருமன்றே. (அ)

கைபுனைந்தியற்றுப்பைம்பூண்கடைந்திடாவமிர்தமன்ன
ணைபடுகனிகளாடைநன்னரியதருக்கணல்கப்
பைபடுமல்குலாருமைந்தரும்பயன்கடுய்த்து
மைபடுவிசும்புகாக்கும்வானவர்போலவாழ்வார். (கூ)

காமநோய்வெகுளிவெய்யமயக்கமுன்கவற்றமாந்தர்
பூமலிதருக்கள்யாவுமெனதுனதென்றுபொங்கி
யேமுறவெய்திச்சிறியகலொடுமலைதறன்று
ஞமறக்காக்குமாங்கணல்குரவுழப்பர்மாதோ. (க0)

நயக்குறுமின்பதுன்பத்தட்பநண்ணரிதாம்வெம்மை
மயக்குறுமானமானமின்மைவண்கொடையுலோபம்
பயக்குறவில்லந்தூசுபழிப்பில்பொன்முதலயாவும்
வியப்புடனுஞற்றிநீட்டுமெலிவொடும்வாழ்வரன்றே. (கக)

கருவிமாமேகமீண்டிக்கனைபுயல்பொழியயாரும்
பொருவறுபகடுபூட்டிக்கூன்கொழுப்புதையவூன்றி
யிருநிலங்கிளைப்பவந்திங்களிபடுமரங்கள்யாவு
மரிலொடுமெங்குந்தோன்றிப்பருஞ்சுவையளிக்குமன்றே. (கஉ)

கான்படுபசுக்களெழுங்கனைகதிர்அடுப்பநீண்டு
வான்படர்மாடமோங்கும்வளநகர்பசுக்களெழுந்
தோன்றலுமாந்தருள்ளந்துற்றியங்கசையாறுரு
மேன்றெனதுனதென்றோதியிகலுறயாவும்போன. (கங)

பிருதுவென்றுரைக்கும்வேந்தன்பெட்பினுட்புவியினுள்ள
வரியநல்வளங்கள்யாவுங்கறந்தினிதளித்தவாற்றுன்
மருவியமக்கள்யாரும்பண்டையின்மகிழ்ச்சியெய்தி
யொருவர்வாழ்வொருவர்வவ்வியுட்டற்றிவெம்பூசல்செய்வார். ()

ஆசறநிமிர்ந்துவாசைச்சிமிழ்ப்புறுமுலகம்யாவுந்
தேசறவெண்ணிவேதன்சிறந்திடுவருணமற்றை
மாசிலாச்சிரமம்யாவும்வகுத்திவைநிலையிற்காக்க
வோசைபோமன்னரோடுமகத்தினையுவப்பிற்செய்தான். (கரு)

தெளிகுநருணர்திரேதாயுகத்தினைத்தெளிந்துசொன்னுங்
களிமிகுதுவாபரத்தின்செய்தியுங்கருதிக்கூறி
னளிகெழுவிண்டுத்தெய்வமறமிருபாதத்தெய்து
நளிகடலவனியெங்குநன்மகாநடக்குமன்றே. (கசா)

ஆசையாலுலோபந்தன்னாலருஞ்சமர்புரிவர்யாரு
மாசிறத்துவத்தையெண்ணித்தெளிகலர்மயங்கல்செய்வார்
தேசுடைவியாதன்வேதந்தெளிகுறநான்கதாக
வேசறுமுலகந்தன்னிற்பிரித்தினிதியற்றினானல். (கஎ)

துவாபரயுகத்தின்செய்திசொற்றனம்புன்மைகோப
மவாவுறுகலியுகத்தின்முறைமையையறையிற்றெய்வந்
தவாதுயர்மகேசனுகுந்தருமமோர்காலிற்செல்லுங்
குவாலுறுநியம்யாவுங்கொடுப்பதேதருமமாமால். (கஅ)

வெளிற்றறிவுடையபுல்லர்மேதகுசான்றோர்தம்மைக்
களிப்பொடுந்தடிவர்பொய்ம்மைகடும்பசிமூப்புத்துன்பந்
தளிப்புயல்வறத்தலெய்துந்தம்பொருளளியாரோனு
மொளித்துமற்றொருவர்கையிலுறுபொருள்கவர்வரன்றே.(ககூ)

ஒழுக்கமுமளியும்போரினுடற்றுவெந்துயருமின்றி
யிழுக்குவரறத்தினின்றுமிருபிறப்பாளர்யாரும்
விழுத்தகுமறைகளோதாரருமகம்விழையாரொன்று
மழுக்குடைமனத்தராகியருநரகதனில்வீழ்வார். (உ0)

நெறியினோர்போலக்கற்றோய்கலிங்கமெய்நிலவச்சுற்றிக்
கறையெறிவெண்பல்லோடும்பின்னவர்காலையேகி
யறைபுனல்படிந்துநீதியந்தணர்தம்மையெள்ளி
மறையினைமறைபோர்தம்பாற்கற்பர்மாநிலாயமெய்த. (உக)

ஆறுமறையோரில்வாழ்மனைவிநோங்கழுங்கப்போகிக்
கூறுமின்னவர்தம்மாதர்குவிமுலைதிளைப்பப்புல்லி
யூறுயரின்பமாந்தியாங்கவர்தம்மோடுண்டு
வீறுயர்விருந்தைவிற்றுநரகிடைவீழ்வர்மாதோ. (உஉ)

கொலைகளவுறல்கள்ளுண்டல்குருநிந்தையுடன்பாடென்னு
மலைவுறுகொடியபாவமலிந்திடுதிறல்கொள்வேந்தர்
கலையின்மறையோர்நோவக்கடிவர்கற்றறியாப்புல்லர்
நிலைபெறுதிருவராவர்நீதியோர்வறியராவார். (உங)

அந்தணர்மறைகளோதார்பஞ்சராத்திரநூலாய்ந்து
நிந்தனைவாமமோர்ந்துநீற்றொளிபழுத்தமேனி
யெந்தையைவழுத்தாராகிக்கவுதமனிசைத்தசாபந்
தந்தவினையால்வெய்யரவுரவநரகிற்றாழ்வார். (உச)

கொடுவரிமுதலவாயவிலங்கினாற்கமஞ்சூற்கொண்டற்
படுமழைவறந்தவாற்றாற்படுபுனற்சோலைதன்னாற்
கடுவளியதனால்வெய்யவெயிலினாற்கலங்கிமாந்தர்
மிடலருந்துன்பமெய்திவெந்துயருழப்பரன்றே. (உரு)

இன்னவெங்கலியின்முக்கணெந்தைதாளிமைப்போதேனுந்
தன்னமருள்ளத்தெண்ணிற்றழலிடையளப்பினுணின்
றுன்னரும்யோகந்தன்னினுறங்கினோர்தமக்குமெய்தா
மன்னருமுத்திவீட்டின்மருவிவீற்றிருக்கலாமால். (உசு)

எற்றுநீர்வேலைஞாலமீன்றருளெகினப்பாகன்
பொற்றதாமரையின்கேள்வன்பூமகள்கொழுநனென்னு
முற்றுமூன்றுகத்திற்றேவுங்கலிக்குத்தேவாயமுக்கட்
கற்றையஞ்சடையோனென்னநான்மறைகழறுமன்றே. (உஎ)

என்றுநான்குகத்தின்செய்தியாவையுமுறையினோதி,
மன்றலந்துளவினோனுமலரினான்முகனுங்காணா
குன்றவிற்குழகன்றன்னைக்கண்டனைகுமரவுன்போ
லன்றறிவோரில்யாரோநற்றவமுடையயொன்னா. (உஅ)

விற்றொழில்விசயற்கன்பின்விடையினிதருளிவேதங்
கற்றுணர்வியாதனென்போன்கழிமலந்தன்னினானா
முற்றிடும்புழுவுமாங்குமாய்வுறினுலவாமுத்தி
பெற்றிடுங்காசிதன்னிற்பெட்பொடுமணைந்தானென்றான். (உகூ)

யுகதன்மமுணர்த்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—உஉருஅ.

முப்பத்தாறாவது

காசியின்சிறப்புரைத்தவத்தியாயம்.

கதிர்பிணைந்தாடுசெந்நெற்கழனிசூழ்காசியெய்து
முதுமறைவியாதன்செய்திமொழிகெனமுனிவனோடுந்
துதைமலர்த்தருவினீழற்பண்ணவன்சாற்றமுன்ன
மதமலைமூலமென்னவந்தகார்வண்ணன்சொல்வான். (௧)

சயிமுனிவிச்சுவேசன்றாளிணைபணிந்துபோற்று
மயர்வறுவியாதற்போற்றிவழங்குசாங்கியவியோகம்
பயில்வுறுதியானந்தீர்த்தமந்திரம்பழிப்பின்மெய்ம்மை
யியல்புறுமறங்கொலாமைஞானமிந்தியமடக்கல். (௨)

ஈங்கிவைகொல்லோமற்றுமுளகொலோவுயர்ந்தவீசன்
பூங்கழலடைதற்கென்னப்புகறலும்வியாதன்சொல்வா
னுங்கவையுயர்ந்தவல்லமுத்திவீடடையவேண்டிற்
றீங்கெழிகாசிதன்னிற்சேர்தலேயுயர்ந்ததாமால். (௩)

இன்னவாறுலகம்யாவுமீன்றசித்துதரக்கன்னி
முன்னவனோடுங்கேட்பவிங்கியான்மொழிந்தவாறே
பன்னினன்கடவுட்காசிமாநகரன்றிப்பார்க்கி
னுன்னரிதாகுமுத்திவீட்டின்பமுதவற்பாற்றே. (௪)

தந்தைதாய்குரவரின்சொன்மறுத்தவர்தணப்பிலாத
வெந்துயர்நரகின்வீழ்வர்மறுத்துவெண்ணீற்றுமேனி
யெந்தைவாழ்காசிதன்னினெய்தினோரிறைவன்போல
நந்தலிலுருவமெய்திப்பேரின்பநண்ணுவாரே. (௫)

தவளையைமற்றோர்பாம்புகொல்லவத்தவளையோங்கு
குவளையங்களமுமூன்றுகண்ணும்வார்குழவித்திங்கட்
பவளவார்சடையுமாயப்பாந்தளையணிந்ததென்றா
னவையறுகாசிபோலநன்னகர்பிறிதுமுண்டோ. (௬)

காசியேகடவுடீர்த்தங்காசியேயவ்வியத்தங்
காசியேமுத்திவைப்புக்காசியேகளிகொண்ஞானங்
காசியேயுமையோடீசனுறைவிடங்கங்கைசூழுங்
காசியேபிறவிநோய்க்குக்கருதருமருந்துமாமால். (௭)

எனவுளமகிழ்ச்சிதூங்கச்சயிமுனிக்கினிதினோதி
வினையறுதவத்தின்மிக்கவியாதமாமுனிவனென்போன்
றனதருள்பெறுமாணாக்கர்களிப்புறத்தகவினோடு
நினைவருமோங்காரேசன்சிறப்பினைநிகழ்த்தலுற்றான். (௮)

கங்கைநீர்பெருகிமச்சவுதரம்போற்கலக்குமேல்வைத்
தங்கியவோங்காரேசன்றாளிணைவழுத்தினோர்க
டிங்களங்கண்ணிவேய்ந்தசெஞ்சடைதாங்குமுக்கட்
புங்கவனாகித்தேவர்போற்றவீற்றிருப்பரென்று. (௯)

விருப்பொடுமற்றோர்கோயின்மேவியவிலிங்கந்தன்னைக்
கிருத்திவாகேசனென்பாராங்கதுகிளர்ப்பன்கேண்மி
னருத்தியிற்பூசிப்போரையடர்கயாசுரன்றன்மேனி
யுரித்துமேற்போர்த்தனன்னலிப்பெயருற்றதன்றே. (க0)

ஆயிரங்கோடிசன்மமருந்தவம்புரிந்திட்டாலு
நேயகன்முத்தியெய்தார்நிகழ்த்தருங்கிருத்திவாசன்
கோயிலினெய்தினோர்தங்குறைகழல்வணங்கினோரு
மோய்வருமுத்திவீட்டினுறைந்தினிதிருப்பான்றே. (கக)

என்றருங்கிருத்திவாசன்புகழினிதெடுத்துக்கூறி
மன்றமாறனுக்கர்கேட்பமறைதெரிவியாதனென்போன்
றுன்றிவானவர்கள்போற்றித்தொழுகபர்த்திசன்காதை
யொன்றியவுவகையோடுந்தெளிதரவுரைக்கலுற்றான். (கஉ)

பொறிவரிமடங்கல்பற்றப்புள்ளிமான்வெருவிமாழ்கிக்
கறைமிடற்றெந்தைகோயில்வலஞ்செயாக்கலங்கியோடி
யிறைவன்முன்னெய்துங்காலத்தெறுழ்வலியோடும்பற்றிப்
பிறைநிகருகிரானெஞ்சம்பிளந்துயிர்குடித்ததன்றே. (கங)

ஈசன்முன்னிறந்தவாற்றாலிளம்பிறைக்கண்ணிசூடித்
தேசுடைமழுமானேந்திச்சிறந்தமுக்கண்ணினோடும்
வாசவன்முதலோர்போற்றமழவிடையுயர்த்தோனாகி
யாசறுகயிலைவெற்பினடைந்துவீற்றிருந்ததன்றே. (கச)

புதுப்புலவெறியுமான்றேல்புனைந்திடுசங்குகன்னன்
மதித்தருட்டருபிசாசமோசனவாவிதன்னுள்
விதிப்படிதவஞ்செய்காலைவெள்ளெயிற்றலகையெய்தித்
துதித்தலும்யாரையென்னச்சுழல்விழிப்பசாசுசொல்லும் (கரு)

முற்பவமதனில்யானோர்முனிமுதுக்குறைவின்றாகப்
பொற்பினைவியந்துவெய்யப்பொருள்குவித்தறஞ்செய்யாம
லற்புடைமனைவிகோவவயலவர்ப்புணர்ந்துவிய
வெற்பெழுந்தியங்கும்யாக்கைப்பேயுருவெய்தினேனால். (கசு)

இவ்வுருவொழியும்வண்ணமருள்புரிந்திடுதியென்றே
வவ்வியமவித்தசிந்தையத்தனைப்பாதம்போற்றக்
கவ்வைதீர்வாவியாடிற்கழியுமிவ்வுருவமென்னத்
தெய்வநீர்தனிற்றோய்ப்பசாசுருத்தீர்ந்ததன்றே. (கஎ)

கங்கையுமறுகும்வாசக்கடுக்கையுமமிர்தந்தாற்றுந்
திங்களுந்தரித்தநீலகண்டமுஞ்சிறந்துதோன்ற
வங்கையின்மழுமானேந்தியவிர்மணிவிமானமூர்ந்து
வெங்கதிர்ச்செல்வனுப்பாசினனுழைமேவிற்றன்றே. (கஅ)

ஆங்கதுநோக்கிமாயையறுத்துயர்சங்குகன்னன்
கோங்கிளமுலையாள்பங்கன்குரைகழல்பணிந்துபோற்ற
வோங்கொளியிரவிகோடியுதித்தபோலிலிங்கந்தோன்றத்
தீங்கறநோற்றமேலோனதனுழைச்சேர்ந்தானென்றான். (௧௯)

மருவருங்காசிதன்னின்மத்திமேச்சுரனைப்போற்றிப்
பொருவருங்கங்கையாடிநிற்றலும்பூதிபூத்த
வுருவொடுமருள்கூர்பாசுபதரவணுற்றவிஞ்சைத்
திருவமர்வியாதன்செய்யசேவடிவணங்கிநின்றார். (௨௦)

ஆங்கவர்தெளிந்துமுத்தியடையவஞ்செழுத்தினுண்மைத்
தீங்கறுமுனிவனோதச்சிற்பரமாகியோங்கிப்
பூங்கதிரொறிக்குஞ்சோதிதோன்றலும்புனிதமாகி
வீங்குபேரன்பிற்பாசுபதரதின்மேவினாரே. (௨௧)

பேரொளிமறைதலோடும்பேசருந்தவத்தின்மிக்க
வாரியவியாதற்போற்றியருமறைமுனிவர்கேட்பக்
கார்வயிறுடையநீண்டுக்கதிர்மணிமுகடுவேய்ந்த
சீர்கொளாலயத்தின்மேவியக்கதைதெரிக்கலுற்றான். (௨௨)

தண்ணறுந்துளவத்தாரோன்கண்டிகைமாலைசாத்தி
வெண்ணிலாவெறிக்குந்தூயநீறுமெய்விளங்கப்பூசிப்
பண்ணவர்பழிச்சும்பாசுபதருயர்விரதம்பூண்டு
வெண்ணருங்காலம்வைகியிருந்தவமியற்றினானே. (௨௩)

புரிவருந்தவத்தினேன்மைநோக்கிவெண்ணீறுபூசிக்
கரியுரிபோர்த்தமேனிக்கண்ணுதற்சாமியெய்தத்
திருமறுமார்பனுள்ளமகிழ்ந்துசேவடியின்வீழ
வருள்புரிந்தெழுதியென்னவுரைத்திஃதறையலுற்றான். (௨௪)

உன்னையானாகப்பாவித்துவப்பொடுபணிந்தோர்யாரு
மென்னிருதாளிற்சேர்வரெனவரமளித்தானென்னப்
பன்னருமறைகள்சேர்த்துப்பாரதம்புகன்றமேலோன்
றன்னருந்தீர்த்தம்பாவுந்தோய்ந்தவணுறைந்தான்மன்னோ. ()

மையறுபிரயாகையாதிமகாலயதீர்த்தமீறா
யெய்தியதீர்த்தம்யாவுமினிதினாடிமுக்கட்
டையலோர்பாகன்பாதந்தாழ்ந்துநான்மறைவியாத
னையமேற்றுண்டுகாசியமர்ந்தினிதிருக்குநாளில். (௨௬)

இடுபலியேற்பயாருமவழங்குநரின்றியோர்நாட்
கடவுணான்மறைவியாதன்காசியைச்சபிக்கவெண்ணி
யடைதலுமுலகமீன்றவன்னைமுன்வந்துதோன்றித்
கொடிவளைக்கையாலையங்கடிதைய்யிர்சொரிந்திட்டாளே. (௨௭)

அய்யமுண்டிருக்கும்வேலையருந்தவவெகுளிமிக்கோய்
மெய்யாதுகாசிதன்னின்மருவலையென்னவன்னே
செய்யதாள்வணங்கிக்கீதிலட்டமிபதினுன்கென்ன
வெய்துநம்மிதியிற்போதந்திறைஞ்சுகவருள்கவென்றான். (உஅ)

என்னலுமுருகவேளையைங்கரன்றன்னையின்றுங்
கன்னிமைநீங்காதைதயவிடப்புறங்கவர்ந்துகொண்ட
வன்னையாங்கதனைச்சேர்ந்துமறைதலுமறைந்தவண்ணங்
கன்னிகரிலாதோன்முக்கட்டாணுவைப்பணிந்தானென்றான். ()

தவலருந்தவத்தின்மிக்கமார்க்கண்டன்றகவினேடு
முவவுவெண்மதியமானுமொருகுடைநீழறன்னி
னவையாறுமுலகங்காக்குநாமவேற்றருமன்கேட்பப்
பவமறுத்துயர்பிரயாகைமான்மியம்பகர்ந்தானன்றே. (௩0)

அரும்பெறற்பிரயாகைதன்னினுவினையளித்தோராவிற்
பொருந்துநுண்மயிர்களெண்ணிலெத்துணைபுகன்றதாகுந்
திருந்தவத்துணையகாலந்தெய்வவான்றருவினிழல் [ர்
முருந்தவெண்ணகையார்கொம்மைமுகிழ்முலைதிளைப்பவாழ்வா

கருதரும்பிரயாகைதன்னிற்கன்னியைவிதியினீந்தோ
ருருவவானுதலாரோடுமுத்தரகுருவினெய்தி
யிரவுநண்பகலும்விள்ளாதிளமுலைப்போக்மாந்தி
விரைகமழ்தருவினிழல்விண்ணவர்போலவாழ்வார். (௩உ)

புண்ணியநன்னீராடப்போகுநோற்றினேறி
நண்ணுறுந்திமையேனியூர்தியுநவையதாகு
மண்ணலம்பிரயாகைதன்னினடந்துசென்றாடினோர்கள்
விண்ணிடையளப்பில்காலங்கிளையொடுமேவுவாரே. (௩௩)

பொருப்பெழில்கவற்றியீங்கும்புணர்முலைக்கழைகொண்மென்
ருருப்பசிபுளினந்தன்னிலாருயிருலந்தோர்யாருங் [ரே
கருப்புரங்கமழுஞ்செவ்வாயரம்பையர்கவின்கொண்டோங்கு
மருப்பிளமுலையின்மேவியமரர்மாட்டிருப்பர்மாதோ. (௩௪)

கங்கையம்புனலிற்றேய்ந்தோர்கருதிறேரதனின்வீய்ந்தோ
ரங்கதினடைந்துமாகமாடிரைரடைந்தபேறு
பொங்குநீர்யமுனையாடப்பொலிவொடும்பெறுவரொன்று
மிங்கதன்சிறப்பையாரேயெளிதினிலிசைக்கவல்லார். (௩௫)

ஆன்றமுவுலகத்துள்ளுறமறைந்திடுகடவுட்டீர்த்த
மூன்றரைக்கோடியென்னமொழிகுவரவைகள்யாவுஞ்
சான்றெனவெங்குநின்றுசராசரமனைத்துமுன்ன
மின்றவன்சடையிற்சூடுங்கங்கையோடிணைக்கலாகா. (௩௬)

என்றுமார்க்கண்டன்கூறமனுமுதலிறைவர்தோற்றந்
துன்றுசெங்கதிரோன்மாட்சிசுடர்மதிப்பதத்தினெல்லை
குன்றினதளவையண்டத்தியற்கைநீகூறுகென்ன
மன்றநற்றருமன்கேட்பமறைமுனியுரைத்தானன்றே. (ருஎ)

காசியின்சிறப்புரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—உஉகூ.

முப்பத்தேழாவது

மனுமரபுரைத்தவத்தியாயம்.

குடுமிவரைவிற்கால்குழைத்துப்புரமூன்றெரித்தகுறுநகையோ, னடியின்மலர்தூஉய்வெங்கூற்றைவென்றோன்றருமற்கறைந்தபடி, கடவுண்முதுமோட்டாமையுருவெடுத்தோய்கழறுகெனவயிரப், படையோனேடும்யாழ்முனிவன்கேட்பவினிதிற்பகர்ந்தனனால். (க)

ஆலக்கருஞ்சேறுமிழெயிற்றவரவின்சுடிகைமேற்கிடந்த
ஞாலம்புரக்குஞ்சுவாயம்புமனுவாநாமவடிவேலோன்
மாலைக்கதிர்வேலுத்தானபாதன்றனையுமறிதிரைநீர்
வேலைப்புவிபோற்றிடும்பிரியவிரதன்றனையுமினிதளித்தான். (உ)

அரசுவிழுங்கிவாய்கரந்தவைவேலாக்கினீத்தானும்
புரசையானையடல்வேந்தர்போற்றுங்கழற்காலக்கினியும் [னுங்
விரைசென்மான்றேரவ்வியனென்றுரைக்கும் வேந்தர்பெருமா
கரைசெய்கடலந்தானையுடைக்கழற்கால்வாகுவெனும்வேந்தும்.

ஒன்னாரம்பொன்முடியுரிஞ்சிப் பரந்தவெள்ளிர்பொற்கருங்கழற்கான், மன்னர்போற்றும்வடிவாட்கைவபுட்டிமானுந்துதிமானு, மின்னுக்கதிர்காலனெட்டிலைவேல்விறல்கூர்மேதையெனும்வேந்துங், கன்னற்சிலைவேலெனவெவருங்கழறுமெழில்மேதாதிதியும். (ச)

உலகமனைத்தும்பொதுநீக்கியுரவுச்செங்கோறிசையளப்ப, நிலவுக்கவிகைதனிநிழற்றுநிகரில்சவனனெனும்வேந்தும், புலவுக்கதிர்வேன்மாற்றரசர்புண்ணீர்மாந்தித்தேக்கெறியுங், கொலைவாட்டடக்கைச்சோதிடிமானென்னுங்குவவுத்தோளானும். (ரு)

வேறு.

ஆயிரஞ்சுடிகைப்பணடவிகிடந்தாங்கலையெறிக்கடல்களேழுடுத்த, மாயிருஞாலநிழற்றுசெங்கோலின்மனுமுறைநிறுத்தியகுரிசில், பாயவண்புகழ்சேர்திறலுடைப்பிரியவிரதனும்பார்த்திபனளித்த, நேயநற்புதல்வராங்கவர்க்கிறைவனீணிலம்புகுத்தமையுரைப்பாம். (சூ)

வேறு.

உரைக்குபுகழ்சால்மைந்தர் தமிலொளிர் வேல்மேதைகயுலம்
பொருத, வரைத்தோடிறலக்கினிவிறல்கூர் வாகுவென்னுமடல்
வேந்தர், நிரைக்குபுலனைந்தையும்பொறியினிகழாவண்ணநிலைநி
றுத்தி, யருத்தியொடுமரசுரிமையிகழ்ந்துமுனிவராயினரால்.()

சம்புத்தீவுக்கிறையாகத்தழல்வேலாக்கினீத்தானைச்
செம்பொன்மவுலிசூட்டியுலகேத்துந்திறன்மேதாதிதியை
யைம்பொழிற்பிலக்கத்தீவின்முடிசூட்டவபுட்டுமானையரு
ளம்பும்புகழ்ச் சன்மலித்தீவிற்குதனுகமுடிகவித்தான். (அ)

அலகில்கீர்த்திச்சோதிடுமான்றன்னைக்குசத்தீவினுக்கரசா
யிலகுமவுலிபுனைந்தரசரோத்துங்கழற்காற்றுதிமானை
நிலவுபுகழ்சேர்கிரவுஞ்சத்தீவுக்கிறையாகெனநிறுத்தி
யுலகம்புகழ்சாகத்தீவினுயரவ்வியனைமுடிகவித்தான். (௯)

சான்றோர்புகழ்புட்கரத்தீவைச்சவனற்களித்தானவ்வேந்தன்
மான்பேருடைத்தாதகிதனையுமாவீரனையுமகிழ்வினுட
னீன்றுயர்புட்கரத்தீவையியன்மாவீரவருடமிக
வான்றபுகழ்த்தாதகிவருடமாகப்பிரித்தாங்கவர்க்களித்தான். ()

தரியார்புகழவ்வியனென்போன்சலதன்குமாரன்சுகுமார
னெரிவேலங்கைமணிசகன்விற்சுகுமோதரன்மதாதியெழி
லுருவந்திகழ்மாத்துருமனையும்பயந்தானுரைக்குமவர்பெயரா
மருவுஞ்சாகத்தீவதனைப்பகுத்தாங்கவர்க்குவழங்கினான். (கக)

துதிமானென்போன்மனோகரன்றுந்துபிநீள்பிரபைவான்கண்ண
மதிசேரந்தகாரன்முனிகுலனிவரைமகிழ்ந்தளித்தா [ன்
னுதவுமைந்தர்நாமத்தால்வருடமாக்கியுவப்பினொடும்
விதியினன்றிற்பெயர்த்தீவைவீற்றுவீற்றாய்ப்பகுந்தளித்தான் ()

தூமவடிவேற்சோதிடுமானென்போன்றுகடருத்தபிதன்விற்
காமனனையவேனுமான்கபிரன்றிருதிசுவையிந்தன்
றூமவடிவேற்பிரகாமனேடிலம்போதரனைத்தந்தவர்த
நாமவருடமாய்ப்பிரித்துக்குசத்தீவவர்க்குநல்கினான். (கங)

வைவேற்றடக்கைவபுட்டுமான்சுவேதனரிதன்சீமூத
னெவ்வாச்சிர்த்தியுலோகிதன்சுப்பிரபன்மானன்வயித்துதனுந்
தெவ்வேத்தெடுக்குஞ்சிறுவரையீன் றவர்நாமத்திற்றிகழ்வருட
வெவ்வேறாகச்சன்மலித்தீவதனைப்பகுந்துவியந்தளித்தான். [ம்

மேதாதிதியென்றுரைத்திடுவோன்விளம்புஞ்சிசிரன்சாந்தபய
னோதைவரியசுகோதயனானந்தன்சிவன்சேமகனொளிறுந்
திதில்வேற்கைக்கஞ்சனெனுஞ்சிறுவர்ப்பயந்தாங்கவர்பெயரா
லோதும்பிலக்கத்தீவதனை வருடமாக்கியுவந்தளித்தான். (கரு)

வென்வேலாக்கினித்தானும்வேந்தர்வேந்தனடுகளத்தி
ன்றன்னார்செம்பொன்மணிமவுலியுழுதகழற்காலுபியையுங்
கன்னற்சிலையுமலர்க்கணையுமொளிந்தகாமனெனும்பொற்பார்
மின்னுச்சுடர்வாட்கிம்புருடனென்னும்விறல்கூர்வேந்தனையும்.

உடலுஞ்சமத்திற்பகைவருயிருண்ணும்வடிவாளரியினையு
நெடுநல்யானைவயவேந்தர்நிணம்வாய்துப்பினல்லாது
தடறுபுகுதாவடல்வடிவேற்குரிசிற்றினையுந்தரியலரூர்
மடியச்சிறிதுவிழிசேக்குமிரண்ணுவானுமன்னனையும். (௧௮)

ஒன்னார்மகளிர்மங்கலநாண்வாங்கவாங்குமுயர்சிலைக்கை
மன்னர்திறல்கூரிரமியனும்வேந்தன்றனையுமருவலரைத் [யாப்
தென்னம்புலத்திற்குடியேற்றி யன்றிக்கடைக்கண் சிவப்பொழி
பொன்னங்கழற்காலிளாவிரத னென்னும்போர்வேலரசனையும்.

குடாதுங்குணாதுந்தெனாதுமுயர் குடுமிப்பொன்னங் குன்
றுறையும், வடாதுந்தனதுகைப்படுத்தும்வயங்கூர்கேதுமான்ற
னையுங், கடாமுற்றிருக்குந்திசைக்களிறுகவிக்குங்கொடைப்பத்
திராச்சுவனும், விடாதசீர்த்திமன்னனையும்வியப்பினினிதினீன்
றனனால். (௧௯)

இமயவரைத்தென்புலவருடநாபிக்கீந்தான்கிம்புருடர்க்
கமைவிலேமகூடமெனும்வருடமதனையுவந்தளித்தான்
கமலப்பொகுட்டுவெட்டவணைக்கன்னிப்பிரியாவரிகாக்க
விமலமாகுநயிடதப்பேர்வருடம்வியப்பினல்கினனால். (௨௦)

மேருகிரிசூழிளாவிரதவருடந்தன்னையிளாவிருத
னார்வமொடுகாத்திடுகவெனவம்பொன்மவுலிசூட்டினன்
கார்தோய்நீலவரைபுடைத்தவருடமிரமியன்காக்கச்
சீரசால்கடவுண்மணியிமைக்குந்திருமாமவுலிசூட்டினன். (௨௧)

வான்றோய்குடுமிச்சுவேதவரைபுடைத்துவருடமதிவல்ல
சான்றோர்புகழுமிரண்ணுவான்றனக்குநல்கிக்குருவென்னு
மான்றகேள்வியரசற்குச்சிருங்கவரைக்குத்தரமாகத்
தோன்றும்வருடந்தனியாளச்சுடர்மாமவுலிசூட்டினன். (௨௨)

மேருவரைக்குக்கிழக்காகும்வருடம்விறற்பத்திராச்சுவனுக்
கார்வமோடுமினிதளியாவறைந்தவரையின்மேற்காய
சீர்சால்கந்தமாதனமாம்வருடங்கேதுமானென்னும்
போர்வேலரசர்க்கினிதளித்துப்புனைமாமவுலிசூட்டினன். ௨௩

இன்னவாறுதான்பயந்தவிக்ல்வேலரசரொன்பதின்மர்க்
கொன்னார்குடங்கைத்தலையணையா யுறங்குமம்பொன்மணிமுன்
மன்னவுக்கினித்தானும்வடிவேற்காணாதளியளிக்குந் [றில்
தன்னதுலகம்பகுத்தளித்துத்தளராமுத்தியெய்தினன். (௨௪)

இமயப்பொருப்பின்றென்பாலாம் வருடங்காக்குநாபியெ ன்போன், கமலப்பொருட்டுவீற்றிருக்குமேருவென்னுங்கனக் குழையின், குமுதச்செவ்வாய்நலம்பருகியிடபற்பயந்தான்கூறு மவ, னமையாவென்றிப்பரதன்முதலரசரொருநூற்றுவர்ப்பய ந்தான். (உ௫)

அரசர்மவுலிமணியுரிஞ்சப்பறைந்தவம்பொற்கனைகழற்காற் பரதனுலகந்தனிகாக்கப்பைம்பொற்கதிர்மாமுடிசூட்டி யுரவுத்திரைநீர்க்கடல்வலைய மொருகோலோச்சியினிதளிக்கும் விரைகொப்புளிக்குநறுந்தெரிய லிடபன்முத்திவீடடைந்தான்.

வேறு.

கப்புவாய்ச்சூலநெருப்புவிட்டெறிக்குங் கண்ணுதற்சாமி யையணங்கித், தப்பறுவாய்மைக்கொருவனென்றுரைக்கும்பர தனீன்றருடனிமைந்த, னெப்புவனத்திலரசரும்வணங்கவெரிம ணிக்கதிர்முடியுரிஞ்சித், துப்புறழ்கமலப்பதந்தழும்பிருந்தசும தியென்றுரைத்திடுந்தோன்றல். (உ௭)

வேறு.

மலையுஞ்சமத்திலொன்னலர்தம்மருமம்முகந்தோள்வாளி கண்மேய்ந், தலையுங்குருதிநிணச்சேற்றிற்பருஉத்தாளாழ்ந்துக ரியலறச், சிலைகால்குழைக்குஞ்சுமதியருண்மைந்தன்றெருண் டோர்தீபமெனக், கலைமுற்றுணரிந்திரத்துய்ம்மனென்னுங்கதி ர்வேற்படையுழவன். (உ௮)

குருதிப்பெருக்காறுவட்டெடுத்துக் கொழிக்கும்வென்வே லாங்கவன்ற, னரியபுதல்வன்பரமேட்டியவன்றன்புதல்வனரு ந்துப்பிற், செருவேற்றெழுந்தவொன்னலர்தஞ்சென்னிபிடுங்கி ப்பந்தடிக்குங், கரடக்களிற்றின்பெரும்பாகன்பிரதிகாரனெனு ங்காளை. (உ௯)

வேறு.

வெளிறெறிகேள்விப்பிரதிகாரப்பேர்வேந்தனீன்றருளிய மைந்தன், களிறெடுத்ததுக்கிக்கருங்கவுட்கிடங்குதூர்த்தெரிக ணற்றுகட்பேய்க, ளளறுபட்டொழுகுமரத்தநீர்க்கடலுளாட வெங்களத்திடையெய்தி, யொளிறுவேறிரித்துவாகைகொண்டு லவும்பிரதிகத்தாவெனுமுரவோன். (௩0)

விண்படர்சீர்த்திப்பிரதிகத்தாவின்விறல்கெழுவேலுடை மைந்தன், கண்படாமுரசங்கவிழ்ந்துகண்படுப்பக்கறையடிக்க ளிற்றினங்கோடு, மண்படவிழ்ந்துகருங்கலிற்கிடப்பவாளமர்க் களத்தினிலொன்னார், புண்படவிதிர்க்கும்புலவுவேலுழவன்ப வனெனும்போர்புலியனையான். (௩௧)

ஆங்கவன்புதல்வ னுயர்பவோகினித னவன்மகன்பொற்பி திரனிந்த; கோங்கிளமுலைகள்சாடலுங்கிழிந்தகுங்குமமழிந்து

வீழ்குழம்பு,தேங்கிடுமந்தாரகலமால்யானைத்திறன்மருப்பொடித்திடுதிறல்சூர், வாங்குவிற்கொருவனெனும்பிரதாபனென்றிடும்வயங்கெழுவேந்தன். (௩௨)

மற்றவன்புதல்வன்வாகைவேறுவட்டா வாங்கவனளித்திடு மைந்தன், பற்றலர்மகளிர்கருங்குழற்கற்றைபடர்தருமுளரியல் பரந்து, சுற்றிநின்றிரப்பநெடிபடுகாட்டினெளித்திடத்துணைவிழிச்செருக்கும், வெற்றிவேல்விரசனுங்கவன்புதல்வனரனென வுரைத்திடும்வேந்தன். (௩௩)

விரிகடற்றிரைதாழ்வெண்மணற்குன்றின்மேவுசூன்முதிர்ந்தசூன்புறத்து, வரிவளைபேறியிளவெயிற்காயும்வளங்கெழுநெய்தலஞ்சேர்ப்ப, னரனுடைமைந்தனுயர்சதசித்தாங்கவனிவிதளித்தருண்மைந்த, னிரசசித்தென்னவுலகெலாம்புகழவினுலகத்தினைப்புரப்போன். (௩௪)

முருந்திளமுறுவலமுதுகுகுதலைமங்கையர்முலைநலம்விரும்பிக்,கரும்புறப்போந்தைக்கருக்குவாளறுத்தபுரைதொறுங்காமநீரொழுக, விருந்தெனப்புகுந்துதேவருமடன்மாவேறிடும்வியனகர்காக்குந், திருந்துசீரிரசசித்தருண்மைந்தன்றிறல்கெழுவிச்சுவசோதி. (௩௫)

வெள்ளிவெண்முளையவாம்பியுமரிலும் வெண்ணிலாமுன்றிலிற்பூப்பப், பள்ளநீர்க்கரையிற்சுள்ளியினெழுந்துவெள்ளெருக்கெங்கணும்படர, நள்ளலார்புரங்கள்பாழ்படத்துரக்கும்விச்சுவசோதிநன்மைந்தன்,புள்ளவாய்க்கிடந்துபுகைந்தழல்கொழிக்கும்புலவுவேலுடைச்சயத்திரதன். (௩௬)

வேறு.

என்றுமனுவின்குலத்துதித்தவெறிவேலரசர்மரபுமவர்
நன்றுபுரியுஞ்சரிதமும்யாநவின்றேமதனைக்கேட்டோர்கள்
துன்றுபாவத்தொடரகற்றித்தொலையாச்செல்வந்தனினுரு
மொன்றிவாழ்ந்துகடைமுறையிலுலவாமுத்தியுறுவரென்றான்.

மனுமரபுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௨௩௩௨.

முப்பத்தெட்டாவது

மண்டலவளவையுரைத்தவத்தியாயம்.

பாயதெண்டிரைப்பாவைசூழ்புவிமுதலாக
வேயநல்லுலகனைத்தினதளவையுமிசைக்கென்
றுய்கதிர்ப்பசும்பொன்னகர்க்கரசும்யாழ்முனியு
மேய்வனப்பெற்றிகேட்டலுநாரணன்விளம்பும். (௧)

கரியகூரிருடைத்தவெண்டிங்களங்கதிரோ
டருணமெல்லிதழ்ப்பங்கயவாண்முகமலர்த்து
மிரவிசெங்கதிரொத்துணைநடக்குமத்துணையும்
பரவைமாநிலத்தளவெனப்பகர்ந்தனர்மேலோர். (௨)

குவலயத்தின்மேற்கூரிருட்டிறம்பொடித்துரந்து
மலிர்செழுங்கதிராதவனமண்டலத்தளவும
புவருலோகமேற்றுருவமண்டலத்துணைபொருந்தல்
சுவருலோகமென்றுரைத்தனர்மறைப்பொருடுணிந்தோர். (௩)

ஆங்கணுறைவகன்பிரவகனனுவகன்சிறப்பின்
விங்குசங்கவிவகன்மேற்பராவகனதன்மே
லோங்கிநின்றதோர்பரிவகனெனும்பெயருடைய
நீங்கில்வாயுசக்கரங்களேழுந்தவிசிறக்கும். (௪)

உரைத்தபாரினூறாயிரம்யோசனையுயர்ந்
தரக்கவெங்கதிராதவன்மண்டலமதன்மேல்
விரித்தயோசனைத்துணையுயர்ந்ததுவிளங்க
வரைக்கசாந்தினுங்குளிர்மதிமண்டலமாமால். (௫)

சொன்னமண்டலமீதுநூறாயிரத்தொகையின்
மன்னும்யோசனையுயர்ந்ததவ்வுடுவின்மண்டலமா
மன்னதற்குமேலிரண்டுநூறாயிரத்தளவு
முன்னும்யோசனைகிரகமண்டலமெனமொழிவார். (௬)

அதனினேங்குநூறாயிரம்யோசனைக்கப்பான்
மதியின்மேம்படுமேழ்பெருமுனிவர்மண்டலமா
மிதனின்மீதுநூறாயிரம்யோசனையேழுந்
துதியின்மேயதுதுருவமண்டலமெனச்சொல்வார். (௭)

அலகிறாரகைமண்டலங்கிரகங்களனைத்து
நிலைபெறும்படிநிறுத்துவன்றுருவன்மற்றவன்பா
லிலகுமைம்படையேந்தியவெறுழ்வலித்தடந்தோ
ளலர்பசுந்துழாய்மாயனுக்கருமமுமமரும். (௮)

அலர்செழுங்கதிராதவன்மண்டலத்தகல
முலவிலொன்பதினாயிரம்யோசனையதனிற்
குலவுமும்மடங்ககிகமென்றுரைக்குவர்கோதி
னிலவுகான்மதிமண்டலத்தளவையினெறியின். (௯)

மருவுபூமியின்சாயையாமிராகுமண்டலமற்
றிரவிமண்டலத்திங்கண்மண்டலமெனுமிரண்டி
னுரைசெய்கின்றதோரளவுதாமவற்றின்மீழுலவும்
கரியதாகுமற்றதனிறமென்பர்கற்றுணர்ந்தோர். (௧௦)

இந்துமண்டலந்தனிற்பதினாறிலொன்றினையு
மந்தில்சுக்கிரமண்டலமதனையென்கூறு
தந்தவற்றினொன்றொழியவேழ்கூற்றினிற்றயாங்கு
நந்தலில்லதோர்வியாழமண்டலமெனநவில்வார். (௧௧)

நவிலவியாழமண்டலத்தினைநான்குகூறாக்கி
யவையிலொன்றொழித்தியன்றமுக்கூற்றினதளவாங்
குவலயந்தருகோதில்செவ்வாயின்மண்டலமூந்
தவலருந்திறற்போகுயர்சனியின்மண்டலமும். (௧௨)

வான்படர்ந்திடுசனியின்மண்டலத்தளவதனி
னான்கினோரளவாம்புதன்மண்டலநகைவான்
மீன்கண்மேவியமண்டலமியாவையும்புதன்வா
ழான்றமண்டலத்தளவையுங்குறைந்தவுமாகும். (௧௩)

அந்தநற்சனிவியாழமங்காரகனவிவின்
மந்தகாரியர்மற்றையர்நால்வரும்விணாவி
னுந்துமூர்த்தியினுலாவுவர்தக்கணாயனத்தி
னந்துவெங்கதிர்கோட்கெலாங்கீழுறநடக்கும். (௧௪)

சேட்டுவெங்கதிர்ப்பருதிமேன்மதிசெலுமதன்மே
லீட்டுதாரகைக்கணஞ்செலவயருமற்றிதன்மேற்
றீட்டரும்புதன்செலவுறும்புதன்றடந்தேர்மேன்
மோட்டுவார்கதிர்ச்சுக்கிரன்முறையினினடக்கும். (௧௫)

அறைந்தவெள்ளியின்மீதிலங்காரகனடக்கு
முறைந்தமற்றவன்மேலுயரந்தணனுலவும
பிறங்குமற்றவன்மேற்சனிமென்மெலப்பெயருஞ்
சிறந்தவேழ்பெருமுனிவரரவர்க்குமேற்றிரிவார். (௧௬)

துருவனேழ்பெருமுனிவர்மேலுறைந்திடுஞ்சுடர்கா
லிரவிவானவனடவுறுமேழ்பரித்தடந்தேர்
பரவுமொன்பதினாயிரம்யோசனைப்பரப்பாம்
புரவிபூட்டியதண்டதற்கிரட்டியாய்ப்புகல்வார். (௧௭)

அலர்செழுங்கதிர்ப்பருதிதேரச்சினதளவை
யுலவுகின்றநூற்றைம்பத்தேழிலக்கம்யோசனையா
நிலவுநாபிமூன்றாரமைந்தாறுநேமியதாய்த்
தொலைவில்யாண்டுருக்காலசக்கரமதிற்சுழலும். (௧௮)

பச்சைவாம்பரித்தேரினிற்பதிந்திடுமற்றை
யச்சின்யோசனைநாற்பத்தையாயிரத்தைந்நூ
றச்சமெய்தியதுருவன்மேலுறையுமன்னச்சின்
னைவச்சநேமிநின்மானசோத்திரவரைத்திரியும். (௧௯)

வேதசந்தச்சோரோழுமந்தேரினில்விசித்த
நிதில்வாம்பரியிரறுபருதியஞ்செல்வ
ரேதமற்றமுவுலகமும்விளக்குவனொன்னி
லாதிமுர்த்தியாமுவருமவருருவென்றான். (உ0)

மண்டலவளவையுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—உஙடுஉ.

முப்பத்தொன்பதாவது

ஆதவர்ச்சிறப்புரைத்தவத்தியாயம்.

உரைசெய்பன்னிரண்டாதவர்நாமமுமொழுக்கும்
விரைசெல்தேரினிலேறுநர்நாமமும்விளம்பென்
றரசனுங்கியவிந்திரன்முனியொடுமறையத்
தரையொரோரையுமளந்தமாறகவொடுசாற்றும். (க)

வேறு.

விளங்குறுந்தாதா வரியமா வொளிருமித்திரன் வருணன்
வெங்கதிர்க, டுளங்குசக்கர னீள்விவச்சுவான் பூடாத்துகளில்
பர்ச்சன்னிய னஞ்சன், களங்கமில்பக னள்ளிருளெறிதொட்டா
விட்டுறுவென்னநன்கதிரோ, ருளங்கவர்நாமம்பன்னிரண்டேழி
ற்றிங்கள்பன்னிரண்டினுமுதிப்பார். (உ)

புலத்தியன்புலகனத்திரிவசிட்ட னங்கிராப்புலனெறிபிரு
கு, நலத்தகுபாரத்துவாசனல்லறஞ்சேர்கவுதமன்காசிபன்கிரு
து, வுலப்பில்சிர்ச்சமதக்கினிதவமொழியாக்கவுசிகன்முறையி
னுதவனாச், சொலப்படுந்திங்கடோறுமோரொருவர்தொன்ம
றைபாடியேத்துவரால். (ங)

வருசதக்கிருத்துரதவுசன்சுவாருக்கிருதன்வேற்சுரதனீள்
வருணை, னருடருசுசேனன்சேனசித்தொடுதாரரக்கனல்லரிட்ட
நேமியனு, டொருவருமிரசசித்துவாட்டடக்கைச்சத்தியசித்தெ
னுமுரவோர், பருதிதேர்க்கயிறுபற்றியூழ்முறையின்மதிதொறு
ம்பயில்கிராமணியர். (ங)

அரத்தவேற்கேதிதிகழ்பிரகேதியடற்பவுருடேயனீரளிதன்,
விரித்தசிற்சற்பன்வியாக்கிரன்வடிவேற்றனனியலாதன்வித்திபு
த்தோ, டிரைத்துவண்டறைதார்த்திவாகரன்பிரம தேவனிளெ
க்கிறோபேத, னுரைத்தவாதவர்தந்தேர்முனோர்திங்கட்கொரு
வராயுலவுவாளரக்கர். (ரு)

வாசுகிகங்கணுறனன்வெஞ்சிற்றத்தக்ககன்வயிரந்தமுள்ளெயிற்
றத், தேசுடைசசர்ப்பபுங்கவனேலாபத்திரன்சங்கபாலன்சி,ரா
சதுமமிராபதன்றனஞ்செயன்மாபத்மன்கார்க்கோடகனழல்வா,

யேசில்கம்பளனச் சுவரதன்முறையி னிரவிதேர்மதிதொறும்ப ரிப்பார். (௬)

மன்னுதும்புருயாழ்நாரதனஞ்சஜ் வழாதிசைநவின்றிடும காப், பன்னுசிர்விசுவாவுயரசேனன்னசுசியருவாவசுப்பழிப்பி ல், துன்னருங்கேள்விப்பார்வசுத்துகடீர் சித்திரசேன னூரணு யு, வின்னிசையிரவி வாச்சனென்றவர்க ளிருதுவுக்கிருவர்பா ட்டயர்வார். (எ)

பட்டுடைக்காஞ்சிப் பாவைநீளல்குற் பணைமுலைசுமந்தறவ ருந்து, மிட்டிடைக்கிருத்த லையெனுமணங்கு மேர்குடியிருந்த றவிங்கி, மட்டவிழ்நறுந்தார்வானவருடலங்கோட்டுமண்கொ ண்டறவளர்ந்து, விட்டொளிவிரிக்கும்பிறைவடஞ்சுமந்தவெம் முலைப்புருசிகத்தலையும். (அ)

யானெனதென்னுஞ்செருக்கறுத்துயர்ந்தவிருந்தவமுனிக் குறும்பகற்றும், பானலங்கருங்கட்செய்யவாய்வெண்பற்பாசி ழைப்பொலங்கொடிவளைய, மேனகையென்னும்வெம்முலையண ங்கும் விண்ணவர்மடலிவர்ந்திரங்குந், தேன்மொழிச்சகசன்னி யையெனவுரைக்குந்திருவுறழ்தோற்றமாமயிலும். (௯)

வண்டுவீழொலியின்மாளிகைசூழ்ந்த வணரிருங்கருங்குழ ற்செவ்வாய்க், கெண்டையோடிகலுஞ்சில்லரிநெடுங்கட்கிளர்மு லைப்பிரமலோசனையுங், குண்டலஞ்சுடரும்வள்ளைவார்காதுகுவி முலைச்சந்தனந்துடைக்கு, மண்டரோக்கறவுபுரிந்திடுமெனுமலோ சையென்றுரைத்திடுமணங்கும். (௧0)

இலைத்தொழிற்புறத்தவெரியுமிழ்மதாணியிறைவடமணிந் தெழில்சுமந்த, மலைக்கவின்கொண்டமுலைக்கிருதாசியென்றிடு மதர்விழியணங்கும்,கொலைத்தொழின்மறலிகற்றிடம்பயிற்றிக்கு ழைபொருதலைக்கும்வாட்டடங்கட், சிலைக்கரும்புருவவிச்சுவா வசியென்றுரைத்திடுந்தேமொழித்திருவும். (௧௧)

முழுநிலாமுத்த மணிவடஞ்சுமந்து மூரிவேட்கரசியலளித் துத், தழுவுதற்கடங்காவனமுலைச்செவ்வாய்த்தளிரியலுருப்பசி யென்னுங், கழைபுறழ்பசுந்தோண் மரகதக்கொடியுங் கவின்சி றைகிடந்தமென்கொங்கைக்,குழைமுகம்பூத்தகுளிர்மதிவதனப் பூருவசித்தெனுங்கொடியும். (௧உ)

அணுவினைவனையினெண்ணுமென்மருங்குலாடகப்பொல ங்கிரியிணையை, யணுவெனவுரைப்பவளர்ந்தநீள்கொங்கைத்தி லோத்தமையென்றிடுமணங்குந், துணிகதிர்த்திங்கள்பொருவும் வாணெற்றித்துடியிடைக்கரியமென்கூந்தற், பணியரவல்குற்சி ரேட்டையென்றுரைக்கும்பசுங்கொடியனையபைந்தொடியும். ()

என்னுயிரவரின்னிளவேனில்முதலியபருவமோராறும், பொன்னவிர்குடுமியாழியம்பொருப்பைப் பொலிவொடுவலங்கொடுதிரியு, மின்னுவெஞ்சுடர்காலிரவிமுன்னிருவரிருவராய்முறைமையின்மேவிக்கன்னலேனமுதிற்கனிந்திடப்பாடிக்கண்மணிகுளிர்ப்புறநடிப்பார். (கச)

இன்னணமுறைத்தேர்யாவருங்கதிர்காலிரவியோடியைந்துலாவுறு, மன்னுயிரளித்துமழைவளஞ்சுரந்துமாற்றருந்தீவினைகடிந்தும், துன்னுவெம்பனியிற்றுலங்குதலொழியச்சுடருமிழ்வெயிற்கதிர்விரித்துப், பொன்னவிர்குடுமிப்பொலங்கிரிதனையலங்கொடுபோக்கயர்ந்திடுவார். (கரு)

மக்கள்வானவர்கள்பிதிர்க்கண்மற்றிவணாவளர்ப்பதுவயங்குமுச்சுடரா, முக்கணெம்பெருமான்முதலமுத்தேவராயதூஉம்வேதத்தின்முடிவாய்த், தொக்கவெவ்வுலகினகம்புறந்தழுவிச்சுடர்க்கொழுந்தாய்வெறுவெளியாய், மிக்கபேரொளியாஞ்சதாசிவன்றானும்வெங்கதிரெனமறைவிளம்பும். (கசு)

ஆதவர்ச்சிறப்புணர்த்தவத்தியாய முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—உகசுஅ.

நாற்பதாவது

ஆதவர்கதிர்ச்சிறப்புணர்த்த வத்தியாயம்.

ஆதவன்கதிரிலேழ்கதிர்ச்சிறந்தவவற்றினிற்சுசுமுனைத்தேர்டு, மேதமற்றெளிருமியலரிகேசமிரண்டுவான்புதற்கொளிவழங்கும், தீதறுவிசுவைவிசமெனுங்கதிர்வான் கேழொளிவெள்ளியைவிளக்கு, மேதகுவசுரம்விளங்குகங்கியமமண்மகள்தனைவிளக்குறுமால். (க)

வயங்கொளியறுவாவசுவெனுங்கதிர்நல்வியாழத்தைமறுவறவிளக்குந், தயங்கொளிச்சுவராட்டெனுங்கதிர்மிக்கசனிதனையொளிபுறவிளக்கு, மியம்பியவுடுக்கண்முழுவதுமிரவிகதிரினால்விளங்குமெப்புனலும், பயந்தண்கதிராற்கவர்ந்துடன்மீட்டும்படுமழையுலகினிற்பொழிவான். (உ)

வெய்யவன்கதிர்களாயிரமவற்றின்விளங்கொளிக்கதிர்கணானூறு, பெய்ம்மழைபொழியும்பின்னுமுன்னூறு பிறங்கொளிக்கதிர்வெயில்விரித்து, வையகமுழுதுமழைவளஞ்சுரக்கும்வயங்குமுன்னூறுவெங்கதிர்க, ளையசெங்கமலமலர்முகங்கருகவளிபனிக்குறுந்துளிவீசும். (ங)

மாசினில்வருணன்பங்குனிபூடாச் சித்திரையஞ்சன்வைகாசிக, காசறுதாதாவானியிந்திரனாடியிற்சவிதாநல்லாவணிக்கு, நா

சமில்விச்சு வான்புரட்டாதி பகனலேப்பசிப்பருச்சனிசிர், விசு கார்த்திகைதொட்டாஙன்மார்கழிக்குமித்திரன்றைக்குவிட்டுணு வே. (ச)

இலகொளிவிரிக்கும் பகற்செய்வோர்தாய வேம்பரித்தேர் மிசையிவர்ந்து, மலர்தலேயுலகிற்பனியிருவிசும்பிற் பாதலத்தி னிற்றனிமருவிக்,குலவுபேரிருளின்குறும்பெறிந்தோட்டிக்கொ ழுங்கதிர்க்கற்றைகான்றேங்கும், பொலநெடுங்குடுமிவரைவல ஞ்செய்துபுங்கவரோத்திடத்திரிவார். (ரு)

ஒற்றைநேமியந்தேர்வருணனேராயிரங்கதிருமிழ்ந்திரு டுருவுங், கற்றையங்கதிராறுயிரமுமிழ்ந்து கனேயிருள்சித்திடும் பூடாச், செற்றுவெங்கதிரேழாயிரம்பரப்பிச்செறியிருள்பருகி டுமஞ்சன், முற்றுவெங்கதிரொண்ணுயிரம்விரித்து முழங்கிருள் விழுங்கிடுந்தாதா. (சு)

இந்திரனென்பானுயிரங்கதிர்கான் றெண்டிசைமுழுவதும் விளக்கு, நந்தலில்விவச்சுவானெருபதினரா யிரங்கதிர்விரித்த னடக்கு, மைந்துடைப்பகன்வெங்கதிர்பதினேராயிரந்தனிவ ழங்கினன்றிரியும், வெந்திறல்புனேந்தமித்திரனேழா யிரங்கதிர் திசைதொறும்விடுக்கும். (எ)

அலங்கொளித்தொட்டாவிரிகதிரொண்ணுயிரத்தொடுமந்த ரத்துலவு, மிலங்கொளிச்சவிதாச்செழுங்கதிரொன்பானுயிரத் தொடுமிருடுரக்கு, நலங்கொள்பர்ச்சனியன் கதிரொருபதினு யிரத்தொடுங்கீழ்த்திசைநண்ணுங், துலங்குவிட்டுணுவெங்கதிர் பதினேராயிரத்தொடுந்துனேவினிற்றிரியும். (அ)

மாந்தளிர்கொழுதிவரிக்குயில்கூவ வருமிளவேனிலின்வெ ய்யோ, னேந்தெழில்கபிலவன்னமாம்வேனிற்காலத்தினிருட்கு றும்பெறிந்து, காந்துவெங்கதிரோரொளிபசும்பொன்னுங்கனே மழைபொழிந்துகார்காலத், தாய்ந்துவெங்கதிரோர்தன்னிறஞ் சுவேதமாகுமென்றுரைப்பர்கற்றுணர்ந்தோர். (கூ)

கூதிரினுதித்தோர் மெய்ந்நிறம்பாண்டு வன்னமாங்குளிர்ப னிக்காலத், தாதவன்வண்ணந்தாம்பிரநிறமா மனுகியபின்பனி க்காலத், தேதமில்கதிரோனிறமுலோகிதமாமென்றெடுத்தியம் புவர்மேலோ, ரோதியகிரகமெட்டையுங்கதிரோ ரொளிபெற விளக்குவரன்றே. (க0)

திங்களஞ்செல்வன்கொடிஞ்சியந்தேரிற்றிரிதருசில்லியோ ர்மூன்று, மங்கதிற்பிணித்தவாம்பரிபத்துங்குருந்தின்மென்மல ர்நிறமாகும், வெங்கதிர்ப்பருதிசுசுமுனேயென்னுங் கதிரினல்வ ளரும்வெண்டிங்கள், புங்கவர்தினமோர்கலேயருந்துதலாற்பொ ழிகதிர்மழுங்கமெய்த்தேயும். (கக)

வெள்ளிநின்மேரிற் புரவியோர்பத்து மேநிளிப்பிறங்தனவாகு, மொள்ளொளிச்செவ்வாய்க்கொடிஞ்சியங்தடங்தேர்ப்பரியிருநான்கெனவுரைப்பார், தெள்ளுசீர்புதன்றேர்ப்பரிகளோரெட்டுங்நிம்புனலகடுளோங்நின்ற, வெள்ளருங்குருவின்றேர்ப்பரியெட்டுமெரிபசும்பொன்னிறமாகும். (கஉ)

நீனிறக்கலிங்கம்புனைந்தவெஞ்சனியின் பரியிருநான்குடைநெடுந்தேர், மானிறவிரும்பினியன்றதாமிராகுக்கேதுவின்மணிநெடுந்தடங்தே,ருனமின்றியங்கும்வாம்பரியவ்வாறுமெனவுரைப்பர்மற்றிவனைப், பான்மையிற்றுருவன்காற்றெனுங்கயிற்றிற்பனிவளைவலம்வரவியக்கும். (கங)

ஆதவர்கதிர்ச்சிறப்புரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—உ௩அக.

நாற்பத்தொன்றாவது

உலகநிலையுரைத்தவத்தியாயம்.

துருவமண்டலத்தின்மேலொருகோடி யோசனையளவையிற்றுலங்கும், பொருவரிதாகிச்சிறப்புவீற்றிருக்கும் பொங்கொளிதிகழ்மகலோக, மருவியங்குறைவோராயுளோர்கற்பமென்பர்மற்றதற்குமேலாகி, விரிதருமிரண்டுகோடியோசனைமேல்விளங்கிடும்வியன்சனலோகம். (க)

தாமரைப்பொகுட்டினரசுவீற்றிருக்குஞ் சதுமுகன்முகத்திடைப்பிறந்த, வேமுறுசனகன்சனந்தனனியைந்தசனுதனனியற்சனற்குமார, ருமநான்முனிவராங்கினிதுறைவரதற்குமேனன்னும்யோசனைகள், காமுறுமூன்றுகோடியினளவைகருதுதற்கருந்தவலோகம். (உ)

மழகதிர்ப்பருதியொளிகெடவிமைக்கும் வனப்புடைத்திறலவியிராசர், விழைவுடனதனிற்கடவுளர்போற்றவிண்ணவர்சூழவீற்றிருப்பா, ரழகுவீற்றிருக்குமுலகின்மேலுயர்ந்தயோசனையாறுகோடியதாய்த், தழைவுறுமுலகந்தனைமறைதெரிந்தோர் சத்தியலோகமென்றுரைப்பார். (௩)

ஆங்கதிற்கமலப்பொகுட்டுறைமேலோனரசுவீற்றிருக்குமாங்குறைவோர், நீங்கறுதேவனுயுளத்துணையவத்துணைசிறப்பின்வீற்றிருப்பா, ரிங்கிதன்மீதுசொலற்கரிதாகு மெரிகதிர்க்குப்பைபோன்றிலங்கி, யோங்குசீருலகந்திருமறுமார்பனுவந்துறையுலகெனவுரைப்பார். (௪)

அவ்வுலகடைந்தோர்சகட்டுருள்போலவலம்வரும்பிறவியினடையா, ரிவ்வுலகினுக்குமேலதாவொளிருஞெரிகதிர்க்கற்றை

கனாமிழுஞ், செவ்விசேருலகமுளததன்மீதுதிங்களங்கண்ணியெம்பெருமான், கொவ்வையங்கனிவாய்ச்சுணங்குபூத்தலர்ந்தகுவிமுலைக்கொடியொடுமுறைவான். (ரு)

ஐந்தவித்தடங்குமுனிவரரிலிங்க பூசனைமகிழ்வினுற்றுனர்க, ளிந்தியத்துழலாதுளத்துறுகரணமொடுக்கிநல்யோகினிலிருப்போர், நந்தியைமுதலாமெண்ணறுகணங்கணான்முகன்முருகுந் தனோடெய்தி, வந்தனைபுரிந்துமழவிடையுயர்த்தோன்மலரடிநீழல்வீற்றிருப்பார். (சு)

மேலுலகேழும்விளம்பினஞ்சுருக்கிமேதகுகீழுலகேழு, மேல்புறவுரைக்கின் மகாதலம்பொன்மை பெறிமணிக்குப்பையோடியையும், பாலுறுசுதலவுலகமும்பொன்னம்பவளநல்லுருவமாம்விதலஞ், சால்புறுநிதலம்வெண்ணிறமாகுந் தலநிறங்கருமையதாமால். (எ)

இலகொளிவிரிக்கு மகாதலம்வயிடூ ரியநிறமெனவொளிபரப்பு, முலைவறவிளங்குதராதலஞ்சிறந்த பத்மராகத்தொளிபரப்பு, மலைவறமுன்னஞ்சொல்லியவிதலத் தயக்கிரீவன்மகாசம்ப, னிலவுமிழெயிற்றுக்கம்பளவானும் நமுசியர்தயாநிறைந்திருப்பார். (அ)

தலத்தினிலளவில்சர்ப்பம்வீற்றிருக்குந்திகழிரசாதலந்தன்னி, னலத்தகுகருடன் வாசுகிகாலநேமி நற்றவம்புரிகிலாதன், சொலப்படுதார காதியர்முதலோர் துன்னுவர்தராதலந்தன்னில், வெலற்கருமிரணியாக்கன்வெவ்விடவாய்த்தக்ககன்விரோசனனுறைவார். (கூ)

ஈங்கிதன்கீழினளப்பருநிரையமிவைவிரித்துரைத்திடிற்பெருகு, மாங்குறுமுலகமனைத்தையுந்தாங்கிச்சேடனாங்கமர்குவன மூன்று, வீங்குவெங்கதிர்கடிசைதிசையளப்பவிளங்குகாலாக்கினியீச, னோங்குவெந்துப்பின்மானுடமடங்கல் மகிழ்வினுங்குறைவொன்றுரைத்தான். (க0)

உலகநிலையுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—உஙகூக.

நாற்பத்திரண்டாவது

சம்புத்தீவின்சிறப்புரைத்தவத்தியாயம்.

நவையிலுலகம்பதினான்குநவின்றாயின்னும்விரித்தெமக்குப்
புவியினளவையுரைத்தியெனப்பொன்னாடளிக்கும்புத்தேளுந்
திவவுநல்யாழ்முனிவரனும்பணிந்துகேட்பத்திரைகடல்சூ
ழவனியருந்தியுமிழ்ந்தளித்ததிருமாலினிதினுறைகுவனால். (க)

சம்புபிலக்கஞ்சான்மலிநீள்குசஞ்சிறந்தணவாக்கிரவுஞ்ச
மம்பொற்சாகம்புட்கரமென்றறையுமோரேழ்தீவினையு
கம்புமுவரிகன்னல்சுராநெய்வெண்டயிர்பாலன்னீராம்
பம்புதிரையாக்கடலேழுமுறையிற்பாங்குசூழ்ந்திடுமால். (௨)

உரைத்தவிப்பெருந்தீவோரேழுங்கடல்களுறிடுமளவை
வரைத்துக்கூறின்யோசனையோ ரைம்பான்கோடியெனவகுப்பர்
தெரித்தின்றொத்ததிவைக்குநடுவாஞ்சம்புத்தீவதனைத்
திரித்துநடுவண்மேருவெனுஞ்சயிலமதனிற்றனிதுலங்கும். (௩)

மேருவுயர்ச்சியெண்பத்துநாலாயிரம்யோசனைவிளம்பும்
பாரிற்றாழ்ந்துபதினாறாயிரம்யோசனையாமேல்விரிவை [மை
யோரிரெண்ணான்காயிரம்யோ சனையென்றுரைப்பர் கீழ்ப்பரு
சேரிற்பதினாறாயிரம்யோசனையென்றெவருஞ்செப்புவரால்.(௪)

பூமியென்னுங்கமலத்தின்பொகுட்டுப்போலும்பொலங்கிரிசூழ்
நாமவருடவரையனைத்துநவிலின்மேல்கீழ்கடலளவுந்
தாமம்போலுநிடதவரைதென்பாற்சாருமதன்றென்பா
லேமகூடங்கிடக்குமதன்றென்பாலிமயங்கிடக்குமால். (௫)

பொன்னங்கிரியின்வடபுலத்துமேல்கீழ்புணரியளப்பதற்கு
மன்னுகோல்போனீலவரைகிடக்குமதற்குவடபுலத்திற்
றன்னேரில்லாச்சுவேதவரைசாருமதனின்வடபுலத்திற் [ம்.
பன்னுஞ்சிருங்கவரைகிடக்குமவற்றினளவைப்பகுத்துரைப்பா

மேருவரையின்றென்பாலும்வடபாற்றிசையுமிகவணித்தாய்ச்
சாருநிடதநீலவரைகீழ்மேனீளந்தனிபகரி
னேரொன்றிலக்கம்யோசனையாமேமகூடமுரைத்ததனுக்
கீரைந்தாம்யோசனைகுறையுமிமயமதற்கத்துணைகுறையும். (௭)

வடபாற்கிடந்தநீலவரையளவைதன்னினதன்வடபா
லடையுஞ்சுவேதம்யோசனையீரைந்துகுறையுமதன்வடபாற்
படருஞ்சிருங்கஞ்சுவேதவரையதனிற்பத்தோசனைகுறையு
மொடிவிலுயரமகலமிவைக்கீராயிரம்யோசனையென்பார். (௮)

மேருவரைக்குத்தென்பாலும்வடக்குமேல்கிழ்கடலளவாய்ச்
சாருநிடதநீலமெனும்வரையைத்தழுவிமிகவோங்கிச்
சேருமேருவரைதனக்குக்கிழக்குமேற்குஞ்சிறந்தோங்கு
மாரிபடியுமாலியவான்வரையுங்கந்தமாதனமும். (௯)

வழுதிக்கொடிச்சேலெழுதியமால் வரையின்கிழக்காமாலியவா
னழுவிக்கிழ்பாலுறைகண்டந்தயங்கும்பத்திராச்சுவமாம் [ன்
பழுதில்மேருவரைமேல்பாற்பயிலுங்கந்தமாதனத்துக்
கழிவில்மேல்பாலுறைகண்டங்கேதுமாலமெனவறைவார். (௰)

வேறு.

துலங்குமாலியவானெனும்வரைக்கீழ்பாற் றுன்னியசோட
மால்வரையு, மலங்கொளித்தேமகூடமுநீல நிடதத்தையணவி
யகிடக்கும், விலங்கிவில்லுமிழுங்கந்தமாதனத்தின் மேக்குறுநி
டதமால்வரையு, மிலங்கொளிப்பாயத்திரமுமந்நீல நிடதத்தை
யெய்தியகிடக்கும். (கக)

வேறு.

எண்பதினாயிரமளவாம்யோசனைத்தாய்க்கீழ்கடன்மேல்கட
லையெய்திக், கண்கவரும்வனப்பமைந்த கயிலைவெற்புங்கந்தமா
தனமுநாளும், விண்புரக்குமகமுதல வினைபுரியும்பரதகண்டம
தனின்மேவித், தெண்டிரைகள்கொழித்தெறியுந்தென்கடலைமி
கச்சார்ந்துதிகழுமன்றே. (கஉ)

திரிசிருங்கஞ்சாருநியென் றுரைசெயுமால்வரையிரண்டுங்
கிழக்குமேற்கா, மிருகடலுந்தனிதழுவி யெண்பதினாயிரமாம்
யோசனையவாகி, மருவிரியுங்கற்பகநாடெனத்திகழுத்தரகுருவ
மருவியோங்கி, விரிதிரையசுறவமெறிவடகடலையணிய்வாய்மே
வுமாதோ. (கங)

வேறு.

நிட்தவரைக்குநிகழ்த்தேமகூடவரைக்குநடுக்கண்ட
மிடரின்றுயர்ந்தவரிவருடமேமகூடவரைக்குமுயர்
குடுமியிமயவரைக்குநடுக்கோதின்றுயர்கிம்புருடகண்ட
மடையுமிமயவரைத்தென்பாற்பரதகண்டமெனவறைவர். ()

மேருவடபானீலவரைதனக்குஞ்சுவேதவெற்பினுக்குஞ்
சாருநடுவணிரம்மியகவருடஞ்சுவேதவரைதனக்கு
நேரில்சிருங்கவரைக்குநடுநெறிசேர்ந்திடுரணமியவருடஞ்
சீர்சால்சிருங்கவரைவடபாற்சிறந்தபுகழுத்தரகுருவே. (கரு)

சிறந்தவுயர்மேருவின்வடபாற்றென்பாலுரைத்தகண்டங்கட்
கறைந்தவளவையோரொன்றேன்பதினாயிரம்யோசனையாகும்
பிறங்குமேருவரைசூழ்ந்தகண்டம்பேசினிளாவிருத [மால்.
முறைந்ததிசைநான் கோரொன்றேன் பதினாயிரம்யோசனையா

கீழ்பாலுயர்மந்தரங்கிளக்குந்தென்பாற்கந்தமாதனமேற்
றுழ்பூங்குடபால்விபுலவரைவடபாற்சுயங்குஞ்சுபாரிசமாம்
பாழிவரைகளிளாவிருதகண்டத்துறையுஞ்சுடர்ப்பருதி
சூழும்வரையின்கீழ்பாலிற்றுகடீர்சடம்பமாநிற்கும். (கஎ)

மேருவரையின்வடபுலத்தின்வியன்பொற்சினையாவால்நிற்கு
மார்வமுறுமவ்வரைக்குடபாலலங்குசினையவரசோங்குஞ்
சீர்சால்தென்னம்புலமதனிற்றிசைகளளக்குஞ்சினைபோக்கிக்
கார்வெங்களிற்றின்மிகப்பருத்தகனிதாழ்நாவனின்றிடுமால். ()

பனிசேர்விசும்பின்முகடளக்கும்பராரைநாவற்பழமிகவுங்
கனியப்பழுத்துவழிதேறல்கல்லென்றருவியெனவிழ்ந்து
துனைவின்மேருச்சூழ்போதந்தோடுந்துகடீர்பேர்யாற்றை [ர்.
வனைபொற்பிணைகள்கொழித்துலவி வயங்குஞ்சம்புநதியென்பா

காற்றின்வெயிலினதியின் கரையிலுலர்ந்த கொழுஞ்சே
ற்றை, மாற்றொப்பில்லாச்சாம்புநதப்பொன்னென்றமராவனைந்
திடுவார், தோற்றுநீருண்டவனுறைந்தோர்தொகுநோய்மூப்பு
நரைதிரைபோ. யாற்றலமரர்கண்டுவப்ப வம்பொன்னுருவினமை
ந்துறைவார். (௨0)

வேறு.

மேருமால்வரையின்கீழ்பால்விரைகமழ்நறையின்வண்டு
சாரவுறுஞ்சோலைதன்னைச்சயித்திரரதமாமென்பர்
பார்புகழ்தென்பாற்சோலைகந்தமாதனமாமேல்பா
லேர்திகழ்சோலைதன்னைத்திகழ்வயிப்பிராசமென்பார். (௨௧)

அந்தரமளக்குமேருவடபுலத்தமருஞ்சோலை
நந்தனவனமாமென்பர்நவின்றவவ்வரையின்கீழ்பா
லுந்துநீர்வாவிதெண்ணீரோங்கருணோதந்தென்பாற்
சந்தநீர்வாவிமாபத்திரமெனச்சாற்றுவாரால். (௨௨)

அவ்வரைக்குடபால்வாவிதனையசிதோதமென்பர்
செவ்விதின்வடபாலுற்றதீம்புனல்வாவிதன்னைக்
கொவ்வைவாயமிர்தக்கிஞ்சொற்குழைகிழித்துலவுவாட்கண்
மவ்வலங்குழலாராடுமானசவாவியென்பார். (௨௩)

வேறு.

பானலங்கருங்கட்குறத்தியர்முகத்தைப்பான்மதியெனவுள
த்தெண்ணி, மீனினமருளவொற்றையாழியந்தேர்வெய்யவன்ப
ரிக்குளம்பிடறிக், கானவிர்பராரைச்சந்தனக்கோட்டிற்கதிர்செ
ய்பொற்பலகையிற்றொடுத்த, தேனிறாலுடையாவருவியிற்றூங்
கிவழிதருஞ்சிதாபநீள்குன்றும். (௨௪)

மேலும்பர்பனிக்குப்பாறையிற்றோன்றுந்தன்னிழல்வேழமெ
ன்றெண்ணி, மாலொடும்பாய்ந்துமருப்பிறத்தோன்றுந்தன்னிழ
ல்பிடியெனமருண்டு, கூலமீதுயர்த்திப்பனைக்கைமேனீட்டிக்கூ
ன்புறத்தசைத்திடநோக்கிப், பால்புரைதீஞ்சொலியக்கியர்மய
ங்கிப்பரிவுறுகுமுத்துவான்குன்றும். (௨௫)

றத்தரிச்சிலம்புமுழவினிற்றதும்பமுகிழ்முலைத்தரளமேற்
றெக்கர், கத்திகைக்கருமென்கூந்தல்வாழ்வண்டுமிடற்றெருங்கா
மராமிசைப்ப, நக்கரிநெடுங்கணியக்கியர்காமக்கூத்தயர்சாலையிற்
பிடிக்க, சித்திரவெழிலிபோன்றுமிகிறவமுஞ் சிறப்புடைக்குசா
மால்வரையும். (௨௬)

பகல்கெடவிமைக்கும்பருமணிவரன்றிப்பாய்ந்துவீழ்மாலை
வெள்ளருவி, யகில்சுடுபுகையிற்றண்மைதீர்ந்தொழுகவலர்கதிர்
த்திங்களங்கோடு, முகில்வயிறுடைப்பக்குறுந்துளிபிலிற்றிமுக
ம்புலர்ந்திடாததண்சார, னகைமதிமுகத்திற்சூரரமகளிர்நயப்பு
றுகனகநீள்குன்றும். (௨௭)

கவிழ்தலையருவிக் குழித்தநீளறையிற் கதிர்மணிநித்திலங்
குறுவார், துவர்நெடுங்கொடியிற்செய்தநல்லுலக்கைசுருள்விரி
யரம்பையிற்றூங்கு, நவையில்கூன்புறத்தபுலியடிச்செங்காய்நக்
கவிழ்கனிகருந்தினைமே, லவலடிப்பவர்தம்மலையையவிப்பவீழ்
தருமேகநீள்குன்றும். (௨௮)

கல்லெனவொலிக்குங்கவிழ்தலையருவிச்சாரலிற்கண்டுயிலு
முழுவை, கொல்புலிபடுக்கும்பெருங்கல்நீளடர்வெங்குறவர்வீழ்
த்திடுதலும்வெருவிப், பல்பொறிப்பறழ்தன்வாயினிற்கவ்வியிறு
வரைமுழஞ்சினிற்படர, மல்லன்மால்யானைபிடியொடுந்துயிலு
மாலியவானெனுங்குன்றும். (௨௯)

உளிகுடைந்துறுத்தவுரற்றலைக்கேழலுழுதிடுங்குழிதொறு
ம்பொன்னு, நளிகதிர்விரிக்கும்வயிரமுமிமைக்குநாண்முதிர்கவ
லைகொள்குழியிற், களிறுகோட்படுத்துக்குறவர்நின்றாலுங்கம்ப
லைவெள்ளுளையரிமான், பிளிறொலிவிரிக்கும்விண்டொடுகுடுமி
பிறங்குமானீலவான்குன்றும். (௩0)

கொடிச்சிபருவலைக்கூழைதாழொழுகு தெருத்தொறுங்கு
றுநடைப்புதல்வர், துடித்தலைய்டியகயமுனியோடுசூழ்ந்தனரா
ட்டயர்ந்துலவ, வொடிப்பமென்கதிர்நீட்டொழுகொளிமணியு
ம்பேரொலியகழ்ந்தவொண்பொன்னு, மிடித்துவெண்டுளிகால
ருவிகொண்டிறங்குமிருக்கிசவானெனுங்குன்றும். (௩௧)

மானுடம்பழுக்குங்கிலுத்தநீள்வனத்தின்வாலுளைமடங்கல்
கோட்படுப்ப, வூன்விளிம்பெறிந்துவிளங்குபல்லெயினர்களிற்றி
ன்வெண்மருப்பகழ்ந்துகுத்த, பானிலாமுத்தம்வீழ்சுவடொற்றி
ப்படர்தருங்கல்லதர்மருங்கிற், றேனிறால்தொடுத்தகழைவிசும்
பளக்குஞ்சிறப்புடைவிந்தவான்குன்றும். (௩௨)

மைம்மெழுக்கெறிந்தமுகத்திளமந்திகுடச்சுனைமருங்கினி
ற்பூத்த, செம்மலர்க்காந்தடீயெனவெருவிக்கல்லெனத்தேனிறா
ல்தொடுத்த, கைம்மலையருவிக்கவுளினிற்பாயக்கரடநீர்க்கலுழி
கொண்டிறங்கிப், பெய்ம்முகிறவழுஞ்சாரலின்விடுக்கும்ந்தரமெ
னும்பெருங்குன்றும். (௩௩)

கூந்தலம்பிடிகளீற்றுளைந்தலறுமோதையுங்குழவிவெண்டி
ங்க, ளேந்துகோடுழக்கத்தேனிறாலிழியாவிழுமெனவீழ்தருமு
ழக்குங், காந்தளஞ்செவ்விமுகிழ்விரல்சிவப்பக்கவுரிமுண்டகத்

தயாழ்செவிக்குந், சாந்தமென்முலையார்பாடலுமொழியாத்த
கைபெறுநிடதமால்வரையும். (௩௰௪)

பாற்குடமுடைந்துசொரிதல்போல்நிலவு சொரிகரும்பளி
க்குநிரைறையிற், குற்பிடிமருட்டத்துணைக்கரிதுஞ்சுந்தண்ணறு
ஞ்சாரல்கடோறுங், கூற்றொளியிட்டுக்கொறுகொறுத்தன்னப
டர்முலையியக்கியர்குருதி, வேற்றடஞ்செங்கையியக்கரோடாடும்
வேறுமாவெனுநெடுவரையும். (௩௰௫)

பொரியரைச்சாந்தப்பசுந்தழைதெவிட்டும்பூஞறுநற்கூந்த
லம்பிடிக்காங், கெரிகதிர்ப்பசும்பொன்விண்ணகநாட்டினிலைகு
ழைத்துயர்ந்தபொற்றருவின், விரிதழைபொடித்துமென்குளக
ருத்தியினுடைச்சாரல்கடோறு,மரசுவாவழங்குஞ்சிறப்புவிற்
றிருக்குமுருசகமாகுநீள்வரையும். (௩௰௬)

செம்மயிர்க்குறுத்தாட்பேரொலியகழ்ந்தபொற்பிதிர்ச்செ
ழுந்நுகளிறைத்துக், கைம்மலைகதிர்சூழ்பொன்மலைநான்குகால்
கொடுநடந்தெனத்திரிபு, மைமுகிறவழுஞ்சாரலிலியக்கர்வருப
ளிக்குளிர்கெடமாதர், கொம்மைவெம்முலையைத் தணந்திடா
தொழுகுமுயர்மணிச்சயிலவான்குன்றும். (௩௰௭)

விரியல்வெண்டோட்டுப்பாசடைக்கமலப்பள்ளியின்வியன்
படைதழுவி,யரசிளவன்னங்கண்படைகூர்வாயஞ்சிறைத்தும்பி
தாலாட்டும், பொருதிரைபுரட்டிமுழங்கருணேதவாவியின்கிழ்
புலமதனி, லுரையுணர்விறந்தயோகியரியக்கரும்பர்தம்முறைய
ளாவதியும். (௩௰௮)

வேறு.

கள்ளூற்றிருக்குநறுந்தெரியற்குறவர்கலவிதனிலுடைந்த
வெள்வாய்ச்சங்கத்துணியதனைவிரிநீர்ச்சாரலிடைத்தவிழும்
பிள்ளைமதியோடிணைத்துவளையணிகவென்னப்பெய்வளையா
ருள்ளமயக்கும்பெருவளத்தோடுயர்ந்தவம்பொற்றிரிகூடம். ()

அன்றுந்தெழுந்துசெம்மாந்தவம்மென்முலையகுறத்தியர்தம்
வண்ணம்வாய்ந்தமுகமென்னமதிமேற்குறவர்பொட்டணியுந்
தன்னைன்சாரலிடந்தோறும்வளர்த்தமுல்லைக்கொடிதவழ்ந்து
விண்ணோர்தருவின்மேற்படரும்பராங்கமென்னும்வியன்குன்றம்

விழுதுபோக்குநள்ளிருளில்விரிந்தவைம்பால்வட்டித்து
கொழுதிச்சுரும்புகவிகற்குஞ்சினைவாய்க்குவளைமலர்குற்றுத்
தழுமுற்றெய்தாமுலைமீதிற்றரளம்புனையுமாமகளி [ம்.
ரொழுதுபாவையெனத்தோன்றுமெழில்சேருசகமெனுங்குன்று

சென்டைகிடந்துகுழைபுரட்டுமதிவாண்முகந்நுக்கின்லைமொ
யண்டர்மகளிருபாவெநகைமுழ்த்தசெம்மற்பூவுதலைக் [ழி

கண்டுபுலிவன்பறவெனவேவெருவித்தமதுகன்புதைக்குங்
கொண்டறவழமுகம்புலராகிடதமென்னுமுயர்குன்றம். (சஉ)

வேறு.

துய்த்தலேமந்தியாசினிப்பலவின்சூழ்சுளேயுகிரினற்போழ்ந்து,கைத்தலத்தேந்திச்சூலிளமந்திக்களித்துளங்களிப்புறச்சேர்தல், பைத்தபாம்பல்குற்குறத்தியர்நோக்கிக்கணவர்தம்வரவு பார்த்துயங்கு, மைத்தவழ்சாரற்றும்பிராதகப்பேர் வான்றெடுகுடுமிவான்குன்றம். (சங)

புண்ணியத்திங்கள்பொழியும்வெண்ணிலவைப்பூநுதற்பிடியினம்வழங்குந், தண்ணறுஞ்சாரலருவியென்றெண்ணித்தழைசெவிச்சிறியகட்பளூஉத்தா, எண்ணல்மால்யானேத்தடக்கையால்வாரியண்மையினுணுபுதிரியும், விண்ணுயர்பஞ்சசையமென்றேருதுமேக்குயர்குடுமியங்குன்றம். (சச)

முற்படுகளிற்றின்கடாந்திறந்தோடுங் கலுழியம்பெருக்கினின்மூழ்கிப், பிற்படுபிடியுமடிசெவிக்கன்றுநீந்துபுமென்மெலப்பெயரும், பொற்புவீற்றிருந்தசாரலினெண்காழகில்சுடுகுரூஉப்புகைதவழக், கற்பகநாட்டிலரம்பையர்குழலுக் கூட்டிடுஞ்சிறப்புடைக்கலிங்கம். (சரு)

வரிப்புறவணில்வாற்செந்தினேகாக்குமிதணினிற்றெடுத்தவான்கொடியுங், கருப்புரவாழைச்சுருள்விரிகுருத்துங்காற்றினுன்மென்மெலவசைந்து, விருப்புறும்விண்ணுட்டரம்பையர்கவரிப்பூசலினரும்புவேர்புலர்த்துந், திருத்தகுமல்லல்வளங்கிடந்தோங்குஞ்சிறப்புடைவேணுநீள்குன்றம். (சசு)

காழ்படுபராரைச்சந்தனக்கோட்டிற்றெடுத்ததேனிறுலினேக்கவைநாப், பாழிவாய்ச்சுடிகைப்பொறியணற்பாந்தள்பைத்துவெங்கதிரொனத்திண்டுந், தாழ்புனலருவிச்சாரல்கடோறுஞ் சண்பகநறுமலர்கொய்வான், மாழைமென்னேக்கினரம்பையர்வழங்கும்வளங்கெழுகுரவவான்குன்றம். (சஎ)

பொரிமருப்பெருமைகன்றுளிச்சுரந்து பொழிந்திடுமறைவறட்டீம்பால், விரைகமழ்கூந்தற்கொடிச்சியரோங்கும் வியன்சினேக்கற்பகநாட்டுப், பருகுதெள்ளமுதிற்களித்திடும்வளங்கூர்சாரலிற்பருமணிவரன்றி, யருவிகண்டுயிலாதிழுமெனவொழுகவகன்விசும்பணவுவான்குமுதம். (சஅ)

களிறுகோட்படுக்குங்கானவருவகைக் கம்பலேமுழக்கினிற்கலந்து, துளிமுகில்படிகக்கோனிரைத்தனபோற் றூயநீர்த்தாரைகள்சொரியும், வெளிமுகடளந்துமேக்குயர்குடுமிச்சாரலின்மென்றினேகாக்குங், கிளிகடிமகளிர்கம்பலேயொழியாக்கேடில்சீர்சிந்துரக்குன்றம். (சகூ)

காய்க்குலைக்கமுகும்பழக்குலைத்தெங்குங் கதிர்பிணைந்தாடு கமையாமரும், வேய்த்தலைதொடுத்தபஃறலையிருளுமென்றுணர்ப் பசுங்கவிக்கொடியும், வாய்த்தமென்பயறுமுருந்தும்வெள்ளை ள்ருநம்வயின்வயினெங்கலுமலியா, வேத்தரும்வளங்கூர்தன்ன மூஞ்சாரலெரிமலரியிமைக்குநீருதாரம். (ரு0)

பரந்துவீழருவியொளிருபுடையும்பாய்மதக்கலுழிநீர்சொ ரிந்து, கருங்கவுட்சாரல்பரந்துமெய்சுருப்பின்கடும்புறுகடும்பசி கணிய, விருந்தினிகளித்துவிழ்பிடியோடும்வெங்கரிப்பகட்டின மவுழங்க, வரங்கமாவெருவுஞ்சாரல்சூழேகசிருங்கமாநவையறு குன்றம். (ருக)

முழிழ்த்திடுங்கடைக்கண்வட்வையைமூட்டி முறச்செவிக் காற்றெறிக்கலையப், புகைக்கனலவியவொழுகுவெம்மதத்திற் பு விசெகிழ்ந்திடவுயரடிக்க, னகப்பிணரடியிற்பாதலத்தொளிப்ப நடந்திடுங்களிறுகோட்படுத்துப், பகற்கதிரொன்னவிரவெரிமர த்திற்பிணித்தனர்பயிற்றுமாசயிலம். (ருஉ)

கருங்கொடிமிளகுஞ்செங்கொடித்துகிருங் கவலையங்கொடி யொடுமிடைந்து, விருந்தினருள்ளமயக்குறுசாரலிடந்தொறும் வேல்புனைதடங்க, ணரம்பையரோடும்விண்ணவரொய்தியகன்சு னைநறுமலர்குற்று, வருந்தறவுருள்பூந்தாரவற்போற்றும்வளங் கெழுபசாசநீள்குன்றம். (ருங)

மண்டுநீரொதிய மென்சிறுபுழைக்கை மடிசெவிக்கயமுனி யோடுங், கொண்டலம்புலிற்றுக்கன்றினந்தவழுங்குறத்தியர்மு ன்றிலிகடோறும், பண்டருகிளவிக்கின்னரமிதுனம்பாற்சுவைம ருட்டுபாட்டயரும், விண்டொடுகுடுமிவெயிற்செலவகற்றிமேக் குயர்ந்திடுவசுதாரம். (ருச)

செங்கயல்கிடந்துகருங்குழைத்தாவும்வெண்ணகையியக்கி யர்செறிந்து, குங்குமச்சேறுமெழுக்கெறிந்தன்னச்செப்புறுங் குடபுலநோக்கிக், கங்குல்வாய்க்காமங்காழ்கொளநெஞ்சங்கண வர்பால்கடப்பவேறுடலாய்த், தங்கியோகியரின்மூச்சவித்திரு க்குந்தகைபெறுவிசாலநீள்குன்றம். (ருரு)

கூன்முதுகணில்வாலிறடியம்பெரும்போர்பழித்துயர்குஞ் சரக்கன்றும், கானவர்துவைப்பப்பாசவலிடிக்குங்குறத்தியர்கை யகத்துலக்கை, வானுயர்பலவின்முட்புறக்கனிகள்வழன்றிட்த் தாக்கலுமுடைந்து, தேனவிர்சுளைகள்சுடுபொனின்வீழுஞ்சிறப் புடைத்தங்கியங்குன்றம். (ருசு)

கற்றையங்கவரிமயிரினின்மேய்ந்தச்சிறுகுடிக்கானவர்மகளீ ர், குற்றசெங்கழுநீரலங்கரில்விழித்தகண்ணொனக்குறுவிழிகொ ளரு, முற்றமெங்கணுநீள்பரானைமென்கோட்டுச் சண்பகமுகி

ழ்த்தமென்மலர்கள்,பொற்றகடிழைத்துப்பரப்பியபோலப்பொலிந்திடுமுயர்திரிசிருங்கம். (௫௭)

படுமணிவரன்றிப்பாய்ந்துவீழருவிகாழ்படுமயின்முருடுருட்டிக், துடியடிக்கயவாய்க்குஞ்சரக்கன்றுந்துறுமயிர்க்கவிழ்தலையெண்கு,மடுபுலிப்போத்தின்பறழையும்வாரியருவிகொண்டிறங்குதண்சாரல்,மடமயிலாலவழகுகண்படுக்கும்வான்றொடுகுடுமியங்கயிலை. (௫௮)

பளிக்கறைமுன்றிற்பசுந்தினையுணக்குங்குறத்தியர்பழிப்பில்வாண்முகத்தை, தளிப்புனற்சுனையின்முழுநெறியாம்பறண்மதியெனமுகமலர, வுளிக்குலமனைத்துந்தாமரையென்னவீழ்தருசாரலினருவி, துளித்துமின்றெழுமுகச்சிறப்புவீற்றிருக்குந் தோமறுமிமயநீள்குன்றம். (௫௯)

ஆயபொற்குடுமிமால்வரையனைத்துமளிவிரிந்தாட்டுபூங்கமலஞ், சேயிதழ்க்கழுநீர்கருநெறிக்குவளைதேத்துளிபிலிற்றரக்காம்பன், மேயசீர்மாபத்திரமெனவுரைக்குமேதகுவாவியின்றொன்பாற், காய்கதிரிரவியோட்டறவிவர்ந்துகண்கவர்வனப்பொடுமிருக்கும். (௬0)

வேறு.

சிறுதினைப்படுபுள்ளோப்பக்குறத்தியர்கவணிற்சேர்த்தி
யெறிதருகோட்டுமுத்தமெரிந்துவீழுடுவின்வீழு
நறியதண்சாரரேறுநகைமதிநுதலென்றெண்ணிக்
கறையினையியக்கர்கையாற்றுடைத்திடுங்கபிலக்குன்றம். (௬௧)

கோழரையரம்பையீன்றகொழுமடற்குருத்துநீண்டு
சூழ்சுடர்க்கற்றைகாலுந்தூய்மதியகட்டிற்றோய்தல்
பாழியந்தடந்தோண்மன்னர்வெண்குடைப்பசுங்காம்பேய்க்கும்
வீழ்சிறப்போங்குங்கந்தமாதனமென்னும்வெற்பும். (௬௨)

பொருசினமடங்கலேறுபுளிற்றிளங்களிறென்றெண்ணிக்
கிரிசரத்தெய்திக்கேழல்கிளைத்திடுங்குலிகந்தோய்ந்த
வருவிநீர்மாந்திச்சேர்ந்தமுகிலினத்தகடுகீண்டு
குருதியென்றுண்டுவெள்குங்கோடுயர்சுகந்தவெற்பும். (௬௩)

கைத்தளம்போலத்தூங்குங்கமழ்பசுந்தேனிறாலின்
மொய்த்தவிப்பிரியப்பாய்ந்துமுசுக்கலையுடைப்பவீழுந்
தத்துதேனருவிபாயக்கவைக்கதிர்வரகுசாமை
துய்த்தலையேனல்காய்க்குங்கோவில்சீர்ச்சிருங்கவானும். (௬௪)

வேறு.

பாரரைமாத்துகிர்க்குதிங்களிமேய்ந்துகதலிமென்படுபறப்குதட்டி, விராய்மலர்ப்பொதுளுங்குடச்சுனையுழக்கிவிரைசமழ்

பந்தினமணிந்த, மராவமுன்றெருசிபப்பிணர்முதுகுறிஞ்சிச்செங்கணுமான்றிரள்வழங்குங், குராமணங்கமழுஞ்சாரல்சூழ்கிடந்த பாரிசமென்னுநீள்குன்றும். (௬௫)

வரைநடந்தென்னப்பிடியொடுந்திரியுமழைமதக்கலுழிமால்யானை, யொருவரச்சிலைக்குமடுபுலிக்குருளைபடுத்திடவேட்டுவச்சிறுவர், நிரைநிரையமைத்தகல்லிடார்தோறுநாந்தமான்கோட்படுநெறிய, பொருவருஞ்சாரல்விளிம்புடுத்தோங்குஞ்சுபக்கமாம்புண்ணியக்குன்றும். (௬௬)

கடுங்கழைமிடறுகாய்ந்துறவெடித்தவிடர்பிளிற்கால்புகுந்திரைத்தல், குடங்கையினெடியவாள்புரைதடங்கட்குறத்தியர்குறிஞ்சிபாடுதற்கா, யடங்குறப்பிடித்தசுருதியினிசைப்பவாய்மயிர்க்கணங்கணின்றூஉ, மடங்கலர்விழுச்சிர்கண்படைகூருஞ்சுரசமாம்வான்பெருங்குன்றும். (௬௭)

கோங்கிளமிடையவீங்கியகொங்கைக் குறத்தியர்தண்டொறுமிருந்து, தூங்குழிச்சேக்கைக்குரீஇயினங்கடியுமின்மொழிச்செழுந்துணர்தூக்கு, மாங்குயிலினத்தின்கூக்குரலேய்க்கும்வளங்கெழுசாரல்சூழ்கிடந்த, நீங்கறுகுடுமிவான்முகடளக்குந்திகழ்சிகுகாடநீள்குன்றும். (௬௮)

மாதர்மென்கோட்டுப்பொரியமைப்புன்கின்கறையணல்வெண்பொரிமானும், போதுவாய்கிலந்துதாதுமேய்ந்துறங்கும்பொறியரிப்பெயரிளவண்டை, காதலாற்சுரும்புசிறகராற்றடவிங்கழிதுயிலெழுப்பிமேற்புணரு, மேதகுவோங்குசாரல்சூழ்கிடந்தவிமுத்தருசகடநீள்குன்றும். (௬௯)

பூந்துடும்பின்றகாந்தண்மென்சமலம்பொன்பொதியவிழ்த்தபூங்கொன்றை, யேந்திளம்பாவைதூக்கியகுரவஞ்சந்தனங்காழகிலிலவங், கூந்தலங்கமுகமடந்தையர்முலையிற்கொழுமடற்குடற்கனிதூக்கும், போந்தைசூழ்கிடந்தகண்ணருஞ்சாரற்பொருவறுபிங்கலக்குன்றும். (௭0)

வல்லிவார்காதினணிந்தபொற்குழைகள்வருமுலைக்குங்குமந்துடைப்பக், கொள்ளைவண்டரற்றுங்குளிர்மலர்க்கூந்தற்சொருக்குமென்கையிற்புறத்துலவ, கள்ளவிழ்நறும்பூஞ்செண்பகக்கோட்டினியக்கியர்விழ்கருங்கணவ, ருள்ளமுந்தாழுமூசலாட்டயருமோங்குசிர்ச்சுசேணநீள்குன்றும். (௭௧)

மழைமுதுகுறிஞ்சுமசோகின்மேற்பாய்ந்தகருமுகமந்திகள்பதிப்பப், பழமிளகுதிர்ந்தபளிக்கறைச்சாரலிடந்தொறும்வானவர்மகளிர், நிழலுருமெய்யின்வருமுலைப்போகநீப்பறவின்னவர்க்களித்த, தழைபடுமென்பூஞ்சேக்கைகள்கிடந்தநாவில்சிர்ப்பத்திரவனையும். (௭௨)

கறங்கிளிற்சுழலுங்கனலுருகுறுங்கட் காய்சினவாலுளைமடங்க,லுறங்கலாவென்றிவேட்டுவச்சிறுவர்தொண்டகச்சிறுபறையொலியேற், றிறங்கருங்குடுமியிறுவரைமுழையிற்பிணாவொடுமிருந்துயில்புரியுந், துறந்தவருளமும்வீழுநல்வளங்கூர்தோமில்மாமேகநீள்குன்றும். (௭௩)

அறையினிலுறங்குங்களிறுகல்லென்னவமர்ந்திடுங்குறத்தியர்விழித்துக், கறையடிபெயர்த்துநடத்தலுங்கருங்கல்கால்கொடுநடந்ததென்றெண்ணி, புறைதருகணவர்க்காங்கதையுரைப்பவுவந்துதம்மனைவியர்த்தாங்கிச், சிறுகுடிப்பளிக்குப்பாறையிற்றுவுஞ்சிறப்புடைப்பிஞ்சரக்குன்றும். (௭௪)

உரல்முகக்கேழல்கிளைத்திடுபயம்பு மொண்ணிறப்பேரொளியுகிராற், றரைபிதிர்த்தாழ்ந்தகாழ்சிறுகுழியுந்தறுகண்மால்யானைகோட்படுப்ப, நிரைநிரையெயினர்தொட்டவான்கிடங்குநெடும்பனைவேங்கைவீதூர்க்கும்,விரைகமழ்சாரல்விளிம்புடுத்தோங்கும்விளங்குபுண்டரிகமால்வரையும். (௭௫)

கூன்புறச்செவ்வாய்ப்பசுங்கிளிநிறத்தகொய்யுளைப்புரவியேழ்பிணித்த, வான்றலைத்திரியுமொற்றையாழியந்தேரோட்டறநிவந்தவான்குடுமித், தேன்கநிகற்குநறுமலர்க்கூந்தற்றேமொழிக்குறத்தியரிவர்ந்து, கான்படுதருவினறுமலர்கொய்யும்வளர்கபிலோதமால்வரையும். (௭௬)

நெடுமுடம்பழுத்தவிரிதலைத்தெங்குநெட்டிலைப்போந்தையுஞ்சுமந்தப், படுபழமூழ்த்துப்புலியடிக்கொடுங்காய்க்கதலியம்பசுங்குலையொடிக்கக்,கடுவன்வீழ்ந்துழக்கியள்ளிலைப்பலவின்கனியினைப்போழ்ந்துசூழ்சுளைகள், சுடுபொனிற்சிதறுமழகுகண்படுக்குந்துளங்கொளிப்பாண்டரவரையும். (௭௭)

நெடுநல்மால்யானைநீர்ச்சிறையழிப்ப விருகரைப்பராரைநீண்மரத்துத், தொடரும்வேர்பறியவீழ்தலும்வரையிற் றொடுத்தகோற்றேனிறாலுடைந்து, கடன்மடைதிறந்தாலெனவிரைத்தோடிக்கானவருவலைவெய்குறுத்தாட், குடிலலைத்தொழுகுஞ்சாரல்சூழ்கிடந்தகிட்டிணமென்னுநீள்குன்றும். (௭௮)

பொன்செயுங்கடவுட்புலவர்கைசெய்யாப்பூண்கிடந்தோங்கிளமுலைகண்,மின்புரைமருங்குலலமரப்பணைப்பவிரிகதிர்க்கோவைமேற்புடைப்ப, மன்பெருஞ்சிறப்பின்வரையரமகளிர் குரவையாட்டயர்தலுமயில்கள், வென்கொடுத்திரியும்விழுச்சிறப்போங்கும்பாரியாத்திரமெனும்வெற்பும். (௭௯)

கோடுயர்சாற றவழுமைம்முகிலைக் கூந்தலம்பிடியெனவெண்ணி,நீடிருங்கையாற்களிறுதைவருதனோக்கிநெடுஞ்சிலைவெற்பன், சேடணைமபொருண்மேற்பிரிகுதலொழிந்துநீங்கறும்பெ

முகியகொங்கை, யாட்மைத்தடங்தோண்மகளிர்பாலெய்துமவி
ர்மணிக்குமுகநீள்குன்றும். (௮0)

பிறைவளமருப்புக்கவிழ்தலையேனம் பெரும்புலிப்போத்த
முத்தாக்கச், சிறுகண்மால்யானைசீயமோடேற்றுச்செருச்செயு
ம்வளங்குலாய்க்கிடந்த, வரைவளரந்தண்சாரல்கடோறு மாய்
கதிர்க்கருந்தினையுணக்குங், குறவர்தம்மகளிர்மின்னெனத்தோ
ன்றுங்கோடுயர்லகுடமாங்குன்றும். (௮௧)

இரவலரென்னக்காந்தள்கைவிரிப்ப வள்ளியோரெனமுகம
லர்ந்து,பருதிபோக்கற்றியுயர்ந்தநீள்பராரைக்கொன்றைபைம்
பொன்னணிசொரியும், விரைகமழ்சாரலிடந்தொறும்வேட்சு
ட்டிடுஞ்சந்தனச்செழுங்கோ, டருவிகொண்டிரங்குஞ்சாருதி
யென்னவலங்கொளிவிரிக்குநீள்குன்றும். (௮௨)

இற்றிடைதேயமேக்குயர்ந்தோங்கியிளம்பிறைபொருவுகா
ழணிந்து, பொற்றசும்பேய்க்கும்பொம்மல்வெம்முலையகுறத்தி
யர்பொற்புறுமுகமுங், கற்றைவெண்கதிர்கான் மதியமுமறியா
துடுக்கணங்கலங்குபுதிரியு,மொற்றையாழியந்தேருரிஞ்சுபொற்
குடுமியுயர்மதுமானெனுங்குன்றும். (௮௩)

பாவடிக்களிறுபிணர்முதுகுரிஞ்சவழன்றிடுபராரைமென்
சாந்து, நாவியங்கடுவெனுற்றியபுழுகு முளவுமானடந்துமேற்
பாயு, வேவரவீழ்ந்தக்கருப்புரக்கதலி விரைகமழ்விரியல்வெண்
டோடுங், காவதங்கமழுஞ்சாரல்சூழ்கிடந்தவாயிரங்குடுமிநீள்கு
ன்றும். (௮௪)

வேறு.

பாம்புமைத்தாவித்தன்னபங்கயமருமவல்குற்
காம்புறழ்பசியமென்றோளியக்கியர்கலவிப்போரி
லாம்பல்வாயமுதமாந்தியைங்கணைக்குமரனன்னு
ரோம்பலுற்றிருக்குஞ்சாரலிருந்திரைமணிவான்குன்றும். (௮௫)

வலம்புரியுயிர்த்தமுத்தங்கருவெனவளைக்கைநல்லார்
சிலம்பெனவார்த்துமன்னஞ்சேர்ந்தடைகிடங்குந்தூய
வலங்கிதழ்க்கமலம்பூத்துத்திகழுசிதோதமென்னும்
புலம்புநீர்வாவிமேல்பாற்பொருந்தியகிடக்குமன்றே. (௮௬)

கனைதுரற்சுரும்புவீழ்ந்துகடாக்கருஞ்சேறுநாறப்
பனையுறழ்தடக்கைநீட்டியேழிலைம்பாலையந்தண்
பிணையுறமுருக்கிம்பாய்ந்துசினக்கரியுலம்புஞ்சாரம்
பனிமதிதவழுஞ்சங்கரூசமாம்பவளக்குன்றும். (௮௭)

குமரியம்பிடிகளாடுங்குண்டுநட்சுனையின்மாருத்
தமரவென்டிரைகள்சிந்துந்தாமரைநீளருவிதன்னிற்

கமழலந்துறைசூழ்தூயகலுழிமாநதியினோடு
மமரர்வந்தினிதினாடுமங்கசமென்னுங்குன்றும். (அஅ)

நறவுதேர்வாழ்க்கைவண்டுநாகிளஞ்சுரும்பினோடுங்
கறையடிப்பனைக்கைவேழக்கவுட்புடையினிதுண்டாடி
யுறைமதுத்துளிக்குமந்தண்டருவிடையொளித்துவாழ
நிறைதருமல்லலோங்கும்விடபமாநீலவெற்பும். (அகூ)

குழைபுனைபுனத்திற்சிறாருறுகுறுமாக்களோடு
மழைவிளையாடுஞ்சாரலிடந்தொறுமலர்ந்தகாந்தள் [கை
புழையெயிற்றகல்வாய்ப்பாந்தட் படமெனப்பொறிக்கொடோ
யெழின்மயில்குத்தவாலுமாகமென்றியம்புங்குன்றும். (கூ0)

தாளதாமரையின்மேயதாக்கணங்கென்னச்சார
ணீளிருமிதனினின்றுகுரீஇயனநெறியினொப்பும்
வாளமர்ந்தகண்ணார்மொழியின்மாங்குதலைத்தீஞ்சொற்
கேளலமென்றுதேவர்கிளத்திடுநேமிக்குன்றும். (கூக)

அனிச்சமென்மலரிற்றோயிற்கப்பணமிதித்தாலென்னப்
பனித்திடுஞ்செய்யமெல்லென்பஞ்சடிசிலம்புபம்பக்
கனிப்பொறைசுமந்தகாமவல்லிபோலமரர்மாதர்
பனிப்பறைதவழுஞ்சாரற்பயிறருநீலவெற்பும். (கூஉ)

ஐதெழில்பரந்தவல்குலம்பணைத்தகன்றகண்ணார்
மைதவழ்சாரறோறுமயிலொடுமுலவமைந்தர்
வெய்தடுபுழைக்கைநால்வாய்வேழமோடினிதினாடுங்
கொய்தழையாரற்சாரற்கலாஞ்சனமென்னுங்குன்றும். (கூங)

திரளைத்தெங்கினொண்காய்முசுக்கலைசிந்தவீழ்ந்து
பரியநீள்பலவினெற்றிப்படுபழஞ்சிதறிச்சூழ்ந்த
விரிதலையரம்பையீன்றகூன்புறக்கனிகள்வீழ்த்த
வருவிகொண்டிறங்குஞ்சாரற்சுமேதமென்றறையுங்குன்றும். ()

வட்வர்தந்திட்டவான்கேழ்வட்டத்துமறுகச்சந்தந்
தடமுலைமுகட்டிற்கோட்டித்தக்கவர்கைசெய்யாத
விடுகதிர்ப்பைம்பூண்யாவும்பருமித்துவிண்ணோர்மாதர்
மடமயிலாலவாலும்வராகமென்றுரைக்கும்வெற்பும். (கூரு)

கலங்குநீர்க்கணாயினீன்றபலவினிள்பசுங்காம்புக்கு
நிலம்புகவீழ்ந்துசிந்துங்குடக்கனிச்சுளையுநீண்ட
பொலங்கலவலங்கல்சிந்துமிதழியுஞ்சுடுபொனென்ன
விலங்கொளிவிரிக்குஞ்சாரற்புட்கரமென்னுங்குன்றும். (கூசா)

காந்தண்மென்போதினூழ்த்தகடம்பின்மென்போதுதங்கண்
மாந்தளிர்பொருவுமேனியியக்கியர்மலர்க்கைமீதி

லேந்தியபந்துபோன்மென்றியக்கர்மாலுழந்துநோக்குங்
கூந்தலம்பிடிவாழ்சாரல்விரசமென்றுரைக்குங்குன்றும். (கூஎ)

தூங்கழையுகுத்தமுத்தும்புழைக்கைவெண்மருப்பின்முத்துந்
திங்கதிர்நேர்க்குநேராய்ச்சிறுமியரினிதுநோக்கு
மோங்கெழிலந்தண்சாரற்பூந்துகளொழியக்கோட்டிற்
றூங்குதேத்துவலைதூற்றுந்துகளின்மாகபிலக்குன்றும். (கூஅ)

இருவரைச்சாரரேருறுமீர்மலர்கொய்யுமாத
ருறைமுகில்பிலிற்றத்தோய்ந்தவுகிருழுதுதறுமைம்பா
லறையுயர்குடுமியேறியகில்சுடுபுகையினூற்றப்
பொறியிளமஞ்ஞையாலும்பொற்புடைமயூரவெற்பும். (கூகூ)

துறந்தவேலரசர்நீத்தசுடர்மணிக்கலன்கள்யாவு
நிறங்கிளர்கதிர்கணீட்டநீளிருவிசும்பினுப்பட்
கறங்கெனத்திரியும்வெய்யோன்கனகதிரிருளிற்செய்யு
முறங்கலர்வளங்குலாயவோங்குசீர்க்கபிலவெற்பும். (க00)

எரிமணிக்குடுமியின்றவிலகுசெங்கதிரிற்றேய்ந்து
விரிகதிர்த்திங்கள்சேந்துவெங்கதிரொன்னத்தோன்ற
வரியளிதுதைந்துபாடக்குடச்சுனைமருங்கிற்பூத்த
முருகவிழ்கமலம்விள்ளுமொய்யொளிக்கனகக்குன்றும். (க0க)

கானலங்கூந்தலார்தங்கையும்வெண்கழங்கும்போலக்
கூனல்வெண்சுரிசங்கீன்றகுளிர்கதிர்முத்தினோடுந்
தேனவிர்கமலமென்பூவெங்கணுஞ்சிறந்துதோன்று
மானதவாவிசூழ்ந்துவடபுலத்தியங்குமன்றே. (க0உ)

நாற்றிசைதோறுஞ்சொன்னவரைகளினவின்றவெற்பின்
வீற்றுவீற்றுகத்தோன்றும்வெள்ளிடையதனிற்றேவர்
போற்றுறுமியக்கர்சித்தர்கின்னரர்புலவுவாட்கட்
கோற்றொடிமாதரம்பொற்குவிமுலைதிளைப்பவாழ்வார். (க0௩)

சம்புத்தீவின்சிறப்புரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—உசகூச.

நாற்பத்துமூன்றாவது

மேருவின்சிறப்புரைத்த வத்தியாயம்.

காசுகண்படுக்குமேருவினுப்பட்கதிர்மணிவிளிம்புடுத்தோங்கு, மோசனைபதினாயிரமுடைத்தாமனோவதியென்னுமோர்நகரிற், பாசடைப்புழைத்தாட்பொன்னிதழ்விரிக்கும்பனிமலர்க்கமலமென்பொகுட்டின், மாசறுபடிகக்கொடிபுரைமேனிமயிலொடுநான்முகனுறைவான். (க)

சனகனற்றவஞ்செய்சனந்தனன்சிறந்தசனாதனனுயர்சனற்குமார, முனிவரர்முதலாமருந்தவக்கிழவர்முக்குறும்பறவெறிந்துயர்ந்தோர், வினையறநோற்றுமெய்ப்பொருளுணர்ந்தவிழுமியோர்மகம்பலபுரிந்தோ, ரினையர்மற்றெவருமனோவதிநகரின்மலரயன்மருங்குவீற்றிருப்பார். (௨)

அத்திருநகரின்குடபுலமதனிலாயிரகோடியாதவரின், மொய்த்தவெங்கதிர்கான்றிலகொளிபரப்பு முழுமணிமுகடுவேய்ந்துயர்ந்து,சித்திரங்குயின்றநெடுநிலைமாடஞ்சிறந்தொளிர்வைகுந்தநகரிற், பைத்தபாம்பணையிற்றிருமகளோடும்பசுந்துழாய்முகுந்தன்வீற்றிருப்பான். (௩)

பாயொளிபரப்பிப்பகலிரவழைக்கும்பருதியொண்சேவடிபணிந்தோ, ரசயவன்றனதுநாமமாயிரமுநவின்றுளோரழன்மகம்புரிந்தோர், காயமுந்தாமும்வேறெனவுணர்ந்தோர்கங்கையங்கட்வுணீர்படிந்தோர், மாயவனுருவமருவிமேவரியவைகுந்தமதனில்வீற்றிருப்பார். (௪)

நான்முகக்கிழவனரசுவீற்றிருக்கு நலங்கெழுமனோவதிக்கீழ்பாற், பானிலாக்கதிருமங்கியுங்கதிர்கால்பருதியும்பற்பலகோடி, மேனிவந்தெழுந்ததெனச்சுடர்பரப்பிவிழிகவர்வனப்புவீற்றிருக்கும், கோனகரொன்றுங்கசோவதியென்னுங்கோதறுபெயரொடும்விளங்கும். (௫)

வெண்ணிறப்பூதிகண்டிகையணிந்தோர்மேதகுசிவனிசியதனிற், றண்மலர்தூவித்துயில்துறந்திருந்தோர்சாமநன்மறைபயிறக்கோர், புண்ணியக்கடவுட்காசியினுவிபொன்றினோர்புலன்வழியுள்ள, நண்ணுருதடக்கித்தற்பரத்தடைந்தோரசோவதிநகரினண்ணுவரால். (௬)

அன்னகரதனிலெண்டிசைப்பாலரடுக்கிதழ்தாமரைக்கிழவன், மின்னுவிட்டெறிக்குநேமியங்கடவுள்விரைமலர்ச்சேவடிபோற்றப், பொன்னவிர்திலைபூத்தவெங்கருங்கட்புணர்முலையுமைமருங்கிருப்ப,'முன்னதின்முன்னுயுரையுணர்விறந்தமுக்கணனினிதுவீற்றிருக்கும். (௭)

மற்றிதன்கீழ்பாலொழுகொளிசிந்தாமணியிருநிதியம்வான்சுரபி, பொற்றருவோடும்புணர்முலைசுமந்துபோயிறுங்கொடிமருங்கென்னச், சிற்றடிச்சிலம்புபூசலிட்டேங்கத்திரிதருமரம்பையர்நெருங்கி, வெற்றிடமின்றித்திருத்துயிலமரர்பதியெனும்வியனகருளதால். (௮)

உரைத்தவந்நகரிற் றிலோத்தமையரம்பை யுருப்பசிமேனகைமுதலோ, ரரத்தமென்பஞ்சியூட்டியபொன்னஞ்சேவடிபெயர்த்துநின்றுடத், திருத்தகுதேவர்பணிந்துநின்றேத்தச்செந்து

வர்க்கடிகைவாய்வேற்கண்,விளக்குழற்றீஞ்சொற்புலோமிசை யோடுமிந்திரனரசுவீற்றிருப்பான். (௯)

வாளமராமுவத்தாருயிர்துறந்தமன்னவர்மன்னவர்க்காக,மூவிருஞ்சமத்திலிறந்துசெஞ்சோற்றுக் கடன்கழித்திட்டவர்முறையே, நீளிருந்தத்தமொழுக்கினினின்றோர்நிகொறிப்பத்தினிப்பெண்டிர், நாளுநல்லறத்தினொழுகினோரமரர்பதியிடைநண்ணியின்புறுவார். (௧௦)

புகலருந்தென்கீழ்த்திசையினிற்றேசோ வதியெனும்புண்ணியநகரிற், சிகையழல்விரிக்குமாரழற்கடவுள்சிறந்துவீற்றிருக்குமற்றதனின், மகவினைபுரிந்தோர்மூச்சவித்திருந்துமறைபுகல்மந்திரநவின்றோர், தகரிவர்கடவுள்பேருருவெய்தித்தயங்கொளியோடும்வீற்றிருப்பார். (௧௧)

தென்புலமதனிலோசைபோஞ்சையமினியெனுந்திருநகருளதாங், கன்புமீதூரப்பிறையெயிற்றகல்வாயந்தகனரசுவீற்றிருக்கு, மன்பெருங்கற்பிற்சிறந்திடுமகளீர்வாய்மையின்வழாதுநன்குணர்ந்தோ, ரென்பெழுந்தியங்கநோற்றவர்யாருமந்நகரினிது வீற்றிருப்பார். (௧௨)

விளங்கியதென்மேற்றிசையினிலிரக்கோவதியெனும்வியனகருளதாங், கிளம்பிறையெயிற்றவரக்கரோத்தெடுப்பவெறுழ்வலிநிருதிவீற்றிருக்கும், வளங்கொண்மேற்றிசையிற்சபாவதியென்னுநகரிடைவானவரியக்க, ருளங்களிந்தேத்தக்கோட்சுறவுயர்த்தவுயர்புகழ்வருணன்வீற்றிருக்கும். (௧௩)

சிறந்துயர்வடமேற்றிசையினிற்கந்த வதியெனுந்திருநகரதனி, லுறைந்துகந்திருவரரம்பையரோத்த வுலவைவேந்திருந்தரசியற்றும், பிறங்கொளிவடபாற்றிசையினிற்சித்திபதியெனும் பெருநகருளதாங், கறங்கிளர்முனிவ ரியக்கரோத்தெடுப்ப வருளொடுமியக்கர்கோனுறையும். (௧௪)

இலகொளிவடகீழ்த்திசையிடைவிளங்கு மசோவதியென்னுநன்னகரிற், கலைமதிக்குழவியின்னமுதுறைப்பக் கங்கையோர்புடையிலைகொழிப்பக், குலவுசெஞ்சடையமுக்கணீசானன்குண்டுகெட்செம்மயிர்க்குறுந்தா, ளலகில்பல்பூதகணங்கணின்றேத்தவரியணைப்புறத்துவீற்றிருக்கும். (௧௫)

உயர்தருமண்டமுகட்டினின்மானவநீருற்றிருந்தொழுகியகங்கை, முயலடைகிடக்குந்திங்களஞ்செல்வன்முழுமையுநனைந்துவார்ந்தொழுகி, வெயில்கெடவிமைக்குஞ்சத்தியவுலகின்விரிதலையருவியின்வீழ்ந்து, துயரறுசிதைச்குசையளகாந்தைபத்தினியெனத்திரியும். (௧௬)

ஆங்கவர்தம்மிற்சிதைவான்றடவு மலங்கொளிமேருவின்கு ணபால், வீங்குநீர்ப்பெருக்கினிருகரைதேய்த்துவிண்டொடர்வ ரையகங்கிழித்துப், பாங்கெழிறிகழும்பத்திராச்சுவமாங் கண்ட த்தைவழிகொடுபடரா, வாங்குதெண்டிரையின்குணகடலகடுகி ழிதரவல்லையினடக்கும். (௧௭)

தெளிபுனலளகநந்தையென்றுரைக்குந் திரையெறிதிருவநீ ள்கங்கை, யொளிதிகழ்செம்பொன்மேருமால்வரையின் றென் புலத்திழுமெனவொழுகி, வெளிமுகடளக்கும் வரைமுகங்கிழி த்துப்பரதகண்டத்திடைமேவித், துளிமுகில்படியுங்கீழ்கடன் முகட்டினுயிரமுகத்ததாய்தோயும். (௧௮)

என்னறுந்தரங்கங் கொழித்துமேற்பட்டருஞ் சக்குசையெ னும்பெயர்க்கங்கை, யண்ணலங்குடுமிமேருமால்வரையின் குட புலத்ததிர்ந்துமேலிழிந்து, மண்மகண்முலையினுத்தரீகத்திற்கந் தமாதனவருடத்தி, னண்ணிவெஞ்சுறவந்திமிங்கிலத்தோடுமிரி யமேல்கடலிடைநடக்கும். (௧௯)

முத்தமுந்துகிரும்வரன்றிநீண்மேருமுகட்டினில்வடபுலத் தொழுகும், பத்திரையென்னுங்கங்கைநீள்குடுமிப் பாழிமால்வ ரைபலகிழியா, வுத்தரகுருவினெல்லைவந்தெய்தி யோங்கிருங்க ரைக்குறும்பெறிந்து, தத்துநீர்த்தரங்கமலையெனப்புரளும்வட கடல்சாருமென்றுரைத்தான். (௨0)

மேருவின்சிறப்புரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௨௬௧௪.

நாற்பத்துநான்காவது

நவகண்டத்துறைவோரியற்கையுரைத்த வத்தியாயம்.

உரைத்தபலகண்டத்தினுறைகுநருண்மையுணிற முரைத்தியெ ன்ன, வரைக்குறும்புகெடவெறியும் வச்சிரத்தோன்மகதியாழ் முனிவன்போற்றி, விரைக்கமலப்பொகுட்டினுறை விண்ணவ னேடுலகின்றவுந்தியான்றன், றிருக்கிளர்சேவடிவணங்கிக்கேட் பமகிழ்வோடுமிவைசெப்பலுற்றான். (௧)

ஓசைதிசைமுழுதளப்பவுயர்கேதுமாலகண்டத்துறையுமா ந்தர், மாசெறிநீனிறவுருவாயிருப்பரவர்மங்கையர்தம்வடிவுநீல ம், யோசனையுற்பலமணக்குமவர்மேனிபலவினறுங்கனியூணாகு ம், பாசிழைமாமகளிரொடு மொருபதினாயிரம்பருவம் பரிவின் வாழ்வார். (௨)

பண்ணவர்கள்புகழ்ந்தேத்தும்பத்திராச்சுவவருடமேவுமா ந்தர், வெண்ணிறமாகுவரவர்கண்மருவியிடும்விளரியஞ்சொன்

மடநல்லாருந், தன்னிலவுக்கதிரொளிக்கும்பளிங்குநிறமுடைய ருண்சாற்றிற்றேவ, ருண்ணமிர்தமதுநுகர்ந்தாங் கொருபதினா யிரம்பருவமுவந்துவாழ்வார். (௩)

தள்ளருஞ்சிரிரமியகவருடத்திலமர்ந்தருநற் றையலாரும், வெள்ளியநறவைத்தனைய நிறத்தாவியன்சினையாலின் கனிகடிய்ப் பாருள்ளபரமாயுளெல்லைபதினோராயிரத்தைஞ்ஞூறுளதாமெ ன்பர், கள்ளவிழிமகளிரொடுமிளமைதணவாமலென்றுங்களித் துவாழ்வார். (௪)

இன்னிசையபாட்டயருமிரண்மயமாம்வருடத்தி னிருந்து வாழு, மன்னநடைமடந்தையருமாடவருமாயிரக்கா லறவைத் தோங்கும், பொன்னிறத்தர்திதிக்கு மெலுமிச்சங்கனிநுகர்ந் துபொற்பிறேடும், பன்னீராயிரத்தைஞ்ஞூ றுண்டுநனைதிரை யின்றிப்பரிவின்வாழ்வார். (௫)

குருவருடந்தனிலுறையுங் கோதையருமாட்வருங் கூடத் தோன்றி, மருவுவர்மற்றவர்மேனிமரகதமாமணிபோலவயங்கி த்தோன்றும், பொருவலுமுணன்பாலாஞ் சதாசிவனைப்போற் றுவர்மற்றவர்தம்வாணாட், பருவமொருபன்னீரா யிரத்தைஞ் ஞூறெனவினிதிற்பகர்வரன்றே. (௬)

கிம்புருடவருடத்தி னினிதுறையுமடந்தையர்தங் கேள்வ ரோடுஞ், செம்பொனிறமாயிருப்ப ரொருபதினாயிரம்வருடஞ் சிறந்துதேன்சோர், வம்பவிழுமிறளிநறுங்கனிநுகர்ந்துமலரோ னைவழுத்திநாளு, மும்பரும்வீழ்வனப்பினொடுமொழியாதவின் னலந்துய்த்துறைவரன்றே. (௭).

அரிவருடந்தனிலுறையுமரிவையருமாட்வரு மலங்குசோ தி, யெரிபசும்பொனிறமாகி யிருப்பரவருண்கரும்பின் றீஞ்சா றென்பர், முருகவிழுந்துளவோனைப் பணிந்திடுவராங்கவர்க்கு மொழிந்தவாயு, ளொருபதினாயிரம்பருவமவ்வளவுமிளமையுட னுறைவரன்றே. (௮)

ஏமகிரிசூழ்கிடந்த விளாவிருதகண்டத்தி னினிதுவாழுங், காமனிகராடவருங் கன்னல்புளித்திடமொழியுங் கரும்பன்னாரு ந், தாமரையினகவிதழ்போனிறத்தினருண்சம்புநறுங் கனியின் சார, மாமவர்தமாயுணிலைபதின்மூவாயிரவருடமாகுமென்பார்

வேறு.

பரவருந்திறத்ததாகும்பாரதகண்டந்தன்னின்
மருவும்வேற்றடங்கண்மாதர்வலியுடைமைந்தர்யார்க்கு
முருவமுந்தொழிலுமூணும்பற்பலவுளவாமாயு
டெரிவருநாளுமென்னமறையொருநான்குசெப்பும். (௧௦)

இருவினைச்சிமிழ்ப்பினெய்திமியம்பியவாயுளூறு
மருவினுமருவுமன்றிமலக்குழியுற்றுவீங்கிக்
கருவுறுமுன்னம்வீய்ந்துகழியினுங்கழியுங்காளைப்
பருவமுற்றிடுமுனுவிபாறினும்பாறுமன்றே. (௧௧)

பாரதவருடமொன்பானுயிரம்பகர்ந்தவெண்ணிச்
சேரும்யோசனைத்தாமேனைக்கண்டங்கடோறுஞ்சேர்வோ
ரோர்கெழுதிருவராகிவாழ்வரிக்கண்டந்தன்னி
லார்வமோடினிதினுற்றுநல்வினைப்பயத்தினுமால். (௧௨)

பாரதவருடமொன்றேபழிப்பருங்கருமபூமி
யோருமிவ்வருடந்தன்னிலுலப்பினல்வினைகள்செய்தோ
ரேர்கெழுதுறக்கமெய்தியிருப்பர்தீவினைகள்செய்தோர்
சேர்வருநரகினெய்தித்தீவினையுழப்பரன்றே. (௧௩)

பங்கமில்சிறப்புவாய்ந்தபாரதவருடந்தன்னிற்
றுங்கநீண்மலையஞ்சையஞ்சுத்திமானிருக்கம்விந்த
மங்குல்கண்படுக்கும்பாரியாத்திரமயேந்திரப்பேர்
தங்கியவரையினேடுஞ்சையமோரேழுண்டென்பார். (௧௪)

இந்திரத்தீவுநாகத்தீவுவாருணத்தீவேய்ந்த
தந்துகாந்திரவத்திவுசவுமியத்தீவுநன்கு
தந்திடுங்கபத்திமானுந்தீவுதாம்பிரமாந்தீவு
பந்தமில்கசேட்டுமானுந்தீவுப்பாரதப்பேர்திவே. (௧௫)

உரைத்ததீவொன்பான்றீவொன்றேசனையீரைஞ்ஞூறுய்
வரைத்துமுன்பகுத்ததாகும்பாரதவருடந்தன்னிற்
றரைக்கொருதிலகமானபரதகண்டத்திற்சார்ந்து
நிரைத்திடுநான்குவன்னத்தவர்களுநெறியின்வாழ்வார். (௧௬)

குடக்கினில்யவனர்வாழ்வர்குணக்கினிற்கிராதர்வாழ்வ
ரடுத்திடுநடுவண்வேதமறையவரரசர்நாய்க
ரொடிப்பில்சீர்ச்சதுர்த்தர்யாருந்தத்தமவொழுக்கின்வாழ்வர்
தடுப்பருநதிகள்குன்றப்பெயரிவைசாற்றலுற்றும். (௧௭)

புனிற்றிளந்திங்கட்கண்ணிபுனைசடைப்பவளக்காடுங்
கனைத்துவண்டிமிருங்கொன்றைமாலையுநதன்மேற்கண்ணும்
பனைக்கைமால்யானைவன்றோற்போர்வையும்படிந்துநெஞ்சி
னினைப்பவர்க்கினிதினல்குங்கொறிகங்கையாறும். (௧௮)

கூன்முதுகிப்பிவெள்ளிவாய்விடக்கொழித்தமுத்தும்
பானிறப்பவளச்செங்காற்படர்சிறைச்செழுஞ்சுட்டன்னஞ்
சூன்முதிர்ந்தீன்றமுட்டைத்தொகுதியுமலைகொண்டுந்தி
வானுயர்கரையினுய்க்கும்வளங்கெழுசோனையாறும். (௧௯)

முகிறவமெருத்தயானைமூரிவெண்கோட்டுமுத்துப்
பகல்கெடவிமைக்குஞ்செய்யபன்மணிவரன்றிக்காழ்த்த
வகின்முகிடுருட்டிச்செய்யபேரொலியகழ்ந்தசெம்பொன்
மகரவாருதியினுய்க்கும்வாலுவாகினிப்பேராறும். (௨0)

பொருந்திறற்சியமாய்ப்பயோசனைகமழ்ந்துபொங்கு
நரந்தமானிரத்தச்சேறுநாகிளவரிவண்டார்க்குஞ்
செருந்தின்மென்போதுந்தெய்வச்சாந்தமுந்திரையினுய்த்துக்
கருங்கடற்புலவுபோக்குங்கவுரியென்றுரைக்குமாறும். (௨க)

வண்டொடுஞ்சிமிறுந்தேனுமணிநிறச்சுரும்புமார்ப்பக்
கொண்டையுண்கண்ணிறேக்கிக்கேழ்கிளரராரந்தாங்கி
விண்டெமுகுமிழியென்னுமென்முலைததும்பத்தெய்வ
வொண்டொடியவரிற்போந்துகடலுறும்விதிசையாறும். (௨௨)

வேறு.

இமிழ்கடன்ஞாலம்பூத்தசிற்றுதரத்திளங்கொடியேந்திளமு லையி,னமிழ்துறழ்தீம்பாலினிதினிதுகர்ந்தவரும்பெறற்காழிமா முகிலின், றமிழினிதுவந்தாங்கேடெதிர்போக்கிச்சாக்கியர்தமி ழ்க்குறும்பெறியுங், கமழலர்துறையின்வலம்புரிதவழுங்கடவு ளிர்வைகைமாநதியும். (௨௩)

சித்திரச்சபையினட்டம்புரிகடவுள் வார்சடைத்திங்களின்ன முதந், தத்துவெண்டிரைதாழ்கங்கைமென்றுளியுந்தாதளைந்தளி யினமுரலுங்,கொத்தலர்கொன்றைபிலிற்றுதேற்றுளியுங்குறும் பலவீன்றபொற்சுனையு, முத்தமுங்கொழித்துக்கரையலைத்தொ முகுமுழங்குநீர்ச்சித்திரநதியும். (௨௪)

தென்றலங்குழவியுயிர்த்ததென்மலையிற்றிரையெறிமணிபல வரன்றி, நன்றறிகேள்விக்குறுமுனியாடப்பெற்றதாற்கங்கைமா நதியி, னென்றுநற்புனிதமாகிலக்கதிர்செய்நித்திலந்துறைதொ றுமீன்று, பொன்றவழ்நறும்பூந்தாதளைந்தொழுகிப்புணரிசேர் பொருனைமாநதியும். (௨௫)

வேறு.

மண்ணமைமுழவுத்திண்டோண்மணிநிறவண்ணன்முன்னம்
பெண்ணலங்கடந்தவாயர்மகளிரைப்பெட்பினேடு
நண்ணியின்புறுதனேக்கிநங்கையருருவிற்றேன்றிக்
கண்ணனைப்புணருந்தூயகாளிந்தியென்னுமாறும். (௨௬)

வடமலைபிறந்தவான்கேழ்வட்டத்துமறுகாதுற்ற
கடவுண்மென்சாந்தம்வெய்யகதிர்முலைத்திமிரியாடிப்
படவரவல்குற்செவ்வாயரம்பையர்பரிவிற்றேய
விடலருந்தெய்வவாசங்கமழ்கருவிவாதையாறும். (௨௭)

திங்களங்கண்ணிப்புத்தேள்சேவடிக்கன்புபூண்டு
கங்கையிற்சிறப்புவாய்ந்துகளையலைத்தொழுகுநீருட்
டங்கியகற்கள்யாவுந்தானுவினிலிங்கமாகி
யெங்கனுமோசைபோயநருமதையென்னுமாறும். (௨௮)

தெளிவினோடாழ்ந்துதீதிற்சிறப்புடைத்துறைகள்வாய்ந்து
நளிகடலமிர்தமன்னநன்சுவையுடைத்தாகிநன்கின்
வெளிறெறிகேள்விவல்லோர்கவியெனவிளங்கித்தோன்றுந்
துளியெறிதரங்கஞ்சிந்துந்துற்கையென்றுரைக்குமாறும். (௨௯)

கந்தடுபுழைக்கைவேழங்காலினின்மருப்பிற்றாக்கிச்
சிந்துகாரகிலுமாரச்செழுநறுந்துகளும்வாரி
யுந்துதெண்டிரைக்கைதன்னாலுவரியங்கடலினுய்த்துச்
சந்தனக்கொழுஞ்சேறாக்குந்தாபியென்றுரைக்குமாறும். (௩௦)

ஆடுநராடநெஞ்சினெண்ணினோரடியிட்டோர்கள
வீடுசால்புனலின்சீர்த்திபேசியோர்துளிபதேனு
மூடுறுபாவந்திரவருந்தினோரொல்லையாடக்
கூடினோர்பாவந்தீர்க்குங்குமரியென்றுரைக்குமாறும். (௩௧)

மட்டவிழ்கரியகூந்தல்வானவர்மகளிரெய்தி
யிட்டிடைமெலியவோங்குமிளமுலைதிமிரியாடப்
பட்டதாற்றெய்வவாசந்திசைதிசைபரந்துவீங்குங்
கிட்டினவேணியென்னக்கிளர்த்திடுங்கடவுளாறும். (௩௨)

வள்ளவாய்க்கமலஞ்செந்நென்மாதுளங்கனிநீள்வாசக்
கள்ளவிழ்நீலப்போதுகரும்பொடுநேமியிற்ற
வெள்ளைவெண்கோடுதாங்கித்துதிக்கைமேலெடுத்தவாற்றா
லுள்ளுநர்பாவந்தீர்க்குங்களிறுநேருருபையாறும். (௩௩)

அள்ளிலைப்பலவுசாடியந்தளிர்த்தேமாவீழ்த்தி
வள்ளவாய்க்கமலம்பூத்தவான்பெருங்குளங்கண்மோதிக்
கொள்ளைவண்டார்க்குமென்பூங்குளிர்மலர்ப்படப்பைசாய்த்து
வெள்ளம்வந்திடலால்வேழம்போன்றிடும்வித்தையாறும். (௩௪)

கோற்றாடிப்புரிசைமுற்றிக்குளிர்நிழற்படப்பைசாய்த்துத்
தோற்றிடுநாட்டிலுள்ளபலபொருள்சூறையாடி
யேற்றமருடற்றும்வேந்தர்நாட்டினிலிகலினோடும்
வேற்றரசிறுத்தாலென்னமேவும்வைதரணியாறும். (௩௫)

கடைசெலவளர்ந்துநீண்டகருவிளமலர்கள்சிந்தி
மடலவிழ்கமலப்போதுநீலமும்வருத்தமோதித்
தடையறக்குழைகள்சாடிநடத்தலாற்றடமென்கொங்கை
மடவியர்கண்ணிற்செல்லும்வந்தனையென்னுமாறும். (௩௬)

ஓர்பகலாடினோர்க்குமுளத்திடையெண்ணினோர்க்கு
மேர்கெழுதுறக்கவீட்டினினிதுவீற்றிருந்துவாழுஞ்
சீர்கெழுபலத்தைநல்குந்தீம்புனற்பெருக்கத்தாது
வார்திரைகொழிக்குஞ்சம்மன்னுவதியாம்வளங்கொளாறும். ()

சித்திரநதியிற்கங்கையாற்றினிற்சிறப்புவாயா
வெத்தலத்திருந்தேயேனுமெண்ணினோர்பாவந்தீர்க்கும்
பத்தினிப்பெண்டீர்செய்யபாதபங்கயத்திற்றோய்ந்த
தூத்துநீரதனையொக்குஞ்சத்துருவென்னுமாறும். (௩௮)

புரவிமாமகங்கள்செய்தோர்பொன்றிடுங்கணவனோடு
மெரிபுகுந்திறந்தோரொப்புந்துறக்கவீடதனிலோர்நாள்
விரிபுனற்றிவலைதோய்ந்தோரொளிதினின்மேவவுய்க்குந்
திரையினின்மீன்கள்சிந்தித்திகழ்நிருவிந்தையாறும். (௩௯)

பாலைநீள்குறிஞ்சிவைகுங்கானவர்பலகையொள்வாள்
கால்வளைவரிவில்வெய்யகடுங்கொடும்பகழிநேமி
வேலிவையேந்திச்செல்லும்வாற்றினுல்வேலைமீது
மாலொடுமமர்க்குச்செல்வோர்போலுமந்தகையாமாறும். (௪0)

வேறு.

இரும்புதிரட்டுமுட்டற்போந்தையெரிவாய்மலர்நவிதழ்மு
ருக்குக், குரும்பைதூக்குங்குலைத்தெங்குங்குமரிப்பாளைப்பசுங்
கமுகுஞ், சுரும்புகுடைந்துதாதுதிர்க்குஞ்சூதம்பிடுங்கித்திரை
க்கரத்தால், விரைந்துகடற்குவிருந்தளிக்கும் வேதச்சுருதியெ
னுநதியும். (௪௧)

பலவின்சுளையும்பசுந்தாதும் பாளைப்பசும்பூ மிட்டுடைந்
து, நிலவிற்சொரியுமலர்ப்பூவுநெடுநல்வாடையெறிந்துகுப்பக்,
குலவுந்திரைக்கைதனில்வாரிக் கொழுநற்களிப்பான் கையுறை
கொண், டுலவுமகளிரொனக்கடல்வா யோடுந்தெண்ணீரிருடிகை
யும். (௪௨)

விரிந்தசெழும்பூந்தொடைவேய்ந்துவெண்ணித்திலத்தின்
பூணணிந்து, நரந்தங்கோட்டிச்செம்மாந்தமுலைபோற்புளினந
னிதோன்றப், பரந்ததிரைக்கைப்பலகாட்டிப்பாயுங்கயற்கண்வி
ழித்தொல்கி, யரங்கக்கூத்தியெனச்செல்லுந்தோயையென்னும
கன்யாறும். (௪௩)

அரந்தின்றுகுத்தபசும்பொன்னிற்றுதுதூற்றியளிகுடைய,
விரிந்தசெழும்பூங்கொன்றைமலர் தாங்கச்சடையின்மிலைச்சுத
லாற், பரந்தவினைதீர்த்திடவடைந்தோர்பாவக்குறும்புமாற்றுத
லாற், புரங்கண்மூன்றுங்கெடநகைத்த புத்தேள்போலத்தாம
சியும். (௪௪)

கொம்புகுழையமலர்சுமந்தகுளிர்மென்றேமாமலர்கொழுதி
நம்புகுயில்வாய்விடுமோதையுழவர்கழனிநாட்கொண்டு
பம்புமோதைமதகோதையுடைநீரோதைபரந்தார்ப்ப
வம்பிவழங்குகடற்புகுந்துமலைநீர்ப்பொன்னிப்பேராறும்.(௪௫)

கூனற்பசுங்காயிலவுமுயர் கொம்மைக்குடக்காய்முடத்தெங்கும்
வானக்கதிர்க்குங்கவரியெனவயங்கியோங்குநெற்குலையுந் [தி
தேன்மொய்த்துடைந்துபடுபழமுந்திரைக்கையதனாலெடுத்துந்
மீனக்கடலைக்கிழித்தோடும்விபாசையென்னும்வியனதியும்(௪௬)

வேறோருலகுமிந்திரனும்படைப்பனெனவேவெகுண்டெழுந்த
மாறிறவத்துக்கவுசிகனும்வண்மைக்கடவுண்முனிவனொடு
மீறில்கேள்விக்காதியெனும்விறல்கூர்வேந்தனிடத்துதித்த
பாரோய்திணாயகவுசிகையாம்பரவற்கரியபேராறும். (௪௭)

வேறு.

தெய்வயானையும்வள்ளியுந்தோய்தலாற்சிறந்த
மையில்வெண்பிறைக்குடுமியங்குன்றிடைவரலாற்
செய்யதாதவிழ்செழுமலர்க்கடம்பணிந்திடலான்
மொய்கொள்வேலுடைமுருகனைநிகர்பயோட்டிணியும். (௪௮)

அன்னமேவலாற்றாமரைமீதமர்ந்திடலான்
முன்னினோர்பவந்துடைத்தலான்முழுதுலகீன்ற
பன்னரும்புகழ்நான்முகனெனத்தனிப்பட்டருந்
துன்னுதெண்டிரைத்துங்கபத்திரையெனுநதியும். (௪௯)

வேறு.

குலைபொருதலையுங்கொழுமடற்கமுகுங்குயில்குனிந்திருந்துபூக்கொழுது, மலர்சினைபோக்கும்பொரியனாமாவு மறுபதம்புட்குரலொழியாத், தலைவிரிக்கன்னிக்கமுகிளம்பூவுஞ்சாடிநீள்கரையலைத்தொழுகிக், கலையுணர்நெஞ்சிற்கூத்தியருளம்போற்கவர்ந்துசெல்பாகுதைநதியும். (௫0)

நிலத்தலைபழுத்தபலவின்முட்கனியினீள்சுளைகையரிக்கொண்டாங், கிலைத்தலைப்பாளைக்கமுகின்வீழ்பழுக்காயிருகரைமருங்கினுஞ்சிதறிக்,குலைத்தலைத்தெங்கின்படுபழம்வாரிக்கோழரையரம்பைவேர்பறியா, வலைத்தலைக்கடலினுய்த்திடுமந்தச்சுலாதவியென்னுமாநதியும். (௫௧)

தண்ணறுஞ்செழும்பூமருதிறத்தவழ்ந்து முல்லையம்புறவினிற்சார்ந்து, வண்ணவாட்டடங்கட்பொதுவியர்தோயவண்டுகில்கையரிக்கொண்டு,வெண்ணெய்பெய்குழிசியுருட்டிநீள்சினைய மென்மலர்ப்பூங்குருந்தொசித்துக், கண்ணினிற்செல்லுஞ் சுசோபனையென்னுங்கடும்புனற்கடவுண்மாநதியும். (௫௨)

மங்குல்கண்படுக்குங்கருப்புரக்கதலிவான்றொடர்சண்பகந்தமாலங், கொங்கவிழ்கோங்கங் கோடுயர்வேங்கைக் குங்குமங்கையரிக்கொண்டு, தங்குநீண்முல்லைகுறிஞ்சியிற்செய்துதழலரசிருக்கும்வெம்பாலை, பொங்குநீர்மருதம்போன்மெனச்செய்துபுணரிதாழ்தோயைமாநதியும். (௫௩)

கவையடிவருடைபாய்ந்திடவுடைந்தபஃறுளையிறால்கவிழ்த்திடுதேன், றுவர்நிறச்செங்காய்க்கமுகிளம்பாளை சூன்மிடறுடைந்துபாய்தேறல், குவிமுகிழரம்பைக்கனிகனிந்துகுதேன்யாவையுங்கொணர்ந்தெதிர்மடுத்தாங், குவரியங்கடலுந்தேன்கடலாகவொழுகிடுமுலோகிதநதியும். (௫௪)

முடங்குளையெருத்தமடங்கலஞ்சீற்றத் திராகவன்முன்னர்வைகுந்த, மடைந்திடுநாளிலணிநகரயோத்திப் பறவைபல்விலங்குமென்புழுக்க, டொடர்ந்திடுங்கவிகண்மங்கையரங்கைதாக்குமென்புனிதநீரதனுட், படிந்தவரெவர்க்குந்துறக்கவீடளிக்கும்பாய்திரைச்சரையுமாநதியும். (௫௫)

நெறிமருப்பெருமைகவட்டிடையடங்கா நீர்க்குடமுறழ்மடிபொழிந்த, வறைவறட்டேம்பாறிணைக்கையின்வாரி முல்லையம்புறவினிலடைந்து,குறுநெறிக்கூந்தலாச்சியர்காச்சுங்குழிசிபெய்நறியபால்கவர்ந்து, செறியுவர்க்கடலைப்பாற்கடலாக்குந் தெசானையென்றுரைக்குமாநதியும். (௫௬)

உந்தியிற்கமலம்பூத்தலாற்சங்கந்தரித்தலாலோங்குநேமியம்புள், மைந்துறவினிதுதாங்கலாற்கடவுண் மணிதரித்தொழுகியவாற்றால், வந்தினிதடைந்தோர்வினையகற்றிடலால் வண்டுழாய்மாயனைப்பொருவுஞ், சிந்துதெண்டிரையசீக்குரோததியென்றுரைத்திடுந்தெய்வமாநதியும். (௫௭)

கருங்கழுத்தீன்றவெள்ளிவெண்பாளைவிரிதலைக்கமுகறவெறிந்து, குருந்தினஞ்சாய்த்துக்கோழைப்பலவின்கொழுங்கனிமுழுவதுஞ்சிந்திப், பரந்ததெண்டிரையதடங்கட்புகுந்துகவர்ந்திடும்பலகனியனைத்தும், விருந்தினிதளியாவலைகிழித்தொழுகும்வேத்திரவதியெனுநதியும். (௫௮)

ஒள்ளொளியுமிழுநிலாக்கதிர்விரிக்கு முத்தமுமொளிர்செழுந்துகிருந்,தெள்ளுருபன்மணியும்யானைவெண்கோடுந்திரளைச்சந்தனத்துணியுங், கள்ளவிழ்மலருந் திரைக்கையாலெடுத்துக் கணக்கறப்பொழிந்திடுஞ்செயலால், வள்ளியோர்போலுமெவாநிலம்போற்றும்வளங்கெழுமந்தகாமினியும். (௫௯)

உட்டெளிவோடுந் தண்ணெனவொழுகும் வாற்றினாலொருவழிப்படாது, தட்டகற்சிறையாம்பந்தனமறுத்துத் தரிப்பறநடந்திடுஞ்செயலான், மட்டவிழ்மலரு மணிகளும்பொன்னுங்

திரைக்கையாலெறிதலுமாயை, விட்டுயர்வரைஞ்செல்ஞாளியிற் செல்லும்விபாதியென்றுரைத்திடுநதியும். (௯௰)

சுரும்புநீள்கரும்புங்கமலநாண்மலருஞ் சூதமுமசோகமென்போது, மரும்பவிழ்முல்லைமலருமென்கழுநீரலரும்வெண்டிரைக்கரத்தேந்திப், பொருந்தலாற்கண்டோர்கண்கவர்வனப்பினடத்தலாற்பொலிவொடுமுளத்தின், விரும்பினருள்ளங்கவர்தலாலநங்கவேணிகர்கோமதிநதியும். (௯௧)

கலந்திடுமகளிர் சிலம்பெனவொலிக்கு மெயினமென்புள்ளொலிகழனி, யலம்புகுந்துழக்கவுழுதிடுமுழுநரார்ப்பொலியாலைபாய்த்துழனி, மலங்கினங்கவரும்வலைஞரார்ப்போதைவயின்வயினெங்கணுஞ்சிறப்பப், புலம்புதெண்டிரையகடற்புகும்பூதபாவையாம்புண்ணியநதியும். (௯௨)

எல்லுறழ்மணியுமுத்தமுந்துகிருமெறழ்வயமானைவெண்மருப்பும், கொல்புலிநகமுஞ்சந்தமென்றுணியுங்கோட்டமுமுதிர்பழமிளகு, மல்லலங்கிரியினேலமும்பூவுங்குலிகமுங்கொணார்ந்துவந்திடலாற், பல்பொருள்பகரும்வணிகரிற்றோன்றியொழுகுபன்னூசையாநதியும். (௯௩)

கன்னிமந்தாரநாண்மலர்படப்பைச் காடுசாய்த்தகின்முருடுருட்டிப், பொன்னிணர்கொடுத்தபூஞ்சினையிதழி பொரியரைச்சந்தனந்தமால, மன்னுதெண்டிரைக்கைதனினெடுத்தெறிந்து மற்றுமோர்கடலெனப்பெயருந், தன்னிகர்தன்னையன்றிவேறில்லாச்சந்திரபாகைமாநதியும். (௯௪)

கதுப்பெனவார்ந்தகாரறல்சரியநடத்தலாற்கவின்சிறந்திட்லான், மதுக்களியாடும்வரிசிறைச்சுரும்பும்வண்டும்விழ்மலர்புனைந்திடலால், விதிர்ப்பொடுங்கயற்கண்விழித்துடலொல்கிவருதலால்விழைதருகணவர், புதுக்கடிநயந்தமகளிரைப்பொருவுங் குருவெனும்புண்ணியநதியும். (௯௫)

காவதங்கமழுமுல்லையுங்கோங்குங் கடிகமழ்சண்பகப்போதுஞ், சேவல்வண்டரற்றுஞ்செருந்தியுஞ்செய்யகமலமுந்திரைக்கையினேந்தித், தூவிவெள்ளெகினஞ்சிலம்பெனவொலிப்பச் சேரலாற்றுவரிதழ்க் கனிவாய்ப், பூவிலைமகளிர் போன்மெனத்தோன்றிப்புணரிதாழ்சித்திரோற்பலையும். (௯௬)

உட்டெளிவின்றிக்கலங்குநீர்மையினாற் செவ்வனேயொழுகிடாவாற்றாற், றட்டநல்லொழுக்கவரம்பிகழ்ந்திடலானுளத்தினைத்தளர்வுறமயக்குங், கட்டெளிவருந்துமாந்தரிற்போந்துகதிர்க்குலைப்பழனநாடுழக்கி, மட்டவிழ்படப்பைசாய்மேனடக்கும்வளர்திரிசாமையாநதியும். (௯௭)

வெள்ளைவாரணமூர்ந்தொழுகலால்விண்ணோர்தொழுதன ர்வியந்துபோற்றுதலா, லொள்ளொளிவிரிக்கும்வச்சிரமேந்தி யுயர்விசும்பளக்குநீள்குடுமிச், சுள்ளிநீள்வேலிவரைபொருத லைக்குந்தொழிலினலாயிரஞ்செங்கண், வள்ளலைமிகர்க்கும்புனி தவெண்டரங்கவான்புனல்வானைமாநதியும். (௬௮)

எண்ணறுமகளிர்தோய்தலினவர்தமிளமுலைக்குவட்டினில ணிந்த, தண்ணறுங்கலவைக்காவதங்கமழவருதலாற்றளையவிழ் செழும்பூ, வண்ணமென்குவளைமலர்வனைந்திடலால்வனப்பொ டுநடந்திடுமாற்றாற், பெண்ணலம்விழைந்த விடரொனத்தோன் றும்பிரத்தினையென்னுமாநதியும். (௬௯)

ஒருவழிப்படரா தொழுகலானுள்ளந் தெளிந்திடாதாழ்ந் திடும்வாற்றாற், பொருவருங்குமிழிமுலையசைத்திடலாற்பொதி யவிழ்மலர்வனைந்திடலான், முருகவிழ்நரந்தமான்மதஞ்சாந்த ந்தாங்கலான்முலைவிலைபகரு, மரிவையையொன்னவொழுகிடும்வே தவதியெனவறைந்திடுநதியும். (௭0)

மற்றுமோர்கடல்போற்கடல்வயிற்புகுந்து மண்டையூவெ ன்னுநீணதியு,மெற்றியதரங்கந்துகிற்கொடிசிதறுந்தேவிகையெ ன்னுமாநதியுங், கற்றவருள்ளமெனத்தெளிந்தோடிக்கரையெறி யிரோவதீநதியும், பற்றறப்பாவந்தோய்ந்தவர்க்ககற்றும்பலாகை யென்றுரைத்திடுநதியும். (௭௧)

உலகெலாமேத்தும்புண்ணியநதியென்றுரைப்பர்மற்றீங்கி வையன்றி, யலகறுநதிகளுளவவையுரைப்பிற் பெருகுமென்ற றைந்திலமறைந்த, குலவுநீர்க்கங்கைமுதலவாநதியி னுடினோர் குறுகிடும்பேற்றை, மலைவறவிந்தவத்தியாயத்தைக் கேட்டவர டைகுவர்மாதோ. (௭௨)

வேறு.

அற்புடைபரதகண்டத்தளப்பறுதேயமுண்டாற்
பற்பலபாடைமாக்கள்பயில்வர்மற்றிதற்கோனான்காய்ச்
சொற்படும்யுகபேதங்கடொழில்பலவியற்றல்கூடு
மற்றையவருடமெட்டுமின்னவைமருவிடாவால். (௭௩)

நவகண்டத்துறைவோரியற்கையுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—உ௱௮௭.

வானவர்வாழ்க்கையுரைத்தவத்தியாயம்.

பொன்னவிர்குடுமிமதியகடுரிஞ்சும் போகுயரோமகூடத்தி ற், கின்னரரியக்கர்சித்தர்கிம்புருடராகிளர்முடியமரரேத்தெடுப் ப, மின்னுவிட்டெறிக்குமணிவிளிம்புடுத்த மேக்குயர்வியன்சி னகரத்திற், கன்னலிற்கனிந்த வின்மொழித்துவர்வாய்க் கவுரி யோடிறைவன்வீற்றிருக்கும். (க)

முயலடைகிடக்குமுழுமதிக்கதிரின்முழங்குநீர்க்கங்கையா றொழுகுங், கயிலையம்பொருப்பிற்கடையளந்தறியாக் கண்கவர் வனப்புவீற்றிருக்கும், புயறவழ்குடுமிநெடுநிலைமாடத் தியக்கர் கோன்பொலிவின்வீற்றிருந்தாங், கயிலெயிற்றழல்வாயரவகங்க ணத்தோனடிமலரிணைவழிபடுவான். (உ)

கவிழ்தலையருவிவீழ்ந்துகற்குழிக்குஞ்சிதாந்தமால்வரையி னிற்கமலத், தவிசின்வீற்றிருக்குந்திருமகள்கொம்மைத் தடமு லைக்களிறுபாய்ந்துழக்கு, மவிரொளிநீல வரையுறழ்தடந்தோ ளைம்படைக்கடவுள்விண்ணோங்கி, யிவர்பொலங்குடுமிச்சினகர மதனுளிமையவர்போற்றவீற்றிருக்கும். (௩)

ஒன்னலருளத்திற்கருதினுங்கரந்தி ன்றொளிறுவாள்விதிர்ப் பினுமறியா, வின்னுயிர்கவருங்கூற்றெனத்தெழிக்கு மெந்திரப் பல்பொறிகிடக்குங், கன்னியம்புரிசைசூழ்வசுதாரவரையினிற் களிமகிழ்தூங்க, மன்னியவசுக்களெண்மருந்தத்தமனைவியரோ டும்வாழ்ந்திருப்பார். (௪)

இலகொளிப்பருதியோட்டறநிவந்தவிரத்தினசாரப்பொல ங்கிரியிற், புலனவித்திருந்தமுனிவரரெழுவர் வயிரவர்பொங் கொளிவயிர, மலர்கதிரெறிப்பமுகடுவேய்ந்துயர்ந்தவம்பொனி ல்சினகரமதனுண், மலரயன்பளிக்குப் பாவைபோன்றிருக்கும் வாணியோடினிதுவீற்றிருக்கும். (௫)

ஈற்றுளைந்தலறும்பிடிகளுங்கமஞ்சூன் மேகமுமெதிரெதிர் சிலைக்கு, மாற்றெறியேகசிருங்கமால்வரையிற்சயிமினிவழுத்தி டக்கரியக், கூற்றினதாவிகுடித்தகுஞ்சித்தாட் பொன்னிதழ்க் கொன்றைதாழ்சடைவெண்; ணீற்றொளிபடர்செம்பவளவான் குன்றம்பச்சிளங்கொடியொடுநிலவும். (௬)

கையினூற்பற்றியொடித்திடப்பொன்னங் கதிருமிழ்சுமேத மால்வரையி, னையசெங்கதிரோராயிரமெழுந்தாங்கவிரொளிமா டமொன்றுளதால், வையமோரேழும்பொதிந்திடச்சமைத்தம ணிநிறச்செம்பெனவோங்குந், தொய்யில்வெம்முலையசியொ டுமகவான்விண்ணவர்சூழவீற்றிருப்பான். (௭)

சந்தனக்கோட்டிற்பருதிதேருரிஞ்சவழன்றெழுதன்னாறு
ந்துகளா, லுந்துநீரருவிச்சந்தனக்குழம்பி னொழுகிடுமிராசமா
ல்வரையி, னந்தமில்வனப்பிற்சத்திகளேத்த வாய்கதிர்மணிச்சி
னகரத்திற், பைந்தளிர்பொருவுசீறடித்துர்க்கை பரமனோடினோ
துவிற்றிருக்கும். (௮)

இந்திரகோபநிறத்தபன்மயிரப்பேரொலியகழ்ந்தோளியெறி
க்குந், சுந்தரச்சுண்ணம்புதைத்தவின்மாயோன் பொன்னிறத்
துகிலசைத்தென்னத், தந்தொளிவிரிக்குநீலமால்வரையிற் றம
னியத்தகடுவேய்ந்துயர்ந்த, நந்தலிபொன்னஞ்சினகரமதனின
ன்னரிவெங்கலுழன்விற்றிருக்கும். (௯)

இன்னிளந்திங்கட்கோடுழவிருல்விண் டிழுமெனப்பாய்ந்த
தேனருவி, பொன்வரைவிழுதுவிட்டெனத்தூங்கும்புகழ்கிரிசி
ருங்கமால்வரையிற், கன்னியந்துளவோனிறத்திடைச்சிறந்தக
மலவீடென்னவிற்றிருக்கு, மின்னிடைத்துவர்வாய்த்தடறுவி
ட்டொளிரும்வேல்விழிக்கமலையாங்கிருக்கும். (௧௦)

ஓங்குநீரருவிச்சகத்திரசிகரமென்றுயர்திருவநீள்வரையிற்,
றீங்கதிர்மணியின்முகடுவேய்ந்துயர்ந்த செழுநகரொட்டுளவவற்
றின், மாங்குயிற்குதலைமடந்தையரோடும்விஞ்சையருறைவரம
மருங்கிற், கோங்கநல்வனத்துச்சினகரத்தீசன் குவிமுலையணங்
கொடுமுறையும். (௧௧)

கனைகடாஞ்செருக்கிக்கண்படைபெறுதகளிற்றெருவிகார்மு
ழக்கென்றுப், பனைநிகர்ப்பாந்தள்விரித்தவெம்படங்கள்சுருக்கி
டும்பாரியாத்திரத்தில், வனைகழலியக்கர்சித்தர்கந்தருவர் வான
வர்மகளிரேத்தெடுப்பப், புனையுமுக்கண்ணுஞ் சூலமுமேந்திப்
பூமகளினிதுவிற்றிருக்கும். (௧௨)

அமிழ்தினைக்குழைத்துவாக்கியதென்னவவிர்மணியறைமு
கங்கிழிய, விமிழிசையருவிகல்லெனவீழுஞ்சுபாரிசமென்னுமா
ல்வரையிற், றமிழினுமினியமென்மையவாகித்தளிரியல்கவற்று
சீறடிய, கமழ்நறுங்கூந்தற்கருப்புரமேனிக் கலைமகளினிதுவீற்
றிருக்கும். (௧௩)

பான்மதிக்குழவிக்கூன்முதுகுரிஞ்சவுயர்ந்தெழுபாண்டவ
ர்வரையில், வானவருலகுநிறையமென்றென்னவளங்கெழுநகர
நாறுளவா, லானவவ்வுலகின்மைந்தர்கந்தருவரைம்புலக்குறும்
பெறிந்தோரை, வேனிலாற்கடிமைப்படுத்தும்வாட்டடங்கண்வ
ளிதையரோடும்விற்றிருப்பார். (௧௪)

அஞ்சனவரையினனிச்சமென்மிதிப்பினளியவாய்முண்மி
தித்தனவாய்ப், பஞ்செனச்சிவக்குஞ்சீறடித்துவர்வாயரம்பைய
ர்பழிப்பருமமுது, நஞ்செனத்திரிக்குமின்மொழியியக்கர்மங்கை

யர்நாகர்கந்தருவர், விஞ்சையரளப்பினல்வளங்கிடக்குநகர்தொறுமினிதுவிற்றிருப்பார். (௧௫)

குமுதமால்வரையினுருத்திரகணங்களிருக்கும்வான்குலவுபிஞ்சரத்தி, னெமதுளத்திருப்போன்கணங்கள்விற்றிருக்குநகர மூன்றுளவவற்றிடையி, னுமையொருபாகனடியர்வீற்றிருப்பருயர்ந்தெழுகபிலமால்வரையி, னிமயவில்வாங்குமந்தணர்ப்போற்றுமீர்ஞ்சடைநந்திவீற்றிருப்பான். (௧௬)

தளிமுகிலுறங்குசாருதிவரையிற்றகைபெறுசினகரமதனு, ணளிகதிர்ப்பருதிவானவனுறையு மதன்வடபுலத்தினினண்ணித், துளியமுதுறைக்கும்வெண்கதிர்ப்படத்திற்றுன்னிருடௌறத்துடைக்குந்,தெளிசுடர்த்திங்கள்வானவனுரோணிமுகிழ்முலைதிளைப்பவீற்றிருப்பான். (௧௭)

அஞ்சமால்வரையின்மணிவிளிம்புடுத்தவாயிரம்யோசனைப்பரப்பின், மஞ்சிவர்குடுமிச்சினகரமதனுண் மலரயன்வாணியோடிருப்பா, னெஞ்சலில்வரையின்றென்புலமதனிற்சனகனையாதியோரிருப்பார், பஞ்சசைலத்தினகரமூன்றுளவாங்கெறும்வலித்தானவர்பயில்வார். (௧௮)

அன்னமால்வரையின்றென்புலமதனி லருந்தவக்கருத்தமனுறைவா,னன்னதன்றென்கீழ்த்திசையினிலியம்புஞ்சனற்குமாரனைமுதன்முனிவர், மன்னுவவொடுத்துவிரித்தினிதுரைப்பின்வருட்நூறகன்றிடுமதனுன், முன்னிமற்றதனைவிரித்துரையாமற்றெருகுதியாமொழிந்தனமென்றான். (௧௯)

வானவர்வாழ்க்கையுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௨௬௦௬.

நாற்பத்தாறுவது

பிலக்கமுதலானதீவுகளியற்கையுரைத்த வத்தியாயம்.

தேனினினமுதினல்லிசைபயிலுந்திவ்வியாழ்முனிவரனோடும், பானலங்கடந்தபனிமொழித்துவர்வாய்ப்பனைமுலைபுலோமிசைக்கணவ, னேனையதீவினடுக்கினைவிரித்துகூறுதியெனவியம்பிடலுங், கூன்முதுகாமைமோட்டுருவமைந்தகுளிர்பசுந்துளவினோன்மொழிவான். (௧)

உரைத்தநாவலந்தீவளவினித்தீவையுவரியங்கட்லுடுத்தோங்கும்,வரைத்திடுபிலக்கத்தீவுவர்க்கடலைவளைந்திதற்கிரட்டியோசனைத்தா, நிரைத்தபல்கேள்விவிஞ்சையின்றுரைபோகிகரறுவிழுமியோர்குழுமித், திருத்தகுதுறக்கவீடடைவோரும்விழைவுறுஞ்சிறப்புடைத்தாமால். (௨)

அகில்வயிருர்ந்தகருங்குழற்செவ்வாயம்பகட்டிளமுலைமா
தர், சுகிர்புரிநரம்பிற்காந்தளஞ்செங்கைத்தொகுவிரல்சேப்புற
நடப்ப, மகதியாழ்முனியுநாலுறப்பயிற்றுமகரயாழிசையினில்
வெய்ய, பகலவன்கதிருந்தண்கதிராகும்பண்புடைச்சேசமநீள்
குன்றும். (ங)

கவிழ்தலையுளிய மகழ்ந்திடும்புற்றுங் குரும்பியைக்கையினா
லள்ளித், தவலரும்பிணவுக்கருத்தியின்புறுதனோக்கியவியக்கிய
ர்தணைந்த, நிவவியாழ்க்கே ள்வித்துறைபடிதலைவர் செலவயர்பி
ரியிலையெண்ணி, யுவவுவெண்மதித்தீயுள்புகுந்திறப்பவுன்னிடு
ந்துந்துபிவரையும். (ச)

கள்ளயர்வுயிர்க்குஞ்செழுமலர்க்கூந்தலியக்கியர்கதிர்முலை
க்கோட்டிற், பிள்ளைவெண்மதியமலையெனத்தவழ்தல்பிறைவட்
ங்கிடந்ததென்றெண்ணிக், தெள்ளிதினியக்க ராங்கதன்களங்க
நானமென்சேறெனநெஞ்சக், துள்ளுபுதுடையாவளமையினானு
மோங்குசிரிடபமால்வரையும். (ரு)

கலைகதிர்ச்செல்வன்கொடிஞ்சியந்தேரிற்கூந்தன்மாக்கவிக்
குளம்பிடறிச், சிலைவிசும்பளக்கும்பொரியவரைச்சந்தச் செழுந்
துகளெயகனுமுநிராக், புனலினிலோடுங்கலுழிநீராற்றிற்சந்
தனத்தொய்யிலின்வீழ்ந்து, பனைநெடுந்தடக்கைக்களிற்றினம்வ
ருந்துஞ்சந்திரமெனும்பருப்பதமும். (சு)

சந்திரகாந்தவரையினிற்றிங்கட் டண்கதிர்பரப்பலுநெகிழா,
வுந்துநீர்த்தரங்கமெறிந்தலைத்தொழுகிப்பாய்தலுமுயர்சினைமர
த்துக், கொந்தவிழ்நறும்பூஞ்சந்தனந்தமாலங்கோங்கினந்தழை
குழைத்துயரு, மந்தணற்சாரல்விளிம்புடுத்தோங்குமகன்வயிற்
பிராசநீள்குன்றும். (எ)

வேறு.

கடுஞ்சூன்மேதியீற்றுளைந்துகனைத்துக்கமலமலர்மேய்ந்து[வாய்
நெடுந்தாட்குவளைவாய்க்குதட்டி நெடுமூச்செறியுங்குடச்சுனை
வட்ந்தாழ்கொங்கைக்கொடிச்சியர்வான்மகளிரோடுநீராடு
மடங்காவிழுச்சிருவமேதமென்னுஞ்செம்பொனருவரையும். ()

மாவீழோதியரமகளிராடும்வண்டாமரைச்சுனையிற்
காவிமேய்ந்துகள்ளொழுகுங்கடைவாய்மேதிமுலைமுறுகி
யோவாதொழுகுமறைவறட்பாலொழுகுதேனிற்கரைந்தோடித்
தாவாதருவியெனவிழுஞ்சாரலுடுத்தநாரதமும். (கூ)

ஆயவோரேழ்தடவரையுமரந்தின்றுகுத்தபசும்பொன்னின்
மேயசுணங்குகொப்புளிக்கும் வெண்கண்முலையமதர்நெடுங்கட்
பாயவல்குலரமகளிரமரரியக்கர்பதியாகித்
தூயதுறக்கநகருறழும்பிலக்கத்தீவுமிடைத்துலங்கும். (க0)

வேறு.

அன்னமால்வரையிற்சித்தர்கள்தருவரடிமலர்ப்போற்றின ரிசைப்பப், பொன்னிதட்கமலப்பொகுட்டில்வீற்றிருக்கும்புங் கவன்கடவுளாய்வதியு, மன்னியாங்குறைவோர் நரைதிரையுரு துவகுத்திவையாயிரம்பருவங், கன்னன்மென்மொழியார்முலை நலநுகர்ந்துகளிப்பொடுமினிதுவீற்றிருப்பார். (௧௧)

வெண்டிரைகொழிக்குஞ்சுகருதையமிர்தைவிபாவைநீள்சு கையசந்தத்தை, மண்டுநீர்க்கிலமைதிரிதிவையென்னுமேழ்நதி யவ்வுழிவயங்கு, மெண்டரும்புகங்களுன்கெனவுரைக்கும்வரை யறையவ்வுழியில்லைத், தண்டலில்சோமற்றெழுதவனுறைவோ ர்மகம்புரிந்தவனுழைச்சார்வர். (௧௨)

அன்னநற்றீவின்மறையவர்தம்மை யாரியரென்பராய்கழற் கான், மன்னவர்தம்மைக்குராரரென்றுரைப்பர்வணிகரைவிதிச் சியரென்பார், பின்னவர்தம்மைப்பவ்வியரென்பாருரைத்தவிப் பிலக்கதீவளவிற், கன்னலஞ்செழுஞ்சாற்றிமிழ்திரைகொழிக்கு ங்கடலதன்புடையுடுத்தோங்கும். (௧௩)

கண்கவர்பிலக்கத்தீவினுக்கிரட்டியோசனைத்தாய்ச்செழுங் கன்னற், றண்கடலதனை யுப்புறஞ்சூழ்ந்து தடஞ்சினைக்கற்பகச் சோலை, விண்படுவளனுநிரையமோடினைப்பவிழுத்தகுவான்சிற ப்போங்கும், பண்புகண்படுத்துப்பகர்வதற்கரியசன்மலித்தீவெ ழில்பயக்கும். (௧௪)

களிமதஞ்செருக்கிக்கண்படைப்புரியாதுழிதருங்காய்சினவ ழுவைத், தளிமுகிற்றெண்ணீர்புழைக்கையால்வாரிச் சூன்முதி ர்த்தளர்நடைப்பிடிக்காங், களியுடனருத்தி வெவ்விடாயகற்றி யாரமென்பூந்தழையொடித்துக், குளகினிதருந்திக்கூன்புறந்த டவுங்குமுதமென்றுரைக்குநீள்குன்றும். (௧௫)

போகுயர்சினையபராரைநீள்புன்னைப் போதெனநெஞ்சகம ருண்டு, மேகமீப்பொடித்தவுடுவின்மேற்குருதிக்காந்தண்மென் மலர்க்கரம்வைக்குந், தோகையர்மடமையெள்ளியதலைவர்தாம தியவர்முகமென்ன, வோகையிற்றிலதந்தீட்டுதண்சார லுன்ன தமென்னுமால்வரையும். (௧௬)

கற்பகத்தருவின்வியன்சினையதனிற்கவலைமென்பூங்கொடி பிணித்துப், பொற்புறவினிதினூசலாட்டயரும்பூங்குழையெயி ற்றியர்தம்மை, வெற்பினிலுடங்குமின்கொடியென்னவெள்ளெ யிற்றரவினம்வெருவி, யற்படுமனையினொளித்திடுஞ்சார லருவி தாழ்துரோணமால்வரையும். (௧௭)

காசுகண்படுக்குங்கைவளரல்குற்குறத்தியர்கதிர்முலைக்கோ டும், வீசுதெண்டிரையவானயாற்றெழுகும் விண்டொடர்மால்

வரைக்கோடுங், கேசில்வேற்றுமைகடெரிக்கலாவாற்றூற்சித்தர் கந்தருவர்தம்முள்ள, மூசலாட்டயருமோங்குயர்சாரல்வலர்க் கமாமெருமுயர்வரையும். (கஅ)

குண்டுகட்சுனைவாயலர்ந்தபைங்கணைக்காற் குவளையினூறு தேனருந்தும், வண்டுவான்றருவின்மென்மலர்த்தேறல் வாய்ம டுத்தருவருந்துமிழா, வுண்டுமுன்கழிந்தசுனைமலர்த்தேறன் மீ ட்டும்வந்தினிதினிதுண்ணும், விண்டொடர்குடுமிக் குமுத்து வானென்னும்விழுச்சிறப்புறங்குநீள்வரையும். (கக)

கொங்கவிழ்மலர்த்தேனியினங்கூட்டும் பஃறுணையிருல்வி லைகொற்றேன், றிங்களங்குழவிக்கோடுழச்சிதையாவறைவறட் பாலினிற்சிந்திப்,பங்கமுற்றிடலும்பாவடிக்களிறுபிடியொடுமள ருபாய்ந்துழலுங், கங்கமென்றுரைக்குமாயிரமுக்தகவிழ்தலை யருவிதாழ்வரையும். (உ0)

நிழன்றிடுஞ்செங்கோனிணிலவேந்தர் நீத்திடுமுடிமுதற்க லன்க, ளழன்றெழுகதிரோன்மின்மினியென்னவாய்கதிர்விடுத் திடுமொருபால், குழன்றவார்கூந்தற்குறத்தியர்விழியுங் குவளை யுமலிந்திடாதறுகால், சுழன்றிடுமொருபா லிவ்வளங்கிடக்குந் தோமறுமயிடமால்வரையும். (உக)

ஆகியவோரேழ்குடுமிமால்வரையுமம்பகட்டிளமுலைத்துவ ர்வாய்ப், பாகடுஇஞ்சொலியக்கியரியக்கர் பண்ணவர்சித்தர்கந் தருவர், சேகெறிமுனிவர்க்குறையுளாய்க்கமலச்செங்கணுனுல குறைவோரு, மோகையின்விரும்புஞ்சன்மலித்தீவினுலகெலா ம்வியப்புறக்கிடக்கும். (உஉ)

தோயசந்திரைநீள்விமோசனிநிவர்த்திநிதிட்டினையொளிர் சுக்கிலையென், றேயநன்னுமத்தேழ்நதியுளவாங்கீறைபவரிருங் கலைகடவும், வாயுவின்சேயபொலங்கழல்வழுத்திமருவருங்கதி யினிலுறுவ, ராயுளினளவையாங்கவர்க்குரைப்பின் வருடமை யாயிரமாமால். (உங)

ஆறறிபுலமையந்தணர்தம்மைக் கபிலரென்றறைவர்மன்ன வரை, மாறெறிவடிவேலருணரென்றுரைப்பர் வணிகரைப்பீத ரென்றிசைப்பா,ரூறுசால்கேள்விப்பின்னவர்தம்மைக்கிட்டின ரென்னவோதிடுவார், வீறுயரிலவத்தீவினதளவு மதுக்கடல்வி ளிம்புடுத்தோங்கும். (உச)

மதுக்கடலளவைக்கிரட்டியோசனைத்தாய் மதிப்பருமரும றைக்கேள்வி, முதுக்குறைவுடையோர்க் குறையுளாய்ச்செறிந் த மொய்யிருள்குடியிருந்தனைய, கதுப்புடைமகளிர்மொழிக்கு டைந்தபறேர்காரதன்கரமலரொடுத்து, விதிர்த்திசைவீணைமுனி க்கிடும்வளங்கூர்வான்குசத்திவுறவிளங்கும். (உரு)

கொங்குதேர்வாட்கைப்பலபொலிச்சுரும்பர்கோங்குமென் பூந்துகளாடி, மங்குல்கண்படுக்குஞ்சண்பகப்போதின்வதிந்திடு ம்பேட்டின்முன்வரலு,மங்கதுநோக்கியயற்பெடையணைந்தகோ லமென்றாடிநீண்மாலைக், கங்குலிற்கமலம் புகுந்திதழ்க்கதவ ம டைத்திடும்வளங்கொண்மந்தரமும். (௨௬)

மைம்முகிறவழுஞ் சாரலிற்றுயின்று மடிசெவிமழலைவண் டோச்சக், கைம்முகில்வருதனைக்கியகரடக்கறையடிக்கூந்தல ம்பிடிமற், றம்மவோர்பிடியோடிணைந்திவண்வருதறகாதெனவூ டியந்தளிர, கொய்ம்மலர்ச்சோலைமருங்குபுக்கொளிக்குஞ் சிற ப்புடையரியெனுங்குன்றும். (௨௭)

துகிர்படுசெங்காய்ப்பழுக்குலையீந்தின் றூங்கிலாக்கதிர்விழு தோட்டும், வகிர்மதிக்கோடுதவழ்தலுமுதிர வூடியமங்கையர்த ளிர்க்கை, தகவொடுங்கணவர் பற்றவற்றுதிர்ந்த தயங்கொளிச் செந்துகிர்கடுக்கு, மகின்முருடுருட்டியருவிதாழ்துதிமானெனு ம்பெயரண்ணலங்குன்றும். (௨௮)

மீயுயர்கோட்டுக் குரவிளம்பாவை பராரைமென்சந்தனம் வேட்ப, வாயிரப்பெருந்தீச்சுடர்விளக்கெடுத்தாலென்னமென் கோடல்வாயலரச், சேயுயர்கழைக்கண்வெடித்துகுமுத்தம்வெ ண்பொரிச்சிறந்தெனச்சிறக்கும், பாயபல்வளங்கூரேமமென்று ரைக்கும்பன்னிவிசும்பணவுநீள்வரையும். (௨௯)

மணிதெளித்தனைய வாசநீர்ச்சுனையுள் வலம்புரியீன்றவெ ண்முத்தம்,பிணிமுறுக்கவிழ்ந்ததாமரைப்பொகுட்டிற் பிறங்கு தல்சுனையெனும்பேதை, யணிவளைக்கரத்தான் முத்தமென்கழ ங்காட்டாடுதல்போன்மெனச்சிறக்குந், தணிவருமல்லல்கண்ப டைகூர்ந்துதயங்கும்வித்துருமவான்குன்றும். (௩0)

ஆய்தினையவையலிடிப்பவருலக்கையரசினிற்பலாவினிற்று க்கச், சேயபொற்சுளையகுடக்கனியுடைந்துதிசைதிசைகாவதங் கமழும், பாயபல்வளத்தசாரல்கடோறுங்குறத்தியர்ப்பியதேன் வேள்வி, மீயுயர்விசும்பின்மங்கையரமிர்தமளித்திடும்புட்பவா ன்வெற்பும். (௩௧)

மணிவிளிம்புடுத்தநுண்டுகிற்றுகைமண்ணிடைப்பூந்துக டுடைப்பத், துணிகதிர்த்திங்கண்மணிவடங்கிடந்த துணைமுலை விசும்பளந்தோங்கப், பிணிமுறுக்கவிழுஞ்சண்பகப்போதுகொ ய்பவர்பேரொழினேக்கி, யணிமயினுணியாட்டொழிந்தகலுங்கு சேசயமெனுமருவரையும். (௩௨)

என்னுமேழ்வரையுஞ்சுணங்குபூத்தலர்ந்த விளமுலையியக் கியரியக்கர், வன்னமேகலையவரம்பையரமரர்மாண்புடைச்சித் தர்கந்தருவர், துன்னியெஞ்ஞான்றுமுறையிடமாகித்துறக்கமா

நகரொனத்துலங்கும், கன்னியஞ்சிறப்பாருயர்குசத்தீவினுலகெலாம்வியப்புறக்கவினும். (௩௩)

பவித்திரையம்பைமகிசிவைதூதபாவைசம்மதைபழிப்பில்லாப், புவிக்கொருதரளவடமணிந்ததுபோற்புணரிதாழ்வித்தியுத்தென்ன, வுவப்புறுநதிகளேழுளவாங்கணுறைபவர்நான்முகற்போற்றித், தவத்தினதளவினயனுலகடைந்துதனைப்பிலபேரின்பமுற்றிருப்பார். (௩௪)

அந்தணர்தூயதிரவிடர்வென்வேலரசர்சுட்டுமியர்நல்வணிகர்,மைந்துடைச்சினேகர்பின்னவர்தம்மைவயங்கொண்மாந்தேகமொன்றுரைப்பார்,நந்தலிலாயுளாங்கவர்தமக்குநவிலிணையாயிரம்பருவம், வெந்துயர்நோய்மூப்பிகந்துவேற்றடங்கண்மடவியரோடும்வீற்றிருப்பார். (௩௫)

அறைந்தவத்தீவையத்துணைப்பரப்பி னெய்க்கடல்வளையுமத்தீவிற், சிறந்திடுமிரட்டியோசனைத்தாகிக்கிரவுஞ்சமெனுஞ்செழுந்தீவு, பறைந்திடக்கரைகொனெய்க்கடலதனைச்சூழ்ந்திடும்பரந்தவத்தீவிற், பிறந்தவரையாயிரமுயர்பருவம்பெட்புடன்வாழ்குவரன்றே. (௩௬)

விழிவாய்மகளிர்கணவர்பால்விடுப்பவுகிரினுற்பாசுரம்வரைந்த,தாழைமென்றோடுபொற்றகடென்னவருநெறித்தலைதொறுங்கிடத்தன், மாழைமென்னோக்கினியக்கியர்நோக்கிமகிணர்பான்மனஞ்செலவிடுக்குங், கோழரையரம்பைச்சாரல்சூழ்கிடந்ததுந்துமியென்னுநீள்குன்றம். (௩௭)

வேறு.

கறையடிப்பிடியினேடுங்களிறுகோட்படுத்துச்செல்லு
மறவர்வெண்பளிக்குவட்டப்பாறையின்மருங்குமற்றோர்
குறுமுயல்கிடந்ததென்னக்குளிர்மதிமுயல்கைப்பற்றச்
சிறுகண்வார்வலையின்வீசுஞ்சீர்கொள்புண்டரீகக்குன்றும். ௩௮

வேறு.

கங்குல்வாய்விழுங்கணவர்பாற்களவினேகுறுங்கதிர்முலைத்துவர்வா, யங்கலுழ்மேனிக்குறத்தியர்முகத்தையாய்கதிர்மதியமென்றெண்ணித், திங்கள்வெண்மணிக்கற்சிகரியுள்ளுருகியொழுகியதெளிபுனற்பேர்யா, றெங்கணுங்கடத்தலரிதெனமயங்குஞ்சாரல்சூழிரதனவெற்பும். (௩௯)

வான்புகத்தெறிக்குமிரலைநீண்மருப்பின் மறிந்துவீழ்தாடிவெம்மறவ, ரூன்றலைப்பொடித்தாலன்னசெஞ்சூட்டுவாரணமொலிக்கும்வைகறையிற், கான்படுவேட்டமாடுவோர்செந்நாமடிவிளிவேட்டலுங்கலங்கிக், கூன்பிறைக்கோட்டுக்களிற்றினமிரியுஞ்சலாதரமென்னும்வான்குன்றும். (௪0)

திவவியாழ்மருட்டுமென்மொழிக்கருங்கட்குறத்தியர்செய்யமென்கரத்தாற், கவலையங்கிழங்குவாரியகுழியிற்கதிருமிழ்செம்மணியிமைக்கு, நவையறுசாரலிடங்தொறுமியக்கர்நங்கையர்முலைநலம்விரும்பி, புவவுவெண்டிங்கணிலாப்பயன்கொள்ளுமுயர்கிரவுஞ்சமால்வரையும். (௪௧)

வேறு.

தேங்கமழ்நறியகூந்தற்சிலம்பெனவதிரவோங்கி
வீங்கிளமுலையிற்சேர்த்தவுத்தராசங்கம்விழப்
பாங்கினிலமரர்மாதர்பந்தெறியமலைநீங்கா
மாங்குயிலகவுஞ்சோலைமருவுவாமனகவெற்பும். (௪௨)

பைந்தொடிக்குறவர்மாதர்பல்லினுற்சுகிர்ந்தநாரிற்
கொந்தவிழ்கோடற்போதுகட்டியகுழங்கன்மாலை
சிந்தியகணவரோடூமுடினர்செல்லுந்தோற்ற
நந்தலின்மின்னிற்றேன்றுநற்றிவாதுகுவாங்குன்றும். (௪௩)

ஆகுமேழ்வரையும்பொன்னங்கிரியெனவழகுவாய்ந்து
போகிதழ்பொருவுமொண்கணரம்பையர்பொருவிறேவர்
சேகெறிமுனிவர்சித்தருறையுளாய்ச்சிறப்பினேடு
மோகையினன்றில்நாமத்தீவினிலுறையுமன்றே. (௪௪)

சந்திகைப்புண்டரீகைமனேசெவைகவுரிசாதி
முந்திராத்திரிகுமுத்துவதியெனவதியுமோரே
ழுந்துதெண்டிரைநீர்ப்பேராறுளவவண்முக்கட்டேவின்
வந்தனைவிரதம்வேள்விவரன்முறைவழாதுசெய்வார். (௪௫)

மறையவர்சிறப்புவாய்ந்தபுட்கலர்வடிவேன்மன்னர்
விறல்கொள்புட்கரர்சீர்மிக்கவணிகர்தன்னியரொன்னும்
பொறையுடைச்சதுர்த்தரோங்குந்ததீசியரொன்பர்பொற்பி
னிறைபெருந்திருவினேடுநோய்நிரப்பின்றிவாழ்வார். (௪௬)

மண்டுசீர்க்கிரவுஞ்சத்திலளவையின்மதியைமானும்
வெண்டயிர்க்கடல்சூழ்போமவ்விரிகடற்கிரட்டியாகத்
தண்டலிருகத்தீவுதழீஇப்புறங்கிடக்குமாங்க
ணொண்டொடிமடவார்மைந்தர்நரைதிரைபுருதுவாழ்வார். ௪௭

ஏட்டைவெம்பசியிற்பாய்ந்தமுடங்குளைமடங்கல்யானைக்
கோட்டினையகழ்ந்துமெல்லென் குருத்துவாய்க்குதட்டவீழ்ந்த
மோட்டொளிமுத்தஞ்சிந்திமொய்கதிருடுக்கள்பூத்த
சேட்டுயர்வானிற்றேன்றுஞ்சாரல்சூழ்சியாமவெற்பும். (௪௮)

அரந்துடைத்தொளிரும்வேற்கட்குறத்தியரந்கண்சாரஞ்
செருந்திருழ்நறியகூந்தல்செங்கையாலுளர்தலோடும்

பொருந்தியபேடைமஞ்ஞைத்தோகையென்றெண்ணிப்புல்லும்
விருந்தினருள்ளம்வவ்வும்வளர்நிகழுதையவெற்பும். (௪௯)

கைத்தளமென்னப்பூத்தகருஞ்சினைவழையிற்றாங்கு
மொய்த்ததேனிறுலிற்பாய்ந்துமுசுக்கலையுடைப்பயிழ்ந்துத்
தத்துதேனருவிபாய்ந்துசந்தனப்படப்பைசாய்க்கு
மத்தமென்றுரைக்குந்தூயவணிமணிக்குடுமிக்குன்றும். (௫0)

கூடியகலவிப்போரினுடைந்திடுங்கொம்பரன்ன
ருடனூம்பிழைந்தடுதென்கொணுரைக்கெனநாணிநக்குக்
கோடியமுகத்தைநோக்கிக்குறவர்வெண்மதியையென்று
நீடிருஞ்சாரல்சூழுமிகரில்கேசரியாங்குன்றும். (௫க)

வேறு.

பாம்புபைத்தாவித்தென்னமென்காந்தட்பருமுகையவிழ்ந்துதோன்றுதலு, மேம்பலிற்றேகைமயின்முகைகுத்தியன்மையிறுறெடுமேகுந், தாம்புடைத்தடக்கைக்கரிவளர்சாரல்சுற்றுபுகிடங்கொளிதயங்குங், காம்புசேர்குடுமியோங்கிடுமாம்பிகேயமாங்கவின்வளர்குன்றும். (௫௨)

அரைபிருட்பொழுதிற்கணவர்பாற்களவிற்செலவயராய்தொடிமகளி, ரிரவெரிமரத்தீயொளியினால்வெருவிமற்றுமோர்நெறியினெகுழியில், விரிகதிரொன்னச்செம்மணிக்குடுமிவெயில்செயக்கண்டுபோக்கரிதாய்க், கரையெறிகாமங்காழ்க்கொளமயங்குஞ்சாரல்சூழ்காமியவெற்பும். (௫௩)

வேறு.

பொன்சுமந்தோங்குகோங்கின்முலையுறழ்பொலம்பூக்கொய்யு
மின்சுனைமருங்குகண்போன்றெழிறிகழ்குவளைகுற்று
மின்குழாந்திரிவவென்னக்குறத்தியர்வழங்கும்விண்டோய்
மன்பெருஞ்சாரல்சூழ்ந்துவயங்கிரோவதமாம்வெற்பும். (௫௪)

வேறு.

எனுமுயர்குடுமிவரைகளோரேழும் விஞ்சையரியக்கர்கந்தருவர், வினையறநோற்றுமும்மலங்கடிந்தமுனிவரர்மேவுறுமிடனுய்ப், பனியிருவிசும்பின்மேவிவாழ்குன்றும் விழவுறும்பல்வளங்கிடந்து, புனிதமாஞ்சாகத்தீவினில்வீற்றுவீற்றதாய்ப்பொற்புடனமரும். (௫௫)

வேறு.

வேறுகைபெலினிதூயசகுமாரிகுமாரிமிக்க
ரோறுகைபர்த்திசெய்பவிக்குகையென்னுமோரேழ்
மாறுடைநதிகளாங்குமருவுமவ்விடத்துவாழ்வோர்
யானார்தற்பருவமையாயிரமெனவிசைப்பர்மாதோ. (௫௬)

வேதியர்மாயர்வேந்தர்மகதர்நல்வணிகராஞேர்
நீதின்மானரசர்பின்னோர்மந்தகரொன்பர்செய்ய
வாதவன்கமலப்பொற்றாளருச்சனைபுரிந்துபோற்றி
யேதமற்றனைன்றாயமண்டலத்தெய்திவாழ்வார். (௫௭)

உரைபெறுசாகத்தீவினளவையினொலித்துவீங்குந்
திரைகுலாக்கிடந்ததூயபாற்கடல்செறிந்துசுற்றும்
விரவுமக்கடலினைப்பண்விண்ணவர்முனிவர்சித்தர்
பரவிடுஞ்சுவேதத்தீவொன்றுளதுபான்மதியிற்றோன்றும். ௫௮

ஆங்கவதரித்தோர்யாருமவிர்மதிநிறத்தர்நாளும்
வீங்குகேள்வியர்தீதற்றமெய்யினர்வெகுளிசெற்றோர்
நீங்கருந்தவத்தோர்நீதிகாழ்கொண்டுகிடந்தநெஞ்ச
ரோங்குநோய்துன்பமூப்புநரைதிரையொழிந்துளாரால். (௫௯)

அங்குவந்துதித்தோர்யாருந்திருமறுமார்பராகிச்
சங்கமழல்கவிழ்க்குநேமிதாரைவாள்கதைவில்லேந்திக்
கங்குல்சித்தொளிருஞ்செய்யக்கவுத்துவமணிந்துநீண்ட
செங்கண்மாலுருவுதாங்கித்திருவின்வீற்றிருப்பர்மாதோ. (௬0)

தண்டலில்சுவேதத்தீவின்வாழுநர்தயங்குதெய்வக்
கண்டிகைமாலைசாத்திக்கடவுள்வெண்ணீறுபூசிப்
புண்டரமூன்றுநெற்றிப்பொலிவுறத்தீட்டியீசன்
தொண்டராயளப்பிலின்பந்துய்த்தினிதிருந்துவாழ்வார். (௬௧)

கண்கவர்சுவேதத்தீவிற்கணிப்பருநகரமுண்டாங்
கெண்டிசைபுகழுநாராயணன்புரமென்னவோங்குந்
தண்டுழாய்முகுந்தன்வைகத்தகைபெறுநகரமற்றொன்
றுண்டதன்றலைமையாரோயிற்றெனவுரைக்கற்பாலார். (௬௨)

காய்கதிர்மணியிற்செய்துகவின்சிறைகிடந்துவான்றோய்
மீயுயர்மாடகோடியுடுத்தவெண்ணிலவுத்திங்கள்
பாயநீள்சதுக்கஞ்சந்திதெற்றிகள்பலவுஞ்சூழ்ந்தோ
ராயிரங்கோடிவெய்யோனலர்ந்தெனக்கதிர்கள்வீசும். (௬௩)

பளிக்குமேனிலங்கள்யாவும்பான்மதிக்காணிற்றெண்ணீர்த்
துளித்திடுமுகடுவேய்ந்தசுடர்மணியிரவியென்ன
வளிக்குலம்வீழுஞ்செய்யகமலங்களலர்ந்துகாட்டும்
வளைக்கையார்மூரல்காணின்மதியெனவாம்பல்விள்ளும். (௬௪)

மங்கையராட்டிற்றெய்வநாரதன்மகதிவீணை
செங்கையாலுளருங்கானந்திங்குழலிசைக்குமோதை
பங்கலும்மேனிநல்லாருடியவமிர்தத்தீஞ்சொ
லெங்கணுமமிர்த்மாரிபொழிந்தெனவிசைக்குமன்றே. (௬௫)

வெயில்சுரந்தொழுகுஞ்செய்யமணிவடங்கிடந்துவிங்கித்
தொயில்வரைந்தோங்கும்வெய்யதுணைமுலைசுமக்கலாற்று
மயிலியன்மாதரோடுமாடவர்மதுவுண்டாடிக்
குயில்குடைந்தாடுஞ்சோலைக்கொழுநிழல்வைகுவாரால். (௬௬)

வெள்ளிவெண்ணிலவுதூங்கும்வெண்ணகையமிர்தமன்னார்
கள்ளமூங்குலையுங்கற்றுங்கழிக்கயன்மருட்டுங்கண்க
ளள்ளிலைபூண்செய்திண்டோளாடவர்கமலம்போழ்ந்து
கொள்ளைவண்டாவியுண்டுகூற்றெனவுலவுமன்றே. (௬௭)

மின்பொழியவிழ்க்குஞ்செய்யமணிவிளிம்பெறியுஞ்சேலம்
பொன்புனைக்கொடியினெல்கும்பொய்யிடையதனில்வீக்கிக்
கொன்படுபெருதிவைவேற்கொலைவிழிமாதர்கண்டோ
ரொன்புனெக்குருகிமாழ்கவிருநடம்புரிவரன்றே. (௬௮)

உருப்பசியரம்பைவேற்கட்டிலோத்தமையுருவப்பைம்பூட்
கருப்புரங்கமழுஞ்செவ்வாய்மேனகைகதிர்த்துவீங்கும்
பொருப்புறழ்முலைகடாங்கிப்பூஞ்சிலம்பரற்றியார்ப்பத்
தெருத்தலைதோறுமின்னிற்றெரிவிலதிரிவரன்றே. (௬௯)

மரமெலாங்கடவுட்பொன்னங்கற்பகமலர்வாய்விண்ட
விரவுநீர்நதிகள்யாவுங்கங்கையாறெழுகுந்தீம்பாற்
சுரபிகடானுந்தேனுத்தூநகைப்பவளச்செவ்வா
யரிவையர்யாரும்வானத்தரம்பையராவரன்றே. (௭௦)

கடையளந்தறியாவின்னவளம்படுநகரிற்காமர்
படுமணிமாடத்தங்கட்பாப்பணைமீதிற்பூமி
மடலவிழ்கமலைசெய்யமலரடிவருடவெய்ய
வுடல்சினத்திகிரிமாயோன்யோகினிலுறங்குமன்றே. (௭௧)

உலகெலாங்கமலத்தோனேடுந்தியங்கமலம்பூத்த
மலர்செழுங்கதிர்கனீட்டுமரகதமணிக்குன்றன்ன
வலர்கதிர்ப்பருதிநேமியாய்பிழித்துளவினேனே
நிலைபெறுபிரமமாகுநிருமலமூர்த்தியாமால். (௭௨)

இமிழ்திரைகொழிக்குந்தூயப்பாற்கடற்கிரட்டியாகி
கமழலம்பொழில்கள்சூழ்ந்துகவின்செய்புட்கரத்திவோங்கி
யமைவுறச்சூழுமன்னகண்டத்தையிருகூறுக்கிச்
சிமையவானணவுமானசோத்திரஞ்சிறந்துவைகும். (௭௩)

வேறு.

ஐம்பதினாயிரமாய யோசனைமற்றவ்வரையி னுயர்ச்சியாகு, மும்பரின்மேற்றலையகலமத்துணையோசனையாகுமுரைத்தவெற்பிற், கம்பமறுமுப்புரத்திற்கண்டத்தைமாவிதகண்டமென்பா, ரிம்பருறுமிப்புரத்திற்கண்டந்தாதகிகண்டமென்பரன்றே. (௭௪)

விழைவுறுமக்கண்டத்தின் விண்டொடுபோகுயர்சினைகள்
விழுதுதூக்கும், பழுமரமொன்றுளததன்பாற் பங்கயத்தோனி
னிதமர்ந்துபவளமேனி, முழுமுதலைநாரணனைத்தேவரொடுமு
தமறைகள்பாடியேத்துங், குழுமியவனுறைவோர்களொன்ப
தினுயிரம்பருவங்குலவிவாழ்வார். (௭௫)

நல்வினைதீவினையின்றிநரைதிரைமூப்பொழிந்துண்மைபொ
ய்ம்மையின்றிச், சொல்லரியவாச்சிரம வருணமின்றியானந்தங்
தொக்குஞானம், வல்லுநராயெல்லோரு மொருதன்மையுடை
யராய்மலத்தினீங்கி, யல்லலறதுன்பமின்பமிவையின்றியமரரி
ன்வீற்றிருப்பரன்றே. (௭௬)

தெரிதருபுட்கரத்தீவி னளவையிற்றெண் ணீர்க்கடல்சூழ்ந்
தொழுகுமிந்த, விரிபுனற்றெண்கடற்கிரட்டிவிளங்கியபொன்னி
லஞ்சூழுமதனைச்சூழ்ந்து, பொருவருலோகாலோகசக்கிரவாள
ப்பொருப்புப்புடையிற்சூழு, மருவியவுட்புறத்தின்வெயிலப்புற
த்திருட்பிழம்புமலியுமன்றே. (௭௭)

ஒளிநேமிவரைப்பரப்போரிலக்கம்யோசனையாகுமுயர்பும
ற்றே, களிசேரெண்டிசைப்பாலரவ்வரையெண்டிசைப்புலனுங்
காத்துவாழ்வர், வெளிமூடுமவ்வரையினப்புறத்திருட்பிழம்
புமிடைந்துசூழு, நளியாரவ்விருட்பிழம்பை யண்டகடாகம்பு
தைத்துநண்ணுமன்றே. (௭௮)

இத்தகையவண்டங்களளவிறந்தகோடியவாமிவைகள்யாவு
ங், கைத்தலத்தினெல்லியெனவுரைத்திடுமிவ்வண்டம்போற்கரு
திக்காண்டீ, ருய்த்திதனைச்சூழ்போதுமாவரணமோரேழுமொ
ன்றுக்கொன்று, பத்துமடங்கதிகமாமனந்தரிவையனைத்தினையு
ம்பரிப்பர்மாதோ. (௭௯)

அவ்வியத்தங்தனைக்கடந்து பேரொளியாய்மகேசுரனுண்
மர்வனந்தத், திவ்வியமாமவ்வியத்தந்தனிலண்டஞ்சிறந்துதிக்கு
மதனுண்மிக்க, வெவ்வமறுமேருமுகட்டியன்மறைதேர்நான்மு
கத்தோனுதிப்பனன்னோன், பவ்வமுறைசூழ்கிடந்தவுலகனைத்
தும்வரன்முறையிற்படைப்பனென்றான். (௮௰)

பிலக்கமுதலானதீவுகளியற்கையுரைத்தவத்தியாய முற்றிற்று.

௮. திருவிருத்தம்—௨௬௮௬.

நாற்பத்தேழாவது

மனுவந்தரமுணர்ந்தவத்தியாயம்.

இறந்திடுமன்வந்தரத்தோடெதிர்ந்திடுமன்வந்தரத்தி னியல்புமாங்குச், செறிந்ததுவாபரந்தோறும்வியாதமுனிவருதிறனுங்கலிகடோறும், பிறந்தறியாத்தனிப்பொருளின்மாணுக்கர் வரன்முறையும்பேசுகென்ன, வறம்புரியுநாரதனுமகபதியுங்கேட்பமாலறையலுற்றான். (௧)

உலகுபுகழ்சுவாயம்புவெய்யசுவாரோசிடன்பேருத்தமன்றீ, ரலகில்திறற்றாமசன்வேலிரோவதன்சாக்குடனென்னவறுவராகி, விலகுவடிவேன்மனுக்கள்காலங்களிறந்தனவீண்டிருந்து வாழ்வோன், புலவுவடிவாட்கைவைவச்சுதமனுவாமெனவெடுத்துப்புகல்வர்மேலோர். (௨)

ஆகியுறுசுவாயம்புமனுநாளிற்றேவதைகளமரர்கோமா, னீதிபுரியேழ்முனிவர்பெயரனைத்தும்வழாதுமுன்ன நிகழ்த்தினேமா, லோதுமிரண்டாமனுச்சீரோங்குசுவாரோசிடன்மற்றவன் காலத்தின், மேதகுவானவர்தம்மைப் பராவதர்நற்றுடிதரென விளம்புவாரால். (௩)

அக்காலத்திந்திரனைவிவச்சித்தென்றறைகுவரேழ்முனிவர்தம்மை, முக்காலங்களுமுணருமூர்ச்சனியற்றம்பமுனிபிராணன் தாந்தன்,றக்கோர்சொல்பிரிடிதனற்றிமிரனியலறுவரிவரொன்றுதாவில், பைக்கோலமணிச்சுடிகைப்பாந்தண்மிசைக்கிடந்தநிலம்பகருமன்றே. (௪)

சொன்னவிரண்டாமனுவின்றேமின்மைந்தர்சயித்திரன்கிம்புருடனென்பர்,பன்னியமூன்றாமனுவின்பழிப்பில்பெயருத்தமனுமவன்றன்காலத், துன்னருஞ்சீரிந்திரன்பேர்சுசாந்தியாமிராசனூஊர்த்துவாகு, மன்னுசுதபன்சவனன்மகன்சுக்கிரனென வேழ்முனிவர்வண்பேர். (௫)

அன்னகாலத்தமரர்சுதாமருயர்சத்தியர்நீள்சிவர்சீர்த்தி,மன்னுபிரமார்த்தனர்பொன்மவுலிவசவர்த்திகளென்றைந்துகொத்தாய்ப், பன்னிருவராயிருப்பர்பகர்ந்திடுநான்காமனுவின் பழிப்பினும, மென்னிலமும்புகழ்ந்தேற்றுந்தாமசனுமிந்திரனைச்சவியென்பாரால். (௬)

விண்ணவரக்காலத்திற்சத்தியர்நற்சுரர்மருவி யரரின்மேன்மை, நண்ணுபுகழ்ச்சுதையரொனுநான்குகொத்தாயிருபதின்மேலெழுவராகி, கண்ணகன்வானத்துறைவர்சோதிதாமன்பிருதுக்காவியன்சி, ரெண்ணரியசயித்திரனிதனதனிகன்பீவானெனவேழ் முனிவராவார். (௭)

சிறப்புடைமைந்தாமனுவின்றிருநாம்மிரோவதனுமகவானு
ம, மறத்துறைபோம்சுகனுகுமமிர்தரறந்தருபாகமிரதர்நானுந்,
துறக்கருஞ்சீர்வைகுந்தர்சுமேதனொனுநான்கு கொத்தாய்தோமி
ல்விண்ணோர், பிறற்கரியதுறக்கத்தினிருபதின்மேலெண்மராய்
ப்பெரிதுவாழ்வார். (௮)

இரணியரோமன்றிகழுந் தேவார்த்தியிலங்கொளிசேருர்த்
தவாகுக், கருணைபுரிந்திடுதேவவாகுவியனற்சுதாமன்பர்ச்சனி
யன்காம, ரருள்புரிமாமுனியென்னவேழ்முனிவர்பெயராருமம
னுவினமம், பொருவருஞ்சாக்குடனுகுமிந்திரன்பேர்மனோசவ
னென்றுலகம்போற்றும். (௯)

ஆர்த்தியர்நற்பிரபாசர் பவியரருட்பிர்தானர் மானுபாவர்,
வாய்த்தவிலேக்கியனொன்று மாறுகொத்தாய்ப் பத்தொன்பான்
பெயராய்வானோ, ரோத்தவுறைகுவரறங்கூர்சுமேதனியறோர்விரி
சனவிட்டுமான்சீர், காத்தருளுத்தமன்மதுவத்திரிகருணைச்சயி
ட்டுனுவேழ்முனிவராவார். (௧௦)

முழுதுலகுமதிக்கவிகைநிழற்றுசுவாரோசிடனைமுதலாய்ப்
பைம்பொ, னெழுவுறழ்தோளிரோவதனையீருநால்வருங்கமலத்
திறையைமானு, மழையுறழுங்கொடைத்தடக்கைச்சுவாயம்புமம
னுவினருண்மதலையாய, தொழுதருசீருலகேத்தும்பிரியவிரதன்
குலத்திற்றோன்றினோரே. (௧௧)

வேறு.

ஏழாமனுவைவச்சுதனென்றேதுவர்மகவான்
றுழாதுயர்பொன்னுடினிதளிக்கும்புரந்தரனுஞ்
சூழ்செஞ்சுடராதித்தியர்வசுக்களுருத்திரர்சொல்
வாழ்வாமருத்துவரொன்றிவரொருநால்வகையாவார். (௧௨)

அன்னோர்கண்முப்பதின்மூவர்களவராரருள்வசிட்டன்
றன்னேரொறிபுகழத்திரிசமதக்கினியருள்கூர்
பன்னூலுணர்தெளிகோதமன்பாரத்துவமுனிவன்
றென்மாமறைதெரிகாசிபன்றுகடீர்கவுசிகனே. (௧௩)

எனுமாதவரிக்காலையினேழ்மாமுனிவரர்வெம்
மனுவாயசுவாயம்புவின்மன்வந்தரமதனிற்
கனிவாயிதழாகூதிவயிற்றிற்கடல்வண்ணன்
வினைதீர்வருசசிகேசனெனத்தோன்றினன்விழைவின். (௧௪)

சுவரோசிடமன்வந்தரமதனிற்றுடிதப்பே
ரவரோடகலல்குற்குயில்வாயினஞ்சனவண்ணன்
றவர்நண்புறுதுடிதப்பெயரிமையோரொடுதானு
மவர்வெண்மதிபோலத்துடிதப்பேரினுதித்தான். (௧௫)

புகழுத்தமமன்வந்தரமதனிற்புயல்வண்ணன்
மகிழ்சத்தியனெனும்வானவரொடுசத்தியைவயினி
லிகலுற்றிடுமவுணர்க்கிடரெய்தத்திறலோடுந்
தகைபெற்றுயர்தருசத்தியனெனவந்தவதரித்தான். (கசு)

மன்னும்புகழ்பெறுதாமசமன்வந்தரமதனிற்
பின்னற்றிரைதவழ்பாற்கடனடுவெட்டுயில்பெரியோ
னுன்னற்கருமரியேழினிலுயர்வானவரோடும்
பன்னற்கருமறைதேடியவரியாகவுற்பவித்தான். (கஎ)

மாணுத்திசைபெறுரேவதமன்வந்தரமதனி
லொளிர்பொலிசம்பூதிதனன்மாமகவாகச்
சேணிற்பொலிசம்பூதனெனுந்தேவர்களொடுமா
லேனுற்றுயர்சம்பூதனெனத்தோன்றினனன்றே. (கஅ)

மல்லற்றிருவளர்சாக்குடமன்வந்தரமதனின்
வில்லிற்றிகழ்புருவக்கொடியிருண்டைக்குயில்வயினிற்
சொல்லற்கரும்வைகுந்தனெனுந்தேவர்கடொகையுள்
வெல்லற்கரும்வைகுந்தனெனத்தோன்றினனன்றே. (ககூ)

வைவச்சுதமன்வந்தரமதனிற்புவிவாழக்
கொவ்வைக்கனியிதழ்வாயதிதிக்கோர்குலமகவாய்ப்
பவ்வக்கடலிடைகண்டுயில்பச்சைப்புயலனையான்
செவ்விக்குறளுருவாகவுதித்துப்பகைசெற்றான். (உ0)

வேறு.

பொருவருமெட்டாமனுவைச் சாவன்னியென்றுரைப்பர் புகலுங்காலே, மருவியசிரிங்கிரனே மாவலியென்றினிதுரைப்பர் வானோர்யாரு, முருகவிழ்தார்ச்சுதபர்திறலமிதருயர்முக்கியரா மூன்றுகொத்தாய், தெரிவருஞ்சீரோரொருகூ றிருபஃதாய்விண்ணினிடைச்சிறந்துவாழ்வார். (உக)

கீர்த்திமான்காலவனோடிராமன்சீர்த்திக் கிருபனோடச்சுவத்தாமன்வியாதன்யாரு, மேத்தருஞ்சீர்மிருகசிரங்கனென்னுநாமத்திருந்தவத்தோரேழ்முனிவராகிவாழ்வர், வாய்த்ததிறலொன்பதாமனுவினமம்வழங்குதக்கசாவனனன்மகவானுமங், கோத்தபுகழ்ச்சுதையுலகமுழுதுந்திற்றுங்குணமுடையற்புதனென்றுங்கூறுவாரால். (உஉ)

பாரவிறன்மரீசிகற்பர்சுமதரென்றுபகர்ந்திடுமூவகையராய்விண்ணோர்யாரு, மோரொருகொத்தொருபதின்மேலிரண்டதாகி யும்பருலகினில்வாழ்வர் சவனனோங்கு, சீர்கெழுநற்றுதிமானவ்வியன்றன்னோடும் வசுமேதாதிதிற்சோதிட்டுமான,

பேர்புனைசத்தியனென்னுமுனிவரேழு பிறங்கொளிசேர்மாதவராய்ப்பெரிதுவாழ்வார். (௨௩)

பழிப்பறுபத்தாமனுவெவ்வுலகும்போற்றும் பணிபிரமசாவனனன்மகவானும, மொழிப்பரியபுகழ்ச்சாந்தியென்பர்நாளு மோங்குசுகர்மனவிருத்தனெனவிரண்டாய்த், தழைத்தபுகழமரரிருகொத்தாய்நூறுபகுதியாய்விண்ணகத்திற்சார்வனென்ன, விழைத்தமறையொருநான்குமங்கமாறு மிதிகாசபுராணமுடனியம்புமன்றே. (௨௪)

அறம்புரியும்விட்டுமான்சுகிர்திசத்தியறைதருமாபோமூர்த்திநரபாகன்சீர், சிறந்தபுகழ்ப்பிறிதிமோசனொடுந்தீதிறவச்சத்தியகேதென்னவோதுந், துறந்ததவக்கிழவரொழுமுனிவராகத் தோன்றிடுவர்பதினொன்றுமனுவினும, மறங்கெழுபேர்த்தருமசாவனியனென்பர்மகவானைவிரிடனெனவழங்குவாரால். (௨௫)

தேவர்விகங்கமர்செறிந்தகாமகோபர்நிர்வாணருசிகனென மூன்றுகொத்தாய், மேவியொருகொத்தினுக்குமுப்பானாகிவிளங்குவர்நிச்சானொடுமக்கினிதேசென்றேல், பாவமறும்வபுட்டுமன்விட்டிணிதிவேள்வி பயிலுமறையாருணிநல்லவிட்டுமான்சீர், தாவில்புகழனகனெனுமுனிவர்தாமே தகைபெறுமேழ்முனிவனெனச்சாற்றுவாரால். (௨௬)

பன்னிரண்டாமனுவீசன்புதல்வனானபழிப்பறுசீர்ச்சாவன்னிமகவானுமம், பொன்னுலகுதனியளக்குமிருதுதாமன்புகலமரரரிதருரோகிதர்பொற்பார்ந்த, மன்னுதமோனிசர்சுகன்மர்சுராபரென்ன வைந்துகொத்தாய்ப்பத்துவகையாகவாழ்ந்து, கன்னல்புளித்திடமொழியுமரம்பைமாதர்கவிரிதழ்கூட்டுண்டினிதிற்களித்துவாழ்வார். (௨௭)

தாவில்புகழ்த்தவிசியொடுஞ்சுதபன்வெய்யதபோமூர்த்திதபொதிநீடுதிதீவேள்வி, யோவருஞ்சீர்த்தபோதிருதிதபோதானப்பேரூர்வோனொடிங்கிவரேழ்முனிவராவர், மேவுதிறற்பதின்மூன்றுமனுவினுமருரோச்சியனு மிந்திரன்பேர்விளங்கக்கூறிற், றேவர்புகழ்திவோற்பதியென்றுலகமேழுந் தெளிந்துமறைபகர்ந்ததெனச்செப்புமன்றே. (௨௮)

விண்ணவர்சுத்திரர்மாவிறற்சுதர்மர்வீங்கு சுதன்மரெனமூன்றுகொத்தாய்ப்பிரிந்துபின்னு, நண்ணுவரோர்முப்பத்துமூன்றுபாலாய்நிருமோகன்தத்துவத்தைநயந்துகண்டோன், புண்ணியநற்பிரமகம்பனிருச்சுகன்சீர் பொங்கொளிசேர்திதிமானவ்வேயன்ஞானங், கண்ணியிடுசுபதனெனுமுனிவர்விண்ணிற்கலந்திடுமேழ்முனிவராய்க்களித்துவாழ்வார். (௨௯)

பாவுபுகழ்பதினான்காமனுவினுமம்பவுமியனுமிந்திரன்பேர்
சுசியின்றோர்கள், ளிரவுநிறம்சாக்குடர்நற்பவித்தரோடுகனிட்
டர்பிராசிரவர்சர்விருத்தரொன்ன, வுளைபெறுமோரைந்துகொ
த்தாயுறைவர்நிளக்கினிவாகுச்சுசியுடனேண்சிர்த்தி, மரகதனுக்
கினித்தானிருத்தனேடுவாழுசிதனெனவேழுமுனிவர்வாழ்வார்

உரைத்திடுமிப்பதினான்குமனுவும்வியினொருபகற்போதொ
ழிந்திடுமொண்கமலத்தோர்கள், வரைத்தகங்குல்பகல்போலவி
ளைந்துநாலுசதுர்யுகமருவியிடும்வாசுதேவ, னிளைத்தபொறிப்ப
டச்சேடன்வேனில்வேளா நேமியுடைப்பிரத்துமினன் பிராமி
யென்ன, விளைத்துளவோன்சதுரவியூராகுமந்தமெய்ப்பொரு
ளோவியாதனெனவிளம்புவாரே. (௩௪)

மனுவந்தரமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௨௭௪௭.

நாற்பத்தெட்டாவது

வியாதர்வரலாறுரைத்த வத்தியாயம்.

பொருந்தியவைவச்சுதமனுவுலகம்புரக்குநாண்முதற்றுவா
பரத்தில், வருந்துறுசுவாயம்புமனுவியாதன்மற்றையதுவாபரந்
தன்னிற், றிருந்தியவுயர்சீர்ப்பிரசாபதிவியாதன்சிறந்தமூன்றாந்
துவாபரத்தி, லருந்தியவுசனும்வியாதனான்காகுந்துவாபரத்தந்
தண்ணன்வியாதன். (௧)

அறைந்திடுமைந்தாந்துவாபரமதனிலாதபன்வியாதனாறுக
ச், சிறந்தொளிதயங்கத் திகழ்துவாபரத்தின் மிருத்தியுவியாத
னேழாய்ப், பிறங்கியவொளிசேர்துவாபரமதனிற் பெய்கழ
லிந்திரன்வியாத, னிறங்கிளரெட்டாந்துவாபரமதனினிகரொறி
வசிட்டனல்வியாதன். (௨)

ஒன்றொழிபத்தாந் துவாபரயுகத்தி னேஞ்குசாரச்சுதன்வி
யாதன், மன்றவப்பத்தாந்துவாபரமதனில்வளர்திரிதாமனல்வி
யாதன், றுன்றுசீர்ப்பதினொன்றாந்துவாபரத்திற்றுகளறுவிடவ
னல்வியாத, னின்றபன்னிரண்டாந்துவாபரமதனினிகழ்சததே
சனல்வியாதன். (௩)

பத்தின்மேன்மூன்றாந்துவாபரமதனிற்பமுநறுதருமனல்வி
யாத, னுய்த்திடுபதினான்காந்துவாபரத்திற்றரக்குவென்பவனு
யர்வியாதன், சித்திகூர்பதினைந்தாந்துவாபரத்திற்றிகழ்திரியா
ருணிவியாதன், முத்திகூர்பதினாறாந்துவாபரத்திற்றனஞ்செய
னறுமறைவியாதன். (௪)

ஒருபதினேழாந்துவாபரமதனிற் கேமகன்வியாதனென்று ரைப்பர், வருபதினெட்டாந்துவாபரமதனில்ருதுஞ்சயன்வியா தனுய்வழங்கும், பொருவில்பத்தொன்பான்றுவாபரமதனிற்பர த்துவாசன்புகழ்வியாத, னிருபதென்றுரைக்குந்துவாபரமதனி ற்கோதமன்வியாதனென்றிசைப்பார். (ரு)

இருபதின்மேலொன்றாந்துவாபரத்தில்வாச்சுவான்வியாத ன்மேலிரண்டா, மொருபதிற்றிரண்டாந்துவாபரமதனிற்சூட்டு மாயணனுயர்வியாதன், மருவிருபான்மூன்றாந்துவாபரத்திற்றி ரணவிந்தாமரைவியாதன், கருதருநான்காந்துவாபரமதனிற்க டவுள்வான்மீகிநல்வியாதன். (சு)

போற்றுமையைந்தாந்துவாபரமதனிற்பொருவறுசத்திசீர் வியாதன், சாத்திருபத்தாறாந்துவாபரத்திற்கைபெறுபராசர ன்வியாதன், யேற்றமூவொன்பான்றுவாபரத்தினைதீர்சாதுகன் னன்றிகழ்வியாதன், தோற்றுநாலேழாந்துவாபரமதனிற்றுகள றுவியாதனேவியாதன். (எ)

பொன்வரைவிழுதுவிட்டெனக்கிடந்தப்புரிசடையந்தணர் தொழுதுப், பன்னருமறையைநான்குகூறுகப்பகுத்தனன்பழம றைவியாத, னன்னநன்மறையினுயரிட்டத்தினிதினிலரசுவீற் றிருக்குங், கன்னன்மென்மொழியாள்பங்கனேயெல்லாக்கட்வு ட்குங்கடவுளாங்கடவுள். (அ)

சுரதனற்றமனன் சுகோத்திரன்மறைதேர் கங்கணன்றுளங் குலோகாதி, பராவரும்யோகியிந்திரன்சையகி டவ்வியின்பகர் ததிவாகன், விராயசீர்விடபன்பிருகுவோடுக்கிரதபன்விறலத் திரிவாலி, தராதலம்புகழுங் கோதமன்வேத சிரீடபன்றயங்கு கோகன்னன். (கூ)

வருகுகாவாசான்சிகண்டிநற்சடாம லியன்புகழ்வளரட்ட் காசன், பொருவிருருகனேடிலாங்கலிசுவேதன்சூலிதிண்டாமு ண்டிபுகழ்சேர், தருசயிட்டுணுநீள்சோமதன்மன்சீர்தழைலகு லீசனென்றிவர்க, ளிருபதோடெட்டாங்கலியுகந்தோறுமிறை யருளான்மறைவிரிப்பார். (க0)

இன்னரோரொருவர்தமக்குமாணக்கர் நால்வர்மற்றினிதி ன்வந்தெய்தித், துன்னருங்கலியின்மறைப்பொருள்விரிப்பனொ ன்றிவைமுழுவதுந்தொகுத்துக், கன்னவிறிரடோளிந்திரன்வீ ணைமுனிவரன்கேட்டிட்க்கரியோன், சொன்னவாறனைத்துஞ்சு வுனகர்முதலாமுனிவரர்க்குரைத்தனன்சூதன். (கக)

வாழியிக்கதையின்விழுப்பொருளுணர்ந்தோரெழுதினோர் மகிழ்வொடிங்கேட்டோ, ருழ்முறைமையுரைத்தோர்படிக்குநரிக ளிலோரெழுத்தாயினுமுணர்ந்தோ, ராழ்கடலுடுத்தவுலகளித் தந்தீங்குதவிலவாயருமகப்பயந்து, காழ்பழுத்திருண்டகறைமிட் றெந்தைகனைகழல்நீழல்வீற்றிருப்பார். (கஉ)

வியாதர்வரலாறுணர்த்தவத்தியாய முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—உஎஉ௬.

பூருவகாண்டம்

முற்றிற்று.

சிவமயம்.

கூர்மபுராணம்.

உத்தரகாண்டம்.

கடவுள்வாழ்த்து.

விழைவொடுதங்கைசென்னிமிலைந்தகூன்பிறையைநோக்கி
முழுமதிசெய்துமென்றூர்கோட்டினைமுறித்துத்தாங்கித்
தொழுதகுமன்பருள்ளத்தறியினிற்றுவக்குண்டோங்கு
மழைமதக்களிற்றின்செய்யமலரடிவணங்கல்செய்வாம். (க)

சீர்கெழுமமிர்தங்தெய்வமடந்தையர்நாகலோகத்
தேர்கெழுமகளிர்க்கியப்பணுமணியிமையோர்நாட்டு
வார்முலையவர்க்குநாகமடந்தையர்வழங்கச்செம்பொன்
மேருவிற்குழையவாங்கும்விண்ணவற்போற்றல்செய்வாம். (உ)

திங்கண்மாமணியிற்செய்தநிலத்தினிற்றெய்வநன்னீர்க்
கங்கைமென்றிவலைமாந்திக்கண்கவரழகுபூத்துக்
கொங்குகொப்புளிக்கும்பொன்னங்கொடிநிகரிமயவல்லி
பங்கயமருட்டுஞ்செய்யப்பதமலர்சென்னிவைப்பாம். (ங)

தாருகனுட்லம்போழ்ந்துதடிசுவைத்துதிரமாந்தி
யீருள்வாய்ப்பெய்துபுன்றூலென்பொடுகுதட்டிழைவா
வார்குடர்விழுங்கிமாறுப்பசியொடுங்கடைவாய்நக்கும்
போர்கெழுசுடர்வேலெந்தைபொன்னடிசென்னிவைப்பாம். ச

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

முதலாவது

வெதிரிகாச்சிரமத்தில்மகேசன்றோன்றியவத்தியாயம்.

குவிமுகிழெருக்கங்கண்ணிக்குழகனேகடவுளென்று
யவனெவனவன்றூள்சேர்க்குஞ்ஞானம்யாதறைதியென்னப்
பவமறக்கனிவாய்விள்ளுஞ்சூதமாமுனிவற்பாராச்
சவுனகாராதியாயமுனிவரர்சாற்றினூரால். (க)

சாற்றியமுனிவரோடுந்தவத்துறைபோயசூத
னூற்றருந்தவத்தின்மிக்கவருமறைவியாதன்வைகுந்
தாற்றிளம்பூகவேலிச்சாலையினண்ணியேத்தத்
தோற்றியமுனிவன்செய்யதுணையடிவழுத்திச்சொல்வான். (உ)

நயிமிசாரணியமேவுநற்றவமுனிவற்கெந்தாய்
வயிரவாட்படையோன்வீணைநாரதனுணரமாயோன்
செயிரறவுரைத்தஞானமெனக்குநீதெரித்தவண்ணம்
பயில்வுறவுரைத்தியென்னப்பணிதலுமுனிவன்சொல்வான். ௩

ஆய்மலர்க்கொன்றைவேணியந்தணர்ப்போற்றியீசன்
பாயமும்மலங்கள்செற்றசனகனைமுதலாம்பண்பி
னேயகன்முனிவர்க்கோதுமிருளறுஞானந்தன்னைத்
தூயமாமுனிவர்கேட்பவியாதமாமுனிவன்சொல்வான். (௪)

ஈண்டுறும்போலவையுற்றிருந்தவக்கிழமைபூண்ட
மாண்டகுசனகன்வெய்யவசிட்டனைமுதலாயுள்ளோர்
வேண்டினராகித்தூயவெதிரிகாச்சிரமத்தன்பு
பூண்டருந்தவஞ்செய்காலைநரனுநாரணனும்போந்தார். (௫)

போந்தநாரணனைவேள்விமுனிவரர்போற்றல்செய்ய
வாய்ந்தநான்முனிவருள்ளங்குறித்தவையறைதியென்னப்
பூந்துழாய்முடியோன்கேட்பப்பொங்கொளிக்கதிர்கணீட்டுங்
காந்தெரியூட்டியுண்ணுங்கடவுண்மாமுனிவர்சொல்வார். (௬)

அருந்தவஞானபாதமறிந்திடவறைதியென்னப்
பொருந்தியமுனிவன்செங்கேழ்ப்பொழிகதிர்நேமிசங்க
மிருங்கதைசிலைவாடாங்கிவானவர்க்கமுதமீவான்
கருங்கடல்கடைந்தஞானக்கடவுளாய்த்தோன்றக்கண்டார். (௭)

சேகெறிதவத்தின்மிக்கநரனெனுமுனிவன்றீதி
ளுகிளந்திங்கட்கண்ணிவேணியுநாட்டமூன்று
மாகிவெம்புலித்தோலாடையசைத்திடும்பவளக்குன்று
மேகனாயகனிற்றோன்றிநிற்பதுமினிதுகண்டார். (௮)

காண்டலுமுவகைபொங்கிக்கடலிடைக்கவிழ்த்துப்பன்னாட்
டேண்டியநிதியமுன்னம்வந்தெனத்திருமாலாதி
மாண்டகுமுனிவர்யாருமனமகிழ்தூங்கியேத்த
வீண்டிவர்புகுந்ததென்னைமுனிவநீயிசைத்தியென்றார். (௯)

என்றலுங்குடங்தம்பட்டுநாரணனிருகைகூப்பி
நன்றறிமுனிவர்யாரும்ஞானபாதத்தினுண்மை
மன்றவென்றேறுடுகேட்பான்போந்தனர்மனோவாக்கெய்தாத்
துன்றிருஞானநின்னையன்றியார்சொல்லற்பாலார். (௧௦)

பங்கயத்தவிசின்மேவும்பண்ணவனரன்மாலென்ன
வெங்களோடொருவனாகவிருந்துமுன்னெம்மையீன்றுந்
தங்குமோரொளியாய்வெய்யதழற்பிழம்பாகிநின்ற
புங்கவமுனிவர்க்கந்தவுண்மையைப்புகறியென்றான். (௧௧)

மையவாய்கிடந்துநீண்டமதர்நெடுங்கண்ணிபங்கன்
செய்தவமுனிவர்யார்க்குஞ்சிற்பொருளுரைக்குமேல்வை
பையராச்சுடிகைநெற்றிப்பருமணிமுகடுவேய்ந்த
வையபூந்தவிசொன்றுங்குவிசும்பினின்றணைந்ததன்றே. (௧௨)

சேட்டிளம்பருதியென்னத்திருமணிமுகடுவேய்ந்த
மோட்டிளஞ்சிங்கப்பொற்றட்டவிசினின்முகிழ்த்துவீங்குங்
கோட்டிளமுலையபொன்னங்கொடிவளர்பவளக்குன்று
நாட்டமூன்றுடையபெம்மானன்குவர்திருந்தானன்றே. (௧௩)

இருந்தபின்முகுந்தன்றன்னைமுனிவரர்தம்மையெல்லாம்
பொருந்தியநோக்காற்றூயபரிசத்தாற்புகலும்வாக்காற்
றிருந்துபாவனையாலென்றுந்திகழவுத்திரியாளுரும்
விரிந்தவெம்பாசநீக்கிமெய்ப்பொருளுரைக்கலுற்றான். (௧௪)

வெதிரிகாச்சிரமத்தில்மகேசன்றேன்றியவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௧௪.

இரண்டாவது

சாங்கியயோகமுரைத்த வத்தியாயம்.

விண்ணவரியக்கர்சித்தர்முனிவரரோனும்வெய்கா
யெண்ணுதற்கரியதாகியினிதினிதுணர்ந்தோர்யார்க்கு
நண்ணும்வெம்பிறவிதீர்க்குஞானத்தைநவையில்கேள்விப்
புண்ணியர்க்கல்லால்நெஞ்சம்புலப்படப்புகலொணுதால். (௧)

தெண்டிரைக்கடலிற்றுஞ்சுஞ்செங்கண்மான்முடியிற்சூடுந்
தண்டுழாய்க்கமழும்பொற்றட்டழல்படுநுகற்கணெம்மா
னண்டருமின்னுந்தேறுவருமறைப்பொருளைநீவிர்
தொண்டரானமையானன்கிற் சொல்வனென்றுரைக்கலுற்றான்.

சொச்சமாய்ச்சாந்தமாகிச்சூக்கமாயொன்றாய்நாளு
நிச்சமாய்ஞானமாகியெங்கணுநிறைந்ததாகி
யச்சமிறமத்துக்கப்பாலாயகேவலமாயென்று
மெச்சமிலான்மாவென்றேன்மினிதுளதென்பர்மேலோர். (௩)

அந்தரியாமியாகவுறைவதுமதுவேயாகு
நந்தலில்புருடன்காலநற்றழலவ்வியத்த
மைந்துடைப்பிராணனீசனனைத்துமற்றிதுவேயென்னச்
சுந்தரமறைகள்யாவுந்தொகுத்தெடுத்துரைக்குமன்றே. (௪)

உரைத்திடுமான்மாமாயைச்சிமிழ்ப்புறவுலப்பில்காலம்
வரைத்திடவரியயாக்கைமருவிடுமருவினாலும்
பரித்திடுமுடலந்தன்னையெடுப்பதுபழிபயில்யாக்கை
தரித்திடப்பண்ணுவோனுமன்றெனச்சாற்றுவாரால். (௫)

பஞ்சபூதங்களென்றுபகருஞானேந்தியங்க
ளைஞ்சுமன்றுளைத்தகன்மேந்தியங்களோரைந்துமன்று
மெஞ்சலில்சத்தமாதிவாக்காதியிவைகளன்று
செஞ்சமேயமனுதியனறுதிகழுமவ்வியத்தமன்றே. (௬)

உழிதருபிராணனன்றுகருத்தனன்றுண்போனன்று
தழைபிரகிருதியன்றுபுருடனுமன்றுசால
விழைவுறுமாயையன்றுவிளங்கியவான்மாயாருந்
தொழுதருமறைகளேத்துஞ்சுத்தசைதனியமாமால். (௭)

வெயிலுநன்னிழலும்போலவிளங்கியசகத்தினேடும்
பயிறருமான்மாவென்றும்பகர்ந்ததற்குபாதியின்றித்
துயின்மலமுண்மைத்தென்னிற்சொல்லுதற்கரியவாய
மயர்வறுசன்மகோடிமருவினுமுத்தியின்றே. (௮)

முத்தராமுனிவரான்மாமுற்றியவிகாரமின்றி
தத்துவங்கடந்துநின்றதனிப்பொருளாகியொன்றாய்
நித்தமாயசலமாகியெங்கணுநிறைந்துநின்ற
மைத்தவானவத்தைநீங்கும் பொருளெனமனக்கொள்வாரால்.

யானுயர்கருத்தனென்மேலிலைத்ததுதடித்ததென்று
நோன்மையேன்வெகுளிமிக்கேனெனநனிநுவலுகின்ற
பான்மையாணவத்தின்செய்தியதனெடும்பயின்றவாற்று
லினமிலான்மாமற்றையிவைகடன்செயலதென்றும். (௧௦)

பொருவில்வேதாந்தத்துண்மையறிந்தவர்புகன்றவான்மா
விரிதருவியாபியென்றுமேவுதத்துவங்கட்கெல்லாங்
கரியதுவென்றுமூலப்பகுதியுங்கடந்துநின்ற
துரியமதாகுஞ்சுத்தவெளியென்றுஞ்சொல்லுவாரால். (௧௧)

யாக்கையிற்சிமிழ்ப்புண்டெல்லாவுருவமாய்க்கருவினெய்திப்
போக்கொடுவரவுசெய்தல்பொருந்துமஞ்ஞானத்தாகு
மாக்குமஞ்ஞானமேதென்றறைந்திடிற்பகுதியோடு
நீக்கருந்தத்துவந்தைவேறென்றுய்நினைதலாகும். (௧௨)

நித்தியமாகியொன்றாய்வியாபியாய்நிறைந்துநின்ற
சுத்தமாய்ப்பரமமாகிச்சுயம்பிரகாசமாகித
தத்துவங்கடந்துநின்றபுருடனுங்காரந்தன்னே [தும்.
டொந்துத்தான்வேறென்றென்னுன்கருத்தன்யானென்னவோ

பிரிந்தகாரணத்தினேடுகாரியமாகிமேவித்
திரிந்தியசகத்துக்கெல்லாங்காரணமாகித்திதி
லரும்பிரகிருதியாகிப்பிரதானமவ்வியத்தம்
பொருந்தலாலான்மாத்தன்னைப்பரமெனப்புலப்படாதால். ௧௩

தன்னைத்தானென்றுதேறவுணர்கலாதாகித்தாழ்ந்து
பின்னல்வெண்டிரைசேர்நீரிற்பிறங்கதிருமிதிபோல
மன்னியயாக்கைதன்னைத்தானெனமயங்கிமாழ்கித்
துன்னியவின்பதுன்பவல்லியிற்றுவக்குண்பானால். (௧௫)

வருந்துசெய்காமமாகியுடற்பகைவயங்குமான்மாப்
பொருந்தியவியல்பதன்றுமயக்கத்திற்புணர்ந்ததாகும்
விரிந்தவெம்பிறவிநோய்க்குக்காரணம்விளங்கமுன்னம்
புரிந்துதானிழைக்கப்பட்டபுண்ணியபாவமாமால். (௧௬)

நித்தியமாகுமான்மாவேகமாய்நிகழ்த்துமாயா
சத்தியாயளப்பில்பேதமாமுறுபேதஞ்சாற்றில்
வைத்தநீர்க்குடங்கடோறுந்தோன்றிடுமதியம்போல
வுய்த்திடுமுபாதிதன்னாற்பலவுருவந்தோன்றும். (௧௭)

தாழ்படுதேக்குவெந்தகரும்புகைக்கழுமப்பற்ற
வேழ்பகலூட்டினாலுமிருவிசும்பழுக்குறாதால
வாழிமற்றதுபோலான்மாக்கரணங்கண்மருவிநின்றுந்
தாழ்தருமவற்றின்பண்புசார்ந்திடாதொழுகுமன்றே. (௧௮)

வெளிற்றறிவெறிந்தமெய்ம்மைமுதுக்குறைவுடையமேலோர்
தளிர்த்தவிச்சகத்தையெல்லாந்தற்பரமாகக்காண்ப
ரளிக்குலம்வீழுங்கண்ணியரவெனமருளுமாபோற்
களித்தபுல்லறிவினோரிச்சகத்தினைச்சகமாய்க்காண்பர். (௧௯)

விகாரமுங்குணமுமின்றிவியாபியாய்சித்தாயொன்றாய்
மகானெனுந்தத்துவத்தைக்கடந்துயர்மாயையூடு
புகாதொளிர்சோதிதன்னைப்புன்மையோர்சகமாய்க்காண்பர்
தகாததீவினைகள்செற்றோர்தற்பரமாகக்காண்பார். (௨0)

அடுத்ததுகாட்டுந்தூயப்பளிங்குபோலான்மர்முன்னர்த்
தொடுத்ததுகாட்டுமிந்தச்சுடரினைமறையாற்கேட்டு
மெடுத்தநல்லுததிதன்னாலளவையாலெண்ணிநெஞ்சிற்
படுத்தியவுருவந்தானாய்ப்பாவிக்கிற்பரமதாவான். (௨௧)

தன்னுள்ளேசகத்துமந்தச்சகத்துளேதானுமாகப்
பின்னமதின்றியென்றுகாண்குவன்பிரமன்றன்னின்
மன்னியதானலாமைமற்றென்றுங்காண்கலானேன்
றன்னகாலத்தின்முத்தனாகுவன்யோகியன்றே. (௨௨)

உளத்துறைகாமமாதியொழிவதென்றுலப்பில்பூதந்
துளக்கறவொன்றில்வைகுமெனவொன்றுதொகுத்துநோக்கும்
விளக்குறுமான்மாநித்தம்வெறுஞ்சகமனித்தமென்னத்
தெளிக்குமென்றின்றேமுத்தனாகுவன்சிறந்தயோகி. (௨௩)

கங்கையைமுதலவாயபற்பலநதியுங்கல்லென்
பொங்குதெண்டிரையவாரிபுகுதிலொன்றாகுமாபோற்
றங்கியஞானபாதஞ்சார்ந்திடலான்மாயாவுந்
சிங்கலிற்பிரமந்தன்னிற்பிறிதின்றியொன்றாய்ச்சேரும். (௨௪)

ஆதலாற்பிரமமொன்றேநித்தியமலகைத்தேரிற்
பேதுறத்தோன்றுநீரிற்பிரபஞ்சமருண்டுதோன்றுந்
தீதுறுமனத்தர்கியபிரபஞ்சம்பிரமம்வேறென்
றோதுவரொக்கநோக்கும்யோகியரொன்றாய்க்காண்பர். (௨௫)

நிருமலமாகியொன்றாய்நித்தியமாகித்தூய்தாய்
மருவிடுஞானஞானமொழிந்ததுமம்மர்பூத்து
விரியுமஞ்ஞானமென்றுஞ்சடமென்றுமெய்ம்மைபூண்டோ
ரொருவிடுமாயையென்றுமோதுவருணர்ந்ததக்கோர். (௨௬)

இன்னணம்பிரமமாகுஞ்சாங்கியமிசைத்தோமீதின்
மன்னுறமனத்தைச்சேர்த்தன்மாண்புடையோகமாகும்
பன்னருஞ்ஞானம்யோககாரணம்பழிப்பில்யோகந்
துன்னுதற்கரியஞானகாரணமாகித்தோன்றும். (௨௭)

யோகியரடைந்தமுத்திச்சாங்கியருற்றுவாழ்வர்
சேகெழியோகத்தோடுசாங்கியத்தெளிவுதன்னை
யேகமாயெண்ணினோரைத்தத்துவமறிந்தோரென்னச்
சோகமோகங்கள்செற்றதொல்லைமாமுனிவர்சொல்வார் (௨௮)

அரும்பெறல்யோகநன்கிற்கைவந்தோரவற்றின்போகம்
விரும்புமின்முத்தியெய்தார்வெறுவெளியதனிற்றோன்றும்
பரம்பொருளாகுமென்னைப்பாவித்தோர்முத்திசேர்வர்
விரிந்திடுபிரமம்யானேயெனமறைவிளம்புமன்றே. (௨௯)

உலகெலாம்யானேயாகியுள்ளுமாய்ப்புறம்புமாகி
யலகறுமுயிர்களைல்கியளித்தவைதுடைத்தல்செய்யு
நிலையுறும்விச்சைக்கென்றுங்கரியதாய்நிற்றன்ஞானக்
கலையுணர்முனிவர்காண்பரேனையோர்காண்டல்செய்யார். (௩௦)

பற்பலகந்தமாகியிரசமாயுருவாய்ப்பாய
வற்புதப்பரிசமாகியலைத்துளவொலியுமாகிச்
சிற்பரமாகியொன்றாய்ச்சிறந்தநித்தியமாய்வேதம்
பொற்பொடுபலவாய்க்கூறுமுருவமாய்ப்புருடனாகி (௩௧)

எங்கணுநிறைந்துநின்றவென்னையேடணைகணித்துப்
பொங்கியகாமமாதியுடற்பகையாறும்போக்கித்
தங்குமுக்குற்றநீக்கிமுக்குணங்கடிந்துநின்ற
சிங்கலிற்கேள்விமிக்கமுனிவரர்தெளிந்துகாண்பர். (௩௨)

மாயையைக்கடிந்தவான்மாமாயையாஞ்சகத்தைநாளு
மோய்வறநடத்தேனென்னையின்றிமற்றதுவுமொல்லா
தாயவையென்கொலெலன்னிற்காந்தமுன்னுடுமூசி
யேயுறவென்முனிந்தவிருஞ்சகநடக்குமன்றே. (௩௩)

தன்னைத்தான்றெளியநோக்கித்தன்னிடைத்தனைப்பிலாத
வென்னுருவதனிற்சேர்ந்தோனிருவினைச்சிமிழ்ப்பினெய்தி
மன்னியதிகிரிபோலும்பவத்தினின்மயங்கானுகி
யுன்னருமுத்திவீட்டினுவந்தினிதிருப்பனன்றே. (௩௪)

பொருவில்சாங்கியயோகத்திற்பொருந்தியஞானந்தன்னை
யரில்கெடவிரிந்தகேள்வியுடையமாணுக்கர்க்கன்பின்
விரிதருமைந்தர்க்குண்மைமேவும்யோகியர்க்குநன்கிற்
பரிவுடனுரைக்கவேண்டியவர்கட்குப்பகரொணுதால். (௩௫)

சாங்கியயோகமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௫௩.

மூன்றாவது

சம்பிரதாயவத்தியாயம்.

அவ்வியத்தந்தனிற்காலம்பிரதானம்புருடனிவையமையத்
தோன்றுஞ், செவ்விபெறுமிவைகடமிற்சிறந்தசகந்தோன்றியி
டுமதனலந்த, வெவ்வமறுபிரமத்தினுருவாகுஞ்சகமிதனைச்சக
மென்றெண்ண, னெவ்வறுமென்சிப்பியினைவெள்ளியெனமரு
ண்டெண்ணுநோன்மைத்தாமால். (௧)

இந்தியங்களன்றியின்றுமிந்தியத்தையறிவித்தேயியக்கல்
செய்யு, மந்திலுறுமாதாரந்தனக்கின்றிச்சகத்தினுக்காதாரமா
கு, முந்தியொன்றிற்றோன்றியதன்றெவற்றினையுமுறைமுறை
யேதோற்றுவிக்கும், பந்தமுறுதொடர்ச்சியின்றிப்பற்றுமலெ
வ்விடனும்பற்றிநிற்கும். (௨)

பின்னமின்றிப்பின்னமாய்நித்தியானந்தமாய்ப்பிரமமாகி,
மன்னியிடுங்காட்சிமுத லளவைகளினறியாத மாண்பிற்றாகித்,
துன்னியிடும்விகற்பமில்லாத்தற்பரத்தைக்கேள்விகளாற்றெட
கப்பட்ட, நன்னிலையஞ்செவியுடையதக்கோர்மற்றறிவரொனங
விலும்வேதம். (௩)

உள்ளுமாய்ப்புறம்புமா யுலகனைத்துநிறைந்திருக்கு மூண்
மையானுந், தள்ளரியபரம்பொருள்யான்சகமனைத்தும்படைத்
ததனைத்தரித்துநிற்கும், வள்ளலும்யானுபநிடதக்கோயிறெரு
ம்வீற்றிருந்தம்மறைக்குமெட்டாத், தெள்ளரியஞானத்தின்றெ
ளிவும்யானெனவெதிகடெரிப்பரன்றே. (௪)

புருடனுடனமர்தானமிதுனமாமிங்கிவற்றைப் பொருந்தக்
கூட்டு, மரிதின்வருங்காலமுமற்றவைபோலவிளம்பரியவநாதி
யேனும், தெரிவருமவ்வியத்தந்துக்கன்னியமாமவ்வியத்தஞ்சி
றந்தவென்ற, வுருவமாமாதலாலிவைமூன்றுமாங்கதனோடொ
ன்றுவன்றே. (௫)

புருடனெனக்குருவினொடும்பிரகிருதிதனைப்பார்க்கப் பொற்
பினொடு, மருவுமகான்முதலாகவிசேடாந்தமாமெவையும்வந்து
தோன்றும், பிரகிருதியொடுங்கூடிப்புருடனதன்குணமனைத்து
ம்பெட்பினுய்த்திட், டொருவரிதாய்ப்பொசிக்குமெனவுபநிடத
ப்பொருளனைத்துமுரைக்குமன்றே. (௬)

சொல்லுமகான்றத்துவத்தைப்பிரகிருதிவிகாரமெனச்சொ
ல்லுமாபோற், புல்லும்விக்கிஞாதாவைவிக்கிஞானசத்தியென
ப்புகல்வர்மேலோர்,மல்லன்மகான்றத்துவத்தினுங்காரந்தோன்
றுமகான்மறைக்குமான்மாத், தொல்லையவாங்காரத்திற்றுவக்கு
ண்டவான்மாவுஞ்சொல்லினென்றே. (௭)

ஆங்கதுவேசீவனுமிம்மனங்கரணமாகவழி பவங்கடோறு,
நீங்கரியசுகதுக்கம்பொசிக்குமங்கக்கரணத்தி னிகழ்ச்சிதன்மே
ற், றுங்குகுலாலுயர்சன்மந்தனிலுமுழலும்பிரகிருதியோடுசார்ந்
து, வாங்கரியகாலத்தாற்றேகியாமெனத்தெளிந்தோர்வகுப்பர்
மாதோ. (௮)

காலமேயுலகனைத்தும்படைத்தளித்துத்துடைப்பதுவுங்கரு
துகின்ற, காலமேநரகசொர்க்கத்திருத்துவதுங்கட் வுளராந்தே
வரேனுங், காலமேதன்செயலினடத்துவதுமென்றக்காற்கணிக்
கொழுத, காலம்வேறொருவர்செயன்மருவாமற்றன்செயலோ
காட்டுமன்றே. (௯)

இந்தியங்கள்யாவையினுஞ்சிறந்ததுநன்மனமதனிற்சிறந்த
தென்னி,லந்தமறுமாங்காரமாங்கதனிலுயர்ந்ததுமானதனினோ
ங்கு, நந்தலறுமவ்வியத்தமதிற்சிறந்ததுறுசீவனதனினும், ப
ந்தமறச்சிறந்ததுயர்பிராணனதிற்சிறந்ததுநீள்பரமாகாயம்.(௧௦)

உரைத்தபரமாகாயந்தனைக்கடந்தோங்கொளியினுக்குமொ
ளியாயோதும், பரத்தினுக்கும்பரமாகும்பராபரம்யானெனைக்க
டந்தோரில்லையானே, வரைத்திடுமிச்சகமதனுண்மருவாமற்கா
லத்தால்வருவிப்பேனென், னிரைத்தபொலங்கழல்சேர்ந்தோ
ரல்லாதார்முத்திபெறுநெறியிற்சேரார். (௧௧)

சம்பிரதாயவத்தியாயமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—௪௪.

நான்காவது

பத்திமையுணாத்தவத்தியாயம்.

மகமுதலுயர்கன்மமருவிமையறுதானந்
தகைபெறுமதியோர்பாலருளொடுதனிநல்கிப்
புகைபடுதழலெய்தித்தவநனிபுரிவோரும்
பகருமென்னடியெண்ணுறொனிலுயர்பதமெய்தார். (௧)

உலகெவனுழையெய்துமுலகினுளெவனெய்து
மலகறுமுயிர்தோறுமுயிரெனவமர்வுற்றே
நிலைபெறுகரியாகிநின்றவனெவனன்னோன்
மலைவறும்யானாமென்றுணர்பவர்மதிவல்லோர். (௨)

இந்திரன்முதல்வானோரிருடிகண்மனுவாதி
யந்தமிலுயிர்யாவுமின்னமுமருமாயைப்
பந்தமஃதறவென்னைப்பரிவுடனறியாவா
னந்தவின்மறையொன்றேயென்னிலைதனினாடும். (௩)

அருமகநுகர்வோனுமகமும்மகம்யாவும்
புரிதருதொழிலோரும்யானுயர்புவிநீர்கா
லெரியுயர்நெடுவானமிவையிவைதொறுமேவும்
பரவருமுயர்ஞானம்பசுபதியெனும்வேதம். (௪)

எவரொவர்தமைநாளுமிறையவரிவரென்னக்
குவிகையினுடனுளுங்கும்பிடும்வழிபாடா
மவையெனதடிதன்னிலடைதருமெனிலென்போற்
பவமறவருடெய்வமிலையெனமறைபாடும். (௫)

அலைகடனடுவெய்தாவறிதுயிலமர்வோனு
மலர்தலையுலகெல்லாம்வகைபடவருள்வோனுங்
கலைபயின்முனிவோருங்கடவுளொவர்தாமு
நிலைபெறவெனைநாளுமடிதொழுநெறியோரே. (௬)

ஆறறிமறையோருமலர்கதிர்வடிவேலான்
மாறெறிதிறல்வன்கைமன்னருநாணுளும்
வீறுயர்பொருள்செய்யும்வணிகரும்விதியாகக்
கூறுதனிலைநின்றேற்றொழினுயர்கதிகூடும். (௭)

மன்னியமகமாதித்தொழிலிவைமருவாத
பின்னவர்முதலாகுமிழிதொழிலினர்பெட்பி
னென்னடிதொழுதென்றுந்தம்நிலையிடைநிற்பின்
மென்மெலமறையோதும்வீடினிதடைவாரால். (௮)

மூசிளவரிவண்டார்முகையவிழ்கமலத்தண்
பாசடைமிசைதெண்ணீர்பற்றறுமதுபோல
மாசறவெனைநாளும்வழிபடவவர்செய்யு
மாசுறவுயர்பாவமவர்தமையடையாவால். (௯)

என்னிணையடித்தம்மிதயமென்மலர்வைப்போர்
பொன்னடியினைநாளும்பூசனைபுரிகிற்போர்
பன்னகவணைமேவும்பரமன்மென்மலரோன்மற்
றன்னவர்தொழநாளுமமருலகடைகிற்பார். (௧௦)

மெல்லிலையுயர்வில்வம்விழ்சருகலர்தொட்டுப்
புல்லொடுதளிரோனுங்கைந்நிறைபுனலேனு
மல்லியமகிழ்வாலென்மலரடிமிசைபெய்தோ
ரல்லலதடையாரென்னடியிணையடைவாரால். (௧௧)

தாமரையுறைவோனைத்தந்தருமறையாவும்
யாமுனமருள்செய்தேமிகலொடுமகிழ்வில்லா
மாமுனிவரரென்னைக்குருவெனமகிழ்செய்வார்
காமுறுமறமென்றன்கற்பனைதனினிற்கும். (௧௨)

இராசதகுணமாகுமென்னொருகலைபைந்தேன்
விராயமென்மலரோனாய்மேவருமுலகீனுந்
தராதலமகிழ்வெய்துஞ்சத்துவகுணசத்தி
பராவருமரியாகிப்பல்லுயிர்தனிகாக்கும். (௧௩)

தாமசகுணமேவித்தகைபெறுமுயர்சத்திக்
காமனையெரிசெய்யுங்கண்ணுதலுருவாகித்
தேமலரயனுதிதிகழ்தருவீருக
வேமுறுமுயர்யாவுமீறுசெய்திடுமன்றே. (௧௪)

பத்தியினுயர்தன்மைப்பான்மையினருள்யோகச்
சித்தியினுயர்ஞானத்தெளிவினினெனையன்பின்
வித்தகர்பணிகிற்பாரிவர்களின்விழைஞான
தத்துவநிலைநின்றேபணிவரதலைநின்றார். (௧௫)

அலர்கதிர்முனமெல்லென்றுமரையெனுமந்தண்
மலரவிழ்வதுபோலவெனமுனமகிழ்வோடு
முலகுறுகாலத்தினுற்பவமுறுமென்னு
நிலைபெறவுணர்கிற்போரருமறைநெறிகண்டோர். (௧௬)

யோகமுமவைபேறும்யோகியுமெனவேதஞ்
சேகறவுரைசெய்யுந்தெளிபொருளெனுமீசன்
மாகமொள்ளெரிதண்ணீர்மண்வளிமுதல்யாவு
மேகமதாய்நிற்கும்யானெனவறிவீரால். (௧௭)

மன்னியவுயிர்யாவுமருவு * மகத்துவமுந்
துன்னருமிறைமேவுந்துகளில்பரத்துவமும்
முன்னரிதாய்நிற்கும்பிரமமுமுலைவில்லா
வென்னுருவெனநன்கினெண்ணினரறிவுற்றோர். (௧௮)

* மகத்த்துவம் - மகத்துவமென இசைநோக்கிக் குறுகின்றது.

வருபரமானந்தக்களியுறமகிழ்வோடும்
பொருவருநடம்யானேபுரிகுவனெனையாரோ
யுருகிமென்மலர்தூய்மெய்யுணர்வொடுதன்னெஞ்சிற்
கருதினரவர்கண்டீர்கடவுளொனவாழ்வார். (௧௯)

தகவொடுமறைகூறுமிப்பொருடனைமன்பின்
மகவினைபுரிகுற்றேமாசெறிமனத்தோடு
மிகலொடுநட்பின்றிப்புகலிருவினையற்றே
துகளறுமுனிவோர்பாற்சொல்லுதலியல்பாமால். (௨0)

பத்திமையுணர்த்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—அ௪.

ஐந்தாவது

விச்சுவரூபவத்தியாயம்.

ஐயகமலத்தெழில்செயானனமனந்தம்
பையரவகங்கணமணிந்துபடைபற்றுங்
கைகளுமனந்தமுயர்கால்களுமனந்த
மெய்களுமனந்தமுயர்மென்முடியனந்தம். (௧)

ஆகியயரண்டமவைமுற்றுபுனல்சூழப்
போகுயர்சுடர்க்கனலிமற்றதுபுதைத்தே
யேகியுழல்காலிவைகள்யாவையுமறைக்கு
மாகவெளியெங்குமெய்வயங்கொளிபுதைப்ப. (௨)

கருந்துளவணிந்தமுகில்கஞ்சமலர்மேலான்
புரந்தரன்வசுக்களுயர்புங்கவர்கள்யாரும்
விரிந்தகமலத்தினிடைவீழுமிசைவண்டிற்
றிருந்துமறைபாடியுயர்சேவடியின்வீழ. (௩)

நிற்பனநடப்பனகள்யாவையுநிறைந்த
பற்பலதொகைப்படவிரிந்தபகிரண்ட
மெற்கதிரிடைப்படுமணுத்தொகைகளென்ன
வற்புதவுயிற்பினலம்வந்திடைவழங்க. (௪)

வெங்கதிர்சுரந்தொழுகுவெய்யவன்வெதுப்பு
மங்கியமிர்தூறியுமிழாய்கதிர்விரிக்குந்
திங்களெனுமுக்கணுமுகத்திடைசிறந்தே
தங்கியவலோகவிருளுந்தனிதுரப்ப. (௫)

கொங்குலவுகொன்றைபுனைகோலமுடிகோறுங்
கங்கைநதிவீழருவிகல்லெனவொலிப்பத்
திங்களுறுகண்ணியமிர்தத்துளிகள்சிந்த
மங்குலெனுமுத்தரிகமார்பிடைவயங்க. (௬)

ஆற்றலுறுநின்புவனகோடியரிபெய்த
மாற்றரியநூபுரம்வயங்கொளியெயிற்றுக்
கூற்றுயிர்குடித்தகழறேறுறுமொலிசெய்யச்
சீற்றவரிவேங்கையதண்மெல்லுடைசிறப்ப. (எ)

கையிலனலொற்றிவிழிகாலுமனல்சூலம்
பெய்யுமனலீறுபொதிபேரழல்கடுக்கு
மெய்யிலனலெங்கணுறும்விரிந்துசுடர்மண்டப்
பையரவமுப்புரியநூலொளிபரக்க. (அ)

ஒளியிலொளியாமறையுணர்ந்தவரருந்துந்
தெளியுமமுதாய்ப்பிறவிதீர்த்திடுமருந்தாய்
வெளியில்வெளியாகியிடுவிண்ணவன்மெய்ஞ்ஞானக்
களியுடனடம்புரிதல்கண்டுளமகிழ்ந்தார். (கூ)

வேறு.

அண்ணல்சேவடியிலேத்துமருந்தவமுனிவரோடுந்
தண்ணறுந்துளவோன்வீழ்ந்துதயாவொடுந்தொழுதுபோற்றிக்
கண்மலிகுளிர்ப்பவையன்கதிருமிழ்மேனிநோக்கி
யெண்ணருமறைகள்பாடியெந்தையைப்பழிச்சலுற்றான். (க0)

என்னுடைத்தோழனாகுநனெனவெண்ணிநின்னைச்
சொன்னவையனைத்துமின்னேபொறுத்தருள்சுரத்தியீன்ற
வன்னையும்பிதாவுங்கேடில்சுற்றமுமறிவுநெஞ்சு
நின்னையேயன்றிவேறுகாண்கிலேனிமலமூர்த்தி. (கக)

விண்ணவரியக்கர்சித்தர்முனிவர்மென்கமலப்போதிற்
பண்ணவர்முதலாயுள்ளோரனைவரும்பரவைநாப்ப
ணண்ணியகுமிழிபோலவெழுந்துடனாசமெய்திக்
கண்ணகனுலகத்தோடுந்தோன்றுதனின்பாற்கண்டேன். (கஉ)

கற்பமோர்கணமதாகிக்கணமொருகற்பமாகு
மற்புதக்காலமியாவுமையநின்பாலிற்கண்டேன்
சிற்பரமாகியொன்றாய்த்தேவர்க்குந்தேவனாகு
மற்படுதோளாயுன்றன்மாயையையறிகிலேனால். (கங)

பங்கயன்மால்முக்கண்ணனென்னுமுப்பகுதியாகி
யெங்களிலொருவனாகியிருந்தனையொருகாலத்தி
னெங்களையொருகாலத்தினீன்றளித்தனையோர்காலு
மெங்களிலறியொணாதுன்மாயையினியற்கையெந்தாய். (கச)

அண்ணனின்பரமானந்தநடத்தினையன்பினோக்குங்
கண்ணெனுங்குடங்கைதன்னாற்களியொடுமள்ளியள்ளி
யுண்ணவுந்தெவிட்டாதாகியுடலெலாந்தித்திக்கின்ற
தெண்ணருந்தேனேயென்றிணையடிமலரின்வீழ்ந்தான். (கரு)

வேறு.

வீழுமெய்ம்மயிர்சிலிர்க்குமிகமீட்டுந்
தாழுமிறைநின்றுபுரிதாண்டவம்வியக்குங்
காழ்படுமனத்தினொடுகண்கலுழிநின்றோ
யூழ்முறைவணங்குமுயர்யோகினிலுறங்கும். (௧௬)

இன்னபுரிநாரணனையெந்தைமுகநோக்கி
யுன்னுருவமென்னுருவமென்னுருவநீயே
பின்னமிலையென்றுதழுவப்பெரியமாயன்
றன்னிகரிலீசனுருவிற்பனிகரந்தான்.. (௧௭)

கார்நிறமுகுந்தனொடுகங்கைபுனையெந்தை
யோருருவமாகியவனூடுதலுவந்தே
பேரறிவுசேர்முனிவர்பிஞ்ஞகன்மலர்த்தாள்
வார்சடைமுடித்தலையின்வைத்தனர்பணிந்தார். (௧௮)

வேறு.

வேதாகமங்களுணாசெய்யநின்றதெளிவாகிமேவுமுலகுக்
காதாரமாகியணுவாகியாருமறியாதஞானவுருவாய்ப்
பேதாதிபேதவுருவாகியேகவுருவாய்நிறைந்தபெரியோய்
பாதாரவிந்தமொருநாளுநெஞ்சமறவாதபான்மையருள்வாய்.()

வண்டாகிவேதமறைபாடவென்றுமலர்கின்றபாதமலரோய்
தொண்டாகிநின்னையடைவோர்களன்றியெவரோதொல்வீடுபுகு
தண்டாதுநின்றசகமாயதற்குண்மருவாதியக்குநினையாங் [வார்
கண்டாதரிக்கவெளிநின்றதென்கொல்கலைகண்ணதாகுமுதலே.

சேணூடராகிமதியாகிவெய்யகதிர்சிந்துதூயரவியா
யாணுடுகோபமதயானைகொன்றவரியாகியாதியயனு
யூணாகியுண்ணுமவனாகியெங்குமுளனாகிநின்றவொருநீ
காணாதுநின்றவருமாயமென்கொல்கலைகண்ணதாயபெரியோய்.

அணுவாமெவைக்குமணுவாயிருத்தியகிலங்கண்மூடியொளிருந்
தணியாதவண்டவுருவாயிருத்திதருபஞ்சபூதமதிவான்
மணியாமருக்கனுயர்சோமயாசிவடிவாயிருத்திமறையுங்
கணியாதிருத்திநினையார்கணிப்பர்கலைகண்ணதாயபெரியோய்.

உருவாகிமற்றையருவாகிநீடுமுருவோடியைந்தவருவாய்[றையும்
மருவாயதற்குண்மணமாயொளிக்குளொளியாய்மறைக்குண்ம
பொருளாய்வழுத்துமடியாருளத்துவுறைகின்றபோதவுருவாய்
கரியாய்கருத்தினினையார்குணிப்பர்கலைகண்ணதாயபெரியோய்.

ஓங்காரமாகிவிபுவாகிமேவுமுயிர்தோறுநின்றகரியா
யாங்காரமின்றியடிபேணுகின்றவறவோர்தநெஞ்சமுறைவோய்
நீங்காமலெங்கும்வெளியூடமர்ந்துமறைகின்றகள்வநினையாம்
பாங்காகவுன்றனடியாரினின்றுபணிகின்றதென்றுபகர்வாய். ()

அயனுகிமூன்றைப்புலகங்கடந்துமரியாயளித்துமிளிரும், வெயில்கோடிகக்குமழுவாளனுகிவிரகோடழித்துமவையூ, டியலாதெனைக்குநடுவாகிநின்றவிறைவாநின்மாயைபுரியுஞ், செயலார்தெரிப்பர்வடமேருவெற்போர்பிலையாய்வளைத்ததிறலோய். ()

இதுவன்றுமின்றதிதுவன்றுநின்றதெனவோதலன்றிமறையுமிதுவென்றுரைக்கமுடியாதுநின்றவெரிதும்முவெய்யமழுவோய்பதியாருநின்னையடைகின்றதூயபசுமாயைதீரவருள்வோய்[வார்முதலீறதின்றியுறைவோய்நின்மாயையெவரோகொன்முற்றுமறி

மின்கோடிகோடிசுவழ்கின்றதென்னவெளிமூடிநின்றவுருவ, மன்போடுகாணமுடியாதுகண்களயர்கின்றதுள்ளமறவோய், முன்போலுருக்கொடெமையாடியென்று முனிவோர்கணின்றுபணியப், பொன்போலலர்ந்தமலர்மாரிசிந்தியிமையோர்வணங்குபொழுதின். (௨௭)

வேறு.

மலர்தலையுலகம்யாவும்பொதிந்தமாலுருவநீங்கி
யிலகொளிக்கணிச்சிப்புத்தேண்மடங்கலாசனத்தினெய்தக்
கலையுணர்முனிவரீசன்கழலிணைவழுத்திநின்று
ரலர்கதிர்நேமியோனுந்தன்னுருவமைந்துதாழ்ந்தான். (௨௮)

தாழ்ந்துமென்மலர்கடுவித்தழைத்தபேரன்பினேடுஞ்
சூழ்ந்தனர்மீட்டுமீட்டுந்துணையடிவணங்கியேத்தி
வாழ்ந்தனமென்னநின்றமுகுந்தனைமறையோர்தம்மை
யாழ்ந்தபேரன்பினேக்கியையனிதறையலுற்ருன். (௨௯)

விச்சுவரூபவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௧௧௩.

ஆருவது

சிவசத்தியின்செயலுரைத்தவத்தியாயம்.

உலகெலாமளித்துங்காத்துமொடுக்கியுமீட்டிமீட்டு
மலகறுமுறையினிவ்வாறியற்றுவான்யானேயம்பொன்
மலரயன்றன்னைமுன்னர்வகுத்தவன்றனக்குஞானக்
கலைமுழுதுணர்த்தியாக்குந்தொழிலையுங்கற்பித்தேனல். (௧)

கடல்வயிறுளைந்துபெற்றகவுத்துவங்கதிர்கனீட்டி
விடுசுடர்ப்பருதியோட்டிவெயில்கிடந்திமைக்குமார்பி
னுடல்சினத்திகிரியோய்மற்றுனையளித்துலகம்யாவு
மிடர்கெடவுவந்துகாக்குந்தலைமையுமினிதினிந்தோம். (௨)

கறைக்குறும்பெறியுந்தெண்ணீர்க்கடல்விடமுண்டுவிண்ணேர்
புறக்கும்வெண்ணீற்றுமேனிப்புரிசடைப்பவளக்குன்று
முருத்திரனுகியெல்லாவுயிர்களுஞ்பிறந்துஞ்செத்தும்
வருந்தமுற்றிடாமனன்கின்மாயத்தினைப்பாற்றுவேமால். (௩)

செந்தழற்கடவுடேவர்தென்புலத்தவர்கட்கூட்டு
நந்தலிலவிபுமற்றைப்பலிகளும்பரித்தென்னாரு
மந்தமிலுணவுநன்கினடுதலுண்டவையறுத்தல்
பந்தமிலெமதுசத்திபண்ணியசெயலதாமால். (௪)

ஆழ்கடற்கிறைவனென்றன்சத்தியாலலர்ந்துதோன்றும்
பாழிமாலுலகமெல்லாங்குளிர்விக்கும்பவனவேந்து
மூழ்முறைபிறழாதுள்ளும்புறமுமாயுலாவியாகம்
வாழியபரிக்குமாறுமென்செயலாகுமன்னோ. (௫)

இந்திரனுலகுகாத்தன்மறலிபெவ்வுயிருங்கோறல்
சந்திரனமரருய்யவமுதினையளித்தருவில்
வெந்திறலருக்கன்வெய்யகதிர்மழைவிடுத்தனாரு
மந்தமினிதியத்தோடுமளகைவேந்தரசுசெய்தல். (௬)

நிருதியொள்ளெயிற்றபேழ்வாயரக்கரைப்பரித்தனெய்தோய்ந்
துருகெழுசூலமேந்துமுருத்திரனுலறுகுஞ்சித்
திருகுவெஞ்சினத்தபூதபதியெனச்சிறந்துநிற்றன்
முருகவேடேவர்சேனாபதியெனமுதன்மையெய்தல். (௭)

ஐங்கரன்கணங்கட்கெல்லாமுதல்வனாயமர்தல்சேடன்
தங்குமிவ்வுலகந்தாங்கறகைபெறுமரீசியாதி
புங்கவருலகம்பூத்தல்பூமகடிருவினெய்தல்
மங்கலவாணிநான்குவாக்கினையினிதுநல்கல். (௮)

உறைக்குறும்பெறியாதொல்லென்கடலினைவட்டையுண்டல்
விரைத்துழாய்முகுந்தனாதிவிண்ணவரியக்கர்சித்த
ருரைத்திடுகருடர்பூதர்மனுக்கள்சாரணர்களோதும்
கருத்துறுகாட்டையாதிபரார்த்தமீறாயகாலம். (௯)

நால்வகைத்தோற்றத்துள்ளசராசரம்புவன்நான்கிற்
சால்வுறுபஞ்சபூதமனமுதற்கரணந்தாவி
னேல்பிரகிருதியெய்துஞ்சகத்தின்காரணமாமாயை
பால்படுதொழிலினிற்றல்பகுதியைப்புருடன்பார்த்தல். (௧0)

ஈங்கிவையனைத்துமென்றன்சத்திகளிபற்றுகின்ற
தீங்கில்காரியங்களாகுஞ்சகத்தினைச்சேர்ந்துநின்று
நீங்கியுநீங்காதுற்றவென்னிலைநிகழ்த்தல்செய்தேம்
பாங்குறவிதனையோர்ந்தோர்பவக்கடல்படிந்துமாயார். (௧௧)

சிவசத்தியின்செயலுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௧௨௪.

எழாவது

விபூதியுரைத்தவத்தியாயம்.

மனவாக்குக்காயத்துக்கெட்டாதுமாயையெனுங்
கனையிருட்பாழ்கடந்துநின்றதுரியம்யான்கடவுளரு
டினைவரியபிரமமும்யானித்தியம்யானிட்களம்யான்
றனையுணர்ந்தோருளமதனிலகலாததத்துவம்யான். (க)

பிரமர்களினான்முகன்யான்பெட்புறுமாயாவிகளிற்
பொருவரியநாரணன்யான்போதமுறும்யோகிகளில்
மருவரியசம்புவும்யான்மடந்தையரிலம்பிகையா
னெரிகதிராதித்தியரிலேத்தரியவிட்டுணுயான். (உ)

உருத்திரரிற்சங்கரன்யானுடுக்கடமிலுடுபதியான்
பரித்தபுகழ்வசுக்கடமிற்பாவகன்யான்பறவைகளின்
விரித்தசிறைக்கலுழன்யான்விண்ணவரிலிந்திரன்யான்
றரித்தவரிவில்லிகளிற்றாழ்தடக்கையிராமனுநான். (௩)

ஆனைகளிற்பிறலயிராவணம்யான்வாளசுரர்தமின்
ஞானமுழுதுணர்ந்தருளுநற்பிரகலாதனன்யான்
மோனமுறுமிருடிகளில்வசிட்டன்யான்முனிவரரி
லீனமறுவியாதன்யான்கணங்கடமில்விநாயகன்யான். (௪)

பொருவரியவீரர்தமிற்புகல்வீரபத்திரன்யா
னொருவரியவிரதத்திற்சத்தியம்யானொப்பரிதாம்
வெருவருநற்றொழிலோரின்விச்சுவகன்மாவும்யான்
றெரிவருநாற்சித்தர்தமிற்சிறப்புடையகபிலனும்யான். (௫)

வரைகளிற்பொன்மேருவும்யான்பொருபடையில்வச்சிரம்யான்
றெரிவரியசாமத்திற்றிகழ்சேட்டசாமம்யான்
சுருதியறிமனுக்கடமிற்சுவாயம்புமனுவும்யான்
றெரிவரியதேயத்திற்றிகழ்பிரமவர்த்தம்யான். (௬)

நதிகடமிற்கங்கையானகரிகளிற்காசியான்
றுதியுறுநல்விஞ்சைகளிற்சொல்பிரமவிஞ்சைநா
னதிகமுறுஞானத்திற்சிவஞானமாவேனான்
விதியுறுமைம்பூதத்தின்விளங்கியவாகாயம்யான். (எ)

அக்கரங்கடமிற்சிறந்தவகரம்யான்றருக்கடமிற்
றெருக்குயரைந்தருவும்யான்சுரபிகளிற்றேனுவும்யான்
றக்கவுயர்கதிகடமின்முத்தியும்யான்சாற்றரிய
மக்கடமிற்பனகயொருக்கும்வாட்டடக்கைமன்னவன்யான். (அ)

பரம்பொருளாங்கடவுளரிற்பகர்பரமேச்சுரனும்யான்
மரங்கடமிலரசும்யான்வகுப்பவற்றிற்காலமும்யா
னரந்தைகெடுமியக்கர்தமிற்குபேரன்யானலைபுனலி
னிரங்குகடல்யான்றேவவிருடிகளினாரதன்யான். (௯)

நச்செயிற்றசர்ப்பத்தில்வாசுகினாகத்தி
னச்சனங்காரனந்தன்யானரும்பெறற்றென்புலத்தோரி
னிச்சையுறுமரியமான்யானீர்வாழிமையவரிற்
செச்சைபுனைவருணன்யான்றிகழ்மீனின்மகரம்யான். (க0)

திரிதருகந்தருவர்தமிற்சித்திரத்தேரவனும்யான்
பொருவரியவிந்தியத்தின்மனமும்யான்பூதத்தின்
மருவுறுநற்சேதனம்யான்மாமறையிற்சாமம்யா
னரிதுணரும்யாகத்திற்சயயாகமாவேனுன். (கக)

எழிலுடையோரொவர்களினும்வேனில்வேள்யான்புனிதந்
தழைபவரிற்கலையூருந்தலைவன்யான்கொல்வோரின்
விழிவுறுநற்கூற்றும்யான்வெல்வார்பால்வெற்றியான்
பழுதறுநற்சந்தச்சிற்பழிப்பறுகாயத்திரியான். (கஉ)

இருதுவினிலிளவேனிற்றிங்களின்மார்கழித்திங்கள்
பொருவரியவஞ்சகத்திற்பொருசூதுபுரோகிதரின்
மருவரியவியாழமுயர்வாகவியல்வெள்ளியென
வுரைசெயிவையனைத்தும்யானுரையாதபொருளும்யான். (கங)

என்றென்னையறிமின்களியம்பிடுமோன்மாவெல்லாம்
பொன்றவரும்பசுவாகும்யான்பதியாம்புகல்கின்ற
மன்றவுயர்பசுக்கடமைமாயையினாற்பிணிப்பானுந்
துன்றுபிணிவிடுவானும்யானென்னத்துணிவீரால். (கச)

மனம்புத்தியாங்காரம்வருபஞ்சபூதமிக
நினைந்திடுஞானேந்தியம்பின்னிகழ்த்துறுகன்மேந்தியஞ்சீர்
புனைந்திடுஞானேந்தியத்தின்விடயங்கள்புகலரிதா
முனம்புகலும்பிரகிருதிசம்பந்தமெனமொழிவார். (கரு)

சாற்றரியவிருபத்துநான்காயதத்துவமும்
போற்றுபிரதானத்திற்பொருந்தியிடுமவ்வியத்த
மாற்றலுறவமைந்தோங்கிவருசகத்தின்காரணமென்
றாற்றமுறுமறையாவுமொழியாமலுரைத்திடுமால். (கசு)

முக்குணத்தின்சமத்துவத்தைமொழிந்தபிரதானமென்றுந்
தக்கபிரகிருதியென்றுஞ்சாற்றுவர்கண்மதிவல்லோர்
மிக்கபுகழ்ச்சாத்துவிதகுணம்ஞானமிகுதமத்தின்
றொக்ககுணந்தனைமேலோரஞ்ஞானமெனச்சொல்வார். (கஎ)

சாத்துவிதகுணத்தோடிந்தாமதமாங்குணாந்தமுவி
னோத்தரியபசோருணமாமீங்கிவையும்யாவருக்குங்
காத்தலருநல்வினையுந்தீவினையுங்கனன்றுயினா
யார்த்திடுதாம்பாருமெனவறிவுடையோரிசைத்திடுவார். (கஅ)

பொருந்தவிச்சையறவுமிதம்புகலாசைதுவேசமிக
வருந்தபினிவேசமெனுமவையைந்தும்வளைத்துயினாத்
திருந்துறக்கட்டுறுபாசஞ்செப்புமிவையனைத்தினுக்கும்
விரிந்திடுமாமாயைதனைக்காரணமாய்விளம்புவார். (கசு)

வேறு.

மூலமாம்பிரகிருதிபுருடன்மகானுதிகணமோயவிகாரம்யா
வுங், காலமுடனிகழ்கட்டுக் கட்டுவிப்போனுயர்பாசம் பசுக்கள்
யாவுந், சால்புடையோர்யானென்பர்தற்பரமாம்பிரமம்யானெ
ன்றுதேர்ந்தோர், சிலமுடன்யாவருக்குஞ்செலவரிதாமுயர்வீ
ட்டிற்சேர்வர்மாதோ. (உ0)

விபூதியுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம்—கசச.

எட்டாவது

பிரபஞ்சத்தோற்றமுரைத்த வத்தியாயம்.

ஒருமுதலாமெனக்கெங்குமுயர்மூலமாயைதனையோனியெ
ன்பர், மருவியதிற்கருவைப்பப் பிரதானமுதலெவையும் வந்து
தோன்றும், விரிகதிர்காலெரிபசும்பொனண்டமவற்றினிற்றே
ன்றுமதனுள்வெய்தின், முருகுவிரிச்செழுந்தோட்டுமுண்டகத்
துவிற்றிருக்குமுதல்வன்றேன்றும். (க)

உரைத்தமலரயனிடத்திற்சராசரங்களுதிக்குமிவையனைத்
துமுன்னம், வருத்தமறவீன்றவெனைத்தந்தையெனவறியாமன்
மறைக்குமாயை, நினைத்திடும்யோனிகடோறுமுதித்திடுவோற்
கியான்றந்தைநிலவுமாயை, யருத்தியுடனின்றெடுத்தவன்னையெ
னவறிந்தோரேயறிவுளோரே. (உ)

என்னையுயர்தந்தையெனவறிந்தோர்களிரும்பிறவிக்கட்லி
ன்வீழ்க்கு, முன்னைவினைதனைநீக்குமுதுக்குறைந்தோரென்னைய
ன்றிமற்றோர்தெய்வந்,தன்னையளித்தவனென்னவுரைத்திடுவோ
ர்தன்றந்தைபகைத்துண்மேவ, வன்னியனைத்தந்தையெனும்விலை
மாதருள்புதல்வரனையர்மாதோ. (௩)

அழிவதுலகென்ஞான்றுமழியாதபரம்பொருள்யானென்
னநெஞ்சின், விழைவினுடனேக்குளர்யாரவர்கடமதுயிர்குறை
யாமேலோரன்னோர், பழையதுவாயொன்றாகிப்பரம்பொருளா

ந்தற்பரத்திற்சேர்வரென்ன,வெழுதரியமறையனைத்துந்துயிலா மற்கிடந்தலறியிசைக்குமன்றே. (௪)

சூக்குமங்கடமைமிகவுஞ்சொல்லரியசடங்கத்தைமகேசனற ன்னே, நீக்கரியபிராணத்தின்வினியோகந்தனையறிந்தோர்நிமல மாகி, வாக்கினுக்குமனத்தினுக்கு மெட்டாதபரம் பொருளாய் வைகுமென்றன், முக்கணங்கார்பதமலரினிமறன்னையென்னளு ஞ்சார்ந்துவாழ்வார். (௫)

சடங்கமெலாமறிதன்மிகவருதிருதிசாற்றரியவநாதிபோ த, மடங்கலருஞ்சுதந்திருதைகுறையாமல்வளர்சத்தியனந்தசு த்தி,யடங்குமனத்தொடுஞ்சகலதத்துவத்தின்மயமாகியமர்ந்து நின்ற,வொடுங்கருந்தன்மாத்திரையைச்சூக்குமமென்றறிவுடை யோருரைப்பரன்றே. (௬)

அலகிறந்தவான்மாவையருமாயைபிணித்தல்வினியோகமா கு, முலகினுக்குக்காரணமாஞ்சத்திதனைக்கடந்துசத்தியோடும் வைகு, நிலவுபுகழ்க்கடவுடனைமகேசனெனநிகழ்த்திடுவரவன் யானென்னைப், பலவெனவு மொன்றெனவும் பதியெனவும்விபு வெனவும்பகரும்வேதம். (௭)

பிரபஞ்சத்தோற்றமுறைத்தவத்தியாய முற்றிற்று.
ஆ திருவிருத்தம்—௩௨௧

ஒன்பதாவது

மாயாவிகாரமுறைத்தவத்தியாயம்.

என்றுமுழுமுதலாகியவிறைகூறலுமகிழ்வுற்
றுன்றுவுளமுருகாமயிர்பொடியாவுரைகுழறுப்
பொன்றாடிபணியாவிழிபனியாமறைபுகலாப்
பைந்நாகணையுறைவோன்முதன்முனிவோரிவைபகர்வார். (௧)

அருவாய்வெறுவெளியாய்மலமணையாதுபரொருநீ
யுருவாகியசகமாயதையுரைநீயெனமொழிய
நரைமால்விடையிவருந்தனிநாதன்மறைகமழுந்
திருவாய்மலர்மலராமுகிழ்நகையோடிவைசெப்பும். (௨)

சகம்யானலனெனையின்றியவுலகின்றுதயங்கும்
புகுமாயைநிமித்தத்ததுபுகலாயுலகுளதாந்
தகுமாயையுமென்முன்னெழிதரின்மற்றதுசடமாம்
பகரொன்செயல்கொடுமாயையுமுலகந்தனிபரிக்கும். (௩)

உருவத்துறுசகம்யாவையுமுறுமாயையுமுதவித்
தருகாரணம்யானுதலினென்னைப்புகறக்கோர்
விரிவிச்சுவவுருபத்தினனென்பாருயர்வேத
மிருளற்றறுபல்லென்பதுமொன்றென்பதுமெனையே. (௪)

ஒன்றாகியும்பலவாகியுமுளதாயிலதாயு
மன்றேனேயிவ்வுலகத்துடனிகழ்காரணமென்று
மன்றென்றுமுனைப்பாருலகழிவுற்றிடுகாலும்
பொன்றுதுயர்வுறுமாயைபுகாதேபுரிகிற்பேன். (௫)

வேறு.

உரைப்பரியவவ்வியத்தமுபெலசத்தி
நிரைத்தெழுமவற்றுளொருசத்திகரற்றே
வரைத்தபொருடன்செயன்மறைக்குமொருசத்தி
தெரிப்பருமபேதமுறுபேதமுறல்செய்யும். (௬)

பின்னுமொருசத்திபெறுமுத்தியையளிக்கு
மன்னியமதின்றியழிவின்றியலைவின்றி
முன்பெறுமின்னின்றிமுதலாகியொளியாகி
மன்னியிடுதற்பரமதென்னுருவமாதோ. (௭)

காயமனம்வாக்கிவைகடந்துதனினிற்ப
தாயபிரமத்திடைபடத்திலமர்நூலி
னேயுமுலகங்களெனினும்மவையிலெய்தேன்
மாயையினியற்றுவன்மறைந்துமறையாதே. (௮)

அணுவிலணுவாயசலமாய்மறைகள்யாவுந்
துணிபொருளதாயொளிசெய்சோதிமயமாகுந்
தனிவரியதத்துவமறிந்தவர்கடாமே
பிணியுறுதுயர்க்கடல்கடந்தபெரியோரே. (௯)

பரம்பரமதற்றுயர்பராபரமதாகிப்
பிரமவொளியாய்வெளியுணின்றொளிபிறங்கு
மிரண்மயமதாயொளிருமென்றினைமென்மெல்லத்
திரமுடையநெஞ்சினிடைசேர்த்தியமிர்தார்வார். (௧௦)

ஏகவுருவாயுயிர்களெங்கணுநிறைந்தே
யோகையொழியாதுறையுஞானவொளியோதுஞ்
சோகமொடுமோகமெறிதொன்முனிவராகும்
யோகியருளத்தினிடையன்றியுறையாதால். (௧௧)

பயன்விழைகலாதுகருமம்பலவியற்றின்
மயலறுமதற்றிடின்வயங்கறிவுசேரு
மியலுமறிவெய்திலுறுமிருவினைகள்பாறிச்
செயலொடுமெனைக்கருதுசிந்தைவருமன்றே. (௧௨)

ஈடணையுமனமுக்தவியிறைப்பவரும்யோகம்
புரிபவருநாடரியதாம்புனிதஞான
மருளினுனைசெய்தனமுமக்கிதனையற்பிற்
றெருணருடையர்பாலலதுசெப்பிடலாகா. (௧௩)

மாயாவிகாரமுணர்த்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௧௬௪

பத்தாவது

தத்துவதரிசனமுரைத்த வத்தியாயம்

அலிங்கமவ்வியத்தமாகுமாய்சுடர்ப்பிழம்பாய்நின்ற
விலிங்கமேபிரமமாகுமியன்றகாரணமாயென்றுங்
கலங்கலில்பொருளாயொன்றாய்க்கணித்திடும்பிரமந்தன்னைப்
புலங்கெடவினிதினேற்றபுண்ணியப்புலவர்காண்பார். (௧)

மின்படுமேகந்துஞ்சும்வரைகளின்கானின்மேவி
யென்பெழவினிதினோற்றுத்தீர்த்தங்களெவையுமாடித்
தன்புலன்வித்துவெய்யத்தழலிடைத்தவஞ்செய்தாலு
மன்பினாலன்றியெம்மைக்காண்குதலரியதாமால். (௨)

மைத்தகுமாயையென்னுமதுநுகர்ந்தறிவிலோர்கண்
மொய்த்தரும்பிரபஞ்சத்தைவேறுவேறாகக்காண்பார்
சுத்தராய்ஞானானந்தச்செழுங்கடலதனிற்றோய்ந்து
தத்துவமறிந்தோரொன்றாய்த்தம்முளேசகத்தைக்காண்பார். ()

என்னுறுமெண்ணெய்போலவெங்கணுநிரம்பிநிற்கு
நண்ணரும்பிரமந்தன்னினண்ணியசீவன்முத்தர்
விண்முதலாயபூதமெவற்றினுமேவியென்போற்
பண்ணருந்திருட்டியாதிபண்ணினும்பண்ணுவாரால். (௪)

பிரமமேயன்றிவேறுபிரித்துரைத்திடவிரண்டா
மரியநற்பொருளிலாதவாற்றினாலறிவுக்கெட்டா
வொருவனுமீசன்யானேயுளனெனவையமின்றித்
தெருளுறவுணர்ந்துநாளுஞ்சிந்தையுளிருத்துவீரால். (௫)

கண்மலர்திங்களங்கிகனைகதிர்ப்பருதியின்றி
நண்ணியபொருளைத்தன்னதொளியினுடமாட்டா
தண்ணலம்பிரமந்தன்னைச்சுடர்களாலறியவொண்ணா
தெண்ணரும்பிரமந்தன்னாற்காணலாஞ்சுடர்கள்யாவும். (௬)

நித்தியானந்தமாகிநிமலமாம்பிரமந்தன்னை
தத்துவவித்தாயுள்ளோர்பிரணவந்தன்னாலென்று
முத்தமதியானஞ்செய்யாவுளமுவந்தெனதுதாளிற்
பத்திசெய்தென்பால்பாலிற்பால்கலந்தென்னச்சேர்வார் (௭)

பாருமன்றழலுமன்றுபகலுமன்றிரவுமன்று
நீருமன்றகல்வானன்றுநிகழ்வளிமண்ணுமன்றா
யாருமன்றாகியொன்றாம்யானென்றேபரமாகாயஞ்
சேர்வரும்பிரமந்தன்னைமுனிவரர்தேர்வரன்றே. (௮)

வச்சிரப்படைகடம்மால்வலியினாற்செகுத்தலொண்ணா
தச்சணங்கெரியாலென்றுமெரிக்கொணாதலைகொணீரா
லிச்சையினிரக்கவொண்ணாதென்றுமோர்தகுதியாகி
நிச்சயமாகிநிற்குநிருமலமாகுஞ்சோதி. (௯)

இன்னணமறைகள்யாவுந்தெளிந்தெடுத்தியம்புகின்ற
பன்னருஞானமென்னுமமிர்தத்தைப்பரிவுகூர்ந்து
நன்னயத்தோடுஞ்சொன்னநாரணன்முதலாமீயிர்
மன்னுமென்றுண்டோரயிவாழ்மின்களென்றுசொன்னான். (௧௦)

என்றலும்விழிநீர்சோரவிதயநெக்குருகமேனி
துன்றியமயிர்கள்யாவுஞ்சுச்செனநிரைத்துத்தோன்ற
மன்றலந்துளவோனுநிமுனிவரர்வணங்கியேத்திப்
பொன்றிகழ்கனிச்சியோனுேடின்னவைபுகலலுற்றார். (௧௧)

தத்துவதரிசனமுரைத்தவத்தியாய முற்றிற்று.
ஆ. திருவிருத்தம்—௧௪௫.

பதினொன்றாவது
யோகமுரைத்தவத்தியாயம்.

கோங்கிளமுகிழைவென்றுகுலவரையெட்டுமுட்க
வீங்கியதடமென்கொங்கைவேற்றடங்கண்ணிபங்கர்
சாங்கியமனைத்துநின்பாற்கேட்டனந்தவத்தின்மேலோர்
நீங்கரும்யோகந்தன்னைநிகழ்த்தெனநிகழ்த்தலுற்றான். (௧)

மன்னியயோகந்தன்னால்ஞானம்வந்தெய்துமந்த
வுன்னருஞானந்தன்னால்யோகம்வந்தினிதினெய்து
மின்னவையிரண்டுங்கைவந்திறைஞ்சினேன்றனக்கியான்மற்
றன்னியனல்லனன்றேன்றன்னுடனொருவனாவேன். (௨)

சூனியமாகித்தோற்றுந்தன்மையாஞ்சொரூபமேந்த
மோனமாம்யோகந்தன்னாற்சிந்திப்பாரதனைமுற்று
மானவர்பாவயோகமென்பரொன்றேடுங்கூட்டி
மீனமில்யோகந்தன்னைமகாயோகமென்றுசொல்வார். (௩)

எமையுளத்திருத்தும்யோகந்தனக்குமற்றேனைத்தேவர்
தமையுளத்திருத்தும்யோகநிகரெனச்சாற்றலாமே
யமைவுறவென்னையுள்ளத்திருத்தியஞ்செழுத்துமோர்ந்தோ
ரிமையவராகிவாழ்வாரென்பதற்கையமின்றே. (௪)

என்னருடன்றிலென்னையிதயத்துட்காண்பதல்லா
லென்னருளில்லோர்கோடியிவுளிமாமகங்களாற்றிக்
கன்முகடேறிப்பன்னாட்காய்கிழங்கருந்தியெய்தா
வுன்னருந்தவஞ்செய்தாலுமென்னிலைபுணரொணாதால். (௫)

இயமநன்னியமமேத்துமாசனம்பிராணயாம
முயர்புலனுளத்தில்வாங்கும்பிரத்தியாகாரமோங்கு
நயையுடனிச்சந்சேர்த்துந்தாரணைதியானமென்று
மயர்வறுசமாதியெட்டிம்வகுத்தநல்யோகத்தங்கம். (௬)

ஆங்கவைகளிற்கொல்லாமைமெய்ம்மைகள்ளாமையன்பி
னோங்குமிந்தியமடக்கலொருவர்பாலேற்றிடாமை
யீங்கிவையியமமாகுமிருந்தவமறைகடேர்த
ருங்கருமகிழ்சிபூசைசவுசநன்னியமமாகும். (எ)

இருகுறங்கதனிற்பொற்றாளிரண்டையுமாறியேற்றி
மருளறவிருத்தல்பத்மாசனமெனவகுத்துச்சொல்வார்
பொருவருமுழங்காற்சந்திக்குட்புறந்தன்னுள்மாறி
விரிமலர்ப்பாதஞ்சேர்த்தல்சோத்திகமென்பர்மேலோர். (அ)

இவைமுதலாகநூலோரியம்புமாசனங்கடம்மி
லுவகைகூராசனத்தினிருந்துயர்யோகஞ்செய்த
னவையிலாதாகும்யாக்கைநண்ணியவளிபிராணன்
றவலறவதைநிறுத்தறன்னையாயாமமென்பார். (கூ)

சிறந்திடுசபத்தோடேய்தல்சகற்பமாஞ்சபத்தைநீங்கு
மறங்கிளர்பிராணாயாமமகற்பமோங்காரத்தோ
டுறைந்துயர்கின்றகாயத்திரியினையுயிர்ப்பவித்துப்
பிறங்கிடமூக்கானன்கிற்சபித்தலும்பிராணாயாமம். (க0)

போற்றிரேசகநன்மூச்சைவிடுக்குதல்புகன்றவாயி
யேற்றுதறன்னைமிக்கபூரகமாகுமென்ப
ராற்றலினிறுத்தறன்னைக்கும்பகமாகுமென்பர்
சாற்றரும்பிராணாயாமங்கைவருந்தகைமையோரே. (கக)

இந்தியம்விடயந்தன்னினியன்றிடாதடக்கறன்னைப்
பந்தமுற்றுயர்ந்தோர்பார்க்கிற்பிரத்தியாகாரமென்ப
ருந்தியினிதயந்தன்னினுச்சியிற்சித்தந்தன்னை
மைந்துறநிறுத்தறன்னைத்தாரணையென்பர்மாதோ. (கஉ)

எரியுமிழ்மழுவோர்கையின்மாறொருகரத்தினேந்து
முருவமாயென்னையுள்ளத்திருத்துதறியானமாகு
மருவமாயிடங்களின்றிமந்திரமின்றித்தன்னைத்
தெரிவுறவெங்குநோக்கல்சிறந்திடுஞ்சமாதியாமால். (கரு)

பன்னிருபிராணாயாமம்பயின்றிடுகாலமோதிற்
பின்னமாம்புலன்கண்மீட்கும்பிரத்தியாகாரகால
மன்னதுபன்னிரண்டுமுறைசெயுங்காலமாயின்
மன்னியயோகமாட்சிமருவுதாரணையின்காலம். (கச)

தாரணைபன்னிரண்டுசெய்திடுங்காலந்தாவில்
சீர்கெழுதியானகாலந்தியானமோர்பன்னிரண்டாங்
கேர்பெறவியற்றுங்காலஞ்சமாதியின்காலமென்ன
வாரணந்தெளிந்தயோகிலிலின்றோரறைந்தாரன்றே. (கரு)

சருகுநீர்புல்லுப்புழுக்கழல்புறங்காடுசந்தி
வெருவரல்கொசுகியாளின்பெருமுழவுமிகரிவெண்சாம்பர்
மருவியதலத்தின்மாந்தர்தொக்குழிவருத்தமெய்திற்
பொருவறவுயர்ந்தயோகம்புரிந்திடலிதாமன்றே. (௧௬)

வேறு.

நதிக்கரையின்வெம்பின்முறைமையிற்பலருநன்று
மதித்திடுதலங்கடமில்வண்சினகரத்தின்
விதித்திடுதலங்களினிருந்துமிகயோக
முதுக்குறைவினோடினிதியற்றல்முறையாமால். (௧௭)

என்னையுயரைங்கரனையெண்ணரியயோகி
னன்னிலையுணர்ந்தவரைநற்குரவர்தம்மை
முன்னியுயர்சோத்திகமுதற்பலமொழிந்த
தன்னிகரிலாசனமுறத்தனியிருந்தே. (௧௮)

முக்குநுனிதன்னையிருகண்கள்முகிழாதே
நோக்கியுயர்மாயைகள்விடுத்துநுவன்ஞானந்
தேக்கியெனையன்பினொடுசிந்தையினிருத்தி
யேக்கமலினோடுபணிவோர்க்கெளியனாவேன். (௧௯)

சென்னிமிசைபன்னிருவிரற்குமிசைசேர்ந்த
நன்னரறமூலமதில்ஞானநெடுநாள
மன்னவறுவாமுதலவெட்டிதழ்வயங்கி
யுன்னரியசித்திறுருவாமுயர்பொகுட்டின். (௨0)

இலங்குகதிராயிரமெழுந்தனவெறித்துத்
துலங்கிடுமெனக்குடிலைசொல்லுமொழிதன்னைப்
புலங்கொளநினைந்துவருபுற்கலனையாங்கே
கலந்துவிபுவாதல்களிகூர்தருதியானம். (௨௧)

ஓதுகமலத்திலிடையொள்ளொளிவிரிக்குஞ்
சோதிமயமாயொளிசெய்தொம்பதமதற்கு
ளாதிநடுவீறிவைகளின்றியருவாகுந்
தீதொருவுதற்பதமிருத்தல்சிவஞானம். (௨௨)

தத்துவமனைத்துமருள்சார்பிரணவத்தாற்
சுத்திசெய்துதன்னுருவமென்னுருவுதோய
வைத்துயர்மெஞ்ஞானமெனும்வான்புனலினாடி
யுத்தமவெண்ணீறணிதல்பாசுபதயோகம், (௨௩)

பிரமசரியம்பொறைதவம்பெருமகிழ்ச்சி
மருவரியவுண்மைதமம்வன்கொலைசெயாமை
பொருவில்சமம்வேதமொழியுண்மையெனல்பொய்தீ
ரரியவிரதாங்கமெனவாரியருரைப்பார். (௨௪)

இன்னவையினென்றுகுறையாதினிநியற்றின்
மன்னியிடுமிவ்விரதமாதலின்மனத்தி
னுன்னியெனைவேறறவுணர்ந்துமறையுண்மை
பன்னியிடின்முற்றுமுயர்பாசுபதயோகம். (உரு)

எவ்வுளவருத்தியுடனென்னைவழிபட்டா
ரவ்வளவினுயபலன்யாமினிதளிப்பேம்
பவ்வமிகராசைகளொழிந்துபலிகொண்டு
துவ்வுறல்புரிந்தவர்கள்வீட்டுலகுதோய்வார். (உசு)

இழவினொடுபேறுமிகராகவுளமென்னி
விழைவொடுவெறுப்பிவைகள்விட்டிகழ்தறம்மைத்
தொழுதுறவழுத்தினிகொன்றுதுணிகுற்ற
பழுதறுகுணத்தொனதன்பர்பவமில்லார். (உஎ)

பெற்றவைகள்கொண்டுளமகிழ்ந்துபெறலாகா
மற்றவைகண்மேன்மனம்விடுத்துமருணீங்கிப்
பற்றிகலொடற்றெருருபதிக்கணுறையாத
நற்றவருமென்னடியினண்ணுவர்களன்றே. (உஅ)

நல்வினைகள்பற்பலநடத்தினுமென்மேலன்
பில்லையெனிலத்தொழில்கடீவினையினெய்து
மெல்லையறுதீவினைபுரிந்திடினுமென்மே
லல்லலெறியன்புசெயினல்வினைகளாமால். (உகூ)

வெம்மையொடுதண்மைசுகதுக்கநனிமேவி
னம்மவிவைநேருறநினைந்தரியகன்மஞ்
செம்மையுடன்யான்மகிழவன்பினொடுசெய்வார்
தம்மையவர்செய்கருமமேதலைமைசெய்யும். (௩0)

என்னிடைமனத்தினையிருத்தியுயர்கன்மந்
தன்னவலவென்றுபுரிதக்கதென்மனத்தின்
மன்னியிடுமாயையிருண்மாயமறைநான்கு
முன்னரியஞானவொளியாலதையொழிப்பேம். (௩க)

பெற்றமிவரொன்னடிகள்பேணுதல்செய்யாதே
மற்றயதெய்வங்களைவழுத்தியிடுவோர்கள்
குற்றமுறுபேர்க்கதிகூட்டுவதையல்லால்
முற்றுணர்வினோர்கள்பெறுமுத்தியடையாரால். (௩உ)

வானவர்கள்யாரையும்வழுத்தியிடுபோழ்தின்
யானெனவழுத்தினர்களென்னினுறுமுத்தி
யானவர்கடத்தமுருவாயுறவழுத்தின்
மோனமுனிவோரடையுமுத்தியடையாரால். (௩௩)

கறங்குதிரிகின்றதெனவேகருதினெய்திப்
பிறந்துடனிறந்துபலபேதமுறுதேவர்க்
கறந்திகழுமுத்தியருளச்செயலுமுண்டோ
மறந்தவரையேற்றொழுதுவிடடைதிர்மாதோ. (௩௪)

மக்களொடுசுற்றமனைவாழ்க்கையினைவிட்டே
தொக்கபுலன்வென்றெனைவழுத்தினர்துதிக்குந்
தக்கவர்களப்பிறவிதன்னிலழிவின்றி
மிக்ககதியாகியகல்விடடைவரன்றே. (௩௫)

கருமிகளெனைத்தழலினேற்றுவர்கள்கற்றோர்
விரிபுனலினுறைதவனில்விண்ணில்வழிபடுவார்
தெருளொடுதெளிந்தமதியில்லவர்கள்செம்பிற்
றருவினுயர்கல்லின்மலர்சாத்திவழிபடுவார். (௩௬)

கற்றுயருஞானமிலராய்க்கருணையெய்திப்
பெற்றுயர்விரத்திதனிபெட்பினுடனுற்றோ
ருற்றசதுருத்திரியமோமெனுமெழுத்துத்
தெற்றெனவுணர்ந்திவைசெவிக்கினெனையடைவார். (௩௭)

தத்தமவொழுக்கினிடைசார்ந்தெனைவழுத்து
முத்தமருநற்கதியினென்றுவரொழுக்க
மெய்த்தகுதவங்குலம்விடுத்தவருமென்மேற்
பத்தியுளரொன்னிலுயர்முத்திபடர்கிற்பார். (௩௮)

யோகமிடைவிட்டுயிருலந்தவர்விசும்பிற்
சோகமறுமின்பநனிதுய்த்தவைதொலைந்தால்
வாகைபுனைமன்னர்மறையோர்மரபினெய்திச்
சேகறுமவ்வியோகமுறமுத்தியிடைசேர்வார். (௩௯)

ஓவறுநல்யோகமிடையூறினிடைவிட்டோர்
மேவுடல்வலித்துணையின்மென்மெலவியற்றின்
பாவமறுமற்றுழிவரும்பரமஞானங்
தாவிலுயர்ஞானமுறின்முத்திதனிற்சார்வார். (௪௦)

புன்றொழிலியற்றிழிகுலப்புலையரேனு
நன்றறிவுகல்விபொறைஞானமிலரேனு
மன்றல்கமழுந்துளவமாலையெனையுள்ளத்
தொன்றெனநினைந்தவர்தமைக்கதியினுய்ப்பேம். (௪௧)

என்றுமுனிவோருடனியம்புமிறையோனை
மன்றல்கமழ்பைந்துளவமாலுமுனிவோரும்
பொன்றவழ்மலர்ப்பதம்வணங்கிநனிபோற்றக்
குன்றவரிவெஞ்சிலைகுழைத்தவன்மறைந்தான். (௪௨)

பையரவகங்கணமணிந்தபரமன்ற
னையகமலப்பதமகத்தினுளிருத்திப்
பொய்யில்முனிவோரையருள்செய்துலகுபூத்து
வையகமளந்தமுகில்வண்ணனுமறைந்தான். (௪௩)

வேறு.

மையணிமிடற்றிறைவன்டுழாய்முகி
லொய்யெனமறைந்தபின்மறையினுண்மையைக்
கையுறுநெல்லியின்கனியிற்கண்டருள்
மெய்யருந்தவர்க்குயர்வியாதன்கூறுவான். (௪௪)

மலர்தலையுலகெலாம்வயிறுவாய்த்தரு
ளலர்முலைபாகனிங்கறைந்தஞானத்தைக்
கலைமுழுதுணர்சனற்குமாரன்காதலி
னுலைவில்சங்கவார்த்தகற்கோதினனரோ. (௪௫)

அன்னவன்சத்தியவிரதனுய்ந்திடப்
பன்னினன்சத்தியவிரதன்பண்பொடு
முன்னரும்புலகனுக்கோதினனவன்
றன்னிலையுணர்ந்தகோதமற்குசாத்தினன். (௪௬)

அங்கிராப்பரத்துவற்கருளினோதினன்
பங்கமில்கபிலர்சைகிடவன்பன்னுவான்
சிங்கலின்றுணர்ந்திடச்செப்பினாரு
டங்கியசனகனென்றந்தைக்கோதினன். (௪௭)

எண்ணருந்தவமுடையியற்பராசர
னண்ணல்வான்மீகிதேர்ந்தறியவோதினன்
மண்ணளந்தோன்மறுபவத்தின்வண்டுழாய்க்
கண்ணனுயருச்சுனன்களிப்பவோதினன். (௪௮)

பண்டருதேமொழிப்பங்கன்கூறிய
தண்டலில்ஞானமென்செவியிற்றுக்கலும்
விண்டனவெவ்வினையானுமெம்பிரான்
றொண்டர்தந்தொண்டரிற்றாயனாயினேன். (௪௯)

வேறு.

காதல்கூர்மெய்ப்புதல்வரொடுங்கிளைஞரோடுங்கடிமனைவாழ்
மாதரோடுந்தோழமைக்கொண்முனிவரொடுமகிழ்ந்துறைத்த
தீதில்ஞானப்பொருளென்னுந்தீந்தேனருந்தியகங்குளிர்ந்து
நாதன்றனதுசீர்பாடியாடியுய்ம்மினமரங்காள். (௫0)

கண்ணேவாயாயிறையழகைக்களித்துநோக்கிப்பருகுமின்கள்
வண்ணமூக்கேவாயாகவைபன்மேனிமணநுகர்மி
னென்னுமனனேவாயாகவெழுத்தோரைந்துமுறைமின்க
ளண்ணனுமஞ்செவிவாயாயருந்தியுய்ம்மினமரங்காள். (௫௧)

என்றுகூறும்வியாதன்மொழிகேட்டுமுனிவரெல்லோருந்
துன்றுமுவகைமிகூரக்கண்ணீர்சோரமயிர்பொடிப்பப் [டலை
பொன்றல்செல்லாமெய்ஞ்ஞானப்பொருளைக்கருணைப்பெருங்க
யொன்றவுள்ளந்தனிலெண்ணியுவப்பினோடுமிவையுரைப்பார்.

திருவேயினதுபேரருளாலுய்ந்தேந்திவ்வியாழ்முனிக்கும்,பொ
ருவெங்குலிசப்படையோற்கும்புவியேழ்பரிக்குமோட்டாமை,
யுருவினமைந்தநாகணையானுரைத்தகருமநல்லொழுக்கின்,விரி
யையுரைத்தியெனமுனிவர்கேட்பவியாதனினிதுரைப்பான். ()

இனிதினுரைத்தசிவகீதை படிப்போர்கேட்போ ரெழுதி
னோர், புனிதக்கேள்விமறையோர்பாற்றுகடீர்பொருளின்வகை
யுணர்ந்தோர், வினையினிங்கிவெறுவெளியாய் விமலமாகிவிபு
வாகித், தனியோர்பொருளாஞ்சதாசிவன்றன்கமலபாதந்தனி
ற்சேர்வார். (௫௪)

யோகமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௨௨௯.

பன்னிரண்டாவது

வியாதர்-கருமமுரைத்தவத்தியாயம்.

பழுத்தகேள்விச்சுவாயம்புமனுமுன்றெளித்துத்தனிபகர்ந்த
வொழுக்கங்கேட்டீரழற்கூட்டி யுன்றுமறையோரொழிற்புதல்வ
கிழைத்தமுன்னூலியாண்டிலிடுகவன்றேயிருநான்காய்த் [ர்க்
தழைத்தபருவந்தனிலிடுகவிட்டாற்றத்தமறைபயில்க. (௧)

மூன்றாற்கருமமுடிந்ததற்பின்முஞ்சிதண்டந்தோல்தரித்துக்
கொன்னேயையமேற்றருந்திக்குருவின்வதனந்தனிநோக்கி
நன்னர்மறைகள்நனிகற்கக்கற்றேயறுவைகலையுரிவைத்
தன்னேரில்லாக்கோவணமேற்றரித்துக்கலைத்தோலுரிபுனைக.()

கலையினுரிவையின்றென்னிற்கலப்பால்கறக்குங்கற்றுவிற்
புலவுசிவாப்புதுப்போர்வைபுள்ளிமானின்றோல்புனைக
வலமென்றடக்கைமேலெடுத்துப்புனைதல்வயங்குமுபவீத
மிலகுமிடக்கையெடுத்திடுநாலிலங்கும்பிராசீனவீதம். (௩)

புரிநூலிடமிட்டுயர்கருமஞ்செய்தல்புகன்றதென்புலத்தோர்
கருதினாட்டுமமைதியினன்றியாகாவலமிட்டு
மருவுகருமஞ்செய்தல்சுபகருமமமைக்கும்வழக்காகுந்
தெரியுமுஞ்சியின்றென்னிற்குசைப்புல்லேனுஞ்சிறப்பாமால்.

வில்லம்பலாசமுயர்தண்டங்கோடல்விழுமிதாமன்றேல்
மல்லல்மகத்துக்கமைச்சிட்டமரங்களைத்தாமீமதற்குச்

சொல்லுநீளமடிநொட்டுத்துகடீர்நுதல்மேன்மயிரளவாம்
புல்லுங்கணுக்கண்டோல்வழன்றலாகாதென்னப்புகலுவார். ௫

சாலவழலுக்கூட்டியல்லாற்றன்பாழ்வயிற்றுக்கிடலாகா
காலைமாலைநன்பகலிற்கடவகழித்தபியல்பாகு
மேலவிவைகள்புரிந்திலரோவிழிந்தோராவர்மறைக்கிழவர்
ஞாலம்புரக்கும்வாள்வேந்தர்நாய்கரொன்றுமூவருமே. (௬)

தெண்ணீர்மூழ்கித்தேவர்க்குமுனிவர்தமக்குத்தென்புலத்தோர்க், கொண்ணீரதனாற்றர்ப்பணஞ்செய் தொழுகுதேனினறுமலர்தூய்ப், பெண்ணோர்பாகன்சேவடியை வணங்கிப்பெரியோர்தாள்வணங்கல், நண்ணற்கரியவில்வாழ்வோர்கடனென்றெவருநவின்றிடுவார். (௭)

அபிவாதனத்தாற்பெரியோரைவணங்கலழகிதாமென்பர்
தபுதலில்லாவுயர்ஞானந்தந்தகுரவன்றனைநாளும்
விபுவாமீசனெனத்தொழுதுபழிச்சல்வேண்டும்வேதியரைக்
கபிலப்பசுவைமன்னவரைக்காணிற்றொழுதலியல்பாமால். (௮)

மறையோர்மறையோர்தமைக்காணி னன்மைகொல்லோவெனகமகிழ்ந், தெறிவேலரசர்தமைக்காணிற்பிடையிலதோவெனவுரைக்க, முறையேவணிகர்க்காணினிதிகுறைதலிலவோவெனமொழிக, வறையும்பின்னோர்க்காணினுமக் காரோக்கியமோவெனமொழிக. (௯)

அருமாமறைகளோதிவித்தோர்தந்தைதமயனடல்வேந்த,னுரியவம்மான்மாதுலன்றானுய்யப்பரித்தோன்றாய்தந்தை, மருவுன்றந்தைதனையீன்றோன்வருணசேட்டன்றந்தைக்குப், பொருவில்முன்னோன்பின்னோன்மற்றின்னோர்குரவரெனப்புகல்வார்.

தாயைப்பயந்தாடாய்க்கிளையாடாயின்மூத்தாடவ்வைதனக்
கேயதந்தைதனையீன்றாள்வளர்த்தாளத்தைகுருபன்னி
காயும்வடிவேல்மன்னவர்தங்கடிமாமனைவாழ்மடந்தையர்க
ணையத்தோடுதனையீன்றவன்னையனையரெனநினைக. (௧௧)

இன்னவோர்பத்தன்னையர்க்குமியல்முக்கரணந்தனிற்பிழைத்தோன், றன்னதுடலிற்றசைநுகர்ந்துதழல்வாய்நரகத்தெய்துவான், பன்னூறுநற்குணமுளரோயெனினுந்தந்தைதாய்பாதஞ், சென்னிசூடானெனிற்கொடியதீவாய்நரகிற்சேர்ந்திடுவார் (௧௨)

வேறு.

தாயினிற்சிறந்ததெய்வமில்லையுயர்தந்தைதன்னி
னேயநற்குருவுமில்லையென்னில்மற்றிவர்கடாளிற்
றூய்மலர்தூவிநாளுந்தொழுதிடுமறிஞர்தாமே
யாய்சுகிர்பாபிபும்பொன்னெட்டமாராயினிதுவாழ்வார். (௧௩)

தந்தைதாயருள்பெறுமற்றுன்புரிகருமமியாவு
மந்தில்கற்பலன்கணல்காதழிந்திடுங்கருத்தன்முன்ன
முந்தியசமரிலாவிமுடிந்தவரெவருநாளு
மிந்திரதிருவராகிவானிடையினிதுவாழ்வார். (௧௪)

நந்தமில்குருவின்மைந்தனன்மகம்புரிவிப்போர்க
டந்தைதன்றம்பியம்மானிவர்தமக்கிளையராகில்
வந்திடல்வணங்கலாகாவெழுதல்நல்வழக்கதாகு
மந்தில்வேந்திளையனேனுமடிதொழல்வழக்கதாமால். (௧௫)

ஓர்கெழுவேள்வியாற்றுந்திருவினோனிளையனேனும்
பேர்சொலியழைக்கவொண்ணாதிருபிறப்பாளர்தம்மை
யேர்கெழுமரசர்நாய்கர்பின்னவரிறைஞ்சல்வேண்டும்
பார்புகழ்மறையோர்வேந்தராயினும்பணியொணாதால். (௧௬)

பாழியந்தடந்தோள்வேந்தன்வணிகர்சீர்படைத்தாரேனும்
வாழியதென்பதல்லால்மறையவர்வணங்கலாகா
வேழையர்க்கன்பன்றெய்வமிருபிறப்பாளர்தெய்வ
மாழ்சுடரங்கியெல்லாவுயிர்கட்குமதிதிதெய்வம். (௧௭)

பித்தைநற்கருமமாயுள்வியன்கிளைநிதியமைந்து
மொத்துளோனுயர்ந்தோன்விஞ்சைகருமத்தினுயர்ந்ததாகு
மெய்த்தகுகருமியாயுள்மேவினோர்க்குயர்ந்தோனுயுட்
சித்திபெற்றுடையோன்சுற்றமுடையரிற்சிறந்தோனென்பர். ()

மேதகுசுற்றமுள்ளோன்பொருள்படைத்தவனின்மேலோன்
றீதறுமறையோர்வேந்தர்தெரிவையர்கிழவர்கண்ணி
லாதுலர்நோயோர்தம்மையருநெறிதன்னிற்காணிற்
போதருகின்றோர்யாரும்விலங்குதல்புலமைத்தாமால். (௧௯)

அந்தணர்பவதிபிச்சாந்தேகியென்றறைந்துமன்றற்
பைந்தொடையரசர்பிச்சாம்பவதிநற்றேகியென்று
மெந்திரவணிகர்பிச்சாந்தேகிநற்பவதியென்று
நந்தலிலையமேற்றல்நான்மறைவழக்கமாமால். (௨௦)

தாயவட்கிளையாளத்தைதன்னுடன்பிறந்தாளொள்ளார்
மேயதன்வருணைத்துள்ளார்விடுதோறையமேற்றல்
ஆயனவாகுந்தாயத்தார்தொழுகுரவரில்லி
னையநற்பிச்சையேற்றலிழிபுவேறிலையேலாகும். (௨௧)

ஐயமேற்புழிமற்றொன்றில்மனம்விடாதுணையாடாமற்
பையெனவேற்றவையம்பயிற்புருதுண்டல்பண்பா
மெய்தின்மற்றொருவன்விட்டிலுகர்ந்திடலாகாதென்று
மொய்பெனவடக்குநோக்கியுண்டலுந்தீதாமன்றே. (௨௨)

செங்களிர்பொருவுங்கால்கைமுகமெனச்சிறந்துதோன்று
மைந்தினுமீரத்தோடுமருந்துகவருந்துமுன்னு
நந்துறலவியின்றபின்னுநன்கிருசமனஞ்செய்கச்
சிந்தையிலீசன்பாதஞ்சிந்தனைசெய்கமாதோ. (௨௬)

வியாதர்-கருமமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௨௫௨.

பதின்மூன்றாவது

சுத்தாசமனமுரைத்தவத்தியாயம்.

உண்ணினீர்நுகரிற்றும்மினுறங்கினீர்மூழ்கின்வீதி
நண்ணின்மெல்லறுவைசுற்றினங்கையர்முலையிற்றோயி
னெண்ணருமறைகளோதினிருமலம்விடுக்கினீமங்
கண்ணுறினிருகாற்றூய்மைகருதியாசமனஞ்செய்க. (௧)

இழிகுலத்தினர்மிலேச்சர்சூத்தியர்மிச்சிலேய்ந்தோர்
பழுதில்பின்னவரைத்தீண்டிலவரொடும்பகரிற்கண்ணீர்
விழினுடற்புண்ணீர்சோரின்விதித்தவாசமனமோர்காற்
றெழுதகப்பண்ணல்வேண்டுமென்றனர்சுருதிநூலோர். (௨)

புனிதமிலாடைமாந்தர்மயிர்புனைகோவணந்தீ
வனிதையர்பசுத்தமேனிமற்றிவைதீண்டில்வண்புல்
லினியநீர்பூமிதீண்டிற்புனிதமென்றிசைப்பர்வென்னீர்
தனினுரைப்புனலிற்சுத்தாசமனமாற்றுதறீதாமால். (௩)

சென்னியிற்கழுத்திற்றூசுசேர்ந்திடிலுடுத்தசோமன்
மன்னியவிருபான்முந்திகுடுமிமற்றவிழினிற்பிற்
றன்னிருகால்கைநீர்தோய்ந்திலவெனில்மழைத்தண்ணீரி
லின்னகைபுரியிற்சுத்தாசமனநன்கியற்றலாகா. (௪)

அடியினிற்கழல்கள்சேர்த்துமாசனத்திருந்தும்பாயிற்
படியினிற்கிடந்தும்வார்த்தை பகர்ந்துமெண்டிசையும்பார்த்து
மடிமையிற்குனிந்துநின்றுமார்பினால்துறந்துந்தூய்மை
விடுநுரைபுழுக்களங்கம்விரவுநீர்நோக்காதேயும். (௫)

பின்னவன்புனிதமில்லான்கொணர்ந்தநீர்தனிலும்பெட்பி
னுன்னருமுவர்கலங்கலுற்றநீர்தனிலுமோங்கி
மன்னுமேல்விரல்களானும்வயங்குமாசமனஞ்செய்தல்
நன்னெறிவழக்கன்றென்னநான்மறையுரைத்தவன்றே. (௬)

அந்தணரிதயங்காறும்புனல்செலவரசர்வெய்ய
நந்துறழ்களத்தின்காறுநனையநல்வணிகர்நாமட்
டுந்துநீர்தோயச்சுத்தாசமனநன்குவந்துசெய்கப்
புந்திகூர்பின்னோர்நீர்தொட்டிதழ்தொடிற்புனிதமாகும். (௭)

வேறு.

அங்குட்டமூலவரை யொழுகுபுனலரும்பிரம தீர்த்தமாகு ந், தங்குற்றதம்சனிக்கும்பெருவிரற்குநடுவொழுகுதண்ணீர்நூ ய்தில், பொங்குற்றபிதிர்தீர்த்தங் கனிட்டிகை மூலத்தின்மேற் பொழியுந்தெண்ணீர், ரெங்குற்றமாதவரும்பிரசாபத்தியதீர்த்த மென்பர்மாதோ. (அ)

விரலுனியிற்பொழிதெண்ணீர் தனைத்தெய்வதீர்த்தமென் றும்விளங்குகேள்வி, யிருடிகடந்தீர்த்தமென்றுமியம்பிடுவர்வி ரன்மூலத்திருக்குநீரு, முறைசெயினப்பெயரதாமுள்ளங்கைப்பு னலதனைச்சோமதீர்த்த, மருவருமக்கினிதீர்த்தமெனவுரைப்பர் முழுதுணர்ந்தமதிவல்லோரே. (௯)

அருள்பிரமதீர்த்தத்தைமும்முறைகொண்டங்குட்டமூலந் தன்று, லிருமுறைவாயினைத்துடைத்துப்பெருவிரலையனாமிகை யோடியையக்கூட்டி, மருவுமிருகண்ணிலொற்றியங்குட்டந்தற் சனியின்மருவக்கூட்டிப், பொருவரியகொடிமூக்கிற்புனிதமுற முறையினிருபுறமுநீவி. (௧௦)

சிறுவிரலினங்குட்டஞ்சேர்த்தியிருங்கேள்விபெறுசெவியி னிவி, நெறியினடுவிரலோடுமங்குட்டமமைத்திருதோ ணிலவ வொற்றி, யுறுவிரலைந்தையுங்குவியா வுரத்தமைத்துச்சென்னி யினுமொற்றநூலின், முறைதலையிற்பெருவிரலினுனியினைச்சே ர்த்தனுநெறியாய்மொழிவர்மாதோ. (௧௧)

மும்முறைநீரருந்துவதற்கனந்தனுயர்வானவர்கண்மும்மை த்தேவ, ரம்மவெனவியக்குவர்வா யிருமுறைதைவந்ததனலலை நீர்க்கங்கை, செம்மைபெறுங்காளுந்தி யுவக்குமிருகண்டொட லாற்பருதிதிங்க, டம்முளமன்புறுமூக்குத்தைவரலான்மருத்து வர்களுவப்பரன்றே. (௧௨)

செவிதொடலாலங்கிவளியுவக்குமிதயந்தொட்லாற்றேவர் யாரு, முவகைபுரிகுவர்சென்னியொற்றுதலாற்புருடனுளமகி ழ்ச்சிகூரு, நவையறுசுத்தாசமனஞ்செய்போதில்வாயினின்று நழுவுந்தெண்ணீர்த், துவலைதனைமிச்சிலெனவிகழற்கமெய்யினி டைத்தோய்தலாகா. (௧௩)

மதுவற்கநுகர்ந்திடினுமுயர்சோமபானத்தும்வளர்பூங்கன் னல், சிதைவுற்றகனிகிழங்குதின்றிடினுநாறடைகாய்தின்றபின் னும்,விதியுற்றவாசமனம்புரியாமலொழிந்திடினும்விதியாமென் னக், கதிர்முத்தவடங்கிடக்குமிருதடந்தோள் மனுமுன்னங்கழ றினுல். (௧௪)

வெண்கலந்தாம்பிரங்கையினிருப்பநீர்விடின்மிச்சில்மேவி லாங்குப், பண்புனைவுற்றினைக்கீழ்வைத் தாசமனம்பண்ணிநீர்ப்,

படுத்திக்கொள்க, வெண்கலங்கையகத்திருப்பமிச்சிலுமினாதுக ளாயினுய்த்திடாது, தண்புனலினாசமனந்தான்புரியிற்பாத்திர மும்புனிதமாமால். (௧௫)

வேறு.

ஆறலைகள்வர்வெய்யபுலிவழக்கருதுதூய
ஆறுநீரில்லாதகானத்துள்ளிருட்பிழம்பினேகின்
வீறுயர்பொருள்கள்கைக்கொண்டிருமலம்விட்டானேனும்
கூறியபொருள்கள்யாவும்புனிதத்திற்குறையுறுவால். (௧௬)

முப்புரிநூலைத்தூயவலச்செவிமேலத்தேற்றி
செப்பியபகல்வடக்குத்திசையினையினிதுநோக்கி
மைப்படுகங்குற்போதிற்றென்புலமருங்குநோக்கி
யிப்படிதரையிற்புல்வைத்திருமலங்கழித்தல்வேண்டும். (௧௭)

தருநிழறன்னினீற்றிற்சந்தியிற்கிணற்றிற்சூழ்வில்
வளைநெடுங்குடுமிதன்னில்வயங்குதேர்மறுகிற்புற்றி
னெரியினீமத்திற்பைம்புற்றரையினில்வயலின்விட்டிற்
கரியினிலுமியினுவின்கோட்டத்திற்கபாலந்தன்னில். (௧௮)

உழுதமென்புழுதிதன்னிலுவர்நிலத்துயர்பூங்காவில்
முழுகுதண்டுறையிற்கோயின்மறையவர்மாதர்முன்னர்
வழியினினடக்கும்போதின்வண்டுகிலின்றிக்காலிற்
கழல்செரீஇக்குடைகைப்பற்றிக்கதிர்மதியுடுக்கணோக்கி. (௧௯)

நின்றுழியிடிந்தகோயின்மருங்கினீள்குழியின்மிச்சில்
துன்றநீண்மலங்கள்முன்னர்விட்டுழித்தொறுக்கள்முன்னர்
நன்றறிகுரவர்முன்னரிருமலம்விட்டோர்நாளு
மொன்றுதற்கரியதீயநரகின்வீழ்ந்துழப்பரன்றே. (௨0)

கலங்கனீர்க்குழியிற்சேர்ந்தசேற்றுமண்கட்வுள்வைகு
மிலங்கொளிவிரிக்குங்கோயிலிடத்துமண்கரியிற்காலி
னலங்குநீர்க்கயத்துட்டேயவழியினினைந்தமண்ணுற்
றுலங்கிடச்சவுசம்பண்ணறகாதெனச்சொல்வர்மேலோர். ()

கால்களிற்குளனிலாற்றிற்கரையுறுமண்ணைவவ்விச்
சால்வரும்பாத்திரத்திற்றண்புனற்கொணர்ந்துபோதந்
தேல்வுறநூல்கள்சொன்னமுறையினில்மண்களிட்டுப்
பால்படுசவுசம்பண்ணிப்பண்பினாசமனஞ்செய்க. (௨௨)

சுத்தாசமனமுறைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௨௪௪.

பதினான்காவது

பிரமசரியமுரைத்த வத்தியாயம்.

குரவனமுனபாதநீட்டல்குறுநகைபுரிதலன்றேன்
மருவியநாமங்கூறல்மற்றவன்போலச்செம்மாந்
துரைபகர்ந்திடுதலன்றேனடத்தல்போலொதுங்கல்வெய்தின்
வெருவரமுனியிற்றானும்வெகுண்டுரையாடலாகா. (௧)

அருளுடைக்குரவன்பன்னியடிமலர்பணியவேண்டி
னிருவிரலகலநின்றாங்கிறைஞ்சிடல்வேண்டுமன்றேன்
றிருவளர்கமலபாதஞ்சேய்மையினின்றுதாழ்ந்து
பரிவொடும்வழுத்தலாகாதெனமறைபகருமன்றே. (௨)

ஏதிலார்குருவையெள்ளிற்செவிபுதைத்தகலவன்றேன்
பாதமென்மலர்கள்மேனிபரிவுடன்றைவந்தென்றுங்
காதலாலேவுமுன்னர்க்கருதியவெவையுஞ்செய்க
மேதகுகுரவன்றூயநிழலினைமிதிக்கொணாதால். (௩)

அன்புடைக்குரவனூர்ந்தமரவடிமிதித்தலாகா
பொன்புனையமளிதன்னிற்பொருவிலாசனத்திற்றானு
மின்புறவிருத்தலாகாபணித்தன்றியேகலாகா
முன்புறக்கிடந்தியாவுங்கேட்டிடன்முறைமையன்றே. (௪)

சந்தநீண்மாலைமாதர்தடமுலைநயத்தலாகா
மைந்துடைக்கோபஞ்சூதுமையிடலெண்ணெயாட்டல்
சுந்தரமகளிர்கூத்துப்பாட்டினைவிழைதருஞ்சல்
முந்தியவுப்புநெய்யோடயின்றிடல்முனிந்துகோறல். (௫)

பற்கறையெறிதலாடிநோக்குதல்பழையதுண்டல்
பொற்புறவணிதல்மேனிபொலிவுறத்திமிரியாட
லற்புடைக்குருவையெள்ளன்மகளிரோடசதியாடல்
முற்படுபிரமசாரியொழுக்கினின்முறையதன்றே. (௬)

சுடுமண்வேய்ந்துயர்ந்தமாடச்சூழலிலறையினேங்குங்
கொடிநெடுந்தேரில்வெற்பிற்குரவனோடிருக்கவன்றேன்
கடிதினிவடக்கிற்பின்னேநடக்கக்கால்விசையினோடிற்
றொடருமெய்ந்நிழலேபோலத்தானும்பின்றொடர்ந்துசெல்க. ()

அல்லனபுரியுமேல்வைவிடித்துரையாடுகின்றோர்
நல்லவைபுரிகிற்போர்கள்குருவினற்புதல்வன்பார்க்கிற்
பல்பகலிளைஞரேனும்வழிபடல்பண்பேயன்றி
மெல்லடிவருடல்மிச்சிலருந்துதல்விழுமிதன்றே. (௮)

பொருந்தியகுருவின்மிச்சில்பொங்கியவிழைவினன்றி
மருந்தெனநுகர்த்தல்வேண்டுங்குரவன்வைநிகழ்த்தினீங்கித்
திருந்தியவொழுக்கந்தன்னைத்திறம்பிடினவனைநீங்கி
யருந்தவம்பழுத்தநீதிக்குரவனையடைதல்வேண்டும். (௯)

குரவன்றன்குரவன்றன்னைக்குரவனில்வழுத்தல்வேண்டுங்
குரவன்பால்வைகுமேல்வைத்தாய்தந்தைகுறுகினாேற்
குரவனதருளினாலேகும்பிடல்வேண்டுமற்றைக்
குரவன்றன்பன்னிமக்கள்குரவனில்வழுத்தத்தக்கோர். (௧0)

குருவினன்குலத்திலுற்றபன்னியைக்குருவைப்போல
வெருவொடும்பணிதல்வேண்டும்வேற்றுவன்னத்திலுற்று
மருவுமிற்கிழமைபூண்டமங்கையர்தம்மையேத்திப்
பரவுதலொழுக்கமென்னநீதிநூல்பகருமன்றே. (௧௧)

நெரிசுரிகருமென்கூந்தலுளர்தல்கால்பிடித்துநீவல்
பொருவருமெண்ணெய்வரக்கிப்பூம்புனலினிதினாட்ட
லரிறபமேனிசுண்ணத்தரில்பெறத்திமிரியாட்டல்
குருவினன்மனையாட்கென்றுமியற்றுதல்குற்றமாமால். (௧௨)

குருவினன்மைந்தன்றன்சேய்பொருணனிகொடுப்போன்கோறி
லரசிளங்குமரன்சுத்தனன்பினேன்வழிபாடுள்ளோன் [ன்
றருமமேற்சிந்தைவைத்தோன் சாற்றுமுன்பொருள்கடேர்வோ
றிருவினனிவர்க்குவிஞ்சைசெப்புதல்சீர்மைத்தாமால். (௧௩)

வேதமோர்நான்குங்கற்றோர்விழைந்துவேதாங்கங்கற்றோர்
நீதறுமிதிகாசங்கள்புராணங்கடெளிந்தமேலோர்
காதலினிவுளியெச்சங்கணக்கறப்புரிந்தோரொய்து
மேதகுமுத்திவீட்டின்மேவிவீற்றிருப்பரன்றே. (௧௪)

வைகறைப்போதினாற்றின்மருவிநீர்படிந்துநாளுஞ்
செய்கடன்முற்றிகாயத்திரியோராயிரந்தெளிந்து
மைகெடச்செபித்தறன்னைச்செபவெச்சமென்னவாய்ந்த
பைகெழுசுடிகைப்பாந்தள்பரித்தபார்பகருமன்றே. (௧௫)

ஏதமில்மறைகள்காயத்திரிக்கிணையாங்கொலென்னப்
போதவிழ்கமலப்புத்தேளுயர்புலக்கோலாற்றூக்கி
மேதகவுடைத்துக்காயத்திரியெனவியந்தானென்றுற்
றீதறுமதற்குநேராயாதினைச்செப்பலாமே. (௧௬)

ஆவணித்திங்கட்டன்னிற்கன்னிமாதத்தினாதல்
மேவுபூரணையில்வேதம்விளம்புதறுடங்கியோதித்
தாவருந்தைமாதத்திற்பூரணைதன்னின்முற்றி
யோவில்மாசியினில்மீட்டும்வளர்பிறைக்கோதல்வேண்டும். ௧௭

தேய்பிறைதனிற்புராணந்திகழிதிகாசமங்க
மாயுநற்றருமநூல்களற்பொடும்பயிறல்வேண்டுங்
காய்கனற்குறைமாரிமின்னிடிகலுழ்தல்தன்னூர்
மேயினவாகினமிக்கால்விழுமறையோதலாகா. (௧௮)

ஊர்வயிற்சவங்கிடப்பிற்பூசையோடெலியூடாடிற்
பார்கடுக்கெய்திநாய்க்குப்பலசனமிடையின்மேவி
யோர்கெழுகிரகமொன்றோடொன்றாயினனையாமத்திற்
சீர்கெழுபருதியத்தஞ்சேர்வுழியோதலாகா. (௧௯)

மன்னவரிறப்பிற்றூயவான்சுடரரவுதீண்டி
னுன்னருமேகோதிட்டமுண்ணிலோர்மூன்றுநாளப்
பன்னருமறைகளோதறீதெண்ணெய்பரிவினாடிற்
றன்னமர்தலையினிங்காதெனினுநூல்சாற்றொணாதால். (௨௦)

சூதகமுடையார்விட்டிற்றுய்த்தநாட்புகையின்மூடிச்
சீதவெம்பனிப்பெய்யுற்றகாலையிற்றிறல்கொள்வேந்தர்
மேதகவமர்செய்நாளினுவர்க்களின்விருப்பமெய்தி
யாதரவோடுசெய்யுமட்டகச்சிரார்த்தநாளின். (௨௧)

எழிலைம்பாலைவெள்ளினறுவிலியிலவிருப்பை
நிழலிற்குரவன்றோமனீளுயிருலந்தநாளின்
வாழியமறைகொடுப்பின்முடிப்பினோர்மூன்றுவைகல்
வீழ்மறையோதலாகாவோதிடினாயுள்வீவார். (௨௨)

சந்திவந்தனையேயாதிகருமங்கட்குரைக்கத்தக்க
சுந்தரமறைகட்கின்றுச்சொல்லியதோடம்யாவும்
வந்துறுகருமநூல்வண்புராணம்வேதாங்கம்யாவு
நந்துமீருவாவினன்றிநாடொறுநவிறலாமால். (௨௩)

வேதமும்வேதமார்க்கமேவியநூலுமின்றித்
திறுநூல்கள்யாவன்றெரித்தனனவனைப்பஞ்ச
பாதகனென்னச்சொல்வர்பழமறைதெரிந்தமேலோ
ரீதுயர்பிரமசாரிக்கியம்பியவொழுக்கமாமால். (௨௪)

நூல்பலகற்றோனேனும்பொருணனித்தறியானென்னில்
மாலொடும்வாளாகத்துமாவிறக்காகம்போல்வ
னேல்வுறக்கற்றநூலின்பொருடெரிந்திருநூல்சொன்ன
சீலமேயொழுகுகின்றோன்சிவனடிநிழல்சேர்வான். (௨௫)

ஈண்டியாமுரைக்கப்பட்டவொழுக்கத்தினியைந்துநின்றோர்
வேண்டுருவாகியொன்றாய்விமலமாயருவாயென்று
மாண்டகுதுணைக்குன்றாகிமதிவகிர்க்கண்ணிசூடு
மாண்டகைபாதநிழலடைந்துவிற்றிருப்பரன்றே. (௨௬)

பிரமசரியமுறைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—௩௦௦.

பதினைந்தாவது

இல்லறமுறைத்தவத்தியாயம்.

அரியமறைகளொன்றெனினுமிரண்டாயினுமூன்றாயினுஞ்சிர்
விரவுமறைகணான்கெனினும்வெளிறின்றாகக்கற்றருள்செய்
குரவன்மகிழப்பொருள்வழங்கியவன்றன்னருளிற்குழைகிழிக்கு
முருவவொண்கண்மடந்தையைவேட்பானுஞற்றவேண்டுமால்

விரதமாற்றியருமறைகள்விதித்தசமாவர்த்தனஞ்செய்து
பரிவால்வளர்த்தமயிர்நகங்களெறிந்துகடவுட்பசுஞ்சாந்த
முருகுகமழுநறுந்தெரியல்முளரியலர்த்துங்கதிரனைய [தி
குருமாமணிக்குண்டலமணிந்துகழைத்தண்டூன்றிக் குடையேந்

தண்ணங்கதிர்கான்மதியனையவெண்டுசணிந்துதடந்தோளில்
வண்ணம்வாய்ந்தவுத்தரியம்போர்த்துச்சென்னிதனில்வயங்க
றுண்ணூல்வனைந்தவெண்பட்டுச்சுற்றிநோன்றாள்கழல்செருகித்
தெண்ணீரமைந்தகமண்டலங்கைசேர்த்துப்புனிதமாயொழுகி.

தனதுமரபினிழிபுயர்ச்சியின்றியொத்தமரபுதனிற்
கனியினறியதெள்ளமிர்திற்கன்னற்பாகிற்கோற்றேனி
லினியமழலையந்தீஞ்சொலுடையாளாகியிலகொளிய [ளாய்
பனிவெண்டிங்கள்முகத்தினளாய்ப்பயந்தாண்மர பிற்பிறந்தில

மதியினமைச்சர்யேவற்குச்சிலதியாகிவனப்பினுக்குப்
புதுமென்மலரிற்றுக்கணங்காய்ப்பொறையிற்பூமிதேவியாய்
முதிருமன்பிற்றாயாகிமுயங்குமின்பக்கலவிதனக்
கிதயமுருக்குங்கூத்தியெனவீறிலின்பம்பயந்தாளாய். (௫)

கற்பிற்கினியவருந்ததியாய்க்கண்ணுமனமுந்தனிகவரும்,பொற்
பிற்குயர்வானுருப்பசியாய்ப்புனிதவொழுக்கமுடையளாய்,வெ
ம்போரனுவாமெனப்புடைத்துச் செம்மாந்தெழுந்துவீங்குமு
லை,யற்போருருவுகொண்டனையவணங்கைவிழைவின்மணம்புரிக

தழுமுற்றெய்தாதண்ணூந்துநரளங்கிடந்துவெயிலெறிப்ப
முழுமுற்றாகந்தனிகவர்ந்தமுகிண்மென்முலையார்பூப்பெய்தி
யிழுமென்றிரைநீர்படிந்தநாடொட்டுப்புணர்தற்கியம்பியிடும்
வழுவினாளின்மகப்பெறுதல்தலைக்கீடாகமணந்திடுக. (௭)

பிறந்தநாளிலட்டமியிற்பேசுமாறும்பக்கத்திற்
சிறந்தபதினான்காந்திதியிற்பருவந்தன்னிற்றுவாதசியின்
மறந்துமாதர்முகின்முலையிற்றழுவலாகாதெனவகுத்தா
ரறங்கூர்தருமநூல்வகுத்தமனுவைமுதலாமறிவினரோ. (௮)

அருமாமகஞ்செய்தழற்கருமமொழியாதியற்றலருமறைக
ளுரைசெயொழுக்கந்தனிலொழுகல்பஞ்சவெச்சமியற்றறம்
கருமமிழுக்காதன்னாட்டுவேந்தையோர்காற்கண்டிருத்தல்
பொருவில்தேவாலயந்தொழுதல்புகன்றவில்வாழ்குநர்கடனே.

புரிந்தபாவமறையாதுபுகறல்வேண்டுமியாவருக்கும்
பெருந்தின்றாகவியவன்கள்செய்யவேண்டுமகிழ்தந்தை
திருந்துமொழுக்கந்திறம்பாமனிற்றல்வேண்டுமடகெனினும்
விருந்திறேறுடுதுகர்வதலால்வாளாநுகர்தல்விடவேண்டும். (க0)

காமவெகுளிமயக்கமுதல்தீமையெவையுங்கடிந்திடுத
லோமசெந்தீயூட்டியன்றியுண்ணுதொழிதல்தாய்தந்தை [ன்
தோமில்பசுநான்மறைக்கிழவர்போற்றித் தொழுதறுய்ப்பனக
பாமாய்யிளோஞர்மகிழ்சிறப்பவனையாதென்றும் பார்த்தருந்தல்.

தருமமாற்றனன்னெறியிற்பொருள்களீட்டறம்மொழுக்கின்
மருவுங்காமந்துய்த்தறம்மூர்வாழ்த்துவாழ்தலிகழ்வனகள்
புரிதல்செய்யாதுவப்பனவேபுரிதலுலகத்தொடுமொழுகல்[தார்
கருணையொடுமில்லறம்புரிவோர்கடனென்றெவருஞ் சுட்டுனைத்

அயலோர்துன்பமுறிற்றுமழுங்கலன்பர்முதுக்குறைவிற்
பயிலும்விஞ்சைபதினன்குங்கற்றல்ஞானம்பகர்ஞானத்
தெயில்மூன்றெரித்தகுறுமூரலெந்தையுவக்குமெஞ்ஞான்றுஞ்
செயிர்தீர்மெய்ம்மையிழுக்காதோர்துறக்கமதனிற்சேர்குவரால்

அல்லல்புரிந்துபொருளீட்டல்காமந்துய்த்தலிவையாகா
யொல்லும்வகையினறமியற்றுங்காலைதுன்பமுற்றிடினும்
புல்லுந்தருமம்விடாதொழுகப்புகலுமுயிர்களனைத்தினுக்கு
நல்லசெய்யக்கடவுளனைமறையையிகழ்தனவையாமால். (கச)

இன்னதருமவொழுக்கநூல்பயின்றோர்கேட்டோ ரொழுகி
னோர், மன்னுபொருளின்வகையுணர்ந்தோர்வழுக்காததனின்வ
ழிநின்றோர், பொன்னங்குடுமிநெடுவரையிற்கமலப்பொகுட்டி
னினிதுறையு,மன்னமூர்ந்தமறைக்கிழவனுலகத்தினிதினடைந்
திடுவார். (கரு)

இல்லறமுணர்த்தவத்தியாயமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்—ஙகரு.

பதினாறுவது

பொதுவிதியுணர்த்தவத்தியாயம்.

பூதமெவைக்குந்துன்பமியற்றும்பொல்லாருந்
தீதுபயக்கும்பொய்ம்மொழிபேசுந்தீயோருங்
காதலின்மற்றோர்திலர்நன்பொன்கவர்வோரும்
பாதகராகிந்நரகத்திற்படுவாரால். (க)

சேடன்விரிக்குமாயிரவாயிற்றிகழ்நஞ்சு
மோடுகெடற்குளுற்றிடுநஞ்சும்விடமன்றே
பாடமைவுற்றதேவர்பொருட்பன்மறையாளர்
தேடியபொன்னேநஞ்சிவைகொள்ளிற்றீதாமால். (௨)

மன்னவர்செம்பொன்வேதியர்பைம்பொன்வளர்தேவர்
நன்னிதியோர்சற்றுயினும்வவ்வநசையுற்றுற்
றன்னுடைமுன்னேக்கைப்பொருளும்போய்த்தாழ்வாகி
யின்னலுழக்குமாருயிருக்குமீறுமால். (௩)

புல்லொடுமெல்லென்றண்மலர்மூலம்புனல்காட்ட
மெல்லடகோடுநன்கனிவிண்ணேர்கடனுற்றற்
கில்லேகொலென்னினீகுனரற்றுற்கேளாதும
வல்லேகவர்ந்தும்பூசனைசெய்தன்மரபாமால். (௪)

இருநிதியீட்டற்கேதிலர்போற்றுஞ்சமயத்தின்
மருவியுவப்பினன்னிதியெய்திமறித்தேயும்
பொருவருமுன்னேத்தன்சமயத்திற்புக்கோர்க
ளருநரகத்திற்பற்பலதுன்பமடைகிற்பார். (௫)

வேதமிகழ்ந்தோர்வேதியர்தம்மையிகழ்வுற்றோர்
தீதுறுபஞ்சவிராத்திரமெய்துந்திறனில்லோர்
மேதகுதத்தங்கன்மம்விடுத்தோர்பாசண்டத்
தோதியகன்மத்துற்றவர்பாவத்துழல்கிற்பார். (௬)

குரவனையெள்ளுந்தீமையின்மிக்கப்புறங்கூறக்
கருதுதல்பாவமற்றதுதன்னிற்கயோகண்ணும்
பரமனையில்லென்றேதுதல்பாவமெனவெண்ணி
மருவருமீசன்சேவடியெண்ணல்வழக்காமால். (௭)

வடித்தசெழும்பொருளுன்மறைதேருமறையோரின்
விடைக்கொடிவேதியனன்பனைநாளும்வெகுண்டோர்க
ளுடெப்புழுகத்தன்கூன்கொழுவானிலுழுகின்றோர்
கிடைப்பரிதாகியதங்குலமேன்மைகெடுத்தோரோ. (௮)

தம்மினிழிந்தகுலத்தினின்வேட்டவர்தக்கோரா
மெய்ம்மையினேனைவிடுத்துவெளிற்றறிவுள்ளோனை
யம்மவெனத்தனிமெச்சியளித்தவரயலார்தஞ்
செம்மயிறுரமணந்தவர்நன்னெறிசேராரோ. (௯)

பின்னவராணைசெலுத்தியநாட்டிடைப்பேய்பூத
மின்னல்செய்நோய்கள்வருத்தியநாட்டினில்யாதேனு
நன்னெறியின்றியநாட்டினில்முத்தியதிலதென்னும்
புன்னெறியோருளநாட்டினில்வைகுதல்புன்மைத்தே. (௧0)

இமயநெடுங்கிரிவிந்தியவெற்பினிடைமேவுங்
கமைகொள்பெரும்புவிபுண்ணியபூமிகலித்தோங்கு
மிமிழ்திரைநன்கடலெய்தியநன்னதியிரலைப்போத்
தமைவுறுநன்னிலம்விட்டயலேகுதலாகாதே. (௧௧)

புண்ணியநன்னதியின்கணைவைகுனர்பொற்போடு
மண்ணியதாயுமகன்றுமுறைந்திடலாகாதா
லெண்ணிமுனிந்தவர்தம்மைமுனிந்திடலியல்பாகுந்
தண்ணளியுற்றவர்தம்மைமுனிந்திடறவ்றாமால். (௧௨)

வடுகரிழிந்தகுலத்தினர்புற்கசர்மயிர்கொல்வோர்
படுகொலைசெய்குனர்பதிதர்களித்தவர்கருநாட்
ருடனொருபந்தியிலுண்டிடலோர்மனையிடைவைகல்
நடைபயினூல்கள்பயின்றிடனட்புறனவையாமால். (௧௩)

ஈங்கிவரோருழையெய்திடின்வார்புனலெரிசாம்ப
ரோங்குயர்தூணுடைவாயிலிடைப்படவுறைகுற்றாற்
பாங்கவரோடுறைபாவமகன்றிடுமயலார்தங்
தீங்குறுவெம்பழிகுறளைபகர்ந்திடறீதாமால். (௧௪)

வேறொருவன்கழனிப்பயிரானினமெய்குற்றார்
சீறியவர்க்குரைசெய்தறிகைப்புடைநோயாள
ரூறுறவைகுதல்பூப்புறுமாதரொடுரையாட
லாறறிவோர்பெறலீதல்விலக்குதலாகாதே. (௧௫)

இந்திரவிற்பரிவேட்டமழன்றெழுமீமத்தீ
யந்தில்பிறர்க்கெதிர்சுட்டியுரைத்திடலறிவன்றால்
மைந்துறுபலசனமுள்ளவர்தம்மொடுமாறாகா
சிந்தையுவந்துதனைப்புகழ்கின்றதுதீதாமால். (௧௬)

மாதவரைக்குரவன்றனைமேதகுவானோரை
வேதியரைச்சதுமாமறையைப்புகன்மெய்ந்நூலை
யேதமுரைத்தவரிம்மையின்வெந்துயரிடைமூழ்கிப்
பாதகருற்றிடுபாழ்நரகத்திடைப்படிவாரால். (௧௭)

சொல்லவொணாதெனநூல்களுணர்த்தவைசொல்லற்க
புல்லியவுட்பகைகொள்ளுதனன்மைபொருந்தாதா
லல்லல்புரிந்தவன்வெம்பழிசொல்லுதலாகாதா
னல்லவரைப்படுபாவியெனச்சொனன்றன்றே. (௧௮)

ஆடியினீரிறுதித்தெழுமேல்வையிலத்தத்திற்
கூடுறுகாலையில்வெய்யவராவெதிர்கொள்போதின்
மூடிமுகத்திரைநண்டுகிலால்முழுமதிதன்னைச்
சேடமைவெங்கதிரைத்தனிநோக்குதறீதாமால். (௧௯)

வெண்டுகிலீங்கியமாதரைமைந்தரைமெய்யுளக்
கொண்டவர்தம்மையிழிந்தகுலத்துறுக்கீழோரை
தண்டலிறங்குதல்முற்றிடுமென்மைதணக்கோரைக்
கண்டிடலீதெனமூதறிவாளர்கரைந்தாரால். (௨0)

எண்ணெயினீரிடைதன்னிழனோக்குதலில்வாழ்வா
ருண்ணல்புரிந்தெதிர்நோக்குதன்மிச்சிலொடுரையாட்
லண்ணுறுபேயர்பிணிப்புறுமாவின்முன்னண்ணல்
புண்ணியனன்மனையாளொடருந்தல்பொருந்தாவால். (௨௧)

பின்னவருக்குயர்ஞானமுரைத்திடல்பெட்போடு
மன்னம்வழங்கல்கருங்கலையீருரியான்பால்நெய்
கன்னனறுஞ்சுவைதேனுறுவெண்டயிர்காரெள்ளோ
டின்னவைமாமறையாளரளிக்குதலேலலாதே. (௨௨)

வேறு.

வெகுளுநரோடு மாற்றிடைச்செல்லின் வெந்துயருறுவர் தாமளித்த,மகவினைவிஞ்சைகற்பதற்காகவருத்துதல்வேண்டுறுங்கீழைத், தகுதியார்சேவைபுரிகுதலாகாமுனிவினாற்பொருள் கொளறகாதாற், றெருகுமனைக்கிழத்தி குணத்தினைப்பிறர்க்குச் சொல்லுநர்தோமுறுமவரோ. (௨௩)

தன்பழியுரைத்தல்குறங்கின்வைத்தன்ன மருந்துதறன்னுயிர்மெலித்தல், வன்புடைநகத்தாற் புவியினைக்கிறல் வருநதியிடைநதிதொட்ட, லென்பெழவறுமைப்பசியினொந்திடினுமேற்றவர்க்களித்திடாதருந்தல், புன்புலானுகர்தல்புனைதுகிலின்றிப் புனலிடையிறங்குதலாகா. (௨௪)

தீயினைக்கடத்தல்சென்னியின்வரக்கிமிகுந்தநல்லெண்ணெய்மெய்தேய்த்தல், பாயபையரவமாட்டுதல்பிடித்தல்பஞ்சவிந்தியங்களுந்தொடுத்த, லாயுமந்திரத்தைப்பிறரொடுமுரைத்தலைநுதினம்விழைவினேற்றருந்த, லேயவெவ்விடனுந்திரிகுதலெவையுமுரைக்குதலெவைகளுமருந்தல். (௨௫)

அளவறவருந்தலொழிந்திடாதென்றுமன்னலார்முலைநலநுகர்தல்,கிளைநரம்புள்ளுமின்னிசையமிர்தங்கேட்பதையன்றிமெஞ்ஞானம், வளர்செவிகுளிரக்கேட்டிடாதொழிதல்வருபுனல் காலினாலுழக்கல், தளர்வுறுமிலேச்சர்பாடைகள்கற்றறவொரைவுரைப்பர்கற்றுணர்ந்தோர். (௨௬)

இருந்தவாசனத்தைக்காலினாலுதைத்தல்காரணமின்றியேயுடலைப், பொருந்துறச்சேட்டைபுரிகுதல்வாளாபுன்னகைபுரிதல்வாளுகிரைத், திருந்துநிண்மயிரைப்பல்லினாற்கடித்தறீம்புனனீந்தல்பொய்யுரைத்த, லருந்துயிலெழுப்பலிளவெயிற்காய்தலழலிடையிருபதங்காய்ச்சல். (௨௭)

காலினாற்றனதுகாலினைத்தேய்த்துக் கழுவுதல்பாழ்மனைத்
துயிறல், மாலொடுந்தன்னின்மூத்தவடன்னை மருவுதலுண்கல
த்துமிழ்தல்,சால்வுறுமிமப்புகையிடைநிற்றல்சலத்திடைமும்ம
லம்விடுத்தல், கோலியவோடமொருவனுய்க்கடத்தல்குற்றமெ
ன்றுரைப்பர்கற்றுணர்ந்தோர். (௨௮)

இடக்கையாலேனுந்துகிலினாற்றேய்த்துமிரும்புனலருந்து
தலாகா, சுடர்த்தொடிமாதர்தங்களைப்புனலுட்டோய்தறீதுயர்
சநுக்கத்தில், வடுப்படாதோங்குந்தருவினைக்குறைத்தன்மயிர்க
ரியென்புவெண்சாம்பர், முடைத்தலைகூர்முட்புனலிடைச்சேர்
த்தன்முறையலவென்பர்மூதுணர்ந்தோர். (௨௯)

தீயினையுந்திக்கீழுறத்தாங்கறீக்கெதிர்தனதுதாணீட்டல்,வா
யினாலூதறீயொடுந்தீயைக்கூட்டனீர்வார்த்தஃதவித்தல், மேய
வாடையினான்முறத்தினாற்கையால்வீசிமூட்டுதல்மனைவளர்க்கு,
மேயமுத்தீயுங்கருமகாலத்தினன்றியேதொடுத்தறீதென்பார்.()

தன்றமரிழித்தருன்பிறர்க்குரைத்தறவறிலான்றனைத்தவறு
ரைத்தல், மன்றவேறொருவன்றனையவனாட்டல் கலைகணீயென்
னவந்தடைந்தோர்க், கொன்றியதுயரமியற்றுதல்பறவைவிலங்
கினமொன்றொடொன்றிகலிப், பொன்றிடவிடுத்தல்பிறர்மனை
நயத்தல்பொறிவழியொழுகுதலாகா. (௩௧)

உரைநனிப்கர்ந்துநகைத்துநின்றுலவியுண்குதல்புனலிடை
வாளா, மருவியேகிடத்தல்மகவினைக்குரிய நல்லரைமகம்புரிவி
த்த, லிருளிடையேனுந்தமியனாயேனுந்தொடுகழலின்றியும்வே
டர், தருமமொன்றறியார்தம்மொடுநெறியிற் போதனற்றரும
மன்றுமால். (௩௨)

அந்தணர்நிழலைச்சினகரத்தோங்குமவிரொளிச்சிகரநன்னி
ழலை, நிந்தையிற்கடத்தல்யோகியையதியை நிகரறுமுனிவரை
யிகழ்தல், வெந்தொழிகரியிற்சாம்பரின்மயிரின் மிதித்திடல்வி
ளங்கியதூளி, வந்துமேலடையநிற்றல்தோய்துகில்நீர்மேற்படி
வதிந்திடறீதாம். (௩௩)

நிறைகுடப்புனலையெடுத்துநீராட்னித்தலைகுடித்திடலருந்த
லுறுபிணியாளனிழிந்தவனிவரோடுயர்மரநீழலினிருத்த [ன்
லறைபுனனிறைத்த கமண்டலங்கையி னின்றியேயருநெறியேக
முறையலவென்றுமனுமுதலாயமூதறிவாளர்கட்டுரைத்தார்.()

பொதுவிதியுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௩௪௯.

அல்லவையொழித்தலுரைத்தவத்தியாயம்.

பின்னவர்மறுமையில்லெனுஞ்சிதடர் கள்ளுநர்பித்தர்மட்பகைஞர், கன்னலிற்கனிந்ததேமொழியரங்கக்கூததியர்கடவுளையிகழ்வோர், மன்னியசோமநன்கொடிபகர்வோர்மருத்துவர்மகளிர்சொற்கேட்போ, ரின்னர்பாற்செந்நெலரிசியேற்றுண்டலிழிதகவெனமறையியம்பும். (க)

ஆண்குறியொழிந்தோர்வேத்திரக்கரத்தரொதிகள்வாளாவமூகின்றோர், மாண்பிகந்தறத்தின்வழியினையொழிந்தோர்யாவருமிகழவாழ்கின்றோர், நாண்கெடவளையாதருந்துநர்மறையோர்நன்குலத்துதித்தும்வாட்டொழிலாற், காண்டகவுய்யுந்திருவிலியிவர்பாலேற்றிடல்கழிமடனுமால். (உ)

அந்தணர்சிறந்த கடவுளர்போந்த வதிதியர்க்களித்திடாரடிசில், சிந்தையில்வெகுண்டுபரிவிலாதளிப்போரடிசில்வெஞ்சினப்படைபகர்வோர், தந்தருளடிசில்மாமனன்களிக்குமடிசில்தங்குரவனல்லடிசில், வெந்துயர்விளைக்கும்பசியினாலருந்தல்வெவ்வினைத்துயரடைந்திடுமால். (ங)

தன்னுடம்பைங்கூழ்விளைக்குநராயர்தன்னுடையடியர்நாவிதர்கள், முன்னரோதொன்றுதொட்டுநல்லன்பினொழுகுவோர்களைகளையுமுழுது, மின்னருள்புரிகென்றிரந்துவந்தடைந்தோர்தன்பயிரிடுகுநரளித்த, மன்னியபைங்கூழிடுக்கண்வந்தெய்தின்வாங்கினுமாமெனவுரைத்தார். (ச)

வெண்டயிர்நெய்பாலெண்ணெயெண்ணெயினால்வெந்தவைவிரவுபிண்ணாக்குக், கொண்டவல்பொரிமாப்பின்னவரளிக்கிற்கோடலுமாகும்வெள்ளுள்ளி, தண்டவில்கரியசெய்யவாமுள்ளிதவிர்ந்திடும்பிசின்பழையனக, ளுண்டிடலாகாமுட்டைநீள்சுரைக்காயொழித்திடனன்கெனவுரைத்தார். (ரு)

பாலுடன்கலந்தமோர்மிகுவெண்ணெய் பற்றறப்பிழிந்தபிண்ணாக்குச், சால்வுறுமுள்ளமயக்குறுமவைகள் கங்குலில்வெண்டயிரொண்ணெய், யோவிடுவிலங்குகொன்றுவிற்றருந்தலூனினல்கழிமயிர்புழுவோ, டேல்வுறுமன்னம் பூத்தவடொட்டசோறிவையருந்துதறீதாம். (சா)

வள்ளுகிர்ஞமலியாளினங்கோழிமானுடர்காக்கைமோந்தனகள், கொள்ளுதலாகாமறித்துமட்டனகள்கும்பினகுட்டநோயாள, ரொள்ளுறவிழிந்தோர்தொட்டவையாகாவொட்டகமாடிவற்றுறுபால், துள்ளுகன்றின்றிக்கைவலங்கறந்தபாலினைதுய்த்திடலாகா. (எ)

ஈன்றநாட்பத்திற்கறந்தபால்கன்றுகொளுத்தியபாலிவையா
கா,தோன்றியவன்றில்பைங்கிளியெருவைதோலடிப்புள்ளுநாய்
கோழி, வான்றிரிகாக்கையன்றியேமுதலாமண்புனல்விசும்பினு
ள்ளவையி, னூன்றினவுள்ளங்குறிப்பினுநரகத்துலப்பினுள்கிட
ந்துழன்றுவரால். (அ)

குறுமுயலுடும்போடாமைமுட்பன்றி யழுங்கிவைகொண்
டருந்தினுமாம், நறியமீன்புள்ளிமானிவையதிதிக்களித்தபினய
ர்தலுமாகு, முறுபிணியாளர்மருந்தெனப்புலவூனுண்கினுமாம
சுமுதலா, யறைதருகருமத்தருந்திடவிதித்த புலாலருந்தார்நர
கடைவார். (கூ)

கள்விலைபகர்வோர்கள்ளினைநுகர்ந்தோர்கள்ளருந்துதற்கு
டன்படுவோர், கள்ளருந்தினைமமகிழுநர்நரகிற் கற்பகாலங்கி
டந்தழுந்தி, யெள்ளுறுமூத்ரியமலப்புழுவாகிமலதநினைநுகர்ந்து
பின்னிறந்து, விள்ளருங்கொடியாவரவரகின்மீட்டுமீட்டுழன்
றுநாள்கழிப்பார். (க0)

சொல்லியவெள்ளி முதலியகருமத் தருந்துதலன்றியூன்சு
வையா, தொல்லையின்விடுநர்தினந்தொறுமிவுளி மகம்புரிபலத்
தினையுறுவா, ரல்லலுற்றழுங்கவுயிர்த்தொகையனைத்துமருள்பு
றங்கொடுக்கிடநசையாற், கொல்லுநர்தாமேதமதுமெய்த்தசை
தின்றருநரகிடைக்குடியிருப்பார். (கக)

அல்லவையொழித்தலுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௩௯0.

பதினெட்டாவது

நித்தியகன்மமுறைத்த வத்தியாயம்.

முட்டாளாத்தச்செழுஞ்சூட்டுக்கோழிகூவுமுனந்துயில்தீர்ந்
தொட்டார்புரமூன்றெரித்தோன்றாள்தருமநீதியுவந்தெண்ணி
மட்டார்சோலைவிளிம்புடுத்தவருபேராற்றங்கரைநண்ணிச்
சிட்டாமலநீக்குழியுரைத்ததருமமியாவுஞ்செய்தியற்றி. (க)

வருபால்மரத்தின்முண்மரத்தின்வகுத்தநடுவிரற்பருமத்
துரைசெயீராறங்குலத்தில்வடுவில்சினைபினெடுத்துரைத்த
பொருவினுளிற்பற்கறைகளெறிந்தகொம்பைப்புனறேய்த்து
விரியுக்கீறுதெறிந்திடுகவிரலால்விளக்கறிதென்பார். (உ)

புனிதமாகத்தெண்ணீரின்மூழ்கவதுவும்புரைதீர்ந்த
மனுவாதியரோரெழுவகையாய்வகுத்தார்வகுத்தபடியுரைப்பி
னினியதருப்பைகிர்சோய்க்கிட்டிலங்குமேனிதைவருதல்
முனிவர்பிராமதீர்த்தமெனவிதனையெடுத்துமொழிகுவரால். ()

பால்வெண்ணீற்றின்மெய்முழுதுமாடலுயர்பாவகதீர்த்தஞ்
சாலப்பசுவின்காற்றூளியாடல்தனிமாருததீர்த்த
நீலமுகில்வெங்கதிரொளிக்குங்காலைபெய்யுநீராடல்
நூலோருயர்திவ்வியதீர்த்தமென்னமுன்னறுவன்றனரால். (௪)

தெண்ணீர்படிந்துதுளைந்தாடல்சிறப்பினுயர்வாருணதீர்த்த
முன்னிர்மையின்மெஞ்ஞானத்திமூழ்கலுயர்மானததீர்த்த
மண்ணல்யோகந்தனிலிருத்தலழிவிலான்மதீர்த்தமென
வென்னுமிவற்றினுடலினுக்காங்கியன்றதீர்த்தமாகுகவே. (௫)

தேவர்முனிவர்தென்புலத்தோர்க்கினிதினூட்டியாசமன
மேவவியற்றித்தெண்ணீரின்மீட்டும்படிந்துதருப்பைநுனித்
தாவுபுனன்மந்திரத்தால்மெய்தெளித்துச்சந்திவந்தனைசெய்
தோவில்காயத்திரிசெபியாவுபத்தானத்தின்றொழில்முடிக்க. ()

உள்ளத்திருளும்புறத்திருளு மொழிக்குங்கதிராய்ச்சனாதனமா
துள்ளற்கரியசோதியாயசலமாகித்தனியமிர்தாய்ப் [ய்
பிள்ளைப்பிறைசேர்முடியோனாய்க்குடிலையாகிப்பிரமமாய்த்
தெள்ளுமறைதேர்புருடனாஞ்செங்கேழ்ப்பருதிதாடொழுவாம்

மதுகையுருவாய்க்கபர்த்தியாய்வயங்கும்விச்சுவேசுரனாய்
முதிருமறையாய்நித்தியனாய்முக்கட்சுடராய்ப்பினாகியாய்
விதியாய்நீலகண்டனாய்க்கண்ணாயிரங்கொள்மெய்ப்பொருளாய்
பதுமமலரின்முகையவிழ்க்கும்பர்ச்சன்பாதம்பணிந்திடுவாம். ()

அழிவில்பாவநாசனாய்ப்பரமேசுரனாயனைத்துயிரா
யொழிவில்பரமசோதியாயுயிர்கட்கெல்லாமுள்ளுயிராய்த்
தழுவுமுலகாயுலகினுக்குப்பதியாய்த்தையல்பங்கினனாய் [வாம்
விழைவினைவையுந்தனிநுகரும் விண்ணோன்செய்யதாடொழு

என்றுவேதன்மறையனைத்துந்தெளித்துப்புகலாதவவிதியை
யொன்றுமுளத்தோடணாம்பானுருவேற்றிடின்மேலெய்துகுட்
துன்றுமுயனோய்முதலாயநோய்களகற்றுந்துயர்நீங்கும் [டங்
வென்றியரசர்பூதத்தாற்கோளாற்றுன்பமேவாவால். (௧௦)

இனையநியமத்தொழின்முடித்துமனையினெய்தியாசமனம்
புனிதநெறியிற்றனியியற்றிப்பொங்குதழற்காரியமுடித்து
வனைபொற்கொன்றைமுடியோனைத்திருமாறன்னைவழிபட்டு
நினைதற்கரிதாமருங்கேள்விக்குரவர்பாதநினைந்தேத்தி. (௧௧)

அரியசெழுமாமறையோதி யன்பினடைந்தோர்க்கோதிவித்துத்
தருமநூல்கள்பலதேர்ந்துபொருளீட்டுதற்காய்த்தாவருஞ்சீர்
நிருபர்கோயில்மருங்கெய்திநிகழ்த்துமாசிபலகூறி
மருவுமில்வாழ்வினுக்குரியபொருள்கண்மதிப்பிறலீட்டி. (௧௨)

வெய்யகதிர்கானன்பகலிற்றருப்பையொட்கோமயம்விறாதேன்
பெய்யுமலர்மண்ணரிசிகையிற் கொடுபோய்ப்பெருகுநதிக்கரை
னெய்திமண்கோமயமெய்யினினிதிற்பூசிமறையோதி [யி
யையபுனலிற்படிந்தாடியாசமனத்தின்றெழில்முடித்தே. (கரு)

தேவர்முனிவர்தென்புலத்தோ ருவப்பச்சிறந்ததற்பணஞ்செய்
தோவாதுச்சிக்கடன்கழிப்பினொளிர்கண்டிகைநன்படிகமணி
தாவிறண்டாமரைமணிகைதாங்கித்தோய்ந்ததுகிலென்னில்
மேவுபுனலுட்புலர்ந்ததுகிலென்னிற்கரையின்மிசைசமிக்க. கசு

உச்சிக்கடவகடன்கழிப்பின்மனையினெய்தியுயர்கொன்றைச்
செச்சைக்கண்ணியந்தனன்றுளேத்திப்பஞ்சாக்கரஞ்சபியா
விச்சையோடுந்தியானித்துப்பஞ்சப்பிரமமினிதேத்திப்
பச்சைப்பரியேழுடைத்தேரோற்பழிச்சியெச்சமைத்தாற்றி. ()

மறுகின்றோர்பசுக்கறக்குமமைதியதிவானேக்கிக், குறுகும
திதிதனையெதிர்ந்துபூசையாற்றிக்கொடிபதித, ருறுநோயாளரி
றிகுலத்தோர்க் கடிசில்தரையினிடையுய்த்தாங், கறையும்படி
தென்புலத்தோர்க்காய்மறையோனொருவற்கமுதூட்டி. (கஅ)

அருந்தக்கவளமொன்றிடுதல்பிச்சையதினன்கினிதளித்தல்
பொருந்தியிடுமக்கிரமாகும்புகலுமவைநான்மடங்களித்தல்
திருந்துமந்தகாரமென்பவிவற்றிலியன்றதினந்தோறும்
வருந்தின்றுகத்துறந்தோர்க்குமேற்றோவர்க்கும்வழங்கிடுக.

ஏற்போரின்றேற்பசுவின்முனமிடுகப்பஞ்சமாவெச்ச [ர்
மாற்றல்செய்யாதருந்துகின்றோர்விலங்குபறவையாய்ப்பிறப்பா
போற்றவுரியகடவுளைப்போற்றுதருந்தும்பொறியிலோர்
மாற்றவருந்தீவினைப்பயத்தாற்பன்றியாகிமலநுகர்வார். (கஅ)

கிழ்பானேக்கியினிதுண்டோர்க்காயுள்நிறைபுங்கிளர்திரியந்
தாழ்வின்றுயருங்குடதிசையேநோக்கியருந்திற்றணப்பருஞ்சீ
ரூழிற்பெருகுந்தென்றிசையைநோக்கியருந்திலொருகாலும்
வாழ்மாந்தர்வடதிசையைநோக்கியருந்தல்மாண்பன்றே. (ககூ)

வேறு.

காழ்பழுத்துமணங்கமழும் பொரியரையகறுஞ்சாந்தக்கல வைபூசி, யூழினருந்துதற்கிசைத்ததிசைநோக்கிப்புனிதமாயுண் ணல்வேண்டுஞ், சூழ்சுடரோனத்தவரைத்தோய்பொழுதுமுதயத்துந்துய்த்தலாகா, வேழ்பரித்தேர்க்கதிரவனே யராத்தீண்டு முனமருந்தலியல்பதன்றே. (உ0)

திங்களினைப்புலிகிழலோடராத்தீண்டுமுனமருந்தறீதாமற் றைக, சங்குலிற்பானுள்கழியத்தீண்டியகலினுமருந்தறீதுகாமர்,

வெங்கதிர்வெண்மதியரவோடத்தமிக்கில்மீட்டுமவை யுதித்தாலன்றித், துங்கமறைநூலுணர்ந்தோரருந்துதறீதெனவெடுத்துச்சொன்னாரன்றே. (உக)

விருந்தினர்க்குங்கடவுளர்க்குமதிதிகட்குமல்லாமல்விரும்பித்தாமே, யருந்துதற்கென்றாக்குநருமகவிழைவினன்றியின்பமருந்துவோருந், திருந்துமூதுக்குறைவெய்தக்கற்பதன்றித்திருவெய்தக்கற்கின்றோரும், பொருந்தவரிதாயமக்கட்பதடியெனக்கற்றுணர்ந்தோர்புகல்வரன்றே. (உஉ)

சென்னிதனிற்றுகில்வனைந்து மிருதாளிற்செருப்பணிந்துஞ்சிரித்துநின்று, மன்னும்வடதிசைபார்த்துந்தலைசொரிந்துநனைந்ததுகில்வனைந்தும்வன்பின், முன்னமயின்றனகள்ராப்போதத்துமுடைகலத்துமொழிந்துஞ்சாய்ந்துங்,தன்னவிருகைகொண்டுமூர்தியின்மீதிருந்துமுணல்தருமமன்றே. (உ௩)

ஒடிதருமாசனத்திருந்தும்வறிதுநிலத்திருந்துமிச்சிலுடையோனுயு, மடுவனகளனைத்தினையுமுத்தரியமின்றியுநல்லன்புஞ்ண்ட, மடவியர்தம்மொடுங்கரிமேல் வைத்துமுச்சிப்போதினுமேல்வளர்ந்தகங்கு, லிடையிருள்யாமத்துமுணல்தீதென்னநீதிநூலியம்புமன்றே. (உச)

இவ்வண்ணமருந்துகவென் றுரைத்தமுறைவிருந்தினொடுமினிதினுண்டு, மைவண்ணக்களத்தெந்தை யிதிகாசபுராணமிவைமகிழ்ந்துகேட்டுச், செவ்வண்ணமருண்மாலைப்போதினுறுகடன்கழிப்பித்திகழ்மின்றேன்று, மவ்வளவுதனியிருந்தாங்கரும்பேற்றகாய்த்திரியையமைவினோதி. (உரு)

கங்குலிடைவிருந்தினொடுமதியொடுங்கிளையினொடுங்களிப்பினுண்டு, செங்கமலவிதழ்பொருவுகைகாலினீரங்கள்புலர்த்தித்தேங்கோள், மங்குனிகர்கருங்கூந்தல்வாள்மருட்டுமோட்டரிக்கண்மதர்த்துவிங்குந், துங்கமுலைமனைவியொடு மெல்லணையினின்பமுறத்துயிறல்வேண்டும். (உசு)

வடபுலத்துங்குடக்கினுமென் றலைவைத்துத்துயின்றிடல்தீதாகுமாண்பி, னொடிதருமஞ்சத்திடையுஞ்சினகரத்துமுறைந்திடுமாசனத்துஞ்செம்பொற், குடமனையகொம்மைமுலைமடவியாக்குடங்கையுறத்தழுவிக்கொண்டு, விடலருமன்பிற்றுயிலதீதென்னவருமறைகள்விளம்புமன்றே. (உஎ)

நித்தியகன்மமுறைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௩அஎ.

பத்தொன்பதாவது
சிரார்த்தமுறைத்த வத்தியாயம்.

தேய்பிறையிற்பதினன்காம்பக்கமொழிபக்கமெல்லாஞ்சிறந்தவாரு, மேயமுடன்றென்புலத்தோர்க்கூட்டிடுதற்கமவாசிநிகழ்த்துமின்ற, தூயதிதிகளிற்றாய்தாமயனத்திலராச்சுடனைத்தின்டுநாளி, லாயுமாதப்பிறப்பிற்பிறந்தநாடனிலிறந்தோர்க்களித்தல்வேண்டும். (௧)

அட்டகையிலிருபத்தேழெனவறையுநாட்களிற்றென்புலத்தோர்க்கூட்டல், சிட்டர்விழுமியதென்பர்குறுமுயலின்றசையாமைத்தசைகடிதில், கட்கமிருகத்தினறுந்தசைகிழட்டாட்டின்றசைகள்களோங்குந்தென்னனி, ருட்டிரியுமூலோகிதமீன்றசைகளினிற்றென்புலத்தோர்க்கூட்டலாமால். (௨)

காரையிலேயுளுந்துபழங்காய்கிழங்குகுளச்சென்னெற்கன்னற்கட்டி, சிர்கெழுமெண்ணெற்பொரிகோதும்பையவையிவம்பயறுசெந்நெலான்பா, லார்வமொடுமிவைகளினற் கங்கைபிரயாகைமுதலாயதூய, வேர்கெழுபுண்ணியதலத்திற்றென்புலத்தோர்க்கிளிதூட்டலியல்பாமென்பார். (௩)

புரவிநாளூட்டில்வயப்புரவியெய்தும்பரணிதனிற்பொங்குமாயுள், மருவுகார்த்திகைதன்னிற்றுறக்கமுறுமுரோணிதனில்னமைந்தனுண்டா, மிருகசிரந்தன்னிற் காந்தியுண்டாமாதிரையில்விசயமெய்துங், திருவமரும்புனர்தத்திலூட்டினிரும்புவியனைத்துஞ்சேருமன்றே. (௪)

பூசநாளினிலூட்டிற்பொருவரியமதர்நெடுங்கண்மகளிர்சேர்வா, மாசிலாயிலியந்திற்காமமுண்டாமகத்தினிலுதியமுண்டாகுந், தேசுறுபூரத்தில்வித்தை சேருமுயருத்திரத்திற் பாவந்தீரு, மோசைபெறுமத்தத்தில் குலமுண்டாந்தென்புலத்தோர்க்கூட்டினோர்க்கே. (௫)

சித்திரையில்மகவுண்டாஞ்சோதியினுதியஞ்சேரும் விசாகந்தன்னி, லத்தமுண்டாமனுடத்திற்கிளையுண்டாங்கேட்டையினிலவளியெய்தும், வித்தகமாமூலத்தில் விளைபயிர்மெய்வலியுண்டாம்வியன்பூராடத், துத்தமமாஞ்சித்தியுண்டாந்தென்புலத்தோர்க்கினிதாகவூட்டினோர்க்கே. (௬)

உத்திராடந்தன்னிற்காமமுண்டாமோணத்திற்றலைமையெய்துஞ், சத்திபெறுமவிட்டத்தின் விழைந்ததுறுஞ்சதயத்தின்வலியுண்டாகு, மெய்த்தகுபூரட்டாதிவெள்ளியுறுமுத்திரட்டாதியில்விடெய்துஞ், சித்திபெறுமிரேவதியிலாயுளுண்டாந்தென்புலத்தோர்க்கூட்டினோர்க்கே. (௭)

நந்தையிற்புத்திரலாபந்துதிகையிற்கன்னிகைமூன்றாந்திதியினன்றி, னுந்துபரியுறுநான்காந்திதியிலானுற்றிடும் பஞ்சமியினேங்கு, மைந்தனுண்டாமோராறும் பக்கத்தில்வாதுவெல்லுமேழாம்பக்கத்தந்தமில்பைங்கூழுளவாமன்பினொடுந்தென்புலத்தோர்க்கருத்தினோர்க்கே. (அ)

அட்டமியுதியங்கிடைக்குநவமியினிலொருகுளம்பா மனைத்துமெய்து, மிட்டமுறுந்தசமிதனிலிருகுளம்பாமவையெய்துமரிவாரத்தி, னுட்டெளிவாம்வெள்ளியுறுந் துவாதசியிற்பொன்னுளவாம்பதின்மூன்றென்னச், சிட்டர்புகழுந்திதியிற்றென்புலத்தோர்க்கூட்டின்மிகச்சிறப்புண்டாமால். (௯)

பொருந்துமியற்சதுர்த்தசியின்வாளமரினுயிர்திறந்துபொன்றினோர்க்கே, யருந்துறவூட்டிடநன்காமல்லாமலிறந்தோர்க்கூட்டுதறீதாகுந், திருந்தியிடும்பதினன்காம்பக்கத்தினினைத்தவைகளனைத்துஞ்சேரும், வருந்தியுளமகிழ்ந்திறந்ததென்புலத்தோர்க்கினிதூட்டுமான்பினோர்க்கே. (௧0)

வெங்கதிரோன்வாரத்திற்றென்புலத்தோர்க்கூட்டிடநோய் மேவாதாகுந், திங்கள்வாரத்தூட்டிற்றிருவெய்துஞ்செவ்வாயில்விசயமுண்டாம், பொங்குபுதவாரத்திற்காமமுண்டாம்வியாழத்திற்பொருந்தும்விஞ்சை, சுங்கவாரத்தினிதியுளவாகுஞ்சனிக்கூட்டிற்றுன்னுமாயுள். (௧௧)

காலமிடமேற்கின்றோர் நன்கெய்தவிறந்தோர்தங் கடன்களாற்றிற், சிலமிகவுடைத்தாகுங்கலைமதியைவாளரவுதீண்டினல்லாற், பால்படுகெங்குலினிறந்தோர்க்கூட்டல்தகாதரும்புதல்வர் பரிவினீன்ற, வேலையினுந்தென்புலத்தோர்க்கூட்டுதனன்கெனமறைகள்விளம்புமன்றே. (௧௨)

வெண்ணீறுபூத்தசெழும்பூசுணிக்காய்வழுதுணங்காய்சுரைக்காய்மிக்க, பெண்ணைநறுங்கனியவரைக்காய்கோவைவரகரிசி பேழ்வாய்மேதி, நண்ணியபால்தயிரொடுதிப்பிலியிவைகடென்புலத்தோர்தமக்குநாளுந், தண்ணளியாயினிதூட்டலாகாதென்றருமறைகள்சாற்றுமன்றே. (௧௩)

தென்புலத்தோர்க்கூட்டினரோ வீடடைவரெனமறைகள் தெரித்தவாற்று, லன்பினுடன்றென்புலத்தோர்க் கெல்லீருங்கடனாற்றியலைநீர்க்கங்கை, மின்பயிலும்புரிசடையவெண்ணீறுபூத்தொளிரும்பவளக்குன்றின், பொன்புரையுஞ்சேவடியேபுகலாகவடைந்தின்பம்பொருந்துவீரே. (௧௪)

சிராத்தமுறைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௪0௧.

இருபதாவது

சிராத்தபாத்திரமுரைத்தவத்தியாயம்.

குலத்தினிலொழுக்கின்ஞானக்கொள்கையினறிவின்மிக்க
நலத்தகுகேள்விதன்னிலுயர்ந்துளோர்தாமெனண்பாற்
சொலத்தகுஞ்சிராத்தந்தன்னில்வரித்திடுந்தூயோரல்லார்
விலக்கருங்கிளையரொக்கோத்திரரெனும்விடுக்கல்வேண்டும். (௧)

தத்துவமுணர்ந்தோனாகியோகியாய்த்தலைமைபூண்டோ
னுத்தமசிராத்தமுண்டற்குரைத்தவனவனெய்தானேல்
மெத்தகுவேதங்கற்றபிரமசாரிகளைவேண்டு
மத்தகையவரெய்தாரேலாற்றுமில்லறத்தோர்வேண்டும். (௨)

சங்கிவரடையாரொன்னிலீன்றவட்பயந்தோன்மாம
னுங்குடனுதித்தான்மைந்தன்மகன்மகன்குரவனன்பி
னோங்கியவிருத்தியுக்கனுயர்மகம்புரிவித்தோர்கள்
இங்கறுசிராத்தங்கனுண்டிடுந்திறத்தினேரோ. (௩)

தோழனைச்சிராத்தத்தூட்டல்தொன்னெறிவழியதாகுந்
தாழ்கொடும்பகைஞர்க்கூட்டல்தகாமறைகல்லாற்கூட்டிற்
பாழிவாய்த்தருகட்காலபடர்தருசிலையின்மாட்டிக்
காழிரும்பொழுகக்காய்ச்சிவாயிடைக்கவிழ்ப்பரன்றே. (௪)

தன்னொழுக்கிழந்தோன்மூன்றுதலைமுறைவேதமோதாப்
பின்னவரனையோர்மற்றைப்பின்னவர்க்கேவல்செய்யும்
பன்னருமறையோர்கொண்டபார்ப்பனியுயிர்க்குமுன்னஞ்
சொன்னவேளாளர்மாதர்த்தோய்ந்தருமகவையீன்றோர். (௫)

வாட்படைபயிற்றிவிப்போர்மன்னவர்குரவரன்பா
லூட்படக்கிராமங்கட்குப்புரோகிதநயந்துசெய்வோ
ராட்படத்தண்டஞ்செய்வோராகியவிவர்கடம்மைக்
கோட்படுசிராத்தத்துண்ணக்கூட்டிட்டகைமையன்றே. (௬)

பஞ்சராத்திரங்காபாலம்படித்துளோர்பயிலுங்கான
விஞ்சைகற்பவரொருத்தன்வேட்டவடன்னைவேட்டு
மஞ்சனைப்பெற்றோன்முன்னூல்மார்பினில்வனையான்றன்னைச்
செஞ்சவேயோதிவித்தோன்சிராத்தமுண்டிடுதற்காகா. (௭)

சொல்லுமாச்சிரமமொன்றிலிராதவர்தூயோர்போல, வல்லிதி
னவேடம்பூண்டோர்பிணரொடுமருவுமெய்யர், பல்லுகிர்கேட்
டோர்குட்டநோயரான்குறியிற்பண்பார், புல்லுதோல்குறை
ந்தோர்வெள்ளைக்கண்ணுண்டோர்பொய்ம்மைசொல்வோர். (௮)

பூத்தவட்டன்னைவேட்டோன்வேந்தனையொறுத்தோன்போற்றி
யார்த்தநல்விடுசுட்டோன்குழிசியோடினிதினுண்டோன்
மூத்தவன்வேட்குமுன்னம்வேட்டவன்முழுநோயாள [ன்.
னீத்திடுமொற்றைக்கண்ண னிகழ்ந்துபஞ்சாங்கஞ் சொல்வோ

பூண்டநல்விரதம்விட்டோன்புனைபட்வுறுப்பிலாதோன்
வேண்டியவங்கந்தன்னில்மிகுந்தவன்கைமையீன்றோன்
மாண்டகுசிறப்பிற்றீர்ந்தகுண்டகன்குறளையார்க்குந்
தூண்டியசொல்வோன்மாதர்சொல்லியமொழியினிற்போன்.()

தந்தைதாய்குரவனில்லாள்பசித்திடத்தானேயுண்போன்
மைந்தனில்லாதான்பொய்ச்சான்றுரைப்பவன்மடையனென்று
முந்துநீர்க்கடலுட்செல்வோன்செய்நன்றிகொன்றோனோது
நந்தலில்விதிதட்டுநன்மனைகோலுகின்றோன். (௧௧)

போற்றியசமயநூல்களந்தணர்தெய்வம்போற்றான்
வேற்றவன்மனையாடன்னைவிழைபவனிவர்கள்யாருஞ்
சாற்றியபதிதரின்னோர்தம்முடன்பந்திபாகா
வேற்றிருந்துண்ணலாகாசிரார்த்தவுணிவர்கட்காகா. (௧௨)

சிரார்த்தபாத்திரமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௪௧௩.

இருபத்தொன்றாவது

தென்புலத்தோர்க்கூட்டுமுறைமையுரைத்தவத்தியாயம்

உரைத்ததென்புலத்தோர்தங்கட்கூட்டிடுமுன்னைநாளின்
வரித்திடவேண்டுந்தூயமறைபயில்முனிவர்தம்மை
நிரைத்திடும்பிதிர்க்கள்யாருநீதியந்தணரையூட்டித்
தரைக்கண்வந்தவரோடுண்டுபலநனிதருவரன்றே. (௧)

வேறு.

ஒருவன்கணித்தோனபலோன்பாலுண்டறிதாஞ்சிரார்த்த
முண்டோன், மருவும்வழிசென்றிடல்புணர்தல்மறைகளோது
ல்முனிந்துரைத்தல், கருதுஞ்செபங்களினியற்றல்தீதாமென்
பர்கற்றுணர்ந்தோர், பொருவில்சிரார்த்தமிட்டோனு மிவ்வா
றியற்றல்புன்மைத்தே. (௨)

தனதுமனையில்வரைமுகட்டிற்றரங்கம்விரிக்குநதிக்கரையிற் [ற்
பனிவெண்டிங்கள்முதுகுரிஞ்சும் பைம்பொற்குடுமிசிகரத்தி
புனிதமாகுங்கோமயத்திற்பொற்பின்விளங்கமெழுக்கெறிவித்
தனையமறையோர்தமையினிதினன்பாலெண்ணெயாட்டுவித்தே

என்னையாட்புருமறையோர்தம்மையினிதினடிவணங்கி
வன்னக்கலசத்நூநீராலன்றேர்வனசத்தாள்விளக்கி
நன்னர்க்கரியவருக்கியமேமுதலாயாவுநன்கியற்றி
யன்னல்மறைவிச்சுவதேவர்பிதிர்க்களிருக்குமிடையிருத்தி. ()

பொன்னங்கலன்கள்பலபரப்பிமுல்லைமுகையின்பொற்பமைந்த
வன்னஞ்சொரிந்துகருங்கொடியமையிற்பல்காத்கைகவிப்ப
கன்னற்கட்டிதறுநெய்வைபெய்தான்றீம்பாற்கடல்பெருக்கி
பன்னற்கரியபழக்குவைகள்பஞ்சதாரையொடும்பொழிந்தே. ()

இன்னவாறுதென்புலத்தோர்க்கருத்துமேல்வையமுதிரங்கல்
தன்னதுடலம்வெயர்வொழுகிற்றல்முனிதறகாதென்ப
ரன்னங்காலாற்றன்ருதறன்கையாற்கயிகளிடலாகா
முன்னம்வேற்றுப்பிடலாகாபறவையோட்டல்முறையன்றே. ()

இரும்பாலியன்றபாத்திரத்திலிடுதறிதுமட்கலத்திற்
பொருந்தவருந்நிவித்தோர்கள் பொங்குமழல்வாய்நரகடைவர்
விரிந்தபொன்னின்வாழ்மானின்கொம்பிலத்திவியன்மரத்திற்
றிருந்தச்சமைத்தபாத்திரத்திலளித்தல்மிகவுஞ்சிறப்புடைத்தே

அயிலுமறையோரயில்வனகடீதுநன்றென்றறையிலவண்
பயிலும்பிதிர்க்களகன்றிடுவரதனாற்பகராதிருந்தருந்த
லியல்பதாகுமிறந்தோர்கட்கருத்துமெவையும்வரையாமாற்
றயையோடருந்தனன்காகும்வரைந்துநுகர்தறகாதென்பார். அ

இறந்தோர்க்கூட்டுமேல்வைதனில்வேதம்புராணமிதிகாசஞ், சி
றந்தகருமநூலினிதிற்கேட்பித்திடுதல்சிறப்பாகு, மறங்கொண்
மறையோர்ளிதருந்திக்கைபூசிப்பினவிரொளிய, நிறங்கொள்ம
ணியாசனத்திருத்திநிகழ்த்துஞ்செழும்பற்கடையுதவி. (௯)

அனையோருள்ளமகிழ்பூப்பவறுவையுயர்தக்கணையுதவி [ண்டிப்
வினைசெய்தென்னந்திசைநோக்கி யிறந்தோர்ப்பழிச்சிவரம்வே
புனிதமறையோர்தமக்குவிடைபுகன்றுவிரித்ததருப்பையினில்
வனையும்பிண்டமொருமூன்றுமலிந்துமலிந்துநிரைவைத்தே. ()

கரிசேர்தருப்பைமிசைதூவிக்கலையினுலின்றிடைசேர்த்தி
யுரியதெண்ணீர்மலிந்தொழுக்கியுவந்துபிதிர்க்கடமையேத்தி
மருவுநடுவிற்பிண்டத்தைபிளக்கிமனையாடனக்குதவி
யிருபிண்டமுமரன்மறையோர்கட்களிக்கவன்றேற்புனலிடுக. ()

உரைத்தபடியின்னிலமுழுதும்புனிதமாக்கியொழுக்கநூல்
வரைத்தசுக்காசமனஞ்செய்தியன்றவடிசில்மகிழ்விறெடு [ம்
நிரைத்தகிளைஞரோவல்செய்வோர் கருத்தினிகரின்மைந்தரொடு
விரைத்தாழ்கூந்தல்மனைவியொடும் வெவ்வேறுவிருந்தருந்தி.

அற்றைக்கங்குறென்புலத்தோர்க்கருந்தினேனுமருந்தினுங்
கற்றைக்குழலார்கதிர்முலையிற்புல்லாதிருந்தல்கடனாகு
மற்றிங்கிவ்வாறொழுகாதுமடவார்முயக்கம்விரும்பினோர்
கொற்றமறலிமுனிவெய்தக்கொடியநரகத்திடைகுளிப்பார். ()

இறந்தோர்க்கூட்டித்தன்மனையினுண்ணாதெரிவெம்பசியினால்
மறந்தும்வேறோர்மனையருந்ினழல்வாய்நரகிலிடைவிழ்வ
னறஞ்சேரன்னமேலாவேலரிசியேனுமளித்திடுகச்
சிறந்ததாகும்பின்னவர்க்காங்கரிசியதனாற்செய்கடனே. (௧௪)

வ.றுமையதனாற்புகன்றனகளேலாவென்னின்வளர்கனிகாய்
நறியமூலமெண்ணீராலெனினுமிறந்தோர்கடனல்க
வறையுந்தந்தையுள்ளோர்களாற்றொறுதாற்றிடல்வேண்டி
லுறையுந்தந்தைமுதலாகமறையோர்க்கூட்டிலுரித்தாமால்.௧௫

நல்லகருமஞ்செய்யின்றோர்நந்திமுகராம்பிதிர்கட்குச் [ட்டுப்
சொல்லுஞ்சிராத்தஞ்செய்போழ்திற் றாய்தாமுன்னூல்வலமி
புல்லும்வடக்குநுனியாக்கிப்புகன்றேரொற்றைபடாதியன்ற
மல்லல்மறையோரிரட்டைபடவைத்துத்தாய்க்குமுன்னூட்டி.

பின்னர்ப்பிதிர்கட்கினிதூட்டிப்பெட்பினேடுமினிதீன்ற
வன்னைதந்தைவருக்கத்துக்கமைவினூட்டலியல்பாகு
மின்னற்கருமமனைத்தினையுங்கிழக்குமுகமாயினிதியற்ற
நன்னரோடுமிவ்வாறுபுரியாதொழுகனவையாமால். (௧௭)

தென்புலத்தோர்க்கூட்டுமுறைமையுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௭௯௦.

இருபத்திரண்டாவது

சூதகாசூசமுரைத்தவத்தியாயம்.

அருமறையோர்ஞாதிகட்குச்சூதகமோடாசவுசமறையுங்காலை, மருவுறுமேழ்தலைமுறைக்கும்பத்துநாள்மருவியிடுமருவிறன்றாற், றிருமருவுபூசைமுதல்நல்வினைகளனைத்தினையுஞ்செய்த றீதா, மொருவரையுந்தொடலாகாவேமமும்வேறொருவனைக் கொண்டுஞற்றல்வேண்டும். (௧)

பெருந்தேவிபொறையுயிர்ந்தசூதகத்திற்றாய்நந்தைபன்னிப் பெட்பிற், பொருந்தியிடுஞாதிகளைமூன்றுநாட்செலிற்றொடலாம்புனிதஞானந், திருந்துறக்கைவந்தோனைச்செயற்கரியவருமங்கள்செய்துளோனை, வருந்தியிடுஞ்சூதகத்தோடாசவுசமொருநாளுமருவாதன்றே. (௨)

வேறு.

முன்னாலிடுமுன்னிறந்தொழியின்மூன்றுநாளாசவுசமுள
னென்னமுன்னூல்வனைந்ததற்பின்னொழியழியில்மறையோர்க்குக்
கொன்னைபத்துநாளைக்குமுளதாங்கொடியவாசவுச
மன்னுகுரவனிறந்திடிலாசவுசமூன்றுநாள்மருவும். (௩)

முல்லையருமபிறப்பன்றேன்றுமுன்னமிறப்பின்ஞாதிகட்காங்
கொல்லைமிறிப்படிந்தெழுந்தாலொழியுஞ்சூழ்ந்தவாசவுசஞ்
சொல்லுந்தந்தைதாயவர்க்குப்பத்துநாளுந்தொடர்ந்தெய்து
நல்லகுறவன்மகனிறப்பினன்னுமொருநாளாசவுசம். (௪)

குரவன்பன்னியிறந்தாலுமொருநாளாகுங்கோதில்மைந்தர்ப்
பருவமிரண்டுசென்றதற்பினிறப்பிற்பகருந்தாய்தந்தைக்
கொருபதாகுநாளுளவாமுனைக்குந்தாயத்தார்தமக்கு
மருவுங்கொடியவாசவுசமூன்றுநாளைக்கெனவகுப்பார். (௫)

வேறு.

மயிர்வினைசெய்முனமிறப்பினோர்நாள்நீள்குடுமியினைவை
த்தபின்ன, ருயிரழியின்மூன்றுநா ளுபநயனம்பண்ணியபின்னு
லந்துபோகிற், செயிரறுமோர்பத்துநாளுயிர்ப்புழிவீய்ந்திடிற்
றெண்ணீர்மூழ்கிற்றீரும், பயில்வுறுஞாதிகடமக்காங் காசவுச
மெனமறைகள்பகர்ந்தவன்றே. (௬)

பிறந்தழிவிய்வுறிற்றாய்க்குந்தந்தைக்கும் பத்துநாள்பிடிக்
கும்பெட்பிற், சிறந்தவுடன்பிறந்தவர்க்குத்தெண்ணீர்மூழ்குழி
யகலும்பத்தாநாளி, லிறந்திடின்மற்றுடன்பிறந்தார்க் கெய்து
மொருநாளிசைக்கும்வாத்தியாரு, மறிந்திடிலோர்நாளுண்டா
மாசவுசமெனமறைகள்வகுத்ததன்றே. (௭)

ஒருத்திபொறையுயிர்த்திட்டவொன்பதுநாள்களிலொருத்
தியுயிர்த்தாளென்னிற், றிருத்தகுசூதகமிரண்டுமுன்னுயிர்த்தா
ள்பத்தாநாட்டீர்ந்துபோகும், வருத்தமொடுபொறையுயிர்த்தப
த்தாநாள்மற்றொருத்தியுயிர்த்தாளென்னி, னருத்தியுறுபன்னி
ரண்டாநாளிருவர்சூதகமுமகன்றுபோமால். (௮)

தாயத்தானிறந்தவொன்பானென்கடமில்மற்றுமொருதாயத்
தானு, நேயத்தானிறந்திடிலப்பத்தாநாள்களினீங்கும்பத்தாநா
ளிற், காயத்தானுறுபாரம்வேறொருவன்கழித்திடிற்பன்னிரண்
டாநாளின், மாய்வுற்றவிருவருக்குமாசவுசநீங்குமெனவகுத்தா
ரன்றே. (௯)

தமிறந்தவொன்பானுள்ஞாதிகளிலொருத்திமகவுயிர்ப்பி
ற்றோழா, தமைவுறுமாசவுசமுமச்சூதகமும் பத்தாநாளளவிற்றீ
ரும, தமையிகழ்ந்துசேட்சென்றோனிறந்தமையுமறியதனிற்

கேட்பிற்காதற்,சுமையுறுமவ்வாசவுசமூன்றுநாடம்மிலறத்தொலையுமன்றே. (௧௦)

ஆறுதிங்கடனிற்கேட்பி னென்றனைநா டனிற்றொலையுமாறேடாறு, யேறுதிங்கடனிற்கேட்பினொருநாளிற்கழிந்திடும்யாண்டிறந்துகேட்பி, னூறுபுனறனிற்படியினொழிந்திடுமாசவுசமுயர்மாமன்மாமி, பாழினர்நல்லுயிரொன்னின்மூன்றுநாளாசவுசம்பற்றுமன்றே. (௧௧)

வம்பலன்றன்மனையெய்திமழியிலொருமூன்றுநாட்கிராமந்தன்னி, லைம்புலன்செற்றோரிறப்பி னொருநாளாசவுசமருமறையோர்வேந்த, ரிம்பருறுநல்வணிகர்பின்னவர்க்குச்சூதகமாசவுசமீனைந், தும்பருறுபன்னிரண்டுபதினைந்தோர்முப்பானுளுறுங்களன்றே. (௧௨)

அந்தணர்க்குச்சூதகவாசூசமெய்தினவன்வேட்ட வரசகன்னி, நந்தலில்வாணிகமடந்தைசதுர்த்தகன்னியெனுமிவர்கள்நயந்துபெற்ற, மைந்தர்களோர்மூவர்க்கும்பத்துநாளுறும்வேந்தன்மணந்தநாய்கன், பைந்தொடிபின்னவர்மாதர்மைந்தர்க்கும்பன்னிருநாட்பற்றுமன்றே. (௧௩)

வணிகர்க்குச்சூதகவாசூசமெய்தினவன்வேட்டசதுர்த்தமாதர், பணிவருநன்மைந்தர்க்குமாங்கவர்போலெம்மூன்றுநாளும்பற்றுந், தணிவருமுக்குணத்தோர்க்குப்பிறந்திடுபின்னவர்க்குச்சூதகமாசவுச, நணுகிறையகர்க்கறுநா ளரசர்க்கோர்மூன்றுநாள்மறையோர்க்கோர்நாள். (௧௪)

அந்தணர்க்காயினும்வேந்தர்க் காயினும்வந்தவதரித்துப்பின்னோர்மாதர், சந்தமுலைமணந்துமக வுயிர்த்தநாயகர்க்குச்சூதகமாசவுசம்,வந்திடின்மற்றவரீன்றபின்னவர்க்கைம்மூன்றரசர்க்காறுமற்றை, நந்தலினுன்மறையோர்க்குமூன்றுநாட்பற்றுமெனநவில்வர்மாதோ. (௧௫)

மறையவர்பால்வந்துதித்த வணிகமடந்தையைச்சதுர்த்தமயிலைவேட்ட, விறைவனுக்குச்சூதகமாசவுசமெய்திலந்தணர்க்கோரறுநாளெய்து, மறைகழல்மன்னவனின்றவணிகர்க்குப்பத்துநாளரசனின்ற, நெறியுடைவேளாளர்க்குப்பன்னிருநாளுண்டென்னநிகழ்த்தினரே. (௧௬)

தாயமல்லர்மறையோனுக்கீமத்திற்றழற்கரும மியற்றியுண்டோற், காயவன்றாயம்போலப் பத்துநாளாசவுசமடுக்குமீமத், தேயவன்செய்தவன்மனையி னுண்ணாதுதன்மனையி னெய்தியுண்டோற், காய்வுறுநாள்மூன்றளவுமாசவுசமெய்துமெனவுரைப்பர்மாதோ. (௧௭)

நிறுமேலேழ்நலமுறைமேற் பதினொன்றுதலைமுறையுஞ் சேர்ந்துளோரைச், சோதகமொன்றுரைப்பரவர்க்காசவுசநாண்மூன்றிற்றொலைந்துபோகு, மேதமறுதாய்கிளைஞரிறப்பினுளொருமுன்று சவுசமெய்து, மாதுலர்க்கிமைக்கரும மாற்றினேன்முழுகியிழுக்கருந்திற்றிரும். (கஅ)

பொன்விழைவாற்றம்வருணத்தவர்கருமம்புறங்காட்டிற்புரிந்துளோர்கட், கன்னவருணர்க்குரைத்தவாசவுசமெய்துமுயர்குலத்துளோர்க்கு, மன்னுமிழிகுலத்துள்ளோர்புறங்காட்டிற்சடன்முடிப்பின்மாய்ந்துளோர்க்குச், சொன்னநாளளவுமிவர்க்காசவுசமெய்துமெனச்சொல்வரன்றே. (கசு)

இழிகுலத்தோர்க்குயர்குலத்தோர்புறங்காட்டிற்கடனியற்றினிறந்துளோர்க்கு, மொழிதருநாளளவுமிவர்க்காசவுசமெய்துமுயிர்முடிந்துபோன, பழுதறுநான்மறையோன்பின்செல்மையோன்மூழ்கிநெய்யுட் பருகுபோழ்தி, னொழிதருமாசவுசமெனவருமறைகள்முழுதுணர்ந்தோருரைத்தாரன்றே. (உ0)

இறந்திடுமன்னவன்பின்னரெய்தினொருநாளளவுமெய்துமாவி, மறிந்தவணிகன்பின்னர்சென்றிடிலிரண்டெய்துமறிந்தபின்றோன், புறந்தனிற்பின்றொடர்ந்தேகின்மூன்றுநாளெய்துமாசவுசம்பொற்பிற், சிறந்தமறைவிளையாடுஞ் செந்நாவேதியர்க்கென்றுசெப்புநூலே. (உக)

பின்னவற்குக்காடாற்றுமுன்மறையோனவன்மனையிற்பெட்பினெய்தின், மன்னுமொருமூன்றுநாளாசவுசங்காடாற்றிவந்தபின்ன, ரன்னவன்றன்மனையெய்தினொன்றிற்றிருமுயரரசர்நாயகர், நன்மனையிற்காடாற்றுமுனமெய்தினொன்று நண்ணுமன்றே. (உஉ)

சுடலையாற்றியபின்னர் மன்னவர்நாயகர்மறையோர்துணைவினெய்தி, யடைவினுயர்பகற்காணிற் பகற்றிருமிரவுறிலவ்விரவிற்றிரும், கெடலரும்வேதியரிறப்பி னவர்மனைமுக்குலத்தோருங்கிட்டிற்றென்னிர்,படிதரிற்றீர்ந்தொழியுமுயராசவுசமெனமறைகள்பகர்ந்தமாதோ. (உங)

வருணநான்கினுமிறந்தோர்மனையினொருநாணசையின்மகிழ்ந்துண்டோர்க்குப், பொருவருமவ்வருணத்துக் குரைத்தநாளாசவும்பொருந்துமென்ப, மருவருநல்குரவதனாலருந்தினோர்க்கருந்தியநாளளவுமாறு, தொருவருமாசவுசமுறுஞ்சாந்தியன்னினொழிந்திடுமென்றுரைப்பர்மாதோ. (உச)

அருமகமாற்றுநரிறப்பிற்புறங்காட்டினழற்கருமமாற்றுநாடொட், டொருவருமாசுசமெய்துமெனையோர்க்குயிருலந்தநா

டொட்டெய்துந், திருமறையோர்க்கொருமூன்றுசாதியினுதிந் வேட்பினனையோரன்பிற், றருபுதல்வர்க்கொருமூன்று தலைமுறையும்பிண்டமிட்டல்தக்கதன்றே. (௨௫)

வள்ளியோர்சீவன்முத்தர் பன்றுளுமகவினைகள் மகிழ்ந்துசெய்வோ, ரொள்ளொளியாமுடிவேந்தர்நீராடிஞசவுச மொழியுமெச்சந், தள்ளரியவிறவிறுடுஞ சாமயர்நாள்முகில்வறந்த காலந்தாவுந், தெள்ளுதிரைப்புனலாடிஞசவுசமொழியுமெனத் தெரித்தாரன்றே. (௨௬)

மன்னவராலிடியேற்றால் வாளரவால்நீரினால் நெருப்பால் மற்றுந், துன்னமராற்பிராயோப வேசத்தாலந்தணர்க்காய்த் தொறுவுக்காத, லின்னுயிர்விட்டோர்தமக்குந்துறந்தோர்க்கும் பிரமசாரியர்க்குமென்று, முன்னரும்வானப்பிரத்தர் தங்களுக்குமாசவுசமுற்றிடாவால். (௨௭)

விடருகர்ந்துநான்றுகொண்டுமாழ்கயத்தின்வீழ்ந்துமுயிர் வீய்ந்துளோர்க்கு, மடைவழியவிளிந்தோர்க்கு மீமத்திற்செய் கடன்கள்முதலபிண்ட, மிடுதலிவைமுதலாயயாவுமில்லையரவறியாதெதிர்ந்துநீண்ட, முடியுமவர்க்கிங்கிவைகளனைத்துமுளவெனமறைகள்மொழிந்தவன்றே. (௨௮)

மகவீன்றுணன்மனையினெல்லரிசிபொன்பசுவான்கரும்பெட்சோறு, தகரிழுதுகிளையுப்புவிற்குசருக்கரைதெண்ணீர்தயிர் பாலெண்ணெய், புகலருநோய்தீர்மருந்துவாங்குதலாமகம்புரிந்தோனுவிபொன்றி, னிகழ்தருநன்மகத்தியாற்சுடுகபிறர்க்கெத்தீயுமியைந்ததாமால். (௨௯)

ஒருவனிறந்துழியறியாதுடலமுங்காணுதொழியிற் புலாசுதன்னால், மருவுமவனுடல்போலவமைத்தீமக்கடன்கழித்தல்வழக்கதாகும், பொருவிலுயிரிறந்தோர்க்குத் தாயத்தார்நனைந்ததுகில்புனைந்துவைகி,யிருபொழுதுநீருகுத்துப்பிண்டமிடலொழுக்கென்னவிசைத்தாரன்றே. (௩௦)

இறந்துளோன்மனையிலற்றை நாள்நால்வர்க்கூட்டிடுகவெதிர்ந்தஞான்றி,னறைந்தமயிர்வினைமுடித்துக்காடாற்றியைந்தாநாளொன்பாநாளிற், சிறந்தபதினொன்றுநாளொற்றைபடுமறையோரைத் தெவிட்டவூட்ட, னிறைந்தநவச்சிரார்த்தநாட் பதினொன்றினிரப்பிடுகவேகோதிட்டம். (௩௧)

பன்னிருதிங்களுமிவ்வாறியற்றியுயர்பன்னிரண்டா மாதந் தன்னின், மன்னியபாத்திரநான்கினிர்வார்த்தோர்பாத்திரத்தில்வார்த்தநீரை, முன்னுறுபாத்திரமூன்றினுடன்கலந்துவரித்துமறைமுனிவர்தம்மைத், தன்னமரும்பிதிர்க்களெனவரிச்சித்தாங்கின்னமுதந்தருவினூட்டி. (௩௨)

பிண்டநான்கினிதமைத்துப் பிரேதபிண்டந்தனைமூன்றுபிண்டத்தோடுந், தண்டலில்லாதுடன்கூட்டல்சபிண்டியெனவெடுத்துரைப்பர்சபிண்டிசெய்தாற், கொண்டவுயிரிறந்தோரைப் பிரேதமெனவுரைத்திடுதல் குற்றமாகு, மண்டுநீர்க்குடமனத்தோடோர்பருவந்தினந்தோறும்வழங்கல்வேண்டும். (௩௩)

இவ்வாறுதந்தைக்குமைந்தர்கடன்கழித்திடுதலியல்பதாகுஞ், செவ்விமைந்தரிலரொன்னில்மனையாளிக்கடனனைத்துஞ்செய்யவேண்டு, மவ்வகையாற்றிடமனையா ளிலரென்னிலுடன்பிறந்தோராற்றல்வேண்டும், பவ்வநெடுங்கடல்வலையத்திலொழுக்கமிழுக்காமற்பகர்ந்திட்டேமால். (௩௪)

ருதகாருசமுணாத்தவத்தியாய முற்றிற்று.

ஆக திருவிருத்தம்—௪௬௪.

இருபத்துமூன்றுவது

அழற்கருமமுறைத்தவத்தியாயம்.

இல்லறம்புரிகின்றவர்யாவருங்
கல்லெனுழிமுகட்டிற்கதிரவன்
புல்லுபோழ்திற்புகன்றவழல்வினை
யல்லதீர்ந்திடவாற்றிடவேண்டுமால். (௧)

புதியசெந்நெற்புகுதினுவாத்தொறும்
விதியினிட்டியியற்றல்விழுமிதா
முதிருநல்லயனத்தின்முறைமையிற்
கதிர்கொணன்பசுப்பண்ணல்கடனதே. (௨)

மருவுமார்கழிதையொடுமாசியி
லருளினேடுமமரபக்கந்தனிற்
றெருளுமட்டகமென்னுஞ்சிராத்தமாங்
கொருவிடாமலுஞற்றிடவேண்டுமால். (௩)

பருவமூன்றுபசிகெடவுண்பதற்
குரியசெந்நெலுளதெனிலாங்கவ
ரரியகன்மகமாற்றுதல்வேண்டுமென்
றிருமறைப்பொருள்யாவும்விளம்புமால். (௪)

சவுதமென்றுஞ்சமர்த்தமென்றும்புகழ்ந்
தெவருமேத்துந்தருமமிரண்டுள
வவையவிந்திலனென்னிலறிவுளோர்
தவலிலாநெறிநிற்றகைமையே. (௫)

பொருவிலாவிதிகாசபுராணங்கள்
தெருளுமாந்தர்சிறப்புளராகுவர்
தருமநூலும்புராணத்தின்றன்மையுங்
கருதியோர்ந்தவரோகலைவல்லரோ. (௬)

அறக்கருமமுறைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௬௭௦.

இருபத்துநான்காவது

இல்லறபேதமுறைத்தவத்தியாயம்.

இல்லறஞ்செய்வோர்தம்மிலிருதிறத்தோருளரவரிலெச்சமாற்றிப், பல்கலையும்பயின்றேற்றுப் பைங்கூழ்கள்விளைவித்துதியத்தினீட்டி, வெல்படைகள்பயில்வித்துப்பயின்றுளோனசாதகனுமேவுஞானத், தல்லுமுயர்நன்பகலுமமர்ந்துளோன்சாதகனென்றறையுஞாலம். (௧)

சாதகனுக்காறுகன்ம மசாதகற்குமூன்றுகன்மந் தகைமைவாய்ந்த, வேதமறுஞ்சூரதரனிகற்கியைந்தவிரண்டுகன்மமீரேழாய, மூதுலகும்புகழ்கும்பதரனிகற்கோர்கருமமெனமொழிவரொன்று, நீதிசாலறத்தினெடும்பொருளினெடும்விட்டின்பங்கமுத்தினேரோ. (௨)

சாதகராய்ப்பொருளீட்டுந்தன்மையோர்தமைபறிந்துதலைமைபூண்ட், மாதவர்க்குங்கடவுளர்க்கு மதிதிகட்குந்தென்புலத்தின்மருவினோர்க்கும், பேதமறப்பார்த்தருந்தி நல்லசெய்துபொருளீட்டிற்பிழையுறுதென், றேதமறமுழுதுணர்ந்தகலைவல்லோர்யாருமெடுத்திசைத்தாரன்றே. (௩)

இன்னமனைவாழ்க்கையறம்புரிந்தோருங்கேட்டோருமெழுதினோருங், கன்னலிற்பாகினிலமிழ்திற்கோற்றேனிற்றித்திக்குங்கனிந்தவீஞ்சொ, லன்னநடையரம்பையர்தமஞ்சுணங்காரிளமுலைதம்மகலந்தாக்கப், பொன்னுலகிலிந்திரனுமேக்கறவுற்றிடவிளியபோகந்துய்ப்பார். (௪)

இல்லறபேதமுறைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௬௭௪.

இருபத்தைந்தாவது

தானமுறைத்தவத்தியாயம்.

ஓராறுதலையிட்டவீரைந்துமாதானமுதலாயுறுஞ்
சீர்மேவுதானங்கள்கேண்மின்கனிசொன்றுதிசையாவையும்
பாரேழும்விண்ணேழுமிணையில்லையெனவோதுபழமாமறைக்
கார்மேகமெனநின்றுமொழிகின்றமுனிநன்குகளைவானரோ. ௧

வேறு.

உலகமனைத்தும்பொதுநீக்கியொருகோலோச்சியினிதாளு
நிலவுக்கவிகைமுடிவேந்தர்நிகழ்த்துந்துலைபுக்கிடவேண்டிற்
குலவுபலாசில்வில்லத்திலரசிற்கருங்காலியிற்கோதின் [தே.
நிலகுசுமையிற்றிக்கயந்தாங்கெழில்சேர்மணிமண்டபஞ்சமைத்

மழைகண்படுக்குநெடுவாயினான்குமணித்தோரணநிறுவித்
தழுமுற்றெய்தாமணித்தாமந்தருப்பைமாலையிடைதூக்கி
யெழில்சேர்விரலீராறுயரத்தியம்புமோரோழ்முழப்பரப்பிற்
பழுதிறாளம்விளிம்புடுத்தபைம்பொற்றிண்ணையினிதமைத்தே

இருந்ததிசைகளோரெட்டுங்குண்டமமைத்தீசானதிக்கும்
பொருந்துமகவான்றிக்கினுக்குநடுவணுகப்பொற்பமைத்து
திருந்தியுயரும்பிரதானகண்டம்பிறைபோலத்தெருருள்போல
விரிந்தகமலம்போலிவற்றின்விளங்கவியன்றபடியமைத்தே. (௪)

வில்லமரசுகருங்காலிபலாசமென்னவிரித்துமறை [திற்
சொல்லுமரத்தினியன்றவற்றிற் றூக்குந்துலைத்தூணெனமுழத்
புல்லுமிரண்டுநெற்கிடைநீளத்தினளவைபுகல்நீளம் [ன்.
வல்லோருரைத்தசூற்றளவோர் விரலின்முழமொன்றும்வகுப்பி

ஒன்றுக்கொன்றுநான்குமுழத்தளவினிடைவிட்டுறுகுழியிற்
சென்றமுழமோரிரண்டாகச்சிறப்புவாய்ந்ததூணிறுவி
மன்றச்சதுரமொவ்வொன்றுவகுத்தபத்துவிரற்பரப்பிற்
றுன்றுமுழமோராறமைந்ததுகடூர்மணியுத்திரஞ்சேர்த்தி. (௫)

உரைத்தவெட்டுத் துலாத்தெனினு மொழியாதாறு துலாத்
தெனினு,நிரைத்தசான்றமூன்றரைப்பரப்பினிகழ்த்தியிடுமுள்ள
கலத்தின்,வரைத்ததராசுந்தட்டதனின்வயங்கச்செறிகுண்டல
ஞ்சேர்த்துப், பரிக்கும்வல்லிதோரணநாத்தண்டம்பகர்ந்தபடி
யமைத்தே. (௭)

சாற்றுமணியுத்திரத்தமைத்ததவளைக்குறங்கிற்றராசதனைத்
தோற்றிவிளங்கும்படிநாக்கித்துலங்கச்சமைத்தவேதிகையி
னூற்றலுடனங்குரமியற்றியணிசேரட்டமங்கலம்வைத்
தேற்றவாயினான்கினெடுமியைந்ததனிமண்டலங்கீறி. (௮)

எழுதுமுயர்மண்டலநாப்பணிலங்குகமலந்தனிவரைந்து
பழுதில்பஞ்சவன்னத்திலதைகளதனின்பால்கீறி
வழுவில்வயிரப்படைசத்திதண்டம்வால்நீள்பாசமெழி
லொழுகுதுவசங்கதைசூலமுழிற்கிழக்குமுதற்கோட்டி. (௯)

வடகீழ்த்திசைக்குங் கீழ்த்திசைக்கு நடுவணேமிவரைந்து
தென்பால், லொடிவில்கமலமினிதெழுதிவோர்நாளுண்டியிகந்து

பின்ன, ரடைவினூந்திமுகமியற்றியாசாரியனுதியவைரவரைத், தி
டர்தீர்காயத்திரியின்முதற்குண்டத்தோமமினிதியற்றி. (௧0)

வயிரப்படையோன்றிசைமுதலாந்திசையின்வகுத்தகுண்
டத்தின், பயிலத்திசைதோறுறைதேவர்மறையாற்பலாசிலன்ன
த்திற், செயிர்தீர்நெய்யினாற்றெட்டாகுதியிற்றோமஞ்செய்துமை
யோ, டுயர்வெண்டிங்கட் பசுங்கண்ணி யுரவோன்றனைநடுவி
ருத்தி. (௧௧)

இடப்பான்மாயன்வலப்பாலிற்கமலக்கிழவனெண்டிசையுந்
தொடப்பால்வைத்த விந்திரனே முதலோர்ப்பழிச்சிமலர்தூவி
மடற்பூங்கமலநாயகனைவழுத்திமறையோர்க்கினிதூட்டி
தடப்பாடமைந்தகுணவாயிற்புகழ்ந்துசதருத்திரஞ்செபித்தே.

கடல்சேப்புறவந்தெழுந்தவெயில் கவிழ்க்குமணிமாமவுலிபுனை
தடல்சேர்வேந்தன்கேடகத்தோட லங்குவடிவாள்கைபற்றி
வடபாற்றட்டிலினிதிருந்துதனதுநிறையின்மறுதட்டிற்
சுடர்கால்பசும்பொன்னுயர்குடுமிமேருவென்னநனிசொரிந்தே

தானமேற்போர்சிவகாயத்திரியைச்செபிப்பத்தக்கோர்க
ளானதரியமறைபாடவரசனெற்போர்க்காணுது
பானுண்டுகிலின்மறைப்பவணிகலன்வாள்பரிசையணியாடை
மானத்துலைப்பொன்னெடுநூறுகழஞ்சூட்டிசுவழங்குகவே(௧௪)

அரியமறைதேர்புரோகிதனேயாசாரியனேமுதலவர்க்கும்
பொருவில்சென்னியணிதூசுபுனையும்பசும்பொற்றூசுகண்மேன்
மருவுகலன்கைவளையாழிவயங்குகாதினிடையணியு
முருவமணிக்குண்டலமிவைகளுவப்பினொடும்வழங்குகவே. ௧௫

கூறுமறைதேரிருத்தியுக்களாசான்கோதில்புரோகிதற்கு
நூறுநூறுகழஞ்சளிக்கதுவலுமறையோர்யாவர்க்கும்
வேறுவேறோர்கழஞ்சாகவியப்பினளிக்கவேத்துநர்க்கு
மீறில்கடவுளிசற்குமியன்றநிதியமீந்திடுக. (௧௬)

வேறு.

ஆயிரம்பசும்பொற்கும்பத்தமைத்தபால்பிரமகூர்ச்சந்
தோயுநீர்நறுநெய்பஞ்சகவ்வியந்துகளிறீர்ந்தேன்
சேயமுக்கனியிவற்றூற்றிங்களங்கண்ணியோனை
மேயபேரன்பின்வேதவிதிமுறையினிதினூட்டி. (௧௭)

ஆயிரநாமமோதியருச்சனைபுரிந்துவாச
மேயநற்றூபதீபம்விருப்புடனினிதினேத்திப்
பாயபொற்கலன்கடோறும்பரிவினின்னமுதமேற்றி
யேயநூல்வழியினெந்தைபூசனையினிதினூற்றி. (௧௮)

ஆதுலரிரப்போர்கிராவரும்பிணியுற்றோர்யார்க்கு
மேதகுநியமநல்கிலாவிறவடிசிறாட்டித்
தாதவிழ்மாலைசாந்தமளிக்குதறவலில்கேள்வி
மூதறிவுடையநீரார்மொழிதுலாபுருடமென்பார். (௧௯)

இரவியையரவுதீண்டற்போற்றுலையேறநன்காம்
விரிகதிர்மதியந்தீண்டில்வெள்ளியந்துலைவியப்பா
முருமியநறுநெய்பெய்ததுலைபுரிஞெளியுண்டாகும்
பெருகுதேத்துலையினேறிற்பெறலருந்திருவனுவன். (௨௦)

எண்ணெய்பெய்துலையினேறினினியநன்மகப்பேறுண்டா
நுண்வரியவாடைபெய்ததுலைபுரிஞாலிற்செய்யா
விண்ணவராடையெய்தும்வெள்ளுப்புத்துலையினேறிற்
கல்விளக்குறுசெஞ்சோதிகவினுடுமினிதுவாழ்வான். (௨௧)

சருக்கரைத்துலையிற்றூங்கினோயுறுசெய்யசாந்த
நிரப்பியதுலையினேறினிகழ்த்தருமுருவமுண்டாம்
விருப்பொடுபஞ்சதாரைத்துலைபுரின்மேவார்தம்மைச்
செருக்களமதனில்வெல்வனெனமறைதெரித்ததன்றே. (௨௨)

குங்குமத்துலையில்வெய்யகுவிமுலைமகளிரோதிற்
பங்கமில்கொழுநற்சேர்வர்பாற்றுலையதனிற்றூங்கின்
வெங்கொடுந்தாபந்தீரும்வெண்கலத்துலையிற்றூங்கிற்
றங்குலப்பிதிர்க்கள்யாருந்தாங்கருமகிழ்ச்சிபூப்பர். (௨௩)

செம்புபெய்துலையினேறிற்றென்புலத்தோர்கள்யாரு
மும்பரின்மகிழ்ச்சிகூர்வருவந்திவையளித்தோர்யாரு
மெம்பிரானுமையினோடுமகிழ்ந்திடவெண்ணில்காலம்
வம்பவிழ்கருவிளிழல்வாழ்ந்தினிதிருப்பரன்றே. (௨௪)

இரணியகருப்பதானமியம்புதுமகிழ்ந்துகேட்டிர்
மருவுமண்டபநற்பூசைமற்றுளகருமமியாவும்
பொருவருந்துலைக்குச்சொன்னவிதிப்படிபுரிகபோற்று
மரியகிழ்க்குழிசிபொன்னோராயிரக்கழஞ்சிற்செய்க. (௨௫)

மொழிந்ததுதனக்கைஞ்ஞூறுகழஞ்சினன்மூடிசெய்தாங்
குழுந்திறலதனைப்பூசிபுரைத்தகீழ்க்குழிசிதன்னை
விழைந்திடுமயன்மாலங்கியெனவெண்ணிமேலின்மூடிக்
குழக்ஞ்தைவெண்டிங்கள்வேணிக்குழகனுபினிதினெண்ணி. (௨௬)

புருடனைத்தன்னையெண்ணிப்புகன்றவேதிகையின்மீது
மருவுபாத்திரத்தைவைத்துமறையினுலாவினேந்து
முரியபாத்திரத்தின்வாக்கித்துலையினுக்குரைத்தவண்ண
மரனுறுபூசையோமமியாவையுமிவிதினுற்றி. (௨௭)

இலங்கொளிக்கருமராசப்பிரதிமையிடக்கைபற்றி
வலம்படுவலக்கைதன்னின்மலரயன்விம்பமேந்தி
யலங்கொளிக்குழிசிபுக்குக்குணதிசையதனைநோக்கி
நலம்படுமீசன்காயத்திரியினைநவின்றுவைகி. (௨௮)

அந்தணர்கருப்பதானஞ்சீமந்தமாதியாய
நந்தலில்கருமஞ்சத்திவீசத்தானயந்துசெய்ய
வந்தெழுமுயிர்ப்போனாந்தினளவுமற்றதனுண்மூழ்கி
யுந்துபல்லியங்களார்ப்பவதனினின்றுதித்தபின்னர். (௨௯)

சிறப்புடைச்சாதகன்மமுதலியவனைத்துஞ்செய்தாங்
கறத்துடனலவாய்செய்தற்கந்தணர்தம்மையூட்டி
நிறுத்திடுசவுளமுன்னூலாதியாய்க்கருமநீங்கா
மறைப்படிவமுழுவுருமலினிதினின்மகிழ்வினூற்றி. (௩0)

முப்பதின்கழஞ்சுபொன்னின்முகிழ்முலைப்பாவைபண்ணித்
தப்பறவெட்டுத்திங்கடாழ்சடைக்குரிசிற்கியா
வொப்பறுபசும்பொன்யாவுந்துலையினுக்குரைத்தவண்ணந்
தப்பிலாமறையோர்தம்பாற்றக்கணையோடுநல்க. (௩௧)

உயர்பிரமாண்டதானஞ்செய்யின்மண்டபநல்லோம
மயர்வறுமறையோர்தம்மைவரித்திடல்துலைக்குமுன்னஞ்
செயிரறவுரைத்தவண்ணஞ்செய்திடல்வேண்டுமென்னப்
பயின்மறைமுழுதுமாய்ந்தமுனிவரர்பகர்ந்தாரன்றே. (௩௨)

இருபதுபலத்தினெஃகாதாயிரம்பலத்தினீறு
யொருபதிற்றிரட்டிகொண்டவிரலிழிபுயர்ச்சிநூறாய்
மருவருசெம்பொன்றன்னில்வாயிலிகும்பம்போலத்
தெரிவரப்பொருத்தினொன்றாய்ச்சேர்ந்திடவினிதிற்செய்தே.()

தேம்படுமதமாவோரொட்டெண்டிசைகாக்குந்தேவர்
காம்பிசைகுறிக்குமாயன்வசுக்களாதபன்முக்கண்ண
னும்பல்வாய்க்கமலையெல்லாவகிலமுமீன்றவெந்தா
யேம்பலில்கமலத்தோனைச்சூழ்ந்திடவினிதிற்செய்தே. (௩௪)

மலைவறுபிரமாண்டத்தைவலஞ்செய்துபூசையாற்றிக்
குலவுமான்பத்துவேதமுனிவரர்கொள்ளநல்கி
யலைவறுமாசானுதிமறையவர்க்கதனையன்பிற்
றுலைநிதியளித்தல்போலத்தொகுத்தினிதளித்தல்வேண்டும். ()

உரைத்தவித்தானமீந்தோர்தீவினையொல்லைநீங்கி
விரைச்செழுங்கமலப்புத்தேள்வியனுலகாதியாக
நிரைத்திடுமுலகத்துள்ளநிகரறுபோகந்துய்த்துப்
பரைக்கொருபங்குநல்கும்பரமன்றாளிணையிற்சேர்வர். (௩௬)

ஆயிரக்கழஞ்சுபொன்னிற்கற்பகத்தருவுண்டாக்கிச்
சேயமென்றளிர்காயோங்குஞ்சினைபழமலர்கள்யாவும்
பாய்கதிர்விரிக்குமொன்பான்மணியினும்புரிந்துபண்ணித்
தூயமென்பளிங்கிற்செய்தவேதிகைதுலங்கச்சேர்த்தி. (௩௭)

பன்னிருவிரலினொட்டுச்சாகைகள்பரிவிற்செய்த
பொன்னவிர்தருவினிழல்புரந்தரன்முதலோர்சூழ்ந்து
துன்னிடவிலிங்கமொன்றுசுடர்மணியதனிற்செய்து
மன்னுபொற்றுலையினீசற் பழிச்சல்போல்வழுத்தல்வேண்டும்.

அனையபொற்றருவையீசற்காயினுமறையோர்க்கேனுந்
தனைவினினல்கியாசான்முதலதொன்மறையோர்யார்க்கும்
புனைகலன்றாசுசெம்பொன்புகன்றவாறினிதினல்கும்
வனைகழல்வேந்தனெல்லாமன்னர்க்குமன்னனாவான். (௩௯)

ஆயிரத்தெட்டுநெல்லானளிக்குமாறுரைப்பன்கேண்மின்
மேயமண்டபநற்பூசைவிளம்பியவோமம்யாவு
மேய்வுறத்துலைக்குச்சொன்னவண்ணமேயினிதினாற்றித்
தூயபாலருந்திமுன்றுதினந்தொழுவிரதமாற்றி. (௪0)

குடம்புரைசெருத்தநல்லானாயிரத்தெட்டிற்கோதின்
றடங்குமாறெட்டுத்தூசாலலங்கரித்தணிகொள்கொம்பின்
மடங்கலிற்செம்பொனேரோர்கழஞ்சினால்வனைந்துவெள்ளி
கடந்திடுகுளம்பிற்சேர்த்திக்கழஞ்சினாற்பட்டங்கட்டி. (௪௧)

மழவிடையொன்றுசெம்பொன்மணியினாலணிந்தோரொட்டாம்
விழுமியபசுக்களோடும்விதிமுறைபூசையாற்றிக்
குழுமுமாயிரத்தெட்டாயவானெடுங்குலவுமேற்றை
யழலினுக்கூட்டிபுன்னுமந்தணர்க்களித்தல்வேண்டும். (௪௨

பதின்கழஞ்சேனும்பத்துக்கழஞ்சினிற்பாதியேனும்
விதம்படுமறையோர்யார்க்கும்விற்றுவிற்றாகநல்கி
யிதம்படுதுலைபோன்முக்கணிறைவனையேத்தினோர்கள்
சதம்படுவேள்வியாற்றுந்தேவெனத்தருக்கின்வாழ்வார். (௪௩)

ஆயிரக்கழஞ்சுதொட்டைம்பதுகழஞ்சிறுக
வேயினபசும்பொன்றன்னாற்பெற்றமொன்றினிதிற்செய்து
மேயபொன்பத்திலொன்றிற்கன்றினைவிதியிற்பண்ணிப்
பாய்கதிர்மலிகடம்மாலுறப்பெலாம்பதிதல்வேண்டும். (௪௪)

துலையினுக்குரைத்தவண்ணமமைத்துமண்டபத்திற்றூய்தா
யிலகொளியாவினோடுங்கன்றினையினிதினேற்றிக்
கலையிரண்டதற்குச்சுற்றிக்காய்கனலோமம்பூசை
மலைவறத்துலைக்குச்சொன்னவாறுபோலினிதினாற்றி. (௪௫)

முப்பதுகழஞ்சுபின்னுந்தக்கணைமுறையிற்கூட்டித்
தப்பறமறையோர்க்கிகவிங்கிவைதயவினீந்தோர்
செப்பெனப்பணைத்துவிங்குந்திரண்முலையுமையாள்பங்க
னெப்புமையிலாதபாதநீழலிலுறைவரன்றே. (௪௬)

ஆயிரக்கழஞ்சினூறுநூற்றெட்டுக்கழஞ்சினுதல்
பாய்பரிபொன்னிற்பண்ணிப்பஞ்சகலியாணியாக
வேயநல்வெள்ளிதன்னுலீரிருகுளம்புதம்மிற்
றாயநன்னெற்றிதன்னிற்றுவக்குறவணிதல்வேண்டும். (௪௭)

இந்திரனுகமற்றோரிருபிறப்பாளன்றன்னைச்
சிந்தையினினைந்துகிழ்பாலிருத்தியசெம்பொன்வேதி
மைந்துறவமைத்தசெம்பொனிவுளியைமலர்க்கைதன்னு
லேந்துபொற்கழஞ்சினேடுமளித்திடவேண்டுமென்றே. (௪௮)

பொன்னெடும்புரவிபூண்டபொலங்கொடேர்த்தானஞ்சொல்லி
மன்னியசாலையோமமுனிவரைவரித்தல்சின் [ன்
பொன்னடிப்பூசையாற்றல்பொருள்பகுந்தளித்தருவில்
துன்னருந்துலைக்குச்சொன்னவாறெனச்சொல்வர்மேலோர். (;

பலமொருமூன்றின்மேலீராயிரம்பலமீருகப்
பொலமியன்றனகொண்டெட்டுப்புரவியாயினுநான்கேனு
மலதிரண்டேனும்பூண்டவலங்கொளிப்பொற்றேர்பண்ணி
யிலகுமிந்திரநீலத்தினெரிமணிக்கூம்புசேர்த்தி. (௫0)

இந்திரன்முதலவாயவெண்டிசைப்பாலர்சூழ
வுந்துபொற்றடந்தேர்நாப்பணொருகுழையொருவர்சேர்த்தி
மைந்துடையாழிகாப்பான்மருத்துவரிருவர்தம்மைக்
கந்துகத்தழகுவாய்ந்தகவிகுளம்பிவுளிசேர்த்தி. (௫௧)

மடங்கலந்துவசம்வீக்கிவண்டுகின்மாலைசாந்தந்
தொடுங்கழல்கவிகையுக்கஞ்சாமரந்துலங்கச்சேர்த்திக்
கடுங்கலையுரிவைதன்னிற்கரியவெட்பரப்பிப்பொன்னந்
தடங்கொடேரதனில்வைத்துவலம்வந்துதாழ்ந்துபோற்றி. ()

மற்றுளகருமமியாவுந்துலைக்குமுன்வகுத்தவாறே
தெற்றெனவியற்றிக்காலமிடனிவைதெரிந்துவேதங்
கற்றுணர்முனிவர்க்கீதல்கடனெனநுணங்குகேள்வி
முற்றுணர்ந்தடங்குந்தூயமுனிவரர்மொழிந்தாரன்றே. (௫௩)

பொற்கரிபூண்டபொன்னந்தேருறுதானங்கூறின்
வெற்புறழ்சோலையோமம்வேதபாரகரைக்கூட்ட
லற்புடனவர்க்குச்சொன்னமளித்திடல்பூசையாற்றன்
முற்படுதுலைக்குச்சொன்னவாறெனமுனிவர்சொன்னார். (௫௪)

ஒருபலக்கன்னிலக்ஷதானுரைக்கவோர்பாரமிரு
மெரியகும்பொன்னினான்குகனிறுதாங்கிரதஞ்செய்து
பொருவிலெண்டிசைகாப்பாளர்பூமகள்கொழுநன்வேதா
வரனிவர்தம்மைத்தேர்மேலழகுறவினிதிற்செய்தே. (௫௫)

மலர்மகள்யாழ்கைக்கொண்டாங்கிருந்திடவகுத்துவெண்பட்
டிலகொளிக்கும்பநான்குசாமரையதனினேற்றி
யலர்சிறைக்கருடன்றீட்டுகொடியுமாங்கமைத்துவெய்தாக்
கொலைகெழுபிறைவெண்கோட்டுக்குஞ்சரமுகனைவைத்தே. ()

ஆடிவெண்குடைநற்றீபம்பாதுகையாங்குவைத்துப்
பீடுறுகலைத்தோறன்னினெட்சொரிந்ததனிற்பெட்பா
னீடுபொற்றடந்தேர்வைத்துமற்றதைநிரலேசூழப்
பாடமைபசுவோரொட்டுநிறுவிநன்பூசைபண்ணி. (௫௭)

தானியமீரொன்பானெண்டிசைதொறுஞ்சொரிந்துதாவின்
மானெடுந்தேரைச்சூழ்போய்வகுத்ததக்கணையினோடு
மீனமின்மறையோர்க்கிகவியந்தவைநான்குகூறிட்
டானவோர்கூற்றையாசானுவந்திடவளித்தல்வேண்டும். (௫௮)

மற்றையமூன்றுகூறுந்துலைக்குமுன்வகுத்தவாறே
நற்றவர்க்களித்தல்வேண்டுமெனமறைநவிலுமீது
சொற்றனமறைகள்யாவுந்தொகுத்தெடுத்தியம்பாநின்ற
வற்றமில்குணத்தபஞ்சலாங்கலமளித்தல்சொல்வாம். (௫௯)

சந்தனமரத்தினுதறேக்கினுனுதருவி
லைந்துநீள்கலப்பைபண்ணியவிரொளிச்செம்பொன்றன்னு
மைந்துறழ்கலப்பையைந்துவகுத்திமிலேறிணைந்து
நந்தலில்சாலைதன்னிற்கொணர்ந்தலம்நன்கிற்பூட்டி. (௬௦)

கொம்பினிற்செம்பொன்சேர்த்திக்குளம்பினில்வெள்ளிகட்டிச்
செம்பொனின்பட்டநெற்றிதிகழுறவினிதின்வீக்கி
யும்பர்சேருடுவினன்னவொளிர்கதிர்முத்தமாலை
கிம்புரிவடிவிற்செய்துவாலொளிகிளரச்சேர்த்தி. (௬௧)

சாற்றியசாலைதன்னிலுருத்திரமறையாற்றுவி
லாற்றல்சாலோமமாற்றியற்றைநாண்முழுதுந்தூய
வேற்றினமனைத்துமாங்கணிறுவிவேதியரீரைவர்ப்
போற்றுறுவழிநாடன்னிலவர்க்குறுபூசையாற்றி. (௬௨)

கோடிநெடுமாடவீதிக்கோனகரோனுமின்றே
லோடிவருசிற்றூரோனுமோர்பசுவுரிவையெல்லைப்
புடவியதேனுமெய்ந்ததக்கணையோடும்பொன்னால்
வடிவுசெய்கலப்பைபூண்டவேற்றினம்வழங்கல்வேண்டும். ()

பஞ்சலாங்கலதானத்தின்பகுதியைச்சுருக்கிச்சொன்னோஞ்
செஞ்செவேயிதனையீய்ந்தோர்பலத்தினைச்செப்பொணாதாந்
றுஞ்சலின்மறைகள்யாவுந்தொகுத்தினிதெடுத்துச்சொன்ன
வெஞ்சலில்சொன்னபூமித்தானமீண்டிசைக்கலுற்றும். (௬௪)

அரும்பெறற்றுலைக்குச்சொன்னபடியகல்சாலையோமம்
விரும்புமந்தணருக்கூட்டல்வியனதிக்களவைகூறிற்
பொருந்துமோர்துலாத்தினாதலளைத்துலாம்பொன்னினாத
ரிருந்துகாற்றுலாத்தினாதல்சதுரமாய்த்தகடுசெய்தே. (௬௫)

ஏழ்பெருந்தீவுமேழுகடலுமேழ்வரையும்வான்றோய்
வாழியமேருவெற்பும்வருடமால்வரைகண்முற்றுஞ்
சூழ்தருநதிநதங்கடெய்வதத்தொகைகணீண்ட
காழ்படுதருக்கள்யாவுங்கற்பநல்விதியிற்செய்தே. (௬௬)

இளம்பிறைக்கண்ணிசூடுமெந்தைநற்பூசையாற்றி
வளங்கெழுசெருத்தனல்லானைந்தினால்வனப்புவாய்ப்பக்
களங்கமொன்றின்றிசெய்தபுவியினைக்கலசமாட்டித்
துளங்கலின்மறையோர்கொள்ளத்துலைப்படியீய்தல்வேண்டும்.

தூயநற்சொன்னபூமிவழங்குதறொகுத்துச்சொன்னோ
மேபநல்விசுவநேமிவழங்குதலிசைப்பன்கேட்டீ
ராயிரமன்றேலைஞ்ஞூறன்றெனிலிருநூற்றைம்பா
னேயபொன்னிருபத்தெட்டுப்பலத்தினிற்குறையாதீட்டி. (௬௮)

எண்ணிருகோணந்தன்னாற்சக்கரமினிதிற்செய்து
நண்ணுறவதனினாப்பணாறிரண்டிதழினோடும்
வண்ணவான்கமலம்பண்ணிமற்றதினான்குசெங்கைக்
கண்ணனையமைத்தோரொட்டுக்கன்னியரிதழிற்சேர்த்தி. (௬௯)

மற்றையாவரணந்தன்னிற்குணதிசைமருங்கினீரி
னுற்றறிதுயில்கூர்மாயனுருவமைத்தொழிந்ததிக்கிற்
கற்றவத்திரிவசிட்டன்பிருகுகாசிபனல்வேந்தன்
சொற்றமீனாதியீரைந்துருவமுந்துலங்கச்செய்தே. (௭௰)

மூன்றுமாவரணந்தன்னிற்சத்தமாதாக்கண்மொய்ம்பி
னான்றவெண்வசுக்களோடுங்கவுரியையமைக்கநான்காய்த்
தோன்றுமாவரணந்தன்னிற்பன்னிருசுடரினோடு
மேன்றநல்வேதநான்குமுருவுறவினிதிற்செய்தே. (௭௧)

பஞ்சபூதத்தோடீசர்பதினொருவரையும்பண்ணி
யஞ்சாமாவரணஞ்சேர்க்கவாறுமாவரணந்தன்னி
லெஞ்சலில்களிறோரெட்டுமெண்டிசைப்பாலரோடுஞ்
செஞ்சவேமுறைவழாதுசேர்த்திடவேண்டுமன்றே. (௭௨)

வாள்கதைசூலஞ்சத்திருங்கமங்குசம்வன்சாப
நீள்குடைசங்கமுத்தஞ்சேர்த்திகளிதியமரடி
கோளில்சாமரஞ்செஞ்சாந்தங்கோரோசனையிவையீரெட்டு
மோளியினும்பவேறாமாவரணத்தினுய்க்க. (எஙு)

எட்டாமாவரணந்தன்னிலிரண்டாமாவரணத்தோதப்
பட்டனசேர்த்தியானேற்றுரியிலெட்பரப்பிமுன்போற்
கட்டியசாலைதன்னில்விதிமுறைகருமமாற்றி
யட்டெளிமறைவல்லோர்க்குத்தக்கணையோடுநல்க. (எச)

அற்பொடுவிசுவநேமியளித்திடுமடைவுசொன்னேங்
கற்பகலதையைநல்கும்விதிமுறைகழறுகிற்பே
முற்படுதுலைக்குச்சொன்னமண்டபமுந்தலாயோமம்
பொற்புடனியற்றியீசன்பூசனைபுரிதல்வேண்டும். (எரு)

ஆயிரம்பலந்தொடங்கிப்பலமுடிவாகச்செம்பொ
னேயவன்கொண்டமைந்துகற்பகலதைகள்பண்ணித்
தூயநற்பலங்காய்பைம்பொற்றுசிலைதொகுத்தினைந்து
சேயநற்பொன்னுற்செய்தபின்னரமிதுனஞ்சேர்த்தி. (எசு)

கற்பகலதையைத்தூயவேதிகைகளினச்சேர்த்தி
யற்புடன்பிரமியோடுமனந்தசத்தியையாங்குய்த்த
பொற்புறுகமலஞ்சேர்த்திப்பூசனையினிதினாற்றி
முற்றுணர்மறையோர்கொள்ளமுகமனோடளித்தல்வேண்டும்.

கற்பகலதைகளைல்கும்விதியினைக்கழறல்செய்தேங்
கற்பரமளிக்குஞ்சத்தசாகரதானஞ்சொல்வாம்
பொற்புறுசாலையோமம்பூசனைமறையோர்க்கூட்ட
லற்புறுதுலைக்குச்சொன்னவண்ணமென்றறைவர்மாதோ. (எஅ)

இயைந்தநற்பலமீரைஞ்ஞூறுதியேழ்பலமீறாக
வயங்குநற்பொன்னலொட்டையோர்முழத்தளவுவாய்ப்பப்
பயின்றவேழ்குண்டஞ்செய்தெட்பரப்புமானேற்றின்றேலிற்
றயங்கவைத்துப்புநெய்பாறயிர்கன்னன்மதுநீர்வாக்கி. (எகூ)

உப்பினிற்பிரமன்பாலின்மானெய்யிலுயர்மகேசன்
செப்பியகன்னற்சாற்றிலாதவன்றயிரிற்றேவி
லொப்பருமகவான்றேனிற்றிருமகளுரவுநீரிற்
றுப்புறழ்தொண்டைச்செவ்வாய்வளைமகடுலங்கச்சேர்த்தி. ()

குண்டமோரேழினுள்ளுங்குலமணிதுலங்கச்சேர்த்தித்
தண்டலின்மறையோர்கொள்ளத்தக்கணையோடுநல்கல்
மண்டுமேழ்கடற்றானத்தைவகுத்தனமிரத்தினதேனுப்
பண்டைநான்மறையோர்க்கியுமுறையினைப்பகாலுற்றும். (அக)

துலைக்குமுன்னுரைத்தவண்ணமண்டபமோமந்தூய்தாய்
விலக்கரும்பூசைசெய்துவெள்ளுப்புபரப்பியாங்குப்
புலப்படக்கன்றினேடும்பசுவினைப்பொறித்துமூக்கில்
நலத்தகுபுருடராகநூற்றினைநயப்பத்துவைத்தே. (அ௨)

முகத்தினிற்பத்மராகமெண்பத்தொன்றமைத்துமுத்தின்
வகுப்புறநெற்றிசெய்துவயங்குபொற்பட்டஞ்சேர்த்தி
மிகைப்படநூறுமுத்துக்கண்களில்விளங்கச்சேர்த்தி
நகைக்குமொள்வயிரநூறுசென்னியினன்பின்வைத்தே. (அ௩)

புருவத்திற்பவளநூறுவைத்துப்பொற்கொம்புசேர்த்தி
யிருசெவியென்னமுத்துச்சிப்பியையிலங்கச்சேர்த்தி
யுருவுறுகழுத்திற்கோமேதகமொருநூறுசேர்த்தி
வெரினிடையிந்திரநீலநூற்றினைவிளங்கவைத்தே. (அ௪)

ஓரிருபுறமுநூறுசீவரத்தினத்தையொட்டிச்
சேருறவெயிற்றினூறுபளிங்கினைச்சேர்த்திவாலி
லாரமோர்நூறுசேர்த்தியறையின்மாணிக்கநூறு
சார்வுறவைத்துப்பொன்னூற்குளம்பினையினிதுசாற்றி. (அ௫)

திங்கள்வெண்மணியினேடுஞ்செங்கதிர்க்காந்தகல்லைப்
பங்கமின்மூக்கினூற்றவாரத்திற்பதியவைத்துத்
தங்கியநாபிதன்னைவெள்ளியாற்சமைத்துச்சாந்தங்
குங்குமக்கருப்பூரத்தாலுரோமகூபங்கள்பண்ணி. (அ௬)

காருடப்பச்சைநூறுபாதத்திற்கவினவைத்துச்
சீர்கெழுசந்திதோறுநவமணிதிகழச்சேர்த்தி
யேர்கெழுகன்னறன்னிலிலங்குகோமயமதாக்கி
வார்தருநறுநெய்தன்னைக்கோசலமாகவைத்தே. (அ௭)

கன்றுமிவ்வாறுபண்ணிக்கற்பவெண்கலமும்வைத்துத்
துன்றியவாலின்மற்றோர்கவரியுமினிதுதூக்கி
மன்றநற்பைங்கூழ்தன்னைவயின்வயின்குவித்துப்பின்ன
ரொன்றுதக்கணையினேடுமறையவர்க்குதவல்வேண்டும். (அ௮)

பொருவருமிரத்தினதேனுவளிக்குமாபுகன்றேம்பொற்பின்
மருவுமாகடதானத்தையளிக்குமாவகுத்துச்சொல்வாங்
கருதருஞ்சாலையோமங்கறைமிடற்றெந்தைபூசை
பரிவொடுந்துலைக்குச்சொன்னவாறெனப்பகர்ந்தாரன்றே. அ௯

ஒட்டையிற்குறையாதோங்குநூறுமேல்விரலினேரு
மட்டுறவியன்றபொன்னின்மாகடமொன்றுசெய்து
விட்டொளிவிரிக்குந்தூயவயிரத்தாலதனைவேய்ந்து
பெட்பொடுநறுநெய்யான்பால்கடத்தினிற்பெய்தபின்னர். (௯௦)

கற்பகதருமுன்போலச்செய்தொளிர்கடத்தினேற்றிப்
பொற்புடைகருவினிமற்புண்டரிகத்தின்மீதே
யற்புடைப்பிரமன்மாயனரன்றனையினிதுவைத்து
வெற்புறழ்பனைக்கைவேழமுகத்தனைவிதியிற்செய்தே. (கூக)

கண்டிகைமாலைதாங்கிமுகன்மறையிருப்பக்காமர்
புண்டரிகங்கைதாங்கிப்பொருந்திடவிரண்டாம்வேதம்
பண்டருவினைவேறுப்பரித்துயர்சாமநிற்ப
வெண்டருநான்காம்வேதந்தாமனாயினிதினேந்த. (கூ௨)

கண்டிகைமாலையோடுகமண்டலந்தாங்கிபோர்கை
தண்டலில்வரதமாகப்புராணந்தெய்வதமுன்சார
வெண்டருமுருவமைந்துமினிதினிற்பண்ணித்தூய
மண்டபமதனிற்பொன்னங்குடத்திடைமருவவைத்தே. (கூ௩)

பொற்குடஞ்சூழப்பைங்கூழ்சொரிந்துபொற்கலன்களாடி
யெற்படுநிபம்பொன்னங்குடைசெருப்பிருக்கைமஞ்சம்
பற்பலநீர்பெய்கும்பம்வைத்துபவாசம்பண்ணி
யற்புடைமறையோராட்டக்கும்பநீரினிதினாடி. (கூச)

புகழ்மறைக்குரவனேடும்பொற்குடம்வலஞ்செய்தாங்கண்
மகிழ்வொடுமறையோர்கொள்ளமாகடமதனையுள்ளத்
தகவொடுமினிதினல்கியாதுலர்விருந்தர்தக்கோர்
நகைபடுகோயர்கொள்ளநன்னிதிவழங்கல்வேண்டும். (கூரு)

இனையவெண்ணிரண்டுதானம்விதிப்படியினிதினீந்தோர்
கனைமதுவுறையும்பொன்னங்கற்பகநீழல்வாழ்ந்து
பனையுறழ்தடக்கைநால்வாய்ப்பகட்டுரிபோர்த்தவெந்தை
வனைகருங்கழலிற்சேர்ந்துபிறந்துழலாதுவாழ்வார். (கூகூ)

வேறு.

நித்தியநயிமித்தியங்காமியநின்மலமெனநான்காய்ப்
பைத்தபாம்பின்மேற்கிடந்த நின்புவியினிற்றுனத்தைப்பகர்கிற்
முத்தராகியமுனிவரர்க்கருளொடும்பலத்தினைமுன்னது [பார்
நைத்தலப்பொருளளிப்பதுநித்தியதானமாய்க்கரைகிற்பார். ()

பாவநீங்கிடவேண்டுமென்றுளத்திடைப்பரிந்துநான்மறைகற்ற
நாவலர்க்களித்திடனயமித்திகநன்மகராநிதிவேட்டுத்
தாவில்கேள்வியோர்க்குதவுதல்காமியஞ்சங்கரனுவப்பெய்த
வோவில்ஞானிகட்குதவுதனிருமலமெனவுரைத்தனரன்றே. ()

இடமுங்காலமுங்கொள்பவனியற்கையுமுணர்ந்தளிக்குதருன
மடைவிற்றுனநன்களிக்குநரோநிதியிட்டியபொருண்மீகி [கின்ற
லுடையவன்பரோபுலோபியிவளித்திடாதொண்பொருள்புதைக்
மடமையெஞ்சினர்நிதியினிசையிலாதழித்திடுபவர்மாதோ. ()

ஊசிமென்னுனையூன்றிடமாயினுமந்தணர்க்குவந்திவோ
ராசினற்கதியடைகுவரொன்றிடிலமுதுகுகழைசெந்தேன்
மாசினல்வளனிறைந்தநற்கிராமமொன்றளிப்பவர்பலமீவாயாற்
பேசிலாகுமேபேசிடினுன்முகப்பிரமற்குமரிதாமால். (௧௦௦)

சொன்னமாயிரமந்தணர்க்கீயினுஞ்சுடிகைவாளராநெற்றி
மன்னுபூதலம்வலங்கொடுதிரியினும்வளர்சிகையழனுப்பட்
டுன்னிமாதவம்புரியினும்பசியினுற்றளர்ந்தவர்துயர்தீர
வன்னமீபவர்பலத்தினிலாயிரத்தொன்றும்வந்தடையாதே. ()

பொருவில்வித்தியாதானநல்குநர்மலர்ப்பொகுட்டுறைவே தாவின், றிருநகர்க்கணினுறைகுவர்பருவமோணாந்தினுஞ்சிவ பூசைக், கரியநன்பொருள்வழங்குநரரனுலகடைவரொள்ளினை யீந்தோர், கரியமாயவனுலகில்வாழ்மடந்தையர்தம்மொடுகளி ப்பாரால். (௧௦௨)

மாகமாதத்திற்சுக்கிலபக்கத்திற்றுவாதசிமருவுற்றாற், சே கெறிந்திடும்வெண்டுகிலணிந்துயர்திலத்தினாலோமஞ்செய், தா கம்வாடநோற்றந்தணர்க்கெள்ளொடுமமுதினையளிக்கின்றோர், தோலகபாகனற்றிருவடிநீழலில்விண்ணவர்தொழவாழ்வார். ()

செல்வம்வேண்டுநரிந்திரன்சேவடிப்பூசனைசெயல்வேண்டுந்; சொல்லுதற்கருஞானம்வேண்டுநரரன் கழலிணைதொழல்வே ண்டு, மல்லனோய்க்கெடவேண்டுநர்செங்கதிராதவற்றொழல்வே ண்டுங், கல்விவேண்டுநர்மலரயன்சேவடிகருத்தொடுந்தொழ ல்வேண்டும். (௧௦௪)

தருமம்வேண்டுநர்பாவகன்சேவடிதயாவொடுந்தொழல் வேண்டுங், கருமம்வேண்டுநர் கணபதிசெய்யபொற்கழலிணை தொழல்வேண்டு, ·முரியபோகமேவேண்டுநருடுபதியொண்க ழறொழல்வேண்டும், வெருவரும்பலம்வேண்டுநர்வளிக்கிறை மென்பதந்தொழல்வேண்டும். (௧௦௫)

சிவிகைமெல்லணைமஞ்சநன்களித்தவர்திரண்முலைப்பணை மென்றோ, ளணைவயில்கற்புடைமனைவியரிளமுலைநலநுகர்ந்து றைகிற்பார், கவிகைநல்குநர்வெயிலினுழந்திடாரடைந்தவர் தமைக்காப்போர், குவிகையோடுநின்றொருவர்பாலிரந்திடாத மரர்கோனெனவாழ்வார். (௧௦௬)

அளிப்பவன்றனைவிலக்குநர்மலப்புழுவாகிவெந்துயர்கூர் வார், தளிக்கரும்புயல்வறந்தநாட்டானியமீட்டுநன்தயாவோ டுங், களிப்பவெம்பசியுழந்தவர்க்களித்திடானென்றிடிற்கழல் வேந்த, ரொளித்தகைப்பொருணெல்லுடன்கவர்ந்தவனுலைந்தி டச்செயல்வேண்டும். (௧௦௭)

பாவிவெம்பசியுழப்பினோமாங்கவர்க்களித்ிடல்பழுதாகு
மோவினல்லறமுடையவர்கைப்பொருளுள்ளவராறுலுந்
தாவினன்பொருளளித்திடினன்மையேபயந்திடுந்தயவோடுந்
தேவராலயங்கட்டுநர்புதுக்குநர்சிவனடியடைவாரே. (கு0அ)

தானமுறைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆகதிருவிருத்தம்—ருஅஉ.

இருபத்தாறுவது

வானப்பிரத்தமுறைத்தவத்தியாயம்.

ஆயுளிறுலாங்கூற்றின்றுதியினினரைதிரையடைந்துமூப்பெ
ய்திச், சேயினற்சேயுமைந்தரையுயிர்த்தாற்சிறுவர்பான்மனைவி
யையிருத்திக், காயெரியோடும்போகினும்போககடிமனையோடு
போகினும்போ, யேய்மதிப்பக்கத்துத்தராயனத்திற்கான்புகுந்
திருந்தவம்புரிக. (க)

ஊழ்த்தமென்சருகுகாய்கிழங்கருந்தியதிதிபூசனையுவந்தா
ற்றிக், காழ்த்தநீள்சமிதைகொண்டழற்கருமம்பஞ்சவெச்சங்க
டிதியற்றிச், சூழ்தருவண்டாற்றுங்கொன்றைவேணியனைத்தொ
ழுதுநீண்மயிர்நகநீட்டிப், பாழ்த்தவெம்பிறவியகற்றுவான்மூன்
றுகாலமுநீரிடைப்படியா. (உ)

எட்டுமென்கவள மேற்றயின்றீட்டி யிருவாவினுநனியியற்
றி, மட்டுநுண்டேறனுகர்தலான்பின்ன லொழிந்துவெவ்வனத்
திலேயல்லாற், பட்டினத்துள்ளயாவையுந்தணந்துகங்குலூனி
கழ்ந்துபார்ப்பதியை, யுட்டெளிவோடுநினைந்திடல்வானப்பிரத்
தர்தம்மொழுக்கமென்றுரைப்பார். (ங)

நெடிபடுகானிற்றவம்புரிவோர்கணேரிழைமகளிரைக்கலப்
பி,னடைவுறுமொழுக்கமழிந்திடுமாங்கண்மைந்தரையுயிர்த்திடி
னவரை, யொடிவின்றன்மறையோர்தீண்டுதலாகாவோதிவித்திடு
தலுமாகா, படியினிலெவருமாங்கவன்மரபுபழிபடுமாமெனவு
ரைப்பார். (சு)

வேந்தரும்வானப்பிரத்தராய்மேவி யின்னணம்புரிகுதல்
வேண்டுங், காந்தவெம்பாறைபால்படுமிட்த்திற்கண்படைபுரிகு
தல்வேண்டு, மேய்ந்திடுபெருவமொன்றினுக்கல்லாலருந்துகூடீ
ட்டுதலாகா, சாந்தணிமுலையார்தடமுலைபுல்லினரகணித்தாமவ
ர்தமக்கே. (ரு)

எற்பெழநோற்றுரைப்பசியடையினிட்டியவனைத்தையும
ளிக்க, வெம்பினவனநெற்புல்லூரலாகவுமியொழித்தருந்துதல்

வேண்டு, மற்புடனுள்கனொன்றுவிட்டேனுமாறுநாளிடையொழித்தேனும், பொற்புடனருந்தல்வேண்டுமற்றென்னப்புலமைநூல்வல்லவர்புகன்றார். (சு)

புலவுசிவாதோல்புனைந்ததுவே போர்வையாய்மெய்யினிலணிந்து, மலைமகள்கேள்வ னருளினைவழுத்தி யாங்கவன்மந்திரஞ்செபித்துக், கலைகளினுயர்ந்தவுபநிடதத்தின்பொருடெரிந்தழல்வினைகருதி, யுலவுதல்வானப்பிரத்தர்தம்மொழுக்க மெனமறைமுழுவதுமுரைக்கும். (எ)

வானப்பிரத்தமுறைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்—ருஅகூ.

இருபத்தேழாவது

சன்னியாசமுறைத்த வத்தியாயம்.

ஆயுளைம்பதனிற்றவம்புரிவானப் பிரத்தனெபெழுபத்தஞ்சுகன்றாற், றூயநல்லெதியாய்க்கிடமேபோலவொருவயிற்றுஞ்சிடாதுழன்று, காயமுந்தானும்வேறெனவுணர்ந்து புலன்வழிக்கருத்தினைச்செலுத்தா, தேயினபருவநூற்றையுங்கழித்தலெதியொழுக்கெனமறையியம்பும். (க)

ஞானசன்னியாசம்வேதசன்னியாசங்கருமசன்னியாசமாநலங்கொ, ளீனமிலெதிகளொழுக்கமோர்மூன்று மிந்தியபந்தனைநீங்கித், தானதுவாகவொழுகுதல்ஞானம்வதிறன்னற்பலன்விழையா, தூனமில்யோகம்பயின்றிடல்வேதவெதியொழுக்கெனவுரைத்திடுவார். (உ)

தழலினையான்மாவிடையினிலொடுக்கி மனத்தினுன்மகந்துனியியற்றி, மழவிடையுயர்த்தோன்றனைநினைந்திருத்தல் கருமசன்னியாசிமானேக்காம், பழுதறுமிவரில்ஞானசன்னியாசி யுயர்ந்தவன்பற்றிகலின்றி, விழைவொடுபேறுமிழப்புமொன்றாக நினைந்திடும்விமலதையதனால். (ங)

ஆற்றிடைச்செல்லிற்பல்லுயிர்தாளின்வீந்திடுமெனவுளத்தெண்ணி, தூற்றுமைப்புயல்சேர்திங்களோர் நான்குமோர்நகரிடைத்தனிதுன்னி, யேற்றுணுவருந்தியல்லசெய்யாமலிலகொளிப்பிறையெயிற்றகல்வாய்க், கூற்றுயிர்குடித்ததாமரைப்பொற்றாள்குறித்திடலெதியொழுக்காமால். (ச)

வேறு.

கற்றோயரத்தத்துகில்புனைந்துகழுத்தினளவுமயிரொறிந்து
பற்றார்புரந்தீயெழநகைத்தபரமன்சரிதைபாராட்டி
மற்றோர்தெய்வமெண்ணுதுபசுநூலுளத்தின்மதியாமல்
வெற்றோருணாக்ள்விளம்பாதுநட்த்தலெதிகள்வியனெறியே. ()

முக்கோமுங்கிச்சிகைகரித்துமுன்னூலணிதறவிராதுஈ
தக்கோரோத்தும்வேதாந்தமுறையினின்றுதம்முளத்தி
னெக்காலத்துஞ்சிவன்பாதமெண்ணலொழியாதிருந்தோரு
மைக்கார்மிடற்றுப்புத்தேளிர்கமலபாதமருங்கடைவார். (சு)

சன்னியாசமுரைத்தவத்தியாய முற்றிற்று.
ஆ திருவிருத்தம்—ருகூரு.

இருபத்தெட்டாவது

முற்றத்துறந்தோர்பிராயச்சித்த முரைத்தவத்தியாயம்.

இல்வாழ்வினர்செய்தொழினீங்கியிருந்தகாலத்தேழ்மனை
யின், மெல்லப்புகுந்தேயுறுவேற்றெண்பிடியாங்கருந்தல்விய
ன்மூங்கின், மல்லற்சுரையின்மெல்லோடுமரப்பாத்திரமண்பாத்
திரமே, சொல்லுமெதிகள்பாத்திரமாஞ்சுரையோடிவற்றிற்சிற
ந்ததுவே. (க)

இதயமலரிற்றிருமாலையிருத்திற்றிருமாலிதயத்திற்
கதவெங்கரியினதளுரித்தகண்மூன்றுடையோன்றனையிருத்தி
விதியிற்றியானஞ்செய்வோர்கள்விட்டினடைவரறத்துறந்தோர்
முதிருங்கங்குல்பகல்மாலைமுக்கணனைத்தொழல்வேண்டும். ()

முற்றத்துறந்தோர்முதுக்குறைந்தோர்முகின்மென்முலையார்த
மைத்திண்டிற், பற்றற்றிரிந்துகிரிச்சரங்கள்பண்ணிப்பிராணுயா
மஞ்செய்,துற்றகியமம்பலவியற்றிபுலவாப்பாவமொழிப்பதற்கு;
வெற்றிமதனைவிழித்தெரித்தவிமலன்பாதந்தொழல்வேண்டும்()

துறந்தோர்பொய்ம்மையுரைத்திடுதறீதுதோமில்மாயையி
லுல்,மறந்தோர்பொய்ம்மையுரைத்தாரோல்வருந்தியொருநாளு
ண்டியொழிந், தறங்கூர்பிராணுயாமமொருநூற்றிடுககள்ளு
நோற், சிறந்தசாந்திராயணமோர்வருடஞ்செய்யவேண்டுமால்

அறியாதொன்றினுவிவினைச்செகுத்தாரென்னினுளமஞ்சிச்
செறியுஞ்சாந்திராயணங்கள்செய்துசிவபூசனைபுரிக
நறுமென்குழலார்முலையின்மன நடந்ததென்னிலெண்ணிரண்
குறைவில்பிராணுயாமங்கள்கோதின்றியற்றவியல்பாமால் [டிற்

முகிழ்த்துவிங்குமிளமுலையார்முறுவனேக்கிமனத்தினிடை
மகிழ்ந்துகாதுப்பகல்விழிவ்மூன்றுநாளுணமறுத்துளத்தி
னிகழ்ந்துதன்னையொருநூறுபிராணுயாமமியற்றிடுக
நிகழ்ந்தநெறியினிருந்தோர்கள்பாவமனைத்துநீங்கிடுமால். (சு))

நலிவெம்பசியின்பிடித்துநதகவச்சிரார்த்தந்தனிநுகரி
னெலிவெண்டினாயினவெள்ளுப்புவாளாநுகரினூந்தினரு

வலகில்பிராசாபத்தியமாங்கிரிச்சரங்களினிதாற்றிக் [மால்
கலைவெண்டிங்கள்முடித்தபெம்மான் கழற்குள்வழுத்தவேண்டு

எண்டோண்முக்கட் பெருமானுக் கிணையாந்தெய்வமுண்
டென்போர், புண்டோய்நரகத்தடைவரொன்றுற் புவிதீவளிநீர்
வெளியாகி, விண்டோய்ந்துலவுமிருசுடராயெச்சனுகிவேதாந்
தந்,தண்டாதுறையுந்தனிசுடரின்பாதந்தொழுதறகைமைத்தே

இன்னவாற்றினெதிரிலைமையுரைத்தேமீதுநான்முகத்தோன்
முன்னமுனிவர்க்குரைத்ததிதன்பொருளையோகமுயன்றோர்க்கு
மன்னுங்காதற்புதல்வருக்குமாணுக்கருக்குமல்லாது [தாா
கொன்னேபிறர்க்குவிரித்துரைப்பிற்குற்றம்பயக்குமெனவுரைத்

முற்றத்துறந்தோர்பிராயச்சித்தமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கூ0ச.

இருபத்தொன்பதாவது

பிரமகத்திப்பிராயச்சித்தமுரைத்த வத்தியாயம்.

செய்தக்கசெய்யாதொழிந்தாரெனிற்செய்தலாகா
வெய்துற்றகன்மமிழைத்தாரெனின்மேன்மையெய்தி
யைதுற்றநெஞ்சத்தவர்பாவமகற்றும்வண்ண
நொய்திற்புகன்றாரவையானுநொடிதலுற்றேன். (க)

கொலைசெய்தல்கள்ளல்குருநிந்தைகள்ளுண்டலின்ன
வலகில்கொடும்பாதகர்ச்சேருதலாகவைந்தா
நிலையின்றியலுங்கொடும்பாவநினைக்கலாது
மலைவின்றிக்கூடுமவர்தன்மைவகுக்கலுற்றாம். (உ)

கொலையாதிபாவம்புரிந்தோர்கொடும்பாவமெண்ணு
துலையாதுபேசியுடன்வைகிமற்றெருக்கவுண்டு
மலையாமலுற்றோர்பருவமுடன்வைகினுனே
லலையாதிபாவம்புரிந்தோர்கொடும்பாவியாவான். (ங)

வேறு.

பஞ்சமாபாதகரென்றவர்தன்மையறிந்திருந்தும்பரிந்துநெ
ஞ்ச,மஞ்சுறுதாங்கவரோடொருகணமாயினுங்கூடியமர்ந்துவா
ழ்வோர், செஞ்சவேயவர்போலப் பாதகரென்றறிவுடையோர்
தெளிந்துசொல்வா,ருஞ்சுபோமற்றவர்க்குப்பிராச்சித்தவிதிசி
றிதிங்குரைத்துமன்றே. (ச)

அழலூட்டிப்பின்னுகரு மருந்தவத்தோர்ச்செருத்தோர்க
டண்டந்தன்னிற், கழிபுலாற்றலைவிங்கியிராறுபருவநகரக்கண்
ணுறுது,நிழல்காலுமணிமுடிப்பொற்சினகரத்துச்செல்லாதுநீ

சர்போல, வொழியா துகர்ப்புறத்தின்மென்மெலச்சென்றைய
மேற்றுண்டல்வேண்டும். (ரு)

எண்ணரியகொடும்பாவம் புரிந்தனமென்றுளத்தினிடை
யெண்ணியெண்ணி, நண்ணரியகொடுங்கானின்வெவ்வெரியிற்ற
வம்புரிந்துநாளுநாளும், புண்ணியராமேச்சுரத்தை வலங்கொ
ண்டுசேதுவினன்புனலிற்றோய்ந்து,மண்ணலஞ்சீர்க்கங்கைதனி
லாடியுமிக்கொடும்பாவமகற்றல்வேண்டும். (சு)

பற்பலவும்புகன்றென்கொல் காசிநகர்தனிலெய்திப் பவள
வேணி, யற்புதமாம்வயிரவன்றன்கபாலமோசனதீர்த்தத்தருளி
னாடிற், சொற்றவரும்பிரமகத்திதொலையுமெனச்சுடர்க்கொழுந்
தாங்கடவுடன்னை, வற்பிறெடும்பிரமகத்தி தொடர்ந்தகதையு
ரைத்திவெனவழங்கலுற்றான். (எ)

பிரமகத்திப்பிராயச்சித்தமுரைத்தவத்தியாயமுற்றிற்று.
ஆ. திருவிருத்தம்—சுகக.

முப்பதாவது
வயிரவன்பலியிரந்த வத்தியாயம்.

கொண்டற்றவழ்ந்துவிளையாடுங்குடுமிமேருவரைச்சாரல்
வண்டுஞ்சுரும்புமொருகோடி வழங்குங்கமலப்பொகுட்டுறையு
மண்டர்பெருமான்முகநோக்கிச்சனகனுதியருமுனிவர் [ர்
தண்டாவுலகமெவற்றினுக்குந்தலைவனெவன்கொல்சாற்றென்று

கனவெண்டிரைசூழுலகனைத்தும் படைத்துக்காத்துக்காய்ந்
திடுத, வினையுமெனதுவிளையாட்டே லபயவரதம்பிடித்துநெ
ளித்,தெனையொப்பவர்யாரொனத்திசைதோறிருக்குந்தேவரொல்
லோரு, முனிவிரென்னையிணையொவ்வார்யானேமுதல்வனென
வுரைத்தான். (உ)

என்னமலரோனுரைத்திடலும் பெடைவண்டிளஞ்சூன்மு
திர்ந்துறங்கும், கன்னித்துளவந்துயல்வருதோட்காயாவண்ண
ன்வினாந்தெய்தி,முன்னமெனதுந்தியிற்பிறந்தநீயோமுதல்வன்
முறைபிறழச், சொன்னதெவன்கொலெனக்கன்று சொல்லா
ச்சுடுசொற்பலசொன்னான். (௩)

இருவர்மொழியுங்கேட்டிகழாவிருக்குவேதமாங்கெய்திப்
பருவமுகில்போனிறத்தோயும்பங்கேருகமேலுறைவோயும்
விரியும்புவனமனைத்தினுக்குங்கடவுளல்லிர்விரிகடலிற்
கருகும்விடமுண்டுமையளித்தகருணைக்கடலேமுதலாவான். ()

என்னுவிருக்குமறைபகர விரண்டாம்வேத மாங்கெய்தி,
யொன்னார்புரமூன் றெருங்கெரியமுறுவல்கோட்டுமொருமுத

லே, முன்னோன்முன்னோனெனமேற்கோள் காட்டிமுதிர்ந்தமு
துக்குறைவாற், றன்னுத்தமும்பமுறையிட்டுக் கனம்போலதிர்ந்
துசாற்றியதே. (ரு)

இறந்தும்பிறந்துமெவ்வுயிருமொழியாதுலவியெஞ்ஞான்றுங்
கறங்குபோலத்திரியவெவனியற்றுங்கருணைக்கடல்யாவன்
சிறந்தவந்தச்சங்கரனேதேவதேவனெனம்பதல்லான்
மறந்தும்பிறனையெண்ணற்கவென்றுசாமம்வழங்கியதே. (சு)

ஒன்றாய்ப்பலவாயுயிர்க்குயிராயுலகமனைத்துந்தானுகி
நின்றுங்கவற்றிற்பொருந்தாதநீறுபூத்தசெழும்பவளக்
குன்றாயன்பரிதயமலர்க்கோயிற்றோருமினிதமரும் [துவே
பொன்றாழ்சடையோன்முதல்வனென நான்காம்வேதம்புகன்ற

வேதநான்குமிவைகூறவெகுண்டுகமலத்திறைபுகல்வா
னுதிப்பிரமமொருபங்கினணங்கையமைத்துநீறுடிப் [ங்
பூதத்தொகுதியொடுங்குனித்துப்பொறிவாளரவக்கச்சசைத்து
காதலோடுமென்மகவாய்ப்பிறக்குங்கொல்லோகழறுதிரால் (அ)

என்றுகமலத்திறைகூறக்குடிலையெழுந்துநகைகோட்டி
நன்றுசொன்னயெனவெள்ளிநாதன்பனையோடியைந்திடுத
றன்றுமாபோலிருப்பதல்லாற்றேய்ந்துந்தோயான்பனைகன்னி
குன்றவில்லியெஞ்ஞான்றும்பிரமசாரியெனக்குறிப்பார். (கூ)

இயிலேறிவர்ந்தானெனவுரைத்தாயென்றுந்தருமமாதவினு
லமலனதனினிதுறைந்தானன்றிச்சுடலையாடியெனக்
கமலயோனியிகழ்ந்துரைத்தாய்புவனமுழுதுங்கனற்றியநாள்
விமலனுறையப்புறங்காடேயன்றிவேறேரிடனுண்டோ. (க0)

என்னக்குடிலைதெருட்டவுளந்தெருளாதெகினபாகனெடுங்
கன்னிப்படலைத்துழாய்மார்பன்செம்மாந்துறைதல்கண்ணுற்று
முன்னற்கரியபேரொளியாமுக்கட்பெருமானெருகோடி [ங்
மின்னுக்கதிரொண்டிசையளப்பவிசம்பூடறுத்துவெளிநின்றான்.

சுடர்பன்னிரண்டுமின்மினியிற்றேன்றவெறிக்கும்பேரொளியும்
படைகடிருக்குமெண்டோளுமுகமோரைந்தும்பானிறத்த
வடலையணிந்தவெழின்மெய்யுமலங்குசோதிமுக்கண்ணு
முடையவுருவநோக்கியயனஞ்சாமுகமீதுரைத்ததுவே. (கஉ)

முன்னமெனதுநுதனுப்பனுதித்தநீயோமுதல்வனெனப்
பின்னும்வெகுண்டுகூறுதலும் பிள்ளைப்பிறைதாழ்மணிமவுலிப்
பொன்னங்குடுமிவரைகுழைத்தபுனிதன்காரிமுகநோக்க [ன்
வன்றேவிடக்கைகநுதியான் மலரோனைந்தாந்தலையகழ்ந்கா

உலகம்பூத்தகளிமுதல்வனைந்தாங்கலையையுயர்காரி
யிலகுமுகிலாகழ்ந்திடவுமிறத்தனோக்கியுளமிரங்கிக்
கலைமகுந்தைருயொருபாகனுவியளிப்பக்கடிக்கமல [தான்
மலரோன்றுயிலேற்றவர்போலக்கடிதினெழுந்துவாழ்த்திசைத்

மூவாமுதலாயெவ்வுலகும் படைத்தாய்போற்றி முதுக்கு றைவாழ், காவாப்புலன்கடனிகாக்குமுனிவர்கருத்தி னடம்புரி யுந், தேவாபோற்றிவேடன்மலர்க்கண்ணுந்திருமால்விழிக்கமல ப், பூவும்புனையவருள்பொழியும்பொன்னேபோற்றிபோற்றியே.

என்னுமிறைஞ்சுஞ்சூழ்போதுமெந்தைகமலச்சேவடிக
டன்னதுளத்தினீங்காமலிருத்துமறைநூறளிற்பழிச்சுங் [யே
கொன்னேதமியெனிழைத்தபிழை பொறுத்தியென்னுங்குற்றடி
னுன்னைவணங்குமனந்திரியாதிருப்பவரமீயுதவென்னும். (௧௬)

என்றிவ்வாறுமறைக்கிழவனிரந்துகேட்டவரமருளிப்
பொன்முதுலகினறநிறுத்தவுளத்தினெண்ணிப்புதுநறவங்
கொன்றைதுளிப்பப்பண்டரங்குனிக்குங்கூத்தப்பிரானயனை
வென்றகாரிமுகநோக்கிவிழைவோடிதனைவிளம்புவான். (௧௭)

தருமவொழுக்கம்யாம்புரிந்தவாறேயன்றித்தகுமுறையின்
விரியும்புவனத்துள்ளோர்கள்புரியாரதனால்விரிதலையோட்
டரிதிற்பருவமீராறுமையமேற்றுப்பிரமகத்தி [ன்
வினைவினொழித்தீண்டடைதியெனத்தருமமோர்ந்துவிளம்பினா

காசிநகரந்தனிற்காரியடையுமளவும்பிரமகத்தி
மாசின்மடவாருருக்கொடவன்பின்னேதிரிதியெனவழங்கிப்
பேசுமுலகமுழுதீன்றபெரியோன்றனக்குவிடைநல்கி
யோசையல்லாதணிபுனையாவுரவோன்மறைந்துபோயினான். ()

வேறு.

மையணிகண்டனுருவினைக்கண்டோர்மாரவேளுருவினை நோக்கின், வெய்யநன்குரங்கினுருவெனவிகழ்ந்து விழிமலர்பு தைத்தநர்நகைப்பச், செய்யதாமரைக்கண்மாலெனமாதர்நல்லு ருவினிதினிற்றேர்ந்திவ், வையனைப்புணரத்தவமிழைத்திலமெ ன்றமரரேக்கறவொடும்வணங்க. (௨0)

கொழுதிவண்டினங்கள்கோடிவிழ்ந்தரற்றுங்கொழுமலர்க் கொன்றைதாழ்சடையோன்,மழையுறழ்மேனிக்கண்ணனுமயனு மயனுமோர்கோடிநாள்வருந்தி, யெழுதினுமெழுதற்கரியநல்லு ருவந்தன்னொடுமிருநிலவலாப்பிற், பழுதறுவிண்ணிற்பாதலம தனிற்பலியிரந்திடவெழுந்தனனால். (௨௧)

தளிமுகில்பைந்தேன்மாரிபெய்தென்னத்தழல்படுகாட்டி டையுலஞ்ச, முனிசினைக்கருவும்பசுங்கழைகுழைப்பமுரியேறு

யரியகடவுள், களியொடுஞ்சாமகீதம்வல்லிரும்புங்கல்லுநின்று
ருகிடப்பாடி, யளியொடும்புவியின்மகளிர்பின்ருெடரவணிங்க
ொங்கணுந்திரிந்தான். (உஉ)

கொலைக்கரும்புருவவரிக்குயிலன்னார்கோமறுகெய்தமெல்
லடிதோ, யலத்தகக்குழம்புதோய்ந்தமென்சுவட்டின்விழுந்து
விழ்கூந்தன்மென்போது,சிலைத்தலைகுழைத்துவேள்விடுங்கணை
களிசனைத்தொடர்ந்துசென்மாதர்,முலைத்தலையுருவிக்குருதிவா
ய்மூழ்கிவயின்வயின்மொய்த்தனகடுக்கும். (உங)

வேறு.

மட்டவிழ்கொன்றையானைக்காணியமறுகிற்செல்வாள்
பட்டிகையவிழ்ந்துகாலிற்கிடப்பதுபசும்பொற்சுண்ணங்
கொட்டியமுலையாற்புல்லார்கேண்மைபோனுளுங்குன்று
மிட்டிடைவருந்துமேகலென்றடிபிடித்தல்போலும். (உச)

அரிக்குரற்சிலம்புகாலினணிந்திடவெடுத்தபோதின்
விரைக்குழன்மாதரையன்வீதியிற்போந்தானென்ன
வுரைத்தலுமங்கைத்தாங்கியோடுதல்விரைவிற்சென்ற
திருக்கிளர்தாளிற்பேயலெனநனிசேறல்போலும். (உரு)

கறைகெழுசூலத்தானைக்காணியவிரைவிற்செல்வாள்
பிறைவடங்கிடந்தபொம்மலிளமுலைததும்பல்பேதுற்
றிறுமிறுமென்னத்தேய்ந்தவிடுகிடைதாங்கலாது
பொறையினையாற்றியாற்றிவைப்பதுபோலுமாதோ. (உசு)

புழுகுநெய்நானஞ்சாந்தங்குங்குமங்குழைத்துப்பூசா
தழலவிர்சூலத்தெந்தைவரவுகேட்டயர்ந்துவைத்து
விழைவொடுஞ்சேறல்கண்டுமீண்டவனழகின்வீக்க
மெழுதிடவன்னம்யாவுங்குழைத்துவைத்தேகல்போலும். (உஎ)

மங்கையரடியீட்டேத்தமறுகிடைச்செல்லுமாதர்
பொங்கியவோர்காழ்முத்தமுலையிடைப்புடைத்தற்கஞ்சிச்
செங்கையாலமைத்தலென்முன்செல்லலையிறைபாலென்னத்
தங்கியவெகுளியோடுமனத்தினைத்தடுத்தல்போலும். (உஅ)

வேறு.

வீதிவாயெய்தியவிமலர்க்காணிய
வாதரவொடுமறுகணைந்துசெல்லுவான்
காதினிலோலைமுன்கழன்றுவீழ்வது
சாதனவோலைமுன்விடுத்தல்சாலுமே. (உகூ)

ஐயனைமறுகிடைக்கண்டவங்கலார்
கையினின்மலர்கடூஉய்த்தொழுதல்கன்னியர்
மெய்துளைபட்டிட்க்காமன்வில்வளைத்
தெய்தபூங்கணைகண்முன்னிட்டல்போலுமால். (ஙo)

மழவிடையுயரியவரதர்க்காண்குறும்
விழைவினளாகலின்விழிகண்முற்றுமை
பொழுதிடூழியினிறக்குந்திட்டலென்
றழுதனடொழுதனளன்னைதன்னையே. (௬௧)

வேறு.

கைவளம்பாடியையமேற்றிடுநாதற்காண்பான்
மைவளைத்தாவியுண்ணுமதர்விழியொருப்பாடெண்ணிக்
கைவளைகழற்றியந்தண்கலிங்கமுமனுவும்வீக்கித்
தெய்வதம்பராவியன்னைவிடுத்தனடிகைத்துநின்றாள். (௬௨)

குன்றிடைபிறந்தமெல்லென்குறுநடைபயிலுமந்தண்
மன்றலங்குழவித்தென்றல்வருதொறும்வசந்தகாலம்
பொன்றுணர்த்தாதுநீக்கிப்பூங்கொடியசைதல்போல
வென்றிவேற்கண்ணாரொங்கைவிழாவணிவீதிபுக்கார். (௬௩)

முறுக்குறைவாளர்காணாமுதல்வனையெளிதிற்காண்பான்
விதிர்ப்புறுநசையாலுள்ளநீங்கவேற்றுடலமாகிக்
கதுப்பினிலணியுந்தாமங்கைவளையாகச்சுற்றி
மதுக்களிமாதர்போலமலரடியிடரச்சென்றார். (௬௪)

அலத்தகமணிந்தசெம்பொனடிச்சுவட்டூந்தலோடு
நிலைத்தலைசிவந்ததந்நிலத்தலத்தழுந்திமாதர்
மலர்ப்பதம்பூமிகைம்மாறளித்தெனச்சிவப்பவந்தாங்
கிலைத்தலைசூலவேற்கையெந்தையைத்தொழுகின்றாரும். (௬௫)

மயிற்குலம்வருதல்போலமறுகிடைமொய்த்தமாதர்
வெயிற்கதிர்ச்சூலவேற்கைவிமலனையினிதுநோக்கித்
துயிற்சுவைமறப்பக்கண்களெம்முடைநாணினோடு
முயிர்ப்பலிகொளவோவெந்தைபோந்ததென்றுரைக்கின்றாரும்

பையரவல்குனல்லார்பலியொடும்வளைகணல்கி
மையணிமிடற்றோய்கேட்டிமறுகிடையினிதுபாடி
யையமேற்றுண்பார்க்கெல்லாமரிமதர்நெடுங்கணார்தங்
கையணிசங்கங்கொல்லோகறியமுதென்கின்றாரும். (௬௭)

செய்யனைக்காண்டலோடுநாணொடுசேலம்போக்கி
மெய்விளர்த்தாங்குநிற்குங்கன்னியைவெகுண்டுநோக்கி
யையனையனைத்தாய்போலுமாங்கவனணிந்ததூசுந்
தூய்யவெண்ணீறுநின்மேற்றோன்றலாலென்கின்றாரும். (௬௮)

மயர்வொடுமறுகினெய்துமங்கையர்பலிபெற்றெய்து
மியவனைக்காண்டலோடுமாரனையெரித்தமாற்றம்
பயனில்சொலெனித்தமிட்டும்பனிமலர்வாளிதூவி
யயர்வுறமடவாராவியுண்ணுமோவறைதியென்பார். (௬௯)

அந்தணர்ப்பிழைத்தபாவமகற்றவோர்பன்னீராண்டு
மெந்தைநியயமேற்றுண்டாற்றுவானிருக்கின்றுயேற்
சுந்தரமடவார்தம்மைநாளுெடுந்துலேத்தபாவ
நந்திடும்விரதம்யாதோபயின்றதுநம்பவென்பார். (சு0)

கண்ணிறான்மதனேமுன்னங்கனற்றினேயவன்றன்சேனே
வண்ணமேகலையாளென்னமனத்திடைநினேந்துகொல்லோ
தண்ணளிபுரிந்தேயெம்மைத்தழுவுருதாவிவாட்டப்
பண்ணுலாஞ்சாமகீதம்பாடிமீண்டகல்வதென்பார். (சுக)

இன்னணம்புவியின்மாதர்மாலொடுந்தொடரவேகிப்
பன்னகநாட்டினெய்திப்பலியிரந்தெய்தவங்கண்
மன்னியமடவார்சூழ்ந்துன்னெனப்பினேக்கேட்டகண்க
ளென்னநற்றவஞ்செய்தோவுன்னுருவினேக்கண்டதென்பார். ()

வருமுலேயோடுந்தோன்றவளர்தொறும்வளர்ந்துமாதர்க்
குரியவாநாணுந்தூசுமொழிந்திடவளேயுநெஞ்சு
மரியதம்முயிரும்பூணுமையமோடளித்துமாறாந்
தெரியுமுத்தலேவேலண்ணல்பின்றெடர்ந்தேகினூரால். (சுங)

பாதலத்துறையுமாதர்விஞ்சையர்மாதர்பண்பிற்
காதல்கொளரக்கர்மாதர்சூழ்வரக்கடிகையேந்தி
யேதமில்கணங்கள்சூழவிளம்பிறைமுடித்தபுத்தேள்
மேதகவமரர்வாழும்விண்ணுலகெய்தினூனே. (சுச)

வேறு.

நெய்திடாப்பூந்துகில்நெகிழக்கைகளாற்
கொய்திடாமலர்புனேகூந்தல்சோர்ந்திடப்
பையரவல்குலார்பலியிரந்திடு
மையனேச்சூழ்ந்திவையறைதன்மேயினூர். (சுரு)

எங்குளவுயிர்களுமெரிகொளுத்திட
வங்கியையோர்கரத்தமைத்தகண்ணுதல்
மங்கையர்தமைச்சுடமன்த்தினெண்ணியோர்
திங்களங்குழவியைச்சடையிற்சேர்த்ததே. (சுசு)

வேறு.

பொரியயாயாரநறுங்குறடுரிஞ்சாப்புண்ணியத்தேவையின், மூழ்கி,பிரவுநன்பகலுமிடுகிடைவருந்தமார்பிடங்கொண்டதை யல்லாற்,பரியவெண்முத்தங்கிடந்தவெம்முலேகாள்பையரவணிந்தவெம்பெருமான், திருவமர்மார்பந் தினேத்திடத்தவநீர் செய்திலிரொனச்சிலர்துயர்வார். (சுஎ)

சேயரிபரந்து கடைக்குழைமெறிந்து திரைகடலேழினும் பெருத்துப், பாயசூர்விழிகளிமைத்திடாதிருந்தபலமடைந்தே

ம்பசுங்குளவோ, ளுயிரங்கற்பம்பன்றியாயுலகங்கீண்டுநாடியுமி னமயியாத்,தூயபங்கயத்தாளௌளிதினிற்காணப்பெற்றதாலெனச்சிலர்சொழுவார். (சஅ)

காங்களஞ்செல்வியியுதத்தென்னக்கைவளையொடும்பலியிடுவார், சாந்தமென்கொங்கைமேருவிற்பெரிதோதடக்கையிற்பிடித்திலேயென்பார், மாந்தளிர்மேனிமகளிரின்னணஞ்சூழ்ந்திரங்கிடவயிரவன்போகிப், பூந்துழாய்முகுந்தனரசுவீற்றிருக்கும்புண்ணியவுலகினிலடைந்தான். (சகூ)

பங்கயன்றலையோடேந்தியகாரிமாலுழைப்படர்தலுஞ்சினவிச், சங்கொடுநேமிநாந்தகம்வரிவிற்றண்டமென்றுரைக்குமைம்படையுஞ், சிங்கவேறனையவிச்சுவசேனனெடுத்தமர்திளைப்பதற்கென்னரி, யங்கிகொப்புளிக்குஞ்சக்கரந்திரியாவழலின்வீழ்பதங்கமொத்தெதிர்ந்தான். (ருo)

விச்சுவசேனன்வெகுண்டுமுன்னெய்திவெஞ்சமம்புரிதலுநகைத்துக், கச்சையங்களிற்றினிருரிபுனைந்தகனலுமிழ்கண்ணுதற்காரி, யச்சணங்கெரிகால்முத்தலைப்படையி னுங்கவனுடலினைக்கோத்துப், பச்சைமாலுழையுளெய்தலுமாயனெழுந்தடிபணிந்திவைபுரிவான். (ருக)

உரியநற்பலியாளுதவுவனென்னவுலகுமோரடியினிற்படுத்த கரியவனேமிப்படையினுற்றனதுகவின்வளர்மத்தகம்பிளந்து குருதிநீரருவிபோலநின்றொழுகக்காரிகைகொள்கபாலத்திற் பருவமாயிரமாங்குகுக்கவுங்கபாலம்பாதியுநிறைந்திலதன்றே.

ஆயிரம்பருவஞ்செங்கண்மானுதலினருவிபோலரத்தம்வாங்கியதான், மேயதன்னுடலமெலிந்துமூர்ச்சனையான்மெலிதலும்விரைமலர்ப்பொகுட்டு, நாயகிவெருவியிருகரநெரித்துநாட்டநீர்துளித்திடக்கலுழ்ந்து,பாய்புலிப்போத்தினதள்புனைகாரிபதமலர்பழிச்சினளன்றே. (ருஙு)

வேறு.

மருவார்செழுங்கூந்தல்வாணிகலன்பூண்டிருப்பத்
தருபிழன்மேவிச்சசிவாழ்வினேடிருப்பத்
திருவோதிருவிழப்பாள்தேவர்சூளாமணியே
கரியோனுயிரளித்தென்மங்கலநாண்காப்பாயே. (ருச)

திங்கண்முடித்தோய்திரிபுரமுன்றீமூட்டு
மெங்கள்பெருமானேயேத்துவார்கண்மணியே
கங்கைமணாளாவென்காதலனையுய்வித்து
மங்கலநாணபிச்சைவழங்காய்வழங்காயே. (ருரு)

காலன்விழமுன்னங்கஞ்சப்பதம்பணித்துப்
பாலனுயிர்காத்தோய்பண்ணவர்கள்வியாம
லாலவிடமயின்றவாகிப்பரஞ்சுடரோ
மாலினுயிரளித்தென்மங்கலநாண்காப்பாயே. (௫௬)

மூவரெனவோதுமுதற்றேவரிலொருவ
னாவியழிந்தாலவுணருனையேசாரோ
தேவரிடர்தீர்ப்போய்சிற்றடிச்சிமங்கலநாண்
காவல்புரியாயேயென்றுங்கலைகண்ணே. (௫௭)

என்றுகமலைதொழுதிரப்பமாமேருக்
குன்றவரிவிற்குழைத்தகோமானருள்பூத்து
மன்றற்றுளவோன்றனையெடுத்துமார்பணைத்துத்
தன்றுணைக்கையாலவன்றன்மேனிதடவந்தான். (௫௮)

ஐயன்கரத்தாற்றடவரலுமார்கலிசூழ்
வையமளந்தமணிவண்ணன்மூர்ச்சனைதீர்ந்
துய்யாவெழுந்திட்டரவோன்மலரடியிற்
கையான்மலர்தூஉய்ப்பழிச்சியிவைகட்டுரைப்பான். (௫௯)

அன்னையுமாயெவ்வுயிர்க்குந்தந்தையுமாயாண்டருளு
முன்னவனேநின்னைப்பிரமகத்திமுற்றுமே
நின்னகராங்காசிதனினியடையிற்பின்றொடர்ந்தாங்
கென்னைபுரியுங்கொடும்பாவமெந்தாயே. (௬௦)

என்னக்கமலத்தவனோடிலகின்ற
முன்னோனுவைப்பமுகிழ்நகைசெய்தெம்பெருமான்
கன்னியெயில்சூழ்கிடந்தகாசிப்பதியேக
வன்னோன்கரத்திற்கபாலமவண்வீழ்ந்ததுவே. (௬௧)

போராதுபின்செல்பிரமகத்திவிண்டோயு
மாராமஞ்சூழுமகன்காசிகண்ணுறலும்
வேராவிதிர்விதிராமெய்ந்நடுங்கிப்பாதலத்துள்
யாரேனுங்காணாதவண்ணமொளித்தேகியதே. (௬௨)

எந்தையடியீடுபோற்றியியற்காசிதனில்
வந்தநெடுமால்மலரோன்றலையெறிந்த
சிந்தாமணிதன்னைத்தேவர்சூளாமணியை
நந்தாவிளக்கைப்பணிந்துநவில்கின்றான். (௬௩)

சிங்கஞ்சினவிற்றறுகட்டிறல்வேழத்
தங்கம்பிளந்தலைவதல்லாமற்சிற்றெறும்பைப்
பங்கப்படுத்துமேபாற்கடலோர்பாலர்க்குப்
பொங்குமுவகையாலீந்தபுராதனனே. (௬௪)

என்றுதிருமாலிரப்பநெடுஞ்சூலத்திற்
பொன்றிக்கிடந்தபுயல்போலிறந்தானைச்
சென்றவுயிரளித்தத்தியுமிழுஞ்சூலத்தான்
மன்றற்றுளவோன்மனைவன்னான்கைக்கொடுத்தான். (௬௫)

உய்வந்தசேனைமுதலவரோடும்வந்து
மைவந்தகண்டற்பணிந்தவன்றன்மாணருளால்
நைவந்தவுள்ளநடுக்கலநாரணன்போய்ப்
பைவந்தவெந்தறுகட்பாப்பணையின்மேவினான். (௬௬)

தண்ணந்துளவோனகலத்தனைவாத
வண்ணலஞ்சிர்காரியகன்காசியிலமர்ந்தா
னெண்ணருமிக்காதைபயின்றோரிரும்பாவ
நண்ணலராய்க்காசிநகர்நண்ணினார்பேறடைவார். (௬௭)

வயிரவன்பலியிரந்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௬௭௮.

முப்பத்தொன்றாவது.

மாபாதகப்பிராயச்சித்தமுரைத்தவத்தியாயம்.

அரும்பெறற்சொன்னங்கள்ளுநர்மறையோராயினுமாங்க
துதிர்ப்பான், விரும்பினரொன்னிவிரும்பினான்முசலம்பண்ணிய
வ்வியனகரரச, விருந்துழியெய்தித்தஞ்செயலுரைத்துக்கதை
யைமற்றவன்கையினியிற், றிருந்தவோரடியம்மன்னவனடிப்பவி
றந்திடிற்றீருமப்பாவம். (௧)

கள்ளுநீதுபுரிந்திடாரொன்னிலந்தணர்க்கடிந்தவர்க்குரை
த்த, வெள்ளரும்விரதமியற்றுகவன்றே லிவுளிமாமகம்புரிவேந்
தர், தெள்ளிதினாடும்தூயநீரதனிற் சென்றுநீர்படிகவொல்லா
தே, லொள்ளொளிச்செம்பொன்றன்னிறைமறையோர்க்குதவி
யக்கொடும்பழியொழிக்க. (௨)

கள்ளெனவறியாதுண்டவெம்பாவந் தீர்த்திடவுளத்திடை
க்கருதி, னுள்ளமாழாந்துதனையிகழ்ந்தீசன் மலரடிநெஞ்சிடை
யுன்னித், தெள்ளிதின்மறையோர்ச் செகுத்தவர்க்குரைத்ததீத
றுவிரதமாற்றியபின், வள்ளவாய்க்கள்ளைக்காய்ச்சிவாய்ப்பெய்
யமறிந்திடிலொழியுமப்பாவம். (௩)

அன்றெனிற்குடுமிவரைமிசையேறிவீழ்ந்துயிர்வீய்ந்திடின
கலுங், துன்றுவெங்கழலின்வீழ்ந்துயிர்துறப்பிற்புண்ணியப்புன
லிடைவீழ்ந்து, பொன்றிடிலலதேற்கிரிச்சிரமியற்றிற்புரவிமாம
கமுடித்தரசர், சென்றுநீராடும் புனலிடைத்தோயிற் றீர்ந்திடு
ஞ்செய்யபாதகமே. (௪)

குருவுடைப்பன்னியெனவறியாதுகுவிமுலைமனைந்தவர்பாவ, மரிதினிற்றீர்க்க வேண்டிடினுருக்கா லாங்கவனுருவினைப்பண்ணி, யெரியமுற்காய்ச்சித் தழீஇக்கொளலன்றேலாண்குறியினையறுத்தேந்தி, வெருவொடுமறலிதிசையினிலேகிவீயினப்பாவம்விட்டகலும். (ரு)

அந்தணர்ச்செகுத்தோர்க்குரைத்திடும்விரதமாற்றிடினழலில்வீழ்ந்திறப்பி,னந்தலில்சாந்திராயணவிரதங்கிரிச்சிரம்பற்பலநடத்திற், சுந்தரப்புரவிமகம்புரிந்தோர்க டிபவிரதத்திடைத்தோயில், வந்தனைக்குரியகுருவினைப்பிழைத்தோர் மாற்றருந்தீவினையகலும். (சா)

ஈங்கிவர்நால்வர்தம்மொடுமன்பினியைந்தவர்கொடியவெம்பாவ, நீங்கிடவேண்டிலாங்கவர்தமக்குநிகழ்த்தியதண்டமேயிவர்க்குத், திங்கறுதண்ட மன்றெனிற்சிவனைச் சிந்தையிலிருத்திவெவ்வழலின், வீங்குதண்புனலின்வீழ்ந்துதம்மாவிவிடுப்பினும்வெவ்வினையகலும். (எ)

மாபாதகப்பிராயச்சித்தமுறைத்தவத்தியாய முற்றிற்று.
ஆ திருவிருத்தம்—சுஅடு.

முப்பத்திரண்டாவது

பிராயச்சித்தமுறைத்தவத்தியாயம்.

தன்னுடன்பிறந்தா ட்ன்மகள்மைந்தன் றனிமனைக்கிழத்தியைமணந்தோன், மன்னியபாவ மகற்றுறவேண்டின் மதிமுடியண்ணலைநினைந்து, துன்னருந்தழல்வீழ்ந்திறந்திடவேண்டுமாமியையத்தையைத்தோயி, னின்னல்செய்பாவஞ்சாந்திராயணஞ்செய்திறந்திடிற்றீருமென்றிசைப்பார். (க)

தன்னுடன்பிறந்தோன்மனைவிதன்னேடுமுதித்தவள்மகள்முலைதழுவிற், பன்னிருசாந்திராயணமிழைக்கினுங்கவன்பாதகமொழியு, மன்னைமுன்பிறந்தாள்பின்பிறந்தாடன்மக்களையணைந்திடின்யார்க்குந், துன்னருந்தழலின்வீழ்ந்துதானுவிதுறந்திடிற்றுறந்திடும்பாவம். (உ)

பூத்துநீராடுமுன்மடந்தையைப்புல்லினேர்மூன்றுநாளன்னநீத்திடிற்பாவமகன்றிடுமிழிந்தநேரிழையவர்ப்புணர்பாவ
மேத்துசாந்தபனகிரிச்சரந்தத்தகிரிச்சரமியற்றிடினகலுங்[ழியும்
காத்திடாதுள்ளங்கன்னியர்ப்புணரிற் சாந்திராயணஞ்செயிற்க

கன்னியரிடத்தின்மிருகயோனிகளிற்குதுவைக்கழித்தவர்பாவந், துன்னருஞ்சாந்தி ராயணம்புரியிற் றெலைந்திடுங்காமம்தூரப், பன்னுநாற்குலத்தும்பிரமனைக்குரியமடந்தையர்ப்புண

ர்ந்திடற்பாவம், வன்னியின்வீழ்ந்துகனைதுடப்பொறையைவலி
யின்மாய்த்தொழிந்திடற்றீரும். (௪)

மாவொழுக்கிழுக்கி யழிந்தவர்தம்மைத் தவம்புரிமகளிரை
யொன்றுந், திரிகழாய்க்கூத்தக்கன்னியைத்தேவதாசியைச்சிலதி
யைப்புணர்வோர், குரியவெம்பாவஞ் சாந்திராயணத்தா லொழி
ந்திடுந்தூசுதாய்தாக்கு, மரிவையைப்புணரிற் கிரிச்சரம்பத்துச்
செய்திடினகன்றிடும்பாவம். (௫)

இம்முறைதவிற்பிரமசாரிமங்கையர்தம்மிளமுலையினிதினிற்றோ
யிற், கழுதையின்புன்றோல்மேனியிற்போர்த்துக்காலையுமாலையு
முழறிப், பழுதறத்தான்செய் பாவமாங்குறையா வேழகத்தேற்
றுவெம்பலியுண், டொழுகியோர்வருடந் திரிந்திடற்பாவமொ
ழியுமென்றுரைப்பர்கற்றுணர்ந்தோர். (௬)

மறையவர்முதலோர்மன்னவர்ச்செகுப்பின்மறையவர்ச்செ
குத்தவர்க்குரைத்த, குறைவறுதண்டம் பண்ணுதல்வேண்டுங்
கோதில்பார்ப்பனிதனைச்செகுப்பி, னறைதருபிரமகத்திதீர்ப்ப
தற்காயறைந்தவாரெட்டியாண்டிழைக்க,நிறைபொருள்வணிகர்
செகுப்பின்முப்பருவநிகழ்த்துகோன்பாற்றிடிற்றீரும். (௭)

அரசர்கன்னியரைக்கொன்றிடினுண்டந்தணர்ச்செகுத்த
வர்க்குரைத்த, விரதமாற்றிடுக வணிகர்கன்னியரைவிட்டினோர்
விளம்புமவ்விரதம், புரிகவோராண்டுபின்னவர்மகளிர்ச்செகுத்த
வர்புகலுமவ்விரதம், பருவமொன்றுற்றினிதினிற்றீருமெனம
றைப்பகர்ந்தனையன்றே. (௮)

நாயினைச்செகுத்தோரொண்ணிருவைகனகர்ப்புறம்போய்த்
தலையோட்டிற், றாயவேழ்மனையேற்றுண்டிடிற்பாவந்தொலைந்தி
டுமென்பிலாதவற்றை, வியுமாசெய்தோர்வியப்பொடும்பிராணா
யாமமாங்கியற்றின்வெவ்வினைபோந், தாயமென்றவளையெலியி
னைத்தடியிற்சாந்திராயணஞ்செயிற்றீரும். (௯)

பன்றிவெம்பூனைகுதிரைபைங்கிளி கொன்றவன்கிரிச்சரம்ப
ண்ணிற், றுன்றியபாவந்தொலைந்திடுமரவந்தொலைத்தவன்வருந்
தியோர்திங்கள், மன்றவோர்குடங்கைபாலினையருந்திவையினை
மறையவர்க்களிக்கி, னொன்றியபாவமொழிந்திடுங்கிளியையொ
றுக்கிலாறுதவிடிற்றீரும். (௧௰)

பறவைகள்செகுத்தோர்விரதநன்கியற்றிப்பழமறையவர்க்
கிருநிதியங், கறவையொடளிப்பிற்றீர்ந்திடும்பாவங்காய்ப்பழம்பூ
நனியுடைத்தாஞ், செறிமரங்குறைத்தோர்சிலகொடியறுத்தோ
ர்திங்களுமிருக்குநாமெறுதி,நறுநெய்யாங்கருந்திமூன்றுநாளொற்பி
னன்னிப்பாவம்விட்டொழியும். (௧௧)

ஆனையைமுதலாம்விலங்கினையொறுத்தோரளப்பறுவிரத
நல்கியற்றித், தேனெய்பாலோடுமறையவர்க்கூட்டிற்றீர்ந்திடும்
பாவமென்றுரைப்ப, ரூனுடையாக்கை யுணர்ந்திடாதொறுத்
தோன்வினையொழிந்திடுமுணர்ந்தொறுத்தோன், ரூனுறுபாவ
மளப்பினூரைகிற்றங்கியலாதொழிந்திடாதால். (௧௨)

வேறு.

ஏதிலர்மனைபொருள்பழனமேரிதங்
காதலின்வவ்வினோர்கவர்ந்தயாவையு
மேதகவிழந்தவர்க்களித்துமெய்ம்மையா
யோதுசாந்திராயணமுஞற்றல்வேண்டுமால். (௧௩)

புல்லுநீள்விறகுவெம்புலால்வெண்டுசெலா
மல்லலக்கார்ந்தோல்வவ்வின்மற்றவை
யொல்லையிளிழந்தவர்க்குதவியூனொழிந்
தல்லநீர்த்தாவினைந்தருந்தல்வேண்டுமால். (௧௪)

காரண்டங்கொக்குவெம்பூனைகாக்கைவெங்
கிரிநீர்த்தவளையூர்க்குருவிகிள்ளைபுள்
வார்சிறைப்புறவுதின்றோர்கள்வல்வினை
யீராறுநாளுணவிகழிற்றீருமால். (௧௫)

உறுபுலாலுணங்கல்வெண்கோழிமுட்டையோ
டறைதருமுருங்கையின்காயொடத்திக்காய்
செறிசுரைக்காயிவைதின்னிலோர்மதி
முறைகொள்சாந்திராயணமுடித்தல்வேண்டுமால். (௧௬)

கட்வுளர்க்கதிதிகட்கன்றிக்காதலா
லடிசில்பால்பூபநெய்தனக்கென்றேயமைத்
தொடிவில்பாழ்வயிற்றினுக்கூட்டுபோதக
மடைவுடன்கிரிச்சரமாற்றிற்றீருமால். (௧௭)

வேறு.

தீயினுக்கூட்டாதுண்ணுந்தீமையோனில்லினுண்டோ
ரோயநற்குலத்தோரன்றியிழிந்துளோர்மனையினுண்டோர்
தூயவாநவச்சிரார்த்தஞ்சூதகாசவுசத்துண்டோர்
மேயநற்கிரிச்சரங்கள்விதியினிற்செய்யவேண்டும் (௧௮)

மானுடர்விலங்குபுள்ளின்வருசலமலங்கடம்மை
யூனுடையாக்கைதன்னிற்றடவியுள்ளருந்தினோர்கள்
மானுதலிலவாஞ்சாந்திராயணமகிழ்வினோடு
நூனெறிவழாமலாற்றினுய்தின்வெம்பாவந்தீரும். (௧௯)

அருந்துழிமலமோர்மூன்றும்விடுக்குநவொண்ணெயாடிப்
பொருந்துநீராடுமுன்னமீங்கிவைபோக்கினோர்கள்
மருந்தினுமினியவேனுமிச்சிலைமகிழ்வினுண்டோர்
திருந்துசாந்திராயணங்கள்பற்பலசெய்யவேண்டும். (௨0)

தன்னுடைமிச்சிலேனும்பிறர்நுகர்தண்ணீரோனு
மன்னுகட்குடத்திற்பெய்தவான்புனலேனுமுண்ணிற்
றுன்னியபாவந்தூயகோசலத்தியைப்வாக்கிப்
பன்னிருவைகலுண்ணிற்பழிப்பறத்திருமன்றே. (உக)

நெறியில்சண்டாளர்கூபப்புனலவர்குடத்திற்றெண்ணீ
ரறிவுறுகருந்தினோந்துகிரிச்சரமாற்றல்வேண்டு
மறையியன்றகவுண்ணுமாண்பிலிதனக்குவேத
முறையினில்முன்னூல்பின்னுஞ்சேர்த்திடமொழிந்ததன்றே. ()

பூக்குநீராடாதுற்றமகளிர்சண்டாளர்பொல்லாத்
தீக்தொழிலாளர்தம்மையுண்புழித்திருந்தக்காணி
னீக்கொருமூன்றுவைகலுணவினைநெறியினோடு
மேத்திடுமாவினைந்துமருந்திடினிரியும்பாவம். (உங)

வான்புனல்படியுமுன்னமறந்துணவருந்தினனேல்
மூன்றுநாளுணவுநீத்தல்முறைமையாம்பழையதுண்ணி
லான்றவிமோந்ததுண்ணிலற்றையூணொழிகவேதஞ்
சான்றவரல்லாற்கோதிற்றவம்புரிந்திடுதல்வேண்டும். (உச)

ஏதிலர்க்காபிசாரமியற்றினும்வேட்டவன்றான்
மேதகவாற்றுசெந்தியவியினும்வேதநூலைத்
தீதறுபுலவர்தம்மைத்தேவனையிகழ்ந்தானேனு
மூதறிவோடுந்தத்தகிரிச்சரமுயற்றல்வேண்டும். (உரு)

இல்லறம்புரிவோர்சந்திகழித்திடாதருந்தியாருஞ்
சொல்லரும்பிரமசாரிசுடுதழற்கூட்டாதுண்ணிற்
புல்லியவொழுக்கநீங்கிற்றுகிலின்றிப்புனலின்மூழ்கின்
மெல்லவாயிரக்காற்காயத்திரியினைச்செபித்தல்வேண்டும். (உசு)

அந்தணர்கருமைசெம்மையாகியவறுவைசுற்றின்
மைந்துடனற்றைநாளினுணவின்றிமற்றைநாளி
லைந்துதண்புனலினாடியாவினைந்துண்ணல்வேண்டு
மந்தில்மானுடர்தமென்புதீண்டினீராடல்வேண்டும். (உஎ)

மூவகையுள்ளிகள்ளுத்தீண்டிடின்மூன்றுநாளைக்
கோவறுமுணவுநீங்கிப்பசுவினெய்யுண்ணவேண்டுந்
தாவிநாய்காலிற்கவ்வின்மூன்றுநாடனிப்பாலுண்க
மேவருஞ்சிரத்திற்கவ்வின்விடுகவூண்பத்துநாளே. (உஅ)

பூத்துநீராடுநாடொட்டீராறுநாளும்பொற்பின்
வாய்த்ததம்மனைவியின்பமகிழ்ந்திடார்பருவந்தோறு
மேத்திடுமிட்டிபண்ணார்பொய்ம்மொழியிசைத்தோர்மேவுந்
தீத்தொழிலொழியவத்தகிரிச்சரஞ்செய்யவேண்டும். (உகூ)

கடவுளர்தம்மைவேதமுனிவரைக்கடவுட்கற்பின்
மடநலார்தம்மைக்கூர்வேன்மன்னரைமுனிந்துசீறிச்
சுடுசொலாலிகழ்வோர்பாவந்தொலைந்திடவேண்டினவைக்
கடியவெங்கொள்ளிதன்னாற்கருக்கிடவேண்டுமன்றே. (௩0)

திங்களங்கண்ணிவேய்ந்தசெல்வனையிகழ்ந்தபாவ
மிங்கிதுதன்னிற்றீராதெண்ணருவிரதமாற்றிப்
பொங்கழனுப்பண்வைகியருந்தவம்புரிந்திட்டாலு
மங்கவனருளினன்றித்தீர்ந்திடவரியதாமால். (௩௧)

தேவராலயத்தினந்தவனத்தினிற்சிந்தையோரா
தோவின்மும்மலம்விட்டோர்தம் மாண்குறியறுத்திட்டொல்லை
மேல்வருகிரிச்சராதிகிரிச்சரம்விழைந்துசெய்யிற்
பாவவெந்தீமைநீங்கிப்பழிப்பறுபுனிதனாவான். (௩௨)

கங்குலின்முகத்திற்றிங்கட்கண்ணியோன்பாதம்போற்றி
லெங்குளநகருமெய்திக்கடவுளர்ப்பழிச்சியேத்திக்
கங்கையைமுதலாயுள்ளகடவுணீர்த்துறைகளாடிற்
பொங்குதீவினைகணீங்கிப்புண்ணியராகிவாழ்வார். (௩௩)

காதலன்பாவியேனுந்தன்னெடுங்கற்பின்மிக்க
மாதர்மென்னோக்கிசெந்தீப்புகுந்துயிர்மடிந்தாளென்னிற்
றூதளைந்தினவண்டூதாத்தண்மலர்த்தருவினீழன்
மேதகுதிருவனுகியினிதுவீற்றிருப்பனன்றே. (௩௪)

வெற்பெடுத்துயர்ந்ததிண்டோளிராவணன்விரகத்தெய்திப்
பொற்புடைச்சீதைநெஞ்சமெலிவுறப்புன்மைசெய்து
கற்பெனுங்கனலிபற்றக்கிளையொடுங்கரிந்தானென்னி
லற்புடையவர்க்குத்தீமைபுரிவரேல்நரகினாழ்வார். (௩௫)

இன்னநல்லொழுக்கந்தன்னையியம்பினேரினிதுகேட்டோர்
கன்னலங்குதலைச்செவ்வாய்ப்புதல்வரைக்களிப்பினீன்று
பன்னகமுடியின்வைகும்பார்பொதுநீக்கியாண்டு
பொன்னுலகாள்வரொன்றுவியாதமாமுனிவன்போனன். (௩௬)

பிராயச்சித்தமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௭௨௧.

முப்பத்துமூன்றாவது

திரிபுரதகனமுரைத்தவத்தியாயம்.

பழமறையினிதுகோத்தபராசரன்புதல்வனேக
முழுதுணர்முனிவர்யாருஞ்சூதனைமுகமன்கூறி
யெழுவுறழெண்டோளெந்தைதிரிபுரமெரித்தகாதை
வழுவறவுரைத்தியென்னமனமகிழ்ந்துரைக்கலுற்றான். (௧)

கார்தவழ்மேருவெற்பைக்கடவுளர்வெருவியோட
வேரொடும்பிடுங்கிமீட்டும்வைத்திடும்விறல்கொண்டிண்டோட்
டாருகன்றன்னைவெற்றியாறுமுகன்சாய்த்தபின்னர்
சீர்கெழுமவன்றன்மைந்தர்திசைமுகற்பழிச்சலுற்றார். (௨)

தகைபெறுவித்துன்மாலிவிறல்கெழுதாரகாக்கன்
ககனமோரோமும்வெம்பகநூழ்சினக்கமலக்கண்ணன்
புகையெழுந்துலகம்யாவும்புழுங்கவேழ்புரவிப்பொற்றேர்ப்
பகல்கரந்தொளிப்பக்கோடிபருவம்வெவ்வழலினின்றார். (௩)

அருந்தவம்புரிதனோக்கியாய்பிழித்திவலைதூற்றி
விரிந்தசெங்கமலப்புத்தேள்விண்ணவரோடுமெய்தித்
திருந்தநீர்விழைந்தயாவுந்தருகுவன்செப்புகென்னப்
பொருந்தலர்க்கடந்தசிற்றத்தாருகன்புதல்வர்சொல்வார். (௪)

விண்ணிடைப்பறக்குமூன்றுவியனகருலவாவெற்றி
யெண்ணறுமாயுளெய்தியூறுபட்டழியாவாக்கைத்
தண்ணறுந்துளவோனாதியமரர்வெஞ்சமரினேற்றெங்
கண்ணெதிர்ப்படினுமஞ்சுங்கடுந்திறலருள்கவென்றார். (௫)

ஆங்கவையனைத்துந்தந்தோமாயிரம்பருவஞ்செல்லிற்
றீங்குறுமெயில்கண்மூன்றுமொருவயிற்றொகுமஞ்ஞான்றின்
வாங்குவிற்பகழியொன்றான்மாய்ந்திடின்மாய்வதல்லாற்
றீங்குறுவென்னவோதித்திசைமுகன்மறைந்துபோனான். (௬)

தேசுறுசெம்பொன்வெள்ளியிரும்பினிற்றிசைகடோறு
மோசனைநூறுகொண்டதோரொருநகரமாகக்
காசுகண்படுத்துவெய்யகவின்வளர்மாடமுற்று
மாசறுநகரமூன்றுமயனினிதியற்றினானே. (௭)

பொன்னெயில்விளிம்புமுற்றும்பொலிவுடைநகரந்தன்னிற்
கன்னலின்றேங்குதிண்டோட்கதிர்முடித்தாரகாக்கன்
மின்னகுபருதியொள்வாளிந்திரன்வேலைகிட்டித்
தன்னடிப்பரவப்பைம்பொற்றருவமருலகின்வாழ்ந்தான். (௮)

கண்ணகன்ஞாலத்துள்ளோர்தொழுங்கமலாக்கனென்போ
னெண்ணலர்முற்றுவெள்ளியிஞ்சிசூழ்நகரந்தன்னிற்
பண்ணவரியக்கர்நாகர்விஞ்சையர்பருதியொள்வாள்
விண்ணவர்பணிந்துபோற்றவிசும்பிடையிருந்துவாழ்ந்தான். ( )

மருப்புடைக்களிறேரொட்டும்வயிரவாட்படையினானும்
வெருக்கொளக்கடைக்கண்சேக்கும்விறல்கெழுவித்துன்மாலி
யருப்புமென்முலையாரோடுமகனிலவளாகந்தன்னி
லிருப்பெயிலுடுத்தவெய்யநகர்வயினிருந்துவாழ்ந்தான். (௧௦)

இந்திரன்முதலதேவரினிதினியேவல்கேட்ப
லந்தலில்புவனம்யாவுந்தமதுகுடிப்படுத்திநாகர்
வெந்திறலியக்கர்சித்தர்வெருவொடுந்திறைகணல்க
சந்திரமவுலிபாதம்பழிச்சலாற்றருக்கின்வாழ்ந்தான். (கக)

பங்கயத்தண்ணல்போலப்படைப்பினும்படைப்பர்மேமிச
செங்கண்மால்போலவன்பினளிப்பினுமளிப்பர்சீற்றத்
துங்கவெள்விடையோன்போலத்துடைப்பினுந்துடைப்பரிந்த
வங்கண்மாலுலகம்யாவுமாங்கவர்நினைப்பின்மாதோ. (கஉ)

ஆயிரகோடிவெள்ளங்களிறிவற்றிரட்டிபாய்மாப்
பாய்வயப்புரவித்திண்டேர்பத்தனைக்கச்சமாருங்
காயெரிகவிழ்க்குஞ்செங்கட்கதழ்சினத்தவுணர்வெள்ள
மாயிருஞாலத்துள்ளகணிதராலவகுக்கொணாதால். (கங)

இரணியனிரணியாக்கன்சூரனந்தகனென்றேது
மூரமிகுமசுரரின்னேருயிர்ப்பினில்மொத்துண்டந்நுண்
சருகெனப்பரப்பனொன்னிற்றழலுமிழ்தறுகட்சீற்றத்
தருவனைத்தோளினார்கட்கியாவனையிணைக்கலாமே. (கச)

இருநிதிசுரபிசிந்தாமணிவியன்றருக்கள்யாவும்
பரவிநின்றேவல்கேட்பப்பண்ணவர்பணிந்துபோற்ற
வருவினைவிஞ்சைவல்லமயனொடுமன்புபூண்டு
பொருவருமவுணரொல்லாவுலகமும்புரக்குநாளில். (கரு)

கொன்படுகுருதிவைவேலவுணர்தங்கொடுமைக்கஞ்சிப்
பொன்பிறழுலகங்காக்கும்புரந்தரனியக்கர்விண்ணோர்
தென்புலங்காக்குங்கூற்றமுதலியதேவர்சித்தர்
மன்பதைத்தொகுதியோடும்வைகுந்தநகரிற்சேர்ந்தார். (கசா)

மட்டலவிழ்கமலப்போதிற்கடவுளர்வயிறுவாய்த்த
வடிகள்வெம்புரங்கண்மூன்றின்வாழ்வுறுமவுணர்தம்மா
லிடைமகன்கொன்றவின்னுமாமெனவிடைந்துநாளு
முடன்மெலிந்தாவிதேய்ந்தேமுய்யுமாறருள்கவென்றார். (கஎ)

சினைவயிடைச்சுடுபொனேய்க்குஞ்செழுமலர்க்கொன்றைசூடும்
பவளவார்சடையோன்பூசைபண்ணிமேம்பட்டுவாழு
மவுணரையெம்மனோராலடர்க்குமாறரியதென்னப்
புவனமோரேழுமுண்டபுண்டரீகாட்சன்சொன்னான். (கஅ)

ஐயநீயீதுகூறினடுதொழிலவுணர்க்காற்றி
யுய்த்தினிதிருத்தலொல்லேமென்றுவானவர்களோதச்
செய்யதாமரைக்கண்மாயன்றேவர்களோடுமேகி
மைதிகழ்மேருவெற்பின்வடபுலமதனிற்சார்ந்தான். (ககூ)

மையணிமிடற்றப்புத்தேன்மலரடிமனத்தினெண்ணி
வெய்யதோர்வேள்விதன்னையாற்றவெந்தழலினூடு
செய்யகட்குழுத்தாட்பூதமளப்பிலதிரண்டுதோன்றி
யையநீயளைழத்தென்னையுனாத்தியென்றறைதலோடும். (௨௦)

மூப்புரத்திருந்துவாழுமவுணாமுதலினோடுந்
துப்பறமுருக்கியிங்குவருகெனமாயன்சாற்றக்
கப்பணமுசுண்டியொள்வாள்களனுமிழ்சூலந்தாங்கி
யப்புறக்கண்டத்தோருமஞ்சவார்த்தெழுந்தவன்றே. (௨௧)

எழும்வலிப்பூதம்பாரின்விசும்பினிற்றுறக்கத்தெய்திக்
குழுகலர்தம்மையேற்றுக்கொடுஞ்சமம்புரியவாற்று
தறைகழலவுணர்க்கஞ்சிவெரின்கொடுத்தோடியம்பொற்
சிறையுடைக்கலுழப்பாகன்சேவடியடைந்தவன்றே. (௨௨)

அண்டகோடிகளுந்தத்தங்குடங்கையினள்ளியள்ளி
யுண்டிடவேண்டுமென்னிலொருங்குவாய்மடுக்கும்வெய்ய
தின்டிறற்பூதம்யாவுமுடைந்தவாலவுணர்ச்சேர்ந்து
மண்டுவெஞ்சமத்தினெய்தியாவரேமலையவல்லார். (௨௩)

என்றுதன்னுளத்தினெண்ணிமுகுந்தனிந்திரனைநோக்கித்
துன்றியவவுணரீசன்றுணையடியேத்தாவண்ண
மன்றவெம்மாயைதன்னான்மயக்கியுள்ளறிவுநீக்கிப் [ம்.
பொன்றவழ்சடையோன்றன்னாற்பொன்றுவித்திடுதல்வேண்டு

ஈங்கிவைபாணியாமலியற்றிடேமென்னிலென்னைப்
பூங்கமலத்திறைனைமுதலபுத்தேளிர்தம்மைத்
தீங்குறக்கொல்வரொன்றைசசெங்கண்மாலினிதுகூறி
யாங்கனோர்மாயைதன்றாலருகர்தம்முருவங்கொண்டான். ௨௫

சாக்கியருருவின்மாயனங்கவர்புரத்திற்சார்ந்து
கோக்களிற்றுரிவைபோர்த்தகொன்றைவேணியன்மேலன்பு
நீக்கியவவுணர்தம்மைநிகழ்த்துபுன்சமயந்தன்னி
லாக்கிநல்லிலிங்கபூசையறிவொடுமகற்றினானே. (௨௬)

ஆங்கண்மாறுக்கரோடுநாரதனாறுகியன்பிற்
கோங்குறழ்முலையாள்பங்கன்பூசனைகுறித்திடாமற்
றீங்கினைச்செய்யாநிற்குஞ்சமயத்திற்சென்றுநாளும்
வாங்குவில்லவுணனெஞ்சமருண்டிடமாயைசெய்தான். (௨எ)

வேறு.

உலகம்பொதிந்தசெங்கனிவாயுரவோன்மாயைச்சிமிழ்ப்பெய்தி
யிலகுமதிநாழ்செஞ்சடையெம்மிறைவன்பாதமேத்தாம
லலகிலவுணர்கோனைகளவுகன்றுண்டயர்தலயன்மனையாள்
கலவிப்பயத்தன்மனங்கொண்டுநெஞ்சமயங்கிக்களிப்புற்றார். ௨அ

அன்னகாலையாழ்முனியுமலகைமுலைப்பாலயின்றோனும், வென்
வேல்வயிரப்படைசுமந்தவிண்ணோன்முதலாந்தேவரொடும், பொ
ன்னங்கிரியின்வளப்பழித்தபொம்மன்முலைச்செந்துவர்க்கனிவா
ய்க், கன்னற்குதலையிடப்பாகன் கயிலைகிரியின்வந்தடைந்தார்.

தூண்சூற்கொண்டபெருமடங்கன்முதலதேவர்தொழுதேத்திப்
பாண்சேர்குதலையுமைபாகன்பாதமெமதுகண்களிப்பக்
காண்பான்புகுந்தேமெம்வரவுகருணைக்கடலுக்குரைத்தியெனச்
சேண்டோய்மவுலிநந்திமுன்போய்முகமனோடுஞ்செப்பினரால்

ஆலங்கொழிக்குமாயிரவாயமளித்துயில்வோன்முதற்றேவர்
சாலவருந்தலொழிவீர்நுந்தரியாராகுமுப்புரத்தோர்
சீலந்திரிந்துபுன்சமயஞ்சேர்ந்தாரென்னத்தெளிகுற்றேன்
காலமணித்தாகியதவர்கட்கென்றுநந்திகட்டுரைத்தான். (௫௧)

கங்கைமாலைச்சடைக்கடவுட்குமதுவரவுகட்டுரைத்து
மங்கைபாகனருள்பெற்றுமீளுங்காறுமணிவாயில்
தங்கியுறைமினெனவோதிநந்திதவளநீறணிந்த
செங்கேழ்ப்பவளக்குன்றனைய செல்வனவையுட்புகுந்தனனால்.

சுடுபொன்விழுதுவிட்டனைய சடையோன்பாதந்தொழுதேத்தி
படவாளரவினறிதுயில்கூர்தேவன்முதலபண்ணவர்க [ப்
ளடல்கூர்வெய்யமுப்புரத்தோர்க்காற்றாரிகையயவுன்றன் [ன்.
கடைவாயடைந்திங்களப்பினுளுறைந்தாரென்னக்கட்டுரைத்தா

நந்தியுரைத்தமொழிகேட்டுநகுவெண்டிங்கட்கண்ணிபுனை,
யெந்தைதடந்தேர்வரிசிலைகொண் டெய்தவமரர்க்குரைத்தியெ
னச், செந்தாமரைப்பொற்றாள்வணங்கிமீள்வோன்முகத்தின்செ
வ்விகுவித், துய்ந்தேமென்னத்திருநெடுமான்முதலதேவருவப்
புற்றார். (௫௪)

எழுந்தார்சனகன்முதன்முனிவரிதயமலரினிடையெண்ணி
த், தொழுஞ்சேவடியைத்தமதுதலைக்கொண்டார்பழிச்சித்துள்
ளினார், விழுந்தார்நந்தியடிமலரின்மீட்டுமீட்டுமவுணருயிர், கழி
ந்தாரென்னுந்தேவரொடுஞ்சிலாதன்புதல்வன்கட்டுரைப்பான்.

ஐயற்கிசைபைந்தமணித்தேருமம்பொற்சிலையும்வடிக்கணையும்
வையமளந்தோன்முதற்றேவர் கொணர்மினெனலுமகிழ்ந்தேத்
செய்யகமலத்தடங்கண்ணான்றேவரோடும்விரைந்தேகித் [திச்
சையல்பாகனேறுதற்குத்தடந்தேரியற்றத்தொடங்கினர். ()

கங்குல்பருகிவெயிற்கதிர்கள்கக்குங்கதிரோரீராறுந்
திங்களோடுமுயர்தடந்தேர்ச்சில்லியாகவிருத்துக்க
ளங்கணிலகுஞ்சந்திகளாய்விசும்பாசனமாயத்தவளா
துங்கவுதயவரைகூம்பாய்த்துகடரிமயங்கொடிஞ்சியாய். ()

காட்டைமுருக்குங்கணமிலவமச்சாய்க்கணைக்கில்நதிதுங்க
விட்டுகொடியாயுடுக்கணங்கள்விதானமாகவிருந்துறக்கம்
வாட்டமறுசீர்மேல்விரியாய்மகங்கள்கிடுகாய்நாட்பக்க
மீட்டும்வருடங்கடுப்பாகப்பூதமியன்றவலியாக. (௩௮)

நேமிவரையுமந்தரமுங்கிழ்த்துமீளதண்டமாய்த்
தாமவரைகடுங்களாய்த்தரங்கக்கடல்களோரேழுந்
தாமம்புரையுமெழினிகளாய்த்துலங்குஞானவிந்தியங்கள்
காமவெகுளிமயக்கமிவைகலன்களாகக்கலைமுளையாய் (௩௯)

மனமாங்காரமவ்வியத்தம்வழங்கும்வண்டியோர்மாய
நினைதற்கரியதத்துவங்களனைத்துங்கழித்துங்குழிசியாய்ப்
புனையாவேதமொருநான்கும்புரவியாகப்புராணங்கள்
வனையுமங்கஞ்சாத்திரங்கள்மனுநூலிவைகண்மணியாக. (௪0)

சத்தமருத்துக்களும்படியாய்த்தனைப்பில்வையம்வையமாய்
முத்தமுரிஞ்சுமுகிழ்முலையகங்கையதிதிமுதலாய
பைத்தபாம்பினகலல்குற்றெய்வமகளிர்பரிவினொடுந்
தத்தங்கையிற்சாந்தாற்றிக்கவரியேந்துந்தரத்தினராய். (௪௧)

உலகம்பூத்தமறைக்கிழவன்பாகனாகவுயர்குடிலை
குலவும்வேதப்பரிக்கடவுமுட்கோலாகக்குளிர்விசும்பி
லலகிலமரரொல்லாருமம்பொற்சுணங்கார்பொம்மன்முலைக்
கலவமஞ்ஞைபாகனுக்குக்கடிதிற்றடந்தேரினிதமைத்தார். ()

பொன்னங்குடுமிமேருவரைச்சிலையாய்ச்சேடன்புரிநாணாய்க்
கன்னித்துளவத்திருநெடுமால்கணையாய்த்தூவல்கடுவளியாய்
மின்னுக்கதிர்காலகலல்குல்விழுங்கும்பகுவாய்வெங்கூற்றாய்க்[ய்
கொன்னூர்நுதிவெவ்வடவையொடுங்கூடுங்காலக்கொடுந்தழலா

கமலப்பொகுட்டுவட்டவணைக்கடவுணவினுறைவாணி
திமிரமேயும்பொலங்குடுமிச்சிலையிற்றாங்குமணியாக
விமையோர்யாருமினிதமையாவெறிவேலுண்கணீலமல
ருமையாள்கணவனினிதுறையுங்கயிலைமலையினுய்த்தனரால். ()

சிறகர்வண்டுநறைசந்தாடுஞ்செழும்பூந்தாமங்கண்படுக்கு
நறவங்கோதையயிராணிநயக்குந்தேவன்முதலமரர்
பிறைவெண்டாமம்புனைசடிலநந்திபிறங்குங்கழல்போற்றி [தார்
யிறைவர்க்கெமதுநிலையனைத்து மியம்புகென்ன விரைந்துரைத்

விண்ணோர்மொழிகேட்டருணந்தியவையினெய்திவிமலனிரு
தண்ணார்கமலப்பதம்போற்றிப்புகுந்தவாறுசாற்றுதலு
மண்ணூர்ந்தெழுந்தமுலையுமையாள்பங்கனமரர்த்தருதியெனத்
நண்ணோன்றேகிவிண்ணோரைத்தோகைபாகன்முன்னுய்த்தான்

ஞாலம்பூத்ததனிமுளரிநாராயணனேமுதற்றேவ
ராலமயின்றோன்றருள்போற்றியடியேமிடர்தீர்த்தருள்கென்னக்
காலகாலனவைநேர்ந்துகமலப்புத்தேடோளுநன்றி
மாலோன்முதலதேவரொடுமணிதாழ்வாயிற்புறத்தணைந்தான்.

பானுகம்பனுயிரம்வாய்தோறும்பணிலமெடுத்தூத
வானஞ்செவிடுபட்வாணன்மயிர்க்கண்முழவந்தனிதாக்கக்
கானம்பயிலுந்தும்புருவுங்கலைநாரதனும்பாட்டயரக் [தான்.
கூனற்பிறைதாழ்சடைக்கடவுள்கொடிஞ்சிமான்றேர்கடிதிவர்ந்

எழில்கண்படுக்கும்பொம்மன்முலையிந்திராணிமுதலாய
மழைமானேக்கினரமகளிரடியீடேத்திவாழ்த்தெடுப்பக்
குழைமேனடந்துகுமிழ்மயியுங்கொழுங்கட்கமலைதொழவுலக
முழுதுமீன்றூடடங்கேரின் முக்கட்பெருமானுடுமிவர்ந்தாள்.

ஐயன்மான்றேரோறுதலுமச்சுமுறியவெறுவெய்திச்
செய்யகமலப்பொகுட்டுறைவோன்வேழமுகன்பூசனைசெய்ய
நொய்தின்முரிந்தவச்சியற்றிநொயில்வெம்பரித்தேர்மீதேறிக்
கையில்முக்கோல்பற்றிநனிகறங்குமணித்தேர்கடாயினன்.(ரு0)

மூன்றுகோடிதலையிட்டமுப்பானமரர்சூழ்போத
நான்றவருவியொடுங்கயிலைநடந்ததென்னமுன்செல்லுங்
கான்றுகாடமதமொழுகுமயிராவணத்தினுயிரக்கட் [முன்.
டோன்றலேறிப்பிறைமுடித்ததொல்லோற்றெழுதுமுன்சென்

பறவைக்குன்றுந்தாருகனுமுருவவடிவேற்பணிகொண்ட
நறவூற்றிருக்குமுருள்பசுந்தார்க்குமரனுலாயிரவெள்ள
மறவெங்கதிர்வேற்கணஞ்சூழவிமையாக்கருங்கண்வான்றூதை
சிறகர்மயிலின்மேற்கோடி செங்கேழ்ப்பருதியெனச்சென்றான்.

தழல்கட்பேழ்வாயெரிகுஞ்சிவெய்யகுறுந்தாட்பூதகண
மெழுபத்தெண்ணுயிரவெள்ளஞ்சூழவெரிகட்பேரொலிமே
லழிவெம்மதத்தபிறைகோட்டவலைநீர்பருகியெதிர்வீசும்
புழைவெங்கரத்தவேழமுகன்விண்ணோர்பரவப்போயினனல்.()

அண்டமுகட்டின்முடியுரிஞ்சவம்பொற்றடங்தேர்திசையளப்ப
சண்டன்மணிமான்விறனந்திசங்குகன்னன்பிருகுவிறற் [ச்
கண்டாகன்னன்கோகன்னன்கதிர்வேறிருக்குமாகாளன்
றிண்டாமுண்டிபலகோடிகணங்கள்சூழச்சென்றனரால். (ருச)

கொடியவட்வைதளிப்புயல்காலாலியென்னக்குளிர்தூங்க
படுவெஞ்சினத்தநுதற்கண்ணிலழன்றுகாலக்கனலொழுக
வடிவேற்றக்கன்மகமழித்துவாகைகொண்டவிறல்வீரன் [தான்
விடையூர்ந்தெண்ணுயிரகோடி வெள்ளஞ்சூழவெருண்டெழுந்

றின்றோர்யாரும்புடைசூழப்பூசநாளினெம்பெருமா [னெய்தன்
றென்றோர்புரத்தின்வெகுண்டெய்திப்புரங்கண்மூன்றுமொருங்
முன்னிநோக்கிவடவரைவிற்குழையாவுலகமுழுதளந்த
மன்னுபகழிநாண்கொளுவித்தடந்தோள்கழியவாங்கினான். ()

அந்தாமரையோன்முதற்றேவரவுணர்புரங்களொருமூன்று
மெந்தாயகலிற்கோறலரிதின்னேபகழிவிடுத்தியெனச்
செந்தார்ப்பசியகிள்ளைமொழிப்பாகன்சிறிதுநகைமுகிழ்ப்ப
வெந்தாங்கவுணர்புரமூன்றும்விளிந்துசாம்பராயினவால்.(௫௭)

கண்ணங்கமலப்பொருட்டிறைவோனெந்தைகமலத்தாள்போற்
வின்றோருள்ளம்வெள்காமற்கோத்தபகழிவிடுத்தியென [றி
வண்ணாவுலகமுழுதளந்தவம்பொற்பகழிவிடுத்திடலு
நண்ணாவவுணர்கிளையோடுநாமற்றொழியமுருக்கியதே. (௫௮)

ஐயன்முகிழ்த்தகுறுமூரற்றழலினவியழிந்ததனால்
வெய்யவவுணரெல்லாரும்விண்ணோருலகமேவினார்
பையாடரவினறிதுயில்கூர் பைந்தார்த்துளவோன்முதற்றேவர்
தையல்பாகனடிபோற்றித்தண்டிற்பணிந்தாங்கிவைசொல்வார்.

உய்ந்தேமடியேமினதடியிற்பிரியாவரமீண்டுதவென்னத்
தந்தோமென்னக்கடவுளர்க்குத்தத்தம்பதியின்விடைநல்கிக்
கந்தார்கரடக்கரியுரித்தகரியமிடற்றுக்காமாரி [ந்தான்
மந்தாகினிபொன்கொழித்தொழுகுங்கயிலைவரையின்வந்தடை

இன்னகாதைபடிக்கின்றோர்கேட்டோரினிதினெழுதினோர்
மன்னுமுலகந்தனிகாத்துமகப்பேறெய்திமிகவாழ்ந்து
பொன்னஞ்சிகரிகால்வளைத்துப் புரமூன்றெரித்தபுரிசடையெம்
முன்னோனருளாற்கயிலைவரையடைவரென்னமொழிந்தனனால்.

திரிபுரதகனமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௭௮௨.

முப்பத்துமூன்றாவது

சிவபூசைப்பலனுரைத்தவத்தியாயம்.

விண்ணவர்தொழுகழன்மகபதியும்வீணையினிசைதெரிமு
னிவரனு, முண்மகிழ்வுறமழைமுகில்பகருஞ்சிவகதைதனிலொ
ருகதைபுகலென், றெண்ணருமுனிவரர்மொழிகுதலுமெழுதரு
மறைபுகன்முனியடியி, னண்ணியமனனெறிசூதனெனு நவைய
றுமுனிவரனறைகுவனால். (௧)

ஆதியின்மனுவயருலகேழுமருளொடுபுரவுசெய்திடுநாளி
னேதமில்புகழுடைநரவாமனெவ்வுலகமுமொருகுடைநீழற்
றீதறவறநெறிபிறழாமற்றிசைதிசையுயர்புகழ்சென்றேற
மேதகமகிழ்வொடுகளிகாவல்மேவினனருளொடுமுறைசெலவே.

உருவினில்யாவருமிகரொவ்வாரொருபதினுயிரமட்நல்லார், வருமுலேதோள்வளையிடைபுல்லா மகிழ்வுறுநாளினினிணையில்லார், வரிமதர்வாள்விழி யொளிர்செவ்வாயமிர்துறழ்சாயலோர்மயிலன்னு, டிருநலனுல்நரபதியில்வாழ்தெரிவையர்யாரினுநலனுற்ருள். (௫)

ஆயசுதேவியெனுங்கோதையாலநுகர்ந்தவரன்கோயிற்
றூயனசெய்துதினந்தோறுந்தூய்மலர்சந்தநறுந்தூப
மேயினவன்பினெடும்பேணியீர்மலர்மாலேபுனேந்தீசன்
வாயினறுந்துகள்கைநீவாமன்னிவிரும்பினள்செய்ந்நாளின். ()

வேறு.

வள்ளக்கமலவிதழருந்திமலர்ப்பூங்கொட்டைவாய்குதட்டிக்
கள்வாயொழுகமோட்டெருமைகழுநீர்கறித்துத்துயில்கூறு
மள்ளற்பழனப்பாஞ்சாலத்தரசன்மனையாண்முகநோக்கித்
தெள்ளுமறைதேர்காலவப்பேர்முனிவனிதனைச்செப்புவான். ()

வளங்கொளுலகம்பொதுநீக்கி யொருகோலோச்சும்வாள்வேந்த, வுளங்கொண்மாதர் தமிற்சிறந்தீங் குயிர்போலொழுகுமொண்ணுதலார், துளங்குமதியஞ் சடைக்கணிந்த தூயோன்கோயினுளும், விளங்கத்துடைத்துமெழுக்கெறிந்து மெலிவதென்கொல்விளம்பென்ருன். (சா)

மறையோர்நான்குமங்கமொடு வழங்குஞ்செந்நா முனிகேட்டி,முறையாலுன்றன்சிற்றடிச்சிமுன்னைப்பவத்தினூனுகருஞ், சிறையவெருவைப் பெடையுயர்ந்த செம்பொற்குடிமிக் கிட்கிந்தை, யுறைபுமீசற்கேற்றடிசிலுண்பானெண்ணிச்சென்றனனுல்.

செல்லுமேல்வைப்பூசைபுரிமறையோனெய்தச்சிந்தைவெரீஇ
வல்லேயெழுந்துவலமாகப்பறக்குமெனதுச்சிறைவளியா
லொல்லேயீசன்றிருமுன்னர்த்துகள்போயகன்றதுயர்பலத்தா
லெல்லாவுலகுந்தனிபுரக்கும் வசுவின்மகளாயினிதுதித்தேன்.

முன்னைப்பவத்தினறிவோடும்பிறந்தேன்பருவமுதிர்ச்சிகண்டு
மின்னுக்கதிர்வேலென்முதைமிடறுமிடைந்தகூற்கமுகின்
கன்னித்தாற்றுக்குலேசிதறக்கயவாய்வாளைக்கன்றுகளு
மன்னத்தடஞ்சூழ்பாஞ்சாலத்தரசற்கென்னையளித்தனனுல். ()

கொள்ளைவண்டுபொட்டயரக்கொழுமென்போதினறுந்தேறல்
வள்ளியோரின்முகமலர்ந்தபரிசிலளிக்கும்வண்கமலத்
தெள்ளாரமுதத்திருவனையபதினுயிரம்பொற்றெரிவையரி [ன்
னுள்ளமென்மேலுறவேந்தன் பன்னுளுவப்பினெடும்வாழ்ந்தே

தவளைப்பகுவாய்கிண்கிணிபொற்சதங்கைபுலம்புந்தளர்நடைய
குவளைப்பைந்தார்முருகுறழுங்குமரற்பயந்துசெம்மாந்து

கவளக்களிற்றைங்கராசனளப்பில்கருணைக்குறையுளா
புவரிக்கடல்சூழுலகேத்தவுலவாச்செல்வமொடுமுயர்ந்தேன்.()

வேறு.

முற்படுபவத்திலுணர்ந்திடாதிறைத்தநல்வினைமொழிவத
ற்காிதாம், பொற்பொடுமரசர்குலத்தினிற்றோன்றியரசரிற்புகு
ந்தளப்பரிய,வற்புடைச்செல்வம்பெறவளித்ததனலதியொடுஞ்
சனகாமப்புதுக்கிப், பற்பலமலர்கொண்டிறைஞ்சுவோர்பேற்றை
யாவரோபகர்ந்திடவல்லார். (கஉ)

என்றலுமறையோனுளமகிழ்ந்தினிதினேந்திறைகேட்டியா
ரேனு, மன்றநல்லிலிங்கத்தொருசருகிடினுமணிமுடியவர்தலைக்
கணியா, மன்றியுமிறைவனஞ்செழுத்துணர்ந்தோர் முத்தியி
னடைகுதல்சரதம்,பொன்விடுபோதிற்சிவசிவவென்னிற்புலையரு
முமடைவர்சாரூபம். (கங)

அறிவினாலேனுமருளினாலேனு மருவிளையாட்டினாலேனு
ங், கிறியினாலேனும் வஞ்சகத்தேனுங் கிளர்பொருணசையினா
லேனு, மிறைவநல்லிலிங்கபூசனைசெய்தோ ரெந்தைதன்பெயரி
னைநவின்றோர், குறைவருநறக்கமடைவதுதிண்ணங்கொன்றை
வேணியன்றிருவாணை. (கச)

சிவகதைநன்கிற் பயின்றுளோரினிதி னுங்கதன்பொருடெ
ளிந்துணர்ந்தோர், நவையறவன்பிற்பாடினோரீசனுயிரநாமத்தி
னொருபே, ருவகையினுரைத்தோர்தமையருங்கூற்றும்வணங்கி
டுநான்முகனுவக்குங், குவலயமவராற் புனிதமாமன்னோர்கொ
ன்றைவேணியன்பதமடைவார். (கரு)

திங்களஞ்சடையோன்சினகரஞ்செய்தோர்திருவிழாவினி
தினமைத்தோ,ரங்கவன்றடந்தேர்பண்ணுவித்தோர்கள்சாற
யர்மறுகமைத்திட்டோர், கொங்கவிழ்தருவி னிழலிற்பன்னாட்
குலிசன்வாழ்த்தெடுப்பவிற்றிருந்து, மங்கையோர்பாக னுலகி
னினடைந்துமலரடிநிழல்விற்றிருப்பார். (கசா)

இன்னணமறைதேர்புரோகிதனணங்கோடிசைத்தனனே
கனுந்நுதேவி, மன்னவனேடுமெளப்பினுள்வாழ்ந்துமைந்தனைம
ணிமுடிசூட்டி,யன்னமன்னவனைத்தணந்திடாதவனேட்டையல
ர்புரங்கண்மூன்றெரியப், பொன்னவிர்குடுமிநெடுவரைகுழைத்
தோனடிநிழல்புக்கனளென்றான். (கஎ)

சிவபூசைப்பலனுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—எகஉ.

முப்பத்துநான்காவது

சிவன்றிருநாமமறியாதுரைத்தோர்பலனுரைத்த வத்தியாயம்.

ஈசனன்னாம மென்றுதம்முளத்தி னெண்ணிடாதாங்கவனா மம், பேசினாரோனு முயர்கதியடைவ னென்றனைபேருலகத்தின், மாசறவிவ்வாறுரைத்துநற்கதியின்மருவினோர்காதையையுரைக் கென், றாசறுமுனிவர்கூறலுஞ்சூதன கமகிழ்ந்தாங்கஃதுரைப் பான். (௧)

பழுதறவிளங்கும்பாற்மகற்பத்தின்முதலுகந்தனிற்படர்சீர் த்தி,வழுதியர்குலத்தினினிதினிற்றோன்றுமிந்திரத்துய்ம்மனன் மைந்தன், றெழுதகுவென்றிமுருகுறழ்தோற்றத்தோன்றல்சு த்துய்மினனென்போ,னெழுபெருந்தீவுந்தனதடிப்படுத்தியிந்தி ரச்செல்வமுற்றிருந்தான். (௨)

கல்லெனவொலித்துவெண்டிரைபுரட்டுங்கங்கையாற்றகன் கரைமருங்கின், மல்லலம்பிரதிட்டானமாநகரின்வரிச்சிறைது ம்பிபாட்டயரு, மெல்லிதழ்க்கொன்றைவேணியோர்ப்பழிச்சி வேந்தனுங்குறைதருநாளிற், றொல்புகழ்த்திரணவிந்துவென்று ரைக்குந்தோமறுமுனிவன்வந்தடைந்தான். (௩)

நானநெய்விளக்கநறும்புகையடிசினுண்மலர்வரன்முறையே ந்திக், கானமர்கடுக்கைபுனைதருவேணிக்கடவுடன்பூசனையாற்றி, மோனமாமுனிவர்ப்பணிந்துநீயீண்டுப் புகுந்தமைமொழிதியெ ன்றுரைப்ப, மானவேலிறைநீ முற்பவத்துணர்வி னுதித்தமை கேட்பவந்தனனால். (௪)

என்னலுமுனிவன்றாளிணைவணங்கியெறிதிரைக்கங்கையந் துறையுங், கன்னியும்புரந்து மேருமால்வரையிற் கயற்கொடி பொறித்துலகளிக்கு, மன்னவர்திலகனெனதுமுற்பவத்தின்வர ன்முறையினிதுகேட்கென்னத், தன்னமர்கரத்திற்செய்யவாய்ப்பு தைத்துத்தணப்பில்பேரன்பொடுஞ்சாற்றும். (௫)

பின்னல்வெண்டிரையிற்றுகிர்க்கொடிவரன்றிப் பெய்மலர் ப்பூம்பொழில்சாடிக், கன்னியங்கதலிக்கூன்புறப்பசுங்காய்க் க விழ்குலைகையரிக்கொண்டு, செங்நெலம்பழனவேலிசாய்த்தொ ழுகிச்சிறந்தகோதாவிரிக்கரையின், மன்னுமுற்பவத்தினெயின ர்தம்பதியாயாறலைவாழ்க்கையின்வதிந்தேன். (௬)

ஆற்றெதிர்ப்படுநர்பொருளிலாரேனுமவருடல்கழுகுதொ ட்டுருந்த, வேற்றெதிர்துணித்தும்வம்பலர்கையினிருநிதியளப் பிலகவர்ந்துங், கூற்றினுங்கொடியனிவனெனவுலகங் கூறநாள் பற்பலகழிப்பின், மாற்றருங்கிழவுத்தன்மைவந்தெய்த மறலியூ ர்கடிதினிற்புகுத்தேன். (௭)

நாதுவர்கொடுபோய்மறலிமுனென்னை விடுத்தலுமாங்கவ
ன்றனைவிற், றிதுநீர்கேள்வித்துறைபடித்துயர்ந்தசித்திரகுத்த
னைநோக்கி, மாதவர்முனிவர்வரவுகண்டென்னவிங்கிவன்மேல்
மனமகிழ்ந்த,தியாதிவன்செய்தநல்வினையெனலுமிருகரங்கூப்பி
னிசைப்பார். (அ)

ஆறலைகள்வர்தம்மொடுமிவன்போ யரகரப்பிறகரவென்று
ச், சிறியாங்குறைத்தமொழியினைற்றினரனெனும்பெயர்சிவணி
யதா, லேறியபாவமிவனைவிட்டகன்ற தென்னலுமெந்தைபேர்
ளாருங், கூறியவாற்றுங்கடவுண்மற்றிவனு மென்னவெங்கூற்று
வன்பணிந்தான். (௯)

உருப்பசியரம்பைதிலோத்தமைமுதலாமோடரிபரந்தவா
ட்டடங்கட், கருப்புரச்செவ்வாயரம்பையரமர்ந்தகதிர்மணிகு
யின்றொளிவிரிக்குந், திருத்தகுவிமான மவ்வழிக்கொணர்ந்து
தேவதூதுவரொலியழைப்ப, வருத்தியின்மறலிபணிதலைக்கொ
ண்டுவிமானமூர்ந்தவருலகடைந்தேன். (௧௰)

உறங்கலாதின்பந்துயத்திடுமுலகி னொருபதினாயிரம்பரு
வ, நறுங்குறடுரிஞ்சாத்தெய்வமென்சாந்தநகைமணமுலைமுகங்
கோட்டி, யறைந்துவண்டிமிரக்கற்பகமாலை யறல்புரைகருங்கு
ழல்வேய்ந்து, மறங்கொள்வேற்றடங்க ணரம்பையர்முகிழ்த்த
வானகைவிருந்தயின்றிருந்தேன். (௧௧)

தாமரைக்கிழவனுலகினோர்கற்பந்தகைபெறவிருந்தபின்வி
ண்ணோர், கோமகன்மவுலியூழிபட்டொழியக்கொழுங்கதிர்மணி
த்தொடிப்பணித்த, நாமவேல்வழுதிநின்குலத்துதித்தவிந்திரத்
துய்ம்மினனென்னும், பூமகடலைவன்செய்தவப்பேற்றாற் புதல்
வனாயிங்குவந்துதித்தேன். (௧௨)

ஏயுறமனத்தினெண்ணுறுதொருபேரியம்பியபலமிவையெ
ன்னிற், பாய்புலிப்போத்தினுரிபுனைந்தபனிமதிக்கண்ணியெ
ம்பெருமா, னாயிரம்பேருமுணர்ந்துரைக்குநர்பேறென்கொலா
மெனவகத்தெண்ணி, யாயிரும்புவியினிலிங்கமற்றெவையும்வ
ரன்முறைவழிபடாநின்றேன். (௧௩)

என்றலுந்திரணவிந்துமாமுனிவனிறைமகன்பேரறிவதனை,
நன்றுநன்றென்ன வியந்துமெய்தழுவி நற்றவச்சாலையினடைந்
தான், வென்றிவேல்வழுதிகதையினைக்கேட்டோர்வியந்துளோ
ர்படித்துளோர்யாருங், கொன்றையஞ்சடையோன்சேவடிநீழ
ல்குறுகிவிற்றிருப்பரென்றுரைத்தான். (௧௪)

சிவன்றிருநாமமறியாதுரைத்தோர்பலனுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௲௩.

முப்பத்தைந்தாவது

உபமன்னியுப்பேறுபெற்ற வத்தியாயம்.

ஓங்கும்புகழுபமன்னியுவென்னுந்திறலுரவோன்
றீங்கில்கதையிசைநாரதனொடுதேவர்கடேவர்க்
காங்கண்ணெடுமால்கூறியபடியோதெனவருளால்
வீங்கும்முனிவரர்கூறலுமெய்ச்சூதனுரைப்பான். (௧)

அலகில்புகழ்ப்புலிக்கால்முனியருளோடினிதளித்த
வுலகம்புகழுபமன்னியுவென்னுமொருசிறுவன்
மலமற்றுயர்தவமாற்றியவசிட்டனுழைக்குறுகி
நலனுற்றுயரான்பாலினைநன்கினுகர்ந்தனனால். (௨)

அற்றைப்பகலொழியத்தவமுனிவன்னருள்சிறுவன்
முற்றத்தவமுறுதாதைதனகன்மாமனைமுடுகி
நற்றாயொடுநுகர்போதினினன்பாலருளெனலுங்
கற்றைக்குழனென்மாநனிகரையாவினிநின்றாள். (௩)

பாலன்றிதுவெனநின்றழுமைந்தன்றுயர்பாரா
வேலங்கமழ்குழலாளிருகண்மாரியிறைப்ப
மாலொன்றியமனனோடுதன்வறுமைக்குளமுருகி
யாலந்திகழ்கண்டன்றிருவருளெண்ணியிருந்தாள். (௪)

ஆயுந்தவமுறுதந்தையும்யானின்றுறவழவுந்
தூய்தாகியபாறந்திலனொன்னத்துயர்சிறுவன்
பாயுந்திறல்விடையோனனிபயிலாலயமருவி
நேயங்கலுழ்வதுபோல்மலர்விழிநீருகநின்றான். (௫)

பாலுக்கழுசிறுவன்றுயர்பாராமகிழ்வோடு
மாலைப்பிறைபவளப்புரிசடைமீதணிவள்ள
லாலிற்றுயினெடுமாலுறைபாலாழியையருளால்
வேலைக்கடலகன்ஞாலம்வியப்பெய்தவளித்தான். (௬)

தன்முன்றிலினிடையெய்தியபாலாழிதனைக்கண்
டென்னன்பினிரங்காவிதுதந்தானெனிலீசன்
பன்னுந்தவமுனிவோர்குறைபகராதனவல்லான்
மன்னும்புரிசடையண்ணல்வழங்காதவுமுளவோ. (௭)

என்றென்றுவியக்குந்தருபாலாழியையினிதி
னன்றென்றுகுடிக்குஞ்சிவநாமம்பலபகருந்
தன்றந்தைதவத்தின்செயலிதுவென்றடிதாழு
மொன்றும்புகழுபமன்னியுவென்னுந்திறலுரவோன். (௮)

பின்னுந்தவமுயல்வுற்றருள்பெறுவானுளமெண்ணித்
தன்னன்புறுதாய்தந்தையருள்கொண்டுதவத்தோர்
மன்னுந்திரளருவிப்புனலிமயாசலமருவி
யன்னம்பயினீர்புக்குயர்தவமன்பொடுசெய்தான். (௯)

வேறு.

பெட்பினருமாதவம்புரியுமுனிவன்பிரமாந்திரத்திற்
கொட்பினெழுந்தபுகைப்படலம்விசும்புபுதைப்பக்குலிசன்மன
திட்பமொருவாவெருவுற்றுச்செங்கட்கரியோன்முன்னெய்தி [ந்
நட்பினேடிடுந்தொழுதுமுனிசெய்தியாவுநவின்றனனால். (கo)

பிள்ளைவண்டுதுயில்கூரப்பெடைவண்டோடும்வரிச்சுரும்பர்
வள்ளைபாடுமகளிரொனவரிபாட்டயர்ந்துதாலாட்டுங்
கள்ளார்கமலமயில்கேள்வன்றேவர்சூழக்கடிதேகி
நள்ளார்புரந்தீயெழநகைக்குநம்பற்றொழுதிங்கிவைபுகல்வான்.

தழைவேய்குழுந்தாட்சாலையுறைபுலிக்கான்முனிவன்றரு
புதல்வன், விழைவதென்னேபுகைப்படலம்விசும்புபோர்ப்பச்
சுடர்விரிக்கு, மழல்வாய்காப்பணருந்தவமன்றூற்றுனின்முனெ
னலோடு,மழவேறுயர்த்தோன்வரையெறிந்தவயிரப்படையோ
னுருவெடுத்தான். (கஉ)

கயிலைநெடுமால்வரைநான்குகாலினடந்தாலெனநடக்கு
மயிராவணத்தின்மிதேறியந்திங்குதலைவேய்மென்றூண்
மயிலஞ்சாயலயிராணிவடிவினுமையான்மருங்குவரப் [தான்.
புயல்வானளக்குமுயர் குடுமிபொங்கு மிமயப்பொருப்படைந்

மைந்தவுனதுதவநோக்கிமகிழ்ந்தோம்விழைந்துகேட்டனகள்
சிந்தையுவந்துதருதுமெனச்சிறுவன்சிறிதுநகைகோட்டி
யெந்தையடியார்கேட்டவரநீயோதருதிவெளிறியன்ற
புந்தியுடையையினிவாளாபோகியென்னப்புகன்றனனால். ()

ஐயமேற்றுச்சுடுகோட்டிலமர்ந்தாங்கலகையுடனடிக்குந்
தையல்பாகனொருமுன்றுதலையிட்டுயர்முப்பதுகோடி [வ
மையிலமரர்தொழுமென்னிற்சிறந்தான் கொல்லோமறைச்சிறு
வுய்யவேண்டிவிழைந்தவரங்கேட்டியென்னவுரைத்தனனால். ()

ஆற்றுமாயைப்புணர்ப்பதனலரக்கன்மகவாலுருவெய்திக், கூற்
றையுதைத்தபெருமானையிகழ்ந்தானிவனுருயிர்குடித்துச், சாற்
றற்கருந்திமொழிகேட்டுமிறவாவெனையுந்தழற்படுத்திக், தோற்
றும்பாவந்துடைப்பனெனத்துகடீர்முனிவன்றுணிந்தனனால்.

ஆற்றலுடையமறைச்சிறுவனகோராத்திரத்தையுளத்தெண்ணி
நீற்றையள்ளியெறிந்துதனையழற்றூனையினின்றெரிப்ப
மாற்றுமிறைகனவின்றிறைவனழற்றூனையமாற்றுதலுந் [ன்
தோற்றுநந்திமுனிவிட்டவ கோரத்திரத்தைத்தொலைத்திட்டா

அன்னகாலைமுனிவனுளத்தன்புநோக்கிமகிழ்பூத்துத்
துன்னுபருதியொருகோடியெழுந்தாலென்னச்சுடரொழிப்பப்

பொன்னஞ்சடையுமைம்முகமும்புயமீரைந்துவவங்கெய்தத்
தன்னதுருவாயுமையோடுந்தனிநாயகன்வந்தெதிர்நின்ருன். ()

கண்டானுண்மைச்சுடர்க்கொழுந்தைக்காண்டலோடுங்க ளிநறவமுண்டார்போலக்களிப்பெய்தியுவந்தானிரண்டிறைன் ருனன், விண்டான்பவத்தின்வாசனையும்விட்டான்விடயந்தனி லொழுகல், பண்டேதொடராணவமலத்தின்பற்றுமொழிந்தும கிழ்வுற்ருன். (௧௯)

மீட்டுமீட்டுந்தொழுதேத்தும்வேதமுனிவன்றனையுவந்து
தாட்டாமரையினெழில்கவர்ந்ததடக்கைம்மலராற்புறநீவி
யீட்டும்விழுச்சீர்நாரணர்க்கும்வானேரிறைக்குமேக்கறவு
பூட்டுஞ்செல்வங்களங்கடொழுந்தலைமையளித்துப்போயினன்

இன்னபுலிக்கான்முனிமைந்தன்காதைகேட்டோரொழுதி னேர், பன்னியுரைத்தோர்நாடோறும்படித்தோர்படிக்கமனம் வைத்தோர், முன்னியிதனினேரெழுத்துமொழிந்தோர்பவள வேணியன்றன், பொன்னூர்கமலச்சேவடிக்கீழடைவரொன்னப்பு கன்றனனல். (௨௧)

உபமன்னியுப்பேறுபெற்றவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—அ௩௪.

முப்பத்தாருவது

சலந்தரன்வதையுரைத்தவத்தியாயம்.

சலந்தரனுடலமீசன்போழ்ந்ததுந்தயங்குமாழி
வலம்புரிதரித்தசெங்கைமாயனுக்களித்தவாறும்
புலங்கொளமகவானேடுமுனிக்குமால்புகன்றவண்ண
நலங்கொண்மாதவத்தோர்கேட்பநவையறுசூதன்சொல்வான்.

சீர்கெழுமண்டமுற்றுந்தெண்புனற்பெருக்கினூடு
நீரிடைவெய்தாத்தோன்றுநெருப்பெனவினிதுதோன்றி
வார்கழலவுணரோத்துஞ்சலந்தரன்வானேர்யாரும்
போர்முகத்துடையவென்றுநான்முகன்பதத்திற்புக்கான். (௨)

எறும்வலிப்பொறுவிறிண்டோட்சலந்தரனிகலினேற்ற
வெறிமலர்க்கமலப்புத்தேள்வென்கொடுத்தோடவென்று
பொறியரவணையிற்றுஞ்சும்புண்ணியமூர்த்திவைகு
மறிதிரைப்புரட்டுமந்தண்பாற்கடன்மருங்குபுக்கான். (௩)

புக்கவாளவுணனேடும்பூந்துழாயலங்கன்மார்பன்
செக்கர்வானென்னவன்னேனிறந்திறந்துதிரமாரி
கக்கவெம்பகழிதூண்டிக்கார்முகக்கலவிகாட்டிப்
பக்கமும்விசும்புமெங்கும்பாய்கணைபரப்பினனே. (௪)

விடுத்தவெம்பகழியாவுமவுணர்கோன்விழுங்கிடக்காங்
கடுத்தமாதவனைப்பற்றலனுகலுமுள்ளமஞ்சிப்
பிடர்த்தலைபாதந்தாக்கவிளைவினிற்பேதுற்றோடிக்
கடுந்திகழ்கண்டன்வாழுங்கயிலையினெய்தினானே. (௫)

எய்திமுன்னிறைஞ்சிநின்றமாயனையினிதுபுல்லி
வைதிகர்க்கன்றித்தோன்றாமழுவலானஞ்சலென்னாக்
கைதலைமீதுவைத்துக்கருணைகூர்ந்திருக்குமேல்வைப்
பைதலுற்றோடுமாலைப்பற்றிவாளவுணன்சென்றான். (௬)

மீயுயர்புவனமெல்லாம்விழுங்கினும்விழுங்கவல்லார்
காயெரிகவிழ்க்குங்கண்ணார்காலனைக்கையிற்பற்றி
வாய்வழிகுருதிகக்கக்குத்தியவயிரத்தோளா
ராயிரகோடிவெள்ளந்தானவரமுன்றுசெல்ல. (எ)

விண்டுமுன்புவனமுண்டவியப்பினைக்கேட்டுடக்காங்
கண்டகோடிகளுந்தன்னோரங்கையினள்ளியள்ளி
யுண்டுமீண்டுமிழ்ந்தவெற்றிச்சலந்தரனூரப்பியீசற்
கண்டுளெய்கனன்றுவெம்பியீங்கிவைகழறலுற்றான். (அ)

ஐயமேற்றருந்தும்பித்தகேட்டியான்பிறந்தவன்றே
செய்யதன்கமலத்தோனைப்பிடித்துவெஞ்சிறையினுய்த்தேன்
மையலங்களிறோடொட்டும்வானவர்முதல்வனோடென்
கையினிற்பற்றிமற்றையுண்டத்திற்காவல்செய்தேன். (௯)

காய்சினத்தறுகட்புள்ளேற்றரசொடுங்கரியோன்றன்னை
யோசனைநாற்றுக்கப்பால்விழ்தரவொல்லைபற்றி
வீசிமுன்னெறிந்தேன்விண்ணோர்மகளிரைப்பற்றியென்றன்
றாசியர்தம்மினுய்த்தேனென்னையார்தடுக்கற்பாலார். (௧0)

இலகுவாளெயிற்றபேழ்வாயிராவணன்முதலினோரை
யுலகெலாம்வெருவியோடவொல்லையிற்சிறையினுய்த்தேன்
மலர்தலையுலகினெய்தும்வானதியதனைத்தட்டேன்
புலவுநீர்க்கடல்களேழும்பெரும்புறக்கடலோடுண்டேன். (௧௧)

அஞ்சனமிடற்றோய்வெய்யவழிமதுக்களிறுவிழும்
வெஞ்சமத்துடைந்துபோந்தமாயனைவிடுத்துன்னுவி
யுஞ்சுபோகுதியோவன்றியுடற்றுவெஞ்சமரினேற்றுத்
துஞ்சுதிகொல்லோவென்னாத்தோட்புடைகொட்டியார்த்தான்.

திங்களங்கண்ணிப்புத்தேனுதல்விழிதிறப்பவாங்க
ணங்கியம்பொறியொன்றெய்தியாயிரகோடிவெள்ளம்
வெங்கண்வாளவுணர்தம்மைச்சாம்பராய்விளியநூறப்
பொங்குவெஞ்சிற்றத்துப்பினவுணர்கோன்போரினேற்றான். ௧௩

ஏற்றிகலவுணன்றன்னையெம்பிரானகைத்துநோக்கி
யாற்றலையெனதுவாளிக்கெனவுரைத்தலங்குசெம்பொற்
காற்றலைவிறலாற்கீறிக்கடுப்பினோர்நேமிபண்ணித்
தோற்றுமீதெடுக்கிலுன்னோடமர்செயத்துணிவலென்றான். ௧௪

என்றலுமவுணர்கோமானிலங்குவாளெயிறுதின்று
பொன்றவழ்திகிரிக்கூற்றைவருந்தொடுமெடுத்துப்பொங்கித்
தன்றலைமீதுவைப்பத்தலைமுதலடியீறாகக்
குன்றிருகூறுசெய்தாலெனவுடல்குறைத்ததன்றே. (௧௫)

ஆங்கவனுடலம்போழ்ந்தவழலுமிழ்நேமிப்புத்தே
டீங்கறவீசன்கையிற்சேர்தலுமவுணன்மெய்யின்
வீங்குநீர்வேலையென்னவரத்தநீர்வெள்ளங்கோத்துத்
தாங்கருமுலகமியாவுந்தனைப்பறப்பரந்ததன்றே. (௧௬)

வெண்ணிணமூளைநெய்த்தோர்தசைவிழக்குடர்கள்யாவு
மண்ணலோர்குண்டந்தன்னினமைத்துவான்பிலத்தினூடு
நண்ணருநரகமாகநாகர்வானியக்கர்சித்தர்ப்
பண்ணவர்முதலோர்யாரும்பனிமலர்த்தூவியார்த்தார். (௧௭)

சிறைபடுமலரோன்விண்ணோர்வெந்துதிக்கயங்களுகர்
முறையினிற்றந்தம்வாழ்க்கையடைந்தனர்முகுந்தன்முக்கட்
கறைமிடற்றண்ணல்செம்பொற்கழலிணையினிதுபோற்றி
மறையொருநான்கும்போற்றும்வைகுந்தமடைந்தானன்றே. ()

சலந்தரன்வதையுரைத்தவத்தியாய முற்றிற்று.

௮ திருவிருத்தம்—௮௫௨.

முப்பத்தேழாவது

மாயோனேமிபெற்ற வத்தியாயம்.

சலந்தரன்கிளைகளாயவவுணருந்தறுகட்பேழ்வாய்
வலங்கெழுவயிரத்திண்டோளரக்கரும்வந்துநந்தங்
குலங்கெடமுருக்குகின்றவமரரைக்கொன்றுநாமென்
றிலங்கொளிவிரிக்குமாடத்திந்திரனகரிற்சேர்ந்தான். (௧)

கூற்றெனவுரறியார்த்துக்கொல்சினத்தவுணர்வெம்போ
ரேற்றமர்புரியுமேல்வையிந்திரன்முதலதேவ
ராற்றலராகிநெஞ்சமழிந்துவென்கொடுத்துப்போகி
மாற்றலர்தானேமுற்றுவைகுந்தநகரிற்சேர்ந்தார். (௨)

பாவடிப்பருமயானைபரவமுன்வந்துகாத்த
தேவர்கடேவவெய்யதீத்தொழிலவுணர்தம்மா
லோவரு துயரமுற்றேமுய்திறங்காணேமென்னத்
தாவருந்துதிகள்கூறிவருந்தொடுஞ்சாற்றலுற்றார். (௩)

இலங்குவெண்டிங்கட்கண்ணியெம்பிரான்வெகுண்டுமுன்னஞ்
சலந்தரனுடலம்போழ்ந்தசக்கரம்பெற்றுயென்னில்
வலங்கெழுமவுணர்தம்மைமாட்டுதலெளிதாமென்னாப்
புலன்களுமனனும்வேறாய்விண்ணவர்புகன்றாரன்றே. (௪)

வேறு.

இமையாக்கருங்கண்ரூலேதாங்கியிடுகுமருங்குலயிராணி
யமையார்குடங்கோணலநகருமண்ணன்முதலானமரங்கா
ளுமையாள்கணவன்றாள் போற்றிநேமியடைந்திங்குடற்றவுணர்
தமைவேரோடுந்தடிந்திடுவன்றளரோலென்னவிடையளித்தான்

தண்ணங்கமலத்திறையோடுமுலகம்பூத்ததனியுந்தி
யண்ணலிமயவரையெய்தியந்தண்சாரற்சினகரமொன்
றெண்ணற்கரிதாயினிதியற்றியெங்கையிலிங்கமாங்கமைத்து
விண்ணோர்போற்றும்பாசுபதவிரதம்பூண்டுவழிபட்டான். (௬)

மோட்டானைந்தினினிதாட்டித்தீபமுருகார்ப்புகையடிசில், வே
ட்டாதரவினுடனேந்திவிளைகொப்புளிக்குந்துழாய்மார்பன்,சூ
ட்டாடரவகங் கணத்தோன் பெயராயிரநாடொறுந்துதித்துத்,
தாட்டாமரையாயிரஞ்சாத்தித்தயாவின்வழிபட்டிடுநாளின். ()

வையமளந்தசேவடியுங்கண்ணுமுகமும்வாய்மலருஞ்
செய்யகரியதிருநெடுமாலன்புநோக்கத்தெறுசினத்த
வெய்யமதவெங்களிறுரித்தோன் விளைகொப்புளிக்குநறவுயிர்க்
மையகமலமாயிரத்தினொருபோதறியாதகற்றினான். [கு

வெண்ணெய்கமழுஞ்செங்கனிவாய் விமலனிமிலே றுயர்த்தரு
மண்ணல்பெயராயிரமோதிப்பொற்றாளிணையிலருச்சிக்குங் [ளு
தண்ணங்கமலமாயிரத்தினொன்றுகாணான்றளர்வெய்திக் [ன்
கண்ணென்றுரைக்குஞ்செய்யமலர்க் கமலம்பறித்துச்சாத்தினு

கடவுட்புள்ளேறுயர்த்தருளுங்காயாமேனித்திருநெடுமா
லுடையபேரன்பினைநோக்கியுள்ளத்துவகைமீதூர
வடைவின்வழிபாடினிதியற்றுமிலிங்கத்திடையாயிரகோடி
சுடராங்கெழுந்தாலெனவருட்கட்டோகைபாகன்றோன்றினான்.

கான்றவிடவாளரவணையிற்றுயிலுங்காயாமலர்நிறத்தோன்
சான்றகண்ணுமென்டோளுந்தாங்கிமுற்றுமதிசூடித் [ஞ்சி
தோன்றுங்கங்கைவேணியனைவலங்கொண்டிருதாடொழுதிறை
யான்றவுவகைமீதூரவருமாமறையினேத்தினான். (௧௧)

வையம்பொதிந்தசெங்கனிவாய்மாயோனன்புக்குண்மகிழ்வுற்
றையன்கையாற்புறநீவியடியிற்புனைந்தமலர்க்கண்ணு
மெய்தாங்கிச்சுதரிசனமென்னுஞ்சுடராழியுமீந்து
செய்யகமலக்கண்ணனெனும்பெயருஞ்சிறப்பினொடுமளித்தான்

இன்னும்விழைந்தவரங்கேட்டியளிப்பனென்னவிறைகூற
கன்னிப்படலைத்துழாயலங்கலுடுத்தநினிதோட்கடல்வண்ண
னின்னதடியினெஞ்ஞான்றுநீங்காப்பேரன்பளித்தியென
வன்னதளித்துவிடையுயர்த்தவமலன்மறைந்துபோயினான். ௩௯

வடவைகவிழ்க்குஞ்சுடர்த்திகிரிப்படையாலவுணருயிர்வவ்விக், கடவுளயிராவணப்பாகனிழந்தவரசுங்கடிதருளி, யிடர்தீர்ந்துலகமுழுதோங்கவெழிதெண்டிரைநீர்சிவப்பமுனஞ், சுடர்கான்றெழுந்தகவுத்துவந்தாழ் மார்பன்சுவேதத்திவடைந்தான்.

மணிவாருடுத்துச்செம்மாந்துவளருங்கொம்மைமுலைத்திருவிற்
கணியாரகலங்கொடுத்தருளுமண்ணல்நேமிபெற்றகதை [ற்
தணியாவுவகையொடுங்கற்றோர்கேட்டோர்தமதுதடங்கண்ணி
பிணியாங்கொழிந்துநனிவாழ்ந்துமீளாமுத்திபெறுவரொன்றுன்.

மாயோனேமிபெற்றவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—அ௬௩௭.

முப்பத்தெட்டாவது

சுவேதன்கூற்றினைக்கடந்தவத்தியாயம்

விழுத்தகுமகதிநல்யாழ்முனியொடும்விசும்புகாக்கு
முழுத்திறல்வயிரவொள்வாட்புரந்தரன்கேட்பமுன்ன
மழைப்புயலனையான்சொன்னவண்புனற்றீர்த்தவண்மை
தொழத்தகுமுனிவர்கேட்பச்சூதமாமுனிவன்சொல்வான். (௧)

உலகினிற்றீர்த்தம்பாவுமுனைத்திடினுலப்பின்றாக
நிலவியவவற்றிற்காதையுள்ளனநிகழ்த்தலுற்றேந்
தலமுழுதேத்தவோங்குஞ்சத்தசாச்சுவமென்றேது
மலிபுனற்றீர்த்தந்தன்னின்மங்கணசித்தனென்போன். (௨)

தவத்தினிற்செம்மாந்தாடத்தானுவந்தாங்கணெய்திப்
பவத்துயரகற்றுநீறுலகைவழியொழுகப்பாடி
யுவப்பினோடாடனேக்கியாணவமொருவிச்சித்தன்
குவட்டிளமுலையாள்பங்கிற்குழகனைவழுத்தல்செய்தான். (௩)

வழுத்திநின்றினிதினேடுமங்கணசித்தன்கேட்பப்
பழிப்பின்மெஞ்ஞானம்யாவும்பகர்ந்திறைமறைந்துபோனான்
றழைத்துயர்வளங்கூர்சத்தசாச்சுவதீர்த்தந்தன்னின்
விழுச்சிறப்புரைத்தேமீதிலாடினோர்விண்ணோராவார். (௪)

கோடிமாமறையோர்கண்டுகொழுமலர்தூவியேத்தக்
கோடிபேருருவுமீசன்கொண்டவணமர்ந்தவாற்றா
லோடுநீர்த்தீர்த்தந்தன்னையுருத்திரகோடியென்பர்
நாடொறுமதனிற்றோய்ந்தோர்நான்முகனுலகின்வாழ்வார்.(௫)

ரெண்டிரைபுரட்டுங்காலாஞ்சரமெனுந்தீர்த்தமாங்கொன்
றுண்டதினுலகம்யாவுமொருகுடைநிழற்றவாண்ட
மண்டமர்கடந்தவெவ்வேற்சுவேதனென்றுரைக்குமன்னன்
றண்டலிற்றனதுவாழ்நாடலைக்குநாளணித்தென்றெண்ணி. (௬)

மணிமுடிதுறந்துதூயசடைமுடிபுனைந்துமன்னன்
வணிகதிர்த்திங்கட்கண்ணித்தோன்றறன்பூசையாற்றிப்
பணிதருநாளிற்காலப்பருதியோர்ந்தினிதிற்கூறுங்
கணிதர்முன்சொன்னவற்றமின்றெனக்கருத்தினெண்ணி. (௭)

ஒன்னலருதிரமாந்தியூன்சுவைத்தொளிறும்வேற்கை
மன்னவன்சுவேதனென்போன்மதிவகிர்கண்ணிசூடு [த்
முன்னவன்கமலப்பொற்றாணினைந்துகண்முகிழ்த்துத்தூய்தாய்
தன்னைமற்றவனாயெண்ணித்தாழ்ந்தனனிருக்குமெல்லை. (௮)

படர்மருப்பெருமையூர்ந்துபைமிணைத்தொய்யில்பூசு
மடல்கெழுசூலமேந்தியுருமெனவதிர்ந்துபொங்கி
யுடல்சினத்தறுகட்பேழ்வாயொள்ளெயிறிலங்கநக்குக்
கடல்விடமெழுந்ததென்னக்கரியகூற்றடைந்ததன்றே. (௯)

பாற்றினஞ்சுழலும்வெய்யபருப்புடைத்தண்டஞ்சுற்றிக்
கூற்றெதிர்ந்திடவுநெஞ்சம்வெருவலனாகிக்கொன்றை
பூற்றிருந்தழிதேன்காலுமொண்பிறைச்சடையோன்பாதம்
போற்றினான்மலர்கடூவிப்பூசனைபுரிந்தானன்றே. (௧௦)

நண்ணலுந்துளவோன்செய்யதாமரைப்பொகுட்டுமேலோன்
விண்ணவரியக்கர்சித்தர்முனிவரர்விஞ்சைவேந்த
ரெண்ணிலரென்கைப்பாசத்தாருயிரிறந்தாரென்னின்
மன்னுறுமனிதனோவென்பாசத்தைவிலக்கவல்லான். (௧௧)

என்னவெங்கூற்றஞ்சீறிவருதலுஞ்சுவேதனென்னு
மன்னவனிலிங்கந்தன்னைமகிழ்வொடுந்தழுவிக்கொண்டு
பன்முறைசபதங்கூறிப்பணிந்தறம்புரியாரோனுந்
தன்னுடையன்பர்ப்பேணுந்தாணுவைவழிபட்டானே. (௧௨)

வழிபடுசுவேதன்முன்போய்வாய்மடித்தெயிறுதின்று
கழிபுலால்கமழநக்குக்கண்ணிணைவடவைதாங்கப்
பழிபடுமொழிகள்கூறிப்பாசமோர்கையினேந்தி
யழலுமிழ்சூலஞ்சுற்றியழன்றுநின்றுரப்பியார்த்தான். (௧௩)

அங்கவனார்த்தனோக்கிச்சுவேதனன்பொழுகநின்று
சங்கரமகேசவீசதாமரைக்கண்ணன்காணாப்
புங்கவகாமற்செற்றோய்புராரிமுக்கண்ணதூய
மங்கையோர்பங்கவென்னுமழுவலான்றோன்றினானே. (௧௪)

ஆயிரமவுலிபொற்றோளாயிரமலங்கற்றிண்டோ
ளாயிரமிலகுமேதியாயிரந்தாங்கிவெய்யோ
னாயிரமெழுந்தென்னவலர்கதிர்விரிந்துதோன்ற
வாயிரநாமத்தண்ணலணிவிடையிவர்ந்தானன்றே. (௧௫)

மரகதவல்லியென்னமங்கையோர்பங்கிற்றோன்ற
வரகரவென்றுதேவரணிமலர்தூவியார்ப்ப
நரைவிடைகடிதினூர்ந்துநாமவேற்சுவேதனென்னும்
புரவலனஞ்சலென்னாப்புண்ணியமூர்த்திவந்தான். (௧௬)

ஏறணிமணிகளார்ப்பநடவியேறுயர்த்ததோன்றல்
பாறுதாழ்சூலம்வெய்தாத்திரிவித்துவருதல்பார்த்துத்
தாறுறுத்தெருமையோட்டுந்தடக்கையுமுளமுஞ்சோர்ந்து
மாறுசெய்மறலியாவிமறிந்துகீழ்விழுந்தானன்றே. (௧௭)

கூற்றுவனாவிபோகக்கொன்றையஞ்சடிலத்தெந்தை
நீற்றொளிபழுத்தமேனிச்சுவேதனைநெடிதுநோக்கி
மாற்றருங்கணங்கட்கெல்லாநாதனாய்மவுலிசூட்டித்
தோற்றருமளப்பில்செல்வத்தொகுதியுமளித்தானன்றே. (௧௮)

இலமலர்ச்செவ்வாய்க்கோதையீசனையினிதுநோக்கிக்
கொலைபுரிதொழிலினீமுன்னங்கொடுத்தனையதனாலின்னே
னலமிகுசுவேதற்கொல்வானடந்தவைபொறுத்துநம்ப
வுலைவுறுமறலிக்காவியுதவிடவேண்டுமென்றாள். (௧௯)

மறலியைமுனிந்திலேன்யான்மறிந்தனன்கொல்லோவென்னா
விறைவனம்மறலிக்காவியினிதினிலளித்துப்போனான்
கறைகெழுசூலவேற்கைக்காலனுஞ்சுவேதற்போற்றித்
தெறுசினப்பகட்டினேறித்தென்புலமதனிற்புக்கான். (௨0)

இன்னநற்றீர்த்தத்துற்றகாதையையியம்பினேருந்
துன்னியமறலிபாசத்துவக்கினிற்பிணிப்புறாமற்
கன்னலங்குதலைபாகன்கயிலையிற்கணங்கட்கெல்லா
முன்னவராகிநாளுமொய்ம்பொடும்வாழ்வரன்றே. (௨௧)

சுவேதன்கூற்றினைக்கடந்த வத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—அஅஅ.

முப்பத்தொன்பதாவது

தீர்த்தமகிமையுரைத்தவத்தியாயம்.

குறைவறுபிரமதீர்த்தங்குருக்கடீர்த்தங்கோகன்ன
மறைபுகழ்சித்தவாசமதுவனங்கன்னிகங்கைக்
கறையறுசோமதீர்த்தம்விசுவதீர்த்தங்காவேரி
நிறைபுனல்விரசையாலுமகாகாளநிகரில்வைகை. (௧)

கனகலதீர்த்தங்கோதாவிரிவயிதரணிகாமர்
வினைகெடவொழுகுஞ்சித்திரநதிதிகழ்வியாததீர்த்தங்
கனைபுனற்பிருதுதுங்கங்கவுசிகங்கனகநந்தை
நினைவருதெசாச்சுவமேதமாதுங்கநிகரில்தீர்த்தம். (௨)

சீர்கெழுசுவாமிதீர்த்தஞ்சுமுமுனதீர்த்தஞ்சிந்து
வேர்கெழுபுண்டரீகமேகானனங்குபேரதுங்கம்
பார்தனிபுகழும்பஞ்சநதிதீர்த்தம்பாவநாசம்
பேர்கள்சொன்னவதிதீர்த்தம்பிலக்காவதானதீர்த்தம். (௩)

மாதீர்த்தங்காலசர்ப்பிமானசவாவிதீர்த்தங்
கேதாரமசுவதீர்த்தங்கிட்டிணவேணியீசன்
பாதம்வைத்திமொகாளமொக்கிசமிரிட்டம்பண்பா
ரோதமில்தன்மதீர்த்தம்புருடைநீள்யமுனதீர்த்தம். (௪)

சந்திரதீர்த்தஞ்சாளக்கிராமம்வாருதியிற்சாரு
மந்தமினதிநதங்களருவிகள்வாவியாவு
நந்தலில்தீர்த்தமாகுநண்ணிமற்றிவற்றினடிற்
பந்தமில்துறக்கவிட்டிற்பரிவொடுமுறைவர்மாதோ. (௫)

புண்ணியத்தலங்கடியநதிநதம்புகலிலிங்க
நண்ணரும்வாவியாவுநன்றறிபுலவரானோ
ரண்ணலந்தீர்த்தமென்பராங்கவைதன்னிலீசன்
றண்ணறுந்துளவோன்வைகுந்தாருகாவனநன்றுமால். (௬)

தீர்த்தமகிமையுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௪௬௪.

நாற்பதாவது

தாருகாவனத்திற்பலிபிரந்தவத்தியாயம்.

என்னலுஞ்சிறப்புவாய்ந்ததாருகாவனத்திலீசன்
மன்னிமுன்னையமேற்றகாதைவாசவற்குத்தூய்தா
யின்னிசைமுனிக்குமாயோனினிதினிலுரைத்தவண்ணம்
பன்னுதியென்னச்சூதன்பரிவொடுமுரைக்கலுற்றான். (௧)

கருமமேபலத்தைநல்குங்கடவுள்வேறில்லையென்னு
மருவருஞ்சமயத்தெய்திமாதவமுனிவர்யாரும்
பெருமயலுழத்தநீரப்பெண்ணொருபாகம்வைத்தோன்
மருமலிதுளவினானைமங்கையாய்வருதியென்றான். (௨)

வேறு.

ஆடகப்பசும்பொன்னுலையிடையுருக்கியாயிரக்காலழற்புகு
த்தி,யோடவைத்தென்னமெய்யொளியெறிப்பவெிரளிர்பொலங்

குழைவெயிலெறிப்பச், சேடமைபருதிவாண்முகமிலங்கச்செ வ்விசேர்தடம்புயஞ்சிறப்ப, வாடவரோனும்பெண்ணுருவிரும்பு மழகுடைமார்பொளிசிறப்ப. (௩)

கண்வழுக்கெய்துமெழில்கனிந்தொழுகக்கடிஞையோர்கர த்தினிலேந்தி, மண்ணமைதுடியோர்கரத்தினியக்கிமணிமிட ற்றிடையினுள்ளாளும், பண்வரவெழுப்பிக்கனிவுறப்பாடிப்படி மதகளிறெனநடந்து, தண்ணலுங்கடுக்கைத்துயல்வருஞ்சடை யான்றாருகாவனத்திடைச்சார்ந்தான். (௪)

கூற்றினைவெய்யகொலைத்தொழில்பயிற்றிக்கூறருமருந்தவ க்குறும்பு, மாற்றிவேள்சமயமூலகினினிறுவிவாளொடுந்தோ ழமைக்கொண்டு, சேற்றிதழ்க்கமலமலரிடைப்புறளுஞ்செழுங் கயலெனக்குழைபுரட்டும், வேற்றடங்கண்கடுறந்தமாதவரைக் காமநோய்க்கடலிடைவீழ்ப்ப. (௫)

வெருவருமூலகத்திருளுலகடைந்துவெயிற்குறும்பொன்ற றப்பருகிக், கருகிமைந்நூற்றநூலெனநீண்டுகடைகுழனறவுநெ ய்த்திருண்டு, முருகுகொப்புளிப்பமூசுவண்டரற்றுமொய்ம்மல ர்வேய்ந்துபைங்கூந்த, லுருவுகொண்டறவோருளத்துமால்கா ழ்க்கொண்டொழுகிடக்கயிற்புறத்தொளிர. (௬)

வேறு.

தமரக்கடல்சூழ்நிலவலயந்தன்னிற்காமநூலொழிய
வமையுஞ்சமயமனைத்துமினியழியுந்தருமநூலாதி
நமரங்காளென்றறமாற்றிநடப்பச்செவ்வியழிந்தொழுகும்
கமலமுகத்திற்புன்மூரற்கதிர்வெண்மூத்தநிலவெறிப்ப. (எ)

வேறு.

வெண்ணிலாக்கற்றை விளிம்புவிட்டெறிக்கு மணிவடஞ்சு மந்தறவிங்கித், தண்ணறுங்கலவைச்சேற்றினுளலர்ந்ததாமரை முகிழ்நலங்கவற்றி, வண்ணம்வீற்றிருந்துசுணங்குபூத்தலர்ந்தவ ருமுலையுலகமோரேழு, முண்ணியவெழுந்தகூற்றிரண்டென்ன வுத்தரீகத்திடையொளிர. (அ)

வாளெனப்பிறழ்ந்துகடைக்குழையெறிந்துமதர்த்தரிபரந் துயிர்பருகி, யாள்வழக்கறுக்கு மதர்விழிக்கூற்றமாடவரகலுமி னென்னத், தாளதாமரையிற் பெய்தபொற்சிலம்புந்தவளைவாய் ச்சதங்கையுமரற்ற, நீளிரும்பிடியுமன்னமென்பெடையுநிகரழிந் திடத்தனிநடந்தே. (௯)

இன்னணம்மாயன்மடவரலுருவிற்பின்செலவெம்மையாளி றைவன், கன்னலினமிழ்தின் விளைந்தகோற்றேனிற்கனியினிலி சைகனிந்தொழுகப், பன்னருஞ்சாமகீதமாமுனிவர்பன்னியர்ம

யல்கொளப்பாடி, மென்மெலப்பொருமால்விடையெனநடந்து
யான்மனைதொறும்பலியிரந்தான். (௧0)

வெள்ளிவாயிப்பிவெடித்தவெண்முத்தநிரைத்தன்மென்ன
கைத்துவர்வாய்க், கள்ளவிழோதிப்பார்ப்பனிமகளிர்கடிஞெயி
ற்பலியிடுவார்போ, லுள்ளம்வேள்கணைபோம்புழைவழியொழு
கமதிமருண்டுறுபலியோடு, வள்ளைவாய்க்கமலக்கைவளையனைத்
தும்வறுநிலத்துகுத்தனர்நிற்பார். (௧௧)

தொய்யில்வெம்முலையார்முழுமெயும்விளர்ப்பச்சுடர்விடு
கதிர்மணிச்சூட்டுடப், பையரவல்குன்மேகலையோடும்பைந்துகி
ன்மென்மெலநடப்பச், செய்யபங்கயத்தினெழினலங்கவற்றுசி
றடிசேப்பவந்தெய்தி, யையனிறணிந்தவம்பரம்வாங்கியணிந்த
வர்போலெதிர்நிற்பார். (௧௨)

துளங்கொளிவிரிக்கும்வெள்வளைக்கமலத்துணைமலர்த்தா
ளினிலணைந்து, விளிம்புவிட்டெழிக்குஞ்செழுஞ்சுடர்க்கற்றை
சிலம்புமென்கூந்தலின்மிலைந்து, யிளம்பிறைநுதன்மேலஞ்சன
ந்திட்டியிணைவிழிமீதுபொட்டணியா, வுளங்கவர்ந்தேகுமைய
னைத்துடர்ந்தெம்முணர்வளித்தேகெனத்தடுப்பார். (௧௩)

குமரிவண்டறைந்துகூட்டுறுந்தெரியல்கொடிபுனைமருங்
கினிற்புனைவார், திமிரமேய்ந்தொளிருஞ்செம்மணிக்காஞ்சிதே
மலர்க்கூந்தலினணிவார், கமழ்நறுஞ்சாந்தமுலைமுகட்டணியுங்
கதிருமிழ்நித்திலக்கோவை, யமைபுறழ்பசியதோளிடைச்சுற்றி
யாருயிரலம்வரநிற்பார். (௧௪)

விங்குசூலிப்பிவெடித்தவெண்முத்தமணிவடமெனச்சுணங்
கலிந்த, கோங்கிளமுலையிலணிதலும்வேறோர்வடமெனக்கொ
ப்புளங்கொள்ள, வாங்கவைபரிந்து பலியிரந்துலவு மழகனைக்
கண்மலிக்குளிர்ப்பத், தீங்குறுகாமந் தலைக்கொளநோக்கி நா
ணொடுந்தெருத்தலைதிரிவார். (௧௫)

இன்னணங்கன்னிக்கற்பினையன்றிக்கடவுள்வேறின்றெனவி
ருந்த, வன்னலார்யாரும்பின்றுடர்ந்தேகவஞ்சனமணிமிடற்றெ
ந்தை, பன்னருமறைகள்பாடுநின்றாடும் பற்பலவிநோதமாங்கிய
ற்றும், பொன்னடிச்சாத்திமுனிவரர்முன்னிற்றலைதொறும்பொ
ற்பொடுமுலாவும். (௧௬)

அற்பொடுந்தவஞ்செய்முனிவர்பன்னியர்தம்மகத்திடைவ
லிதினிற்பூண்ட, கற்பினைக்கரந்துகாமநோயூட்டிக்கங்கையஞ்ச
டையிறைவன்றிரிய, வெற்பெழுந்தியங்கநோற்றுயர்காமமகற்றிய
விருந்தவர்குழுவிற், பொற்புறுமாயோன்மோகினியுருவாய்ப்பு
ரிந்தவையாவையும்புகல்வாம். (௧௭)

வேறு.

தண்டமில்வனப்புடையமோகினிதயங்குந்
தெண்டிரையுயிர்ப்பவருதெள்ளமுதமென்னக்
கண்டவர்கள்கண்டவர்கள்கல்வியொடுநெஞ்சு
முண்டுகயல்போல்விழிமுகத்திடையுலாவ. (௧௮)

மல்லலுலகத்துறையுமாமுனிவகேண்மின்
கொல்லுமிவள்வெய்யமுலைகூற்றகலுமென்னச்
சில்லரியகிண்கிணிசிலம்பொடுசிலம்ப
மெல்லெனநடந்துதவவேதியர்முன்வந்தாள். (௧௯)

காருறமுமோகினிகைசெயுநர்போல
வார்வமுறுமாமுனிவராருயிர்முடிக்கும்
வார்முலையினுண்டுகில்சரிந்திடமறைந்தாங்
கோரிடையினுணிஞெமென்மெலவொதுங்கும். (௨௦)

மாதவமியற்றுநர்மனம்பறையடிப்பக்
காதலுறநின்றணிகள்கந்துகமடிக்கு
மேதமறயாழ்விசிநரம்பினிதியக்கி
மேதகுமுனிக்கணம்விரும்பவிசைபாடும். (௨௧)

கண்வலையெறிந்துசிலர்காமுறமருட்டும்
பண்மொழியினிற்சிலர்தமாருயிர்படுக்கும்
வெண்ணகைதனிற்சிலரைவேற்றுடலமாக்கு
மொண்ணுதறனித்தனிபுரிந்தசெயலொன்றோ. (௨௨)

மின்னிடைவிளைத்தசெயல்கண்டுளம்விரும்பி
முன்னருமருந்தவமுனித்தலைவர்யாருந்
தன்னிலைதிரிந்தெழில்சொடாமனைமருட்டும்
பொன்னடியின்வீழ்ந்தறிவுபோயிவையுரைப்பார். (௨௩)

எங்கள்செய்தவப்பயனடைந்தவியல்பன்றோ
மங்கையிவண்வந்ததெனவாய்குழறவோகிக்
கொங்கையெனவெற்பினைசுமந்துகுழைகின்ற
வங்கலுழுமேனியடிபோற்றியயர்கிற்பார். (௨௪)

துப்புறமுமென்சடைநிலத்துகடுடைப்ப
மெய்ப்படருமுத்தரிகமுந்துகிலும்வீழச்
செப்பவரிதாகியதவத்துறைதிறம்பிப்
பொய்ப்படுமருங்குலைவிடாதருகுபோனார். (௨௫)

இன்னணம்வருந்தியெழின்மாயையுட்னேகுந்
துன்னரியயோகுபுரிதொன்முனிவர்யாருங்
கன்னிமையுநாணுமொழியக்கலையிகழ்ந்தே
பன்னியர்களிசனிருபால்வருதல்கண்டார். (௨௬)

காண்டலும்வெருண்டுவிழிகாலவடவைத்தீ
முண்டெரியவெண்ணரு முனித்தலைவர்யாரு
மாண்டகைவின்மிக்கதிறலையன்முனமெய்தி
யிண்டியுயர்சாபமொழியெண்ணறவிசைத்தார். (உஎ)

மறையவர்வெருண்டுரனிவைதனகள்யாவு
மிறைவனையடுத்திலவெனச்சினமிகுத்துத்
தெறுதழலினையவிசெழுங்கழியுகுத்தாங்
கறைவரியதீயமறையாவையுமறைந்தார். (உஅ)

வேறு.

மலர்பிணைப்பலாசின்பச்சிலைச்சுருக்கினறுநெய்மொண்டா ரழலவாக்கி, யலகறுமுனிவர்மருளொடுஞ்செய்தவாவிசாரத்தி டைப்பிறந்த, கொலைவிடப்பாந்தள்பிறையெயிற்றலகை துடிம ழுமான்கொடுஞ்சினத்த, புலியழற்பகுவாய்முயலகன்செந்தீயீ சன்முன்பொங்கிவந்தனவே. (உகூ)

பாந்தளையணியாவலகையோடாடிப்பயில்துடிமழுமறியே ந்திக், காந்துவெந்தறுகட்புலியுரித்தசைத்துக்கனல்விழிமுயல கன்முதுகிற், சேந்தபொற்கமலத்தாளினூன்றிதெறுதழலொ ருகரத்தமைத்தாங், கேந்திளங்கொங்கைமாயைகண்டுவப்பவெ ம்பிரான்றிருநடம்புரிந்தான். (ங0)

முனிவராரழல்வாய்ச்சாபமுமாவிசாரமுமுழுமறைப்பொ ருளாம், புனிதன்மேற்செல்லாதொழிதலும்வெருவிப்புண்ணி யமூர்த்திமுன்னெய்தி, யனகனியானையருப்பிளமுறுவலணங்கி வல்யாரெனவினவக், கனிமொழியென்றன்மனைவியான்கயிலைக் கடவுண்மாமுனிவரனுமால். (ஙக)

தாருகாவனத்திற்றவஞ்செயப்புகுந்தே மெனவிறைசாற்ற லுமுனிவர், வேரியங்கூந்தற் கனிகையிற்றிரியும் வெள்வளைத் தோளியைவிடுத்துச், சிரியதவநீசெய்கெனநீவிர்தெரிவையரு டன்றவம்புரித, லாரியவொழுக்கேபன்னியர்கற்பிங்கிதெனிலழ குடைத்தாமால். (ஙஉ)

என்றுமாமுனிவர்தமையிகழ்ந்துரைத்துவசிட்டனற்சாலை யினெய்தி, மன்றலங்கூந்தலருந்ததிபூசைமகிழ்ந்துவான்றெருட ர்பொலங்குடிமிக், குன்றவிற்குழகன்பெண்ணுருவமைந்தகுளி ர்பசுந்துளவினனோடு, மன்றனுண்மலர்தூய்வானவரோத்தமகிழ் வொடுமறைந்துபோயினனால். (ஙங)

எமபிரான்றன்னைக்கண்ணுறக்கண்டுமறிந்திளிதேத்தலாமை யினால், வெம்புவெங்கோயிற்பசியினிற்றுயரில் முனிவரர்மிகவு மெய்வருந்தி, வம்பவிழ்கமலப்பொகுட்டினிலுறையும் வானவ

ன்மருங்குசென்றெய்திக், கம்பமுற்றுடலநடுங்கவாய்புலரக்கூட
வுண்மாமுனிவரரிசைப்பார். (௩௪)

எல்லியும்பகலும் வெப்புநோய்முதல பிணியினாலென்னை
றுதுயரா, னல்குரவதனான்மெலிந்தனமிதற்குக்காரணநவிலுதி
யெனலுந், தொல்லைமாமறைகளின்னமுமறியாத்தோன்றலைக்க
ண்ணுறக்கண்டு, மல்லல்செய்தமையாலடைந்ததித்துயரென்ற
ருமறைக்கிழவனாங்குரைத்தான். (௩௫)

வங்கமேனாட்டும்பாய்மரமதனிலெளிதினில்வதிந்தமாப்பற
வைக், கங்கதுவல்லாற்பற்றிலாததுபோலாருயிர்த்தொகையனை
த்தினுக்குங், கங்கைவேணியன்ற னல்லருளல்லாற் களைகண்வே
றுளதுகொலதனாற், றிங்களஞ்சடையோனிலிங்கபூசனைநீர்வை
கலுஞ்செய்ம்மினென்றுரைத்தான். (௩௬)

முண்டகப்பொகுட்டி னரசுவீற்றிருக்கு முதல்வனல்லரு
ளொடுமுனிவர், கண்டிகைமாலைபூதிமெய்ம்முழுதுமணிந்திர
கங்குலும்பகலும், வண்டுறுமலர்தூஉயீசனஞ்செழுத்தும்புகன்
றவனடிமலர்வழுத்துந், தொண்டனாயேத்திமனைவியரோடுமி
லிங்கபூசனைத்தொழில்புரிந்தார். (௩௭)

தாருகாவனத்திற்பலியிரந்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௬௩௧.

நாற்பத்திரண்டாவது

தாருகாவனத்துமுனிவர்க்குச்சிவனருள்புரிந்த வத்தியாயம்.

அள்ளிலைக்கமல மெல்லிதழ்வாட்டு மரும்பனிப்பருவநீர்
படிந்து; முள்ளுநர்பருகும் பங்குனிப்பருவத் தோங்குமந்தழ
லிடைநின்றுந், துள்ளிநீருறைக்குங்கார்படுபருவஞ்சோனைமா
மழையிடைநின்று, மெள்ளருமுனிவர்வளியயின்றினிதினிலிங்
கபூசனைபுரிந்திருந்தார். (௧)

ஆங்கவர்மம்மர்க்கிழங்கிளையகழ்வானாறணிப்புரிசடைப்பெ
ருமான், கோங்கெழில்கவற்றிக்கவின்வழிந்தொழுகுங்குவிமுலை
க்கொடியொடும்போந்து, மாங்குயிற்றெழுதி யின்னிசைமுழ
வர்வண்டுபாட்டயர்தரத்தோகை, யாங்கணுநடிக்குந்தாருகாவ
னத்தினெய்திமற்றிங்கிவைபுரிவான். (௨)

ஓரிடைகுனிக்கு மோரிடைதீந்தே னார்த்தெனவருமறை
பாடு, மோரிடையையமேற்குநர்போலவுலாவருமோரிடைபெ
ய்திச், சீர்கெழுவியோகம்பயின்றுவீற்றிருக்குமோரிடைவதி

விற்பிரிக்கு, மேர்கவிக்தொழுகுமிளமுலைக்கோதையிணைவிழிக ளிப்பவெம்பெருமான். (௩)

அன்னவைநோக்கி யருந்தவமுனிவர் பன்னியரோடுமோங் கெய்திக், கன்னலங்குதலைமங்கையோர்பங்கன்கழலிணைமலர்க ளேப்பழிசச, வென்னையாளிறைவனுயிரகோடிபெயிகநிறெறி க்தெனவயங்குந், தன்னுருக்காட்டிமிற்றலுமளப்பின்மறையினு ற்றவிக்கவிநுதித்தார். (௪)

மெய்ம்மயிர்சிலிர்ப்பக்கண்கவிர்வாரப்பழிச்சுமெய்த்தவர் தமைநோக்கி, யம்மநீர்கடவுளின்றெனக்கருமம்பண்ணியவிற பமோர்ந்து, நும்முன்யாமுன்னம் போந்தனமென்ன நுவன்று மெஞ்ஞானமுமுறையா, வெம்முடையிலிங்கபூசனைபுரிகென்றி றைவியோடிறைவனுங்ககன்றான். (௫)

இமயவிற்குரிசில் சேவடிபோற்றி யிருந்தவப்பிருகுவை முதலோர, ரமையறுபூசையளப்பிறைட்பண்ணியிருத்தலுமாயிர மீகாடி, யுமிழ்கதிரப்பருதி யோங்குவந்தகல் வானுதித்தெனவி மயவெற்பளித்த, கமழ்நறுங்கூந்தலுமையவடோன்றக்கடவுண் மாமுனிவரேத்தெடுத்தார். (௬)

அன்னதாளிறைஞ்சிமுனிவரர்போற்றுமமைதியின்றிவரு ம்பொருளா, மென்னையாளுடைய வோர்குழைமுக்கணிர்ஞ்ச டையந்தனன்றேன்றி, யுன்னருந்தவத்துமுனிவரார்தெளியச் சாங்கியயோகமாங்குரைத்துப், பின்னரும்வேட்டநல்வரமளித் துப்பிராட்டியோடகன்றனன்பெரியோன். (௭)

கோசிகர் வசிட்டனத்திரிபிருகுமுதலியகோதறுமுனிவ, ராசு றுமிலிங்கபூசனையாற்றியருவினைத்தொடரறுத்திருந்தா,ரோசிவி க்கதைபடித்தவர்கேட்டோரெழுதினோரனைவருமீசன், றேசு றுகமலத்தாளினிலடைந்துசிறப்பொடுமினிதுவிற்றிருப்பார்.()

தாருகாவனத்துமுனிவர்க்குச்சிவனருள்புரிந்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கூகக.

நாற்பத்தமூன்றுவது

நருமதையின்சிறப்புரைத்தவத்தியாயம்.

தருமன்முன்சேட்பவிழைந்துமார்க்கண்டன்சாற்றியநரும தைச்சிறப்பைப், புருவவேடரிக்கட்புலோமிசைகணவன்யாழ் முனியுவந்திடமுன்னர், திருவமர்துளவோ னுரைத்திடும்வண் ணஞ்சிறப்புடனுரைத்திடுகென்ன, வரிதுணர்கேள்விமுனிவரர் கேட்பச்சூதமாமுனிவரனறைவான். (௧)

குட்ம்புரைச்செருத்தற்குவிமுலைப்பசுவோர்கோடியோர் கோடிகொய்யுளைமா, வடம்புனைகொங்கைக் கன்னியர்கோடிம றையவர்க்கினிதளித்திடினு, மிடைந்தகல்லனைத்துமிலிங்கமாய் த்திசமும்வியப்புறுநருமதையாற்றி, னடைந்துநீராடப்பெற்ற வர்பேற்றிலாயிரத்தொன்றும்வந்துறுதால். (உ)

கங்கைமாநதியங்காசியினெய்திற்புண்ணியதீர்த்தமாங்கட வுட், டுங்கவெண்டிரைசேர்சரச்சொதிகுருக்கேத் திரத்துரிற் றுய்தெனவுரைப்பா, ரெங்கணெய்திடினுநருமதைநன்னீர்ச்சிற ப்புறுமென்றுநான்மறையு, மங்கமோராறுமறைந்திடுமென்னவ ருந்தவமுனிவரருரைப்பார். (௩)

அமரகண்டத்தினருமதையொழுகுந்துறையினிலாடியபெ ரியோர், கமழ்நறுத்தூற்றுங் கற்பகத்தருவினீழலிற்கரும்புறழ் நீஞ்சொற்,குமரிவண்டரற்றுக்கொழுமலர்க்கூந்தலரம்பையர்கு விமுலைதோயா, விமயவர்நாட்டிலெண்ணறுபருவமிந்திரன்வா ழ்த்தவீற்றிருப்பார். (௪)

நருமதையாற்றின்றென்கரைமருங்கிற்கபிலைமாநதியுளதத னில், விரிதலைக்கோட்டுமரமுயர்வொடிகளரில்வளர்புல்விழுந் தாலுந், திருவநீடுறைக்காநன்னகரதனிற்செஞ்சிலைக்காமனேயனை ய, வுருவினையெடுத்தாங்கரம்பையரோடும்பல்பகலுவந்துவீற் றிருக்கும். (௫)

அந்நதிக்கரையில்விசாலியகரணியெனுநதியுளததிற்றோய் ந்தோர்,கன்னலங்குதலையயிலுறழ்நெடுங்கட்காம்புறழ்பசியமெ ன்றடந்தோள், வன்னமேகலைசூழ்பையரவல்குலரம்பையர்வரு முலைபுணர்ந்து, பொன்னகரதனிலிந்திரனுவப்பப்பொற்பொடு மினிதுவீற்றிருப்பார். (௬)

வேறு.

உளத்தினைப்புனிதமாக்குமுருத்திரதீர்த்தமாதி
துளக்கறுகாளிதீர்த்தமீறதாய்த்தொகுத்ததீர்த்த
மளப்பிலவாகுந்தூயநருமதையாற்றினென்னக்
களித்தபேரன்பின்மிக்ககடவுண்மாமுனிவர்சொல்வார். (எ)

மாயிருஞாலத்துள்ளமன்னுயிர்த்தொகைகட்கெல்லா
மாயிரநாவுண்டாகியறையினுமறையொணுதாற்
பாய்புலியுரிவைபோர்த்தபண்ணவனருளினேங்குந்
தேய்வறுபுகழின்மிக்கநருமதைச்சிறப்புமாதோ. (அ)

அன்னமாநதியிற்றோய்ந்தோனுங்கதன்மருங்கிற்சென்றோன்
றன்னிருகையாற்றொட்டோன்றுளிணைவிளக்குகின்றோன்
பன்னிருகாதத்தேயுமிருந்துளம்பாவிக்கின்றோ
னுன்னருந்துறக்கவீட்டினுவப்பொடுமிருப்பரன்றே. (௯)

நருமதைக்கேகவென்னலியோரடியிட்டோர்நன்னின்
முருகவிழ்கரியகூந்தன்முகிழ்முலைத்தெய்வமாதர்
திருநலங்கனியுஞ்செவ்வாய்ச்செந்துவர்த்தேறன்மாந்தி
யிரவுநன்பகலுமன்புற்றிமையவர்போலவாழ்வார். (௧0)

வேறு.

மாற்றெறிந்தோங்குநருமதைநதியிற்படிந்தவர்வானுலகெ
ய்தி, கூற்றிருந்நாலுங் கொலைவிழிமகளிர் குங்குமசசேதகம்
பொதிந்த, தாற்றிளம்பெண்ணைக்குரும்பையிற்சிறந்தடமுலை
க்கோடுபாய்ந்துழக்க, ஆற்றிருந்தழிதேனொழுகுமென்மலர்தா
ள்கற்பகநிழலிலுறைவார். (௧௧)

நருமதைச்சிறப்புணர்த்த வத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௯௫0.

நாற்பத்துநான்காவது

நந்திக்குமுடிசூட்டியவத்தியாயம்.

என்றலுமகவான்யாழ்முனியோடும்வினவமாபவனினிதி
சைந்த, பொன்றிடாநந்திகாதையையெமக்குப் புகலெனமுனி
வரர்கேட்ப, வொன்றியவுணர்வின் மெய்ம்மயிர்சிலிர்ப்ப வுவப்
பொடும்வியாதனைத்தொழுது, துன்றுபேரன்பின்விழிகணீர்வா
ரச்சூதமாமுனிவரனுரைப்பான். (௧)

கண்டுகேட்டுயிர்த்துண் டுற்றறிபுலன்கள் காத்தமெய்க்கட
வுண்மாமுனிவர், வண்டுபாட்டயருமுண்டகப்பொகுட்டுவான
வனுலகினிலெய்தி, விண்டுவுமறியாவீசனைப்போற்றிவிழுத்தவ
மினிதினிலாற்ற, வண்டர்நாயகவோர்தலமருள்கென்ன வடியி
ணைபரவிநின்றுரைத்தார். (௨)

சேற்றினிற்பிறவாச்செழுங்கமலப்பூந்தவிசினிலினிதுறை
செல்வன், மாற்றருநேமியமைத்திஃதுருட்டின்வாய்மடிந்தொ
ழிதருமிடத்தி, னாற்றருந்தவநீர்புரிகுதியென்னவளித்தலுமயன்
மொழிப்படியே, தோற்றியநேமியுருட்டிவாய்மடிந்ததலத்தினி
ற்றொல்தவம்புரிந்தார். (௩)

நேமியின்கூர்வாய்படிந்தவித்தலத்தைநயிமிசாரணியநீள்
வனமென், றுமுறையுணர்ந்தோருரைக்குவரிந்தப்புண்ணியதல
த்தினிலமர்ந்து, காமனையெரித்தகண்ணுதன்மூர்த்திகழலிணைம
னத்திடையிருத்தி, யாமமும்பகலுமாயிரம்பருவஞ்சிலாதனல்
லிருந்தவம்புரிந்தான். (௪)

மனநெறிப்படரு மைம்பெரும் பூதமடக்கியமாதவக்கிழவ
ன், வினையறவாற்றுந் தவத்தினைநோக்கி வெண்ணிறப்பூதிமெய்ப்

யணிந்து, கனைகடாஞ்செருக்கிக்கண்படைபெற்றதகளிற்றுரிமெ
ய்யினிற்போர்த்த,நனைமலர்க்கொன்றைவேணியெம்பெருமான
னாவிடையிவர்ந்துமுன்னின்றான். (௫)

பொன்னுறைகழித்தபுலவருச்சூலப்புங்கவனுளமகிழ்கூர
ந்தாங், குன்னுளம்விழைந்தகேட்டியென்றுரைப்பவுவப்பொடு
முனிவரன்வணங்கி, யென்னையாளிறைவபிறப்பிறப்பின்றியெம்
பிரான்போலெழிறிகழ்ந்து,தன்னிகர்தன்னையன்றிவேறில்லாப்
புதல்வனைத்தருதியென்றுரைத்தான். (௬)

அன்னநன்மகவுதந்தனமென்னவைம்முகக்கடவுளாண்டக
லப், பன்னருஞ்சிறப்பிற்சிலாதனுண்மகிழ்ந்துபழிப்பறுமகமி
னிதியற்றிக், கொன்னுனிக்கொழுவாய்நடந்தநீள்சாலிற்குருகு
பேர்க்குன்றறவெறிந்த, பொன்னெயில்கரத்தமுருகுறழ்சாயற்
புதல்வனல்லெழிலொடுமுதித்தான். (௭)

உதித்திடுஞ்சிறுவன்றனைக்கடிதெடுத்தாங்குச்சிமோந்தரு
ந்தவச்சிலாதன், மதித்திடுமுனிவர்குழுவொடுஞ்சாதகன்மமே
முதலவற்றெவ்வையும், விதிப்படிபுரிந்துமுப்புரிநூலுமேதகுவி
ழைவினிற்புனைந்து, முதுக்குறைவுற்றமுனிவரான்மறைகண்
முழுவதும்பயிற்றுவித்தனனால். (௮)

அருமறைச்சிலாதமுனிவரன்புதல்வனருளொடுமுருத்தி
ரசமகந், தெருளொடுங்கோடியுருவினிதேற்றத் திங்களங்கண்
ணியோன்றோன்றிக், கருதியதளித்துங்கேட்டியென்றுரைப்பக்
கண்ணுதலின்னுமோர்கோடி, யுருவுயர்சமகஞ்செபித்திடவா
யுளுதவுதியெனவருள்புரிந்தான். (௯)

பின்னுமோர்கோடியுருச்செபித்திடலும்பிஞ்ஞகன்மீட்டு
ம்வந்தெய்தி, யின்னுமோர்கோடியுருச்செபித்திடுதற்காயுணீ
யருளெனவியம்ப, முன்னவன்வழங்கியேகலும்பின்னுமுறையி
னிற்சமகமோர்கோடி, பன்னருமறைதேர்சிலாதனற்புதல்வன்
பரிவொடுஞ்செபித்தினிதிருந்தான். (௧௦)

ஆட்கப்பசும்பொன்விழுதுவிட்டன்னவவிர்சடையந்தண
ன்றோன்றி, நீடிருந்தவத்தாலுவந்தனம்விழைந்தகேளெனநிரு
மலவின்னுங், கோடிநற்சமகமோதுவான்வாழ்நாளருள்கெனக்
குன்றவிற்குழக, னேடவிழ்கமலத்தாழ்தடக்கையான்முதுகு
தைவந்திவையிசைப்பான். (௧௧)

அருமறைச்சிறுவவுருத்திரசமகஞ்செபித்திடலொழியள
விறந்த, மருமலர்ப்பொகுட்டுப்பிரமர்தங்கற்ப மல்லலந்திரு
வொடும்பொலிபா, வுருகெழுதோற்றக் கணங்கடம்பதியாயினி
தினிதுறைந்தொளியெறிக்கும், பொருவருஞானச்சுடர்ப்பிழ
மபாகுமெனதுழைப்பொருந்துதியென்றான். (௧௨)

எண்டிசைப்பாலர்தாமரைக்கிழவ னிருமலமளந்தசேவடி யோன், விண்டிறலவுணரியக்கர்கந்தருவர்சித்தர்சாரணர்புகழ்ந்தேத்தக்,கொண்டலின்முழவந்துவைப்பவெண்சங்கங்குரலிட் டவலம்புரியார்ப்பப், பண்டருகுதலைப்படர்முலைத்துவர்வாயரம் பையர்பதம்பெயர்த்தாட. (கங)

பொய்யிடைத்துவர்வா யரம்பையர்கையினலங்குசாமரை பொதியவிழ்ப்ப, மையிருள்பருகும் வாண்மதியன்ன மணிக்குடைவிஞ்சையரொடுப்ப, வெய்யசெங்கதிர்காலருக்கர்பன்னிருவர்மின்மினியெனவொளியெறிப்பச், செய்யபன்மணியின் மூகடுவேய்ந்துயர்ந்ததிருத்தகுமவுலிசூட்டினனால். (கச)

விரிகதிர்மவுலிசூட்டியபின்னர்விளங்கொளிமித்திலமுருவ, லரிமதர்மழைக்கட்சுயசையைச்சிலாதனரும்பெறற்புதல்வனுக்கினிதி,னெரியமழற்சான்றாய்த்திங்களங்கண்ணியெம்பிரான்மணம்புரிவித்துத், திருமகள்கொழுநனான்முகன்பெறுதசெல்வமுமினிதளித்தனனால். (கரு)

இத்தகைநந்தி காதையைப்படித்தோர் நயிமிசாரணியத்திலீசன், வித்தகமலர்த்தாள் வழுத்தினோர்வியந்தோர்விண்ணவருலகினிலெய்தி, முத்தகமுரிஞ்சும் படர்முலைத்துவர்வா யரம்பையர்முகிழ்நகைமாந்திப், பைத்தபாம்பணிந்தகண்ணுதற்சாமிபதமலர்நிழல்வீற்றிருப்பார். (கசு)

கங்கைசூழ்கிடந்தகாசியைமுதலாக்கருதருஞ்செபேச்சுரமீறாய்த், துங்கவெள்விடையோனமர்ந்தநற்றானமளப்பிலசொல்லிடிற்பெருகு,மங்கவைகருதிச்சுருக்கியாமுரைத்தேமறையுமிக்காதையைக்கேட்டோர், திங்களங்கண்ணி புனைந்தவெம்பெருமான்சேவடிசேர்வரொன்றுரைத்தான். (கஎ)

நந்திக்குமுடிசூட்டியவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—௬௬௭.

நாற்பத்தைந்தாவது

நைமித்திகப்பிரளயமுரைத்தவத்தியாயம்.

தோற்றமனைத்தும் விரித்துரைத்தாய் துகடீரொடுக்கப்பகுதியினைச்
சாற்றுகென்னநாரதனுந்தவளக்களிற்றுப்புத்தேளும்
போற்றிக்கேட்பத்திருநெடுமால்புகன்றவண்ணமுனிவரருக்
காற்றல்சான்றவிருந்தவத்துச்சூதமுனிவனறைகுவனால். (க)

பேசவரியநித்தியஞ்சேர்நயிமித்தியநீள்பிராகிருதன்ப
மேசலருமாத்தியந்திகமென்றொருநால் வகைத்தாமொடுக்கமே

ராசியீவற்றினித்தியமென்றறைதனடக்குஞ்சாக்காடு
மாசினயிமித்திகன்பிரமன்பகற்போயுலகமடிந்திடுதல். (உ)

உரைத்தற்கரியபிராகிருதமொண்டாமனாமேலுறைவோர்கு
வரைத்தவாயுள்கழிந்தொழியவுலகம்யாவுந்தனிமடிந்து
தரித்தற்கரிதாய்ப்பிரகிருதிதன்னிலுறலாத்தியந்திகஞ்சீர்
விரித்தஞானத்தாலான்மாவிளங்குமுத்திதனிலடைதல். (௩)

வேறு.

நான்முகக்கிழவன்பகன்முடிவதனினளிகதிரிரவிநாற்றுண்டு
வானுயர்பூமிபாதலமனைத்தும்வகையறத்தழற்கதிர்பரப்பிக்
கூன்முதுகாமைமுதுகினிற்கிடந்தகுவலய முடுத்தவேழ்கடலு
மேனையபுனலும்பசையறப்பருகியெறிகதிரேழ்சுடராகி. (௪)

சுடுபொறிச்சிதறு மெரிமுகக்கடவுடன்றெடுஞ்சுடருமிழ்
கதிர்க, ளடுதொழில்புரியுங்கூற்றின்வெங்கூற்றின்பணியினற்கா
லத்தினமைத்து, படிபுவலோகமுயர்சுவலோகம் பாதலந்திசழ்
மகலோக, முடிவுறவுருக்கிச்சராசரமனைத்துமுழங்கெரியாலெ
ரித்திடுமால். (௫)

பருவமோர்நூறுமுகிற்குலங்குழுமிப்பாவடிக்களிற்றினீள்
கரம்போன்,மருவுமற்றேரோர்தாரைகள்விடுத்துவானுருமேற்
றெடுமெதிர்ந்தாங், குருகெழுபருதி வெங்கதிர்செந்தீ முழுவது
மொன்றறவவித்துப், பெருகுதண் புனலிற் பிரளயங்கோப்ப
வொழிவரச்சோனைபெய்திடுமால். (௬)

இன்னணமுரைத்தகாரணந்தன்னிலெழுதருபழமறைக்கி
ழவ, னுன்னரும்யோகத் துறங்குவன்சாத்து விதத்தொடுமொ
ன்றுமிக்கற்பந், துன்னரும்வாரக்கற்பமென்றுரைப்பர்தூய்மல
ருந்தியான்றனையு, மன்னமூர்த்தியையுமீன்றவனீசனெனவுணர்ந்
தவர்நரகடையார். (எ)

நைமித்திகப்பிரளயமுரைத்தவத்தியாயமுற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கூஎச.

நாற்பத்தாறுவது.

பிராகிருதபிரளயமும் ஆத்தியந்தப்பிரளயமுமுரைத்தவத்தியாயம்.

உரைபெறுநைமித்திகப்பிரளயத்தைநவின்றனமுயர்பிரா
கிருதப், பிரளயமுரைப்பன்கேண்மினிர்பார்த்தமிரண்டுசென்
றுலுயர்பிரம, னுருகெழுசீற்றத்துருத்திரன்பாதத்தொடுங்கும
வ்வுருத்திரன்கோடி, யிரவிநல்லுருவாயுயர்பிரமாண்டமெரிப
டநுதற்கணுலெரிக்கும். (க)

ஒள்ளொளிப்பிரமபிரசினுங்கணையான்மகேச்சுரனுலப்பி றுளமரு, மெள்ளருந்தேவர்தானவர்யாருமிறப்பவோர்கணத்தி னிலெரிந்துத், தள்ளரும்பிரமர்தலையொடென்பணிந்துசங்கரி கண்டுகண்களிப்ப, வள்ளிலைச்சூலவேலுமிரித்தினிதினனந்தநடம் புரிந்திடுவான். (உ)

உலகெலாமீன்றவன்னையுமகேசனுருவிடைமாலொடுங்கா க்கு, மலமிலவிளையாட்டாடியவெந்தையமலமாய்நிட்களமாகி, நிலவுதற்பரமாய்ப்பரமமாய்ச்சித்தாய் நித்தியமாய்வெறுவெளி யாய், மலைவறநின்றதன்னுருவெய்தியெங்கணுஞ்சிறந்தொளிவ யங்கும். (ங)

மாநிலம்புனலிலொளிக்குமப்புனல்போய் வன்னியிற்கரக் குமவ்வன்னி, யூனமில்வளியிற் சேருமவ்வளிபோயுயர்விசும்ப டையுமவ்விசும்பாங், கேனையவாங்காரத்திடையொளிக்குமாங்க துமகானிடையெய்து, மானவம்மகான் போயுயர்பிரகிருதிதன் னிடையினிதினமரும். (ச)

ஒளியினுள்ளொளியாயுண்மையாய்நின்றமகேச்சுரனுலப்பி லாதோங்குங், களியினிற்சிறந்தபுருடனைப்பிரதானங்கலந்திடா தருளொடும்பிரிக்கு, மளியுடைப்பிரதானமுதல்விசேடாந்தந் துடைத்தவையாக்கிநின்றளித்தல், வெளியினுள்வெளியாய்வி மலமாய்நிறைந்தசிவனெனவருமறைவிளம்பும். (ரு)

உரைத்திடுமுயர்திகடந்தருமாயைச் சிமிழ்ப்புறுத்தைம்பு லனெறுடுக்கிக், கருத்துறத்தம்மைத்தாமெனவுணருங்கடவுண்மா முனிவரர்க்கினிதி, னருத்தியிற்றாய்தாய்விளங்குமாத்தியந்தப் பிரளயமாக்குவிப்பதுவும், விரித்துநான்மறையுந்திங்களங்கண் ணிவிமலனென்றினிதெடுத்தியம்பும். (சு)

உலகெலாமளந்தோன்மலரயன்மகவானெனுள்ளமுற்கடவுள் வெம்பருதி, நிலவுகொப்புளிக்குந்திங்களஞ்செல்வனாதியாய்நிக ழ்த்திடுந்தேவ, ரலகறுசீர்த்திமகேச்சுரன்கூற்றென்றறைவரொ க்கடவுளையேனு, மலர்கடூஉய்ப்பழிச்சின்மதிமுடிக்கண்ணிவான வர்ப்பழிச்சியதாமால். (எ)

சிறந்திடுந்தேவர் யாவரைத்தொழினுஞ் சிவனடியிலுறஞ்சி யதாமாற், பிறந்திறந்துழலுந்தேவரையுளத்துப்பேதுறவான்ம திமருண்டு, மறந்துமேத்திடாமன்மதிதவழ்குடுமிமாணிக்கமலை யினையேற்றிக், கறங்கெனத்திரியும்பிறவியிற்புகாதுமுத்திவீட்டி ருந்துளங்களிப்பார். (அ)

அன்னநின்மலமாயுறைமகேச்சுரனேபிரமமாமன்றெனம திக்கிற், கன்னியம்புரிசையுடுத்துயர்காசிப்பதியினிற்கடவுண்மு

கனின்று, முன்னவஞ்சவித்தோங்கந்தணர்கேட்பமுகுந்தனைப் பிரமமென்றழிய, தனனருஞ்செருக்காற்கையெடுத்துரைத்தவி யாதனெய்தியபயன்சார்வார். (கூ)

எம்பிரான்பரமவுருவினையுளத்தி னெண்ணுதற்கரிதெனிற் பிறைதாழ், தும்பையஞ்சடையுங் கண்ணொருமூன்றுநீற்றொளி துதைந்தவெண்டோளும், வம்புலாங்கொங்கை மலைமகளிடனு மாகியமானுருவதனை, யைம்புலனடக்கியுளத்திடைநினைப்பின ரும்பெறன்முத்திவீடடைவார். (க0)

சீர்கெழுகூர்ம புராணமுற்றுணர்ந்தோர் சிவனடிநீழலினு றைவா,ரோர்பதங்கற்றோர்விண்டுவினுலகினுறைகுவரோவொழு க்துணர்ந்தோர், பார்முழுதாண்டுநன்மகவுயிர்த்துப்பரிவொடு மினிதுவீற்றிருந்தாங், கோர்கெழுகமலப்பொகுட்டுவீற்றிருக்கு மிறையொடுமுத்திவீடடைவார். (கக)

என்றுயர்கூர்மனிந்திரத்துய்ம்மற்கியம்பியகாதையாழ்முனி க்குந், துன்றிருவிசும்பு காக்கும்வாசவற்குஞ் சொல்லியவண் ணமாய்ந்தினிதிற், கன்றுவெங்காமக்குறும்பறவெறிந்தகடவுண் மாமுனிவரர்கேட்ப,நன்றறிகேள்விவியாதனைப்பணிந்துசூதமா முனிவரனவின்றான். (கஉ)

வாழிநான்மறையோர்வாழியெவ்வுலகும் மழைவளமெங்க ணுஞ்சுரக்க, வாழிவாள்வேந்தரானினம்வாழிவைதிகச்சைவம் வாழ்ந்திடுக, வாழியிப்புராணங் கற்றவர்கேட்டோரினிதெனம கிழ்ந்தவர்யாரும், வாழிநற்றருமமரனடித்தொண்டர்வைகலும கிழ்ந்துவாழியவே. (கா)

எதிர்மலைந்தேதற்றவெஞ்சமத்தரசரிடுதிறைகடையளந்தறி யா,மதுரையும்புகாரும் வஞ்சியும்புரக்கு மானவேல்வழுதியர் பெருமா, னதிர்பொலங்கழற்காலடலதிவீரனரிறபத்தெரிந்து நன்கிசைத்த, முதுதமிழ்க்கூர்ம புராணமுற்றுணர்ந்தோர்முத் திவீட்டினிதுவீற்றிருப்பார். (கச)

பிராகிருதப்பிரளயமுமாத்தியந்தபிரளயமுமுரைத்தவத்தியாய முற்றிற்று.

ஆ திருவிருத்தம்—கூஅஅ.

உத்தரகாண்ட முற்றிற்று.

பாயிரமுட்பட காண்டம் உ-க்கு அத்தியாயம்—கூஎ-க்கு

திருவிருத்தம்—நஎகஎ.

கூர்மபுராணம்

முற்றிற்று.

விளம்பரம்.

இதனடியிற் கண்டிருக்கும் புத்தகங்களை வேண்டியவர்கள் சென்னைத் தண்டையார்பேட்டை இலக்ஷுமீவிலாஸ அச்சுக்கூடத்துதலைவராகிய ம-ா-ா-ஸ்ரீ, பு. சு. கிருஷ்ணசாமிபிள்ளை அவர்களிடத்திலும்.

சென்னைச் சிந்தாதிரிப்பேட்டை ஐயாமுதலியார்வீதி - ௩௬ - வது கதவிலக்கமுள்ள ம-ா-ா-ஸ்ரீ, கொன்றமாநகரம் முருகப்பமுதலியாரவர்கள் வீட்டில் அருணாசலமுதலியாரவர்கள் குமாரர் சண்முகசுந்தரமுதலியாரிடத்திலும்,

சென்னைத் தங்கசாலைவீதி சுமைதாங்கிக்கடுத்த-௨௨௧-வது கதவிலக்கமுள்ள வீட்டில் வே. குமாரசுவாமிஐயரிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

	ரூபா.	அணா.	பை.
இலிங்கபுராணம்	௧	௮	0
கல்லாடம் - உரை	௩	0	0
பாரதசாத்திரம்	0	௮	0
வசவபுராணம் படத்துடன்	௧	௮	0
பழமலையந்தாதி பதவுரை	0	௩	0
திருப்புகலூரந்தாதி பதவுரை	0	௩	0
தில்லைக்கலம்பகம்	0	௧	௬
பிள்ளைப்பெருமாளையங்கார்பிரபந்தம்	0	௮	0

சைவசித்தாந்தசாத்திரம் பதினான்கினுள் உரையுடன் அச்சிட்டிருக்கும் சாத்திரங்களின் விபரம்.

திருவுந்தியார்	மூலமுமுரையும்			
திருக்களிற்றுப்படியார்	டிை			
இருபாவிருபஃது	டிை			
உண்மைவிளக்கம்	டிை			
வினாவெண்பா கொடிக்கவி உண்மைநெறிவிளக்கம்	டிை	௧	௮	0
போற்றிப்பஃறொடை	டிை			
சங்கற்பநிராகரணம்	டிை			
இவைகளொன்றாய்ச்சேர்த்துக்கட்டியது				
சிவஞானசித்தியார்பரபக்ஷம்	டிை	௧	௮	0
சிவப்பிரகாசமூலமுமுரையும்		௧	௮	0

இஃது

புத்தகம்.